O-,892MA
N00
19943

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
30 NOV 1900

ஸ்ரீ
ராமஜயம்.

எல்லிணைக்கிராமத்திலிருக்கும்
லக்ஷுமண ஐயங்கார் அவர்கள் குமாரர்
மதுரை தமிழ் இஸ்கூல் உபாத்தியாயர் ம-ள-ள-ஸ்ரீ,
வை. முந்தமுகபாரதி அவர்கள் இயற்றியது.

இஃது,
மதுரையென்னுந் திருவாலவாய் க்ஷேத்திர சேகரம்
ஆரப்பாளையம்
பெரிய கருப்ப வேளாரென்னும் ஆதிநாமமுள்ள ம-ள-ள-ஸ்ரீ,
ஸ்ரீ மூக்கவேளார் [illegible]

நவரச சங்கீத அலங்கார

# அரிச்சந்திர நாடகம்

மதுரையிலிருக்கும் முதகுளத்தூர் ம-ள-ள-ஸ்ரீ,
மு. வ. கலியாணசுந்தரம்பிள்ளை அவர்களால்
பிழையறப்பரிசோதித்து,
மதுரை புதுமண்டபம் புஸ்தகஷாப்
எஸ். சுந்தரராஜக்கோனாரவர்கள்
விருப்பத்தின்படி
மதுரை புதுமண்டபம் புஸ்தகஷாப்
வி. என். இராகவக்கோனாரவர்களால்

சென்னை:
சிற்றம்பலவிலாசம் பிரெஸ்ஸில்
பதிப்பிக்கப்பட்டது.

Registered Copy Right.

1900.

விலை ரூபா 1-4-0.

RAITHBY AND CO., MADRAS.

O-894 MAZ.A
N00
11994-3

ஸ்ரீ

ஸ்ரீ கிருஷ்ணசகாயம்.

# ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் அச்சுக்கூடத் தலைவர் முதலிய யாவருக்கும் தெரிவிப்பது யாதெனில்,

மதுரைக்கு அடுத்த கல்லணைக் கிராமத்திலிருக்கும் லட்சுமணஐயங்கார் அவர்கள் குமாரர் ல. முத்தழகபாரதியவர்களாலியற்றிய ஆரப்பாளையம்-மூக்கவேளாரவர்களாடி வருகிற **நவரசசங்கீத அலங்கார அரிச்சந்திர நாடகம் என்னும் இந்நாடகத்தை மதுரை வி. என். இராவக்கோனாராகிய** என்னால் அச்சிட்டு ஸீல்வைத்து ரிஜிஸ்டர்செய்திருப்பதால், மேற்படி நாடகத்தை யாரேனும் அச்சிடுவரேல் 1887௵த்து 25-வது ஆக்டு 20-வது பிரிவு 6-வது உட்பிரிவின் விதிப்படி யான் கோரும் நஷ்டத்திற்கும் பினல்கோடின் குற்றத்திற்கும் உத்தரவாதிகளாக வேண்டுமென்பதைத் தெரிவிக்கலாயிற்று.

இப்படிக்கு:

**வி. என். இராகவக்கோனார்,**

புக்ஷாப், புதுமண்டபம், மதுரை.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

திருவாலவாய் க்ஷேத்திரசேகரம் ஆரப்பாளையம்

நவரச சங்கீத அலங்கார அரிச்சந்திரநாடக

# கம்பெனியைச்சேர்ந்தவர்கள்

இந்நாடகயேஜண்டு.

| | |
|---|---|
| இராஜபார்ட்டு | மூக்கவேளார் அவர்கள் |
| சந்திரவதிபார்ட்டு | புகழும்பெருமாள்வேளாரவர்கள் |
| பாலபார்ட்டு | சி-பிச்சைவேளாரவர்கள் |
| மந்திரிபார்ட்டு | சுப்பராமஐயரவர்கள் |
| விஸ்வாமித்திரர்பார்ட்டு<br>நக்ஷத்திரபார்ட்டு<br>கட்டியன்பார்ட்டு<br>மோகனராஜன்பார்ட்டு | ம. சுந்தராஜவேளார் அவர்கள் |
| பலபார்ட்டு | பெருமாள் அம்பலகாரரவர்கள் |
| தை ஸ்திரிபார்ட்டு | பெ. பிச்சைவேளார் அவர்கள் |
| மோகனிபார்ட்டு | துரைச்சாமிவேளார் |
| காலகண்டர்பார்ட்டு<br>வேதார்பார்ட்டு | மு. சின்னகருப்பவேளாரவர்கள் |
| வில்பரபார்ட்டு | செம்பகவில்லிவேளாரவர்கள் |
| சோக்சுந்தரபார்ட்டு | பெருமாள்அம்பலகாரவர்கள் |
| காசிராஜபார்ட்டு | இராமலிங்கவேளாரவர்கள் |
| நித்தின்பார்ட்டு | நாகசாமிபாகவதரவர்கள் |

## பக்கவாத்தியம்.

| | |
|---|---|
| பக்கபாட்டு | வி.சின்னக்கருப்பவேளாரவர்கள் |
| ,, | கோ. வில்லாயுதவேளாரவர்கள் |
| ,, | நாராயணசுவாமிபாகவதரவர்கள் |
| ,, | நாணிபாகவதரவர்கள் |
| ,, | கருப்பணத்தேவரவர்கள் |
| பிட்டில் | கோபாலகிருஷ்ணய்யரவர்கள் |
| மிருதங்கம் | இராமுடுபாகவதரவர்கள் |
| தித்தி | அதலை.வீரபத்திரன்சேறுவை |
| ,, | இராமசாமிபாகவதரவர்கள் |
| முகவீணை | கோ. சிக்கந்தர்ராயபு அவர்கள் |
| கிளாரட் | அலாவர்தின்சாயபு அவர்கள் |

ஸ்ரீ

இந்நாடகத்தை நெடுங்காலமாக

அச்சிட்டுத்தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டுவந்த

கனவான்களின் பெயர்கள்.

மதுரை, வடக்குமாசிவீதி இராமாயணச்சாவடி மேலத்தெரு பஜனைமடம், ஏஜண்டு.

மா-ா-ா-ஸ்ரீ, ச. பொ. அழகராஜக்கோனரவர்கள்
,, நெ. மா. வ. கருப்பணக்கோனரவர்கள்
,, இ. வேலாயுதக்கோனரவர்கள்
,, ச. தெக்ஷணாமூர்த்திக்கோனரவர்கள்
,, கோ. ந. இருளப்பக்கோனரவர்கள்
,, சி. மு. கனைமுருகக்கோனரவர்கள்
,, பா. கி. முருகக்கோனரவர்கள்
,, ஆ. அழகராஜக்கோனரவர்கள்
,, ஹையார்கனிஷ்டர் ஆ. இராமசாமிக்கோனரவர்கள்
,, இ. முத்தையக்கோனரவர்கள்
,, பொ. ப. வெ. பழனியாண்டிக்கோனரவர்கள்
,, ந. ராம. வன்னியக்கோனரவர்கள்
,, ஆ. ஆழிக்கக்கோனரவர்கள்
,, நா. இராமசாமிக்கோனரவர்கள்
,, திருச்சி. அ. கோவிந்தராஜுலு அவர்கள்
,, ம. பெ. பரகால. இராமானுஜம் அவர்கள்
,, கோ. க. இ. இராமசாமிக்கோனரவர்கள்
,, கா. கு. வெற்றிவேலாசாரியரவர்கள்
,, செம்பிகிணத்துதெருவில் ரத்னவியாபாரம்செய்யும் ஸ்ரீ. மாடசாமிக்கோனரவர்கள்
,, ஹைகூர் தேர்க்குவாசல் கி. பராங்குசம்பிள்ளையவர்கள்
,, ச. வீராசாமிநாயுடு அவர்கள்
,, ஆரப்பாளையம். முன்சிப். மாத்திவைவாள்பிள்ளையவர்கள்
,, துரைசாமிபிள்ளையவர்கள்
,, வெள்ளைக்கண்ணுபிள்ளையவர்கள்
,, வெ. பொன்னுசாமிபிள்ளையவர்கள்
,, பெரியணதேவரவர்கள்
,, இராமலிங்கம்பிள்ளையவர்கள்
,, சி. முத்துக்கருப்பஞ்சேருவையவர்கள்
,, முத்துசாமிசேருவையவர்கள்
,, கோ. முத்துக்குமாருவேளார் அவர்கள்

ம-ா-ா-ஸ்ரீ, வெ. முனியவேளார் அவர்கள்
,, கோ. அழகர்வேளார் அவர்கள்
,, வி. பரமசாமிவேளார் அவர்கள்
,, பா. முத்துவேளார் அவர்கள்
,, வி. இராமலிங்கவேளார் அவர்கள்
,, நா. வெள்ளைமுத்துவேளார் அவர்கள்
மதுரை-ராகப்பன்சாவடித்தெரு வஸ்த்தாது
,, சின்னக்கண்ணுசேருவை அவர்கள்
,, கணபதிசேருவை அவர்கள்
,, நாகுசேருவை அவர்கள்
,, குப்புசாமிசேருவை அவர்கள்
,, சங்குசேருவை அவர்கள்
,, நாகமலைசேருவை அவர்கள்
,, குருநாதன்சேருவை அவர்கள்
,, மூக்கபிள்ளை அவர்கள்
,, ஆதிமூலக்கோனாரவர்கள்
,, வெள்ளைசேருவை அவர்கள்
,, சண்முகஞ்சேருவை அவர்கள்
,, சண்முகவேலுசேருவை அவர்கள்
,, முத்துக்கருப்பன்சேருவை அவர்கள்
,, சிதம்பரம்பிள்ளை அவர்கள்
,, மகாலிங்கசேருவை அவர்கள்
,, லயன்தெரு. சீதாராமுபிள்ளை அவர்கள்
,, வள்ளாலபட்டி. முத்துக்கருப்பஞ்செட்டியாரவர்கள்
,, சின்னக்கருப்பஞ்செட்டியாரவர்கள்
,, நாயினுபட்டி. பெரியகருப்பஞ்செட்டியாரவர்கள்
,, சேவுகன்செட்டியாரவர்கள்
,, வானுமதுரை. சாமிநாதஅய்யரவர்கள்
,, க. பழனியாண்டிவேளாரவர்கள்
,, வெள்ளையவேளாரவர்கள்
,, வ. பழனியாண்டிவேளாரவர்கள்
,, அட்டப்பட்டி. அழகவேளாரவர்கள்
,, சின்னையவேளாரவர்கள்
,, பரமகுடி. கோதண்டராமபிள்ளையவர்கள்
,, பொன்னையபிள்ளையவர்கள்
,, சம்மந்தம்பிள்ளையவர்கள்
,, முதுகுளத்தூர். இராகவநாயுடு அவர்கள்
,, தெளிச்சாத்தநல்லூர். சின்னையாத்தேவரவர்கள்
,, சமயமுத்துத்தேவரவர்கள்
,, திருப்புவனம், காயாம்புத்தேவரவர்கள்



ம-ா-ா-ஸ்ரீ, கோட்டைச்சாமித்தேவரவர்கள்
,, பாண்டித்துரைத்தேவரவர்கள்
,, நாட்டாகுடி. செல்லச்சாமிசேருவைஅவர்கள்
,, முத்தையாசேருவைஅவர்கள்
,, சக்குடி. அய்யாவுத்தேவரவர்கள்
,, மணலூர். வேலுப்பிள்ளையவர்கள் வகையறு
,, சிலையுமான். கணபதியாபிள்ளையவர்கள்
,, விராகநல்லூர். அய்யாசாமிபிள்ளையவர்கள்
,, பறவை. சாமிநாதபிள்ளையவர்கள்
,, கணக்கப்பிள்ளையவர்கள்
,, சோணைசேருவை அவர்கள்
,, வாலைசேருவை அவர்கள்
,, சுப்பய்யாசேருவை அவர்கள்
,, கோட்டைவாசல்சேருவை அவர்கள்
,, துவரிமான். பூசாரிசேருவை அவர்கள்
,, விராட்டிபத்து. காத்தபெருமாள்கோனாரவர்கள்
,, விளாச்சேரி. வீரபத்திரஆசாரியவர்கள்
,, பெரியசாமிவாத்தியாரவர்கள்
,, கந்தசாமிவேளாரவர்கள்
,, சோளவந்தான். வே. ராமுசேருவையவர்கள்
,, ராமுபிள்ளையவர்கள்
,, சிதம்பரபிள்ளையவர்கள்
,, நீலமேகம்பிள்ளையவர்கள்
,, மன்னாடிமங்களம். பெரிய அய்யாதுரைபிள்ளையவர்கள்
,, சின்னஅய்யாத்துரைபிள்ளையவர்கள்
,, குருவித்துறை. வெள்ளைச்சாமிபிள்ளையவர்கள்
,, விளாம்பட்டி. ஆறுமுகம்பிள்ளையவர்கள்
,, சரவணக்குமாருபிள்ளை அவர்கள்
,, சேனாபதியாபிள்ளை அவர்கள்
,, நிலக்கோட்டை. குமரவேலுசெட்டியார் அவர்கள்
,, சித்தநாதபிள்ளை அவர்கள்
,, அய்யாவுபத்தர் அவர்கள்
,, பொன்னையா அவர்கள்
,, வீரப்பபிள்ளை அவர்கள்
,, நாகலுநாயக்கன்பட்டி. சோமுபிள்ளை அவர்கள்
,, மூக்கனாசாரி அவர்கள்
,, தேவாரம் ஜமீன்மானேஜர் கந்தசாமிசெட்டியாரவகள்
,, முன்சிப்பிள்ளை அவர்கள் வகையறு
,, எழுமலை, சின்னஜமீந்தாரவர்கள்
,, மானேஜர் சுப்பிரமணியபிள்ளையவர்கள்

சீ

ம-ா-ஸ்ரீ, திருமங்களம். வெ. அனந்தநாராயண அய்யங்காரவர்கள்
" வித்வான். மாயாண்டிகொத்தனாரவர்கள்
" வஸ்த்தாது நீலமேகஞ்சேருவை அவர்கள்
" வெள்ளைச்சாமிசேருவை அவர்கள்
" சண்முகவேலுசேருவை அவர்கள்
" பூ. மகாலிங்கம்பிள்ளை அவர்கள்
" பூவந்தி. பாண்டியனம்பலம் அவர்கள்
" தக்கப்பிலிஅம்பலம் அவர்கள்
" மூக்கனம்பலம் அவர்கள்
" கோச்சடை. சிதம்பரம்பிள்ளை அவர்கள்
" அலங்காநல்லூர் பெரியகங்கைஅண்ணாவி அவர்கள்
" கொடிமங்கலம். சுப்பய்யாவேளாரவர்கள்
" வெள்ளக்குப்பான். வேலாயுதவேளாரவர்கள்
" மேலக்கொடிமங்கலம். பிச்சவேளாரவர்கள்
" முத்திருளாண்டிவேளாரவர்கள்
" கம்மாக்கரைவேளாரவர்கள்
" மேலக்கால். மலையாண்டிவேளாரவர்கள்
" ராமலிங்கஆசாரி அவர்கள்
" கொண்டயம்பட்டிகிராமம் க. அ. ரங்கசாமிக்கோனார்
" ஊர்சேரிகிருமம் மு. முருகையப்பிள்ளையவர்கள்

இப்படிக்கு:

**எஸ். சுந்தரராஜக்கோனார்,**

புஸ்தகஷாப்,

புதுமண்டபம்,

*மதுரை.

* இக்குறிப்பிட்ட தருக்கள் ம-ா-ா-ஸ்ரீ, மு. வ. கலியாணசுந்தரபிள்ளை யவர்களா லியற்றப்பட்டது.

ஸ்ரீ

ஸ்ரீ கிருஷ்ணசகாயம்.

# சாற்றுக்கவிகள்.

இஃது,

திருமயிலைவித்வான் சண்முகம்பிள்ளையவர்கள் மாணாக்கர்

ம-ா-ா-ஸ்ரீ,

## திருமயிலை - இராமலிங்கமுதலியா ரவர்களா லியற்றிய

### ஆசிரிய விருத்தம்.

ஒருசிறிய பொய்ம்மொழி மொழிந்திடற் கஞ்சியுய
  ரொக்கல்தமை நீத்து மேலா
மொளிருவனை தனைநிகரு மாவயோத் திப்பதியை
  யொருவியிட் டற்க ரும்பொன்
கருதுமனை சுதன்முதல வெல்லா மிழந்துபிற்
  கடையாம் புலைத்தொ ழில்செயா
காண்டருங் கடவுடரி சனமுற்று பதிபுக்க
  கவினரிச் சந்தி ரன்றன்
பெருவிருப் புறுகாதை மூக்கவே ளார்சொலென
  பீடார் மறைக்கு லத்திற்
பெட்புற வுதித்தமுத் தழகுபா ரதியார்
  பிறங்குநா டகம தாக்க
திருநண்ப னடிபரசு சுந்த்ரரா ஜக்கோன்
  திருத்தல்செய் வித்து மேலாஞ்
சிற்றம்ப லப்பிரசி லச்சியற் றிச்செய்ய
  சீர்த்தியுற் றிலகி னுனைல்.

---

இராமநாதபுரம் சமஸ்தானவித்வான்

முதுகுளத்தூர் பூலாறுசாமிபிள்ளை குமாரர்

## ம-ா-ா-ஸ்ரீ, ஆறுமுகம்பிள்ளையவர்களால் இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

மாவரிச்சந்திரன்கதையைப்புலவரொலாநாடகமாய்வகுத்தாரேனுங்
கோவரிச்சந்திரன்மூலபாய்மூக்கவேளார்கேட்டுக்கொள்ளுதற்கா
யேவரிச்சந்திரவதனமுத்தழகுபாரதிபோலிசைத்தாரத்தை
நாவரிச்சந்திரமாகமறுக்கவல்லார்வெளியில்வந்தூரவிலலாமே.

சிவகங்கைஜமீன் வானுமதுரைக்கடுத்த ஆலங்குளத்திலிருக்கும்

ம-௱-௱-ஸ்ரீ, மதுரகவி

## சேதுமாதவபிள்ளையவர்களால் இயற்றிய

நேரிசைவெண்பா.

நோக்கவேளாரைநுவல்வமெனவாய்ந்த
மூக்கவேளார்தம்முபற்கியிறை-பாக்கமழும்
பண்புடையமுத்தழகுபாரதிசொல்நாடகத்தால்
நண்புடையார்நாரதரானார்.

---

முதுகுளத்தூர்-மஹாவித்வான் நல்லவீரப்பபிள்ளையவர்கள் பௌத்திரரும்,

சுந்தரம்பிள்ளையவர்கள் புத்திரருமான ம-௱-௱-ஸ்ரீ, மதுரகவி

## க-சுப்பய்யாபிள்ளை அவர்களியற்றிய

விருத்தம்.

இத்தலமோடெத்தலமுங்காணக்கேட்க
வெப்பொழுதும்புதிதாமென்றியம்புவண்ணம்
சத்தியவாக்கரிச்சந்திரன்சரிதந்தன்னைத்
தண்புனலிற்குளிர்ச்சிபெறச்சமைத்துப்பாலிற்
புத்தமுதிற்சுவைபெருக்கிப்பதங்கள்வாய்ப்பப்
புலவரெலாம்வாயூறப்புகலுஞ்செஞ்சொல்
முத்தமிழ்நாடகம்பாடித்தந்தானந்தம்
முத்தழகுபாரதியாமுதன்மையோனே.

---

முதுகுளத்தூர் வித்வான் ம-௱-௱-ஸ்ரீ,

## அரு. சுப்பிரமணியபிள்ளையவர்களால் இயற்றிய

விருத்தம்.

திருமங்கையுலவுபுயனரிச்சந்திரன்சரிதைதனைச்சிர்த்தியோங்கும்
அருமறைவாளிகள்சூழ்ந்தவாரப்பாளையம்வாழ்மூக்கையவேள்தான்
அருமையுடன்வேண்டநாடகத்தமிழாற்புலவர்வியப்புறவறைந்தான்
தருமநெறிவழுவாதமுத்தழகபாரதிதண்டமிழ்வித்வானே.



முதுகுளத்தூர் அரு. சுப்பிரமணியபிள்ளையவர்கள், ஆலங்குளம் சேதுமாதவ

பிள்ளையவர்கள் மாணாக்கரும், இந்நூலாசிரியர் சிநேகிதருமாகிய ம-௱-௱-ஸ்ரீ,

## மு. வ. கல்யாணசுந்தரம்பிள்ளையவர்களாலியற்றிய

விருத்தம்.

தண்டமிழ்தேறென்றுணைவன்முத்தழகபாரதிமன்
சலதிசூழ்ந்த
மண்டலமெலாம்புரந்தவாழரிச்சந்திரன்கதையை
மாண்பாயோங்குங்
கொண்டல்நிகர்கொடைக்கரத்தான்மூக்கையவேள்
வேண்டிடநாடகமாய்க்கூற
கண்டுகேண்டுருகுமென்றாலிதன்சிறப்பென்னேர்நாவாற்
கழறற் பாற்றே.

---

சிவகங்கை சமஸ்தானவித்வான் ம-௱-௱-ஸ்ரீ,

## வில்லியப்பபிள்ளையவர்களாலியற்றிய

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

இருந்துவரியளிமுரல்பூந்தொடையலரிச்சந்திரமன்னியல்கொண்டாட
வருந்துவரிதழியர்மதனரப்பாளையமூக்கமகிபன்வேண்டத்
திருந்துவரிபிசைபரவமுன்னையநாடகங்களினுஞ்சிறப்பச்செய்தான்
பொருந்துவரியுலகமெச்சுமுத்தழகபாரதிபூசுரசிங்கமே.

---

மதுரை எழுகடற்றெரு ஓவர்ஸியர், சொக்கலிங்கபிள்ளையவர்கள் குமாரர்

ம-௱-௱-ஸ்ரீ, முத்தமிழ்க்குடாரி

## வேலுச்சாமிபிள்ளை யவர்களால் இயற்றிய

விருத்தம்.

திருமருவுமதுரைநகர்முத்தழகபாரதிநற்றிடஞ்சேர்மார்பில்
திருமருவரிச்சந்திரன்கதையைநாடகமாய்செப்பநோக்கி
மருமருவுறுந்தமிழ்க்கூறுமுனிதேறுகைக்குமாண்பதாக
மருமருவுபெரியவரையுற்றனெனினிதன்பெருமைவழுத்தலென்னே.

மதுரையைச்சேர்ந்த பிராட்டியாள்பத்துக் கிராமத்திலிருக்கும்
சாந்துலிங்கநாயக்கர் அவர்கள் குமாரர் ம-௱-௱-ஸ்ரீ, மகாவித்துவான்

## கந்தசாமிநாயக்கரவர்களா லியற்றிய

விருத்தம்.

சீர்மலிந்ததிருக்கொன்றையணிவேணிச்சுந்தரனற்றேவர்குழு
வார்மலிந்தகனதனத்தங்கையற்கணமைதனைமணந்துவழுதியான
கார்மலிந்தவெழில்மதுரைதனிலும்பர்மரபில்வந்தெக்கலையுமோர்ந்து
ஏர்மலிந்தமுத்தழகபாரதிவேளென்னுமொருவிளங்கிங்கேறே.

சங்கினங்கள்முத்துயிர்க்கும்பூம்பழனவயோத்திநகர்தன்னைமுன்னம்
புங்கமுனிதனக்களித்துவிதிவலியாற்காசிநகர்ப்புகுந்துமைந்தன்
மங்கையையுமறையவர்க்குவிலைக்கிந்துதானுமொருமயானங்காத்த
துங்கனரிச்சந்திரன்றன்சரித்திரத்தைநாடகமாச்சொற்றான்மன்னே.

முத்தழகபாரதிவேள்முத்தமிழையுந்தேர்ந்து
சத்யவரிச்சந்த்ரன்சரித்திரத்தைப்புத்தமிர்த
மெனநாடகமாயியம்பியதைக்கண்டு
கனநாடர்காதலித்தார்காண்.

---

திரிசிரபுரம் மகாவித்வான் ம-௱-௱-ஸ்ரீ,

## சுப்பராமஐயரவர்களா லியற்றிய

விருத்தம்.

சுத்துகடல்சூழுலகைக்காத்தவரிச்சந்திரன்றன்கதையைநாட
கத்தமிழாற்கழறுகெனக்கனிந்தாரப்பாளைய மூக்கயவேள்வேண்ட
புத்தமுதமிதெனவேகற்றவருமற்றவரும்புகழவோங்கு
முத்தமிழ்தேர்கவிவாணன்முத்தழகபாரதிமன்மொழிந்திட்டானே.

---

ஸ்ரீ

ஸ்ரீ கிருஷ்ணசகாயம்.

இந்நாடகத்தை நடாத்திவருகின்ற ஆரப்பாளையம்
மூக்கவேளாரவர்களுக்குக்கொடுத்த

# சாற்றுக்கவிகள்.

---

இந்நாடகமியற்றிய ம-௱-௱-ஸ்ரீ,

## முத்தழகபாரதி யவர்களா லியற்றிய

விருத்தம்.

பழவிரசங்கழனிகளிற் பாய்ந்துசெந்நெற்
பயிர்வளஞ்சூழாரைப் பாளையத்தினோங்கும்
பழவிரசங்குலாலகுல திலகன்கீதம்
பகர்முத்துக்கருப்பணவே ட்வத்திற்றோன்றி
பழவிரசங்கண்டுபயந் தேனையொக்கப்
பண்படுத்தியுண்டவரிற் களிக்கச்செய்யும்
பழவிரசமின்றியிசைப் பாவின்மிக்கோன்
பருணிதரிற்பருணிதன்மூக்கையமாலே.

---

முதுகுளத்தூரிலிருக்கும் ம-௱-௱-ஸ்ரீ,

## மு. வ. கலியாணசுந்தரம்பிள்ளையவர்களாலியற்றிய

விருத்தம்.

சங்கினஞ்சூலுளைந்தீன்ற குருமணியைக்
கருவெனவே தடங்கொண்மாநற்
செங்கமலப்பொருட்டதனிற் சிறைக்குருகு
வடைகிடைக்குஞ் சீர்த்திவாய்ந்த
வங்கமிகுத்தடமிகச்சூ ழாரப்பாளையம்
வாழ்மூக் கையவேள்தன்
இங்கிதத்தைக்கேட்டிசைவல் லோன்றனக்குத்
தாழ்வுவந்த தெனவெய்த்தானே.

சிவகங்கை சமஸ்தானவித்வான் ம-௱-௱-ஸ்ரீ,

## வில்லியப்பபிள்ளை யவர்களா லியற்றிய

விருத்தம்.

சீர்மேவுசிவனடிய ரறுபத்துமூவரிற்
றிருநீலகண்ட னென்னுஞ்
செப்பரியநாயனா ரெக்குலத்தினரக்
குலத்தினி லுதித்தசீலன்

பார்மேவுதென்மதுரை யணியவாரப்பாளை
 யத்தில்வளர் மூக்கவேளான்
பண்புறுமரிச்சந்த்ர நாடகஜமாவினிற்
 பாவலர்கள் மெச்சுசிங்கம்
தார்மேவுராஜபார்ட்டதி யலங்காரமொடு
 சபையினின்றமு தொழுகல்போல்
தருபரதமிக்கநவ ரசவசனசுதியோடு
 தாளப்ரமாணமுடனும்
பேர்மேவுகந்தருவர் தேவரம்பையரும்ப்ர
 மிக்கவே முலகுமெச்சப்
பேசரியநாடகம் நடாத்தியுலகெங்கும்
 பிறங்கவிசை பெற்றனரோ.

---

திருப்பாசேத்தியிலிருக்கும் இராமநாதபுரம்

சமஸ்தான வித்வான் ம-ா-ா-ஸ்ரீ,

## தியாகராஜபிள்ளை அவர்களாலியற்றிய

வெண்பா.

பாலோ பலவின் பழச்சுவையோ தேனெழுகுங்
காலோ சருக்கரைநற் கற்கண்டோ—சீலமுறும்
பாற்கடலிற் றெள்ளமுதோ பாரோர் புகழ்ந்தேத்தும்
மூக்கவேள் சொல்லு மொழி.

---

இராமநாதபுரம் சிவகெங்கை சமஸ்தானம் மஹாவித்வான்

ஜவாதுக்கவிராயரவர்கள் மரபினரும் இளையாங்குடிக்ஷேத்திரத்தில் உசிக்கும்

ம-ா-ா-ஸ்ரீ, சக்கரையம்பலகாரரவர்கட்கு நேசருமான

## முகம்மதுமீர் ஜவாதுக்கவிராய ரவர்களாலியற்றிய

வெண்பா.

நாரதன்பு றம்பகர்ந்தா னந்திமுக மாறுளதா
யாரணிபா கன்பரியா யாகினன்—சீரறிந்து
நாடகஞ்செய் மூக்கவே ளற்ப்ரசங்கக் கீதமொழிக்
கீடலநா மென்றெண்ணி யே.



திருமாணிக்கத்திலிருக்கும் எழுமலை சமஸ்தானவித்வான் ம-ா-ா-ஸ்ரீ,

## நமசிவாயக் கவிராயரவர்களா லியற்றிய

ஆசிரிய விருத்தம்.

முத்தமிழ்ப்பிரசங்க வித்வசனசிம்மேறு
 மொழிமதுர நளினகீத
முறையடவராதவன் சங்கிதசாஹித்ய
 முழங்கும்ப்ர சண்டவாக்கி
பத்திபுரியுத்தம னரிச்சந்த்ரநாடகம்
 பாடியாடித் துதிப்போன்
பாருலகினல்லாரப் பாளையந்தங்கிவளர்
 பதிபுகழ்குலா லதிலகன்
எத்திசைமதிக்கவரு மூக்கவேட்பாத்திரத்
 திசைகண்டு கலைமடந்தை
இனிவேதனுவினி லடங்கினள்கும்பனே
 வேற்றமலைவாயிருந்தான்
சத்தகிரிமீதினில் யாருந் துதிக்கவொரு
 சந்தேக மேதுமுளதோ
தரணிமிசையிவன்கீர்த்தி யெந்நாளுமோங்கிடுஞ்
 சத்யமொழி யீதாகுமே.

---

திருநெல்வேலிஜில்லா சங்கரநயினார்கோவில் தாலுகா-திருவேங்கடம்

## மு. சங்கரநாராயணபாரதியவர்களாலியற்றிய

விருத்தம்.

மாலம்புதியுதித்தமதிச்சடையான் சிரந்துளக்குமணியாராழி
மாலம்புதிவருமைமணியிசையின் மாலாகுமூக்கவேடன்
மாலம்புதியரம்பைமானுர்களுணை முறநடிக்கும்வான
மாலம்புதிமதிப்போர்நாடகம்போல் மாநிலத்திலெவர்தான்மன்னே.

---

மன்னுடிமங்கலத்திலிருக்கும் நடையனேறி ம-ா-ா-ஸ்ரீ,

## முத்துசாமிக்கவிராயரவர்கள் இயற்றிய

விருத்தம்.

புத்தியிலோமாபிரகஸ் பதியேயாகும்
 புகழுடையபெரியோர்கள் போற்றுமுக்ய
வித்தையிலேசரஸ்வதிக்குச் சரியாய்ச்சொல்லும்
 விபரமுள்ளவித்துவா மிசத்தில்நாளும்

நத்தியுணர்ந்தாராய்ந்தே பலநூல்பார்த்தே
நன்குணர்ந்திராகமுறை நழுவிடாமற்
சித்தமதையொருவழியி லூன்றிப்பாடுந்
திறமைமிகுமூக்கையவேள் ஜெயசிங்கேறே.

எண்டிசையோர்திறைகுவித்து வணங்கிப்போற்று
மீரேழுலோகமெல்லா மடக்கியாளுங்
கொண்டலெனவந்தவரிச் சந்த்ரன்காதை
குவலயத்திற்பிழையறவே கூறும்வாக்கால்
மண்டலங்கள்புகழ்ந்திடவே பாடியாடும்
மகிபனெனும்பெரியகருப் பணவேளென்ற
தண்டமிழிற்சிறந்தபா வாணனென்னுஞ்
சபைமெச்சுமூக்கைவேள் தளசிங்கேறே.

மத்தளங்கைத்தாள தித்திதம்பூர்ஜாலர்
வளமானபிடில்வீணை கிளார்நட்கஞ்சர்
எத்திசையுங்கிடுகிடென வொலிக்கும்வேளை
இருவர்களும்லோகிதாசகனேடோங்குஞ்
சித்தர்புகழ்மன்னுடி மங்கலத்தைத்
தினங்காக்குங்காளிகா தேவிமுன்பாய்ப்
பத்தியுடன்சபையில்வர மூக்கவேளைப்
பார்த்தொரரிச்சந்த்ரனென்றே பகர்ந்திட்டாரே.

---

எழுமலைமாநகர் ஆதீனவித்வான் ம-ா-ா-ஸ்ரீ,
**சங்கரலிங்கப்புலவரவர்களாலியற்றிய**

விருத்தம்.

ஏர்க்கையேமிகுந்திலகயோத்திநகரோர்குடைக்கீ
ழினிதா யாண்ட
தீர்க்கமிகுகுணமுடையானரிச்சந்த்ரன்
ஜெயம்பெற்றோங்கசரித்திரத்தை
மூக்கையவேள்நன்கிசைத்த நாடகத்தின் பிரபலத்தை
மோகமாகப்
பார்க்கவந்தபாவலரு மற்றவர்யாவரும்வியந்த
பண்பென் சொல்வேன்.



ஸ்ரீ
ஸ்ரீ கிருஷ்ணசகாயம்.

# சிறப்புப்பாயிரம்.

மதுரைமாநகரம் ம-ா-ா-ஸ்ரீ, விப்ரசங்க
வெங்கிட்டநாரசிம்ம ஐயரவர்கள் மாணாக்கர்
**பெ. எட்கா. நீ. இராமலிங்கம்பிள்ளை யவர்களாலியற்றிய**
நிலமண்டிலஆசிரியப்பா.

திருவுறைமார்பன் றேவர்கடேவன்
கருமுகில்வண்ணன் கண்ணுதற்காத்தோன்
றனக்கொருதேவி யானதாத்திரியை
மனக்குயர்நீதி மனுநெறிவழாமற்
காத்தவனம்பொற் கதிரவன்குலத்தைக்
காத்தவனுசான் கருத்தினுக்கிணங்கச்
சங்கமோமுன்று தனியரசாண்ட
சங்கையாலேதிரிச் சங்கனென்றோர்பெயர்
வாய்த்தவன்றவத்தால் வந்துபூவருத்தம்
மாய்த்தவன்சக்ர வரநெறிநின்றோன்
குயிலுங்கொடியுங் குறுமுயலுயும்
அயிலெயிற்றரவு மருஞ்சிறைநகுலமும்
பசுவும்புலியும் பகையிலாதென்றும்
விசுவாசம்முடன் பேற்பகையின்றித்
தாழ்விலாதாகச் சலிப்பிலாதாக
வாழ்குகவைத்தோன் மனுமுறைவழியே
மன்னுயிரெல்லாந் தன்னுயிரென்ன
வுன்னிடவோச்சு மொருதனிக்கோலான்
வானவர்மானவர் மற்றதொல்லுயிர்க்கு
மூனம்வராம லுயிரெனக்காத்த
மன்னவனரிச் சந்திரவள்ளல்
இன்னிலமதனை யாவரும்புகழ
வரசுசெய்நாளி லம்முனிவோர்கள்
விரவியங்குற்று வேந்தன்முன்னுறவே
கண்டவனெழுந்து கருணையிற்றாழ்ந்து
பண்டுசெய்தவமோ பலித்ததிச்சென்ம
மென்றவர்ப்போற்றி யெழிலாசனத்தி
லொன்றவாங்கிருத்தி யெண்டவத்தோரே
வந்ததென்னென்ன மாதவத்தவரும்
சிந்தையிற்களித்துத் திறல்மிகுமரசே
மண்டலமுழுது மாவலம்புகுந்து
பண்டயதலமும் பவமிலாநீரும்

ஆடியயோத்தி யடைந்தனஞ்சரபுவி
லாடினேம்நீயு மடைந்திவண்கண்டோ
மிக்கனன்மகிழ்வே வேந்தனேவியப்பாம்
தக்கவெம்முறைகேள் தரணியிற்சிறந்த
கன்னமாபுரியிற் கதிர்மதிக்குலத்தின்
மன்னவனுரு மதிதயன்றவத்திற்
சிவனெழுந்தருளிச் செய்தநன்வரத்தால்
நவமுறப்பெற்ற நங்கையங்கயற்கண்
சந்திரவதியாந் தையறன்னழகை
யெந்தமாலியற்ற வேற்றிடாதெனினும்
கூறுதுங்கேண்மின் கொண்மூகூந்தன்
மாறுறுமூன்று மதிநுதலுக்கே
மாறன்மகனு மாரன்கரவில்
மாறும்புருவ வளைவினைக்கண்டே
வண்டுவேல்குவளை.மறைமான்சாயல்
கண்டையென்றுரைக்கிற் கண்ணினுக்காமோ
நாசிக்குவமை நற்குமிடன்னைப்
பேசுவர்புலவர் பேரிழிவாமால்
தபோபலத்துதித்த தையறன்வடிவாங்
கபோதமிரண்டுங் கண்ணடியாமோ
காதுகளிரண்டுங் கத்தரியெனவே
ஓதுவர்பெரியோ ரோவாதடிக்கழுத்தைச்
சங்கெனவுரைக்கிற் றகுதியதாமோ
மங்கைதன்பற்கள் மயிலிறகடியாம்
மழைக்கரமங்கை மணித்தோளிரண்டுங்
கழைக்குருத்தென்னக் கழறவுந்தகுமோ
முன்னங்கைகள் மூரிவான்வீணை
யென்னலாம்விரல்க ளீரைந்துகளிராம்
மறைமலரிதழில் மறுவிலாமதிகள்
சிறிதும்பெரிதுஞ் சேர்ந்தமைந்திருக்கில்
கைமறையென்னக் கருதலாமுலைகள்
மைதவழிரண்டு வரையடிவயிறு
ஆலிலையுந்தி யாற்றின்சுழியாம்
நூலினுமிடைமென் னுண்ணியதாகும்
பாதமிரண்டும் புத்தகப்படிவ
மோதவுந்தகாதே வுத்தமவரசே
பூதலமின்னாற் பொர்பெலாந்திரட்டி
மாதெனப்படைத்தான் மலரயனென்னப்
பேதமில்லாமற் பேசுவோம்யாமே

செந்திருவனைய தேமொழியின்னா
ளுந்தனக்கேய்ந்த வுத்தமியாமால்
அந்தமாதுரிய வணிசுயவரத்திற்
கெந்தைவந்துற்று விணங்குமென்றுரைத்து
அந்தணரகன்று ரண்ணலுந்தளர்ந்தான்
முந்தமாவினையால் மூண்டதேயாகு
மென்றரசிருக்க வேகியமுனிவர்
பொன்றிகழ்கன்ன புரியடைந்தந்த
மதிதயனிடத்தில் வழுத்தினரீசன்
விதிவ்ரமதனை விளம்பியம்மன்னைத்
தருகவென்றுரைத்துத் தரணிபாலகர்க்குக்
கருதிச்சுயவரக் கனகமார்முடங்கல்க
ளனுப்பினனேக்கி யம்புவிமன்னர்
மனத்திற்களிக்க மாபெரும்படையொடு
வந்தனரயோத்தி வள்ளல்பால்முனிவர்
வந்தனருரைத்தார் மகிழ்ந்தரசுடனே
சேனைகளோடுந் தேர்தனிலேறி
வான்படிவ்வரைகள் வனங்களுங்கடந்து
வரும்வழிதன்னின் மாதவக்காளி
திருமுகங்கண்டு தேரிழிந்தடியிற்
படிந்தர்ச்சித்தான் பன்மலர்தூவி
முடிந்தமுன்வினையான் முயற்சிறப்பயனாற்
கற்றோர்தன்னைக் கண்டனனதுவும்
பொற்றோராகப் பொலிந்ததைநோக்கி
யுற்றேகாளி யுயர்வரம்பெற்று
நற்றேரேறி நடந்தனனப்பால்
மதிதயனயோத்தி மன்வரவறிந்தங்
கெதிர்கொடாசனத்தி னிருக்கையளித்தே
மாதைமன்சபையின் மதிதயனழைக்கக்
கோதையைக்கோசலக் கோமான்கண்டான்
முன்விலையான மொய்குழலிவளும்
பின்விலைசெய்யப் பெறுமோவென்ன
அன்னசொற்கேட்ட வருந்தவமுனிவர்
கன்னமாபுரியாள் காவலர்க்கோத
முன்னவன்முடிவி தென்றுளமுன்னிக்
கன்னியையயோத்தி காவலனுக்கே
கொடுத்தனன்மணமாய்க் குவலயதாசன்
அடுத்தொருவருடத் தம்புவிதோன்ற
மங்களமாக மைந்தற்குரிய
திங்களிற்சாதகச் சடங்குகள்செய்து

வருடமோரேழுங் கிருந்துமன் றிருவாம்
பொருந்தியமனையுடன் புறப்பட்டயோத்தி
வந்தரசியற்றி வருமந்நாளில்
இந்திரன்சபைசேர்ந் திருக்கும்போதங்
கெழுமுனிவ ரொடுநாரதனும்
வயஞ்சேர்கோசி கம்முனிவசிஷ்டன்
மற்றமாதவரும் வந்தவணிருக்கக்
கொற்றவன்சசியின் கொண்கனுநோக்கிப்
பூவுலகதனிற் பொய்சொலாவரசர்
யாவருளாரென வயன்மகனயோத்தி
வள்ளலென் றுரைக்க மனங்கடுகடுத்துக்
கள்ளன்பொய்யன் கபடன்சினத்தன்
எள்ளளவுளத்தி லீகையிலாதான்
கள்ளிழிகூந்தற் கன்னியர்மோக
னவனைப்பொய்யி லன்னையென் றுரைத்தல்
பவமெனப்புகலப் பார்த்தயன்குமரன்
சினமுறக்கோசிகன் சேப்பக்கண்கள்
மன்னுறநோக்கி மகவானுரைப்பான்
கோசிகமுனியே கோமானிடத்தின்
மாசுறப்பொய்நீ வாங்குவாயாகில்
தவத்தினைவிடுத்துச் சடைமுடிவிலக்கி
பவத்தினுக்காளாம் பாவியானுவே
னென்னவசிஷ்ட னியம்பினனீயென்
சொன்னயமென்னத் தோன்றலேமன்பால்
எவ்விதத்தேனும் பொய்வாங்கேனேல்
ஒவ்வியவெந்த னுயர்தவம்பாதி
மன்னர்க்கீவேன் வள்ளலேயென்றன்
சொன்னயம்பிசகேன் றோன்றலேயென்னக்
கோசிகன்கூறக் குயின்மொழிச்சசியின்
வாசவனந்த வண்மயன்மகனைப்
பொன்னுலகிருத்திப் புகழ்தவத்துயர்ந்த
மன்முனிபோர்நீ மண்டலமென்னத்
தவமுனிகேட்டுத் தாத்திரிபோந்தங்
கவமிலாமுனிவ ரனேகர்தம்மொடு
கோசலமன்னன் கோச்சபையெய்த
மாசிலாமன்னன் மறைமுனிபதத்தைப்
யேற்றிப்போற்றி யாசனத்திருத்தித்
தேற்றமென்னென்னத் தெய்வயாகம்
முடிப்பதற்குன்னி முயற்சிசெய்திங்கு
நிடத்துடன்வந்தேஞ் செம்பொன்னீயென



மன்னவன்கேட்டு மறைமுனிசொற்படி
சொன்னமளிக்கத் தோன்றலேயாகஞ்
செய்யும்போது தேவையந்நாள்வரை
யையனின்பாலி னடைக்கலமாக
வையுமென் றுரைத்து மாமுகரிட்டுச்
செய்யமாமுனிவ ரொடுதிருமுனியுங்
காட்டினிற்சென்று கரவுளங்கருதி
நாட்டினையழிக்க நாய்நரிபன்றி
கலைமுள்ளேனங் கரியரியுழுவை
மலைவனநாடு மற்றெலாம்பாக்கப்
படைத்துவிடுத்த பலசீவன்கள்
துடைத்ததைக்கண்ட துயர்மிகுகுடிகள்
இறையோன்சமுகத் தெய்திமுன்வணங்கி
முறையோமுறையோ வென்னமொழிந்தார்
மன்னன்சேனை வருகவென் றுரைத்துத்
தன்மனைமைந்தன் சத்தியகீர்த்தி
யொடுதேரேறி யுயர்வனம்புகுந்தரி
யொடுபலமிருக முயிர்வானேறச்
சரம்வாள்பிண்டி சக்கரஞ்சூலங்
கரம்வேல்கொண்டு கலக்கினனக்கான்
முனிவன்னேவான் மூரிவெம்பன்றி
துனிவன்னெஞ்சிற் றாங்கநின்றதட்டி
யலைகடலொத்த வனீகங்கொல்லச்
சிலைநாணேற்றித் திருநுதல்பிளக்க
விட்டனன்பகழி விடவதுதாக்கிப்
பட்டனபன்றி பார்விழுந்தேகி
வேதமுனிக்கு விளம்பினவவனும்
போதச்சினந்து பொறிவழிபொரியுக
விட்டன னுயிர்ப்பு விடவவ்வழியே
பட்டமாமரமும் பலநாளெ லுய்ப்புந்
தழைக்கமொழியுந் தையலிருவர்
மழைக்கருங்கூந்தல் மாவிழியோடு
நிற்கக்கண்ட நிமலமாமுனிவன்
கற்கண்டொத்த கன்னிகாணீவிர்
அயோத்திமன் பாலடைந் தவன்குடைகேண்மின்
செயாவிடினும்மைச் சேர்ந்திடச்செய்து
வாருமென் றுரைத்து மானதத்துன்னி
நேருறவமைத்து நிறையத்தேக்கி
வரிவிழிமின்னார் மனத்திடமேறச்
சரிகமபதனி யேழிசைசாற்றி

விடுத்தனன்மின்னர் வேத்திடத்தெய்தித்
தொடுத்தனர்கீதந் தோன்றலுங்கேட்டு
மகிழ்கொடுசெம்பொன் வழங்கினன்வேண்டேஞ்
செகபதியெம்மைச் சேர்ந்திடவேண்டு
மன்றெனினின்ற னரிக்குலக்குடையை
யின்றருள்புரியு மென்றனரரசன்
புன்னகைகொண்டு புகலொணாவார்த்தை
சொன்னீர்நீசத் தோகையர்நீவிர்
சென்மின்னென்னச் சேயிழைமார்கள்
மன்முனிதன்பால் வந்தடிவணங்கி
அடித்துத்துரத்தி யநீதமுஞ்செய்து
பிடித்துத்தள்ளி விரட்டினன்பின்னர்
வந்தனமென்ன மாமுனிசினந்து
சிந்தையினினைந்து சென்றுமன்னவனை
முடிதனிலுதைக்க மூவுலகரசன்
படிதனின்வணங்கிப் பற்பலவேற்றக்
கோசிகனெந்தங் கோதையர்தம்மை
நேசியுமென்ன நிலமகனேயே!
பாவம்பாவம் பழிப்புக்கிடமாங்
கோவலர்நகைப்பர் குலம்பழுதாகும்
ஆசுறுமிந்த வம்புவியளிப்பே
னீசனைச்சேரே னென்னவுமந்தச்
சொற்படியீயெனத் தோன்றலுமீயப்
பற்பலமுனிவ ரொடுமறைபாடி
அரசினைக்கைக்கொண் டயோத்தியையெய்தி
சரசமாயெல்லாந் தன்வசஞ்செய்து
கொண்டபின்வேந்தைக் கோமுனிநோக்கி
யண்டையில்வைத்த வருநிதிகேட்கக்
கோமானேங்கிக் கொடுங்கனவிதுவோ
பூமானீயும் போதுபொக்கிஷங்கள்
எல்லாந்தத்தஞ் செய்தனனெந்தாய்
வல்லாய்நின்சொன் மாறேனெற்குத்
தவணைதாவென்னத் தவமுனிநகைத்து
நவநாள்நாற்பத் தெட்டெனநவில
வள்ளலுங்கேட்டு மனைமகன்மதியு
முள்ளவர்க்கியற்றி யூரைவிட்டகன்று
வந்தனர்வனத்திற் றாரகனும்வந்தான்
அந்தணனன்னங் கேட்கவங்களித்துச்
சென்றனர்பூதஞ் செறுத்ததையகற்றி
மின்றிகழ்சோலை மேகமார்வரைகள்



கடைந்தனரிடையிற் கௌசிகமுனியால்
அடைந்தவனெருப்பா றகன்றுபொன்றிகழும்
காசியையடைந்து கடவுளைவணங்கி
மாசிலாமுனிவன் வன்கண்மையினால்
தெருவெலாய்புகுந்து தேவியைமகனைத்
திருவிலைகூறிச் சித்தங்கலங்கி
மன்னன்மயங்க மாமுனியேவாற்
றன்னிகரின்றித் தறுகண்ணோடும்
காலகண்டையன் றோன்றிடக்கண்ட
சீலனும்விற்று முனிகடன்செலுத்தத்
தாரகனுஞ்சரியே தந்நீர்கடனைத்
தாரெனக்கில்லைத் தந்தகலென்ன
மதிதனைவிற்க வழுத்தினன்கோமான்
கதியிதுவென்னக் கழறினன்விலையே
விலைகூறிடவும் வீரவாகுமுன்
புலையனென்றான் பொருந்துமென்றுரைக்கக்
கொண்டனன்றாரகற் கூலியுங்கொடுத்தான்
வண்டனும்வீர வாகுவுமன்னைச்
சுடலையைக்காசெல் சுதந்தரம்வாங்கி
யடவுடனனுப்பிவாய்க் கரிசிநீபுசிப்பா
யென்னவுமிறையோ னேகியாங்கிருக்கக்
கன்னியுமகனுங் காலகண்டையன்
சொல்லியபணிகள் சோர்வறச்செய்து
வெல்லியோர்சாம மிருக்கமுன்புசித்தே
வருநாள்மைந்தன் வனந்தனிற்செலவு
மரவந்தீண்டவு மன்னைகேட்டேகி
வனந்தனிற்றேடி மைந்தனைக்கண்டே
தனந்தனியழுது தன்றோளேற்றிச்
சுடலையினண்ணத் தோன்றலுந்தடுக்கத்
திடமதியாரிவள் தேரெனக்கூறக்
கண்டபயங்கூர் காரிகையிவளு
மண்டலமன்னன் மாதெனவுன்னி
மைந்தனிறந்த வருத்தம்வருந்தக்
கந்தமென்குழலாள் கண்டுநானேகிக்
காற்பணம்வாங்கிக் கடிதினின்வருவேன்
காப்பமைமகனை யென்றவள்கடந்தாள்
காசிமாநகரின் கடைத்தெருபுகவுங்
கோசிகமுனிவன் கோமான்மகனைக்
கொன்றுமுன்போடக் கோமான்சேயென
நின்றனள்காசி நிருபன்காவலர்

கண்டவட்பிணித்துக் காவலனிட்டத்திற்
கொண்டுபோய்விடவுங் கோதையைவதையெனக்
கூறினனுடனே கோதைபுங்கன்னி
ராறெனவோட வனிச்சத்தோட்டிபால்க்
கொடுக்கமுன்வாங்கிக் கொடுபோய்ச்சுடலையில்
நடுக்கமுற்றேங்கி நடுவனைநோக்கிக்
கிழக்குநோக்கிக் கிளிமொழியிருவென
வழக்கெனமாதும் வணங்கினள்வாளால்
வெட்டினன்மன்னன் விழுந்தனமாலை
எட்டினர்மூவ ரிந்திரன்விண்ணோர்
கோசிகன்வசிஷ்டன் குருபரன்கணேசன்
காசிபன்முதலாக் கடிதின்வந்தெய்திக்
கண்டனன்மன்னன் கலக்கம்விண்டிடவும்
ஒண்டவராசி யுரைத்திடவீசன்
வரமருள்புரிந்து மன்னனைத்தேற்றித்
திரமுடன்மைந்தன் திருவுயிர்பெறவும்
பூமியாண்டிருக்கப் புகன்றவர்மறையத்
தாமதமின்றித் தண்டலைசூழுங்
காசிமன்முதலாக் காவலரனேகர்
கோசலவயோத்தி குறுகிமாமுடியுஞ்
சூடமன்னவனுஞ் சுடர்தவழ்நேமி
நாடவயோத்தி நாட்டையாண்டிருந்த
கதைமுற்றும்பெறக் கசடறவியலிசைச்
சுதைமிகுநாடகச் சுருதியாயமைத்துக்
கொடுமெனமதுரைக் கோநகரடுத்த
விடுசுடர்மாடி விளங்குபொன்னிதிசேர்
ஆரைப்பாளையத் தமர்ந்தவனம்பொற்
காரைப்பழித்த கையான்மெய்யன்
காசிபரிஷிகோத் திரத்தான்கருணைக்
காசிலாவிருப்ப னடியார்க்கின்பான்
குலாலமுனிவன் குலத்துற்பவித்தோன்
நலாருறமருவு நகரிகர்புயத்தான்
முத்துக்கருப்ப முதல்வன்றவத்தா
வித்தலத்தெவரு மின்புறவுதித்தோன்
ஆடவர்நல்லா ரகமகிழ்கொள்ளப்
பாடவும்நடிக்கவும் பரதபண்டிதனும்
சங்கீதத்துறையிற்பயில்சான்றோ
ரிங்கிதத்து மியலிசைநாடக
வங்கீதத்து மபிநயவலத்து
மங்கண்மாநில மியாவுஞ்சிறக்கச்

—



செய்புஞ்சுகுணன் றிருமான்பூமான்
மெய்புஞ்சேர விரும்புமுளத்தான்
நவசுரமவசுர நாடாவண்ணம்
நவரசவிங்கித நாடகத்தலைவன்
உரியவர்பெற்றோ ருற்றூர்யாரும்
பெரியகருப்ப னெனும்பெயருள்ளான்
காக்கையான்பல கலைதேர்வல்லன்
மூக்கையாமுனம் வேண்டிடக்கேட்டு
நான்மறையோன்ற னற்குலத்துதித்து
வான்மறையோதும் வலவன்முந்நாள்
புல்லணைதுயிலும் பூமான்வைகுங்
கல்லணைவாழுங் கற்பகன்விற்பனன்
இலக்குமணன்றவத் தெய்தியமைந்தன்
நலக்குமனந்த னுக்கினைநாடும்
நாவலனெவரும் நன்குறமதிக்கும்
பாவலன்பன்னூ லாய்ந்தபருணிதன்
செவிக்குணவாகச் செந்தமிழ்பொழியுங்
கவிக்குணக்குன்றங் கருணையார்கண்ணான்
திருத்தாளுன்னித் தினந்துதித்தேத்தி
மருத்தாமரையாள் வளர்திணிபுயத்தான்
அழகபாரதியா ளருள்சுரந்தருள்முத்
தழகபாரதியா னமிர்தமார்த்தொழுகப்
பாடினனயோத்தி பாலகன்கதையை
நாடகமாக நற்கவிநிரைத்துத்
தரமூக்கையவேள் தாரணியோர்மகிழ்
தரவாடிப்பாடித் தக்கதெனக்கொண்
டாடச்செய்த வந்நாடகத்தைக்
கூடற்பதிவாழ் கோமானெவர்க்கும்
பொதுவன்றிருத்தாள் போற்றுங்குமுணன்
மதுவார்முல்லை மாலைசேர்மார்பன்
ஆயர்குலக்கொழுந் தாயவதரித்த
நாயகனம்பொற் றருங்கிர்கையான்
நீலமேகக்கோ னீள்வத்துதித்த
பாலகனம்பொற் பாக்கியமுற்றோ
ளிராவகச்செம்ம லிந்நாடகத்தைப்
பராவருமுலகோர் படித்துவியக்க
அச்சிலிட்டிவ்வா யன்னாலையென்ன
நச்சினனந்த நயத்தினுக்கிணங்கி
மெச்சியச்சிட்டு விளங்கச்செய்தான்
நச்சினார்க்கினியார் நல்லுரையென்னப்

பூமிக்கொருதில கம்போற்பொலிவு
மாமித்திருமது ரைப்பதியாயர்
குலபூபதியான் குபேந்திரனம்பா
வலருக்குதவும் வான்றருவனையான்
சுகுணன்சேனைத் தோன்றல்செப்தவத்தில்
மிருமன்பால்வந் தெப்தியவேந்தன்
திருவுடன்பூமி தேவியுங்கூடி
மருவும்புயத்தான் மருவலர்க்கிடியே
றன்னுன்முன்னோர்க் கன்புளன்பொய்யை
யுன்னுன்புத்திர பாக்கியமுற்றவன்
காரியைப்பொருவுங் கரதலனுயருப
காரியெவர்க்குங் கடுஞ்சொற்கூறுன்
வீரியன்சான்றோர் விருப்பமிக்குள்ளான்
பாரியையன்றிப் பரதாரத்தைத்
தங்கையென்றன்னுஞ் சாதன்சக்கர
துங்கனுக்கென்றந் தொண்டுபூண்டொழுகும்
விரதமெய்யோக விற்பனசாந்தனங்
கரதலாமலக மென்னக்கற்றோன்
தந்தமெவர்க்குந் தன்னளிசுரக்குஞ்
சுந்தரவதனனெனுஞ் சுந்தரராஜனே.

—ಂ—

இதுவும் மேற்படியார்-ம-ா-ா-ஸ்ரீ.

பெ. எட்கா. நீ. இராமலிங்கம்பிள்ளையவர்களாலியற்றிய

விருத்தம்.

தென்மதுரைதனிற்பொதுவர் திலகனெனுங்கோன்
சுந்தரராஜேந்த்ரசீமான்
தன்மதுரையரிச்சந்த்ர சரிதமதைச்சங்கிதத்தாற்
சாற்றுகென்னக்
கன்மதுரைக்கருவெய்தான் முத்தழகபாரதிமன்
கருதிநாடி
நன்மதுரகவித்தருவு மிங்கிதசங்கிதகமாய்
நல்கினனே.

இப்படிக்கு:

**எஸ். சுந்தரராஜக்கோனர்,**

புஸ்தகஷாப்புதுமண்டபம், மதுரை,



1வது பக்கம் பிள்ளையார்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

மதுரையென்னும் திருவாலவாய் க்ஷேத்திரசேகர

ஆரப்பாளையம் மூக்கவேளாளர்

# அரிச்சந்திர நாடகம்.

## விநாயகர்வணக்கம்.

### வெண்பா.

கார்போற் கொடைக்கரத்தான் காமருபார் சூர்குலத்தான்
தார்புனையு மார்பனரிச் சந்திரன்றன் - சீர்சரிதை
யம்புவியில் நாடகமா யன்புடனே கூறுதற்குத்
தும்பிமுகன் றுளே துணை.

இராகம்-நாட்டை-தாளம்-சாப்பு.

### பல்லவி.

ஓம்கண பதியே
உனதுமரைமலர் மனதுமகிழ்வுடன்
எனதுதமிழுனுக் கனுசரணைபுரி (ஓம்)

### அநுபல்லவி.

தாங்காணைமுகனே பாங்கானசுகனே
தருணமிதுதிருக் கருணைமழைபொழிந்
தருளுமுண்மையவள் அருளும்-ஹர-ஹர (ஓம்)

### சரணங்கள்.

தேவாதிதேவர்தொழும் மூவாதமுழுமுதல்
தெய்வசுக் ஞானதீபமே
பாவாணன்முத்தழக பாரதிக்கருள்செய்யும்
பரப்ரம்மதிவ்ய ரூபமே
மாவாருதியிற்றுயில் கோபாலன்றனதொயில்
மருகனெனவரு குருவேக்ருபைநிதி
பெருகுமதிகுண வரத-ஹர-ஹர (ஓம்)

## முருகக்கடவுள் வணக்கம்.

பரங்குன்றில் வாழ்வானைப் பச்சைமயில் வாகனனைப் பழுநிலானை
வரங்கொடுக்கு மனத்தானை வளர்சேவற் கொடியானை வடிவுளானை
உரங்கொண்ட வேலானை யுயர்தடநேர் தோளானை யுயர்வுளானைக்
கரங்குவித்து யானடியேன் காலையினு மாலையினுங் கருதுவேனே.

## சிவபெருமான் வணக்கம்.

வில்லாக வரைவளைத்த விறலோனை வேளன்னாள் மேலோசொற்கேட்
டல்லான கயமேற்கொண் டருகணைந்து மலர்தூவ வனற்செய்தானை
கல்லாலி னடியமர்ந்து ஜெனகாதியர்க் காயோகம துய்த்தானை [வாம்
மல்லாரும் புயத்துடையா னரிச்சந்த்ரன் காதைசொல் வணக்கஞ்செய்

## உமாதேவியார் வணக்கம்.

நாரணியே நற்கமல நயனியே மெஞ்
ஞானசிவ நர்த்தனியே நண்பருள்வாள்
பூரணியே புவனபுரா தனியே வோங்கும்
பூதகண புரந்தரியே புனிதமந்த்ர
ஆரணியே திரிபுரையே ஆதியே யென்
னம்மணியே கண்மணியே யல்லல்நீக்குங்
காரணியே யரிச்சந்த்ரன் காதை தன்னை
கழரவருள் புரிகுவைநின் கழல்காப்பாமே.

## திருமால் வணக்கம்.

வாரணத்தைக் காத்தானை வாருதியற் றயின்றானை மணித்தோளானை
பூரணத்தை யடைந்தானைப் புவியையெடுத் துண்டானைப் புகழுள்ளா
ஆரணத்தின் பொருளானை யரியதிரு வருளானை யாழியானை [னை
காரணத்தைக் கடந்தானைக் கார்மேக நிறத்தானைக் கருதுவேனே.

## நாமகள் வணக்கம்.

செங்கமலத் தவிசானை ஜெகமெல்லாம் பூத்தானைத் திருவுள்ளானை
அங்கமெல்லாம் வெளுத்தானை யரியகலை வல்லானை யருமையானை
பொங்கமுறும் புகழானைப் புத்தகபா ணியினானைப் பொறுமையானைப்
பங்கமில்லாவரத்தானை யெஞ்ஞான்று மனதினுன்னிப்பணிகுவேனே.



இந்நூலாசிரியரின் வழிபடுகடவுளாகிய சிவகெங்கை ஜமீன்
வாறுமதுரைக்கடுத்த ஏனாதிக்கோட்டை

## அங்காளீஸ்வரி வணக்கம்.

வானாதி யுகமிசை வாய்ந்துதிக்கும்
மன்னுயிருக் குணவூட்டி வளர்த்தெஞ்ஞான்றும்
ஞானாதி நன்பரக நாடிமோன
நாதனடம் புரிந்தருடா னல்கிநட்பாய்
யானாதி யேனையரோ டின்னும்பின்னு
மென்மரபில் வருபவரை யடிமைகொள்ளு
மேனாதிக் கோட்டைவள ரெழிலங்காள
வீஸ்வரியே நின்மணித்தா ளிறைஞ்சினேனே.

ஆதரிப்பாய் காளத்தீசா என்றமெட்டு.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ரூபகம்.

### பல்லவி.

ஆண்டருள்வாய் அம்மணியே-என
தகமேயருள் முகமேயுறு
சுகமேயெழில் ஜெகமேலெனை (ஆண்)

### அநுபல்லவி.

தாண்டவஞ்செய்யுமுன் தாள்பணிந்தனன்
சந்தோஷ மிகுந்தோடிமுன்
வந்தோர்ந்தினி யந்தோவெனை (ஆண்)

### சரணங்கள்.

வெல்லுதற்கரிய வல்வினையாவையும்
வெல்லுமேனாதி நாடாளே-நான்
சொல்லுதற்கரிய சுருதிமுடிவினில்
தோன்றுமெஞ் ஞானவீடாளே
பல்லுயிரெல்லாந்தானாய்ப் பரவுமருவருமோன
பரையே திரிபுரையே-குண
வரையேமலா விரையே-யெனை (ஆ)

இதுவரையானுனக் கிழைத்தபிழையைநீ
இப்பொழுதே பொறுப்பாயே-பொறுத்
திதுமுதற்சுகமடைந் திருக்கும்பொருட்டாக
என்பிணியை யறுப்பாயே
உதவியெனக்குனையல்லா லொருவருமிங்கில்லையாமால்
உன்பாலனென் றென்பாலிருந்
தன்பால்மிக வின்பாயெனை (ஆ)

உனதுமகிமையை யினதெனத்தெரிந்தே
யுரைக்குமுபாயமு மறியேன்-இன்னும்
எனதுமனதினை யோர்வழியாக்கியே
இறைஞ்சும்விதமதைக் குறியேன்
பனிமலர்புனைமுத்தழக பாரதிநாவினிலுறைசுக
பதியேதயா நிதியேபர
கதியேதரு மதியேயெனை (ஆ)

இந்நாடகத்தை நடாத்திவருகின்ற ஆரப்பாளையம்
மூக்கவேளாரவர்களுடைய

## குலதேவதைவணக்கம்.

செழுமதியுங் கங்கையுந் தும்பையு மணிந்த
செஞ்சடையோன் றவத்துதித்த செல்வனேநல்
வழியுரைக்கு மணிமந்த்ர குருவேவைய
மன்னுயிருள் வாய்ந்திலங்கும் வடிவேஞானச்
சுழிமுனையில் நின்றுடுஞ் சோதியேவான்
சூர்போற்றுந் திருப்பூவ ணத்தில்வாழும்
எழிலதிக முடையவையனே வுன்பாத
விருமலரை யென்ஞான் று மிறைஞ்சுவேனே.

இதுவுமது.

கடலுலகில் வாழுமுயிர்க் குண்வளிக்குங்
கர்த்தனே கனற்பொறிநேர் கண்ணனேநீள்
சுடலைதனில் நடனமிடுந் தூயனேமா
சோதிமணி வேணியனே துன்பந்தீர்க்குந்
திடகுணனே நீறணியுந் தேகனேநற்
றிருப்பூவ ணத்திலுறை தேவனேயஞ்
சுடர்மதிநேர் முத்திருள சுவாமியேவுன்
றூயமணித் தாளைநிதந் தொழுகுவேனே.



இதுவும் ஷையார் கிராமதேவதை

## வணக்கம்.

வானவர் புகழுந் தேனெழுகும்மா
வளஞ்செறி யாரப்பாளையம்வாழ்
ஞானநா லுடைய மாமுனியேவுன்
நறுமலர்ப் பதமிதரி சனத்தைத்
தூலமாகக் காண்பிவிப் பதுவுன்
சொந்தமா பாரமே யல்லாற்
பானிலாக் கொன்றைமான் மழுத்தரித்த
பரமனே வரமருள் வாயே.

இதுவுமது.

செந்திருவே படிந்திலகு மயோத்திதன்னைத்
திடமுடனே காத்தவரிச் சந்திரன்றன்
சுந்தரஞ்சேர் காதைதனை வேலைசூழுந்
தொல்லுலகில் நாடகமாய்ப் பாடுதற்கு
விந்தையதா யரிபாட மஞ்ஞையாடும்
விரிகாச்சுமூரப் பாளையத்தில் வாய்ந்த
மந்தைதனி லோங்குமுனீஸ்வரன் பொற்பாத
மலரதனைச் சென்னிவைத்து வணங்குவோமே.

## அவையடக்கம்.

சிருலவு தமிழ்க்கடலின் கூரமுண்ட
செய்யகவி வல்லோரே செப்பக்கேண்மின்
தாருலவு மார்பனரிச் சந்திரன்றன்
சரித்திரத்தை நாடகமாய்த் தங்கள்முன்னே
விருலவு கருடனுடன் மசகம்போலும்
வெண்மதிமுன் மின்மினிதான் விளங்கல்போலும்
வாருலவு மயில்நிகர்வான் கோழிபோலும்
வழுத்தலுற்றேன் வழுவிருக்கின் மன்னிப்பீரே.

## சூஸ்த்ரதார்பிரவேசம்.

சபைவணக்கம்.

ஸ்லோகம்

ஸபாகல்ப்ப தரும்வந்தே வேதசா கோபஜீவிதம்
சாஸ்த்ரபுஷ்ப சமாயுக்தம் வித்வத்ப்ரம ரசோபிதம்

வசனம்.

நான்குவேதம் ஆறுசாஸ்திரம், பதினெண்புராணம், இருபத்தெட்டாகமம், முப்பத்திரண்டு தருமம், அறுபத்துநான்கு கலைஞானம், தொண்ணூற்றாறு தத்துவம், மனுவிஞ்ஞான முதலிய சகலசாஸ்திரங்களும் ஐயமில்லாமற்கற்று மாசிலாமைதங்கிய இச்சபையினிடமாக விற்றிருக்கும் வித்வசிகாமணிகள் கனதனவான்கள் யாவர்கட்கும் வந்தனம்,

ஷை வசனம்.

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, என்ற பஞ்சவிலக்கணங்களையுமுணர்ந்து சிங்காரம், வீரியம், பெருநகை, கருணை, இரௌத்திரம், குறளை, சாந்தம், அற்புதம் பயம், என்னும் நவரச அலங்காரங்களோடு செய்யுட்புனையும் வல்லோர்களாகிய தங்கள்முன்யானடாத்தப்போகின்ற சத்தியச் சித்தத்தால் வெத்தியும் முத்தியுமடைந்த அரிச்சந்திரச் சக்கிரவர்த்தியினது திவ்யசரித்திரத்தில் சொற்சோர்வு பொருட்சோர்வு முதலிய குற்றமுற்றுளும் பிரபரமென்னும் வண்டுகளானவை புட்பங்களிலுற்ற மதுவை யெவ்வாறு கிருகித்துக்கொள்கின்றனவோ அதுபோலாக இந்நாடகமோர் கற்பகவிருக்ஷமாகவும் யானவ்விருக்ஷத்தி லுற்பவித்த புட்பமாகவும் என்வசன சாதுரியங்களானவை மதுரமாகவும் பாவித்து அங்கீகரிக்க வேண்டியதாய்ப்பிரார்த்திக்குறேன்.

ஷை வசனம்.

இப்பிரபஞ்சத்தி லிடமாகவுள்ள மானிடர்கள் யாதாமொரு தொழிலைச்செய்யப் புகினும் சிவபெருமான் பிரதம புத்திரராகிய விநாயகரை ஸ்மரித்தால் அம்முயற்சிக்கு யாதொரு விக்கினமின்றிக் காத்திரக்ஷிப்பாரென்றும் அவ்விததன்மை யன்னவர்க்கேற்பட் டிருப்பதினாலேயே விக்கினேஸ்வரரென்ற பெயரானது காரணமாக வந்ததென்றும் மறைமுறையிடுதால் யான் இவ்வரங்கினிடமாக வேற்படுத்தப்பட்டிருக்கிற அரிச்சந்திர மஹாராஜனது புண்ணிய சரிதையாகிய இந்நாடகமானது கீர்த்தியாய் நடந்தேறும் வண்ணம் மேற்கூறிய விநாயகக்கடவுளை ஸ்மரிக்கப்போகின்றேன்.

## சூஸ்திரதாருக்கும் விதூஷகனுக்கும் தர்க்கம்.

சூஸ்திரதார வசனம்.

இயாளோ யிப்பொழுது சர்வஜனங்களுஞ் சூழ்ந்திராநின்ற இவ்வரங்க சபையினிடத்தில் சிவபெருமான் புதல்வராகிய கணநாதரை ஸ்மரிக்கப்போகும் தருணத்தில் இயாரோவொருவன் அவலக்ஷணத்துடன் மாரியம்மனைப் போலத்தலையில் வேப்பந்தழையைச் சூட்டிக்கொண்டு இங்குபிராப்தமா யிருக்கின்றான் அவனை யாரென்று விசாரிக்கின்றேன்.



அடா நீயார்? ஆ ஆ என்ன ஆச்சரியமாக விருக்கிறது யானொன்றுகேட்க மறுவார்த்தை புகலாது மௌனஞ்சாதிக்கின்றான் நல்லது இன்னும் சமீபத்திற்போய் விசாரிக்கின்றேன் அடா நீ யாவன்

விதூஷகன் வசனம்.

சராயுசம் அண்டசம் சுவேதசம் உற்பிசம் என்ற நால்வகை யோனியினிடமாக வுற்பவிக்கப்பட்ட தேவர்மக்கள் விலங்குபுள் ஊர்வன நீர்வாழ்வன தாபரமென்று சொல்வதான எழுவகைத்தோற்றத்திலும் மிகவுஞ் சிறப்புற்ற மானிடன்.

சூஸ்திரதார் வசனம்.

ஆங்கால மெய்வருந்த வேண்டாம் அருக்கொம்பிற் றேங்காய்க் கிளநீர்போற் சேருமேயென்ற பழமொழியி னுண்மையையின்று என்னளவில் பூரணமாய்த் தெரிந்துகொண்டேன், அதாவது இந்நாடகத்திற் கேற்பட்ட நவரசங்களுள் மிகவும் குதூகலிக்கத் தக்கதான ஆஸ்யரசத்தை யுண்டுபண்ணுவதற்கு ஓர் ஆடவன் இல்லையெனக்கின்றிற்று விசனம் எனக்குண்டாயிருந்ததை இப்போதென்னெதிரிற் பிராப்தமாயிருக்கிற இன்னவனது வார்த்தையைக்கேட்ட மாத்திரத்தில் திருப்திசெய்வான் போலுமிருக்கின்ற தன்மையே, ஆகையால் இவனை இன்னனெனவிசாரித்து ஆஸ்யரசத்திற்கு கைவசப்படுத்திக் கொள்கின்றேன், மித்திரா உனதுநாமதேயம் யாது.

விதூஷகன் வசனம்.

உமது நாமதேயம் யாது.

சூத்ரதார் வசனம்.

நண்பா, எனது நாமதேயம் நாடகாலங்கார சூஸ்த்ரதாரென்று சொல்வார்கள்.

விதூஷகன் வசனம்.

சூஸ்த்திரமென்றால் நூல்தாரென்பது மாலை இரண்டுஞ்சேர்க்கில் நூல்மாலையென்பது பொருள்தரும் யாதொரு நூல்மாலையை யணிந்

துகொள்பவர் விப்ராளே அவ்விதமிருக்க இதோர் நாமதேயமெனச் சொல்வதழகா.

சூஸ்தரதார் வசனம்.

ஹே காதலா நீ எடுத்துக்கூறும் ஹாஸ்யவார்த்தைகளைக் கேட்கக் கேட்க மிகவும் குதூகலமா யிருக்கின்றது உனது நாமதேயத்தைச்சொல்வாயாக.

விதூஷகன் வசனம்.

எனது நாமதேயம் விதூஷகனென்று சொல்வார்கள்.

சூஸ்த்திரதார் வசனம்.

சபாஷ் விதுஎன்றால் சந்திரன் ஷகனென்றால் உலகன் இரண்டும் ஒன்றுபடுத்தில் சந்திரவுலகன் என்னஅர்த்தமாகும் நீ சந்திரமண்டலத்திலிருந்து இன்று இப்பூமண்டலத்திற்குவந்தனையோ.

விதூஷகன் வசனம்.

சூஸ்திரதார் மெச்சினேன் நீர் ஆசானிடமாக கல்விகற்றுக்கொண்டீரோ அல்லவோ.

சூஸ்திரதார் வசனம்.

மித்திரா என்னவார்த்தை சம்பாஷிக்கின்றனை.

விருத்தம்.

குருவிலான் கற்றஞானங் குமரியைக் குமரிகூடி
மருவிய வின்பமொக்கும் மண்ணிடை நம்போல்வந்த
குருவினற் கற்றஞானங் குமரியைக் குமரன்கூடி
மருவிய வின்பமொக்கு மென்பர்நன் மதியுளாரே.

வசனம்.

அதாவது, மித்திரா? இப்பூமண்டலத்தின்கண் யாதாமொருவன் குருவின்றிக் கற்றுக்கொள்ளும் வித்தையானது யாதொரு சுகபயனில்லாத இரண்டுபருவமாதர்கள் ஒருவர்க்கொருவர் சேர்ந்ததற்கொப்பாமென்றும் கல்வியில் வல்லவனை நல்லாசிரியனை வழிபட்டுக் கற்றுக்கொள்ளும் வித்தையானது 16-வயதுள்ள யௌவனமாதை மன்மதனுக்கொப்பான யெவ்வனபுருஷன் சேர்ந்ததற் கொப்பாமென்றும் சாஸ்திர முறையிடுவதால் யான் புத்தியில்மிக்க ஞானசிரியனிடமாக ஐயமில்லாமற் கற்றிருக்கின்றேன் உனக்கு என்மீது சந்தேகம்வந்த காரணம்யாது.



விதூஷகன் வசனம்.

சூஸ்த்ரதார் விது என்றால் அகராதியிற் சந்திரனென்று கூறப்பட்டிருக்க விது என்பதைச் சந்திரனென்று மொழிபெயர்த்ததை உத்தேசித்தே.

சூஸ்திரதார் வசனம்.

மித்திரா விதூஷகன்என்ற வார்த்தைக்கு நீயாவது அருத்தஞ் சொல்வாயாக.

விதூஷகன் வசனம்.

சூஸ்திரதார் யானிப்பேர்க்கொத்த அரங்கசபையைக் கண்டவுடன் அத்யந்த சந்தோஷந்தோவெந்து சபையை யிரஞ்சிக்கச் செய்யக்கூடியவனாதலால் யான்பிறந்தன்றே எனது பேரன்வைத்தபேர்.

சூஸ்திரதார் வசனம்.

மித்திரா நல்லது இப்பேர்க்கொத்த அரங்கசபையைக் கண்டமாத்திரத்தில் அத்யந்த சந்தோஷத்துடன் வார்த்தை கூறக்கூடியவனென்று புகன்றனையே அதன் விர்த்தாந்தம்யாது.

விதூஷகன் வசனம்

ஹே சூஸ்திரதார் புகலுகிறேன் கேளும்.

ஸ்லோகம்.

ககனேகா ரத்நானி த்ருரத்நானி மூஷிகா
சயனேமட் குணரத்நானி சபாரத்நானி வதூஷஹா

வசனம்.

ஹே சூஸ்திரதார் அதாவது காகங்களானவை ஆகாயத்திற் கழகு பெருச்சாளிகளானவை வீட்டிற்கழகு மூட்டைப்பூச்சிகளானவை நித்திரைக்கழகு இப்பேர்க்கொத்த அரங் கசபைக்கு யானானழகு யானில்லாவிடிலோவொன்றும் சோபிக்கப்படமாட்டாது.

சூஸ்திரதார் வசனம்.

சே துஷ்டா என்னவார்த்தை சாம்பாஷித்தனை முன்னோர்கூறிய சுலோகங்களையும் புரட்டிவதற்கு தீர்க்கமாய்க் கற்றுக்கொண்டனை போலும் யிருக்கிறது.

ஸ்லோகம்.

ககனே நவரத்நானி கிரகரத்நானி பாலகா
சயனே ஸ்த்ரீரத்நானி சபாரத்நானி பண்டிதஹா

வசனம்.

அதாவது சூரியன் சந்திரன்முதலிய நவக்கிரகங்கள் ஆகாயத்திற்கழகு பாலர்கள் வீட்டிற்கழகு பெண்கள் சயனத்திற்கழகு இவ்வரங்கசபைக்கு என்னைப்போலொத்த வித்வாம்ஸாளழகென்ன ஸ்மிருதிகளிற் கூறப்பட்டிருக்கின்றன அவ்விதமிருக்க மித்ரபேதமாக ஸ்லோகத்தைப்புரட்டி பொய்யான தாத்பர்யத்தைச் சொல்லத்துணிவதை விட்டுவிடுவாயாக.

விதூஷகன் வசனம்.

ஹே சூஸ்ரதிரதார் முற்கூறிய ஸ்லோகமானது சரியாயிருக்கினும் நீர் வித்வானென்பது விதூ என்பதை சந்திரனென தாத்பர்யஞ் செய்த மூலமாகவே இச்சபையினிடமாக வுள்ளயாவர்க்கும் தெரிந்த விஷயமே மீண்டும் முத்தோர்சொல் வார்த்தை அமுதமென்பதனால் உம்முடைய வருதிபோலவே நடக்க உறுதியாயிருக்கின்றேன் இப்போதிவ்விடத்தில் கஞ்சாக் குடுக்கைகளைப்போலத் துலங்குகின்றனவே அது யாது.

சூஸ்திரதார் வசனம்.

அடா அவைகளைத்தான் குளோப் என்றுசொல்லப்படும்.

விதூஷகன் வசனம்.

சூஸ்திரதார் இன்னும் வட்டத்தகடு மேல்மூடி மிகவும் பிரகாசமாகத் தோன்றுகின்றனவே அவை யாவை.

சூஸ்திரதார் வசனம்.

அவைகளைத்தான் பவர்லாமெனப் பகரப்படும்.

விதூஷகன் வசனம்.

மற்றும் கோணல்மாணலுமாகத் தோற்றுகின்றனவே அஃதென்ன.

சூஸ்திரதார் வசனம்.

அடா அவைகளைத்தான் வால்ஷெட் முன்லைட்டென்று சொல்லப்படும்.

விதூஷகன் வசனம்.

அப்படியா அதனுள் வெள்ளைவெள்ளையாக வொழுகுகின்றனவே அவையென்ன.

சூஸ்திரதார் வசனம்.

அடா அவைகளைத்தான் மெழுகுவர்த்திகளென்று விளம்பப்படும்.



விதூஷகன் வசனம்.

மிழுகு வருத்தால் குழம்புக்காகாதோ.

சூஸ்திரதார் வசனம்.

என்னடா துஷ்டா தட்டிக்கேட்க ஆளில்லாவிடில் தம்பி சண்டப்ர சண்டனென்னும் பழமொழிக்கிணங்க வென்னிடத்தில் வாதாடுகின்றனை.

விதூஷகன் வசனம்.

வெரிவெல் சூஸ்திரதார் நீரிப்போதிவிடத்தில் ப்ராப்தமான காரணம் யாது இவ்விடத்தில் சூழ்ந்திருக்கும் சபையாது இவ்விடத்தில் என்னவிசேஷம் நடக்கப்போகின்றன.

சூஸ்திரதார் வசனம்.

மித்திராமா பலர் வருக்கை என்ற முக்கனிகளின் தேன்கள் பாய்ந்து செந்நெல்கள் வானளாவும்படியாக வளரக்கூடிய பழனங்கள் சூழ்ந்த கோசலநாட்டை அயோத்திமா நகரத்தினிடமாக வீற்று அரசுபுரிந்த அரிச்சந்திரச் சக்கிரவர்த்தியானவர் விஸ்வாமித்திரர் கபடத்தால் நாடு நகர் யாவற்றையுமிழந்து மீண்டுங் கடனுக்குட்பட்டு ஆரணியத்தில் மேற்கூறிய விஸ்வாமித்திரர் தூதராகிய நட்சேத்திரயரால் தானும் கற்பிலருந்ததிக்கொப்பான தன் மனைவியும் புத்திரன் லோகிதனும் மந்திரி சத்தியகீர்த்தியும் சொல்லொண்ணாத மிகுந்த கஷ்டப்பட்டு காசிமா நகரடைந்து கடனுக்காக மறையவரான காலகண்டய்யரிடம் தனது மனைவியையும் மகனையும் விற்றுதருக்காக தான்நீசனாகிய வீரவாகுவுக்கு அடிமைப்பட்டு அன்னவனுக்குச் செய்யக்கூடாத பற்பல ஏவல்கள் செய்து சுடலையை யடைந்து மந்திரியுடன் காவல் புரிந்து இன்னும் விளம்பக்கூடாத பற்பல துன்பங்களடைந்து கடாசியாக சிவபெருமானுடைய தத்சொரூப கடாக்ஷ வீக்ஷண்யத்தால் முன்னிழந்த நாடு நகரம் யாவையுங் கைக்கொண்டும் கௌசிகன் செய்த தவத்திற் பாதி பெற்று நவமணிக்கிரீடம் பூண்டு செங்கோல் செலுத்தி முத்தியடைந்த திவ்ய சத்ய சௌஜந்யசனமார்க்கமுடைய அரிச்சந்திரச் சக்கிரவர்த்தியினது சரித்திரம் இயல், இசை, நாடகம், என்னும் முத்தமிழ் வல்லோராக மதுரைமா நகரென்ற ஆலாஸ்ய க்ஷேத்திரத்தில் வசிக்கும் முத்தமிழ் பாரதிகளால் நவரஸங்களோடுங்கூடிய நாடகமாகச் செய்யப்பட்டிருக்கிறதை இங்ஙனம் பாத்திரப் பிரவேசார்த்தமய் நடாத்தப்போ

கின்றபடியால், இஃதினது முடியும்பொருட்டு யாதொரு வழிபடுகடவுளாகிய கணநாதனை ஸ்மரிக்கப் போகின்றேன் அதற்காகத்தான் இச்சபை சூழப்பட்டிருக்கிறது.

விதூஷகன் வசனம்.

அச்சா பராபர்ஹே.

சூஸ்திரதார் வசனம்.

நீயுமென்னுடன் வந்து விக்னேஸ்வரனை ஸ்மரிப்பாயாக.

விதூஷகன் வசனம்.

அபி ஆதேம்

கணேசர்ப்ரவேசம்.

விருத்தம்.

கடகரிமுகனேயாதி கடவுளின்மகனேஞான
நடமிடுபதனேவிக்ந ராஜனேநண்பருள்வாழ்ந்
திடரிலாவரமளிக்கும் எந்தையேயிறைவர்போற்று
மடலரிச்சந்த்ரன்காதை யறைந்திடவருள்செய்வாயே.

சாமராஜபூமனேநமோ வென்றமெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

ஆகுவாகனாதிபா நமோநமோ
அன்பர்கோவேஅமரர்தேவே அடியனேக்காவே
ஐயாமெய்யா அம்மலர்க்கையா (ஆ)

விக்நராஜசுக்ஞான தீபமேதீபமே
வினைக்கெளடதமேநனைக்குமுதமே அனைக்கமுதமே
வீரதீர மித்ரவொய்யார (ஆ)

மெய்யரிச்சந்த்ரன்கதை சொல்சொல்
மெத்தக்கருணைவைத்தெற்குத்துணை யுற்றருளினை
வேதநாத மிகுதவபோத (ஆ)

அரிகுலமுத்தழக பாரதிபாரதி
அங்கமேபுகழ் சிங்கமேதிகழ் தங்கமேயுயர்
ஆதி ஜோதி யானரூபமே (ஆ)



பட்டர்வருகிறபாகம்.

விருத்தம்.

பொய்கையிற்றனஞ்செய்து பொன்னுடைகொய்துடுத்தி
மெய்யில்வெண்ணீறணிந்து வேதானுட்டானம்பண்ணி
கையிற்பூக்குடலைதூக்கிக் கணபதிதனக்குப்பூசை
செய்திடப்பட்டர்வந்து சிறப்புடன்றோன்றினரே.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

பங்கமில்லாமல்ஸ்நானம் பண்ணிவஸ்திரங்கொய்து
பாங்குடனே யணிந்தே
அங்கையினால்வெண்ணீ ரங்கத்தின்மீதிலே
அழகுடனே புனைந்தே
ஜெபதபங்கள்முடித்து செய்யவேதம்படித்து
திருமலர்க் குடலைகொண்டே
விபரமாயவந்கடலை கதலிதேங்காய்
வெற்றிலை பாக்குடனே
சூட்ன்சாம்பிராணியும் தூபதூபத்தியும்
தூங்கசந்தன மெடுத்தே
தேடுதற்கரியவி நாயகனுக்குப்பூஜை
செய்யக்குருக்கள் வந்தோமே

பட்டர் சம்பாஷனை.

அர்ச்சகர் வசனம்.

எங்கானும் சுப்பாபட்டரே அங்கே ஏளியிருக்கிறதார்.

சுப்பாபட்டர் வசனம்.

அட சும்பத்தாயோழி ஏளியிருக்கிறதென்னடா இங்கிருக்கிறொன்னுசொல்லேன்.

அர்ச்சகர் வசனம்.

சரிதான் போடா வஜ்ரசும்பா ஏளியிருக்கிற தாரடானு கேட்டால் பதிற்சொல்லாமல் உன்சைவக்குறும்பைக் காமிக்கிறியே.

சுப்பாபட்டர் வசனம்.

ஏண்டா முட்டாப்பயலே வைஷ்ணவக் குறும்புக்குச் சைவக்குறும்புத் தாழ்த்தியாப் போச்சோடா.

அர்ச்சகர் வசனம்.

அது சரிதான் அங்கே எளிருக்கிறவர் யார்.

சுப்பாபட்டர் வசனம்.

விக்னேஸ்வர ரிருக்காரங்கே.

அர்ச்சகர் வசனம்.

என்ன இருடா பார்த்திட்டுவாரோன் அடாடா தும்பிக்கையாழ் வாரன்னே எளிருக்கார் சும்பத்தாயோழி தெரியாமல் உளரிப்பிட் டான் ஓய் சுப்பாபட்டரே.

சுப்பாபட்டர் வசனம்.

என்ன பார்த்திட்டு வந்தாச்சோலியோ.

அர்ச்சகர் வசனம்.

பார்த்துட்டு வந்தாச்சு எங்கதும்பிக்கை யாழ்வாரன்னே எளி ருக்கார் தெரியாமல் உளரிபோட்டேன்.

சுப்பாபட்டர் வசனம்.

ஏண்டா உலக்கத்தடிப்பயலே தும்பிக்கிழவரோ தம்பிக் கழு வரோடா.

அர்ச்சகர் வசனம்.

தாயோழி அகடவிகடம் பேசினுக்கா கையிலிருக்கிற வாழைப் பழத்தாலன்னே பல்லொடச்சுப்பிடுவேன்.

சுப்பாபட்டர் வசனம்.

பல்லோடச்சியானல் கைத்தேங்காயாலே சிண்டன்னே அருத் துப்பிடுவேன்.

அர்ச்சகர் வசனம்.

எங்காணும் பட்டரே நாம் ரெண்டுபேரும் இப்படி கோபிச்சு இண்டால் தும்பிக்கையாழ்வார் பூஜையன்னே கெட்டுப்போயிவிடு மல்லவா.

சுப்பாபட்டர் வசனம்.

சரி வாரும் போவோம்.

உ



## கணேசபூசைமந்திரம்.

சுப்பாபட்டர்சொல்லுவது.

| | |
|---|---|
| சுமுகாயநம: | பாலசந்த்ராயநம: |
| ஏகதந்தாயநம: | சூர்ப்பகர்ணாயநம: |
| கபிலாயநம: | ஹேரம்பாயநம: |
| கஜகர்ணிகாயநம: | ஸ்கந்தபூர்வஜாயநம: |
| விகடாயநம: | நானாவிதமந்த்ரபுஷ்பாணி |
| விக்நராஜாயநம: | சமர்ப்பயாமி |
| கணாதிபாயநம: | தூபமாக்ராபயாமி |

தீப: தரிசயாமி, பூகீபலசமாயுக்தம் நாகவல்லிதளீர்யுதம், கற்பூர சூர்ணஸம்யுக்தம் தாம்பூலம்ப்ரதிக்ருஹ்தாம் நாளிகேரத்வயாபூபகத லிபலமுத்க மாஷதில்லட்டுக மஹாநைவத்யம் ஸமர்ப்பயாமிநேநம:

சூத்ரதார் ஸ்லோகம்

சுக்லாம்பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்ப்புஜம்
ப்ரஸந்நவதனம் த்யாயேத் ஸர்வவிக்நோபசாந்தயே.

வசனம்.

ஹேகஜாநந அஹம் சூஸ்த்ரதார் அபிவந்தனம் கரோமி

கணேசர் வசனம்.

கல்யாண்ஹே சூஸ்த்ராதாரா கைலயங்கிரியில் முப்பத்துமுக் கோடி தேவர்கள் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷீஸ்வரர்கள் நந்திப்ருங்கி அமரர் சித்தர் அசுரர் தைத்யர் கருடர் காந்தர்வர் இயக்கர் விஞ்சை யர் பூதர் பைசாசர் உரகர் ஆகாயவாசிகள் போக பூமியர் முதலிய யாவர்களும் புடைசூழ எனது மாதாவாகிய பருவத ராஜபுத்ரியி னது வாம பாகத்தில் வீற்றிருக்கும் தருணத்தில் ஏ தநயா உனது நிநஸ்வரத்தைக் கேட்டு அகமகிழ்ந்து இவ்வரங்கின்கண் ப்ராப்தமா யினேன். உனக்கு இயாது இச்சை.

சூஸ்த்ரதார் வசனம்.

ஹே ப்ரபோ முன்னால் அயோத்தியைப் பரிபாலித்து வந்த திரிச்சங்குவினது புத்திரனான சத்தியபாஷ அரிச்சந்திரமகாராஜ னது திவ்ய சரித்திரத்தை இவ்வரங்கின்கண் பாத்ரப்ரவேசார்த்த நாடகரூபமாய் நடத்தப்போகிறபடியால் அதற்கு யாதொரு விக்கின முறாது நடக்கும் பொருட்டும் இந்நாடக பாஷியர்கள் கேவலம் அக்

ஞானத்தோடு கூடியிருப்பதனால் அவ்வஞ்ஞானத்தின் கண்ணிருந்து நீங்கி ஸ்வயஞானத்தோடு யாதொரு தேவகுருவாகிய பிரகஸ்பதி பகவானுக்குச் சமானமாகச் சம்பாஷிக்கும்படிக்கும் வரந்தந்தருள வேண்டும்.

கணேசர் வசனம்.

அவ்விதமே வரமளித்தேன் இன்னும் ப்ரம்ம பத்தினியாகிய வாணியை ஸ்மரிப்பாயாகில் அன்னவளுனக்குப் பூர்ண ஆசீர்வாதம் தந்தருள்வாள் இந்நாடகம் யாராலியற்றியது.

சூஸ்த்ரதார் வசனம்.

மதுரைமாநகரில் வசிக்கும் முத்தழகபாரதிகளால் இயற்றப் பெற்றது.

கணேசர் வசனம்.

அன்னவர்க்கு முனக்கும் பூர்ண ஆசீர்வாதமளித்தேன் யான் ஏகாஸ்தானம் செல்கின்றேன்.

சூஸ்த்ரதார் சொல் வசனம்.

ப்ரபோ வந்தனம்.

விதூஷகன்சொல் வசனம்.

வெல்-சூஸ்த்ரதார் இவர்யார்.

சூஸ்த்ரதார் வசனம்.

இவர்தான் கணநாதர்.

விதூஷகன்சொல் வசனம்.

தாமிவ ருருகிலிருந்தோர் ஸ்லோகமுரைத்தீரே அதன்பொருள் யாது.

சூஸ்த்ரதார் வசனம்.

அதாவது வெண்மையாகிய வஸ்திரமணிந்தும் சர்வலோக வியாப்திகரமும் சந்திரன்போன்ற திரேககாந்தியும் நான்குகரங்களைப் பெற்றும் குளிர்ந்த முகத்தோடுங்கூடிய விக்கணநாதனைத் துதித்தால் சர்வவிக்கினமும் நிவாரணமாகி நற்பதவியடைவதென்பது இதன் பொருள்.

விதூஷகன் வசனம்.

அடா தட்டுக்கெட்ட குட்டியச்சுவரோ அதனது தாத்பர்யம் வேறொன்றிருக்க மற்றொன்றை உழறுகின்றீரே.



சூஸ்த்ரதார் வசனம்.

அதனது தாத்பர்யம் உனக்குத்தெரியுமாகில் செப்புவாயாக.

விதூஷகன் வசனம்.

அதாவது இவ்வுலகத்தின்கண் சர்வவிக்ந கர்த்தாவாகிய ஈரோப்யன்ஸ்களிருக்க கேவலம் முகம்வேறு உடல்வேறாக விருக்கின்றவனிடம்சென்று அடிக்குப் பயந்தவன்போல் கைகட்டி வாய்புதைத்துத் தலையிற் குட்டிக்கொண்டீரே அஃதேன்.

சூஸ்த்ரதார் வசனம்.

அடா துஷ்டா. சாக்ஷாத்காரமாகிய கணேசனுக்கும் கேவலம் ஈரோப்பியர்களுக்கும் இணையாகச் சொல்கிறாயே. இது தகுமா.

விதூஷகன் வசனம்.

தகுந் தகுந் தகுந் தகுந் தகும் ஏனெனில் அன்னவர்களும் வெண்மையான வஸ்திரங்களை யணிந்திருக்கின்றார்கள் சீமை ஐரோப்பா அமெரிகா ஆஷ்யா முதலிய கண்டங்களிற் சென்றுவரத் தீரவீர சூரராயிருப்பதினாலும் சந்திரனைப்போன்ற தேஜஸைப்பெற்றிருப்பதினாலும் எல் எல் டீப்யாஸ் செய்து நான்கு கரங்களையுற்றிருப்பதினாலும் தன்னைச் சார்ந்தவர்களுக் கேற்படுமிடைஞ்சலையகற்றி பாதுகாக்குந் தன்மை படைத்திருப்பதினாலும் அந்த மஹான்களை ஸ்லாகு செய்தாலும் பயனுண்டே அதனை மறந்திவ்வாறு குட்டிக்கொள்வதழகோ.

சூஸ்த்ரதார் வசனம்.

தாம்கொண்ட கொள்கைக் கவ்வித மேற்படினும் மதாசாரப்படி கடவுளை ஸ்மரிக்கவேண்டியது அவஸ்யம் ஆதலின் தாமும் ஸ்மரித்து வேண்டியவரத்தைப் பெற்றுக்கொள்ளும்.

விதூஷகன் வசனம்,

அச்சா, சூஸ்த்ரதார்.

ஷை வசனம் கணேசனைப் பணிவது.

ஸலாம் ஆலேகும் மஹாராஜ்.

சூஸ்த்ரதார் தமது சொற்படி யான்போய் ஸ்மரித்தும் மௌனமாயிருப்பதின் காரணம் யாது?

சூஸ்த்ரதார் வசனம்.

மித்ரா. இவ்விதம் ஸ்மரிக்காமல் சூஸ்த்ரதார் சிஷ்யன் அபிவந்தனஞ் சேராமி யென்றினி யுரைப்பாயாகில் வேண்டிய வரமளிப்பார்.

விதூஷகன் வசனம்.

ஹே சஜாநா அஹம் சூஸ்த்ரதார் சிஷ்யன் அபிவந்தனம் கரோமி.

கணேசர் வசனம்.

கல்யாண் பாலகா நீ யாவன்.

விதூஷகன் வசனம்.

இயானிச் சபையை ரஞ்சிக்கச் செய்யும் விதூஷகன்.

கணேசர் வசனம் யாது?

விதூஷகன் வசனம்.

தங்களுடைய கிருபையினால் எனக்கனேக கிராமங்களிருக்கின்றன அதிற்செய்திருக்கும் நெற்பயிர்களெல்லாம் மழையில்லாது வாடுகின்றமையால் கிணற்றிலிருந்து தண்ணீரிறைத்துக் காப்பாற்றவேண்டும் பொருட்டு தமது முகத்திலிருந்து தொங்குகின்ற பையைக்கொடுத்தால் நலமென ப்ரார்த்திக்கின்றேன்.

கணேசர் வசனம்.

சி துஷ்டா நீ விதூஷகனைக் கட்வது.

விதூஷகன் வசனம்.

வந்தனம் கரோமி.

ஷை வசனம்.

சூஸ்த்ரதார் இப்படி வாரும்.

சூஸ்த்ரதார் வசனம்.

யாது காரணம்?

விதூஷகன் வசனம்.

இப்பொழுது தமதனுக்ரகத்தால் அரியவரம் பெற்றேன் அதாவது யான் பிறந்தவன்றே யென் பேரனால் விதூஷகனென் றடைந்த பெயரைப்போலவே இன்றும் யாதொரு கணேசரால் நீடூழிகாலம் பிரசித்தப் படும்பொருட்டு இன்னும் அப்பெயரையே அடையப் பெற்றேன். மேல் நடக்கவேண்டிய விஷயம் யாது?

சூஸ்த்ரதார் வசனம்.

இப்பொழுது யாதொரு ப்ரம்மபத்நினியாகிய வாணியை வமரிக்கப் போகின்றேன்.



விதூஷகன் வசனம்.

எங்கே பார்ப்போம்.

## சரஸ்வதிப்ரவேசம்.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

தவளபத்மாசனியே சரணஞ்செய்தேன் (த)

அநுபல்லவி.

கவலையெல்லாமறுத்து கனபிழையைப்பொறுத்து
சுபமெனும் வரமளித்துச் சுதனையாள்வாய் (த)

சரணங்கள்.

நாவிற் குடியிருந்தே நற்றமிழ் கூறுகந்தே
பாவித்வ முத்தமுக பாரதி பணி (த)

விதூஷகன் வசனம்.

சூஸ்த்ரதார், இங்கு வந்திருப்பவள் யாவள்?

சூஸ்த்ரதார் வசனம்.

அடா மூர்க்கா இனிமேலிவ்விதம் பாஷிக்காதே கலைவாணி பிராப்தமாயிருக்கின்றாள்.

விதூஷகன் வசனம்.

ஐயா சபையோர்களே தங்கள் தங்களிடையிற் றரித்திருக்கின்ற வஸ்திரங்களைப் பத்திரமாகப் பார்த்துக்கொள்ளுங்கள் யான் இத்தருணம் ஸ்டேஷனிற்சென்று போலீஸாரைக் கூட்டிக்கொண்டு வருகின்றேன்.

சூஸ்த்ரதார் வசனம்.

மித்ரா. இங்ஙனை நீ யெதற்காகப் போலீஸாரைக் கூட்டிவரப் போகின்றனை.

விதூஷகன் வசனம்.

எது தாமும் உட்கையாயிருப்பதுபோலத் தோற்றுகின்றதே.

சூஸ்த்ரதார் வசனம்.

அதேட காரணம் யாது தெரிவிப்பாயாக.

விதூஷகன் வசனம்.

ஏதோ தாம் இங்கு களவாணி பிராப்தமாயிருப்பதாக வியம்பினீரோ அதற்குத்தான் போலீஸாரை அழைத்துவரப் போகிறேனெனப் புகன்றேன்.

சூஸ்த்ரதார் வசனம்.

நேயா அவ்விதமல்ல நீ நல்ல விவேகன் அன்னவள் களவாணியல்ல, கலைவாணி.

விதூஷகன் வசனம்.

அதன் பயன் யாது உரையும் பார்ப்போம்.

சூஸ்த்ரதார் வசனம்.

கலையென்றால் சாஸ்திரம் வாணியென்றால் சரஸ்வதி. ஆதலின் சாஸ்திரத்திற் காதார பூதமாயுள்ள சரஸ்வதியெனத் தாத்பர்யமாகும்.

விதூஷகன் வசனம்.

விளங்கிற்று, படித்த முட்டாள் பண்டிதனென்பது தமக்கே தகும்.

சூஸ்த்ரதார் வசனம்.

என்ன காரணத்தினாலடா.

விதூஷகன் வசனம்.

மேற்கூறிய விஷயத்தின் பொருளானது. கலையென்றால் வஸ்திரம் வாணியென்றால் வியாபாரஞ் செய்யக்கூடியது ஆதலின் இவள் சீலை வியாபாரியெனப் பொருள்படும்.

சூஸ்த்ரதார் வசனம்.

அவ்விதமன்று முற்கூறிய சரஸ்வதியை ஸ்மரிக்கப்போகின்றேன் நீயும் வா.

விதூஷகன் வசனம்.

அவ்விதமே வருகின்றேன்.

சூஸ்த்ரதார் சுலோகம்.

சரஸ்வதீ ச்ரவிஜகேசரப்ரவா
தபஸ்விநீ விதகமலாஸ நப்ரியா
கனஸ்விநீ கமலவிலோலச் சட்சுஷீ
மனஸ்விநீ பவதுவரப் ரஸாதநீ.



வசனம்.

ஹே மாதுஸ்த்ரீ அஹம் சூஸ்த்ரதார் அபிவந்தனம் கரோமி.

சரஸ்வதி வசனம்.

ஹே வத்ஸா யானே ஸத்யலோகத்தில் சிருஷ்டிஸ்திதி ஸம்ஹாரம் திரோபாவம் அனுக்ரகம் என்ற பஞ்சக்ருத்தியத்தில் பிரதமமாகிய சிருஷ்டிக்ருத்யத்தை வகித்த எனது பர்த்தாவாகிய பிரம்மாவுடைய வாமபாகத்தில் வீற்றிருந் தானந்தமாக வீணாகானஞ் செய்துகொண்டிருக்கும் தருணத்தில், ஹேதநயா, உனது தினஸ்வரத்தைக்கேட்டு அகமகிழ்ந் திவ்வரங்கின்கண் ப்ராப்தமாகினேன் உனக்கு யாது சங்கடம் நேரிட்டது அதனை யென் முன்னிலையில் மொழிவாயாகில் அதினின்றும் விமுக்தனாக்கின்றேன்.

சூஸ்த்ரதார் வசனம்.

ஹே, ஜகதீஸ்வரீ தமது கிருபாகடாக்ஷ விசேஷத்தினால் யாதொரு விதமான சங்கடமு மேற்படவில்லை இக்காலம் இவ்வரங்கின்கண் யான் நடாத்தும் நாடகத்திற்கு யாதொரு குறைவுறாதிருக்கும் பொருட்டும் இந்நாடக பாவியர்கள் ஸ்வயக்ஞானத்துடன் பாவிக்கும் படிக்கும் நலவாக் தந்தருளவேண்டும்.

சரஸ்வதி வசனம்.

அவ்விதமே வரமளித்தேன் ஹே பாலகா யான் சத்யலோகத்திற்குச் சென்று வருகின்றேன்.

சூஸ்த்ரதார் வசனம்.

மாது ஸ்திரீ வந்தனம்.

விதூஷகன் வசனம்.

சூஸ்த்ரதார் ஸ்மரித்தாயினவா.

சூஸ்த்ரதார் வசனம்.

ஆம் நீயும் இவ்வாணியை ஸ்மரிப்பாய்.

விதூஷகன் வசனம்.

அச்சா, டாடர்.

விதூஷகன் சரஸ்வதி வணக்கம்.

மாது ஸ்த்ரீ குட்நைட்.

ஷைவசனம்.

ஹே சூஸ்த்ரதார் யான் போய் வந்தனஞ்செய்தும் இன்னவள் பேசாத காரணம் யாது ?

சூஸ்த்ரதார் வசனம்.

அடே அவ்விதமன்று, சூஸ்த்ரதார் சிஷ்யன் அபிவந்தனங் கரோமி யென வந்தனிப்பாய்.

விதூஷகன் வசனம்.

ஹே மாது ஸ்திரீ சூஸ்த்ரதார் சிஷ்யன் அபிவந்தனம் கரோமி.

சரஸ்வதி வசனம்.

கல்யாண் நீ யாவனடா.

விதூஷகன் வசனம்.

யானிச்சபையை ரஞ்சிக்கச்செய்யும் விதூஷகன்.

சரஸ்வதி வசனம்.

உனக்கியாதிச்சை.

விதூஷகன் வசனம்.

எனக்கோர் வரம்வேண்டும்.

சரஸ்வதி வசனம்.

என்ன வரம் வேண்டும்.

விதூஷகன் வசனம்.

இப்போதெனது பாட்டனுக்கு விவாகம் நடக்கின்றது அதற்குச் சோறுகின்ட தமது கையிலிருக்கும் அகப்பையைக் கொடுத்தால் நயமென யோசிக்கின்றேன்.

சரஸ்வதி வசனம்.

சீ துஷ்டா நீ விதூஷகனைக் கடவது.

விதூஷகன் வசனம்.

அச்சா குடுகுடுச்சல்.

சூஸ்த்ரதார் வசனம்.

ஹே மித்திரா, இனிமேலிச் சபையின்கண் கட்டியன் பிராப்தமாகப் போகின்றான் நீ இங்கிருந்தே சகலருடைய மனதையும் சந்தோஷிக்கச் செய்வாயாக யான் எதாஸ்தானஞ் சென்று வருகின்றேன்.



விதூஷகன் வசனம்.

மிஸ்டர் வந்தனம்.

சூஸ்த்ரதார் வசனம்.

கல்யாண் விதூஷகா.

## கட்டியன்வருகிற பாகம்.

விருத்தம்.

சட்டமாய்நாமமிட்டுச் சரிகைச்சல்லடங்கள்தொட்டு
திட்டமாயுருமால்தன்னைச் சிரசினிற்கட்டிக்கொண்டு
வட்டநெற்றியிற்பொட்டிட்டு வாளரிச்சந்த்ரன்கீர்த்தி
இட்டமாயுரைக்குங்கட்டிய னியல்புடன்தோன்றினேனே.

வந்தனந்தந்தேனென்ற வர்ணமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

காரியக்காரன் யான்
கட்டியக்காரன்யான் ராஜ
காத்ரமான வயோத்தியைவெகு நேர்த்தியாயாளும்கீர்த்திசேர்
காசியைகாசியை
காவலன்றன்
மாகசிமையுறும்(க)
காசியைச்சொலு

கட்டியேபடையை
கட்டியேறுடைமையக் கச்சை
தாக்குடன்மிகுஷோக்குடன்திருநோக்குடன்இந்தப்பார்க்குளே
சாஸ்திரசாஸ்திர
தைர்யங்கொண்டு
சேர்த்திடும்வல்ல(உ)
சாஸ்திரப்படி

தங்குமயோத்தியா
பொங்கும் நேர்த்தியாய் அருள்
புரியையருமை யுறவொருகுடை நிழலி லரசுசெய்
புரவலன் புரவலன்
பொய்சொல்லாத
அரண்மனைகாக்கும்(க)
புரவலனது

மெங்கும் பிரசித்தன்
சங்கரன் பத்தன் லோக
சத்தியந்தன்னைப் பத்தியுடனே நித்தியம் நிலை நிறுத்திடும்
சங்கையை சங்கையை
தாலடிகன்றன்
தெங்கிஷுஞ்சொல்லும்(க)
சங்கையையெடுத்

## கட்டியன் வணக்கம்.

சீராரவையில் என்றமெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

வந்தனந்தந்தேனிதோ மைந்தன் மனமகிழ்ந்தே
அந்தணன்மாலரன் ஆனைமுகவேளுக்கும் (வந்)

ஆகாயவாணிக்கும் அரும்பூமாதேவிக்கும்
யோகசெல்லாயிக்கும் உச்சினிகாளிக்கும் (வந்)

வேதவேதியருக்கு மிகுபெரியோருக்கும்
கீதவல்லோருக்கும் கீர்த்திமஹான்கட்கும் (வந்)

முத்தமிழ்வல்லோருக்கும் மொய்க்குமிச்சபையோர்க்கும்
பக்தனுமுத்தமுக பாரதியவர்கட்கும் (வந்)

வசனம்.

நான்குவேதம், ஆறுசாஸ்திரம், பதினென்புராணம், முப்பத்திரண்டு தருமம், அறுபத்துநான்கு கலைக்ஞானம், தொண்ணூற்றாறு தத்துவம் மனுவிக்ஞான முதலிய சகல கலைகளுமுணர்ந்து ஒழுக்கம்-வாய்மை-அறிவு-பொறை-யாவற்றிலுஞ் சிறந்து இச்சபையினிடமாக வீற்றிருக்கும் கனதனவான்கள் யாவருக்கும் வந்தனஞ் செய்கின்றேன்.

இதுவும் வசனம்.

இராஜாதி-ராஜன், இராஜபோஜன்-இராஜவுல்லாசன், இராஜசல்லாபன்-தன்னுயிர்போல மன்னுயிரைப் பின்னமில்லாது காப்போன், நான்குவேதம் நவின்றபடியே, தான் குணமுடனே தகையாய் நடப்போன், நன்னெறிநீதி நற்பொறை ஒழுக்கம், மன்னிய தருமமார்க்கம் வழுவான், நன்மைசேர் தந்தாரநாயகன், தன்மைசேர் பிரதாரதனயன், நித்தியநேமன், நிமலன்பூஜை, பத்தியாய்ப்புரியும் பானுகுலாதிபன், சித்திபெற விச்சேசமெல்லாம் புகழச் சத்திய நிலையைத் தடங்கைவிடாதான் இரண்டுபுறமும் எழிலுவெண்கவரி திரண்டியர் தனத்துச் சேயிழைமார்கள்-கையிடைகொண்டு காகூரியாய் வீச, செய்யமறையோர் ஜெயஜெயவென்னத், திரிசங்குவின்றசேய னயோத்தியாள் அரிச்சந்திரமஹாராஜா அவர்கள் அரியாசனத்திலமர்ந்திருக்கவேண்டி வருகின்றமையால் மஹா கனவான்களே ஏகமாய்க் கூச்சலிடாமலிருந்து வாருடன் பார்த்து மகிழ்வீர் போற்றி.



## கடவுள் வாழ்த்துதல்.

இராஜாதி ராஜர்பணி யென்ற மெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

விக்கினத்தையகற்றும் விநாயகன்றான்வாழ்க
குக்குடக்கொடியுயர்த்த குமரவேள்தான்வாழ்க

அங்கமனுமைவளர்சோம சுந்தரேசன்வாழ்க
அங்கண்மாநிலம்புகழ்மீ னம்பிகையும்வாழ்க

ஞானதிபர்பணியும் சுந்தராஜபிரான்வாழ்க
ஏனதிநகரங்கான ஈஸ்வரிதான்வாழ்க

அதிகமுடையவையன் வரமருளியென்றும்வாழ்க
துதிபெறுமுத்திருள சுவாமியுந்தான்வாழ்க

முத்தினங்களிலங்குஞ் சடைமுனியாண்டிவாழ்க
சத்தியவாக்கரிச்சந்த்ரச் சக்ரவர்த்திவாழ்க

இத்திருநாடகத்தை இனிதாகவியற்றியதோர்
பக்தனெனுமுத்தமுக பாரதிமன்வாழ்க

திமிடகவிச்சிங்கம் ராமலிங்கவேள்தான்வாழ்க
சுமதிநிகர்கல்யாண சுந்தரமன்வாழ்க

ஏஜண்டுமூக்கையவேள் மிகவின்பமுடன்வாழ்க
ராஜனரிச்சந்த்ரன்கதை நவின்றவர்கள்வாழ்க

இச்சையுடனெவரும் இதையெளிதுடன்பார்த்துமா
அச்சிலிட்டசுந்தர ராஜமன்பன்வாழ்க

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# அரிச்சந்திரன் சபை.

ஆசிரியவிருத்தம்.

கடல்வளைபுமுலகையொரு குடைநிழலிலரசுசெய்
　　காவல னயோத்திவாசன்
கதிர்குலாதிபனை திரிச்சங்குமன்செய்த
　　கனதவத் துற்றபாலன்
திடமுலைவுகுடிகளிட மாறிலோர்கடமைகொள்
　　தீனப்ர தாபசீலன்
செப்பரியசத்யமொழி யெப்பவுந்தவறுத
　　தீக்ஷண்ய முள்ளதீரன்
படருமணிமுடிதிகழு மரசரனுதினம்வந்து
　　பணியுமர விந்தபாதன்
பல்லுயிர்கள்யாவுந்த னுயிருக்குநிகரென்று
　　பாதுகாக்குங் குணாளன்
மடமாதர்நடமாட வாணர்கீதம்பாட
　　வாத்யகோ ஷங்களார்க்க
மந்திரியுடன்கொலு விருந்திடவரிச்சந்த்ர
　　வள்ளலும் வந்தனனரோ.

வேறு விருத்தம்.

சீரிலங்கும்பூலோக விந்த்ரன்வெற்றி
　　திகழ்குடையான் றிரிச்சங்குசேயன்செய்ய
தாரிலங்குமதிதய ராஜேந்த்ரன்புத்ரி
　　தனைமணந்தோன் மருவலரைச்சயித்தோன்றூய
வாரிலங்குசடைமுனிவோர்க் குதவுநண்பன்
　　மன்னவர்க டிறைகொடுத்து வணங்கப்பெற்றோன்
வரிலங்கும்பெண்கள்வெண் சாமரையிரட்ட
　　இராஜனிதோ கொலுவிருக்கவந்திட்டேனே.



ராஜாதி ராஜர் பணியென்ற மெட்டு.

* இராகம்-கமாசு-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

மன்னாதிமன்னர்பணி மகாராஜனரிச்சந்திரன்
உன்னுகதிரின்மர புதித்திடுஞ்சுந்தரன்
கன்னல்விற்றேளுடையான்என்றும் பின்னமில்லாளுடையான்
ஒன்னலர்கள்மணிமுடி யுரிஞ்சுதாளுடையான்
அங்கசன்போலழகான்மிகு பங்கஞ்செய்பொய்பழகான்
அங்கண்மாஞாலமதிற்பொய் யறைபவர்கட்கிழகான்
பூச்சக்கரக்குடையான்செங்கோ லோச்சுந்திறனுடையான்
மாட்சிமையாய்மலர்மங்கை வாழ்கின்றமார்புடையான்
துஷ்டர்சிரங்கள்கொய்வான் வசிஷ்டருக்கேவல்செய்வான்
அஷ்டதிக்விஜயஞ்செய்தே வெற்றிமலர்புனைவான்
சத்தியகீர்த்தியெனும்மிகு புத்திசேரமைச்சனும்
மற்றுமுள்ளமந்திரிகுறு மன்னவர்களுடனும்
இந்தச்சிங்காசனத்தேமா விந்தையாய்ப்பிரகாசித்தே
சுந்தரமாய்வீற்றிருக்க வந்தேனுல்லாசித்தே

## அரசன்தரு.

வாதாபி கணபதே பதேயென்றமெட்டு.

இராகம்-அம்னத்வணி-தாளம்-ஆதி.

பல்லவி.

ராஜேந்த்ரன் அரிச்சந்த்ரன்வந்தேன்
நாதன்பாதம் நமஸ்கரித்து (ரா)

அநுபல்லவி.

பூஜாபலம் புரிதிரிசங்கு
போஜனுதவிய புதலவன்பொங்கு
கோசலாதிபன் ரகுகுலாதிபன்
குன்றுநேர்புயன் குன்றிடாதவன் (ரா)

சரணங்கள்.

மங்காதகவ மணிமுடிபுனைந்து
திங்கணுதலிற் றிருமண்வரைந்து
துங்கமாமணி தங்குசிர்பணி
அங்கமீதணிந் திங்ஙனேதிரு (இரா)

பீதாம்பர சாலுவைதுன்ன
மேதகுமிகற் புயக்ருதுமின்ன
பாதமீதணி வீரமாமணி
பளபளென்னவே கலகலென்னவே (இரா)
வீரானதட மார்பினில்விஜய
தாரலங்கலெக் ஞோபவீதநயம்
சாரவேயிடை வீரவாளுடை
ஜரிகைமாலுடை தளதளென்னவே (இரா)
சிங்காசன மீதினில்மிக்க
மங்களம்பெற மகிழ்வுடனிருக்க
மாதராடவே வாணர்பாடவே
மறையோர்கூடவே மந்த்ரிநாடவே (இரா)

வாராரிதோ வச்ரபாணியென்றமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

வந்தேனரிச்சந்த்ரனிதோ வளர்கொலுநாடி
நந்தாதகடவுள்திரு நாமங்கள்பாடி (வந்)
சூரியகுலம்விளங்கத் தோன்றியசீலன்
பேரியன்றதிரிச்சங்கு பெற்றநற்பாலன் (வந்)
திக்குவிஜயம்புரிந்த சிகரநேர்தோளான்
தக்கவேந்தர்வேண்டப்பெற்ற தாமரைத்தாளான் (வந்)
அரியநவகண்டந்தன்னை யாளுங்குடையோன்
பரிவுறுஞ்சதுர்விதப் படைகளுடையோன் (வந்)
பொற்புறுசிம்மாசனத்திற் பொருந்திடும்நடன்
அற்புதவசிஷ்டர்க்குற்ற அன்புளசீடன் (வந்)
தன்னுயிர்போல்மன்னுயிரைத் தற்காக்கும்நிலையோன்
துன்னுநவமணிமுடி சூட்டியதலையோன் (வந்)
அறந்தழைக்கவழகுசெங்கோ லணிந்திடுங்கையன்
சிறந்தவஸ்திரபூஷணங்கள் சேர்த்திடுமெய்யன் (வந்)
ஆறிலோர்கடமை கொள்ளுமரியதர்மவான்
மீறிவருமேவலரை வெல்லும்வர்மவான் (வந்)
சந்ததமும்பொய்சொல்லாத சத்யவாக்கியன்.
மந்த்ரமுனிவரர்யாரு மதிக்கும்யோக்கியன் (வந்)
மண்டலம்புகழயோத்தி மாநகர்வாசன்
வண்டமிழ்வல்லோர்க் குதவுமானிதிராசன் (வந்)



## அரசன் சபைவணக்கம்.

இராகம்-பியாக்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

வந்தனஞ் செய்தேன் என்
நிந்தனை கொய்தேன்
தந்தைக்கும்பெற்றதாய்க்குமுன்னுற்ற சற்குருதெய்வத்திற்கும்
சதுர்மறை யோர்க்கும் மிகு
தவமுனி வோர்க்கும்
தமிழ்மழைபொழி நிபுணர்க்கும்
அமிர்தவசன பெரியோர்க்கும்
சங்கீதப்புலவோர்க்கும் இங்கிதச்சபையோர்க்கும் (வந்)

என்சொல் புன்சொலாய் உங்கட்
கிருக்கினு மெலாம்
இன்சொலென்று இதயத்துளென்றும் என்னுயிர்மகிழ்நண்ணுவீர்
இகழ்ச்சி செய்யாதீர் எங்கும்
என்னை வையாதீர்
ஏதும்பிழை யிருந்தாலும்
இனியதையே பொறுத்தாளும்
என்றுமேயுமதுசேயநானே யென்றறிவீர்கனவானே (வந்)

சித்தர் கணங்கள்சூழ் தடந்
திரு மதுரைவாழ்
பத்தனுனமுத்தமிழக பாரதிசெய்தபைந்தமிழ்ப்
பாடியே நானே கதைப்
பாங்கு சொல்வேனே
பரிவுடன்யா வருங்கேளும்
பகூமருதிரும் நாளும்
பங்கயவிருமலரனைய எங்கரங்கூப்பியேயெனைய (வந்)

வசனம்.

குறள், தொட்டனைத் தூறுமணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத்தூறுமறிவு, என்ற நீதிவாக்கியத்தின்படியே சகலகலை விற்பன்னர்களாக இச்சபையின்கண் வீற்றிருக்கும் கனதனவான்களனைவர்கட்கும் வந்தனம்.

## அரசன் வழிபடு கடவுள் வணக்கம்.

இராகம்-இந்துஸ்தானி-காப்பி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

சந்தரேசாவெந்தனை      யாள்வாய்ஆள்வாய்
சோதியேகுணநிதியே      பரமாதியேயெனைச்
சோதியாதுசுகிர்த      மதுரைவாழ் (சு)

பருதிகுலத்திற்றோன்றியே      சிம்மாசனத்தில்
பண்புடனுற்றதின்புயமுற்ற      எண்சொலார்கொற்ற
பார்த்திபர்போல்      பரிவாய்வாழ்கவே (சு)

கோசலைநாடயோத்தி      மாநகரும்நகரும்
குடிகளுமுயர்படைகளுஞ்      செங்கோலுடையருமிகக்
கோதிலாது      குணமாய்வாழ்கவே (சு)

வழிவழிகுருவாகவே      யிங்கேயிங்கே
வந்தெங்களுடசிந்தைதெளிவு      பொருந்தசெய்தோர்
வசிஷ்டரும்வண்மை      யாய்வாழ்க (சு)

மதுரைமீனாக்ஷி யென்றமெட்டு.

* இராகம்-கமாசு-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மதுரைவாழீசா      வரந்தருள்சுந்தரேசா (ம)

அநுபல்லவி.

சதுர்மறையும்புகழ்      தகைசேர்மீனாக்ஷிமகிழ்
சங்கராபொங்கரா      வணிகங்காதரா (ம)

சரணங்கள்.

திரிபுரந்தகனஞ்செய்      சிவமேயெந்தன்பவங்கொய்
தேவர்க்கும்யாவர்க்கும்      தினமருளுய்க்கும் (ம)

நன்னகரயோத்தியைச்சூழ்      நவகண்டமதனில்வாழ்
நற்றவர்கொற்றவர்      மற்றவர்யார்க்கும் (ம)

இக்ஷ்வாகுவம்சத்துற்ற      இறைவரமர்ந்தெழில்பெற்ற
இந்தாசன்விந்தையா      சனத்திற்பொருந்த (ம)

எந்தன்கரத்திற்பிடித்த      வெற்றமிகுஞ்செங்கோல்சித்த
எப்போதுந்தப்புறு      நியல்புடனோங்க (ம)





## இதுவும் கடவுள்வணக்கம்.

வந்தனந்தந்தேனென்ற மெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

நமசிவாயனே திரு      வுமைதனேயனே
நத்திமெத்தவும்பக்திசெய்தேன் விமுக்தனுக்கிடச்சித்தமே
நாடிக்ருபை      நல்குவாய்நல்குவாய்
நல்குவாயுன்      கழல்பணிகுவேன் (நம)

சமையநேசனே திரு      இமையவாசனே
தந்த்ரமந்த்ரசுந்தரானந்த      எந்தையேவருள்தந்திடே
தாஷ்டகாவுன்      தாளினைதாளினை
தாளிணையெந்      நாளுமறவேன் (நம)

காசுழியுய்த்தோனேபஞ்      சாக்ஷரத்தோனே
காலகாலகபாலிசூலபாணி      யாலவாய்வளர்மூலனே
காரணாவுன்      கழல்தனைகழல்தனை
கழல்தனையனு      தினமும்பணிவேன் (நம)

விஷ்ணு துதி.

ஷை மெட்டு.

கண்ணிகள்.

அரிவோங்காரணா அருள்      புரிவாய்பூரணா
அண்டர்புகழ்வைகுண்டபதியில்எண்டிசைபுகழ்மண்டவே
ஆதிலட்சுமி      அன்புறஅன்புற
அன்புறநாளும்      இன்புறவாழும் (அரி)
கரிமைக்காத்தவா அன்பர்      கலியைத்தீர்த்தவா
கதித்தசிம்மாதனத்தினில் யானிதத்துடன்வீற்றிருக்கவே
கண்ணாவுன்னைக்      கருதினேன்கருதினேன்
கருதினேனுந்தன்      கருணைபுரிவாய் (அரி)

வசனம்.

மாக்ஷிமைதங்கிய பங்கயப்பட்பத்தாறை பங்கயனும் வேலையிற் றுயிலும் விஷ்ணுவும் வெள்ளி வெற்புறை வள்ளலும் ஆகிய மூன்று ருவங்களும் உமாமகேச்சுரனென்ற சருருவங்களும் ஒருருவமாகி சபதசாகரஞ்சூழ்ந்த இவ்வுலகத்திலும் மற்றெவ்வுலகத்திலும் வியா பித்திருக்கும் சுத்தசைதன்ய பரப்பிரம்மமே. பகருதற்கரிய இவ்வ

ரியாசனத்திருந்து செங்கோல்புரிந்த எனது மூதாதைகளாகிய இக்ஷ்வாகு, விகுக்ஷி, புரஞ்சயன், அனேனசு, பிருதுவு, விஸ்வகோதன், சந்திரன், யுவனாச்சுவன், சாவஸ்தன், பிரகஸ்தவன், குவலையாசுவன், திடாசுவன், அரியசுவன், நிகும்பன், பொிஹரிணசுவன், கிரிசாசுவன், சேனசித்து, யுவனாசுவன், மாந்தாதா, அம்பரீஷன், புருகுச்சன், திரசதசு, அனரண்ணியன், திரியசுவன், திரியகுணன், திரிபந்தன், திரிசங்குவென்னும் பெயரையுடைய இருபத்தேழு பேர்கட்கும் அருள்புரிந்ததுபோல யானும் இவ்வரி யாசனத்தினிடமாக இருந்து அரசுபுரிய அருள்புரிவாயாக.

அதரஅதர மதுரமதுர வென்றமெட்டு.

* இராகம்-கமாசு-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

தேசதேசத்தரசர்க்கரசன் திரனரிச்சந்திரன்
பாரதற்கோ ரிந்திரன் ஆரணந்தேர் தந்திரன்
செங்கைவா ளயிலுந்துலங்க
மங்கைமார் கவரியிலங்க
பொங்கமாய் முரசமுழங்க
புந்திமிகு மந்த்ரிமாருடன் (தே)

வாரிநீரைவாரியோங்கும் பாரதனிற்பெய்திடும்
மாரியதையொத்திடும் சீர்கரம்பொருந்திடும்
வன்மையேமிக வுமுடையான்
ஒன்னலர்போர் பின்னடையான்
நன்மைசேர் வாய்மையுடையான்
நான்குதள கர்த்தருடனே (தே)

ஆரவாரதிரசூரர் போரின்நன்மைபேசிட
வீரியங்கொண்டாடிட வேதிறைவர்கேட்டோட
அன்புசேரிறை யோர்மறையோர்
நன்சொல்கூர் மதிபோர்நிதியோர்
வன்புகழ்ச் சேவகர்வேவுகர்
அருகினுறக் கொலுவிருந்தனன் (தே)

அரசன் வசனம்.

சேவகா.

சேவகன் வசனம், மஹாராஜ்.



அரசன் வசனம்.

யான் இவ்வரி யாசனத்தினிடமாக வெப்போதமர்ந்தேனோ அதற்கு முன்னதாகவே ஈங்கு விற்றிருக்கக்கூடிய நமதுமுதன் மந்த்ரியாகிய சத்தியகீர்த்தியானவர் இதுவரை எனது சமுகம்வராத காரணம் என்னமோ தெரியவில்லை ஆதலால்சீக்கிரம் அன்னவரையழைத்துவா.

சேவகன் வசனம். நல்லது பிரபூ.

சேவகன் வசனம். பிரபூ. வந்தனஞ் செய்கின்றேன்.

மந்திரி வசனம்.

கல்யாண்சேவகா இங்கு அவசரமாக வந்த காரணம்யாது?

சேவகன் வசனம்.

பிரபூ நமது மகாராஜா அவர்கள் சபாமண்டபத்தி னிடமாகக் கொலுவமர்ந் திருக்கிறார்கள் தங்களை அழைத்துவரச் சொன்னார்கள்.

மந்திரி வசனம். இதோ வருகின்றேன்.

மந்திரி அரசனை வணங்குதல்.

வசனம்.

அண்டமுத லகண்டித விண்டல மண்டலமெண்டிசை குண்டலி குண்டல கண்டலி கொண்டலகள் செண்டில டுண்டுண்டுண்டுண்டுண் டுண்டுண்டெனா தண்டமுதலிய சிறுபறையறைதர மறவொலி செவிடுற வாய்வழி யனலுற சரசரசரவென, பரபரபரவென, கதித்தபொன் முடி காவலரோடிட விதித்த நீள்கணை மேவலர்தூவிட, பதித்தகன் மணி வார்சிலைநீடிட, எட்டுத்திக்குட்பட் டிட்டப்பரிகளும், வட்டத் துட் பட்டிட்டக்கரிகளும், கெட்டுப்பட் டிட்டட்டக்கிரிகளும் வதரிக் கதரிப்பதரி, பாரிடுபுவனம் படீர்படீர்படீரென வாட ஆறுபோலுதிரம் அலைபுரண்டோட, அமராடிவென்று சீரியவீரிய சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் வேந்தே. மந்திரி, சத்தியகீர்த்தி வந்தனஞ்செய்கின்றேன்.

அரசன் வசனம்.

கல்யாண், மந்த்ரி யானிச்சிம்மாசனத்தி னிடமாக எழுந்தருள்வதற்கு முன்னமே இங்கு வீற்றிருக்கக்கூடிய வர் இதுவரை வராத காரணம் யாது?

மந்திரி வசனம்.

அரசே. சமுககாரிய விஷயமாகிய சில காரணத்தா லிங்குவர சற்று தாமதமாயின.

அரசன் வசனம். அப்படியா.

# அரிச்சந்திரன் தேசவிஜாரணை.

வசனம்.

புத்தியிற் சிறந்த சத்தியகீர்த்தி, நமது இராஜ்யவிஷயமாக சில சங்கதிகள் உமதிடத்தில் கேட்கவேண்டுமென் றெண்ணுகிறேன். உமதிச்சையாது.

மந்திரி வசனம்.

அதற்குப் பதிலுரைக்கத் தயாரயிருக்கிறேன் பிரபு

## அரசன்தரு.

அகிலப்ரபஞ்ச முன்றலே யென்ற வர்ணமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

சிவனருளாலுஞ்சிறந்தசினதுபுத்தி நிக்ஷண்யத்தாலுமந்த்ரி
புவனமீதுள்ளநவகண்டமதையரசு புரிந்துவருகின்றேன்மந்த்ரி

வசனம்.

ஹே. பிரதான், ஆதியந்தமில்லாத யாதொரு பரப்பிரம்மத்தின் முக்குணமே. பிரம்மா-விஷ்ணு-உருத்திரனென மூன்றுருவாகி சிருஷ்டி, ஸ்திதி சம்ஹாரமென்னும் முத்தொழிலை நடத்தும் இம்மூவரில் முதல்வனாகிய லோகநாத், கைலைநாதன் திருவருளாலும் நினது நன்மதியின் விசக்ஷண்யத்தாலும், பிலக்ஷம், குசம், குலிசம், சாகம், புஷ்கரம், பில்மலம் என்னும் தீவுகளைப் பார்க்கிலும் மஹா சிரேஷ்டமான இச் சம்பூ தீவினிடத்துள்ள கீழ்விதேகம், மேல்விதேகம், வடவிதேகம், தென்விதேகம், வடவிரோபதம் தென்னிரோபதம் வடபரதம் தென்பரதம் மத்திமகண்டம் என்ற நவகண்டங்களும் என்னெருகுடையின் கீழாக சர்வஜனங்களும் சுதாகலிக்கும்படி மனுநீதி வழுவாது அரசுபுரிந்து வருகின்றேனன்றோ.



மந்திரி தரு.

சீருறநலங்கண்டருசெங்கோல்புரிவதுதானுஞ் சிவனருளன்றியரசே
வருறுமென்மதியாற்புரிகின்றேனென்ப தேற்குமோவெனதரசே

வசனம்.

வேந்தே. என்ன இவ்வாறு பாஷிக்கின்றீர்கள் பூர்வஜன்மத்தில் தாங்களியற்றிய நற்கர்ம வசத்தால், புகலரிய சதுர்மறையாய் மறைப்பொருளாய் உபநிடத்தாய், பூதமைந்தாய், அகிலமுமாய் மன்னுருவாய், அவற்றிலுறுவாய், அகமாய் மேலாய் பகலிரவு என்றறியாத பரம்பொருளாய், அறுசமயப் பகுதியாகி, சகலமுமாய், நிஷ்களமாய், நிராமயமாய் விளங்குகின்ற கடவுள் எவனோ அன்னவனது கிருபாகடாக்ஷத்தினாலேயே சிற்றரசர்களி யாவரையும் வென்று பஹுதூர் அரிச்சந்த்ரனென நாமம்பெற்று இவ்வரியாசனத்தி னிடமாக வீற்று அரசுபுரிந்து வருகிறீர்களே யலது கேவலம் புல்லறிவுடையேனாகிய என் வலதாலென் றுரைக்கத் தகுமா.

அரசன் வசனம்.

பிரதாபன் வாஸ்தவம், ஆனால்

விருத்தம்.

மந்திரவிசாரத்தாலே மன்னவன்மயக்கம்நீக்கல்
தந்திரவுபாயத்தாலே சத்துருநாசம்பண்ணல்
முந்தியசெங்கோல்நூலின் முறைதவறாதியற்றல்
இந்தவராவமைச்சர் நீதியிவைசெயார்நரகில்வீழ்வார்.

வசனம்.

என்னும் நீதிக்கிணங்க யாதொரு அரசர்கள் கெடுவழிகளிற் சென்று விடாது பாதுகாக்க வேண்டியதும் முறைவழாது அரசியற்றும்படி வற்புறுத்திச் சொல்லவேண்டியதும் சத்துருநாசஞ்செய்ய முயற்சியைத் தேடவேண்டியதும் அமைச்சர்கள் நீதியன்றோ அதுவின் கூறியபடி நான் பூர்வஜென்மத்திற்செய்த நற்கர்மவசத்தால் சொல்லற்கரிய வுன்னை மந்திரியாகப்பெற்று யாதொரு சர்வேஸ்வரனுடைய கிருபாகடாக்ஷ விசேஷத்தால் அரசுபுரிந்து வருகின்றேனன்றி வேறன்று.

அரசன் தரு.

அருளும்நற்றேவமடக்கமுமுள்ள ஆயங்களில்லாத்தி
பாருமந்துறையுஞ்சவுந்தெரியாப் படைத்தவருந்தாமந்தி

வசனம்.

மந்திரி நமதரசிற்குட்பட்ட எல்லாநகரங்களிலும் பிரமத்தின் அருவுருவம் தோன்றும்படியாயும் பாமராள்முதல் பண்டிதாள்வரை பக்திமிகுத் துய்யும்படியாகவும் அயிக்க முக்திக்கேதுவாகிய சரிகை, கிரிகை, யோக-ஞானமென்னும் வழிகளுக்கு முதற்காரணமாக ஏற்பட்ட ஆலயங்களில் கிரமப்படி பூஜைகளும் உச்சவாதிகளும் நடந்து வருகின்றதா.

மந்திரி தரு.

குற்றமில்லாதநங்குவலயந்தனிலுள்ள கோவில்கடனிலரசே
உற்றநற்பூசையோடுற்சவம்நடக்கின்ற வுயர்வென்சொல்வேனரசே

வசனம்.

அரசே கவனிக்கவேண்டும் நமது செங்கோற்குட்பட்ட சிற்றூர்முதலெந்நாடுகளிலுமுள்ள தேவாலயங்களில் அந்தந்தநேரந் தவராமல் ஆறுவேளைப் பூஜைகள் நிறைவேறுவதுடன் தினவிசேஷம், வாரவிசேஷம், மாதவிசேஷம், பக்ஷவிசேஷம் வருஷவிசேஷமென்னும் உச்சவங்கள்நடக்கும் சம்பிரமத்தை ஆதிசேடனால் சொல்லுவதற் கெளிதில்லையாகின் என்னோர் நாவாற்சொல்லற் பாலதோ.

அரசன் வசனம்.

மந்திரீ அப்படியா மிகவும் சந்தோஷம்.

அரசன்தரு.

ஜெகத்தினில்மானிடத்தெய்வமாய்விளங்கும் திருமறையோர்மந்திரீ
மகத்துவம்பெற்றவேதங்களோதி வாழ்கின்றாராமந்திரீ

வசனம்.

அமைச்சே, விரதம்-நோன்பு-யெக்யம்-ஓமம்-சாந்தி-பிராயச்சித்தம்-அஸ்வமேதம்-இராஜசூயமுதலிய மிகவு முத்கிருஷ்டமான யாகாதிகளைநடத்தி அதனால் முப்பத்துமுக்கோடி தேவர்கள் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் கின்னர கிம்புருட கெருட காந்தருவ சித்தவித்யாதரர் நாகர்முதலிய தேவர்கட்கும் பிரம்மா விஷ்ணு உருத்திரனென்ற மூவர்கட்கும் அவிர்ப்பாகமளித்து நம்குலமானது வாழையடிவாழையாய்ப் பிரவர்த்தித்து வரச்செய்வது முதலான பற்பலகாரியங்களை நமக்கு முதற்றெய்வமாகவிருந்து நடாத்தும் அந்தணாளர்கள் மேற்கூறிய கிரமப்படி நடந்துவருகின்றார்களா.



மந்திரி தரு.

முறையுடன்றெய்வமறையவர்வேத மொழிந்தகமகிழ்ந்தரசே
குறைவின்றிவாழுங்கொள்கையென்சொல்வேன் கோசலாபுரியரசே

வசனம்.

ஹே புவனசக்கரேஸ்வரா, நம் முதற்குலத்தவர்களாகிய மறையவர்கள் திரிகால ஸ்நானங்களோடு சந்தியாவந்தன காயத்ரீஜெப அக்கினிஹோத்ர ஔபாசன கிருத்யங்களை நடாத்தியும் நான்கு வேதங்களையும் சதா ஸ்மரிக்கும் நாவையுடையவர்களாயும் தங்கள் முன்னோர்களாலும் தங்களாலும் விடப்பட்ட தர்மாசனங் கிராமங்களின், ஹைறவேஜினின்று காலக்ஷேபஞ்செய்து வாழ்ந்துவருகின்றார்களரசே.

அரசன் வசனம்.

மிகவும் குதூகலம் அமைச்சே.

அரசன் தரு.

ஓதருமேகங்களுவரியினீரை யுண்டுலகினில்மந்திரீ
மாதமும்மாரிமாண்புடன்பெய்து வருகின்றதாமந்திரீ

வசனம்.

மதிசிரேஷ்டா, (குறள்) விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத், துண்ணின் றுடற்றும் பசி, உகைத்திற்குத் துணைக்காரணமாகிய மேகங்களானது காலாகாலமறிந்து மழைவருஷிக்காவிடில், விரிவாகிய நீரைக்கொண்ட சப்தசாகரஞ் சூழ்ந்த இவ்வுலகத்தினிடமாகவுள்ள சர்வஜனங்களும் பசியினாற் பிடிக்கப்படுவார்களென்பது நீதியன்றோ ஆனதால் மேகங்களானவை நம் அரசுக்குட்பட்ட நாடுகள்தோறும் மாத மூன்றுமழை வருஷித்து அதனை சர்வபிரஜைகளும் மகிழ்வுற்றிருக்கின்றார்களா.

மந்திரி தரு.

மங்குலமுறையாய்த்திங்கள்மும்மாரி வருஷிப்பதாலரசே
அங்கண்மாநிலமெங்குஞ்செழிப்புற் றமைந்திருக்கின்றதரசே

வசனம்.

அரசர்கட்கரசே வேதமோதிய வேதியர்க்கோர் மழை, நீதமன்னர் நெறியினுக்கோர்மழை, காதல்மங்கையர் கற்பினுக்கோர்மழை, ஆக மாதமூன்று மழைவருஷித்து, பூவைசியாளாகிய வேளாளர்முத

லிய யாவர்களும் வேண்டும் பயிர்செய்யப்பெற்று நமது இராஜ்யங்கள் மிகவும் செழிப்புற் றிருக்கின்றது அதனாலேயே தமதுசெங்கோல் நீதியும் பிரகாசிக்கின்றது.

அரசன் தரு.

வெற்றிசேர்நங்குலக்ஷத்ரியரனைவரும்	விற்றொழில்மற்றுமந்த்ரீ
கற்றதிற்றேர்ச்சியுற்றிருக்கின்ற	காரணங்கழறுமந்த்ரீ

வசனம்.

பிரதான், வெற்றியைக்கொண்ட வீரர்களாகிய நங்குலக்ஷத்திரியர்கள் சதுர்வித சைநியங்களை நடாத்துந் திறமையையும் விற்படை முதலிய பற்பல ஆயுத பரீக்ஷைகளைக் கற்றுத் தேர்ச்சியுற்றிருக்கின்றார்களா.

மந்திரி தரு.

தங்குலவுத்தமக்ஷத்ரியரனைவருந்	தன்றொழில்செய்தரசே
இங்குதாமெப்போதழைப்பீரென்	றெதிர்பார்த்திருக்கின்றாரரசே

வசனம்.

ஹே இறைவரேறே, தமது குலத்தாராகிய க்ஷத்திரியரென்னும் படைத்தலைவர்கள் மல்வித்தை வில்வித்தை யானையேற்றம் குதிரையேற்றம் தேரோற்றம் அஸ்திரப்பரீக்ஷை சாஸ்திரப்பரீக்ஷை ஆயுதப்பரீக்ஷை முதலியவைகளிற் பூரண பாண்டித்வமுடையவர்களாகி முற்போர் தொடுக்கக்கூடாது வரும் போரை விடக்கூடாதென்ற எண்ணத்துடன் தாம் எப்போது இங்கழைத்து எதிரிகள்மீது யுத்தத்திற்கனுப்புவீரென்றும் தோன்ற மெத்த வுத்தேசத்துடன் எதிர்பார்த்திருக்கின்றார்கள்.

அரசன் வசனம்.

அப்படியா அமைச்சே. அதிக குதூகலம் மற்றும் நமது செங்கோற்குட்பட்ட அஷ்டகண்டச் சக்கரவர்த்திகளும் நாம் வசிக்கக்கூடிய இக்கோசலநாட்டுக் குட்பட்ட அங்க, அருண, அவந்தி, யாந்திர, இலாட, யவன, ஒட்டிய, கருச, கலிங்க, கன்னட, காச, காஸ்மீர, காந்தர, காம்போஜ, கிராட, குருகு குடக, குந்தள, குரு, குளிந்த, கூர்ச்சர, கேகய, கேரள, கொங்கண, கொல்ல, சக, சவ்வீர, சாளவ, சிங்கள, சிந்து, சீன, சூரசேன, சோள, சோனக, திராவிட, துளுவ, தெங்கண, நிடத, நேபாள, பப்பர, பல்லவ, பாஞ்சால, பாண்



டிய, புலிந்த, போட, மகத, மச்ச, மராட, மலையாள, மாளவ, யுகந்தர, வங்க, வங்காள, விதற்பமென்று சொல்லப்பட்ட ஐம்பத்தைந்து தேசத்தரசர்களும் அவரவர்களுக் கேற்பட்ட பிரகாரம் பகுதிகட்டி வருகின்றார்களா.

மந்திரி வசனம்.

பிரபூ நமது செங்கோற்குட்பட்ட வ்ஷட் சக்கரவர்த்திகளும், ஐம்பத்தைந்து தேசத்து மன்னரும் வைகையிலெழுந்து நித்ய கர்மானுஷ்டான முடித்து, (குறள்) அஞ்சாமை யீகை யறி வூக்கம், இந் நான்கும் எஞ்சாமை வேந்தர்க் கியல்பு. என்ற நீதிவாக்கியத்தின்படியே, அரசுபுரிந்து வருவதுமன்றி நமக்குள்ள பகுதியை சரியாகக் கட்டி வருகின்றார்கள்.

அரசன் வசனம்.

மந்த்ரீ சொல்லொன்று அனக்கமுற்றேன்.

அரசன் தரு.

வர்த்தகஞ்செய்யும்வணிகர்முதலுக்கு	வழுவின்றியேமந்த்ரீ
இத்தவத்திற்சிற்றலாபஞ்சம்பாதித்தே	யிருக்கின்றாராமந்த்ரீ

வசனம்.

ஹே. பிரதாபன் ஸ்ரேஷ்டா, மூன்றாவது வருணாச்சிரமத்தாராகிய வைசியாள் அவர்களுக்கேற்பட்ட நியமப்படி நடந்துவருகின்றார்களா.

மந்திரி தரு.

அண்டர்கள்புகழவரியவணிகர்தம்	ஆக்கினைக்கஞ்சியரசே
கொண்டதோர்முதலுக்கொஞ்சலிலாபங்	கொண்டுவாழ்கின்றாரரசே

வசனம்.

அரசர்க்கரசே, வர்த்தகஞ்செய்யும் வைசியர்கள் அவரவர்கள் கொண்ட முதலுக்கு சிற்றலாபம் சம்பாதித்தும் வரவுக்குத்தக்க செலவுசெய்தும் அசக்தியர்க ளிடுகொடுக்கினும் கடன்கொடாமலும் சுத்திபத்தை யுடையவர்கள் வறியோர்களாக விருப்பினும் வாக்கு நாணயமாகக் கடன் கொடுத்தும் பற்று வரவு கணக்குகளில் கிஞ்சித்தேனும் மோசமாகப் பிழைபடவெழுதாமலும் சத்யவிஷயமான செலவுகளை அபரிமிதமாகச் செய்தும் சீர்த்தியாக வாழ்ந்து வருகின்றார்கள்.

அரசன் வசனம்.

மந்த்ரீ நிருபரைக் கூடிய நீதி விஷயமான வசனங்களைக் கேட்சக்கேட்க ஆனந்த சாகரத்தில் மூழ்கினவனுகினன், மற்றும் பூவைசியாளாகிய வேளாளர்கள் எவ்வாறு நடந்து வருகின்றார்கள்.

மந்திரிவசனம்.

புடவி கடகடென வுடைபட வைகிதற வருபொருதாற் சீறும் தடவிகடகளிற்றில் ஆரோகணிக்கக்கூடிய அரசே, கவனமாகக் கேளுங்கள், நல்ல தேவாலயம், பூசனைநடப்பதும், நாடோறு மழை பொழிவதும், நாடிய தபோதனர்கள் மாதவம் புரிவதும், நவில்வேத வேதியரொலாம், சொல்லரிய யாகாதி கர்மங்கள் செய்வதும், தொல்புரா செழிக்கும்நலமும், சுபசோபனங்களும் கொற்றவர்கள் செங்கோல், துலங்கு மனுநெறி முறைமையும், வெல்லரிய சுகிர்தமொடு, வர்த்தகங் கொள்விலையும், விற்பனையு மதிகபுகழும், மிக்கவதிகாரமும் தொழிலாளர் ஜீவனமும் வீரணைசூரன்வலியும், வல்லமைகள் சகலமும் வேளாளர் மேழியின், வாழ்வினல் விளைவதன்றோவெனின் மற்றன்னவர்களின் பெருமையைப் பேசற் பாற்றோ இவ்வித சீர்த்தியையுடைய பூவைசியாளாகிய வேளாளர்கள், யாதொரு குறைவின்றி விபசாயஞ்செய்து, (குறள்) உழுதுண்வோழ்வாரே வாழ்வர் மற்றெல்லாந் தொழுதுண்டு பின்செல்பவர், என்றவாக்கியமானது நிலைபெறும்படியாகவே மெய்மையோடு உஜ்ஜீவிக்கின்றார்கள்.

அரசன்வசனம்.

அவ்விதமா அமைச்சே.

அரசன் தரு.

தைரியமுடனேசாற்றருஞ்சதுர்த்த ஜாதியர்கள்மந்த்ரீ
செய்யருமவர்தொழிற்செய்துவாழ்கின்ற சிறப்புரைப்பாய்மந்த்ரீ

வசனம்.

மந்த்ரி வீரியா, குண்டகர், கோளர், சவர்ணர், நக்ஷத்ரஜீவகர், வப்தர், கும்பதாரர், பாரசவர், நிடாதர், போஜர், சூதர், கூவிரர், மாகிட்டியர், விசன்மர், உக்ரர், சூலிக்யர், மணிகாரர், புளிந்தர்,கூதிக்தர், மிலேச்சர், மாகதர், அர்த்தர், தௌட்டியந்தர், கடகாரர், மாலாசிதர், உற்பலர், சண்டாளர், பாகுதாயர், வைதேகர், பலதர், அயோகவர், சத்ரியார், ஆவந்தியர், மல்லர், சுதன்வர், மைத்ரர், பலகண்டர், இரசகர், புட்பகர், தக்கர், சுவபசர், குகபர், கரணர், சர்மகாரர், பாரகர்,



வேனுகர், கனகர், அத்திகர், வர்த்தனசாலிகர், கருமகாரர், தண்டகபோலர், மார்க்கவர், சல்லர், வந்திகர், வாடதானர், கண்டகர், சற்பர், சௌண்டிகர், சாத்வதர், தசியவர், பைரவர், ஆஸ்ளைகர், கரண்டர், சாமுத்ரர், மாலாகாரர், கைவர்த்தர், நீலகாரர், வருணகரர், பிங்களர், நர்த்தகர், மாதங்கர், நடர், திரமிளர், சர்மசீவியர், நீலாகி, வர்ணவிக்ரேதர், சுவபாகர், குட்குடர், வேணர், புல்லகசர், ஆபிரதர், அபீரர், திக்குவணர், கசர், சைரந்திரியர், மைத்திரேயர், பார்க்கவர், காருவாரர், பாண்டுசோபகர், ஆகிண்டிகர், சோபாகர், அந்தியாவசாயிகர், என்றுசொல்லப்பட்ட **93**, சாதியர்களும், அவரவர்களுக் கேற்பட்ட விதிப்படி ஆதிலோர்கடமை கொடுத்து அறநெறி வழுவாதுவாழ்ந்துவருகின்றார்களா.

மந்திரி தரு.

ஆத்திரத்துடனேசதுர்த்தர்களனைவரு மவர்தொழிற்செய்தரசே
சாத்திரப்படிநமக்காதிலோர் கடமைதருகின்றாரரசே

வசனம்.

புவனசக்கரேஸ்வரா நான்காவது வர்ணத்தாராகிய சூத்ரர்கள் யாவரும், பிரமக்ஷத்திரிய வைசியரென்னும் மூவர்க்கு முட்படிந் தேவல்செய்து நமக்காதிலோர் கடமைகொடுத்து குறைவின்றி வாழ்ந்து வருகின்றார்கள்.

அரசன் தரு.

சித்திரமானநம்சத்திரங்களிலே தினந்தோறுமந்த்ரீ
சத்திகொடுக்குமன்னதானங்கள்நடக்குஞ் சங்கைசொல்வாய்மந்த்ரீ

வசனம்.

அமைச்ச சிகாமணி இல்லறம், வானப்ரஸ்தம், சந்யாசம், அவதூதி, என்னும் இந்நான்கு ஆச்சிரமத்தார்க்கும், மற்றும், காமக், குரோத, லோப, மோக, மத, மாச்சரியங்களை நீக்கி, ஆணவம், மாயை, காமியமென்னும் மும்மலங்களையுமகற்றி இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி, என்ற அஷ்டாங்கயோகங்களையும்பெற்று, மூலாதார, சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம் விசுத்தி, ஆக்ஞையென்னும், ஆராதாரங்களையும் பேதித்து மூலக்கனலையெழுப்பி அதற்குமேலுள்ள பிரம்மநிலையைத் தெரிந்த முத்தர்கள் முனிவர்கள், இருடிகள், தவசிகள், முதலிய புண்ணியாத்துமாக்களுக்கும், ரிக், எஜுர், சாம, அதர்வண, மென்னு

ம் நான்குவேதங்களையும் சதாபாராயணஞ்செய்யும் முதற்குலத்தோர்களாகிய அந்தணர்களுக்கும் இன்னும் எவ்வாச்சிரமத்தார்களுக்கும் யாதொருகுறைவும் நேரிடாது ஜட்டத்துக்குக் காதாரமாகிய உணவளிக்கும்படி நம்தேசத்தில் ஆங்காங்கும் நேமித்திருக்கும் அன்னசத்திரமாதியாயுள்ள மடம், தடம், கூபம், சாலை முதலிய தர்மங்களெல்லாம் யாதொரு குறைவின்றி பூரணமாய் நடந்துவருகின்றதா.

மந்திரி தரு.

தருமாசனத்தின வேஜாலே சத்திரங்களிலரசே
தெருளாய்நடக்குந்தினவன்னதானச் சிறொன்சொல்வேனரசே

வசனம்.

கலிகடிந்து செங்கோலைத்தாங்கிய, கஜதுரங்கரதமேலுற்றோங்கிய அண்ணலே. தம் முன்னோர்களாலும் தம்மாலும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற சத்திரங்களிலும் மடங்களிலும் தேசியெனக் கேட்போர்கட்கெல்லாம் நாஸ்தியென் றுரைக்காமல் நாமேற்படுத்தியபடியே அன்னதானம் நடந்து வருகின்றது.

அரசன் வசனம்.

மந்திரீ, யான் வினவிய சங்கைகள் யாவற்றுக்கும் புத்திநிறுதண்ணியமாகக் குறைவற தெடுத்துரைத்த நினது வசனாமிர்தத்தைப் பருகிய யான் தன்யனானேன், மற்றும் நமது சமுகத்தில் நடனமாதர்களைத் தருவித்து இச்சபையோர்க ளனைவரும் களிகூரும்படி நர்த்தனம்புரியச் செய்யும்.

மந்திரி வசனம்.

உத்தரவுப்படி செய்கின்றேன்.

மந்திரி வசனம்.

அடா சேவகா, நமது நடனமாதரை சிக்கிரம் அழைத்துவருவாயாக

சேவகன் வசனம்.

இதோ அழைத்துவருகிறேன் சுவாமி.

சேவகன் வசனம்.

ஏ. பெண்களே உங்களை யழைத்துவரும்படி மகாராஜா உத்தரவாயிருக்கின்றது வாருங்கள்.



43 வது பக்கம் நாடகசாலை பெண்கள் வருகிறபாகம்



பெண்கள் வசனம்.

இதோ வருகின்றோம் சேவகா.

## நடனப்பெண்கள் வருகிறபாகம்.

விருத்தம்.

கட்டியன்சொல்லக்கேட்டுக் கலன்பலவணிந்துகொண்டு
அட்டியில்லாதுகண்ணிற் கஞ்சனந்தீட்டிமெய்யிற்
பட்டுடைபுனைந்துமெய்த்தே பரதநாட்டியமியற்ற
இட்டமாய்நடனமாத ரிறைவன்முன்றோன்றினரே.

தந்திரமாய் தவிர்தபாணப் பெண்களென்றமெட்டு.

* இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

செந்திருபோல்திகழ்நன் நடனமாதர்வந்தார் (செ)

அநுபல்லவி.

சிந்தூரமாகியபொட்டு சுந்தரநுதலிலிட்டு
கொந்தார்சடைபின்னலிட்டு கந்தரத்திலாரந்தொட்டு (செ)

சரணங்கள்.

தங்கச்சிலம்பெடுத்து பங்கயப்பாதந்தொடுத்து
மங்களகீதம்படித்து பொங்கமாய்நடனம்நடித்து (செ)
குங்குமகளபவாச மெங்கினுந்திரேகம்வீச
துங்கமாய்பார்போர்கண்கூச செங்கைவளையணிந்துல்லாச (செ)

(நடனப்பெண்கள் வணக்கம்.)

பாந்தாமனோரமனே யென்றமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

மகராஜனேநேசனே வந்தனஞ்சக்ரேசனே (மக)

அநுபல்லவி.

சகமதைநீயோர் குடைகீழினில்
தாவியாளும் மாவிசித (மக)

சரணங்கள்.

தன்னுயிர்போல் மன்னுயிரை
சாஸ்திரவண்ணம் காக்குநன் (மக)

சத்யநெறி யைந்தவரு
சாமியேநன் னேமியே (மக)

சுந்தரமி குந்தவதி
சூரவீர நீரனே (மக)

நீதிதவ றுதகப
நித்யமங்க ளத்தில்மிகு (மக)

நன்குதிரி சங்குமன்னன்
நற்றவத்தா லுற்றதிரு (மக)

பெண்கள் வசனம்.

புவனசக்கரேஸ்வரா, அநேக வந்தனம். எங்களைச் சமுகத்திற் கழைத்த காரணம் இன்னதென வுத்தரவாகப் பிரார்த்திக்கின்றோம்.

அரசன் வசனம்.

கல்யாண் பெண்களே உங்கள் நர்த்தனத்தைப் பார்த்து ஆனந்திப்பதற்காக நங்கழைத்ததே தவிர வேறன்று. ஆனதால் நீங்கள் கற்றிருக்கக்கூடிய நடனங்களைச் செய்யுங்கள் பார்ப்போம்.

பெண்கள் வசனம்.

ஆக்ஞையின் பிரகாரம் அரசே.

பெண்கள் நர்த்தனஞ்செய்தல்,

ஸ்ரீராஜசுதாதயா வென்றமெட்டு.

இராகம்-கானடா-தாளம்-ஆதி.

பல்லவி.

திகழ் மாமகவா னிகர்கோமகனே (திக)

அநுபல்லவி.

புகழ்மேருவுடன் இகல்செய்திடுந்தின்
மிகுதோளனெனும் ஜகபூபதியே (திக)

சரணங்கள்.

ஆதவன்குலத்த ழைக்கவேபிறந்த
அரியதிபமேயிவ் வயோத்தியையிந்த
மேதினியில்நாளும் நீதியுடனாளும்
வேந்தனேகுண சாந்தனே திரு (திக)



அரசன் வசனம்.

மந்த்ரீ இம்மாதர்கள்செய்த நர்த்தனத்தை மிகவும் மெச்சினேன் ஆனதால் இவர்கள் விரும்பியபடி வெகுமதி கொடுத்தனுப்பும்.

மந்திரி வசனம்.

உத்தரவுபோல் அரசே.

மந்திரி வசனம்.

ஹே, மாதர்களே இந்த ஆடையாபரணங்களை யெல்லாம பெற்றுக்கொண்டு அரசனிடத்திற் றெரிவித்துச் செல்லுங்கள்.

மாதர் வசனம்.

அவ்விதமே பிரபு.

மாதர் வசனம்.

வேந்தர்கள் வேந்தே தங்களுத்தரவுபோல வெகுமதி பெற்றுக்கொண்டோம் யாங்கள் சென்று வருகின்றோம் அநேக வந்தனம்.

அரசன் வசனம்.

கல்யாண், மாதர்களே சென்று வாருங்கள்.

அரசன் விருத்தம்.

எழுமைப்பிறப்புந்தீவினைவர் தெய்தார்சிறப்புக்கென்புலத்தார்
முழுதுமுயக்குங்கடன்சால முடிக்குமாண்பும்பெறுதலினல்
பழுதில்தவங்கள்புரிந்துமைந்தர் பயந்துமவர்கள் தங்களுக்கு
குழுமுமவையின்முந்திருப்பவறிவு கொளுத்தல்வேண்டுமால்.

குறள்.

“ தந்தைமகற்காற் றுநன்றியவையத்து
முந்தியிருப்பச்செயல் ”

(வ-ம்.) இவ்வுலகத்தினிடமாக தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாபரமென்ற வெழ்பிறப்பினும் உற்பவித்துழலாதிருக்கும் வண்ணம் செய்யுந் தன்மை சற்குண பாலர்களாலுண்டாகுமென்று தானெடுத்துக்கூறிய வேதாகமங்களினல் யான் தெரிந்து சாக்ஷாத் பகவானைக்கோரி, தவமியற்ற அன்னவனருளா லுற்பவித்த பாலகன் தேவதாசனுக்கு மனுநீதியின் பிரகாரம் வித்யாப்யாசம் செய்யும்படி உபாத்தியாயனிடை அனுப்பினேனென்றே.

மந்திரி வசனம்.

ஆம் பிரபு.

அரசன் வசனம்.

அப்பாலகன் இதுவரை எவ்வித நூல்கள் கற்றிருக்கின்றானென்பதை அன்னவாக்கினாற் சொல்லக்கேட்டு சந்தோஷ மடையும்படியாய் நினைக்கின்றேன் ஆதலால் அவனை இவடம் சீக்கிரம் அழைத்து வரும்படி செய்யும்.

மந்திரி வசனம்.

அவ்விதமே அரசே.

மந்திரி விருத்தம்.

இடமுயர்சேவகாயாணியம் புமோர்வார்த்தைகேளாய்
கடகளிறனைபசிற்றக் காவலர்யாரும்போற்றும்
தடம்புயத்துடையநங்கோன் றவத்தினலுற்பவித்த
இடமிகுமைந்தன் றன்னைச் சீக்கிரமழைத்துவாராய்.

வசனம்.

சேவகா நம் இறைவர் சுதனாகிய தேவதாசன் பாடசாலைக்குச் சென்றிருக்கின்றான் அன்னவனைச் சீக்கிரம் அழைத்துவா.

சேவகன் வசனம்.

உத்தரவின் பிரகாரம்.

சேவகன் வசனம்.

மகாராஜ், நமது பிதா தங்களை யழைத்துவர ஆக்ஞாபித்தார்கள் என்னுடன் வரவேண்டும்.

தேவதாசன் வசனம்.

சேவகா அவ்விதமே வருகின்றேன்.

---

## தேவதாசன் வருகிற பாகம்.

தாண்டவநித்யஹரே யென்றமெட்டு.

இராகம்-கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

வந்தனந்தந்தேன்யான் மைந்தனிதோ



அநுபல்லவி.

எந்தந்தைக்குமன்னைக்கும் எழில்பெறுகுருவிற்கும்
சந்ததங்கடவுளர்க்கும் மைந்தனிதோ (வந்)

சரணங்கள்.

வேதவேதியருக்கும் மிகுபெரியோருக்கும்
தேவல்லோர்களுக்கும் மைந்தனிதோ (வந்)

அருந்தமிழ்வல்லோர்கட்கும் அறமொழிகற்றோருக்கும்
பொருந்துமிச்சபையோர்க்கும் மைந்தனிதோ (வந்)

முத்தழகபாரதி மொழியும்பதங்கருதி
சித்தமுமகிழ்ந்தித்ததி மைந்தனிதோ (வந்)

வசனம்.

இச்சபையின்கண் வீற்றிருக்கும் கனவான்களுக்கும் எனது சற்குருவாகிய வசிஷ்டமகாரிஷிக்கும் இந் நாடகத்தை இயற்றிய, மகாராஜராஜஸ்ரீ. முத்தழக பாரதியவர்களுக்கும் அனேக வந்தனம் தந்தேன்.

தேவதாசன் தனது தந்தையைவணங்குதல்.

கண்மணியே யுன்னைக் கண்டு காதல்கொண்டேனே யென்றமெட்டு.

* இராகம்-சுருட்டி-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

மாதவத்தாலென்னையீன்ற நாதாவந்தனம்
நாதாவந்தனம் பிரக் யாதாதந்தனம் (மா)

ஆதியாயரூபியாய் சோதியைக்கோறி
சோதியைக்கோறி மிரு தோத்திரங்கூறி (மா)

சத்தியமேயுருவதா யுதித்தஐயனே
யுதித்தஐயனே காந்தி சுதித்தமெய்யனே (மா)

நல்விவேககுருவினிடம் கல்வியுணர்ந்தேன்
கல்வியுணர்ந்தேன் அதன் உண்மையறிந்தேன் (மா)

வசனம்.

பிதாமகராஜ் வந்தனஞ்செய்கின்றேன்

அரசன் தரு.

வாடாபெந்தன் வடிவழகனேயென்றமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ஆதி.

பல்லவி.

வாவாமைந்தா வண்மைசேர்முகுந்தா (வா)

அநுபல்லவி.

மாவாகுயர்ந்திட மாகதிமைசேர்ந்திட (வா)

சரணங்கள்.

பண்டிலில்நான்கனைக் கண்டனைழுதுனை
விண்டபடிபுகழ மண்டலம்வந்தாய்மகிழ (வா)
எந்தன்குறைநீங்க விந்தைப்பெயரோங்க
சிந்தையுற்றகலக்கம் இந்நாளில்விலக்க (வா)
வேதமுதலாகத் தீதிலாதறிவாக
நீதிசேர்குருவிடம் ஓதியதுரையெனிடம் (வா)

வசனம்.

பாலகா உன்னை ஆசானிடமாகக் கல்வி கற்கும்பொருட்டு அனுப்புவித்தது முதலிதுவரை கற்றுணர்ந்ததை உன்வாக்கினாற் கேட்டகமகிழ்வுற இங்கழைத்தனம் விபரமாய்க்கூறுவாயாக.

தேவதாசன் வசனம்.

பிதா, தங்களுந்திரத்திற்சனித்த எனக்கு வாராதவிதொன்றுளதோ, சகலசாஸ்திரங்களிலும் தேர்ச்சியடைந் திருக்கின்றேன் (அதாவது) ரிக்-எசுர்-சாமம்-அதர்வணம்-என்ற நான்குவேதமும் அன்றியு முபவேதங்களாகிய,

ஆயுள்வேதம், அருத்தவேதம், தனுர்வேதம், காந்தருவவேதம், நான்கும், வேதாந்தம், வைசேடிகம், பாட்டம், பிரபாகரம், பூர்வமீமாம்ஸை, உத்தரமீமாம்ஸைஎன்று கூறப்பட்ட ஆறுசாஸ்திரமும்,

மச்சியம், கூர்மம், வராகம், வாமனம், பிரமம், வைணவம், பாகவதம், சைவம், இலிங்கம், பௌடிகம், நாரதீயம், காருடம். பிரமகைவர்த்தம், காந்தம், மார்க்கண்டேயம், ஆக்கினேயம், பிரமாண்டம், பதுமம், என்று விள்ளக்கூடிய பதினெண்புராணமும். அக்கரவிலக்கணம், இலிகிதம், கணிதம், வேதம், புராணம், வியாகரணம்,

42



நீதிசாஸ்திரம், சோதிடசாஸ்திரம், தருமசாஸ்திரம், யோகசாஸ்திரம், மந்திரசாஸ்திரம், சகுனசாஸ்திரம், சிற்பசாஸ்திரம், வைத்தியசாஸ்திரம், உருவசாஸ்திரம், இதியாசம், காவியம், அலங்காரம், மதுரபாடனம், நாடகம், நிருத்தம், சத்தப்பிரமம், வீணைவேணு, மிருதங்கம், தாளம், அத்திரபரீட்சை, கனகபரீட்சை, இரதபரீட்சை, கஜபரீட்சை, அசுவபரீட்சை, இரத்தினபரீட்சை, பூமிபரீட்சை, சங்கிராமவிலக்கணம், மல்லயுத்தம், ஆகருடணம், உச்சாடனம், வித்துவேடணம், மதனசாஸ்திரம், மோகனம், வசீகரணம், இரசவாதம், காந்தருவவாதம், பைபீலவாதம், கவுத்துகவாதம், தாதுவாதம், காருடம், நட்டம், முட்டி, ஆகாயப்பிரவேசம், ஆகாயகமனம், பரகாயப்பிரவேசம், அதிரிசயம், இந்திரஜாலம், மகேந்திரஜாலம், அக்கினிஸ்தம்பம், ஜலஸ்தம்பம், வாயுஸ்தம்பம், திட்டிஸ்தம்பம், வாக்குஸ்தம்பம், சுக்கிலஸ்தம்பம், கன்னஸ்தம்பம், கட்கஸ்தம்பம், அவஸ்தைப்பிரயோகம், என்ற அறுபத்துநான்கு கலைக்ஞானமும்,

ஆதுலர்க்குச்சாலை, ஓதுவார்க்குணவு, அறுசமயத்தார்க்குண்டி, பசுவுக்குவாயினை, சிறைச்சோறு, ஐயம், தின்பண்டம் நல்கல் அறவைச்சோறு, மகப்பெறுவித்தல், மகவுவளர்த்தல், மகப்பால்வார்த்தல், அறவைப்பிணஞ்சுடுதல், அறவைத்தூரியம், சுண்ணம், நோய்மருந்து, வண்ணார், நாவிதர், கண்ணாடி, காதோலை, கண்மருந்து, தலைக்கெண்ணெய், பெண்போகம், பிறர்துயர்காத்தல், தண்ணீர்ப்பந்தல், மடம், தடம், சோலை, ஆவுரிஞ்சுதறி, விலங்கிற்குணவு, ஏறுவிடுத்தல், விலைகொடுத் துயிர்காத்தல், கன்னிகாதானம், என்று நவிலக்கூடிய முப்பத்திரண்டு தருமமும்,

நிலம், நீர், தீ, காற்று, விசும்பு என்ற பூதமைந்தும், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற புலனைந்தும்,

வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம், என்ற கருமேந்திரியமைந்தும்,

மனம், புத்தி, அகங்காரம், சித்தம், என்ற கரணம்நான்கும்,

சுழுமுனை, இடை, பிங்கலை, காந்தாரி, அத்தி, சிகு, அலம்புடை, புருடன், குரு, சங்கினி, என்றநாடிபத்தும்,

ஜாக்கிரம், சொற்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம், என்ற அவஸ்தைஐந்தும்,

ஆணவம், மாயை, காமியமென்ற மலமூன்றும்,

சாத்துவிகம், இராசதம், தாமதம், என்ற குணமூன்றும்,

வாதம், பித்தம், சிலேட்டுமம், என்ற பிணிமூன்றும்,

அக்கினிமண்டலம், ஆதித்தமண்டலம், சந்திரமண்டலமென்ற மண்டலமூன்றும்,

காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம், இடும்பை, அசூசையென்ற விகாரம் எட்டும்,

மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை, என்ற ஆதாரம் ஆறும்,

இரத்தம், இரதம், சுக்கிலம், மூளை, தசை, எலும்பு, தோல், என்ற தாது ஏழும்,

கண், காது, மூக்கு, வாய், குதம், குய்யம் என்றவாயில் ஆறும்,

பிராணன், அபானம், உதானன், வியானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன், சமானன், என்றவாயு,பத்தும்,

அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம், என்றகோசம், ஐந்தும், இன்னும் மற்றகலைகளும் ஞானாசிரியர்மூலமாக ஐயமறக் கற்றிருக்கின்றேன்.

அரசன் வசனம்.

சபாஷ் பாலகா.

அரசன் வசனம்.

ஹே பிரதான், பாலன்கூறியவை யாவற்றும் கவனித்திரா என்ன குதூகலமாயிருக்கின்றது.

மந்திரி வசனம்.

வேந்தே, பிதா புத்திரர்களுக்குச்செய்யு முதவியாவது, திர்க்கமான வித்தியாப்பியாசஞ்செய்துவைப்பதொன்றே யென்ற நீதியை யுணர்ந்த தாங்கள் பாலகனை ஆசானிடம் கல்வி கற்கும்படியாய்ச் செய்தீர்கள் பாலன்.

(குறள்) "மகன்றந்தைக் காற்றுமுதவி இவன்றந்தை யென்னோற்றான்கொல்" என்றமனு நெறிக்கிணங்கக் கற்றுக்கொண்டனன்.

## தானம்செய்கிறபாகம்.

விருத்தம்.

சத்தியகீர்த்திகேளாய் தவயனிக்கெடுத்துரைத்த
வித்தையைக்கேட்டுணர்ந்த விருப்பினுற்றுனதர்மம்
பத்தியாய்ச்செய்யவேண்டும் பாரினிலிருப்போர்தன்னை
அத்திமேல்முரசமேற்றி யறைந்திவண்வரச்செய்வாயே.



வசனம்.

பிரதான் சிரேஷ்டா, எனதருந்தவமைந்தன் தேவதாசன் சிறந்தகல்வி சீக்கிரமுணர்ந்ததைக் கேள்வியுற்ற எனக்குச் சொல்லொணாப் புளகாங்கிதங்கொண்டன, ஆதலால் அந்தணர்-சோகி-ஜங்கம-பரதேசி-சந்நியாசி-ஏழையர்முதலியவர்களுக்குத் தானஞ்செய்ய விரும்பினன், ஆதலின் அன்னவர்களிங்குவரும்படியாக பேரிகை முழக்கச்செய்யும்.

மந்திரி வசனம்.

அவ்விதமே செய்கின்றேன் அரசே.

மந்திரி விருத்தம்.

ஆரடாசேவகாநீ யடைவுடன்யானைமீதே
பேரிகையதனையேத்திப் பெட்புறவறைந்தேயெந்த
ஆரினும்வாசமாகு முத்தம்வறிஞோர்தம்மை
நேரதாய்வரவேயிங்கு நிமிஷத்திற்செய்குவாயே.

வசனம்.

அடேசேவகா நமதிறைவர் தானஞ்செய்ய எத்தனித்தனரானதால் நீ மழைமதக்களிற்றின்மீது தானமுரசத்தையேற்றி யறைந்து பற்பல நாடுநகரங்களில் வாசஞ்செய்யும் அந்தணர் சந்நியாசி பரதேசி ஏழையர்முதலியவர்களைச் சீக்கிரம் அழைத்துவருவாயாக.

சேவகன் வசனம்.

பிரபு ஆக்ஞையின்பிரகாரம்.

சேவகன் வசனம்.

இதனால் அந்தணர் அருதி சோகிசங்கம பரதேசி சந்நியாசி யாகிய அனைவர்களுக்கும் தெரிவிப்ப தென்னவெனில், கோசலநாட்டிற் கதிபதியாகிய அரிச்சந்திரச் சக்கரவர்த்தியானவர், தமதுபுத்திரனாகிய தேவதாசன் பஞ்சவயதிலேயே சகலசாஸ்திர விற்பனனானதையுத்தேசித்து நித்திய தானதர்மத்தைப்பார்க்கினும் இன்று விசேஷமாய்ச் செய்வதினால் யாவர்களும்வந்து சேர்வீர்களாக.

வியாசகர் வருகிற தரு.

மாதவனேயென்ற வர்ணமெட்டு.

இராகம்-ஆரபி-தாளம்-ஆதி.

பல்லவி.

வந்தனரே மிகு
வறுமையுளோரெல்லாம் பெருமையுடன்மகிழ்ந்து. (வ)

அநுபல்லவி.

சந்ததம்பூரண நிலைதனைநாடி
சாம்பசதாசிவனே யெனப்பாடி (வ)

சரணங்கள்.

அந்தணரோமை யகுதிபரதேசி
அடர்சங்கமசேர கியர்வனவாசி
சந்தனந்திருநீ றின்பமாய்ப்பூசி
தற்பரவஸ்துவைச் சார்புடன்பேசி (வ)

இடுப்பினிலங்கோ டிருக்கியேபுரித்து
எழில்மெய்யிற்காவிவஸ் திரங்கடரித்து
கொடுப்பவர்புகழ்தனைக் குணமுடன்விரித்து
கூடியேஆனந்தங் கொண்டார்ப்பரித்து (வ)

கழுத்திலுருத்ராக்ஷ மணிவடந்துலங்க
கையினிற்செபமணி பைபிரம்பிலங்க
அழுத்தமுளவினைக ளானதுகலங்க
ஹராஹரவெனுஞ்சத்தம் அவனியில்முழங்க (வ)

பெண்பிள்ளைகளைப் பிரீதியாய்க்கூட்டி
பேரின்பஞானத்தைப் பெருமையாய்க்காட்டி
தண்டுகமண்டலம் தடங்கையிற்கோட்டி
சத்தியவரிச்சந்த்ர தாஷ்டிகளுட்டில் (வ)

அரசன் வசனம்.

மந்திரி வியாசகர் யாவரும் வந்திருக்கின்றார்களா.

மந்திரி வசனம்.

வந்திருக்கின்றார்கள் பிரபு.

அரசன் வசனம்.

மிகவுங் குதூகலம் அமைச்சே தனது மாதாவும், எனது பத்தினியுமாகிய கன்னமாபுரி மன்னன் செல்வியானவள் அன்னவளுடைய அருமைச்சுதனுகிய தேவதாசன் வித்தையின் தேர்ச்சியைக்கேட்டு,

(குறள்) ஈன்றபொழுதிலினிதுவக்குந் தன்மகனைச்
சான்றோனெனக்கேட்டதாய்,



என்றநீதியின்படி சந்தோஷமடைவதற்காகவும், தானஞ்செய்ய வேண்டியதற்காகவும், தாதியிடம் கூறி அன்னவளைச் சீக்கிரத்தில் அழைத்துவரச்செய்யும்.

மந்திரி வசனம்.

அவ்விதமே செய்கிறேன் அரசர்க்கரசே.

மந்திரி வசனம்.

ஹே, மதிமுகத்தாதியே நீ அந்தப்புரத்திற்குச் சென்று நமது மஹாராஜா அவர்களின் பத்தினியாகிய மாதுஸ்திரீயை அன்னவர ழைத்துவரச்சொன்னரெனச் சொல்லி விரைவாக அழைத்துவா.

தாதிவசனம்,

உத்தரவுபோல அழைத்துவருகின்றேன் பிரபு.

தாதி வசனம்.

அம்மணி வந்தனஞ்செய்கின்றேன்.

சந்திரவதி வசனம்.

கல்யாண், தாதிநீ அலர்ந்தவதனம் வாய்ந்தவளா யிங்குவந்த காரணம்யாது.

தாதிவசனம்.

தாயே, தங்களை மகாராஜா அவர்கள் அழைத்துவரும்படி கூறினர்.

சந்திரவதி வசனம்.

எதுவிஷயத்திற்காக.

தாதி வசனம்.

எமதரசியே, தமது புத்திரசிகாமணியானவர் புரந்தரன்சமுகம் வந்திருக்கின்றனர் தம்மை யழைத்துவரச் சொன்னவிபரம் அறிகிலேன்.

சந்திரவதி வசனம்.

இதோ வருகின்றேன்.

# சந்திரவதிவருகிறபாகம்.

வாடா மன்னு வாடா நாமென்ற வர்ணமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ஏகம்.

பல்லவி.

மன்னனிடஞ்சென்றுவர வாராய்சகியே (மன்)

அநுபல்லவி.

நன்னகரையாளுமெந்தன் நாயகனுன (மன்)

சரணங்கள்.

இன்றுனந்தசாகரத்தில் யான்மூழ்கினேனே
குன்றுதபுகழுடைய கொற்றவர்போற்றும் (ம)

வசனம்.

தாதி இதோ இறைவன் சமுகம் நாடலானேம்.

சந்திரவதி சொல்கிறதால் விருத்தம்.

ஆவியின்றியுடலில்லையுடலின்றியாவியில்லை யதுபோற்பத்தானும்போ
தேவியெனுமிருவர்கள்சேர்ந்தோ ருருவாஞ்செழுமலருந்தே [ல
மேவியவரிருவருமேநள்ளாதமூரன் செய்யில்விளங்குமெய்யும்
சிவனுமொன்றேடொன்றுபோராடியழிந்தகொக்குஞ்செப்புங்காலே

வசனம்.

சகி, இயாதொரு சுத்தசைதன்யமாகியும், ஒப்புவமையில்லாதா கியும், அணுவுக்குளணுவாயும், விளங்குகின்ற பிரமத்தினது கிருபா கடாக்ஷத்தால் பங்கயப் பொகுட்டிலுறை புங்கவனுல் இப்பிரபஞ்சத் தினிடமாகப் படைக்கப்பட்ட சகல ஜீவராசிகளுக்கும் உயிரில்லா விடில் சரீரம் நிலைப்பதரிதே சரீரமில்லாவிடில் பிராணனு மவ்விதமே. அதுபோலாக, பர்த்தா மனைவி யென்ற இருவரும் ஆவியும் உடலும் போலும், புட்பமும் மணமும்போலும், நேசித்திருக்க வேண்டுமென் றும் அவ்விதமில்லாவிடில் ஆவியும் மெய்யும் போராடினுல் இரண்டு மெவ்விதம் அழிந்துபோமோ அவ்விதமாமென்றும் மனுஸ்மிருதி முறையிடுவதால் இன்று யெனது பிராணேசரானவர் உன்னிடம் என்னை யழைத்துவரும்படி ஆக்ஞாபித்த காரண மின்னதெனத் தெரிந்திலேன். ஆகையால் அவருத்தரவை மறுக்காது அவர் சமு கம் வரலாயினேமல்லவோ நாமிருவரும்போய் வணங்கி அழைத்த காரணத்தை இன்னதெனத் தெரிந்துகொள்வோம் வா.



சந்திரவதி வணக்கம்.

சங்கரசிவசந்த்ரசூட வென்றமெட்டு.

இராகம்-கல்யாணி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

எந்தன்பிராணசுந்தராகின் எழில்மலரடிசரணம்சரணம் (எந்)

அநுபல்லவி.

மந்தரபுயாசலனே மன்னர்கிருபாகரனே
வையகஞ்செங்கோல் செய்யுந்துய்ய (எந்)

சரணங்கள்.

கருமமேயோருருவமாகச் சார்ந்துதித்ததயாநிதியே
விரும்புநீரிங்கெனையழைத்த விபரமின்னதெனத்தெரிய
விளம்புவீரோ தளம்புகழும் (எந்)

வசனம்.

பிராணேசா, அந்தப்புரத்தில் சகிஜனங்களுடன் உல்லாசமாக விற்றிருந்த வென்னை தற்சமயம் இங்கழைத்த காரணம் யாதோ.

அரசன் வசனம்.

பிராணசகி, நமது அருந்தவக் கண்மணியாகிய பாலன், தேவ தாசன் சகல சாஸ்திரங்களிலும் நிபுணனுனதை அன்னவன் வாக்கி னுற் கேள்வியுற்ற யான் மிகவும் குதூகலனுகி யாதொரு வறியோர் களுக்குத் தானஞ்செய்ய வுத்தேசித்திங் கழைத்ததேயன்றி வேற ன்று.

சந்திரவதி வசனம்.

கண்ணுளா, தங்கள் சித்தத்தின்படியே சித்தமாயிருக்கின்றேன்.

தேவதாசன் போற்றி.

விருத்தம்.

ஆதியாஞ்சிவனைநோக்கி யண்ணலுந்தாமுமன்பாய்
கோகிலாத்தவமியற்றிக் குவலயம்புரப்பதற்கே
நீதியாயென்னையின்ற நீள்புகழுடையதாயே
சோதிமாமலர்நேருந்தன் சுந்தரப்பாதம்போற்றி.

சந்திரவதி வசனம்.

கல்யாண் பாலகா.

# தானம்செய்கிறபாகம்.

விருத்தம்.

சந்திரதயன்புரிந்த தவத்தின்லவதரித்த
சந்திரவதியேயெந்தன் றையலேசொல்லைக்கேளாய்
சுந்தரஞ்சேர்நம்பாலன் சுருதிகளுணர்ந்ததாலே
மந்திரபூர்வந்தானம் வழங்குவோம்வருகுவாயே.

கைசஜாதடாலா என்றவர்ணமெட்டு.

* இராகம்-நாபி-தாளம்-ஆதி.

பல்லவி.

தானஞ்செய்ய வாராய்பெண்ணே
சந்திரவதியே கண்மணே (தா)

அநுபல்லவி.

நானிலமும்விரி வானகன்னபுரி
மானகராள்மன்ன னைவன்மகளே-யன்ன (தா)

சரணங்கள்.

மோனநிலை புணர்வோர்க்கும்
ஞானபர தேசியர்க்கும்
கானமீதிலக லானதவயோக
மானவராதியர் மானசவேதியருக்கும் (தா)

பாலகனந் தேவதாசன்
குலமான்மழு வேந்திசன்
சிலனல்லருளால் சாழவுங்குருவால்
ஞாலமதின்மேலே மூலமறையுணர்ந்ததாலே (தா)

வசனம்.

கண்ணாட்டி நாம் குதூலகமாக வேதியர் மாதவர் சந்நியாசியர் ஏழை பரதேசிமுதலானவர்களுக்கு உன்மனோ பீஷ்டப்படியும் என தபிப்பிராயப்படியும் முப்பத்திரண்டுவித தர்மமும் வழங்குவோம் எழுந்திரு.

சந்திரவதி வசனம்.

உத்தரவுபோலவே பிரபு.



சந்திரவதி தரு.

திருக்கடையூரில்வாசா வென்றமெட்டு.

* இராகம்-பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

கோரியபடியேகோனே சீருடனேசெய்வீர்தானே (கோ)

அநுபல்லவி.

ஆரணமுணர்ந்ததீரா பாரிலுள்ளோர்க்குபகாரா
வீரசூரகெம்பீரா சூரியகுலத்துதாரா (கோ)

சரணங்கள்.

நாலுவேதம்ஆறுசாஸ்த்ரம் சிலமாய்நன்னூலின்சூஸ்த்ரம்
பாலனுமுணர்ந்ததாலே சாலவுந்தானமென்மேலே (கோ)

வசனம்.

பிரபு. (குறள்.) "பழியஞ்சிப்பாத்தூ னுடைத்தாயின் வாழ்க்கை, வழியஞ்ச லெஞ்ஞான் றுமில்" பிரபஞ்சத்தினிடமாகச் செனிந்த யாதாமொருவர் பழிபாவத்திற்கஞ்சி திரவியம் சம்பாதித்து பிரமச்சாரி, வானப்பிரஸ்தன், சந்யாசி, அந்தணர், வறியவர், இரவலர், தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், யாவர்க்கும் கொடுத்து மீதத்தை தானடைந்து கொள்வாராகின் அவர்களுடைய சந்ததியானது நிலைபெற்றிருக்குமென்பது மனுஸ்மிருதி யாதலால், தாம் கோரியபடிக்கு சோடசதானமும் செய்யப் பிரார்த்திக்கின்றேன்.

அரசன் வசனம்.

நல்லது கண்மணி.

அரசன் வசனம்.

மந்த்ரீ நமது தானசாலையில் வந்திருக்கும் பைராகி, அந்தணர், வறியோர், முதலியவர்களை நமது சமூகம்வரவழையும்.

மந்திரி வசனம்.

பிரபு இதோவந்திருக்கின்றார்கள்.

அரசன் வசனம்.

ஹே, வியாசகர்களே, நீதிசாஸ்திரப்படி யுங்களுக்குச் சோடச தானங்களும் செய்கின்றேன் பெற்றுக்கொண்டு சென்றுவாருங்கள்.

வியாசகர் வசனம்.

உத்தரவுப்படி பெற்றுக்கொள்கின்றோமரசே.

அரசன் வசனம்.

மந்த்ரீ, பொக்கிஷசாலையிற்சென்று திரவியங்களெடுத்துக்கொண்டு வரும்படிசெய்யும்.

மந்திரி வசனம்.

இதோ கொண்டுவரச்செய்கின்றேன்.

அரசன் வசனம்.

நல்லது மந்திரி.

மந்திரி வசனம்.

பிரபு இதோ திரவியம் வந்துவிட்டது.

அரசன் வசனம்.

ஹே. வியாசகர்களே இதோ சோடசதானமுஞ் செய்தேன் பெற்றுக்கொள்ளுங்கள்.

வியாசகர் வசனம்.

இதோ பெற்றுக்கொண்டோம் அரசே.

அரசன் வசனம்.

சந்தோஷந்தானே.

வியாசகர் வசனம்.

மிகவுஞ் சந்தோஷம் வேந்தே. எதாஸ்தானம் சென்று வருகின்றோம்.

அரசன் வசனம்.

அவ்விதமே சென்றுவாருங்கள்.

## விஸ்வாமித்திரர் இந்திரன் சபையில் வசிஷ்டரிடம் சபதங்கூறி வனச்சாரணுக்கு வரும் பாகம்.

விஸ்வாமித்திரர் தரு.

இராகம்-கமாசு-தாளம்-ஏகம்.

பல்லவி.

காசினியுள்ளோர்புகழ்நிதைபுரி கோசிகமுனிவந்தனன் (கா)



அநுபல்லவி.

மாசிலாவென்மாதவம்செய் வைதவமேவர்செய்தவர்
கோசமானபாவமென்போர் கொய்தவரொவருய்தவர் (கா)

சரணங்கள்.

தேவருமந்த மூவருமற்ற
யாவருமீ டாவரோ
கோபங்கொள்ளி லோவடைவைத்
தீபொறிசித றுதோதான் (கா)
இனியதவ முனிவரர்கள்
எவருமேவரு ளார்களோ
புனிதமில்லா வசுரர்கண்டு
போயொளிந்தி டார்களோ (கா)
இந்திராணி கொழுநனண்டை
இயம்பியசா தந்தனை
தந்திரமாய் முடித்திடவென்
றனக்குமொரு பாரமோ (கா)

விஸ்வாமித்திரன் வசனம்.

வாரீர் சீடர்காள்.

சீடர் வசனம்.

பிரபு வந்தனம்.

விஸ்வாமித்திரர் வசனம்.

கல்யாண், சீடர்களே நீங்களிருவரும் அயோத்திக்குச் சென்று அரிச்சந்திரனிடம் விஸ்வாமித்திரர் யாகஞ்செய்வதற்காக சில திரவியம் கேட்டுவரச்சொன்னாரென விளம்பி அன்னவனது பதில்மொழி தெரிந்துவாருங்கள்.

சீடர் வசனம்.

அவ்விதமே தெரிந்து வருகின்றோம் பிரபு.

## விஸ்வாமித்திரர்சீடர்கள் அயோத்திக்கு வரும்பாகம்.

சீடர்கள் வசனம்.

அடா சேவகா, அரசன் எங்கிருக்கின்றார்.

சேவகன் வசனம்.

சுவாமி சபாமண்டபத்தின் கண் வீற்றிருக்கின்றார்.

சீடர் வசனம்.

சேவகா, உட்செல்லலாமல்லவோ.

சேவகன் வசனம்.

பிரபூ. தடையின்றிச்செல்லலாம்.

சீடர்கள் வசனம்.

சேவகா, விஸ்வாமித்திரரது சீடர்கள் வருகிறார்களென்று அரசனிடத்தில் தெரிவிப்பாயாக.

சேவகன் வசனம்.

அரசே வந்தனம்.

அரசன் வசனம்.

கல்யாண், என்னவிசேடம்.

சேவகன் வசனம்.

மகராஜ் விஸ்வாமித்திரரது சீடர்கள் வருகிறார்கள் சமுகத்தில் தெரிவிக்கும்படி செப்பினர்.

அரசன் வசனம்.

நல்லது துவாரத்தின் கண் அதியுஷாராயிரு.

அரசன் வசனம்.

முனிஸ்ரேஷ்டர்களே வந்தனம்.

சீடர்கள் வசனம்.

கல்யாண்.

அரசன் வசனம்.

பிரபூ. தாமிருவருமிங்கு வந்த காரணம் யாது தெரிவிக்கவேண்டும்.

சீடர்கள் வசனம்.

ஹே இராஜபூஜிதா எமது குருவாகிய விஸ்வாமித்ர ரிஷியானவர் ஓர் யாகம் செய்யும்பொருட்டு தம்மிடம் சில திரவியங்கேட்டு வரும்படி ஆக்ஞாபித்தனர் அதற்காக இங்குற்றனம்.

அரசன் வசனம்.

அவ்விதமே தருகின்றேனென்றெனைச் சாற்றுங்கள்.

சீடர்கள் வசனம்.

நல்லதரசேசென்றுவருகின்றோம்.

அரசன் வசனம், அனேக வந்தனம்.



சீடர் வசனம், கல்யாண்.

சீடர் வசனம்.

அனேகவந்தனம் எமதுகுருவே.

விஸ்வாமித்திரர் வசனம்.

கல்யாண். சீடர்களே போய்வந்த விஷயாதி யாது.

சீடர்கள் வசனம்.

குருமகராஜ். தேவரீராக்ஞைப் பிரகாரம் அயோத்திக்குச் சென்று அரிச்சந்திரனிடம் யாகத்திற்கு திரவியங் கேட்டதில் தருகிறதாகச் சொல்லி யிருக்கின்றான்.

விஸ்வாமித்திரன் வசனம்.

மிகவும் குதூகலம் சீடர்காள். சமீபத்தில் வீற்றிருங்கள்.

சீடர் வசனம்.

நல்லது பிரபூ.

விஸ்வாமித்திரன் வசனம்.

ஹே சிஷர்காள் யான்கொண்ட வெண்ணம் இன்று நிறைவேறியது. நீங்களிங்குதானே யிருங்கள் யான் அயோத்திக்குச் சென்றுவருகின்றேன்.

சீடர் வசனம்.

தபோநிதியே வந்தனம்.

விஸ்வாமித்திரன் வசனம்.

கல்யாண்.

## விஸ்வாமித்திரர் அரசனிடம் வருகிற பாகம்.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

மண்டலம்புகழுங்காதி மைந்தனுயவதரித்தேன்
எண்டிசைதுதிவசிஷ்ட ரிகலினால்முனிவனானேன்
விண்டலமதனிற்சத்ய வேந்தனைப்பொய்யனாக்கக்
கொண்டதோர்விரதத்தோடிக் கொற்றவன்சபைவந்தேனே.

வசனம்.

மகா சிறப்புற்றோங்கிய கௌசிக தேசத்தை யரசாண்டுவந்த காதிமகாராஜனுக்குப் புத்திரனாக ஜநித்து கௌசிகனென்ற பெய

வைகுந்து அன்னவரால் திருமுடி புனையப்பெற்று இராஜ்யபரிபாலன மிழைத்துவரும் காலத்தில், ஒருநாள் குடிகளுக்குக் குடிலம் விளைத்த கோரவிலங்கினங்களைக் கொல்லும்பொருட்டு இரதகஜதுரகபதாதி யென்னும் நான்குவகைச் சேனைகளுடனும் எனது புத்திரர்கள் நூற்றுவருடனும் காட்டிற்சென்று வேட்டையாடி விலங்கினங்களை வென்று திரும்புங்கால் ஆங்கு தவமியற்றிக் கொண்டிருந்த வசிஷ்டரிஷியானவர் பசியினால் வருந்தும் எங்களைக் கண்ணுற்று காமதேனுவால் போஜனமளிக்கச் செய்தனன், அக்கால் எங்களது பசிதீர்த்த அப்பசுவாங் காமதேனுவைக் கைக்கொள்ள வேண்டுமென எண்ணிப்பிடிக்கத் தொடருகையில் அதனது ரோமங்களினின்று அனேக வீரர்களுற்பவித்து எனது சேனைகளியாவையும் துணித்து அக் காமதேனுவுடன் அந்தரத்திற் சென்றனர், அதைக் கண்டெனது குமாரர் நூற்றுவரும் இவ்வசிஷ்டனல்லவோ அக்காமதேனுவுடன் அந்தரத்திற் சென்றனர் அதைக் கண்டெனது குமாரர் நூற்றுவரும் இவ்வசிஷ்டனல்லவோ அக் காமதேனுவானது சேனைகளையழித்து நம்மையும் இம்விதத்ததெனக் கடுஞ்சினங்கொண்டு அன்னவனோடெதிர்த்துச் சமர்புரிந்தனர், உடனே அவ்வசிஷ்டர் கோபாவேசராய் தனது விழிக்கனலால் எனது புத்திரராகிய நூற்றுவரையும் பஸ்மீகரிக்கக்கண்ட யான்கடுஞ்சினமுற்று வில்லைவளைத்து நாணேற்றி அம்புகளைத்தொடுத்து அன்னவன்மீது விடுக்குங் காலையில் அவன் தனது அஸ்தத்திலுள்ள தண்டத்தை முன்னூன்றி யெதிர்க்க வென்றனன், அத்தண்டம் யான் பிரயோகித்த அஸ்திரமுதல் மற்றியாவையும் கபளீகரித்தும் எனது பலத்தையும் ஆகர்ஷணம் செய்யும் தன்மையை யறிந்த யான் இல்லறத்தில் யாதொரு பிரயோசனமில்லை. யெனமதித்து எனதரசாட்சியை மந்திரிவசம் ஒப்புவித்து தந்தை மேதுறவறம் பூண்டு வடதிசையை நண்ணித் தவமியற்றி தவத்தைக் கெடுக்கவந்த மேனகைக்குச் சாபமளித்துத் தென்றிசையையுற்று இவ்வரிச்சந்திரனது தந்தையான திரிசங்கு மகாராஜனுக் கந்தரசொர்க்கபதவி அளித்த என்னால் முடியாத தொன்றுளதா. ஆதலின் இந்திரன் சபையில் வசிஷ்டனிடம் யான் அரிச்சந்திரனை அரைநொடியிற் பொய்யனுக்குகிறேனென்ற சபதத்தை இன்றே நிறைவேற்றும் பொருட்டு இங்கு பிராப்தமாகினேன்.

யாரடா இங்கிருக்கின்றவன்

(சே-வ-ம்.) பிரபு வந்தனம்.

(வி-வ-ம்.) கல்யாண். சேவகா.



63வது பக்கம் அரசன்விஸ்வாமித்திரரைசேவிக்கிறபாகம்



விஸ்வாமித்திரர் வசனம்.

அடா சேவகா விஸ்வாமித்திர மகாரிஷி வருகின்றாரென விரைவுடனுனது வேந்தனிடம் தெரிவிப்பாயாக.

சேவகன் வசனம்.

இதோ தெரிவிக்கின்றேன் பிரபூ.

சேவகன் வசனம்.

மகாராஜ் வந்தனம்.

அரசன் வசனம்.

கல்யாண் சேவகா என்னவிசேடம்.

சேவகன் வசனம்.

பிரபூ விஸ்வாமித்திரமகாரிஷி இதோ வருகின்றார்.

அரசன் வசனம்.

ஹே, மந்திரி வீரியா, விஸ்வாமித்திரமகாரிஷி வருகின்றாராம். அன்னவரை யெதிர்கொண் டழைத்து வருவோம் வாரும்.

மந்திரி வசனம்.

---

## அரசன் விஸ்வாமித்திரரை அஞ்சலிசெய்யும் பாகம்.

அரசன் விருத்தம்.

ஞானசின்மயனேபோற்றி நற்கதியருள்வாய்போற்றி
மோனநின்மலனேபோற்றி முழுமுதலானேப்போற்றி
கானகவாசாபோற்றி கமண்டலக்கரத்தாய்போற்றி
தீனமாமுனிவரோற்றுந் தேசிகாபோற்றிபோற்றி.

கைநாமோரிரோ வென்றவர்ணமெட்டு.

* இராகம்-சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

நாதாவந்தனம்தவமுநாம் நாதாவந்தனம்பவநாம் (நா)

அநுபல்லவி.

மாதாமரைமலர்கன் மங்கைபாகவினாசிகா (நா)

சரணங்கள்.

எந்தைதனக்குஅன்னாள் விந்தைச்சொர்க்கங்கொடுத்த
வழில்மலர்ப்பாதா யாவரும்பணி
எழில்மலர்ப்பாதா இணைமணி எழில். (நா)

பந்தபாசக்கடலைத் தந்திரமாய்க் கடந்த
பக்தியுள்ளோனே ஞானமுனைர்
பக்தியுள்ளோனே யோகந்தனிற் பக்தி (நா)

வசனம்.

பிரபோ வந்தனம்.

விஸ்வாமித்திரர் வசனம்.

கல்யாண்.

மந்திரி வசனம்.

அனேகவந்தனம் பிரபோ.

விஸ்வாமித்திரர் வசனம்.

கல்யாண்.

சந்திரவதி வணங்குதல்.

விருத்தம்.

புண்ணியவுருவேஞான பூரணகுருவேயெங்கும்
கண்ணியம்படைத்திலங்கும் கர்த்தனேமுத்தர்போற்றும்
தண்மலர்ப்பாதனேயந் சடிலமாதவனேதூய
வெண்ணிலாவதனனேயான் வேண்டினேனருள்செய்வாயே.

அழிலோமேதரோமந்தவா என்றமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ஆதி.

பல்லவி.

மாதவமுனி நாதனேசரணம் (மா)

அநுபல்லவி.

வேதம்புகழுமாதி விமலன்றனையனைய (மா)

சரணங்கள்.

அண்டியபெயினாயே ஆதரிக்குமிறையே
தண்டுகமண்டலங்கொள் தடங்காருணிகயே (மா)

பிணியகற்றுமருந்தே பேரின்பநற்குருந்தே
மணிமந்த்ரமௌனியே வாதகுணமகிலயே (மா)



கருணைவாரிதியே காளகபதியே
பொருந்திரிவன்வரப் புண்ணியமென்செய்தேனோ (மா)

(வ-ம்.) முனிநாதா வந்தனஞ்செய்கின்றேன்.

(வி-வ-ம்.) கல்யாண்.

தேவதாசன் வணங்குதல்

விருத்தம்.

கருணையின்வடிவேஞானக் கடலெழுமமுதேதூய
சுருதிதேர்முதலேவேணி சூடியசிரனேஜோதி
குருநிலையறிந்தகோவே கோமுனிவோர்கள்தேவே
திருவுறுமுமதிரண்டு சேவடிக்கடிமையானே.

அரோமதுபானமே என்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

தவமுனிவோரே சரணம்சரணம்(தவ)

அநுபல்லவி.

பவமதையகற்றும் பரமனையனைய(தவ)

சரணங்கள்.

தாங்களிவண்வரத் தவமென்செய்தேனோ
தேங்கமழ்வலர்தனைச் செஞ்சடைமிசைபுனை (தவ)

பாலனென்பாக்யமே பாக்யந்தங்களை
சீலமுடன்கண்டின்றே ஜென்மாபல்யனானேன் (தவ)

(வ-ம்.) பிரபூ வந்தனஞ்செய்கின்றேன்.

(வி-வ-ம்.) கல்யாண்.

அரசன் வசனம்.

முனிபுங்கவரே இச்சபா மணிமண்டபத்தில் வீற்றிருங்கள்.

(வி-வ-ம்.) அவ்விதமே வீற்றிருக்கின்றேன் அரசே.

அரசன் விருத்தம்.

முனிவர்குழாமனைத்தினுமுமடிபரவுமடிக்கமலமுநிவேமோனத்
தனிமுதலேபரிபூர்ண தயைபுரியுந்தற்பரமேசரணமைய
விசிஞறந்தொளியனையோர்பொருளாகவெண்ணிவிவணைய்துங்கார்யம்
கனிவுறவேயின்னதெனயான்றெரிய விக்கணந்திருக்கழறுவீரே.

பன்னகசயனாராஜா வென்றமெட்டு.

* இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

சுந்தரமிருந்தநாதா வந்தவிதஞ்சொல்வீர்நீதா (சு)

அநுபல்லவி.

கந்தரத்திலரவணி யுந்திரத்சிவனைப்பணி யுந் (சு)

சரணங்கள்,

கையிற்கமண் டலமிலங்க
மெய்யிற்பஞ்சா க்ஷரத்துலங்க
செய்யபுவித் தோ ஹுடுத்தி
ஐயனேயிங் கெணகத்தி(ஐய) (சு)

முன்னவர்செய் மாதவமோ
இந்நிலஞ்செ யுந்தவமோ.
பன்னகசா லயிலிருந்தே
நன்னயத்தடி வந்துறந்தே-நன் (சு)

வசனம்.

பிரபூ தாங்களிச்சிறியேனை நாடிவந்தகாரணம் யாதோ வறியிலேன் இன்னதெனக் கதனஞ்செய்யப் பிரார்த்திக்கின்றேன்.

விஸ்வாமித்திரர் வசனம்.

சொல்கிறேன் கேளும் அரசே.

விருத்தம்.

ஐயோத்திநாடதனை யொருகுடைக்கீழ்வி ளிருந்தரசாளரசேகேளாய்
மெய்யானவாரணநல் விதிவழியான்செய்யாகந் தனக்காய்மேனுள்த்
துய்யவென்சீடனையனுப்பிக் கேட்கவுநீகொடுப்பனெனச் சொன்ன
ஐயமிலாதென்கரத்திலன்புடனேயிந்நாட்டந்தருளுவாயே.[பொன்னை

வசனம்.

ஹே வேந்தே யானோர் யாகம்புரிவதற்காகச் சிலதிரவியம் உன்னிடம் கேட்டுவரும்படி என்து சீடர்களையனுப்ப அன்னவர்களிடம் நீ கொடுப்பதாகச்சொன்னையன்றே அவ்வண்ணமே அத்திரவியத்தை வணங்கிக்கொண்டு போவதற்காக விங்குற்றனம்.

(அ-ன்-வ-ம்) நல்லது பிரபு.



அரசன் விருத்தம்.

திருமணிவேணிபூண்ட தெய்வமாதவரேயானும்
அருமைசேர்சீடர்முன்னே யரியவேள்விக்காய்மேனுள்
பெருமையுற்றீவேனென்னப் பேசியபடியேசெம்பொன்
தருகிறேனிவளவென்று சாற்றுவீர்தபவுசெய்தே.

அடியேகுறிசொல்லி நீவாடியென்றமெட்டு.

* இராகம்-அடாணா-தாளம்-ஆதி.

பல்லவி.

செந்தாமரைமலர்நிகர்பாதா தவமுனிநாதா (செ)

அநுபல்லவி.

அந்தரம்வாழ்தேவர்களும் இந்தவுலகுள்ளவரும்
நொந்தோமெனக்கூறினிது கந்தவினைதீர்த்தருளும் (செ)

சரணங்கள்.

சிந்தைமகிழ் வாகநீர்யாகம்
செய்தவிர்ப் பாகம்-சிந்
இந்த்ரன்முதலோருக்கும் மந்திரமாதவருக்கும்
பந்தமுடனீவதற்கு கந்தபொன்னெவ்வளதற்கு (செ)

வேள்வியதற் குகந்திடுஞ்செம்பொன்
விளம்பிடில் யான்-வே
வித்தகரோஇத்தருணம் சித்தமகிழ்வுற்றிடவே
பத்தியோடகுவேனின்று பெற்றருள்வதுமிகநன்று(செ)

வசனம்.

மண்-பெண்-பொன்என்ற மூன்றுசையையு முற்றத்துறந்த முனிபுங்கவரே தாம்புரியும் வேள்விக்கு எவ்வளவு திரவியம்வேண்டும் அதன்விபரம் கூறுவீர்களாக.

விஸ்வாமித்திரன் விருத்தம்.

மருப்புறுமிபாளைமீது வலியவோர்வீரனேறி
இருந்தியேகரத்தினாலே யெறிகவண்சிலைபோந்தூரம்
பொருட்குவிப்பாயேயானால் புனிதமாய்ப்புரிவதான
அருட்பெறுமியாகந்தன்னை யான்முடித்திடுவென்மன்னா.

வசனம்.

ஹே வேந்தே, மும்மதம்பொருந்திய ஓர்யானையின்மீது வலிமை தங்கிய வோர்புருடனையேற்றி அவன்கையில் வெள்ளிக்கவண்கொடுத்து மாணிக்கக்கல்லைவைத்துச் சுழற்றிவிட்டெறிந்தால் எவ்வளவு உயரம்போகுமோ அவ்வளவு உயரம் பசும்பொன் குவிப்பாயேயானால் யான்புரிவதானயாகம் பூரணமாய் நிறைவேறும்.

அரசன் தரு.

இதுவோ பெரிநீந்திடுவே யென்ற மெட்டு.

* இராகம்-காபி-தாளம்-ஆதி,

பல்லவி.

முனிநாதனேதாம் மொழிந்தபடியீகுவேன் (முனி)

அநுபல்லவி.

புனிதமாகியபதம் பொற்பாகயான்பணிந்தே (முனி)

சரணங்கள்.

விண்ணுலகத்தவரும் வியந்திடமாதவஞ்செய்
அண்ணலேஅன்பாக அடியேன்பவமதுகொய் (மு)

சேவித்தடிப்போரிடர் தீர்க்குமுதாரனே
மாவித்தகனேதிரு மாமிகர்செம்பிரானே (மு)

அவனிதனிலேமுன் ருசையுந்துறந்தோனே
கவனமாய்நீர்செய்வேள்விக் கானசெம்பொன்னும்தானே (மு)

வசனம்.

பிரபூ தாங்கள்செய்யும் அருந்தவவேள்விக்குகந்த செம்பொன் கேட்டபடியே தடையின்றி இதோதருகின்றேன் திரவியக்களஞ்சியத்திற்கு வாருங்கள்.

அரசன் வசனம்.

அடேசேவகா நமதுபட்டத்து யானையைச் சீக்கிரமாகத் திரவியக்களஞ்சியத்திற்குக் கொண்டுவரும்படி பாகனிடத்திற் றெரிவிப்பாயாக.

சேவகன் வசனம்.

ஐயா யானைப்பாகரே உமைச் சீக்கிரமாகப் பட்டத்து யானையைக்கொண்டு திரவியக்களஞ்சியத்திற்கு வரும்படி மகாராஜா ஆக்ஞாபித்தனர்.



யானைப்பாகன் வசனம்.

இதோ வருகின்றேன் நீ முன்னமே செல்வாயாக.

(சே-ன்-வ-ம்) பிரபூ யானைப்பாகர் யானைசகிதம் களஞ்சியத்திற்கு வந்துவிட்டார்.

அரசன் வசனம்.

மந்திரீ இம்மகரிஷி கூறியவண்ணம் திரவியத்தைக் குவியலிடச்செய்யும்.

(ம-ரி-வ-ம்.) அப்படியே செய்தாய்விட்டதரசே.

அரசன் விருத்தம்.

சுந்தரமுனிவரேதாஞ் சுகிர்தமாய்ச்செய்யும்வேள்விக்
கெந்தன்பாற்கேட்டசெம்பொ னின்பமாய்க்குவியல்செய்து
தந்தனன்கருணைகூர்ந்து தடங்கரமேறறுக்கொண்டு
உந்தனல்யாகந்தன்னை யுய்யர்வுடன்முடிப்பீர்போற்றி.

(வ-ம்.) முனிஸ்ரேஷ்டரே தாங்கள் கூறியவண்ணமே செம்பொன் குவியல் செய்திருக்கிறது அதனைப் பெற்றுக்கொண்டு யாகத்தைச் சம்பூரணஞ் செய்யுங்கள்.

(வி-வ-ம்.) நல்லதரசனே.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

புரவலாநானிரந்த பொருள்கொடுத்தாயுன்போலக்
கருணைசேர்தருமவேந்தர் கடல்வளையுலகிலுண்டோ
இரணியமுந்தன்பாலே யிருக்கட்டும்யாகத்திற்குத்
திரமுடன்முகூர்த்தமிட்டுவந்து பின்னெடுத்துச்செல்வேன்.

(வ-ம்.) ஹே புரவலா இக்காலம் யான் கேட்டபடியே செம்பொன்குவியல் செய்துகொடுத்தாய் ஆ ஆ இவ்வுலகின்கண் உன்னைப்போலொற்ற தர்மவேந்தர்கள் ஒருவரையும் யான் பார்த்ததேயில்லை. யான் யாகத்திற்கு முகூர்த்தமிட்டு வந்து இப்பொன்னைப் பெற்றுக்கொள்கிறேன் அதுவரை யுன்னிடத்தில் வைத்திருக்கவேண்டும்.

அரசன் விருத்தம்.

இருடியர்முனிவ ரேழையர்பாவலர்
குருபுரோகிதர்மறை கூறுமந்தணரிவர்க்
கருள்பொருள்தமை யருள்பவர்மறுபடிபெறல்
பெருநரகுறுவர்நீர் பெறல்தகுமுனிவரே.

(வ-ம்.) ஹே முனிநாதா, தங்களைப்போலொற்ற இருடியர் முனிவரர் ஏழையர் பாவலர் குருபுரோகிதர் அந்தணர் இவர்களுக்குக் கொடுத்த பொருளை மீண்டும் தான் வாங்கி வைத்துக்கொள்வரேல் அவர்கள் ரௌரவாதி நரகத்தை யடைவார்களென்று சுருதி முறையிடுவதால் இப்பொருளை வைத்திருப்பதற்கு யானுரியனல்லேன். தாங்களே கொண்டு செல்வீர்களாக.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

நீயுரைத்தது ஞாயந்தா னாகிலும்நிகழ்த்துவேன்கேள்
வாயுமிக்களஞ்சியத்தி லிப்பொருள்முழுதும்வைத்தே
நேயமாய்ப்பூட்டிப்பூட்டி நினதுமுத்திரையோடெந்தன்
தூயமுத்திரையும்வைக்கிற் சம்மதந்தானேசொல்வாய்.

வசனம்.

ஹே அரசே, நீயுரைத்தது ஞாயந்தான் ஆகிலும் சொல்கிறேன் கேள் இதோ இருக்கிற களஞ்சியத்தில் இப்பொருள் முழுமையும் வைத்துப் பூட்டி உனது முத்திரையும் எனது முத்திரையும்வைத்தால் சம்மதமா அல்லவா.

(அ-ன்-வ-ம்.) சம்மதம் பிரபூ.

முனிவர் வசனம்.

ஹே இறைவனே, இதோ எனது திரவியம்வைத்த களஞ்சியத்தினிடமாக நான் முத்திரைவைத்துவிட்டேன். நீயும் வைப்பாயாக.

(அ-ன்-வ-ம்.) அப்படியே வைக்கிறேன்.

(மு-ர்-வ-ம்.) புரவலா, சென்றுவருகின்றேன்.

(அ-ன்-வ-ம்.) அனேகவந்தனம் பிரபூ சென்றுவாருங்கள்.

பொது வசனம்.

இவ்விதம் விஸ்வாமித்திரர் அரிச்சந்திரனிடம் விடைபெற்றுக்கொண்டு தேவேந்திரசபையில் சொல்லிவந்த சபதத்தை நிறைவேற்றும்பொருட்டு முன்னிருந்த வனச்சாரலையடைந்து அங்கிருக்கும் மிருகங்களையழைத்து சொல்லும்விதம் அறிவீர்கள் சபையோர்களே.

விஸ்வாமித்ரன் விருத்தம்.

வன்றிறல்விலங்கினங்காள் வழுத்துவேனென்றுகேளீர்
இன்றெழிலயோத்திக் கேகியேய்ந்தவணிருக்குகின்ற
நன்றிசேர்வளங்கள்ஜீவ ராசிகளிவையனைத்தும்
பொன்றிடும்உபாயஞ்செய்து போக்கெனவருகுவீரே.



வசனம்.

வாரீர் மிருகக்கூட்டங்களே நீங்களொருங்குகூடி அயோத்திக்குச்சென்று அங்குள்ள பயிர்முதலிய ஜீவசெந்துக்களைச் சின்னபின்னஞ்செய்து அதிசீக்கிரத்தில் எனதுசமுகம் வரவேண்டும்.

மிருகங்கள் வசனம்.

பிரபோ தமதுத்திரவின்பிரகாரம் சென்று வருகின்றோம்.

மிருகங்கள்வருகிறபாகம்.

இராகம் - தன்யாசி - தாளம் - ஆதி,

பல்லவி.

மிருகங்கள்வந்ததுவே வனத்தில்வாழும் (மிரு)

அநுபல்லவி.

மருமமுள்ளகோசித மாமுனிசொற்படியே
கருமேகம்போற்றிரண்டு காற்கதிமிகக்கொண்டு(மிரு)

சரணங்கள்.

அரிகரிபுலிகலை யாளிகரடிபன்றி
எரிமுகக்கவிமுயல் பெருமைநரிகளென்னும்(மிரு)

மிருகங்கள் அயோத்திநாட்டின்வளத்தை
யழிக்கும்விதம்.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

செழித்தவயோத்திநாட்டின் வளத்தைமிருகங்கள்வந்
தழித்திடத் தணிந்ததுவே
ஆடுமாடுகள்காவ லாளிகளையுங்கொன்றே
ஓடுங்குருதி யுண்டதே
நன்செய்ப்பயிர்களையும் புன்செய்ப்பயிர்களையும்
பஞ்சனைத் தாவிவிட்டதே
சோலைதடாகமெரி சாலைசித்ரச்சாவடி
தூள்படச் செய்ததுவே

# குடிகள் வருந்தும் பாகம்.

இராகம்-நாதநாமகிரியை-தாளம்-அடதாளம்,

கண்ணிகள்.

என்னசெய்வோமினியேதுசெய்வோ மையோதெய்வமே-நாங்கள்
முன்னமுலகினிலென்னகுறை செய்தோம்தெய்வமே
காவலாளிகளுமாடு யாடுகளும்போச்சுதே-நல்ல
காவனமேரிதடாகங் கிணறுகள்போச்சுதே
தோட்டந்துறவுகளிட்ட முள்ளவேலிபோச்சுதே-ஐயோ
நாட்டரியதலாகன்மர மாடுகாற்போச்சுதே
நன்செய்ப்பயிர்களும்புன் செய்ப்பயிர்களும்போச்சுதே-ஐயோ
ரஞ்சிதமானகரும்புகள் நாசமாய்ப்போச்சுதே
காட்டின்மிருகத்தின்தாஷ்டிகந் தானென்னதெய்வமே-இந்த
நாட்டினிலெவ்வண்ணம் நாங்கள்வசிப்பதுதெய்வமே
உண்ணும்பொழுதினுமுற்றிடும் போதினும்தெய்வமே-எங்கள்
பண்ணும்வயிறு பகபகவென்குதேதெய்வமே

வசனம்.

ஐயோ தெய்வமே இக்கொடுமைக் கென்செய்வோம்.

தம்புக்கவண்டன் வசனம்.

அண்ணமார்களே இக்கமுதுகொண்டிருப்பதில் பிரயோசனமி ல்லை எல்லோரும் அரசனிடத்திற்சென்று தெரிவிப்போம்வாருங்கள்.

(குடிகள்-வ-ம்.) நல்லது தம்பி.

தம்புக்கவண்டன் வசனம்.

அண்ணமார்களே இதோ ஆசாரவாசலின்கண் வந்துவிட்டோ ம் இங்குகட்டியிருக்கும் அசையாமணியை யடியுங்கள்.

அரசன் வசனம்.

ஹே பிரதான் ஸ்ரேஷ்டா என்ன ஆச்சர்யமாக விருக்கின்றது நம் ஆசாரவாசலின் கண் கட்டியிருக்கும் அசையா மணி ஓயாதடிபடு கின்ற காரணம் தெரியவில்லையே.

(ம-ரி-வ-ம்.) சென்று பார்த்துவருவோம் வாருங்கள் அரசே.



சேவகன் வசனம்.

பிரபூ குடிகளெல்லாம் இரத்தக்காயத்தோடு அல்லோல கல்லோலமாக அழுதுகொண்டு மணியை யடிக்கின்றார்கள். அதன் விபரத்தைத் தெரிவிக்கவந்தேன்.

அரசன் வசனம்.

மந்த்ரீ விர்யா! என்ன அநீதம் சீக்கிரம் வாரும்.

குடிகள் விருத்தம்.

எட்டிலோர்கடமைவாங்கி யெழில்பெறுஞ்செங்கோலோச்ச
மட்டிலாப்புகழ்படைத்தே வாரிசூழ்கிலெம்மைப்
பெட்டியுட்பொருள்போற்காக்கும் பிரபலவரசேயிக்காட்
பட்டிடுந்துன்பந்தன்னைப் பகரவும்போமோபோற்றி.

(வ-ம்.) அரசர்கட்கரசே வந்தனம் செய்கின்றோம்.

(அ-ன்-வ-ம்.) கல்யாண் குடிகளே.

விருத்தம்.

மிக்கதுன்பமடைந் தனமென்றுவிள்
தக்கதோர்குடிகாள் தன்றன்மையை
நெக்குருகிப்புலம் பிடாதென்னிட
மிக்கணத்தியம் பிடுவீர்களே.

(வ-ம்.) எந்நாளு மடையாத துன்பமின் றடைந்தோமென வியம்பிய குடிகளே இத்துன்பமெக் காரணத்தாலுற்ற தியம்புங்கள்.

குடிகள்வருகிற விருத்தம்.

அரசர்கட் கரசேகேளு மடவிவாழ் மிருகக்கூட்டம்
திரமிகுத் தனுகிராட்டிற் சிவசெந் துக்களோடு
மாமுதல் வாவியேரி வனம்விளை பயிர்களெல்லாம்
பாவியே யழித்ததென்ன பண்ணுவோ மினிமேலையோ

ஐயையோநானென்ன செய்வேண்டாவென் றமெட்டு.

* இராகம்-சாபி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

| | |
|---|---|
| ராஜாதிராஜ | மகாராஜனே |
| பூசுரர்புகழும் | ப்ரகாசனே |
| நாங்களிட்ட | பயிராரிராஜனே |
| வேங்கைமுதல்மிரு | கங்கள்ராஜனே |

பங்கஞ்செய்தது — மல்லால்ராஜனே
எங்களிலனே — கரையும்ராஜனே
சங்கையறக்கொன்ற — தின்றுராஜனே
அங்கதற்ககப் — படாதுராஜனே
இங்குமுறையிட — வந்தோம்ராஜனே
துங்கமிகயோத்தி — நகர்ராஜனே
இவ்விதமெங்களுக் — குற்றமல்ராஜனே
எவ்விதமிவிட — முய்வோம்ராஜனே
இந்தப்படி — நடக்கராஜனே-நீ
சொன்னபிழைசெய் — திரோராஜனே
செங்கோல்வழு — வினீரோராஜனே
எங்களிடர்தீர்க்க — வேண்டும்ராஜனே

வசனம்.

நவகண்டங்களையு மோர்குடைக்கீழாளும் வேந்தே எங்களுக் கிவ்வித இடரெய்துவதற்கு தாம் செங்கோல்வழுவினீரோ மற்றென்ன தாழ்வாய்நடந்திரோ வறிகிலோம்.

அரசன் தரு.

கூடிநீ முத்தம்கொடடீ யென்றமெட்டு.

* இராகம்-உசேனி-தாளம்-சாம்பு.

பல்லவி.

பாங்குபர்குடிகாள்பயப்படாதீர் — பயப்படாதீர்பயப்படாதீர் (பா)

அநுபல்லவி.

தேங்கமழ்சோலையும் — தீங்கிலன்னசாலையும்
ஓங்கும்நாணிலந்தன்னி — லுற்றதோர் உற்றதோர் உற்றதோர் (பா)

சரணங்கள்.

அன்னையென்முன்வந்தே — மன்னாதனிலேயிழந்தே
கண்ணில்நீர்பெருகிடக் — கதறிடும் கதறிடும் கதறிடும் (பா)
குடிகள் துன்பம்நோக்கியே — மிடிய ...னநீக்கியே
படியில்வாழ்வுறுவதென் — பாரமே பாரமே (பா)

வசனம்.

வாரீர் குடிகளே உங்களுக் கெவ்விதசங்கடம் எற்படினும் அதனை நிவர்த்திசெய்துவைப்பது எமதுகடமையன்றோ ஆகையால் நீங்கள் கவலையடையாதீர்கள்.



அரசன் விருத்தம்.

மந்திரிகுடிகள்விண்ட வார்த்தையைக்கவனித்திரா
இந்தமாதுன்பமின்னோர்க் கெய்துதற்கியாதுமுந்தன்
புந்தியைக்கேட்டுச்செங்கோல் புரிந்ததின்பயனோமற்ற
எந்தவாறாலோவித்தை யறிகிலேனியம்புவீரே.

வசனம்.

புத்தியிற்சிறந்த சத்தியகீர்த்தி நமதுகுடிக ளியம்பியவார்த்தையைக் கவனித்திரா இக்குடிகளுக் கிவ்விததுன்பம் எய்துவதற்கு உமதுபுத்தியைக்கேட்டு யான் அரசாகிசெய்த பயனாலேயோ மற்றெக் காரணத்தினாலேயோ அறிகிலேன் இதன்தன்மையை விபரமாக எடுத்துக்கூறுவீராக.

மந்திரி வசனம்.

புவனசக்ரேஸ்வரா. மண்டலத்தோர்கள் செய்த பாவம் மன்னவரைச்சேரும் திண்டிறல் மன்னர்செய்த தீங்கு மந்திரியைச் சேரும் என்ற நீதியை யுணர்ந்திருக்கின்றேனே யன்றி யுணராதவனல்ல. அவ்விதமிருக்க என்னுடைய புத்தியைத் தாங்கள் கேட்டதினால் குடிகளுக்கிவ்வித துன்பமுற்றதெனச் சொல்வது உசிதமல்ல. மற்றெக் காரணத்தாலுண்டாகிய தெனின், எனக்கொன்றுந் தோற்றவில்லை இதன் காரணம் ஒப்புவமையில்லாத பரப்பிரம்மத்திற்கே வெளியாகும்.

அரசன் வசனம்.

மந்திரீ நீ சொல்லிய வசன சாதுரியமெல்லாந் தெரிந்தேன். மற்றும் இதற்கியாது செய்வது?

மந்திரி நீதிநூல் விருத்தம்.

எந்தவேளையினும்கொக்கவர்துயர் கேட்டிடரிழைப்பவன்றனதேக[ச்
மைந்தனேஎனினும்வதைத்திடவொல் கான்மாக்களின்சுகநலமின்றி
இந்தணமற்றோர்பொருளிற்செலுத்தான் நீமொழிகனவிதும்புகலான்
தந்தைபோற்றுய்போ எவரையுங்காக்குந்தன்மையனேயிறையன்றோ.

(வ-ம்) என்ற அரசநீதிக்கிணங்க,

புராண விருத்தம்.

கட்டவேடருங் கோதுவைவேதுக
யிட்டமுங்கொடு கானகத்தெய்திநாம்
வேட்டையாடி விலங்கினமாய்த்துநம்
நாட்டையோம்பல் நலந்தருமன்னனே.

(வ-ம்.) பிரபூ நம் குடிகளுக்குத் துன்பம்விளைத்த கொடிய மிருகங்கள் வாழும் வனத்திற்கு தக்ஷணம் வேடுவர் சகிதம்சென்று வேட்டையாடி நமது குடிகளுக்கு க்ஷேமத்தைக் கொடுத்து நாட்டை ரக்ஷிக்கின்றதே நலமென யோசிக்கின்றேன்.

அரசன் வசனம்.

பிரதான், அவ்விதமாகவே செய்வோம்.

ஷை வசனம்.

வாரீர் குடிகளே யானொன்று சொல்கிறேன் கேளுங்கள்.

(கு-ள்-வ-ம்.) பிரபூ உத்தரவுப் பிரகாரம்.

அரசன் விருத்தம்.

மருதமுதலானநான்கு மாநிலம்வாழ்குடிகளே
பெருமிதமாய்நீங்கள்செய்த பெட்புறுநெற்பயிர்களைக்
கருதியேமிகவழித்தே கான்வாழ்மிருகங்களை
ஒருதிடமாய்ச்சென்று வாட்டியுங்கட்குய்ப்பேனலங்களே!

இதுவுமது.

ஆகையாலேநீங்களின் றவரவர்களில்லெய்தி
ஏகசித்தமோடுவான் டிரண்டி னுக்குப்பகுதியில்
ஆகமீதரவணிந்த வாதியானஜோதியை
மாகவனமாய்த்தொழுது வாழ்வீரின்பமாகவே.

வசனம்.

ஹே குடிகளே உங்களுக் கிடையூறு செய்த கொடிய விலங்கினங்களை தக்ஷணமே வதைசெய்யும்பொருட்டு வேட்டையாடச் செல்கின்றேன் நீங்களெனக்குக் கொடுக்கவேண்டிய பகுதியை இரண்டாண்டிற்கு மெடுத்துக்கொண்டு கடவுளைத்துதித்து வாழ்ந்திருங்கள்.

(கு-ள்-வ-ம்.) நல்லது மகராஜ்.

அரசன் வசனம்.

குடிகளே எதாவதானது சென்று வாருங்கள்.

(கு-ள்-வ-ம்) அனேக வந்தனம் அரசே.

(அ-ன்-வ-ம்.) கல்யாண்.



அரசன் விருத்தம்.

மந்த்ரியேசொல்லக்கேளாய் மாநகர்நாட்டினுள்ள
அந்தளிர்ப்பயிர்கடம்மை யழித்தவல்விலங்கினத்தைச்
சுந்தரவேட்டையாடித் துணிப்பதற்காகநம்மன்
தந்திரவேடரிங்கே சடுதியில்வரச்செய்வீரே.

வசனம்.

மந்த்ரி வீர்யா நமது நாடு நகரினுள்ள பயிர்களையழித்த விலங்கினங்களை வேட்டையாடி வெல்லும்பொருட்டு நமது குறிஞ்சி நிலத்திலிருக்கும் வேடர்களை யிங்கு வரச்செய்வீராக.

மந்திரி வசனம்.

இதோ வரச்செய்கின்றேன் இறைவனே.

மந்திரி வசனம்.

அடே சேவகா நமது மகாராஜா வேட்டையாடச் செல்லவேண்டியிருப்பதால் குறிஞ்சிவன வாசர்களாகிய வேடுவர்களை அதிசீக்கிரத்தில் அழைத்துவா.

சேவகன் வசனம்.

பிரபூ உத்தரவுப் பிரகாரம் சென்றழைத்து வருகின்றேன்.

சேவகன் வசனம்.

யாரடா இந்தக் குறிஞ்சிநிலத்தில் வசிக்கும் வேடுவர்காள்.

வேடுவர் வசனம்.

வாரீர்சேவகரே யாங்கள்தான் இந்நிலத்தில் வசிக்கும் வேடுவர்கள்.

சேவகன் வசனம்.

அடா வேடுவர்களே மகாராஜா உங்களை ஆயுதபாணிகளாக அழைத்துவரும்படி ஆக்ஞாபித்திருக்கின்றார் சீக்கிரம் என்னுடன் வாருங்கள்.

வேடுவர் வசனம்.

உத்தரவுபோ லிதோ வருகின்றோம்.

## வேடுவர்கள் வருகிறபாகம்.

வேடர் விருத்தம்.

சேவகன்சொல்லக்கேட்டுத் திடமுளவேட்டைக்காரர்
ஆவலாயெழுந்திருந்தே யவரவராக்ரமித்து
மேவருமயோத்திநாட்டை மேன்மையாய்செங்கோலோச்சுங்
காவலன்சண்முகங்காணக் கடுகியேவருகலானர்.

இராகம்-தன்யாசி-தாளம்-அடதாளம்,

பல்லவி.

வேடர்வந்தாரே விரைவுடன் (வே)

அநுபல்லவி.

வேடர்வந்தாரே வேல்வுன்வாழ்த்திடும்
நீடங்குவிஞ்சி நிலத்திற்சூழ்ந்திடும் (வே)

சரணங்கள்.

சந்தனப்பொட்டிட்டு சாதங்கள்சாப்பிட்டு
சந்தோஷமாகவே சகஸ்திரங்கோடி(வே)

கையில்வடிவாளும் மெய்யிலம்புக்கூடும்
வெய்யபாணங்களும் வேணமட்டுங்கொண்டு(வே)

ஈட்டிவளைதடி தோட்டிமழுவெடி
காட்டியேவரிவில் கவண்கலெடுத்துயர்(வே)

வீரக்கழல்தொட்டு வேப்பமாலையிட்டு
கோரத்துடனென்று கூடியேஆடியே(வே)

சையோத்தியாகவே சடுதியில்நடந்தே
ஐயோத்திமாககர் அரசன்சமுகத்தில்(வே)

சேவகன் வசனம்.

மகாராஜ் இதோ வேடுவர் வருகின்றார்கள்.

(அ-ன்-வ-ம்.) நல்லது சேவகா.

வேடர்கள் வசனம்.

அனேக வந்தனம் பிரபு எங்களையழைத்தகாரணம் யாதோ அறிகிலோம்.



அரசன் வசனம்.

கல்யாண் வேடுவர்காள் சொல்கின்றேன் கேளுங்கள்.

வேடர் வசனம்.

உத்தரவுபோல் கேட்கின்றோம் மகராஜ்.

அரசன் புராணவிருத்தம்.

சிங்கமானைபுலி பன்றிமான்மரை
திரண்டணைந்து திருநாடெலாம்
எங்கணும்பரவி வந்துதன்பயி
ரியாவையுங் கெடவழித்ததால்
அங்கவற்றைவதை செய்வதற்குமை
யழைத்தனன் கடிதுசெல்லுவீர்
உங்களுக்குதவி யாகயாம்வருக
ஆண்டுவீர வனவேடர்காள்.

வசனம்.

வேடர்காள் நமது நாட்டின்வளங்களையழித்த காட்டின்மிருகங்களை வேட்டையாடும்பொருட் டுங்களை யிங்கழைத்தனம் ஆனகயால் நம்மிடம் நீங்கள் செலவுபெற்றுக்கொண்டு முன்னதாகச் செல்லுங்கள் நாமுமிதோ வருகின்றோம்.

வேடர் வசனம்.

உத்திரவுப்படியே இதோ செல்லுகின்றோம் அரசே.

(அ-ன்-வ-ம்.) நல்லது வேடர்காள்.

அரசன் வசனம்.

மந்திரீ நாமும் வேட்டைக்குப் புரப்படவேண்டி யிருப்பதால் சேனைசை நியங்களைத் தயாராயிருக்கச் செய்யும் யான் வேட்டைக் கோலம் பூண்டு எனது மனைவியிடம் தெரிவித்து வருகின்றேன்.

(ம-ரி-வ-ம்.) உத்தரவுபோலரசே.

## அரசன் சந்திரவதியிடம் வேட்டைக்கேக விடை கேட்குதல.

சந்திரவதி வசனம்.

கண்ணாளா, தாங்கள் வேட்டைக்கோலம் பூண்ட காரணம் யாது?

அரசன் விருத்தம்.

அன்னமேமயிலேமானே ஆசைரஞ்சிதமேதேனே
என்னயான்சொல்வேனிந்த வெழில்சுகர்வனங்கடன்னே
பன்னரும்விலங்கினங்கள் பரவியேயழித்தநின்று
அன்னதைவேட்டையாட வரியவிக்கோலம்பூண்டேன்.

வசனம்.

ஹே பிராணசுந்தரி யானுன்னிடத்தில் எதனை யெடுத்துரைக்கப் போகின்றேன் என்ன காலமோ தெரியவில்லையே நமது நாட்டினிடமாகக் குடிகளிட்ட பயிர்களை விலங்கினங்கள் வந்தழித்ததென்று அன்னவர்களனைவரும் முறையிட்டார்கள். ஆகையால் அவர்களுக்கு க்ஷேமத்தை யுண்டாக்குவதற்காகவே இக்கோலம் பூண்டேன்.

சந்திரவதி வசனம்.

என்ன பிரபூ இவ்விதமாகக் கூறுகின்றீர் இவ்விதகெடுதி கொடுங்கோல் மன்னவர்களுக்கன்றோ சம்பவிக்கும் இதென்ன விபரீதமாயிருக்கின்றது.

அரசன் வசனம்.

மாதே, அதனை நினைக்க நினைக்கத் தான் எனது மனது மிகவும் வருந்துகின்றது ஆகையால் சீக்கிரம் விடையளிப்பாயாக காட்டகத்திற்குச் சென்று வேட்டையாடி வருகின்றேன்.

சந்திரவதி சொல் தரு.

தெய்வலோகம்போய் நான்வாரோ னென்றமெட்டு.

*இராகம்-தாளம்.

கண்ணிகள்.

வேட்டையாடிடநீர்தானே  தாட்டிகமாயெங்கோமானே
காட்டகத்துச்சென்றால்நானே  வீட்டிற்றனித்திருக்கேனே

அரசன்.

தனித்திரேனென்றமானே  *தாயன்லோகிதனுடனே
புனிதமாயிருப்பாய்தேனே  போய்வாரோன்வேட்டைக்குத்தானே

சந்திரவதி.

தனயனும்யானுமிக்க  தருக்கள்சூழ்வனம்பார்க்க
மனமுவந்திட்டேன்நாதா  மகிதலம்போற்றும்நீதா



அரசன்.

வனம்பார்க்கவேண்டுமென்ன  [illegible]யுடனேசொன்ன
கனஞ்சேர்குழலினளே  கண்யமோவுனக்கின்றோ

சந்திரவதி.

கண்யமிலையெனக்கென்று  கழறும்விபரத்தை[illegible]று
புண்யரேகோபங்கொள்ளாது  புகல்வீரென்சொற்றள்ளாது

அரசன்.

குடிகளிட்டபயிரைக்  குழைத்தமிருகத்துயிரை
திடமாய்வாட்டவிப்போது  செல்லுங்கால்வரத்தகாது

சந்திரவதி.

நங்குடிகளுக்கேகஷ்டம்  நல்கியமிருகக்கூட்டம்
தங்கணையால்மாயுந்திட்டம்  தனையாய்ப்பார்க்கவென்னிட்டம்

சந்திரவதி வசனம்.

பிராணேசா நமது குடிகளிட்ட பயிர்களை யழித்தமிருகங்கள் தங்களுடைய கணையினால் உயிர்விடுவதை பார்ப்பதற்காக மிகவும் ஆவலுடையவளாக இருக்கின்றேன் தடைசொல்லாது அழைத்துச் செல்லவேண்டும்.

அரசன் தரு.

வாரும்சுவாமி யென்றமெட்டு.

* இராகம்-கமாசு-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

பெண்ணேநீயுமிந்தவாது  பேசுவதுவேதகாது
கண்ணேயின்றென்னோடுவரக்  கருதுவதுவேதகாது

சந்திரவதி.

கண்ணாளாநீயெனைமணந்த  காலமுதலாகநானே
பெண்ணொருகிமிடமேனும்  பிரிந்திருந்ததறிகிலேனே

அரசன்.

பிரிந்தறியேனென்றமாதே  பிசகிலாதவார்த்தையிதே
அரியவாரணியஞ்சென்றே  அரைநொடியில்வருவேன்கோதே

சந்திரவதி.

அரைநொடியில்வருவேனென்றீர்  அங்குநானெப்பாணீரானால்
குறைவில்பணிவிடைகள்செய்யக்  கூடவேவருவேன்மானே

அரசன்.

கூடவாரோமென்றுகூறுங் கோதுகுழலுடையமாதே
காடெலவுமரிபுலியைக் கண்டுபயப்படுவாய்நீதே

சந்திரவதி.

கொற்றவர்பணிபாதாநீர் கூடவரும்போதுநீதா
இற்றைநாளெனக்கெய்திடு மிந்தவார்த்தைசரியாகாதா

அரசன்.

சரிபலவென்றுரைத்தமானே சற்குணமாதர்கள்தானே
பிரியநாயகன்சொல்தனைப் பேணுதடுப்பரோதேனே

சந்திரவதி.

ஆவிநாதனுட[illegible] யாருமென்[illegible]றைகுதேசுருதி
ஆவிநீங்கினுடல்[illegible] அம்புவியிலுறுமோகருதி

சந்திரவதி வசனம்.

பிராணநாதா சாஸ்திரமானது ஆவி நாயகனென்றும் உடல் மனைவியென்றும் முறையிடுவது தங்களுக்குத் தெரிந்தவிஷயமே அப்படிக்கிருக்க ஆவியாகிய தாங்கள் ஆரணியஞ்சென்றால் உடலாகிய யான் இங்குவீற்றிருப்பது ஆகையா லிதையோசித்து வருதி கொடுக்கவேண்டும்.

தேவதாசன் வசனம்.

மாதாவே என் இறைவருடன் வாதாடிக் கொண்டிருக்கின்றனை.

சந்திரவதி வசனம்.

பாலகா உனது பிதா குடிகளுக்கு நலஞ்செய்வதற்காக ஆரண்யத்திற்கு வேட்டையாடச் செல்லுகின்றாராம் அதனைப் பார்ப்பதற்கு நீயும் யானும் கூட வருகிறோமென் றுரைத்ததற்குக் கூடாதென ம[illegible].

(தே-[illegible]-ம்.) அப்ப[illegible] நன்றாயிருக்கிறது.

## தேவதாசன் வேட்டையாட அரசனிடம் உத்திரவு கேட்பது.

தேவதாசன் விருத்தம்.

கடவுளைநோக்கிமேனாட் கனதவம்புரிந்தேயென்னைத்
திடமுடன்பெற்றெடுத்த சீர்பெறுபிதாவேபோற்றி
இடரிலாக்குடிகளிட்ட வெழிற்பயிர்களைபழித்த
அடர்விலங்கினத்தைவேட்டை யாடக்கானனுகிவாரேன்.



இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஐயனேவிடைதாரும்வேட்டை யாடிவருகின்றேனென (ஐ)

அநுபல்லவி.

மெய்யனேநல் வெய்யவன்குல
வேந்தனேகுண சாந்தனேயென (ஐ)

சரணங்கள்.

விளங்குமென்கைக்கணைக ளாலம்மிருகங்களையே
இளஞ்சிங்கம்போலெதிர்த்துதைத்து இவ்விடம்வரச்சம்மதித்து (ஐ)

என்னவநியாயமாக விருக்குகின்றது
மன்னனென்றெண்ணுமிலையது இன்னலைஞ்செய்தனவேளமது (ஐ)

வசனம்.

பிதா மகராஜ் யான் காட்டிற்சென்[illegible] அக்கொடிய மிருகங்களை வதைசெய்து ஈங்குற அடியேனுக்கு விடையளிக்கவேண்டும்.

அரசன் வசனம்.

அடே வத்ஸா என்ன ஆச்சரியம் குடிகளுக்கு துன்பஞ்செய்த கொடிய மிருகங்களை வதை செய்யும்பொருட்டு யான் காட்டிற்கேகுந் தருணம் உனது மாதாவும் கூடவருகிறே னென்றியம்புகிறாள். நீயோ யான் சென்று வருகிறேனெனச் சொல்லுகின்றாய் ஆதலின் நீ பாலனாயிருப்பதினால் வேட்டையாடுவதற் கஞ்சுவாய் நீங்களிருவரும் இங்குதானே வீற்றிருங்கள் யான் சென்று வருகின்றேன்.

தேவதாசன் வசனம்.

தந்தையே தாங்கள் செய்யும்வேட்டையைப் பார்க்க மிகுந்த ஆவலுள்ளவனாக இருக்கின்றேன் என்னையும் என்மாதாவையும் தங்களகூட அழைத்துச் செல்லவேண்டும்.

அரசன் வசனம்.

தநயா, நீயும் உன்மாதாவும் இங்கிருக்கமனமில்லாதவர்கள்போலுந் தோற்றுகின்றது ஆனதா[illegible].

தேவதாசன் வசனம்.

அவ்விதமே வருகின்றோம் பிதா.

அரசன் வசனம்.

பிரதான் விரேஷ்டா எனது பத்தினியும் புத்திரனும் யான்செய்யும் வேட்டையைப் பார்க்க வனத்திற்கு என்னோடுகூட வருவதாக

ச் சொல்லுகின்றார்கள் ஆகையால் தாம் சாரதியிடத்திற் றெரிவித்து ப் பயிரவியால் கொடுக்கப்பெற்ற இரதத்தைக் கொண்டுவரும்படி செய்யும்.

(மந்திரி-வ-ம்.) பிரபூ இதோ இரதம் தயாராயிருக்கின்றது.

அரசன் வசனம்.

கண்ணாட்டி. நீயும் தேவதாசனும் இப் பல்லக்கிலேறி வாருங்கள்.

சந்திரவதி வசனம்.

அவ்விதமே வருகின்றோம் கண்ணாளா.

அரசன் வசனம்.

பிரதான் நமது ரதகஜ துரகபதாதியாகிய நால்வகைச்சேனையும் தயாராயிருக்கின்றதா.

மந்திரி வசனம்.

தயாராயிருக்கின்றது எழுந்தருளவேண்டு மரசே.

அரசன் வசனம்.

மிகவும் குதூகலம் தாமும் புரவியின்மீ தாரோகணித்துச் சேனைசகியங்களுடன் வாரும்.

மந்திரி வசனம்.

அவ்விதமே வருகின்றேன் பிரபூ.

---

## வேட்டைக்குப் புறப்படும் பாகம்.

அரசன் புராண விருத்தம்.

கரியகாழகம் விரித்துடுத்திவரி
கவசமிட்டு மணிமுடிதரித்
தரியவெற்றியுடை வாளயிற்சுரிகை.
யறையமுத்தி வயிரவிதரும்"
பெரியபொற்சிலை யெடுத்துவாளிபல
பெய்ததூணி முதுகெய்தவே
தெரிவையர்க் கரசியுடன்வரக்கடிது
சென்றுதேரின் மிசைமேவினன்.



அரசன் விருத்தம்.

குடைசுருட்டி சாமரநற் கொடிகடுன்னக்
குஞ்சரமீ தடல்முரசங் குமுறவெற்றிப்
படையிருபாலுஞ் சூழப் பதினெண் வாத்யம்
பாங்குடனே வரையவதிர் வேட்டுழக்க
உடைவாள் வேலாழிமுத லாயுதங்க
ளூற்றிலங்க வில்லம்பு பாணமோங்க
நடைமிகுமா விலங்குமணி ரதத்தின்மீது
நாடினேன் வனவழியைக் கூடினேனே.

சந்த்ரன் வேட்டைக்குப் போர சுந்தரம்பாரீ சொன்றமெட்டு.

* இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-அடதானம்.

பல்லவி.

வேட்டையாடக்காட்டில்    மேவுவோம்வாரீர்
விந்தையாய்ப்பந்தமாய்    அந்தமதாகவே(வே)

அநுபல்லவி.

மேட்டிமையாகநம்    நாட்டின்வளங்களைச்
சேட்டைசெய்தழித்த    திண்மிருகங்களை(வே)

சரணங்கள்.

மதிதனிலேசிறந்த    மதியோரே
மனோவேகமதில்மிக்க    கதியோரே
பதிபுகழ்சிற்சில    பதியோரே
பலாட்டிகமுயர்சேனை    பதியோரே
மாகூழிமையாகவே    மாவிற்கைசேருங்கள்
வாகுடனியாவரும்    ஒன்றாகவாருங்கள்(வே)

பாங்கானபிண்டி    பாலங்கத்தி
பரிதிருந்தவகர    பத்கிராஞ்சத்தி
வாங்குதடிகண்ட    மாகிலாவெத்தி
வளரிவட்டங்குணில்    வளர்கரம்பத்தி
பண்புபெறுஞ்சிங்கப்    பற்கள்நாய்தன்னுடன்
பாரமலைவேடரே    பரிவாகவென்னுடன்(வே)

அரசன் விருத்தம்.

வருங்காலந் தெரிந்துரைக்க வல்லோனன
மந்திரி சத்தியகீர்த்தி வழுத்தக்கேளாய்
பெருங்கனக விரதகஜ துரககாலாள்
பேருறுற் குழிஞ்சிசில வேடர்சூழ்ந்து
நெருங்கிவர நீள்வனத்தில் வந்துசேர்ந்தோம்
நேயமுடன் குடிகளிட்ட பயிரழித்த
அருங்கொடிய விலங்கினங்க டம்மைவேட்டை
யாடுவோம் கணைகளினுற் சாடுவோமே.

வசனம்.

மந்த்ரீ நமது சேனைசைநியங்களுடன் இவ்வனத்திற்கு வந்து சேர்ந்தோம் இனி நமது குடிகளிட்ட பயிர்களை யழித்திங் குறும் விலங்கினங்களை வேட்டையாடி வெல்லுவோம் வாரும்.

மந்திரி வசனம்.

அரசே இன்னும் கொஞ்சதூரம் சென்று எனது மாதாவாகிய சந்திரவதியும் லோகிதனும் தாம் செய்யும் வேட்டையைக் கண்ணுறா வதற்காக ஓர் டோரவமைத்து அன்னவர்களை யங்கிருத்திப் பின்னல் வேட்டைக்குச் செல்வோம் வாருங்கள்.

அரசன் வசனம்.

நல்லது பிரதான் அவ்விதமே செய்வோம்.

அரசன் தரு.

தொடாதடாபாவி யென்றமெட்டு.

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

வனவேட்டையாட வாரீரொன்கூட (வன)

அநுபல்லவி.

கனவேடுவரோ கவின்வீரரோ (வன)

சரணங்கள்.

பிண்டிபீட்டிபாலம் பிறங்கும்வேல்சூலம்
தண்டுகோடகம்வாள் தடக்கைகொண்டிங்நாள் (வன)



87 வது பக்கம் வேட்டையாடுதல்

சக்கரந்துபாக்கி ஜடுதியிற்றாக்கி
குக்கலைத்திரட்டிக் கூட்டிநீரோட்டி (வன)

வளைதடிகுந்தம் வச்சிரமங்குசம்
வளரிவில்பாணம் வஞ்சகவனுடன் (வன)

(வ-ம்.) வாரீர் வீரவேடர்காள்.

(வீரவேடர்-வ-ம்.) இதோவருகின்றோம் அரசே.

மந்திரி வசனம்.

அரசே நான்கூறியபடியே இவ்விடத்தில் டேராவடிக்கும்படி செய்கின்றேன்.

(அ-ன்-வ-ம்.) அவ்விதமே செய்யும் அமைச்சே.

மந்திரிவசனம்.

அடேசேவகா அதிசீக்கிரம் இவ்விடத்தில் டேரா வமையுங்கள்.

(சே-ன்-வ-ம்.) இதோ டேராவமைத்துவிட்டோம் பிரபூ.

(ம-ரி-வ-ம்.) அரசே டேராவமைத்தாய்விட்டது.

அரசன் வசனம்.

பிராணரக்ஷகி நமதுபாலன் தேவதாசனுடன் இந்தடேராவில் வீற்றிருந்து யான்செய்யும் வேட்டையைக் கண்ணுற் றகமகிழ்வாயாக யான் சென்றுவருகின்றேன்.

சந்திரவதி வசனம்.

பிரபூ சென்றுவாருங்கள்.

அரசன்-வசனம்.

அடே சேவகா நீ மிகவு முஷாராக இங்கிருந்து காவல்புரிவாயாக.

(சே-ன்-வ-ம்.) பிரபூ உத்திரவுப்படிசெய்கிறேன்.

---

# வேட்டையாடும்பாகம்.

அரசன் விருத்தம்.

கூட்டவேடரே கூரியவீரரே
நாட்டரும்பயிர் நைந்திடச்செய்திவண்
ஓட்டமாகவத் துற்றமிருகங்களை
வேட்டமாடியே வீய்ந்திடச்செய்குவோம்.

வாடிவாடி மாதரசே யென்றமெட்டு.

* இராகம்-கமாச-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

வாரீர்வாரீர் வீரர்களேவ்வ
வேட்டையாடுவோம் தீரர்களே
தேறுமக்குகை சீர்யாக்ரம
மீறியார்க்குதே என்-என்-என். (வாரீர்)

திடமிகுபுஜபல வேடர்களே
கடகளிறனைய சினத்தர்களே
சேர்க்கையாகவே தீர்க்கமாய்வரு
மாக்குலங்களைக் கொல்-கொல்-கொல். (வாரீர்)

நாட்டினிற்குடிகள் செய்பயிரினையே
வாட்டியிக்குறை மிருகந்தனையே
தாட்டிகமாய்வானைத் திட்டியதனுயிர்
கோட்டியேசிரங் கொய்-கொய்-கொய். (வாரீர்)

நரிபரிகரி யரிவரிபுலிதே
பரிவுடனேகெர்ச் சிக்கிறதே
நாட்டமுடன்மன வாட்டமிலாதுயிர்
விட்டியதைவதை செய்செய்செய் (வாரீர்)

வசனம்.

வேடுவர்களே மிகவும் உதாரராக யென்னுடன் வாருங்கள்.

அரசன் தரு.

இராகம்-பியாக்-தாளம்-ஏகம்.

நோட்.

வேட்டமாடுவோம் வீரரோகன
வேடரோ வன (வே)

ஸ்ரேஷ்டமாய் நாட்டமாய்
தேட்டமாய்வாரும் கூட்டமாய்ச்சேரும்
ஈட்டமானவிக் காட்டகமிருக (வே)

(வ-ம்.) வீரவேடர்காள் கூட்டமாய்க்கூடிக் காட்டைக் கலையுங்கள்.

(வே-ர்-வ-ம்.) இதோ கலைக்கிறோம் அரசே.

66



அரசன் தரு.

அரிகரடி கலை
கரிகவுலவம் நரிமுயல்களும் (அரி)

திரியுதே தெரியுதே
சரியவைகளை பெரியகணைசிலை
பெரியவெடிகொண் டரியமிருக (வே)

வசனம்.

வேடுவர்காள் இதோ அனேக மிருகங்கள் வருகிறது.

வலையைக் கட்டுங்கள்
வாரிருக்கியே சீர்துடிகொட்டுங்கள் (வ)

விலைமிகும் சிலைவளைத்
தலைவிலாநாணியை நிலைபெறவேறிட்
டலையாமலைபாணந் தலைமையாய்த்தொடுத்து (வே)

(அ-ன்-வ-ம்) ஆ ஆ வீரர்கள் என்ன ஆச்சரியம்

சுத்தி நில்லுங்கள்
சித்திர விசித்திரமதாய் (சுத்)

வெந்திசே ரஸ்திர
சஸ்திரத்தைத் தொடுத்திழுத்தக
ணத்திற்பட்டிவை கத்திச்செத்ததே (வே)

வசனம்.

வீரவேடர்காள் இவ்வித கெர்ச்சிதத்துடன் வந்த அனேக மிருகங்கள் எனது கைக்கணையால் மடிந்து கிடக்கும் விசித்திரத்தைப் பார்த்தீர்களா.

(வீ-வே-ர்-வ-ம்) ஆம் அரசே.

அரசன் விருத்தம்.

தொட்டவெஞ்சரங்கள்பட்டுத் துஞ்சியவிலங்குதம்முள்
மட்டடங்காவோர்சிம்மம் மாண்பதாயுயிர்பிழைத்தே
அட்டகாசஞ்செய்தோங்கி யாவெனவாய்திறந்திங்
கெட்டியேநம்மைநோக்கி வந்திடுந்தன்மையென்னே.

எட்டி நில்லுங்கள்
கெட்டிவெடியைத் தட்டிநீங்கள் (எட்டி)

மட்டிலாப் புஷ்டியாய்க்
கிட்டிபேலவந்திடு துட்டசிம்மத்தின்மேல்
வட்டவில்லிலம்பு தொட்டுவிட்டேவன (வே)

வசனம்.

வேடர்காள் சுற்றிலும் உஷாராக இருங்கள் இச்சிம்மத்தின்பிராணியைச் சற்றுநேரத்திற் பார்க்குகின்றேன்.

(வே-ர்-வ-ம்.) உத்தரவுபோலரசே.

அரசன் தரு.

இராகம்-பைரவி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

சிம்மமேநின் திரத்தைப்பார்க்கின்றேன்
சீறியேகுறும் பேரியே வரும்(சிம்)

அநுபல்லவி.

கும்மலிற்றப்பித்துக் கொக்கரித்தெதிர்த்துக்
கோரமுற்றுவந்த வீரவக்ரதந்த(சிம்)

சரணங்கள்.

செம்மலென்று தெரியாதின்று
தீரமிகுத்த கோரமாய்ச்சென்று
பம்மல்செய்து பதுங்கினின்று
பார்த்துக்கர்ச்சனை பண்ணிறுய்நன்று
பாரிதோவெங்கணையாலே கூரிடுவேன்றரைமேலே
நேரினில்வந்ததினாலே காரியமிலைபிப்பாலே(சிம்)

பையப்பைய நெருங்கிக்கிட்டத்
தைரியமுடன் வந்தாயே துட்டச்
செய்கை புடைய நீதானெட்டத்
திகைத்துநின்ற செய்திபேனட்ட
திக்குகமகிழுமெனுட்டின் மிக்கநல்வளமதைவாட்டித்
தக்கதோர்குடிகளைவிட்டி இக்கணமனுகினைகாட்டில்(சிம்)

உக்ரவீரத்தைக் காட்டிடாதே
புனக்கிதுசரி யல்லவிப்போதே
எக்கியெக்கிவருவ தேதே
யெய்தேன்கணை யுந்தன்மீதே



என்னசெய்திடுகுவையிங்கே உன்னதம்யாவையுமெங்கே
என்னரிதானவிகலேயே இன்னதென்றறிந்தனையிலையே(சிம்)

பல்லவி.

சிம்மமேநீசேதமானையே சீறியேகுறும்பேறியேவந்த(சிம்)

வசனம்.

வேடர்காள் இச்சிம்மத்தைக் கொன்றுவிட்டேன் பாருங்கள்.

(வே-ர்-வ-ம்.) பார்த்தோம் மகராஜ்.

அரசன் தரு.

வேட்டை தட்டுங்கள்
வெடிமுரசுடன் தடியைக்கொட்டுங்கள்(வே)

கோட்டைசூழ் நாட்டில்வாழ்
ஆட்டையும்பசு மாட்டையுங்கொன்ற
சேட்டைப்புலிகள் கேட்டையடைய(வே)

வசனம்.

வீரவேடர்காள் இதோ புலிக்கூட்டங்கள் வருகின்றது சுற்றிலும் வலையைக்கட்டி வாரிருக்குங்கள்.

(வே-ர்-வ-ம்.) அவ்விதமே செய்கிறோம் அரசே.

அரசன் தரு.

இராகம்-அம்பலத்வனி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

சீறுதுபார் தின்புலி யின்குழுமொம்பச் (சீறு)

அநுபல்லவி.

தாறுமாறில்லாது சடுதியிலிப்போது
நீறுசெய்கணையை கெட்டினில் விட்டிடு முட்டிச் (சீறு)

சரணங்கள்.

வலையைக்காரும் வாரைப்பாரும்
தலையைநீட்டித் தல்லியே கவ்வியே யெவ்விச் (சீறு)

சுற்றிலும்நண்ணி துபாக்கிவார்ப்பண்ணி
வெற்றிபெறத்தட்டி விட்டிடு மெட்டிய தட்டிச் (சீறு)

கொண்டலெனச்சரக் கூடவிட்டப்புரம்
அண்டவிடாதிரும் வண்டோ கிண்டோ மண்டிச் (சீறு)

விட்டனன்கோடி வெங்கணைசாடிப்
பட்டதினுலிவை பட்டன கெட்டன கிட்டிச் (சீறு)

பல்லவி.

செத்ததுபார் திண்புலியின் குழுமொம்ப(செ)

வசனம்.

வனசரர்காள் இப்புலிக்குழாங்க ளிறந்துகிடக்குந் தன்மையைப்பார்த்தீர்களா.

(வே-ர்-வ-ம்.) ஆம் அரசே.

அரசன் விருத்தம்.

நீவிரும்யாமுந்தொட்ட நெருப்புமிழ்கணைகள்பட்டே
ஆவிபோய்ப்புலிகள்வீழ்ந்த வதிசயமென்னசொல்வேன்
மேவியவலையைப்பீறி வெம்புலியொன்றுதப்பித்
தாவியேநம்மைநோக்கி வந்திடுந்தன்மைப்பாரீர்.

* இராகம்-பியாக்-தாளம்-ஏகம்.

பல்லவி.

விடாதீர்வேடரே இந்தப்புலியை (விடா)

அநுபல்லவி.

தடாரிக்கங்கொண்டு தாவிமிகவெகுண்டு
அடாண்மையாய்வந்த தப்புர மிப்புர மெப்புர மெய்தினும் (வி)

சரணங்கள்.

படாபஞ்சமாகப் பார்வனத்திற்போக
எடாக்கணையை எடுத்து விடுத்து வதைத் திடுவோமிதை (வி)

வசனம்.

வேடர்காள் இப்புலியானது எத்திசைநோக்கிச் செல்வதாயினும் விடாதீர்கள்.

(வே-ர்-வ-ம்.) நல்லது மகாராஜ்.

அரசன் தரு.

பாஞ்சாலி கேளடி யென்றமெட்டு.

* இராகம்-கமாசு-தாளம்-ஆதி.

பல்லவி.

அஞ்சாது புலியே இந்த
அடவிதனிலென்னுடன் அடற்றுவந்தாய்வலியே (அஞ்)



அநுபல்லவி.

கொஞ்சமாகினுமெனை நெஞ்சில்மதியாதிங்ஙனே
குதித்துக்குதித்துக்கதி கதித்துமிகக்கெர்ச்சித்து (அஞ்)

சரணங்கள்.

பாரதனிற்றன்னையெதிர்ப் பாரிலையென்றெண்ணத்தாலோ
பாய்ந்திதோபடைஞருயிர் மாய்ந்திடச்செய்து
தேறியேவிக்கானகத்திற் சீரதாய்க்குலவினவுன்
சித்தத்தையறிந்தேனின்று குத்தியேகொல்கிறேனின்று (அ)

அங்கண்மாநிலத்திற்கெலாந் துங்கமாயிலங்கயோத்திச்
சிங்கமென்றெனை யெண்ணுமற்சீறியவுன்னை
மங்களாகரமாயொளி ரொன்கரக்கட்கத்தினுலே
மாய்த்துத்தலைதனைக்கீழ் சாய்த்துவிழச்செய்குவேன் (அ)

காட்டினிலென்றும்வசித்தாற் கடும்பசிக்கிரைகிடைக்
காதென்றவெண்ணத்தாலோவிக் கானைவிட்டென்றன்
நாட்டினிற்குடிகளிட்ட நற்பயிரனைத்தையும்நீ
நாசஞ்செய்துபற்பலரை மோசஞ்செய்திவண்வந்தனை (அ)

வசனம்.

அடா வேடுவர்காள் இதோ என் கைக்கணையினால் இப்புலியினுயிரை வாங்கிவிட்டேன் பார்த்தீர்களா.

(வே-ர்-வ-ம்.) பார்த்தோம் பிரபு.

அரசன் தரு.

யாளி யெருதுடன்
ஞாளிகடுவன் யாவையுமிதோ (யாளி)

மீளியான் வாளியால்
தூளிசெய்தேரண காளியுடன்பெருங்
கூளிகளுண்ணவிந் நாளிலாயாக்கினேன்(வே)

வசனம்.

அடா வனசாரர்காள் இக்கொடிதாகிய மிருகங்களையும் சின்னபின்னஞ்செய்துவிட்டேன்.

அரசன் தரு.

நஞ்செய்ப் பயிரையும்
புஞ்சைப்பயிரையும் பொதுப்பயிரையும் (நஞ்)

எஞ்சலிற் — றுஞ்சச்செய்
வஞ்சப்பன்றிகளும் — அஞ்சொற்பகழிகளும்
பஞ்செனப்பறக்க — வுஞ்சரத்தாலதை(வே)

வில்லுடன் — கவண்
கல்லுமம்புங் — கையிலெடுங்கள் (வில்)

நில்லுங்கள் — செல்லுங்கள்
கொல்லுங்களதை — வெல்லுங்கள்செயம்
சொல்லுங்கள்மனம் — புல்லுங்களினும்(வே)

காட்டும் — வேடரே
களித்துஒளித்துப் — புதர்க்குளிருந்தால் (கா)

தேட்டமாய் — வாட்கணை
தீட்டுறேன்பாணம் — பூட்டுறேனதை
வீட்டுறேனிதோ — நாட்டிகமுடன்(வே)

வசனம்.

அடா வேடர்களே எல்லா மிருகக்களும் பறவைகளும் என்னுடைய கணைகளினாலும் உங்களுடைய கவண் கற்களினாலும் ஒழிந்துவிட்டனவல்லவோ.

(வே-ர்-வ-ம்.) ஆம் பிரபூ.

(அ-ன்-வ-ம்.) அடா வேடர்களே.

பல்லவி.

வாழிகூறுங்கள் — ஆழிசூழுலகேழுமகிழ(வா)

அரசன் வசனம்.

அடா வேடர்களே மிருகங்களெல்லாம் மடிந்து நமது நாடெல்லாஞ் செழிப்புற்றதென மகிழ்ச்சியோடு கொச்சியுங்கள்.

வேடர் வசனம்.

அதோபாருங்கள் பிரபூ நமது ரதகஜ துரகபதாதிகளையெல்லாம் அதாகுதஞ் செய்துகொண்டு பூலோக புவர்லோக சுவர்லோகஜெனலோக மகாலோக தபலோக சத்தியலோகமென்று சொல்லப்பட்ட மேலேழுலோகங்களும் அதல-விதல-சுதல-நிதல - தராதல-மகாதல-பாதலமென்று சொல்லப்பட்ட கீழேழுலோகங்களும் நடுநடுங்கும்படியாகப் பெரிய கருமலையைப்போல் ஓர்பன்றியானது நம்மை நோக்கிவருகின்றது.

-69-



அரசன் வசனம்.

இதென்னடா ஆச்சர்யமா யிருக்கின்றது எல்லோரு முஷாராயிருங்கள்.

அரசன் தரு.

சீறுதுபார் தின்புலியி என்றமெட்டு.

இராகம்-அம்ஸத்வனி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

எங்கேயடா — யெதிரினில்வந்ததோர்பன்றி(எங்)

அநுபல்லவி.

இங்குதாம்பூரித் — திருக்குந்தருணத்தில்
பொங்குசினங்கொண்டு — பொற்பெனவந்ததோர்பன்றி(எங்)

சரணங்கள்.

விரைவினிற்காட்டுங்கள் — மெய்க்கணைதீட்டுங்கள்
அரைநொடியில்வெல்வேன் — அடவியிலுறைவனசரரே(எங்)

வசனம்.

அடா வனசரர்களே எங்கே நம் எதிரில் வந்தபன்றி

வேடர் வசனம்.

அதோ பாருங்களரசே தங்கள் வலதுபுரத்தில் பதுங்கிநிற்கிறது.

அரசன் வசனம்.

சபாஷ் அடா வேடர்களே இதோ கண்டுகொண்டேன் என்ன சிங்காரம் என்ன கெம்பீரம் என்னவுதாரம் என்ன வீரதத்வம் இதைப்போலொன்றும் பார்த்ததில்லை, மிகவுமுஷாராயிருங்கள் யான் பாலவனத்துப் பயிரவிகொடுத்த வில்லினிடமாகக் கணையைத்தொடுத்து க்ஷணப்பொழுதில் மாய்த்துவிடுகின்றேன்.

அரசன் தரு.

இன்பமாயின்று மருவிடவருவா யென்றமெட்டு.

இராகம்-கமாஸ-தாளம்-ரூபகம்

பல்லவி.

ஏனமேயுன் — இகலைப்பார்க்கின்றேன்
ரதகஜதுரகபதாதியை — யதமதுசெய்கையேபாதியை (ஏ)

அநுபல்லவி.

ஈனமுறியத் தெவளவுதைரியம்
இருக்கட்டும்புனமீதிலேபொருக்கட்டும்க்ஷணப்போதிலே. (வ)

சரணங்கள்.

அந்தக்கொடுஞ்சுர சுந்தரசாம்பவிபண்டு-எற்குச்
சொந்தமுடன்றந்த அம்புவில்லுங்கையிற்கொண்டு
இந்தத்தேர்மேற்சென்று எழிலுடனேநின்று
இச்சிலைதொட்டுவளைத்து உச்சிதஅஸ்திரம்விளைத்து (வ)

கர்ச்சனைசெய்துமெய்யைச் சகஸ்திரந்துளைதுளைப்பேன்-இந்தக்
கட்சியில்விட்டுவிடாமலுனைச் சுற்றிவளைப்பேன்
இட்சணமோடுறாய் எதிர்த்துநின்றுமூறாய்
இதுவீராண்மையதாமோ அதுபாரொன்வலிபோமோ(வ)

திக்கவிஜயஞ்செய்திட்ட .வயோத்தியாபுரியாள்-ஜெக
மெய்க்குமரிச்சந்த்ர வேந்தனென்றிங்ஙனந்தெரியா
தெக்குகிருயினை தொக்குமணற்கணை
வினைனுவியழியவே தாவியேயோடியேவிழவே (ஏ)

வசனம்.

அடா வேடுவர்களே பயிரவிகொடுத்த வில்லினிடமாகக் கணை யைத்தொடுத்து அதன்மீது பிரயோகஞ்செய்தேன் அக்கணையானது நெற்றியில் தாக்க உடனே நின்ற நிலைதெரியாமலெங்கோ சென்று விட்டன வாருங்கள் எல்லோரும் போய்ப் பார்ப்போம்.

(வே-ர்-வ-ம்.) நல்லது பிரபூ.

அரசன் வசனம்.

ஹேம பிரதான் ஹே வனவேடர்காள் நாமிப்போது எவ்வளவு தூரமோ வந்தும் அப்பன்றியைக் காணப்படவில்லை தசைதசையாக அவ்விடத்திலேயே சிதைந்துவிட்டது போலிருக்கின்றது யாவரும் திரும்புங்கள் சந்திரவதியும் தேவதாசனுமிருக்கும் டேராவுக்குச் சென்று அன்னவர்களையு மழைத்துக்கொண் டயோத்திக்குச் செல் வோம்.

மந்திரி வசனம்.

பிரபூ உத்திரவின் பிரகாரம்.



97 வது பக்கம் தேவதாசன் மானைக்கண்டு காட்டுதல்



# தேவதாசன் மானைக்கண்டு
## சந்திரவதியிடம் காட்டுதல்.

தேவதாசன் விருத்தம்.

திங்களோர்பத்துந்தாங்கிச் சிறியனைப்பெற்றதாயே
இங்களம்பாருமேதோ வெழில்பெறுங்கலைமானொன்று
வெங்கதிகொண்டோடோடி விண்ணுறையினைப்போலத்
துங்கமாய்வருகுதிஃதின் சொரூபமென்சொல்வேனின்றே.

சரசகுசெய்யவா வென்றமெட்டு.

* இராகம்-பியாக்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

என்ன ஆச்சர்யம் அம்மா      என்னஆச்சர்யம் (என்)

அநுபல்லவி.

என்னஆச்சர்யமிதோபார்      என்னஆச்சர்யம்-அம்மா (எ)

சரணங்கள்.

பொன்மின்பிரகாசம்போல் பொற்புடல்விளங்கமண்மேல்
உன்னதமாய்த்துள்ளிபொருமா னோடிவருகுதே-அம்மா (எ)

துங்கமருட்பார்வைநேத்ரம்துலங்குவதாவிதற்குசாஸ்த்ரம்
அங்காரிகையார்விழிநே ராமென்றனைறவன்-அம்மா (எ)

சுந்தரமாயந்தமானைத் தொடர்ந்துகைப்பற்றிநானே.
விந்தையதாய்விளையாட விளைவில்வருவேனே-அம்மா (எ)

வசனம்.

மாதா, இந்த மானைப்பார்க்க வென்ன ஆச்சர்யமாயிருக்கின்றது சீக்கிரம் விடைகொடுக்கவேண்டும் பிடித்துவருகின்றேன் விளையாடுவதற்கு.

## சந்திரவதிக்குந்தேவதாசனுக்கும்

தர்க்கம்.

மாதே போய்வாரேன் வனவேட்டைக்கே யென்றமெட்டு.

* இராகம்-காபி-தாளம்-ஆதி.

சந்திரவதி.

பல்லவி.

கண்ணேகண்மணியே      கட்டிரத்தினமே (கண்)

அநுபல்லவி.

வண்ணமான்பிடிப்பதற்கு என்னுறவதுகூடாதடா (கண்)

தேவதாசன் பல்லவி.

தாயேபெந்தனுக்கு வரந்தருவாயே (தா)

அநுபல்லவி.

தூயபுள்ளிமானதனை நேயமாய்க்கைப்பற்றிவாரேன் (தா)

சந்திரவதி சரணம்.

உன்கையிலகப்படாமலோடிப்போகுமேதுடர்ந்தால் (கண்)

தேவதாசன்.

ஓடிப்போனாலும்யான்விடேன் உத்தமியேயென்னம்மணி (தா)

சந்திரவதி.

சின்னஞ்சிறுபாலாவதன் செய்கைதெரியாதுனக்கு (கண்)

தேவதாசன்.

செய்கையதற்குற்றவிதந்தே செப்புவாய்விபரமாக (தா)

சந்திரவதி.

செப்புவாயென்றபாலகா சீர்கொம்பதாற்குத்துமடா (கண்)

தேவதாசன்.

கொம்பதனாற்குத்துமெனக் கூறுவதுஞாயமாமோ (தா)

சந்திரவதி.

ஞாயமல்லவென்பதனை நவின்றிடுவாயிப்போதே (கண்)

தேவதாசன்.

மானெனைத்துயர்செய்திட மன்னன்மகன்விடுவேனோ (தா)

சந்திரவதி.

மன்னரானநின்பிதாவை மான்பிடித்துத்தரச்செய்வேன் (கண்)

தேவதாசன்.

என்பிதாவுக்குற்றதிர மெனக்கிலையோகூறம்மா (தா)

சந்திரவதி.

எவ்விதத்திமுற்றாலும் எந்தன்சொல்மறுக்கலாமோ (கண்)



வசனம்.

பாலகா. உனக்கு எவ்வளவு பலாஷ்டிகமுற்றபோதிலும் மாதாவாகிய என்னுடைய வார்த்தையை மறுக்கலாமா.

தேவதாசன் வசனம்.

தாய்சொற்றுறந்தால் வாசகமில்லை யென்பதை யானுணர்ந்திருந்தும்.

தேவதாசன்தரு.

தன்சொல்தடுத்தகுற்றத்தை க்ஷமிக்கவேண்டுமிக்ஷணம் (தா)

வசனம்.

அருந்தவமிழைத் தென்னையீன்றெடுத்த தாயே உனது வார்த்தையைத் தடுத்தகுற்றத்தை மன்னிப்பதோடு எனது பிதவானவர் வந்தவுடனே இம்மானைப் பிடித்துத் தரும்படிசெய்யப் பிரார்த்திக்கின்றேன்.

(ச-தி-வ-ம்.) அவ்விதமே செய்கிறேன் பாலகா.

அரசன் வசனம்.

மந்த்ரி. இதோ சந்திரவதி வீற்றிருக்கும் டேராவுக்குச் சமீபமாக வந்துவிட்டோம்! எல்லாசை நிஜக்களையுமொருங்கு சேர்த்து ஓரிடத்தில் வீற்றிருக்கச்செய்யும்.

(ம-ரி-வ-ம்.) அவ்விதமே செய்கிறேன் அரசே.

(ச-தி-வ-ம்.) பிராணேசா வந்தனஞ் செய்கின்றேன்.

அரசன் வசனம்.

கல்யாண் கண்ணாட்டி நமதுகுடிகளுக்குத் துயர்விளைத்த கொடியமிருகங்களையாலும் படைத்தலவர் வனவேடர்கள் யாவரும் வேட்டையாடியதைக் கண்ணுற்று நீயும் பாலகனும் களிகூர்ந்தீர்களா.

(ச-தி-வ-ம்.) ஆம்.

மன்னவனேயுந்தனை யென்றமெட்டு.

* இராகம்-கமாசு-தாளம்-ஆதி.

பல்லவி.

மன்னவரோயிந்தகன் மான்றனைநீரோ

பின்னமிலாமற் பிடித்தருள்வீரோ (மன்)

அனுபல்லவி.

கன்னல்கமுகெழில் காட்டும்வயல்சூழ்
கண்யவயோத்தியைக் களிப்புடனேயாள்
சொன்னமொழிதவருச் சுகிர்தகுணாளரே
சுந்தரமிகுந்திடும் எந்தன்மணாளரே (மன்)

சரணங்கள்.

சொன்னமேரமின்னே தூயவனேகஞ்
ஜோதிக்கதிரோவிதன் சொகுசுள்ளதேகம்
என்னேர்காவிளைவிதை யெடுத்துளைக்கப்போமோ
இப்பார்சுமக்குமாதி சேடனலாமோ (மன்)

சந்த்ரஜடாதரர் தன்னருளாலே
தரணியிலுதித்தநம் தனயனிதன்மேலே
சிந்தைவைத்தானயர் தேசதைக்கண்டே
சீக்கிரமாகவே சிறந்தமகிழ்வுகொண்டே (மன்)

வசனம்.

கண்ணாளா நம்மெதிரிலுலாவிக் கொண்டிருக்கும் மானைப்பார்த்தீர்களா.

(அ-ன்-வ-ம்.) *மாதரசே பார்த்தேன்.

சந்திரவதி வசனம்.

இம்மானை நமது புத்திரனுகிய தேவதாசன் பார்த்தவுடன் பிடிக்கச்சென்றனன் அதைத்தடுத்து தாங்கள் வந்தவுடன் பிடித்துத்தரும்படியாக வியம்பியிருக்கின்றேன் ஆகையாலிதைச் சீக்கிரம் பிடித்துத் தரவேண்டும்.

(அ-ன்-வ-ம்.) அடியே எனதாசைக்குகந்த மாதே.
மன்னு இந்த மானைப்பாருமே யென்றமெட்டு.

* இராகம்-கமாசு-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மாதேயிந்தமான் வேண்டாமடி-எந்தன்
மாதேயிந்தமான் வேண்டாமடி (மா)

அனுபல்லவி.

நிதில்செழுந் குயிலேதிருச்
சித்திரமேநடையை பொத்தவிடைரத்தினமே (மா)

73



சந்திரவதி சொல்லுதல்.

பல்லவி.

சாமிதயைசெய்குவீர்தானே துரை சாமிதயைசெய்குவீர்தானே (சா)

அனுபல்லவி.

பூமின்பொன்னைப் பொருவுமிம்மான்
புத்ரன்விளையாடிடவே இத்தினம்பிடித்தருள (சா)

அரசன் சரணம்.

புத்ரன்விளையாடக்காரார் பூங்குழலினுளேவேறோர்
பொருளிலையோவிம்மானை யருளெனக்கேட்டாய்வீணே (மா)

சந்திரவதி சரணம்.

மற்றோர்பொருளெல்லாம்நாதா மாநிலம்புகழும்நீதா
மாகூழிமைசேர்ந்திடுமோநற் காகூழியதாகிடுமோதுரை (சா)

அரசன்.

பெண்ணேசுகமொழியினளே பெரும்பேதமைக்குணத்தினளே
பெட்புடனுன்கூறுஞ்சொல் நட்புடனேகேட்பாய்நல் (மா)

சந்திரவதி.

வேண்டாமெனவிளம்புஞ்சம்மதம் விபரமாயெந்தனுக்கிங்கே
வித்தகரேயித்தருணம் சித்தமகிழ்வாய்க்கூறும் (சா)

அரசன்.

நன்னகரமதைநாடி நாற்றுப்பயிரெல்லாஞ்சாடி
நாசமுறச்செய்திவிடம் வாசமுறலாலேமட (மா)

வசனம்.

அடியே பேதாய் உனக்கேனிவ்விதமான புத்தியேற்பட்டது நமது நாட்டினிடமாகக் குடிகளிட்ட பயிரையழித்திங் குறைந்ததான விம்மானைக் கொல்லும்படி சொல்லாது பாலன் கேட்கின்றான் பிடித்துத்தாருமென்று சொல்வது அழகாமா.

(ச-தி-வ-ம்.) அப்படியானல்,

சந்திரவதி தரு.

மன்னுவுந்தன் மனதுபோல வையம்பதனிலேசால
வலிமையுடனிம்மானை நலியச்செய்வீர்தானே (சா)

வசனம்.

பிரபூ உமது சித்தம்போல் இம்மானை வதைசெய்யும்படி பிரார்த்திக்கின்றேன்.

(அ-ன்-வ-ம்.) நல்லது கண்மணி.

## அரசன் மான்வேட்டையாடுகிறபாகம்.

சேருமுன்னே சேவல்கூவுதே யென்றமெட்டு.

* இராகம்-பியாக்-தாளம்-ஏகம்.

பல்லவி.

மானேயுந்தன்வலிமையறிகின்றேன் மன்னவன்யானே (மா)

அநுபல்லவி.

வானிலம்புகழ்கோசலை மாகாடதிலுறைந்த
ஆனினமுதற்பயிரெலாம் அழித்துவந்த (மா)

சரணங்கள்.

சிங்கம்புலியாளிபன்றி சிந்துரமனைகள்யாவும்
பங்கம்யான்செய்ததறிந்தும் பகைத்துத்தாவும் (மா)

அச்சமில்லாமலென்மு ளுக்ரமித்துவந்ததால்
இட்சணத்திலாவிபோக்குவே னிப்புவியின்மேல் (மா)

அரசன் வசனம்.

ஹே பிரதான் இதோ பார்த்தீரா இம்மானைச் சந்திரவதியானவள் பாலனுக்காகப் பிடித்துத் தரவேண்டுமென வேண்டினள் இதன் உண்மைகூறி ஒரே சரத்தினால் கொன்றுவிட்டேன் பொழுது அஸ்தமிக்க இன்னும் ஐந்துநாழிகை இருக்கும்போ லிருக்கின்றது சீக்கிரம் ரதகஜதுரகபதாதியெல்லாம் தயார்செய்யும் குதூகலமாக அயோத்திக் கேகுவோம்.

மந்திரி வசனம்.

அப்படியே எல்லாம் தயாராய்விட்டது பிரபூ.

அரசன் வசனம்.

பிராணசகி நீயும் பாலகனும் இப்பல்லக்கின்மீ தாரோகணித்து வாருங்கள் யானும் மந்திரியும் ரதத்தின்மீ தாரோகணித்து வருகின்றேன்.

(ச-தி-வ-ம்.) உத்தரவுபோல் பிரபூ.



103 வது பக்கம்



# பூஞ்சோலைப்பாகம்.

அரசன் வசனம்.

மந்த்ரீ இதென்ன ஆச்சரியமாயிருக்கிறது நாம் அனேக வனமெல்லாஞ் சுற்றி வேட்டையாடினோம் நம்மெதிரிற் றோன்றுகின்ற வனத்தைப்போல செழிப்புற்றதாகத் தோற்றப்படவில்லை ஆதலால் அதனைப்பார்த்துச் சீக்கிரமேகலாம்.

(ம-ரி-வ-ம்.) அவ்விதமே வருவோம் பிரபு.

அரசன் வசனம்.

பிரதான் இங்கு இளந்தென்றலானது வீசிக்கொண்டிருப்பது சுபாவம் அதனோடு குளிர்ந்த வாடை வீசுவதென்ன.

மந்திரி வசனம்.

ஆம் பிரபு சமீபத்தில் கட்டாயம் தடாகமிருக்கவேண்டும்.

அரசன் வசனம்.

மந்த்ரீ இவ்வதிசயத்தை சந்திரவதிக்கும் பாலனுக்கும் காண்பித்து இன்று ராத்திரி இவ்விடத்தில் தங்கி காலையில் அயோத்திக்கேகலாமென் றெண்ணுகிறேன் உமது இச்சையாது.

மந்திரி வசனம்.

என்னுடைய சித்தமும் அவ்விதமே அரசே.

அரசன் வசனம்.

மந்த்ரீ நமது சேனைசைநியங்கள் யாவற்றுக்கும் படிகொடுத்து போஜனமருந்தச்சொல்லி இவ்விடத்தில் உஷாராகத் தங்கியிருக்கும்படி செய்வதோடு தடாகம் சமீபத்திலிருந்தால் அதில் யான் வீற்றிருப்பதற்கு டேராவடிக்கும்படி செய்யும்.

மந்திரி வசனம்.

அவ்விதமே சீக்கிரம் தயார் செய்தேன் பிரபு.

அரசன் வசனம்.

அடியே யென் பிராண்சுந்தரீ பல்லக்கைவிட் டிறங்குவாயாக.

சந்திரவதி வசனம்.

கண்ணாளா அயோத்தி வந்து சேர்ந்தோமா

(அ-ன்-வ-ம்.) அல்ல.

அரசன் தரு.

மாவுங் கொய்யவும் மென்றமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

இந்தவனத்திற்கிணை யெந்தவனத்தைச்சொல்வேன்
என்சகியே எழிற்பொன்சகியே
கந்தரத்துக்கற்பக காவைநகைக்கவுற்ற
கார்வனமே வளஞ்சேர்வனமே
பாதிரியகில்மகிழ் பலவுகமுகுபுன்னை
படர்வனமே பனியடர்வனமே
கோதில்செருந்திகாயா குங்குமம்நாரத்தை
குளிர்வனமே பூந்தளிர்வனமே
மல்லிகைமுல்லையிரு வாகுசிசண்பகம்பிச்சி
மலிவனமே மிகுஒலிவனமே
நெல்லிதுளசிதாழை நீளுமந்தாரம்வாழை
நிறைவனமே புகழுறைவனமே
தெங்குகரும்புமூங்கில் தேக்குகொன்றைமாநாங்கில்
செறிவனமே நன்னெறிவனமே
புங்குபுளியசோகு புரசாலரசுபாலை
பொலிவனமே பேர்புனைவனமே
அளிமயில்குயிலன்னம் கிளிகிந்நரங்கெருடன்
அமர்வனமே அருள்அமைவனமே
மாதவமுனிவரும் மகாரிஷிமீஸ்வரரும்
வாழ்வனமே மணம்சூழ்வனமே
போதவே அரம்பையர் புகழ்ந்தனுதினங்கொய்யும்
பூவனமே எழிற்காவனமே

வசனம்.

கண்மணி. இவ்வனத்தின் சுந்தரத்தைப் பார்த்தனையா என்னவ் நோதமா யிருக்கின்றது.

(ச-தி-வ-ம்.) ஆம் பிரபு.

-76-



அரசன் விருத்தம்.

தாருலவுமார்பழகன் றடங்கண்ணேசிச்
சந்த்ரதயன் றந்தகண்ணே சாற்றக்கேளாய்
சீருலவுமிவ்வனத்தின் சிறப்பையெல்லாம்
திருக்கண்ணுற்கண்டு களிகொண்டேயிந்தப்
பேருலவுங்குளிர்வாவிக் கரையடைந்தோம்
பிறங்குகதிர்குடதிசையை யடைந்தானமால்
காருலவுமின்றிரவிங் கிருந்தெழுந்து
காலையில்நங்களுநகருக் கேகுவோமே.

வசனம்.

கண்மணி இவ்வனத்தின் சிங்காரங்களைக் கண்ணுற்றுக் களிகூர்ந்து இப்பொய்கைக் கரையையடைந்தோம் சூரியனு மஸ்தமனமாயினன் இன்றிரவு இங்கிருந்து காலையிலெழுந்து அயோத்திக்கேகுவோம்.

(ச-தி-வ-ம்.) நல்லது பிராணரக்ஷகா.

அரசன் வசனம்.

பிராணரக்ஷகி இப்பொய்கையைக் கண்ணுற்றுப்பார் என்ன அலங்கிருதமா யிருக்கின்றது.

இந்தப்பூங்காவினிலே யென்றமெட்டு.

* இராகம்-கமாசு-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

அற்புதம்பாரய்யிலே இவ்வழகியபொய்கையிலே
மற்றடங்தோள்மதிதயன் மாதவக்குயிலே (அ)
பாயுஞ்சேல்மீனதனையுயர் பகுசிக்குழாங்கள்முற்றும்
வாய்கள்தனைவேதிறந்து வன்மையுடனேசுற்றும் (அ)
செந்தாமரையிலேமேல் திரளாகவனகளின்ற
விந்தைமணிகருவென்ன மெல்லன்னமேவுகின்ற (அ)
அங்கரைமீதிலுற்றதென்னை யார்மதுவைவடிக்க
பொங்கமாய்வாளைபசித்துப் பூரித்திருக்குமிக்க (அ)
வண்டினங்கள்மிதிக்கநன் வாய்விழ்வெண்வாரிசம்
தெண்டிரைதனிலுதித்த திங்கள்போன்றபாரிசம் (அ)

பாசியலைகளிறைப்பண் பாகவேயலைவது
மாகில்வடவைப்புகையின் மாதிரியேயானது (அ)

வசனம்.

பிராணசகி இவ்விதவிசித்ரமுற்ற பொய்கைபோ லெவ்விடத்துங் கண்டதேயில்லை. இதன்கரையி லமைத்திருக்கப்பட்ட கூடாரத்திற் பிரவேசித்து நித்ய கர்மானுஷ்டான முடித்துப் போஜன தாம்பூல மருந்தி இன்றிரவிங்கிருந்து நித்திரைசெய் தெழுந்து காலையில் அயோத்திக்குச் செல்லலாமென நினைக்கின்றேன் உனதபிப்பிராயம் யாது?

(ச-தி-வ-ம்.) அவ்விதமே செய்வோம் பிரபூ.

சந்திரவதி தரு.

சரசஞ்செய்யவா வென்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

நித்திரைசெய்கிறார் மன்னன் (நித்)

அநுபல்லவி.

நித்திரைசெய்கிறாரோ மன்னன்
நித்திரைசெய்கிறார் மன்னன் (நித்)

சரணங்கள்.

சித்திரமிகுத்திலங்கும் டேராவுக்குட்டிலங்கும்
பத்திரபுஷ்பம்நிறைந்திசைப் * பஞ்சணைமிசைமன்னன் (நித்)

அந்தவனந்தன்னைநாடி பந்தமுடன்வேட்டையாடி
இந்தவாவிக்கரையில்வாச இளந்தென்றல்வீசமன்னன் (நித்)

அளிகள்செழுந்தேனையுண்டு அரியசுதிகூட்டவிண்டு
கிளிகள்பாடமயில்களாடக் கொடுங்கலிபோடமன்னன் (நித்)

சந்திரவதி தரு.

அரகராசிவாவென்றமெட்டு.

* இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

சித்தமகிழ்வாய்நித்திரைசெய்கிறார் சிரரிச்சந்த்ரராஜன்
ராஜன் திருநேசன் விசுவாசன் சக்கரேசன் (சித்)



அநுபல்லவி.

மத்தகக்களிர் சித்திரகாயம்
மான்நரிதிரட் சிங்கம்
அத்திரியீட்டம் பத்திரியொட்டகம்
அத்தனையுமின்று வெற்றியுடன்கொன்று (சித்)

சரணங்கள்.

அல்லிகுவளை வல்லிசெந்தாமரை
அழகார்ந்திடும் ஆம்பல்
சல்லாபமாய்ப்படர் நல்லவாவிக்கரை
தங்கநிறமாயி லங்குகூடாரத்தில் (சித்)

செங்கையர்த்திரு மங்கைமார்சிலர்
சிர்சாமரை வீச
துங்கமணியே யெங்கும்பதித்த
தூயநன்மஞ்சத்தில் நாயகியாளுடன் (சித்)

சந்திரவதி விருத்தம்.

நிதமலரணையின்மீது நித்திரைசெய்தாற்கங்கு
விதமுடனிங்குமுன்ன மெழுந்திடும்வழக்கமின்று
சதகநிருதயமாகுஞ் சமயமாகியுமெழாத
விதமெனோவறிகிலேன்யான் வேந்தனேயெழுந்திடீரோ.

ஐயோமகனே என்னருமைக் கண்மணியே யென்றமெட்டு.

* இராகம்-காபி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

மன்னாஎன்நாதா மகிதலம்புகழ்நீதா
பொன்மலர்வாவிப் புதுமைக்கரையில்மேவி
இன்னமுந்தூக்கம் நீரின்றுசெய்வதெனூக்கம் (ம)

எம்பிரானேசா எழில்சேரயோத்திவாசா
உம்பர்வான்மீதே உடுக்கள்மறைந்ததே
கொம்பில்மருவிக் கூவிதேகரிக்குரிவி (ம)

குருதிவேல்வேந்தே குணதிசையிலிருந்தே
பருதியுதித்தே பைம்பொற்கதிர்விரித்தே
இருடனைப்பாரி லேகச்செய்தவாரானேரில் (ம)

ஏந்தலேயார்த்து எழுந்ததேசெம்போத்து
பூந்தடஞ்சூழ்ந்த பொருட்டெலாம்வாய்விழ்ந்த
சாந்தனேபுன்னை சண்பகங்குவளைகொன்னை (ம)

சாதிமல்லிகை தாமரைசிவந்திவகை
மாதவியல்லி மகிழ்ரோஜாசெவ்வல்லி
பாதரிமாசம் பங்கிமலர்களின்வாசம் (ம)

பரிவுடன்வீசும் பண்பதிருலோமூசும்
வரிபுலிதந்தி மடங்கல்துரகமந்தி
அரியதோர்வேட்டை யாடியதாலோநாட்டை (ம)

அன்புடன்சேர அகத்திலெண்ணுதுவீர
இன்பமாய்நித்திரை யின்றுகொண்டீரோவரை
வன்புயக்கோமா வாகாய்த்துயினீங்குவீரமா (ம)

வசனம்.

பிராணேசா. வைகறைதுயிலெழு என்ற நீதியையுணர்ந்த தாங்கள்இன்று சூரியனுதயமாகக்கூடிய சமயமாகியும்இன்னும்எழுந்திராத காரணம் காட்டினிடமாக வேட்டையாடிய சோபமோ அல்லது இளந்தென்றல் வீசுவதாலுண்டாகிய உல்லாசமோ மற்றென்னவோ அறிகிலேன் சீக்கிரம் எழுந்திருங்கள் அயோத்திசேர்வோம்.

நன்னகரஞ்சேர பென்றமெட்டு

* இராகம்-முகாரி-தாளம்-ஆதி.

பல்லவி.

நம்பதிக்கேயேக அம்புயனேவாரும் (நம்)

அநுபல்லவி.

செம்பதுமவாவியில் சேருறும்வேயின்
கெர்ம்பின்றவுபாயுங் குறைவில்வளஞ்சேர் (நம்)

சரணங்கள்.

மாரனனைரூபனே திறற்சாபனே
மானிலத்திற்ப்ர தாபனே
ஆரணியத்தின்மீது அடைவுடனீரிப்போது
தீரமாய்நித்திரை செய்வதுஞாயமோ (நம்)



வீரமணிப்பூந்தாளனே என்மணாளனே
மேன்மைமிகுந் தயாளனே
வாரியதனிலிதோ வான்கதிரைவிரித்தே
சூரியனுதித்தனன் தோன்றலேயெழுந்தே (நம்)

வேங்கையாளிநரிசிங்கம் விறன்மாதங்கம்
விரைவாகவின்று நீர்பங்கம்
பாங்குடனேசெய்த பரிவால்வந்தசோபமோ
ஈங்குநீர்நித்திரை யின்னமுஞ்செய்வது (நம்)

வசனம்.

ஆ ஆ என்ன ஆச்சரியமாகவிருக்கிறது எனது பிராணேசனை நித்திரையிலிருந் தெழுப்பக் கூடாதெனவெண்ணி காதிற்கினிமையான சில பாடல்களைப்பாடியும் இன்னும் எழுந்திருக்கவில்லை இஃதென் காரணமோ வறிகிலேன்.

டை வசனம்.

பிராணேசா கீழ்திசையில் பருதி யுதித்தனன் எழுந்திருங்கள் இவ்விதம் ஒருநாளும் நித்திரை புரிந்ததில்லையே.

---

## அரசன் நித்திரை நீங்கி கனவுகண்டதை
### மந்திரியிடம்சொல்கிறபாகம்.

(அ-ன்-வ-ம்.) ஆ, என் கண்ணாட்டி.

சந்திரவதி வசனம்.

என்ன பிரபூ பதறி யெழுந்திருக்கின்றீர்கள்.

அரசன் வசனம்.

சொல்லுகின்றேன் கண்மணீ.

(அ-ன்-வ-ம்.) அடே சேவகா.

(சே-ன்-வ-ம்.) மகாராஜ்.

அரசன் வசனம்.

சீக்கிரம் மந்திரியை யழைத்துவா.

(சே-ன்-வ-ம்.) உத்தரவுபோல் அரசே.

சேவகன் வசனம்.

பிரதான் சிரேஷ்டரே சேவகன் வந்தனம் செய்கிறேன்.

மந்திரி வசனம்.

கல்யாண் சேவகா அவசரமாய் வந்த காரணம் யாது?.

சேவகன் வசனம்.

பிரபூ மகாராஜா தங்களை சீக்கிரம் அழைத்துவரும்படி ஆக்ஞா பித்தார்கள்.

(ம-ரி-வ-ம்.) இதோ வருகின்றேன்.

மந்திரி வசனம்.

அரசே மந்திரி வந்தனஞ் செய்கின்றேன்.

(அ-ன்-வ-ம்.) கல்யாண் மந்த்ரிவிர்யா.

மந்திரி வசனம்.

பிரபூ, எச்சமயமும் அலர்ந்த செந்தாமரைப் புஷ்பம்போல இருக்கும் தங்கள்முகமானது இச்சமயம் வாடியிருப்பதற்கு என்னகாரணமோ தெரியவில்லையே.

அரசன் விருத்தம்.

ஐயையோ வெனதுமன மனலின்மெழு
கெனவுருகு தியாதுசெய்வேன்
செய்யநறும் பூந்தருச்சூழ் பொய்கையினற்
கரைமிசையிட் டோராவுக்குள்த்
துய்யசப்ர மஞ்சத்தின் மீதின்றி
ராத்திரியிற் றுயிலும்போது
வெய்யவொரு கனவுகண்டு விழித்தெழுந்தே
னென்னென்று விளம்புவேனே..

கானகத்தில் நான்தனியே யென்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

விளம்புவேனுநினும் விளம்புகின்றேனதிக
வினயத்துடனிருந்தே விரும்பியேகேட்பையே (வி)

குளம்புதேயிங்கதன் கொள்கையைநினைக்கையில்
குவலயமீதினி லெவர்செயன்யாயமோ (வி)

முந்தவென்பிதாவுளாநும் அந்தரசொர்க்கமென்னும்
மோக்ஷவிட்டையடையத் திசூன்யமாகக்கண்டேன் (வி)



பிந்தவுடனேயைந்து பெண்களையானுகந்து
பெட்புடனேயடையக் கட்புலனுலேகண்டேன் (வி)

உவந்தவந்தமாதருள் ஒருத்தியைநன்னீதருள்
ஒங்குமோர்முனிவர்க்குப் பாங்குடனீயக்கண்டேன் (வி)

அவகடமாகவோர் அனங்கவனுடன்சேர்ந்தே
அதிகமாகமுனிந்தே சதிசெய்துபோகக்கண்டேன் (வி)

மீதமூவர்களிலோர் மாதுபசிப்பைவிட்டே
மிகுந்தவனத்தினிடை புகுந்திடவுங்கண்டேன் (வி)

ஏதமுடனேபின்னோர் ஏந்திழைகண்தெரியா
தேங்கித்திகைத்துப்பதைத்தே நீங்கிடவுங்கண்டேன் (வி)

ஐவரில்நால்வர்க ளகன்றிடப்பின்னொருத்தி
அசையாலேயென்னுடன் இசைபெறவிருக்கக்கண்டேன் (வி)

தெய்வகிருபையாற்பின் சிறந்தபாக்கியமெல்லாம்
சிற்றிடையன்னவளாலே பெற்றிருக்கவுங்கண்டேன் (வி)

நாயகியாமைவர் லபித்ததும் அதனுள்விழை
சந்திரமின்னதென் றறிந்திடவென்னாவில்லை (வி)

தூயகடவுள்செய் சோதனையோவறியேன்
சுருக்கிலிதன்பயனை சொல்லுவாய்தெரியவே (வி)

வசனம்.

மந்த்ரீ. என்னென் றெடுத்துரைப்பேன் வேட்டையாடிய சோபத்தால் மிகயயர்ந்து இப்பஞ்சணையில் நித்திரைசெய்தேன் அச்சமயம் எனதுபிதாவான திரிசங்குசக்கிரவர்த்தியானவர்யான்ஜெனித்துமூன்றுவதுவருஷம் சுவர்க்கத்திற்கு சரீரத்துடன்எய்த ஆங்குளார்மறுக்க விஸ்வாமித்திர மகரிஷியால் அந்தரசொர்க்கமாகிய நக்ஷத்திரமண்டலத்தில் வீற்றிருந்தவர் இன்றெய்தியதாகவும் பின்னர் யான் ஐந்துமாதர்களை விவாகஞ் செய்துகொண்டு சுகித்திருந்ததாகவுங் கண்டேன் அவ்விதமிருக்குங்கால் அவ்வைவருள் ஒருத்தியை ஓர் முனிவனுக்கு யானே மனமுவந்து யீய்ந்தேன் மற்றொருத்தி யவனுடனே அம்முனிவன்பின் சென்றனள் சென்றமாதிருவர் போக மீத மூன்றுமாதரில் ஒருமாது பசியால் வருந்திக் கொடிய சுரத்தினிடமாக ஏகினள் மற்றோரேந்திழை யிரண்டு கண்ணுந் தெரியாது மிகவும் பரதவித்து என்னை விலகிவிட்டனள் சென்ற நான்குமங்கையர்தவிர மற்றென்

ணிட மன்புடனிருந்த ஓர்கங்கையானவள் இம்மைக்கும் மறுமைக்கும் உறுதியாக என்னுடன் கூடியிருந்து நலத்தைத்தந்தனள் அமைச்சே இந்தவிதமாகயான் கண்டசொற்பனத்தின் சங்கையை நினைக்க நினைக்க என் மனம்புண்ணுகிறது என்செய்வேன் இதன்பயனைச்சீக்கிரம் எடுத்துரைப்பாயாக.

மந்திரி வசனம்.

அரசே வியாகூலமடையாதீர்கள் அதன்பயனை யெடுத்துரைக்கின்றேன்.

ஷை வசனம்.

ஹே கிருபாகடாக்ஷ வீக்ஷண்ய பிரபோ. இறைவர் கண்டகனவின்றன்மையை நினைக்கநினைக்க என்மனம் வருந்துகின்றதே இதனதுபொருளை இறைவரிட மெவ்வித மெடுத்துரைக்கப் போகின்றேன்.

மந்திரிசொல் அகவல்.

விற்பனவிவேக வேந்தனீகண்ட
சொற்பனப்பயனைச் சொல்கிறேன்கேளும்
தேவரீரன்பாய்த் திருமணமுடித்த
பாவையரைவர் பஞ்சசத்திகளாம்
திருந்தவேகின்முன் சிறந்துதோன்றிய
அருந்தவசிரேஷ்ட னங்கோசிகனும்
அதிலவர்க்களித்த ஆயிழையொருத்தி
நிதிகளிற்சிறந்த நிறைமுதற்சத்தியாம்
ஆய்ந்துபின்னவனுடன் அக்கணஞ்சென்றவோர்
ஏந்திழையரசெனும் இச்சாசத்தியாம்
வேர்த்தரும்பசியுடன் மேவியவொருத்தி
கீர்த்திசேர்மனையெனுங் கிரியாசத்தியாம்
இன்னுமிருகண் இழந்துசென்றவோர்
மின்னிடைமகவெனும் மெஞ்ஞானசத்தியாம்
மற்றுந்தம்மிடம் மகிழ்வுறவிருந்தவோர்
கொற்றவள்மெய்யெனுங் கூர்பராசத்தியாம்
அதினாற்பின்ன ரகன்றதோர்பொருளும்
பதியுமனைவியும் பாலனுமெளிதாய்க்
கிடைத்திடப்பெற்றுக் கேசவன்போல
வடுப்படாதுலகில் வாழ்குவீர்தாமே.



வசனம்.

பிரபோ. தாம் கனவினிடமாகத் திருமணமுடித்ததாகக் கண்ட மாதர்களைவரும் பஞ்சசத்திகள் அஃதாவது ஆதிசத்தி, இச்சாசத்தி, கிரியாசத்தி, ஞானசத்தி, பராசத்தி, பின்னர் தம்முன்தோன்றிய அருந்தவன், விஸ்வாமித்ரமகரிஷி, தாம் அன்னவர்க் களித்தவோர் மாதானவள் செல்வத்திற் சிறந்த ஆதிசத்தியாகும். மற்றும் அன்னவளோடு அவ்வருந்தவனுடன் சென்றவோர் பெண்ணானவள், அரசாக்ஷியென்னும் இச்சாசத்தியாகும், இதனையோசிக்குங்கால் தமதுஐஸ்வரியமும் அரசாக்ஷியும் தம்மைவிட்டு நீங்கிவிடும்போற் றோன்றுகின்றது.

மீண்டும் கொடியப்பசியினால் வருந்திவனத்தினிடமாகப் போனவோர் மங்கையானவள் துணைவியாகிய கிரியாசத்தியாகும் மேலும் இரண்டுநேத்திரமுந் தெரியாது நீங்கியவோர் நேரிழையானவள், இகபரசாதனத்திற் கேதுவாகிய மகவெனும் மெஞ்ஞானசத்தியாகும்.

இதன்கருத்தாவது, எனதுமாதாவாகியும் தமது பத்தினியாகியுமிராநின்ற சந்திரவதியும் சிறப்புற்றோங்கிய தமது செங்கோல் செலுத்துவதற்காகச் செனித்த புத்திரசிகாமணியாகிய தேவதாசனும் தம்மைவிட்டுப் பிரிந்துவிடுவார்கள்போலு மிருக்கின்றது.

மற்றும் தம்மைவிட்டகலாதிருந்த வோர் ஏந்திழையானவள் மோக்ஷசாம்பிராஜ்யத்திற் கேதுகரமாய் விளங்காநின்ற சத்தியமென்னும் பராசத்தியாகும், இதனது உண்மையை யோசிக்குங்கால் தம்மைவிட்டு நீங்கியதான ஐஸ்வரியமும் அரசாக்ஷியும் பத்தினியும் புத்திரனும் சுலபமாய்க் கிடைக்கப்பெற்று ஒற்றேருருவமில்லாப் பிரமத்தினது அருளையடைந்து செங்கோலோச்சி சுகமுடன் வாழ்ந்திருப்பீர்களரசே.

அரசன் வசனம்.

மந்த்ரீ. நீர்கூறிய கனவின்காரணம் யாவும் கேட்டுவந்தேன் அதில் பத்தினியையும் பாலனையும் பிரிந்துவிடுவேனென்று பாதிவார்த்தையாகக் கூறினீரே அதின் விஷயமென்ன.

(ம-ரி-வ-ம்.) ஆம் பிரபு, அது உண்மை.

அரசன் விருத்தம்.

ஐயையோ சிவமே ஆதிஅண்ணலே யரனேயிந்நாள்
செய்யமா நகரும்நாடுஞ் செல்வமு மிழப்பதன்றி
மைவிழி மனையாளோடென் மகனையும் பிரியும்வண்ணம்
வெய்யவோர் கனவுகாண வினையென்ன புரிந்திட்டேனே.

சிவசிவா யான்பூர்வத்தி லென்றமெட்டு.

* இராகம்-நீலாம்புரி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஹரஹரகங்காதரா அம்பிகைமனோகரா
ஆலமிடறணியும் நாதா
உரகபணிமெய்பூண்ட ஓம்சதாசிவபரா
உலகம்படைத்தருள்நன் நீதா (ஹர)

கனவினிலைமைதன்னைக் கருத்தினில்நினைக்கையில்
கனலிலிடுமெழுகு போலே
மனமதுவுருகுதே மங்கையோர்பாகனே
மைந்தனென்செய்வேனினி மேலே (ஹர)

தன்னுயிரைப்போலவே தாலமீதினிலுள்ள
சகலவுயிர்களையும் நானே
பின்னமிலாமலென்றும் பெம்மானேகாத்ததல்லால்
பிழையொன்றுஞ்செய் தறியேனே (ஹர)

இந்தஅடவிதன்னி லின்பமுடனேதங்கி
இன்றுதுயின்றதாலோ அவமே
உந்தச்செயுஞ்சொற்பன முள்ளம்நடுங்கக்கண்டேன்
ஓகோயெவ்விதமுய்வேன் சிவமே (ஹர)

வசனம்.

ஹே கருணாகரா தன்னுயிர்போலவே மன்னுயிரையுமெண்ணி இரக்ஷித்ததல்லால் பிழையான கொடுங்கோல் செய்ததில்லையே அவ்விதமிருக்க யான் இங்கிவ்வித கனவுகாண முன்செய்த பாவமோ அறிகிலேன் இதற்கென் செய்வேன்.

சந்திரவதி விருத்தம்.

காசினியைபோர்குடை நீழலிலிருந்தாள்
  கதிர்குலத்துக்காவலரே கழறக்கேளும்
கோசிகமாமுனியாலே நமக்குவாய்த்த
  கோனகர்நன்னுடருளை யிழந்திட்டாலும்
மாசில்லாமகனுடனே யெனையும்விட்டே
  வருந்திநீர்மனந்தளர்ந்து பிரிந்திட்டாலும்
பூசிதைசேர்தைரியத்தை விடாமலென்றும்
  புகழ்பெறவே சத்தியத்தைக் காப்பீரின்றே.



வசனம்.

பிராணரக்ஷகா என் வருந்துகின்றீர்கள் யாதொரு கௌசிகரிஷியினாலே நமது நாடுநகர் யாவற்றையும் இழந்து என்னையும் புத்திரனையும் பிரிந்துவிட்ட போதினும் தாம் சத்திய மொன்றைமட்டும் காப்பாற்றி வரவேண்டும்படி. பிரார்த்திக்கின்றேன்.

தேவதாசன் விருத்தம்.

திங்களைச்சடையிற்சூடுஞ் சிவபிரான்வரத்தாலென்னைத்
துங்கமாயீன்றெடுத்த தோன்றலேகனவுபோல்நம்
அங்கண்மாநாடிழந்தே அடியனுமன்னையுந்தான்
தங்களைப்பிரிந்திட்டாலும் சத்தியந்தவறிடேல்.

வசனம்.

சங்கரனைத் துங்கமாய்ப்போற்றி மங்களமாய் அங்கண்மாஞாலத்துள் யென்னை யீன்றெடுத்த பிதா மஹாராஜ தாங்களின்று கண்டகனவுபோலவே நமக்கு வந்தெய்திய போதினும் மெய்ம்மையைத் தவரவிடாதீர்கள்.

மந்திரி வசனம்.

அரசர்க்கரசே யெல்லாந் தெரிந்த தாங்கள் பாலனையும் என தன்னையையும் துயருறும்படியாகத் தாங்களும் விசனக்கடலில் மூழ்கிக்கொண்டிருப்பது நலமாமோ.

வெண்பா.

தக்கசகுனஞ்சுபதம் சாமுத்திரியஞ்சொல்
மிக்கவசரீரிகளு மென்றைந்தும்-தற்காலம்
கூடினுங்கைகூடுங் கூடாதொழிந்தொருகால்
வீடினும் வீடிவிடும்.

என்பதை யெண்ணி மனதைத் திடப்படுத்திக் கவலைக்குள்ளாகாதிருக்கும்படி பிரார்த்திக்கின்றேன் வரமருளல்வேண்டும்.

அரசன் வசனம்.

வாஸ்துவம் துயருருவதி லென்னபயன் மந்திரி சீக்கிரம் நமது சேனைசைநியங்களையெல்லாம் அயோத்திக்கேகும்படிதிட்டஞ்செய்யும்

(ம-ரி-வ-ம்.) அப்படியேசெய்கிறேன் பிரபு.

அரசன் வசனம்.

மாதே நாம் இவ்வாரணியத்திற்கு வந்து வேட்டையாடி குடிகளுக்கு நலத்தைச்செய்தோமென்ற மகிழ்ச்சியைப் பார்க்கினும் பதின்மடங்கு துக்கம் கனவினு லேற்பட்டுவிட்டது ஈசன் நம்மை எவ்வித கஷ்டத்திற்குள்ளாக்கினும் சரியே வா சீக்கிரம் அயோத்தி சேர்வோம்.

சந்திரவதி வசனம். நல்லது பிரபூ.

விஸ்வாமித்திரன் வசனம்.

ஆ ஆ என்ன ஆச்சரியம் யான் நேற்றனுப்பிய விலங்கினமனைத்தையும் கொன்ற சங்கதி பிழைத்தோடிவந்த சில மிருகங்களாலறிந்து அவ்வரிச்சந்திரனை இரதத்துடன் அதாகுதஞ் செய்யக்கூடிய வலிமைவாய்ந்த ஓர் பன்றியை சிருஷ்டித்தனுப்பினேன் அப்பன்றியும் அன்னவன்சரத்தால்நொந் திவடம் வந்துவிட்டன இனிமேல் நாம் இவ்வித காரணங்களை நடத்துவது சரியல்ல வேறுபாயஞ் செய்யவேண்டியிருக்கிறது. அதாவது,

கொண்டலைப்பழித்த கூந்தலும் மூன்றாம் பிறைபோன்ற நெற்றியும் வில்லைநிகர்த்த புருவங்களும் வேலைப்பழித்த விழியும் கத்தரிக்கோல்போன்ற செவிகளும் குமிழம்பூப்போன்ற நாசியும் சாணைபோன்ற கன்னங்களும் அல்லிமலர்போன்ற வாயும் முத்தைவென்ற பற்களும் பவளத்தை நிகர்த்த இதழ்களும் சங்கைப்போன்ற கழுத்தும் மூங்கிலைவென்ற தோள்களும் மகரவீணைபோன்ற முன் கைகளும் களிற்றுமீன்போன்ற விறல்களும் கிளிமூக்குப் போன்ற நகங்களும் சூது-கிண்ணம்-வெற்பு-பங்கயம்-தென்னங்குரும்பை-சக்கரவாகப்புள்-கைத்தாளம்-நீர்க்குமிழி-குமிழ்-பம்பரம்-பந்து முதலியவெல்லாம்வென்ற ஸ்தனங்களும் ஆலிலைபோன்ற வயிறும் நீர்ச்சுழிபோன்ற உந்தியும் மின்னல்போன்ற இடையும் வாழைபோன்ற தொடையும் ஞண்டுபோன்ற முழந்தாளும் வரால்மீன்போன்ற கணைக்காலும் அமுதம்போன்ற வசனமும் மயில்போன்ற சாயலும் உடைய இரண்டு மாதரைச் சிருஷ்டித்து சில புத்திகளைப் போதித்து இதோ அன்னவன் பால்விடுத்து என் சபதத்தை நிறைவேற்றுகின்றேன்.

பொது விருத்தம்.

கோசிகன்விட்டநாசிக் கொடியமூச்சாலேயன்றேன்
பேசியவாறிரண்டு பெண்களுமுதித்துமென்றன்
தேசிகாவெமைப்படைத்த செய்தியாதையெடுத்தே
ஆசிலாதுரைப்பாயென்ன வடிதொழுதுற்றொன்றே.



பாணப்பெண்கள் தரு.

தந்திரமாய்த் தளிர்த வென்றமெட்டு.

* இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

செந்திருபோல்திகழ் நன்மோகினிவந்தாள் (செந்)

அநுபல்லவி.

சிந்தூரமாகியபொட்டு சுந்தரநுதலிலிட்டு
கொந்தார்சடைப்பின்னலிட்டு கந்தரத்திலாரந்தொட்டு (செ)

சரணங்கள்.

தங்கச்சிலம்பெடுத்து பங்கயப்பாதந்தொடுத்து
மங்களகீதம்படித்து பொங்கமாய்நடனம்நடித்து (செ)

குங்குமகளபவாச மெங்கினுந்திரேகம்வீச
துங்கமாய்ப்பார்ப்போர்கண்கூச செங்கைவளையணிந்துல்லாச (செ)

பாணப்பெண்கள் விஸ்வாமித்திரரை
வந்தனஞ் செய்வது.

நீரொன்றேனும் பொய்சொல்ல லாகுமோ வென்றமெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

மாமுனீஸ்வரே கோடிவந்தனம் (மா)

அநுபல்லவி.

தாமரைப்பாதனே சதுர்மறைநீதனே
கேமசுக்ஞானனே நிரஞ்சனனே (மா)

சரணங்கள்.

எங்களையழைத்தது யாதுகாரணமது
மங்களமாகவே வழுத்துவீர்தேவே (மா)

(வ-ம்.) அனேகவந்தனம் அருந்தவமுனியே.

விஸ்வாமித்திரர் வசனம். கல்யாண்.

பாணப்பெண் வசனம்.

பிரபூ. இக்காலம் எங்களையழைத்த காரணமின்னதென் றெடுத்துரைக்கப் பிராத்திக்கின்றோம்.

(வி-ர்-வ-ம்.) உரைக்கின்றேன் சமீபத்தில் வாரும்பெண்களே

(பா-ள்-வ-ம்.) நல்லது சுவாமி.

முனி வசனம்.

பெண்களே. உங்களுக்கு சங்கீத சாயித்ய நர்த்தனவேணு கான ங்கள் சொல்லிவைக்கின்றேன் கற்றுக்கொள்ளுங்கள்.

பாணப்பெண்கள் வசனம்.

பிரபூ. தாங்க ளன்புகூர்ந்துரைத்த க்ஷணமே சங்கீதசாயித்ய நர்த்தன வேணுகானங்களில் தேர்ச்சியடையலானோம்,

முனி வசனம்.

நல்லது பெண்காள் இன்னுமொன்று சொல்கிறேன் ஞாபகத்துடன் கேளுங்கள்.

(பா-ள்-வ-ம்.) கேட்கிறோம் சுவாமி.

முனிவர் விருத்தம்.

அன்னநடைக் கன்னியரே சொல்லக்கேளும்
அரியவா விக்கரையி லமர்ந்திருக்கும்
மன்னவனை மயோத்திபனைக் கண்டுபோற்றி
வாய்ந்த கீதத்தாலும் நடனத்தாலும்
அன்னவனை மயங்கும்வண்ணஞ் செய்துநீவீர்
அவன்குடையைக் கைக்கொண்டு வாரீரன்றேல்
சின்னமிலா மாலைகொள்வி ரதுவுமன்றேல்
சேருமெனச் செப்பிவிடை தெரிந்துவாரீர்.

வசனம்.

பெண்களே. அரிதாகிய இவ்வனத்தின் பொய்கைக்கரையில் வீற்றிருக்கும் அரிச்சந்திரனைக்கண்டு அஞ்சலிசெய்து சங்கீதத்தினுலும் நர்த்தனத்தாலும் அன்னவனை மயக்கி அவனது பூச்சக்கரக் குடையைக் கைக்கொண்டுவாருங்கள் அதைத்தராவிடில் வெற்றிமாலையைவாங்கி வாருங்கள் அதுவுந்தராவிடில் உங்களை விவாகஞ்செய்துகொண்டு சேரும்படி சொல்லிப் பதில்தெரிந்துவாருங்கள்.

(பெ-ள்-வ-ம்.) அவ்விதமே சென்றுவருகின்றோம் பிரபூ.

(வி-ர்-வ-ம்.) நல்லது பெண்களே.



110 வது பக்கம் பாணப்பெண்களைவிரட்டுகிறபாகம்



# பாணஸ்திரீகள் அரசன் இடம்வருகிறபாகம்.

பாணப் பெண்கள் தரு.

தும் ஆசாஜானி யென்றமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ஏகம்.

பல்லவி.

சேயிழையேமன்னனிடம் செல்லலாம்வாடி-அடி (சே)

அநுபல்லவி.

தூயவிஸ்வாமித்ரமுனி சொற்போலவினி (சே)

சரணங்கள்.

இவ்வனமீது யாமுமிப்போது
செவ்விபெறுமன்னனிடம் ஒவ்விநடந்தே (சே)

நாணையும்பூட்டி வீணையைமீட்டி
தோணும்படிச்சங்கீதங்கள் சொகுசுடன்பாடி (சே)

சேடி வசனம்.

சகி, நமது பிதாவாகிய விஸ்வாமித்திரர் கூறியவண்ணமே வாவிக்கரையில் வந்திருக்கும் வள்ளலிடஞ் சென்றுவருவோம் வருகின்றாயா.

(சகி-வ-ம்.) அவ்விதமே செல்வோம் வா.

சேடி வசனம்.

நாம் எவ்வளவுதூரமோ நடந்துவந்திருக்கின்றோம் இன்னும் அரசனிருக்குமிடந் தோற்றவில்லையே.

சகி வசனம்.

சேடீ அதோ ஓர் பூஞ்சோலை தெரிகின்றது அதனுள் நாமிழைந்து பார்ப்போம்.

சேடி வசனம்.

அதோ பார்த்தையா சகி அதிவினோதமான ஓர் டேராவமைக்கப்பட்டிருக்கிறது அதன்பக்கத்தில் ரதகஜதுரகபதாதி யென்னும் நால்வகைச்சேனைகளும் எங்கேயோ புறப்படுவதற்கு ஆயுத்தமா யிருக்கின்றது.

சகி வசனம்.

சேடி சீக்கிரம் வா அரசன் அயோத்திக்குப் புறப்படுகின்றான் போலு மிருக்கின்றது.

சேடி வசனம்.

சகி இங்கு சூழ்ந்திருக்கக் கூடியயாவர்களுக்குந் தெரியாது அரசன் முந்நிலையில் நமக்கு பிதாபோதித்திருக்கும் வித்தையினால் சென்றுவிடுவோம் வா.

சகி வசனம்.

சேடி என்னவிசித்திரம் ஒருவருக்குந் தெரியாது நாம் அரசன் சமுகம் வந்துவிட்டோம் இதோ இருக்கும் அரசனை வணங்குவோம் வா.

(சேடி-வ-ம்.) அவ்விதமே.

## பாணப்பெண்கள் அரசனை வணங்குதல்.

பரந்தாமனே ராமனே யென்றமெட்டு.

* இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

மலர்ப்பாதனே விநோதனே
வணங்கினோம்நன் நீதனே (மல)

அநுபல்லவி.

அலர்தலைமா நிலம்புகழும்
அரசரொன்றாக ந்தொழும் (மல)

சரணங்கள்.

மாரனிகர் சுந்தரனே
மண்புவிக்கோ ரிந்திரனே (மல)

மதியைநிகர் முகத்தோனே
மாகதிமைசேர் அகத்தோனே (மல)

சிலைதிகழும் புயத்தோனே
சீரார்மத கயத்தோனே (மல)

வசனம்.

புவனசக்கரேஸ்வரா அநேக வந்தனம்.



(அ-ன்-வ-ம்.) கல்யாண மாதர்களே.

அரசன் தரு.

இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

கன்னியரேயென்னிடம்வந்த காரணம்கழறுவீர் (கண்)

அநுபல்லவி.

மன்னியகனியிதழமுத வார்த்தைவிற்புருவமதிமுக (கண்)

சரணங்கள்.

வேல்விழிவண்டனையகூந்தல் மின்னிடைஅன்னநடை
ஆல்வயிர்குரண்டைநாசி யாடிகன்னமூசலஞ்செவிக் (கண்)

சேனையளாவுங்கமுகு கண்டம்வேய்திகழ்புயம்
வீணைமுன்கைபயிற்றங்காய் விறல்பவளநகமிலகும் (கண்)

வானவனாமாதவனை மனிதனைஎவரையும்
ஞானலோலத்தால்மயக்க லானவந்நடைபயின்று (கண்)

கோடைநற்காலக்குயில்களோ தொனிகொண்டவிரு
பேடைமயில்போலவந்தீர் பெயரும்நகரும்குலமும்யாது (கண்)

வசனம்.

ஹே மாதர்களே நீங்கள் எக்குலத் துதித்தவர்கள் நீங்கள் விற்றிருப்ப தெந்தஸ்தலம் உங்கள் நாமதேயம் யாது என்கென்னை நாடி வந்த காரணமென்ன சீக்கிரம் விபரமாகக் கூறுங்கள்.

பாணப்பெண்கள் தரு.

சின்னவயதாச்சே யென்றமெட்டு.

* இராகம்-பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

தேசம்புகழ்ராஜமகா ராஜேஸ்வரனே (தே)

அநுபல்லவி.

நீசகுலம்யாமேபேர் நீள்பாணப்பெண்ணமே-நன்
கீத மிகுகீத முதல்யாவு முணர்ந்தோம் (தே)

சரணங்கள்.

பொருந்துமுலகம்புகழ் புனிதகவுசிகர்
அருந்தவஞ் செய்தோங்கும்
மலைச்சார வின்பாங்கு
அடியாள்களுங்கெடோருனைக் நிடுமூராகுமே(தே)

தாங்களிவ்விடம்வந்த சங்கதிகேட்டுத்தன்-திரு
சந்நிதியை நாடி-நற்
சங்கீதங்கள் பாடி-இந்
நதியில்வெகு மதிபெற்றிடக் கதியாக வந்தோம்(தே)

வசனம்.

பிரபோ. நாங்கள் சூரியகுலத்தி லுதித்தவர்கள் தவத்தின்மிக்க விஸ்வாமித்திரர் வசிப்பதானமலைச் சாரலின்பக்கம் வசிக்கக்கூடியவர்கள் எங்கள்பெயர் பாணப்பெண்கள் கொஞ்சிற்று சங்கீதபாதசாஸ்திரந் தெரியவரும் அதனைச்சமுகத்தில் காண்பிவித்து வெகுமதிபெற்றுக் கொண்டுபோக வந்தனம்.

அரசன் வசனம்!

நல்லது மாதர்களே உங்களுக்குத் தெரிந்த சங்கீதபாதத்தை காட்டுங்கள் பார்ப்போம்.

பாணப்பெண்கள் தரு.

தேவாதேவா சாயா வென்றமெட்டு.

இராகம்-நாபி-தாளம்-ஆதி.

பல்லவி.

வீராசூரா தீரா-ரவிகுல (வீரா)

அனுபல்லவி.

மாராவதிகவொய் யாராபுயவலி (வீரா)

சரணங்கள்.

ககனநற்கலைமதி முகசுருணாநிதி
புகழ்கோசலாதிபதி புண்யவடிவையதி (வீரா)

தேசவரசர்வந்தே தினந்தினந்திறைதந்தே
பூசனைசெய்யப்பெற்ற பொற்சரணாவிந்த (வீரா)



நவமணிகள்பதித்த நன்மகுடந்தரித்த
சுபம்பெருகுசிரனே துஷ்டநிக்கிரகனே (வீரா)

தன்னுயிர்போலவே மன்னுயிர்யாவையும்
தற்காக்குந்தாதாவெ ஜகம்புரக்குங்கோவே (வீரா)

சையதிரியா லாகிரே யென்றமெட்டு.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

இந்துவதன சுந்தரா (இந்)

அனுபல்லவி.

இந்த்ராவாளரிச் சந்த்ரா
ரவிகுலவதன சுந்தரா (இந்)

சரணங்கள்.

வாரிசூழ்ந்திலங்கிடும் வையகம்புரந்திடும்
வாரிஜமலர்நயன வதனசுந்தரா (இந்)

(அ-ன்-வ-ம்.) ஷறை பாஷ்.

அரசன் தரு.

இராகம்-நாட்டைக்குறிஞ்சி-தாளம்-ஏகம்.

பல்லவி.

ஆனந்தங்கொண்டேன் பெண்களே (ஆ)

அனுபல்லவி.

கானந்தனைக் கண்டிங்ஙனே (ஆ)

சரணங்கள்.

வீணைசைச்சுதிசெய்தே வின்குயில்போலுய்தே
நாணைமீட்டிப்பாடும் நளினங்கண்டுநீடும் (ஆ)

ஜதிவரிசையொன்றும் தவறுமல்நின்று
அதிநடனஞ்செய்த கதிபார்த்துமிக (ஆ)

வேணதிரவியங்கள் மின்னும்பூஷணங்கள்
பூணவஸ்திரங்கள் பொருந்தித்தருகின்றேன் (ஆ)

வாங்கிக்கொண்டுங்கள் வாசஸ்தலஞ்செல்லுங்கள்
பூங்கிளியனையீர் பொற்கொடியிடையீர் (ஆ)

வசனம்.

ஹே, மாதர்களே உங்கள் நர்த்தனத்தைக் கட்புலனுற்பார்த்தும் வேணுகானத்தைச் செவிப்புலனுற்கேட்டும் மிகவும் ஆனந்த முற்றேன் ஆதலால் உங்களுக்கு வேண்டிய ஆடையாபரணங்கள் சேவகனால் கொடுக்கும்படி செய்கின்றேன் பெற்றுக்கொண்டு உங்கள்ளதாஸ்தானத்துக்குச் செல்லுங்கள்.

அடே, சேவகா இம்மாதர்கள் விரும்பிய ஆடையாபரணங்களைக் கொடுத்தனுப்புவாய்.

சேவகன் வசனம்.

உத்திரவுபோல் செய்கின்றேன் பிரபு.

ஹே, மாதர்களே இங்குவாருங்கள் மகாராஜாவுத்திரப்படி கொடுக்கின்றேன்.

பாணப்பெண்கள் விருத்தம்.

கீர்த்திசேர் மன்னுதங்கள் கிருபையா லெங்களுக்கு
ஆஸ்தியாம் பொருள்களாடை யாபர ணங்கள்யாவும்
ஜாஸ்தியுண் டிதைத்நினைத்துத் தான்வர வில்லையாங்கள்
பூர்த்தியாய் நினைத்துவந்த பொருளின்னென் றுண்டுசுவாமி.

வசனம்.

வேந்தே, தங்களுடைய கிருபையினால் யெங்களுக்கு வேண்டிய மட்டும் ஆடையாபரணங்க ளிருங்கின்றன. யாங்கள் விரும்பியவற்றைக் கொடுத்தருளப் பிரார்த்திக்கின்றோம்.

அரசன் விருத்தம்.

தனகனகவஸ்துயாவும் ஜாஸ்தியாயுள்ளதம்மை
மனதினில்நினைத்தேயிங்கு வரவில்லையென்றுமின்னோர்
வனமுறுபொருளையுன்னி வந்திருக்கின்றோமென்றும்
வினவியபெண்களேயம் மெய்ப்பொருள்யாதுசொல்வீர்.

வசனம்.

பெண்களே யான் உங்களுடைய நர்த்தனத்தைப் பார்த்தானந்தங்கொண்டு ஆடையாபரண மெல்லாம் பெற்றுக்கொண் டேகும்படி கூறியதற்கு இதெல்லாம் ஜாஸ்தியாக இருக்கிறது வேறொருவஸ்துவைக்குறித்து வந்தோம் என்றுகூறினீர்களே அப்பொருளெவை சீக்கிரந்தெரிவியுங்கள்.



பாணப்பெண்கள் அரசனிடம்

# குடைகேட்கிற பாகம்.

பெண்கள் விருத்தம்.

கருணையினிதிபேசோதிக் கதிர்குலத்துதித்தகோவே
அருள்பெறுதருவைப்போன்ற வங்கரதலனேகேளும்
திருமணிநின்முடிக்குத் தினநிழல்செய்யுமிந்தப்
பெருமதிக்குடையைத்தாங்கள் பிரீதியாய்த்தருகுவீரோ.

உனையே நம்பினே னென்றமெட்டு.

* இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

குடையைத்தருவீர் கோமானேஸ்ரீமானே (கு)

அநுபல்லவி.

தடைபுகலாது தயைசெய்திப்போது (கு)

சரணங்கள்.

புகழ்மிகநாடும் பொருளுங்கைகூடும்
திகழ்பாவமோடும் திருவருள்நீடும் (கு)

தங்களைத்துதிப்போம் சந்ததமதிப்போம்
எங்களுள்களிப்போம் எங்கும்பிழைப்போம் (கு)

கோரியவெண்ணத்தின் கொள்கையையகற்றி
பாரிலெம்மையென்றும் பாதுகாவின்று (கு)

வசனம்.

அரசே தாம் சூட்டிக்கொண்டிருக்கும் இரத்தின கிரீடத்திற்கு மேல் நிழலைத் தருவதற்காக வைத்திருக்கிற பூச்சக்ரகுடைமீது விருப்புற்றிருக்கின்றோம் ஆகையால் தாம் மனமுவந்து கொடுத்தருளும்.

அரசன் விருத்தம்.

பெடைநடைமடவீர்கேளீர் பெருமதியனையவிந்தச்
குடையினையுமக்குயானுங் கொடுப்பதற்குருகனல்லேன்
உடையணிபொருள்கள்யாவு முகந்திவண்கொடுப்பேன்பெற்று
தடைபுகலாதுநீவீர் தம்பதிசார்குவீரோ.

சாமிவா இதுவரை தாமதமென்னவடி யென்றமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ஏகம்.

பல்லவி.

மாதரேநானீயும்வெகு  மதியைப்பெற்றேருவீரோ (மா)

அநுபல்லவி.

பேதமைமதியினாலே  வாதுசேர்புரியாமலே (மா)

சரணங்கள்.

மிக்கமுடிவேந்தரும்  மேதினிவாழ்மாந்தரும்
தக்கதோர்குணசாந்தரும்  புகழ்ந்திடும்
இக்குடையைக்கேட்பதழகில்லை  மரியாதையாய் (மா)

உங்கள்நடனத்தையும்  உயர்சங்கீதத்தையும்
உற்றவதின்மதுரத்தையும்  நிரத்தையும்
இங்குகண்டகமகிழ்ந்தேன்  கங்குல்நிகரங்குழுள்ள (மா)

சேலைநிகரானவிழிச்  சேயிழையிரிந்தமொழி
ஞாலமீதறைகுதல்பழி  இதொழி
காலதாமதஞ்செய்யாது  கருத்தில்மகிழ்ந்திப்போது (மா)

வசனம்.

சேமாதர்களே, பேதமையென்பது மாதர்க்கணிகலமென்னும் பழமொழிக்கிணங்க நீங்கள் குடையினுடைய தன்மைதெரியாது அதனைக்கேட்பது சரியன்று ஆதலால் யான்கொடுக்கும் ஆடையாபரணங்களைப் பெற்றுக்கொண்டு உங்களுடைய எதாஸ்தானத்திற்கு மரியாதையாகச் செல்லுங்கள்.

பாணமாதர் விருத்தம்.

இருநிலம் புரக்கும்வேந்த ரிடத்தினி விரப்போரெய்தித்
திருமல ரடிபணிந்தே சிந்தையு ளெண்ணிவந்த
இருநிதி கேட்டாலத்தை யில்லையென் றெடுத்துரைத்தல்
தருமமோ வரசரேறே தடைசொலா தீகுவீரோ.

சொன்னபேச்சொங்கே யென்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

தயவுசெய்குவீர்  துரையே (தயவு)

அநுபல்லவி.

அயன்முதலோரதிசயிக்கும்  அக்குடைகொடுப்பதற்கு (தயவு)



சரணங்கள்.

தம்க்கிதுவு  மோர்பெரிதோ
தரணியி  லகப்படாதோ
எமக்குறுமென்  ணத்தைத்திருப்தி
யியற்றும்பொருட்  டாகவிங்கு (தயவு)

நாஸ்திவசனஞ்  சொல்வது
ராஜர்க்கழகா  மோவிது
ஆத்திரமாய்  நின்றிப்போது
காத்திருக்கு  மெங்கள்மீது (தயவு)

குறைகளைத்தீர்க்  குந்தருமக்
குமுணனுமை  யன்றிவேறே
இறைவருண்டோ  வியம்புதற்கு
இந்திரஹரிச்  சந்திரபூமா (தயவு)

வசனம்.

பிரபூ, பூமியையாளும் அரசர்களுடைய இயல்பானது வியாசகர்கள் கோறியதைக் கொடுக்கவேண்டியதுமுக்கியமானவிஷயம்அவ்விதமிருக்க தாம் முதல்வள்ளலெனப் பெயர்பூண்டும் நாங்கள் விரும்பியவற்றைக் கொடுக்கக்கூடாதென மறுப்பது நீதியோ கவனிக்கவேண்டும்.

அரசன் கந்தார்த்தவிருத்தம்.

மடமாதரோயென்னிடநீர்வந்து நடமாடல்கண்டுமகிழ்வா
யுடனேபொருள்கள்பணியாடையிய வுதவாதெனத்தடுத்துக்
கடல்சூழுமிந்தவுலகேழுமெய்க்க கதிரோன்குலந்தழைக்கத்
திடமாகவாய்த்த குடைதாருமென்னத்.

கந்தார்த்தத்தரு.

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி.

நிரமுடன்கூறலாகுமோ  இவ்விதம்நீங்கள்
சித்தமிடங்கொள்ளப்  போகுமோ (நிர)

அனுபல்லவி.

சாரமுடன் நானேயுற்றுத் | தந்தசன்மா னத்தைப்பெற்றுக்
சாரலடை வதையின்று தான்மறந் தரசரென்றும்
தாத்தகாதததைத் தரப்பிரிதியோ டிரத்தல்நீதியோ பாத்தையச்
சண்டிகாள்பெரு வண்டிகாள்திண்டி
மிண்டிகாள்ளனை யண்டியேயிவை (திர)

வசனம்.

அடீ துஷ்டிகாள், கிஞ்சித்தேனும் மனதில் லச்சமில்லாது பழநா ர் அரிச்சந்திரன்முன்பாக பூச்சக்கரக்குடையைக் கேட்பது சரியன் று மரியாதையாக யான்கொடுக்கும் வெகுமதிகளைப் பெற்றுச்செல் லுங்கள்.

பாணப்பெண்கள்-தரு.

சேருமுன்னே சேவல்கூவுதே யென்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

இவ்வளவுகோபமாகுமோ எந்தமேல்யுமக்(கிவ்)

அநுபல்லவி.

எவ்வளவோநின்பால்நின்றே யாங்கள்கெஞ்சிக்கெஞ்சியின்றே
ஒவ்விபிந்தக்குடைகொடுமென்றே உரைத்தாலிதற்(கிவ்)

சரணங்கள்.

சிங்காசனத்திருந்தே செங்கோல்கரமணிந்தே
மங்காமலவனியையாளும் மன்னர்க்கெந்நாளும் (இ)

இரப்பவரோர்பொருளை யெண்ணிக்கேட்டாலவர்களை
கரப்பவர்வைதிடஞாயம் கழறுதோவேதம் (இ)

இதுபுகழ்ச்சியாகுமோ யெங்கள்பவம்வீண்போகுமோ
குதுகலங்கொண்டுகொடுப்பீர் குணக்கடலே (இ)

வசனம்.

(குறள்) வேந்தே, "அகழ்வாரைத்தாங்கும் நிலம்போலத் தம்மை இகழ்வாற் பொறுத்தறலே"

அதாவது தன்னை வெட்டுவோரைத் தாங்கும் பூமியைப்போல தம்மை நிந்திப்பவரைப் பொறுத்தல் முதன்மையான தர்மமென்று





முன்னோர்கூறிய நீதியையுணர்ந்த சக்கிரவர்த்தியாகிய தங்களுக்கு ஏழைகளாகிய எங்கள்மீது இவ்வளவு கோபமாகுமா இது தங்களுக் கழகோ.

அரசன் தரு.

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

வாதுசெய்வதேது இப்போது-என்ன
வங்கிஷத்தில் வந்துதித்த
பெண்களேயென் முன்புமெத்த (வாது)

அநுபல்லவி.

சாதுரியமாகவாடும் மாதுரியமாகப்பாடும்
தன்மையுங் சபுரங்கண்டேன்
என்மன மகிழ்வுகொண்டேன்
தையலீர் யுடை மெய்யணி பூஷணம்
உய்திட வுதவியும் கைகொடே காமனே (வாது)

சரணங்கள்.

பருதிகுலந்தியந்வாகு முதலிதுவரையிரு
பத்தெழுதலைமுறையா யுற்றமன்னரும
அருமையுடனவரவ ரான்டுபிகொக்கையுதவ
ஆச்சர்யத்துடன் பெற்றிந்தப்
பூச்சக்ரக்குடைக் குடையுமெந்தன்
அழகுமுடிக்குயர் நிழல்தரவுற்றது
கழறுவதற்கரி தொருல்பெயர்பெற்றது (வாது)

வசனம்.

அடி மூர்க்கிகாள் யான்கொடுக்கும் வெகுமதிகளை மரியாதை யாகப் பெற்றுச்செல்லாது எனது மூதாதைகளாகிய இக்ஷ்வாகு விகுக்ஷி புரஞ்சயன் அனேனசு பிருது விஸ்வகோதன் சந்திரன் யுவனாசுவன் சாவஸ்தன் பிரகதாஸ்வன் குவலயாசுவன் திடாசுவன் அரியசுவன் நிகும்பன் பெர்ஹிணாசுவன் கிரிசாசுவன் சேனசித்து யுவனாசுவன், மாந்தாதா, அம்பரீஷன், புருகுச்சன், திரசதசு, அனரண்ணியன், திரியசுவன், திரியருணன் திரிபந்தன், திரிசங்கு, வென்ற இருபத்தேழு தலைமுறையாயுற்ற அரசர்கள் வழிவழியாக இக்குடை

நிழலிலிருந்தரசுசெய்து பின்னர் எனக்களிக்க யான்பெற்று எனது ரத்தினகிரீடத்திற்கு நிழல்தரும்படி வைத்திருக்கின்றேன்.

அரசன் தரு.

அப்பெயருபெற்றவிதை யானுமுயிர்க்குச்சமதை
யாகவைத்துலங்கயர சாஜிசெய்கின்றேன்
இப்பெருமையறியாது இலேசாகமதித்திப்போது
ஈந்தருளுமென்றுரைக்க வாய்ந்ததோதைரியமிக்க
இன்னொருகுடைகொ டென்னவேகழறிடல்
உன்னவடிப்பீர் இன்னமுமென்னுடன் (வா)

வசனம்.

துஷ்டிகாள் மிகவும் பெயர்பெற்றதான இப்பூச்சக்கரக் குடையை என்னுயிர்க்குச் சமானமாக வெண்ணி எனது முடியின்மீது வைத்து மகா மேன்மைதங்கிய இச்சம்பூதிவினிடத்துள்ள கீழ்விதேகம்-மேல்விதேகம்-வடவிதேகம்-தென்விதேகம்-வடவிரோபதம்-தென்னிரோபதம்-வடபாரதம் தென்பாரதம்-மத்திமகண்டம் என்ற நவகண்டங்களிலுள்ள அரசர்களின் மணிமுடியெல்லாம் என்னிருபதத்தில் அழுந்தும்படியாக அயோத்தியாபுரியை அரசாட்சி செய்துவருகின்றேன். ஆனதால் இக்குடைக்குள் ஐக்கம் யானேயன்றி என்னுக்குள் இது ஐக்கமன்று இவ்வித பெருமை வாய்ந்ததை நீங்கள் இன்னும் கொடுக்கவேண்டுமெனக் கூறும் பக்ஷத்தில் கொடிதான துன்பத்தை யடைவீர்கள் இதுபோலாக வேறு குடை தருகின்றேன் பெற்றுச்செல்லுங்கள்,

பெண்கள் வசனம்.

அரசே எங்களுக்கு இந்தப் பூச்சக்கரக்குடை தவிர வேறு குடைவேண்டாம் இதையே கொடுத்தருளவேண்டும்.

(அ-ன்-வ-ம்.) அடி லண்டிகாள்.

கந்தார்த்த விருத்தம்.

திடவேதந்திதிகழ்ஞானதர்ம விதிநாசகாதைதெளிவாய்
அடைவோடுணர்ந்தவிறையோர்களிந்த வழக்காரயோத்திக்கனை
தடையேதுமின்றியரசேபுரிந்த தாஷ்டீகபூச்சக்கரக்
குடையானதீயுமெனவேமொழிந்த



இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி.

கொலைகாரிபழிகாரிகாள் படுபாவிகாள்
புலைஜாதிக்கொடு சூரிகாள் (கொ)

அநுபல்லவி.

தலமுன்னோர் துதிக்கவும் வலியெல்லாந் கதிக்கவும்
அலியாத யோத்தியாளும் தலைவனென் றெங்காளும்
சீர்த்தியாபெண்ணுந் ஆர்த்தவழி
பார்த்துடவுங்கள் சேர்த்திசேர்குடை
திட்டமாய்க்கொடேன் துட்டிகாளினி
அட்டிசெய்யில் விரட்டுவேண்டி (கொ)

வசனம்.

அடியே சண்டாளிகாள் யான் கொடுப்பதைச் சீக்கிரம் பெற்றுக்கொண்டு செல்லுகின்றீர்களா என்ன சொல்லுகின்றீர்கள்.

பெண்கள் வசனம்.

அரசே பேதைகளாகிய எங்கள்மீது இவ்வளவு கோபங்கொள்வது தருமா எங்கள் மனம்போலப் பூச்சக்கரக்குடையைக் கொடாவிடினும் இன்னுமொன்று கேட்கின்றோம் அதனையாவது கோபமின்றிக் கொடுத்தருளப் பிரார்த்திக்கின்றோம்.

(அ-ன்-வ-ம்.) அஃதென்ன,

# பெண்கள் வெற்றிமாலை கேட்கும்பாகம்.

பெண்கள் விருத்தம்.

மருவலர்வயிரியான பன்னவர்மன்னவிந்தத்
தருணமிக்குடையையாங்கள் தாவெனக்கேட்டதற்குத்
தருகிறதில்லையென்றீர் சரியினித்தயவுசெய்தே
விரும்பிநீரணிந்திருக்கும்.

விரசமான வார்த்தைவேண்டா மென்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி

வெற்றிமாலையைக்கொடுப்பீர் வேந்தர்வேந்தனே (வெ)

அநுபல்லவி.

மற்றுநீர்தடைசொலாது மாதயவுசெய்திப்போது (வெ)

சரணங்கள்.

மலையினேடுபோர்பொருதும் வலியதோள்மிசை
நிலைபெறவணிந்திருக்கும் நேர்த்திசேர்ந்த (வெ)
இதற்குமிலையெனும்வசனம் இயம்பாதீர்கோவே
உதித்தகோபந்தனையகற்றி யுளமகிழ்ந்துநீர் (வெ)
கோடிபுண்யஞ்சேருமுயர் கோசலாதிபா
நாடிவந்தவெங்கள்மனதை நையச்செய்யாதீர் (வெ)

வசனம்.

அரசே யாங்கள் சொல்லவொன்றாத ஆசையுற்றுக் குடையைக் கேட்டதற்கு அதுவழிவழியாக வந்தது கொடுக்கமாட்டேனென்று சொல்லிவிட்டீர்கள் ஆனதால் அதுவேண்டாம் தங்கள் திண்புயத்தில் அணிந்திருக்கின்ற வெற்றிமாலையை யாவது கொடுக்கக்கோருகின்றோம்.

அரசன் வசனம்.

ஸஹஜாஸ்த் மாதர்களே மெச்சினேன் பெற்றுக்கொள்ளக் கூடியவைகளைக் கேட்காது வெற்றிமாலையின் மகிமை தெரியாமற் கேட்பது நலமல்ல.

அரசன் கந்தார்த்த விருத்தம்.

அட்டதிக்கினிலுமுற்றபட்டின வகத்துரும்சத்துருக்களாம்
துட்டரைச்சிரமறுத்துவெற்றிகொடு கிட்டரைப்பரிபவித்துயான்
பட்டமுற்றமணிமுத்தினத்தையே பத்திபத்திபெறவைத்திழைத்
திட்டமுற்றணியும் வெற்றிமாலைதனை

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி.

சுயுமெனக் கேட்பதேதமை
அடியேபெண்காள் எற்குமோவிதுவுமோதமை (சு)

அநுபல்லவி.

வாயுமையாக விப்போது வழுத்தவழுத்தக்கேளாது
நீயுமவரு மின்னம் நிற்குங்கா ரணமென்ன
நேர்த்தியதுமக் சேர்தல்யான்காம்
ஈந்தருள்வனென் றோர்ந்தநீர்
நிற்பதாலே கொடுப்பனென்று
நினைப்பீரது கொடுப்பதில்லையே (சு)



அரசன் வசனம்.

துஷ்டிகாள். அஷ்டதிக்கிலுமுள்ள பட்டினத்துப் பார்த்திபர்களை ஜெயித்து எனது திண்புயத்தி லணிந்திருக்கப்பெற்ற இந்த வெற்றிமாலையை சண்டாளிகளாகிய நீங்கள் பெற்றுக்கொள்ள நினைப்பது மிகவும் பேதமை மரியாதையாக உங்களேதாஸ்தானஞ் சொல்லுங்கள்.

(பாணப் பெண்கள்) வசனம். அரசே.

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி.

இப்படிச்சொல்வதும் தர்மமோஇரவிகுல
வேந்தலேவுமக் கென்வர்மமோ (இ)

அநுபல்லவி.

எப்படியாவதிதனை யாங்களுன்றன்பாலிங்ஙனை
கைப்பற்றுமளவும்மைவிட்டுக் கணமுமகலோழினிநீர் (இ)

சரணங்கள்.

எத்தையும்நினைந்துவந்தே இரப்பவர்கேட்கினும்
அதைத்தடைசொல்லாமலே யருள்வதுமுறையையன்றே (இ)
இல்லையென்றுரைப்பதாலே யென்றும்புகழ்தருமோ
சொல்லையுணர்ந்தேயிதனைச் சுருக்கினிற்கொடுத்தனுப்பா (இ)
புண்ணியவுருவனைப் புவியினிலுதித்துவளர்
கண்ணியனேயெங்கள்மீது கருணைசற்றுமில்லாதையோ (இ)

வசனம்.

பிரபூ அரசநீதி யறிந்திருக்கின்றீரர் அல்லவா நன்றாகத் தெரிந்திருக்கும் பக்ஷத்தில் யாங்கள் கேட்பவையெல்லாம் இல்லையென மொழியமாட்டீரே.

அரசன் வசனம்.

துஷ்டிகாள் என்ன அரசநீதியைத் தெரிந்துகொண்டீர்கள்.

பெண்கள் வசனம்.

(குறள்) "அழுக்காறவாவெகுளி இந்நான்கு மிழுக்கா வியன்றதறம்" அதாவது பொறாமை, கோபம் ஆசைகடுஞ்சொல்

இவ்வளவுமின்றி மனப்பூர்த்தியாக வியாசகர்கள் விரும்பியவற்றைக் கொடுப்பது நீதியென்று சண்டாளிகளாகிய நாங்கள் தெரிந்திருக்கின்றோம் அதுகூடதமக்குத் தெரியாது நாங்கள் கேட்டவைகளையில்லையெனச் சொல்லிக் கோபிக்கின்றீர்.

அரசன் வசனம்.

அடி மூர்க்கிகாள் என்ன வார்த்தை சொல்கின்றீர்கள்.

அரசன் தரு.

பாதலத்துள்ளோருமிந்தப் பூதலத்துள்ளோருமந்த
மீதலத்துள்ளோருமுள்ள மீமகிழ்கொள்ள
ஆதவற்குலந்தழைக்க ஐம்பத்தாறுதேசஞ்செழிக்க
அஷ்டதிக்விஜயஞ்செய்து துஷ்டர்சிரங்களைக்கொய்து
அத்தினம்யானணி முத்தினமேவிய
வெத்திகொள்தாரிது சித்திரமானது (வா)

(வ-ம்.) அடீ துஷ்டிகாள்.

இவ்விசித்ரமானபுனை திவ்யவெற்றிமாலைதனை
எங்களுக்குதவுமென்று இயம்பவின்று
எவ்விதமனமுகந்த தவ்விதஞ்சொல்லுங்கள்வந்த
சனகுலவாசிகளே மானமிலாத்தோசிகளே
எட்டிநடக்கிடும் அட்டிசொலாமலே
கிட்டியேவந்திடல் கொட்டிடுவேனினி (வா)

வசனம்.

அடீ நீவிகாள் அரசரானவர் தரக்கூடியதைக் கேட்டால் தருவரேயன்றி தாத்தகாததைக் கேட்டால் தரமாட்டார்கள். ஆனதால் எனது வெற்றிமாலையின் மகிமையறியாது தாருங்களென்று கேட்பது சரியன்று.

பெண்கள் வசனம்.

வேந்தே வியாசகர்கள் விரும்பியவற்றைக் கொடாத தங்களுக்கு வள்ளலென யார்பெயர்வைத்தார்களோ அறிகிலோம் யாங்கள் தங்களிடத்தில் இந்த வெற்றிமாலையைப் பெற்றுக்கொள்ளாமலும் போகமாட்டோம்.



பெண்கள் தரு.

மன்னனைக் காணாமல் மயங்கிறே னென்றமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ஏகம்.

பல்லவி.

கோபம்நீர்கொள்ளாதீர் கோசலராஜனே (கோ)

அநுபல்லவி.

பாபமாமிங்கிதன் பயனறிந்துமோர்வித
சவதிரக்கமில் லாதநீதனியம்புவீர் (கோ)

சரணங்கள்.

எங்களெண்ணப்படியே இந்தவெற்றிமாலையை
மங்களமாகவே வழங்கியேமகிழுவீர் (கோ)
கேட்டதையில்லையென்று கிளர்ந்துதலநமன்று
தேட்டமோடிந்திடச் சிந்தையுகந்திடுவீர் (கோ)
தன்னுயிர்போலெவ்வனி மன்னுயிரையுமண்ணில்
தன்னவேகாத்திடும் சுகுணசம்பன்னனே (கோ)

வசனம்.

அரசர்க்கரசே ஏழைகளாகிய எங்கள்மீது இவ்வளவு கோபமாகுமா தயவுசெய்து தமது புயத்திலிருப்பதான வெற்றிமாலையைக் கொடுத்தனுப்பும்.

அரசன் வசனம்.

கொடுஞ்சூரிகாள் என்னவார்த்தை பாஷிக்கின்றீர்கள்.

அரசன் கத்தார்த்த விருத்தம்.

தேசாதிதேசராஜாதிராஜர் தினமுந்துதித்துவாழ
நேசாதிநேசமுறவேயெ முன்னோர்நீடூழிகாலம்வாழ்த்த
பூசாபலாதிசயமேபுரிந்து புவியோர்மதிக்கயாளும்
கூசாதுயர்ந்த புயமீதணிந்த

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி.

குற்றமற்றமாலைதன்னையே கேட்கலாகுமோ
கொடுமீர்கா ளென்முன்னையே (குற்)

அநுபல்லவி.

நற்றகமையாயிதனை      ஏற்றைநாளிலுங்கொடேனே
இற்றைப்பொழுதினில்நீவிர்      உற்றபதியைநோக்குவிர்
நோக்கிடேலினுத்      தாக்குவேனிவணை
சேர்க்கையாய்நிற்கும்      மூர்க்கிகாள்
நானமாயுரைத்      தேனிதையறிந்
தோடந்திடும்      மானிலம்புகழ் (ரு)

வசனம்.

அடியே கொடுஞ்சூரிகாள் மகா கீர்த்தியைப் பெற்றதான இந்த வெற்றிமாலையை நீங்கள் எவ்விதம் வருந்திக்கேட்டாலும் கொடுக்கமாட்டேன் மரியாதையாகதான் கொடுக்கத் தக்கவைகளைக் கேட்டுப் பெற்றுக்கொண்டு செல்லுங்கள்.

பெண்கள் வசனம்.

சக்கரேஸ்வரா, கேட்கக்கூடியவற்றைக் கேட்டாலும் கொடுக்காது கோபமாகத் தூஷணமான வார்த்தைகளைச் சொல்வீர்கள்தான் போலிருக்கின்றது.

அரசன் வசனம்.

அடி மாதர்காள் நீங்கள் கேட்கத் தகுந்தவைகளைக் கேட்டால் கொடுப்பதற்குத் தடையேயில்லை.

## பாணப்பெண்கள் அரசனை மருவச்சொல்லும் பாகம்.

பெண்கள் விருத்தம்.

கரும்புலவும் நறுமலர்த்தா ரணிந்தவேந்தே
தூயமதிக் குடையுடனே வெற்றிமாலை
தரும்படியாங் கேட்டதற்குக் கோபமின்றித்
திருவதிலை யெனவுரைத்தி நின்றனுண்டு
பெரும்புகழ்சேர் மன்மதன்றன் றஸ்த்தேமோதிப்
பெண்கள்படை புடைசூழக் கரமிரண்டால்
கரும்புவில்லை வளைத்தளிகாணை றிட்டமைந்திற்
கடிமலர்ப் பாணந்தொடுத்திக் கணைபொய்தானே.



என்னுசெய்குவே னென்றமெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

சேரவாருமே      ராஜ
சிங்கமேவு      ளங்கமகிழ்ந்
திங்ஙனமந்நீ      ரெங்களையே (சேர)

அநுபல்லவி.

மாரனெய்யும்      வாளிசெய்யும்
வாதனைபொ      றுக்கமுடி
யாதருள்      புரிந்துவந்தே (சேர)

சரணங்கள்.

தென்றலுந்தாவுது      சினக்குயில்கூவுது
மன்றல்கமழ்      மாலையணி
மங்களவ      சீகரனே (சேர)

புண்ணியரூபனே      புகழ்ப்பிரதாபனே
நண்ணினேமுந்நின்      கெதியென்றே
வெண்ணிலா      வதனனேநீர் (சேர)

பாங்குடனெழுந்து      பதராமல்வந்து
பூங்காங்க      ளைப்பிடித்து
பூவணையி      லேயிருத்திச் (சேர)

வசனம்.

அரசே, யாதொரு சிவபெருமானைவென்ற மன்மதனனவன் கரும்புவில்லைவளைத்து கரும்புநாணேற்றி முல்லை, அசோகு, சூதம், அல்லி, நீலம், என்ற பஞ்சபாணங்களைத் தொடுத்து எங்கள்மீது எய்கின்றான் அதனாலுண்டான காமவிகாரமானது சகிக்கமுடியவில்லை. தாங்கள் தயவுசெய்து கட்டிச்சேர்ந்து அம்மதனுடைய பாணத்திற்குள்ளாகாது காப்பாற்றவேண்டும்.

(அ-ன்-வ-ம்.) அடீ சண்டாளிகாள்.

என்னுசெய்குவே னென்றமெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

என்னகூறினீர்      இது
ஏற்குமோஇப்      பார்க்குளுள்ள
யார்க்குமிது      மூர்க்கிகளே (என்)

அனுபல்லவி.

மன்னவனென்று      மதித்திடாதின்று
இன்னவிதஞ்      சொன்னதுமக்
கென்னதை      ரியமடா (என்)

சரணங்கள்.

தன்முறாரோயன்      மன்முரசேயன்
என்முழி      குழகைம்
என்றுமிபம்பு      மென்னையே (என்)

துஷ்டிகாள்நீவிர்      எட்டியேபோவீர்
கிட்டிவரி      லட்டியின்றிக்
கொட்டிடவுந்      தரஞ்செய்வேன் (என்)

கடுங்கொலைகாரக்      கொடும்பழிகாரப்
படும்புலை      வங்கிஷப்
பாதகியரே      யிவ்விடம் (என்)

வசனம்.

கிஞ்சிற்றேனும் அச்சமில்லாது என்முன் என்னவார்த்தை கூறினீர்கள் மரியாதையாக ஆடையாபரணங்களைப் பெற்றுக்கொண்டு சென்றுவிடுங்கள். இல்லையேல் மிகுந்த கஷ்டத்திற்குள் ளாவீர்கள் மூர்க்கிகாள்.

பாணப்பெண்கள் விருத்தம்.

செங்கதிர்க் குலத்துதித்த செல்வனே தேசமன்னர்
பொங்கமாய்ப் பணியப்பெற்ற பொற்பத சுகனேயின்று
எங்களை வெறுத்திடாதிங் கினித்தடை புரிந்திடாமல்
மங்களமாகச் சேர்ந்துமையலைத்தணித் திடீரோ.

பாணப்பெண் தரு.

ஆசையாகி வந்தேனிங்கே யென்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

கருணைகொண்டொருவாருங்      காதல்மீறுதே
கருணாமிருதசிக்குறில்லை      தண்மெய்நீறுதே



அரசன்.

என்னவார்த்தைசொல்லவந்தி      ரிந்த்ரஜாலிகாள்
சின்னமாவீர்மரியாதையாய்ச்      செல்வீர்நீலிகாள் (எ)

பெண்கள்.

குவலயம்புரப்பவர்க்குக்      கோபமாகுமோ
இவடம்யாங்கள்வருந்தும்பாவம்      இலேசாய்ப்போகுமோ (க)

அரசன்.

என்றுமிதாலிந்தப்பாவ      மென்னைநாடாது
இன்றுநின்றிவ்வண்ணம்வாது      இயற்றல்கூடாது (எ)

பெண்கள்.

மையலாகிவந்தவரை      மறுக்கநீதியோ
செய்பசிந்தையிறங்காதின்னும்      சிறந்தகியாதியோ (க)

அரசன்.

ஜென்மங்களுட்கொடுஞ்சண்டாள      ஜென்மநீரன்றோ
வன்மஞ்செய்தென்முன்னம்நின்றே      வருந்துதல்நன்றோ (எ)

பெண்கள்.

தேவரீரிங்குற்றதான      செய்திதெரிந்தே
ஆவலுடன்வந்தோம்      சுகமடையமகிழ்ந்தே (க)

அரசன்.

மனைவியன்றிமற்றமாதர்      மாதாகாணுவீர்
நினைவுதப்பிப்பேசாமல்      நன்னீதிபேணுவீர் (எ)

பெண்கள்.

ஆத்திரம்பெரிதல்லாது      அறம்பெரிதன்று
கோத்திரத்தைப்பாராதெம்மைக்      கூடுவீர்நன்று (க)

அரசன்.

மானங்கெட்டதோசிகளே      மதிகெட்டவர்களே
ஞானங்கெட்டுப்பேசிடிலோ      நரகார்வீர்களே (எ)

(வ-ம்.) அடி மானங்கெட்டலண்டிகாள் மதிகெட்ட மூர்க்கிகாள்.

அரசன் கந்தார்த்தவிருத்தம்.

அழகானசந்த்ரவதிமாதையன்றி யலர்மாநிலத்தில்வாழ்பூங்
குழல்மாதர்யாருமனையாகுமீது குறியாமலுருகிமோக
வழியானதியாவுமுறையேயுணர்ந்தி மனமேபுரிந்திடுமெனப்
பழியானவார்த்தை தனையேயென்முன்னம்.

கந்தார்த்தத்தரு.

இராகம்-மோகநம்-தாளம்-ஆதி.

பல்லவி.

பகர்ந்திடவும் ஞாயமாமோடி
வஞ்சகநெஞ்சமுகந்தருளும் மாதரேபோடி (பக)

அநுபல்லவி.

ஜெகம்புகழயோத்திதன்னை அகமகிழ்ந்தேயாளுமென்னை
மிகவுமதியாமற்சேர விரும்பியழைப்பதிந்நேரம்
ஏற்குமோசெழுங் கார்க்கடல்வளை
பார்க்குளேயுள யார்க்குமே
இன்னமே யெந்தன் முன்னமே நின்றால்
பின்னமே செய்வேன் சொன்னனே அடி (பகர்)

வசனம்.

அடிமாதர்களே கவனமாய்க்கேளுங்கள்.

அரசன் வெண்பா.

அன்னைதயையும் அடியாள்பணியுமலர்ப்
பொன்னினழகும் பூவிப்பொறையும்-மன்னும்
வேசிதுயிலும் விறன்மந்திரிமதியும்
பேசிலிவையுடையாள் பெண்.

வசனம்.

அன்னையைப்போன்ற தயையும் ஏவற்காரியைப்போன்ற பணிவிடையும் ஸ்ரீமகாலட்சுமியைப்போன்ற அதிக சௌந்தரியமும் பூமாதேவியைப்போன்ற பொறுமையும் கணிகைமாதரைப்போன்ற சரமும் மேன்மைதங்கிய மந்திரியைப்போன்ற புத்திநிக்ஷண்யமும்உடைய கற்பிலருந்ததிக்கொப்பான எனதுமனைவி சந்திரவதிதவிர இவ்வுலகினிடமாயுள்ள மற்றமாதர்களெல்லாம் எனக்கு அன்னையாகும், இதனையறியா திவ்விதம்புகல்வது ஞாயமன்று மரியாதையாக வந்தவழி பார்த்துச்செல்லுங்கள்.

பெண்கள் விருத்தம்.

ஆவலாயெவரும்வந்தே யடைக்கலம்புகுந்தால்நீதிக்
காவலாவுலகின்மீது காப்பதுகடமையன்றோ
தேவரீரிடத்தினிற்கிந் சிற்றுமக்கொள்கையில்லை
பாவமாங்கோபம்விட்டுப் பரிவுடன்சேருவீரோ.



தொடாதடாபாவி யென்றமெட்டு.

இராகம்-காம்போதி-தாளம்-ரூபகம்.

கன்னிகள்.

சையோகஞ்செய்வீரோ சரசமாய்நீரோ
ஐயோகொண்டமோகம் அடங்குதில்லைத்தாகம் (சை)

அரசன் வசனம்.

அடி மூர்க்கிகாள் உங்களுக்கு.

அரசன்.

எத்தனைசொல்லியும் ஏற்கலையோவின்னும்
பித்தரைப்போல்நின்று பிதற்றுவதேனின்று (எத்)

பெண்கள் வசனம்.

அரசே நீங்களென்ன சொன்னபோதிலும் எங்களுக் கேற்கமாட்டாது எதனால்.

பெண்கள்.

பஞ்சபாணனம்பால் பரதவித்தோம்நின்பால்
கொஞ்சிமுத்தந்தந்தே குணமாயிங்குகந்தே (சை)

அரசன்.

மட்டித்தனமுள்ள துட்டிகாளென்முன்னே
சுட்டித்தனவார்த்தை சொல்வதுமென்னே (எத்)

பெண்கள்.

தாக்ஷண்யம்பொறுமை சற்றுமில்லாதெம்மை
சூக்ஷமாகக்கூறித் தூறுவதேன்மீறி (சை)

அரசன்.

கற்றவித்தைகளைக் காட்டாதீர்வ்வேளை
உற்றபதிதேடி ஓடுவீர்கள்நாடி (எத)

பெண்கள்.

அங்கரனைநேரா யமைந்தகொம்பீரோ
இங்குமைவிட்டேக ஏற்குமோமுன்னேக (சை)

அரசன்.

கண்டித்தும்போகாது காவில்நீரிப்போது
அணடியேவின்வாது அறைதல்தாகாது (எத)

பெண்கள்.

மங்கள்மிகும்நின் மனைவியிவ்வுலகின்
எங்களினுமிக்க ஏற்றமோதானறக்க (சை)

பெண்கள் வசனம்.

பிரபூ, உங்கள் மனைவியாகிய சந்திரவதியானவள் எங்களைப்பார்க்கினும் மிகவும் மேன்மையுடையவளோ, தாங்கள் மனைவியென்று சொல்வதற்குக்கூட யோக்கிதையில்லையே.

(அ-ன்-வ-ம்.) அடி லண்டிகாள், என்னவார்த்தை கூறினீர்கள்.

பெண்கள் வசனம்.

அரசே, எதனைக்கூறப் போகின்றோம் தாங்கள் தொட்டுத்தாலி கட்டாதமாதாகிய இச்சந்திரவதியை மனைவியென்றும் அன்னவள் தவிர வேறொருமாதை சேருவதில்லையென்று சொல்லுகிறீர்களே அதையோசித்து இவ்விதானபுத்தி தங்களுக்குண்டாயிருக்கின்றதே என்றுமனவருத்த முறுகின்றோம்.

(அ-ன்-வ-ம்.) அடியே கொடிய சண்டாளிகாள்.

அரசன் தரு.

அரியரப்ரம்மாபூதேவி பரிவுறுமந்தாதேவி
அக்கினியந்தணரர சாணிசாக்ஷியாய்
தெரிதற்கரிதாகவுற்று திருமங்கல்யத்தொடுதித்த
செய்யமணமாலையிட்ட தையல்சந்த்ரமதேனிவ்ட
தேவியுமவளென தாய்யுமவளதி
ரூபியுமவளடி பாவியெனதிரினில் (வாறு)

(வ-ம்.) அடியே மூர்க்கிகாள்.

அரசன் தரு.

சந்ததமுஞ்சந்திரவதி சொந்தப்பாரியாகுமவள்
தவிரமறுமாதரைக் கனவிலுமுன்னேன்
அந்தமாதர்யாவருமே எந்தனன்னையாகிடுமே
அப்படிக்கிருக்கவின்று எப்படிமணஞ்செசன்று
அறைந்திடலாயிவை புந்தியநாவுங்கள்
வெந்திடுமேபுமுச் சிந்திடுமேஅடி (வாறு)



வசனம்.

அடி நீலிகாள், பிரம்மா விஷ்ணு ருத்திரன் முதலாயுள்ள முப்பத்துமுக்கோடிதேவர் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷீஸ்வரர் கெருடகாந்தர்வ சித்தவித்யாதரர் யக்ஷ கின்னர கிம்புருடர் சந்திராதித்தர் ஆகாய வாணி பூமாதேவி அக்கினி அந்தணர் அரசாணி சாக்ஷியாக யாவர் கண்ணுக்கும் புலப்படாதற்ற திருமங்கிலியத்தொடுதித்து என்னை மாலையிட்ட யாதொரு சந்திரவதியானவள் எனக்குப் பாரியேயன்றி இவ்வுலகின்கண்ணுள்ள மற்ற மாதர்கள் யாவரும் எனதன்னையாம், அதையறியாது என்னுடன் வாதுசெய்வது நீதியன்று விரைவாகவந்த வழிபார்த்து உங்கள் பதிக்குச்செல்லுங்கள்.

பெண்கள் வசனம்.

அப்படியா பிரபூ, ஆனால் விரும்பிவந்த மாதர்களைச் சேராவிடில் பஞ்சமாபாதகத்தினுங் கொடிதெனக்கூறும் சாஸ்திரம் பார்த்ததில்லையோ.

அரசன் வசனம்.

அடி மூர்க்கிகாள், அதுவாஸ்துவம் ஏகபத்னிவிரத மென்றதைச் சிந்தையுட்கொண்டு எனது மனைவியாகிய சந்திரவதி தவிர வேறொருமாதரைச் சேரக்கூடாதென வெண்ணியிருக்கின்றேனே அதனால் வரும்புண்ணியமானது விரும்பிவந்த மாதர்களை யான்சேராதினால் வரக்கூடிய பாவத்தையொன்றாலும் சரி சமமானாலும் சரி அதைப்பற்றியெனக்கு கிஞ்சிற்றேனும் வருத்தமில்லை நீங்கள் இவிடம்விட்டு சீக்கிரஞ் செல்லுகின்றீர்களா அல்லவா.

பெண்கள் தரு.

நீயொன்றெடும் பொய்சொல்ல லாகுமோ என்றமெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

நீர் இன்னுந்தாமதஞ் செய்யலாகுமோ-நீர் (இ)

அநுபல்லவி.

மன்னவர்தியனே மன்மதரூபனே
என்னபிழைசெய்தோம் எமைமறுவாதுநீர் (இ)

சரணங்கள்.

தீனதயாளனே சிகரநேர்தோளனே
கானமிதையோ கலங்கிநோம்பாரும்நீர் (இன்)

மாமலர்ப்பாதனே மனுநெறிநீதனே
காமவேதனைசகிக் கவுமுடியாதுநீர் (இன்)

பனிமதிவதனனே பருதிவேல்நயனனே
இனியுமையணைந்திடா திவடம்விட்டேகோம்நீர் (இன்)

வசனம்.

பிரபூ. தாங்களெங்களை யெவ்வித கஷ்டப்படுத்தினாலும் தங்களைச் சேராதிவ்விடம் விட்டுப் போகமாட்டோம்.

அரசன் தரு.

சேருமுன்னே சேவல்கூவுதே யென்றமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ஏகம்.

பல்லவி.

வம்புவார்த்தைகூறவும்வேண்டாம் வனிதையரே(வம்)

அநுபல்லவி.

அம்புனற்சாகரஞ்சூழ் அவனியையோர்குடைக்கீழ்
இன்பூமுடனாளுமென்முன்னே இவ்விதம்பின்னே(வம்)

பெண்கள் பல்லவி.

கோபங்கொள்ளிற்பயனொன்றில்லையே குணமணியே(கோ)

அநுபல்லவி.

தாபத்தைத்திராத்தண்ணீர் தடத்தினுற்றென்னிவணீர்
பாபத்திற்குடன்படாதீர் பரிவாய்வாரும்(கோ)

அரசன் சரணம்.

எத்தனையோமதிதனை யெடுத்துரைத்துமதனை
இத்ததிமறந்துலாவியே யெணமேவியே(வம்)

பெண்கள் சரணம்.

ஆத்திரம்பெரிதல்லாது அறநெறிபெரிதேது
கோத்திரத்தைக்குறித்துப்பாராது கூடிக்குலாவும்(கோ)

அரசன்.

நீதியறியாதகொடு நீலியரோயெந்தனோடு
எதினாலும்வாதுசெய்கிறீர் இருக்கைசெல்வீர்(வம்)

பெண்கள்.

வலியவேமாதர்வந்து மருவச்சொன்னவிகழ்ந்து
நலியச்செய்யநினைநீரோவேதம் நவின்றிடுவீர்(கோ)



அரசன்.

காப்பதுவிரதமென்னும் கருத்தையுரைத்துமின்னும்
ஏற்பதிகழ்ச்சியல்லவோ இதையறிந்தும்(வம்)

பெண்கள்.

கல்லோவுமதுசிந்தை கரையாததென்னவிந்தை
நல்லோர்கள்புகழும்ராஜனே ரணசூரனே(கோ)

வசனம்.

பிரபூ தாங்கள் எவ்விதமான ஞாயங்களை யெடுத்துரைத்தபோதிலும் எங்கள்செவிக் கேறாது தயவுசெய்து மருவிச் சுகங்கொடும்.

(அ-ன்-வ-ம்.) அடீ மூர்க்கிகாள் என்னசொன்னீர்கள்.

பெண்கள் வசனம்.

வேந்தே நாங்கள் தங்களைச் சேராது இலேசாய் விடோம்.

அரசன் வசனம்.

இவர்கள் எதைச்சொன்னாலுங் கேட்கின்றார்களில்லையே.

அரசன் விருத்தம்.

பண்டோராண் பெண்ணமைத்தவ் விருவருக்கும்
மணமியற்றிப் பாணிரக்கங்
கொண்டளித்த முறைகடந்து கள்ளவழி
புணரவெண்ணுங் கொடியோர்தம்மை
மண்டலமே வாய்பிளந்து விழுங்காயோ
வவர்தலைமேல் வானுலாவுங்
கொண்டலே பேரிடியை விழ்த்தாயோ
விதுசெய்யிற் குற்றமுண்டோ.

வசனம்.

அடி லண்டிகாள் சீக்கிரம் இவ்விடத்தைவிட்டுச் செல்லுகின்றீர்களா என்னசொல்லுகின்றீர்கள்.

பெண்கள் வசனம்.

நாங்கள் தங்களைக்கட்டிச்சேராது எங்கயிருப்பிடஞ் செல்வது இந்தஜென்மத்திலேது.

வாடாயென்னுரையேநீ மருவிச்சேரலாயென்றமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

வாரீரென்சாமியேநாம் மருவிச்சேரலாம்
மருவிச்சேரலாம் காம வாதைதீரலாம் ஓடி (வா)
பாரீரெம்மாமுகத்தைப் பரதவிக்கின்றோம்
பரதவிக்கின்றோம் உமைப் பணிந்துநிற்கின்றோம் (வா)
வெறுத்துநீர்வெருட்டுவது மேன்மையாகுமோ
மேன்மையாகுமோ எங்கள் விரகம்போகுமோ (வா)

(பெண்கள்-வ-ம்.) பிரபூ தயவுசெய்யுங்கள்.

(அ-ன்-வ-ம்.) அடியே கொடுசூரிகாள்.

அரசனுக்கும் பாணப்பெண்களுக்கும் தர்க்கம்.

அரசன்-தரு.

மகனேமகனேயென்று என்றமெட்டு.

இராகம்-மோகனம்-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

சையோகஞ்செய்வதற் கையோவாருமென்னைச்
சாற்றுவது மழகாகுமோ-மனத்
தைரியமிகக்கொள்ளப் போகுமோ
வெய்யவன்குலதுங்க வேந்தனென்றெண்ணாமல்
மீறிவாதுசெய்ய லாகுமோ

வசனம்.

அடியே சண்டாளிகாள் இனிமேல் வாதுசெய்யாது மரியாதையாய்ச்சென்று விடுங்கள்.

பெண்கள் தரு.

வாதுசெய்தாவது மருவுவோமல்லாது
மன்னவாவுமை விட்டுச்செல்லோமே-நீர்
வைதாலுமனை வர்க்கங்கொள்ளோமே
சாதுசர்ஜனர்புகழ் தர்மசொரூபனே
தயவுசெய்வீர் சரணஞ்செய்தோமே

வசனம்.

பிரபூ, நாங்கள் தம்முடன் வாதுசெய்தாவது மருவுவோமேயல்லாது வீணாய்ப் போகமாட்டோம் தயவுசெய்யும்.



அரசன் தரு.

ஈனஜாதிப்பெண்க ளென்றிரக்கமுடன்
இலேசாகவிட் டேண்டிநீலிகாள்-அதை
எண்ணாததே னிந்த்ரஜாலிகாள்
மாநிலத்திலிந்த மதியாவர்போதித்தார்
மரியாதையாய்ப் போவீர்நாரிகாள்

வசனம்.

அடியே கர்மசண்டாளிகாள் நான் உங்களை ஈனஜாதிப் புலைச்சியர்களென் றெவ்வளவோ இரக்கங்கொண்டு இலேசாகவிட்டும் அதனை யெண்ணிப்பாராதின்னும் எதிராடுகின்றீர்கள் இதுசரியல்ல சென்று விடுங்கள்.

பெண்கள் தரு.

அங்கசன்கணையாலே இங்குபடுந்துயர்
அனைத்தையுக் கண்ணுற்றுப்பாருமே-எமை
அன்புடனேவந்து சேருமே
தங்களுக்கிதுவும் சம்மதமில்லையேல்
தயவுசெய்தோர் முத்தந்தாருமே

வசனம்.

பிரபூ, எங்களைச் சேராவிடினும் ஓர் முத்தமாவது கொடுங்கள்.

அரசன் வசனம்.

அடியே கொடுசூரிகாள் என்னவார்த்தை பாஷிக்கின்றீர்கள் ஸஹாபாஷ்.

அரசன் தரு.

தாரணிபுகழ்சத்திய வீரனென்னைமுத்தந்
தாருமென்றுரைத்ததென் னீரமோ-இந்தத்
தைரியங்கொண்டதென் சூரமோ
சூரியனுல்நாவைத் துணிப்பேனென்றெண்ணாமல்த்
துள்ளுவதுமென்ன வீரமோ

வசனம்.

அடியே நீலிகாள், நீதிதவறாது ஒழுக்கத்துடன் செங்கோல்புரிந்து வருபவனான என்னைமுத்தங் கொடுக்கும்படி சொல்லவும் துணிந்தீர்களா.

அரசன் தரு.

மரியாதையாகவே வந்தவழிபார்த்து
வண்மையுடனேநீர் ஓடுவீர்-உங்கள்
வாசஸ்தலந்தனை நாடுவீர்
தருகின்றுமினித் தாக்குவேன்சவுக்காலே
சடுதியிலினத்தொடு கூடுவீர்

## பாணஸ்திரிகளை விரட்டும் பாகம்.

(அ-ன்-வ-ம்.) அடே சேவகர்காள்.

(சே-ன்-வ-ம்) மகாராஜ் என்ன,

அரசன் வசனம்.

இந்தக் கர்மசண்டாளிகளை மரியாதையாகபோகச்சொல்லுங்கள்.

(சே-ன்-வ-ம்.) அவ்விதமே சொல்கிறோம் அரசே.

சேவகர் வசனம்.

அடியே புலைச்சிகாள் மரியாதையாகச் செல்லுங்கள்.

பெண்க்ள் வசனம்.

ஐயா சேவ்கர்களே ரொம்பவும் கோபிக்காதிர்கள் யாங்கள் அரசனிடம் தெரியப்படுத்தி எங்கள் பதிக்குச் செல்லுகின்றோம்.

(சே-ன்-வ-ம்.) சரி விரைவாகத் தெரியப்படுத்திச் செல்லுங்கள்.

(பெ-ள்-வ-ம்.) அரசே.

பெண்கள் விருத்தம்.

கொடுத்திடும்பரபுவென்றும்மைக் கோறிவந்திரக்கக்கேட்டும்
தடுத்தனைவிரகதாபந் தணித்திடென்றேமதற்கும்
அடுத்திடாவார்த்தைசொன்னீ ராகையாலிரப்போர்க்கியா
இடுக்கணென்றறிந்தாலிப்போ திங்ஙனம்வரவேமாட்டோம்.

அரசன் விருத்தம்.

ஆரடாசேவகர்காள் அனைவரும்வாருமிந்தச்
சோரமங்கையர்கள்கூறுந் துணுக்கத்தைப்பாருமித்தை
சாரமாய்நான்பொறுக்கத் தக்கதோவாகையாலே
நீரவர்களைப்பிடித்திந் நேரமேதள்ளுவீரோ.

வசனம்.

அடா சேவகர்களே இந்தக் கொடிய மூர்க்கிகளை அப்பால் தள்ளிவிடுங்கள்.



149-வது பக்கம் பாணப்பெண்கள் முறையிடுபாகம்.



(சே-ன்-வ-ம்.) நல்லது பிரபூ.

சேவகன் வசனம்.

அடியே லண்டிகாள் இதோ உங்களை அடித்துத் தள்ளிவிட்டோம் தப்பித் தோடிப்போங்கள்.

பெண்கள் வசனம்.

ஐயோ தெய்வமே இப்படியும் கொடுங்கோ லரசனுண்டோ.

சேவகன் வசனம்.

மகாராஜ் சமுகம் உத்திரவுப்படி அக்கொடிய புலைமாதரை யடித்துத் தள்ளிவிட்டோம்.

(அ-ன்-வ-ம்) சரி.

பாணப்பெண்கள் வசனம்.

ஐயோ அக்கொடுஞ் சண்டாளர்க ளடித்துத்தள்ளிய தாலுண்டான காயங்கள் பொறுக்க முடியுதில்லையே இனி யென்செய்வோம்.

சேடிகள் வசனம்.

சகி நாம் இனி வருந்துவதில் பிரயோசனமல்ல நமது பிதாவிடத்திற்சென்று இக்காரணங்களையெல்லாம் தெரிவிப்போம்.

(ச-ள்-வ-ம்.) நல்லது சேடி வா போகலாம்.

## பாணப்பெண்கள் முனிவனிடம்

சென்று வருந்துதல்.

பிதா மகாராஜ் வந்தனஞ் செய்கின்றோம்.

முனிவர் வசனம்.

கல்யாண் பெண்களே நீங்களிவ்வித அலங்கோலத்துடன் வருவானேன் தெரிவியுங்கள் சீக்கிரம்.

பெண்கள் விருத்தம்.

வரதனேநீருரைத்த வண்ணமேசென்றயோத்திக்
காசனையாங்கள்கண்டு அங்குடைமாலைகேட்டோம்
தரல்தகாதென்றுஞ்பின்னா சரசமாய்ச்சேர்வாயென்றோம்
அரவுபோற்சீறியெம்மை யடித்ததன் றடிக்கவையோ.

வசனம்.

பிரபூ தாமுரைத்த வண்ணமே அவ்வரிச்சந்திரனிடம் சென்று பூச்சக்கரக் குடையையும் வெற்றிமாலையையும் கேட்டோம். இல்லையென்று சொல்லிவிட்டான் பின்னர் எங்களைச் செருமென்று கூறியதற்கும் அன்னவன் அடித்துத் துரத்திவிட்டான் இந்தக் கொடுமைக்கென் செய்வோம் பொறுக்க முடியவில்லையே.

முனிவர் வசனம்.

பெண்களே அந்தக்கொடிய சண்டாளன் உங்களை அடிக்கவுந் துணிந்தானோ.

பெண்கள் தரு.

தொடாதடா பாவி யென்றமெட்டு.

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

அடித்தானேபாவி யாதுசெய்வோம்சுவாமி (அ)

அநுபல்லவி.

துடிக்குதேதேகம் துயமனம்நோக. (அ)

சரணங்கள்.

மெய்யெல்லாங்கனிந்து வெந்துதோல்கிழிந்து
செய்யரத்தமொழுக சிந்தைநொந்தழுக (அ)

கைகால்சுழுக்க கண்ணீரொழுக்க
மையணையகூந்தல் மண்புரளவேந்தல் (அ)

சகிக்கக்கூடுதில்லை தஞ்சமென்னதொல்லை
தகிக்குதெவ்விதம் சகிப்போமிவ்விதம் (அ)

வசனம்.

சுவாமி இனி யென்செய்வோம்.

முனிவர் வசனம்.

பெண்களே கவலைப்படாதீர்கள். அக்கொடிய சண்டாளனுடைய திராணியைச் சற்றுநேரத்துட் பார்க்கின்றேன்.

(பெ-ள்-வ-ம்.) நல்லது சுவாமி.

101



முனிவர் விருத்தம்.

வாருந்துமெதிகளேயிவ்வனத்திடை யயோத்திமன்னன்
பேருந்துமென்னிரண்டு பெண்களையடித்தசங்கை
பாருங்களையோவிந்தப் பாதரவுக்கென்செய்வேன்
வாருங்களென்றேடைந்த வன்கணன்றிரத்தைப்பார்ப்பேன்.

(வ-ம்.) ஹே முனிக்கூட்டங்களே.

(மு-ள்-வ-ம்.) பிரபூ என்ன.

விஸ்வாமித்திரர் வசனம்.

இவ்வனத்தினிடமாக வந்திருக்கிற அயோத்தி வேந்தனவன் என்னிருபுத்திரிகளையும் அடித்துவிரட்டிய காரணங்களைக் கண்ணுற்றப்பாருங்கள் ஐயோ இக்கொடுமைக் கென்செய்வேன் நல்லதிருக்கட்டும் என்னுடன் நீங்களனைவோர்களும் வாருங்கள் சற்றுநேரத்துள் அன்னவன் திராணியைப் பார்க்கின்றே

(மு-ள்-வ-ம்.) நல்லது பிரபூ இ...கின்றோம்.

விஸ்வாமித்திரன் தரு

இராகம்-பியாக்-தாள...

பல்லவி.

வாரும்ரிஷிகளே ...ன்திராணி
பாரும்நொடிதனில்நீர் பேணி (வா)

அநுபல்லவி.

யாருமெனக்குநிக ராவரோகூறுமிக
பாரும்பாதலமுஞ்சுரர்வாழும் ஊரும்நடுங்காதோ (வா)

சரணங்கள்.

அண்டமும்வெடியாதோதிசை யானைகள்மடியாதோ
சண்டன்கண்டஞ்சாமலேதென்றிசை தன்னிலிருப்பானோ (வா)

கடலுங்கதராதோஊழிக் கனலுஞ்சிதராதோ
தடமுந்தருவும்பாதராதோஉயர் திடலும்அதராதோ (வா)

(வ-ம்.) விரைவாக நடந்துவாருங்கள் மகரிஷிகளே.

(மகரிஷிகள் வசனம்.) நல்லது பிரபூ.

பொது வசனம்.

இவ்விதம் முனிவன்வர அரசன் எதிர்கொண்டிறைஞ்சுதல்.

அரசன் விருத்தம்.

கடல்களென்படும் ககனமுமென்படும்
திடல்களென்படும் திக்குகளென்படும்
உடல்களென்படு முயிர்களுமென்படும்
கடவுளேவுமைக் கண்டகணத்திலே.

வசனம்.

பிரபூ, அனேகவந்தனம் இவ்வளவு கோபாவேசத்துடன் வருவானேன்.

---

## திருமுடியுதைக்கிற பாகம்.

முனிவர் விருத்தம்.

துரோகியேயிவண்யான்வந்த துடுக்கினைக்கண்டறண்டே
பரோபகாரன்போலெய்திப் பணிந்தனைகள்ளாவென்றன்
சரோருகவிருமலர்த்தாள் தன்னைநீவிட்டாவுன்றன்
சிரோமணிமகுடங்கீழே வீழ்ந்திடச்செய்திட்டேனே.

வசனம்.

அடே, கொடியசண்டாளா கொடியதுரோகி நீ அப்பால்போடா.

அரசன் தரு.

இராகம்-நாதநாமகிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

ஐயோதெய்வமேயென்ன செய்குவேன்-இனி (ஐ)

அநுபல்லவி.

வையகமகிழ்வெய்த மாமணியாற்செய்த
செய்யதிருமகுடம் தியனிழந்தேனிதற் (வை)

சரணங்கள்.

சந்நிதியைபிடித்து தரித்திரனையடித்து
சந்யாசியைப்பிடித்து தள்ளினேனேவிதற்(வை)



குருமொழிமறந்தேனே கொலைத்தொழில்புரிந்தேனே
அருமறைகடந்தேனே யாரையுமிகழ்ந்தேனே (ஐ)
தாசனைவைதேனே சதிமிகச்செய்தேனே
தேசவாசமொன்றுஞ் சிரிக்கலாகினேனின்று (ஐ)

வசனம்.

ஐயோ, பரப்பிரம ரூபமாகப்பிரகாசிக்கும் கடவுளே, இக்காலம் இவ்வுலகத்திலுள்ள என்போலொற்ற சக்கிரவர்த்திகளும் மற்ற அரசர்களும் பார்த்து நகைக்கும் வண்ணம் எனது நவரத்தின கிரீடத்தையிழக்கும்படி யாகவுஞ்செய்தையே உனக்கென்ன குறைவுசெய்தேன் இது தருமமா.

மந்திரி வசனம்.

ஹே முனிபுங்கவரே நீர் சகலசாஸ்திரங்களையுங் கற்றுணர்ந்தவராயிருந்தும் கொஞ்சமேனும் பொறுமையின்றி இவ்வித அநீதஞ் செய்தது தமக்கழகல்ல யோசித்துப்பாரும்.

(மு-ர்-வ-ம்.) அடே மூர்க்காஜாஸ்தியாகப் பேசாதே.

சந்திரவதி விருத்தம்.

வடவைபோற்கண்சிவந்து வான்கனற்பொறிகள்சிந்த
அடமிகுத்தாங்காரித்தே யண்டபிண்டங்களஞ்சப்
படபடத்தோடிவந்து பார்த்திபன்மகுடந்தன்னைப்
புடவியில்விழவுதைத்தீர் புகழ்ச்சியோமுனிவர்கோவே.

இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

தருமமோமுனிகுலபதியே தயாநிதியே (தரு)

அநுபல்லவி.

வருமம்பாது மன்னன்மீது
வழுத்துமெந்த நுக்கிப்போது (தரு)

சரணங்கள்.

அருந்தவம்புரிந்தஐயனே அருள்ஞானமெய்யனே-அ
பொருந்துமோநீர் புரிந்தகொடுமை
பொறையோகருதி முறையோவிது (தரு)

தேசமன்னர்சிரிக்கச்செய்தீரே தேவரீர்வைதீரோ-தே
சசன்மாலி நைவருக்கும்
யார்க்குமிது ஏற்குமோஐயோ (தரு)

ஏதுகுற்றமுமிழைத்ததில்லையே ஈதென்னதொல்லையே-ஏ
சாதுவான தன்மையுற்றும்
சூதமைகிஞ்சிற்றும் அமையவில்லையே (தரு)

வசனம்.

அனேகவந்தனம் முனிசிகாமணியே யாதொருவிதமான குற்ற முஞ் செய்யாத எனது பிராணேசனுடைய திருமணிக்கிரீடத்தை உதைத்துத் தள்ளவேண்டிய காரணம்யாது.

(முனிவர்-வசனம்.) அப்பால் போடி. மூர்க்கி.

தேவதாசன் விருத்தம்.

இப்பதிபுகழும்ஞான வேதிகுலமணியேபோற்றி
செப்பருமெந்தன்றாதை சென்னிமாமகுடந்தன்னை
எப்படியுதைப்பீரிங்கே யாதுகுற்றங்கள்செய்தார்
இப்படிச்செய்ததுந்த னியல்பினுக்கழகோவையோ.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

பல்லவி.

இதுவுந்தர்மமோ சுவாமி (இது)

அநுபல்லவி.

சதுர்மறையுணர்ந்துயர் தவ்முனிவரேவுமக் (இது)

சரணங்கள்.

தேசமன்னர்கள்யாரும் சிரிக்கும்படிக்குநீரும்
ராசனையவமானம் நாடிச்செய்தீரேவுமக் (இது)
பெரியதவம்புரிந்தும் பெரியோராகவிருந்தும்
அரியகோபம்பிறந்த தாகுமோதானுமக் (இது)
கடவுளர்க்கேற்குமோ கனபுகழ்கோர்க்குமோ
அடமகமிசைகொள்ள யாதுகாரணமுமக் (இது)

வசனம்.

மகரிஷியே எனது பிதாவணிந்திருந்த திருமுடியை எதற்காக வுமது காலால்மிதித்துத் தள்ளினீர் என்னகுற்றம் செய்தார் ஐயோ விற்பனராயிருந்தும் நீரிவ்விதம் செய்தது ஞாயமன்று.



(மு-ர்-வ-ம்.) போடா அப்புறத்தில் மூர்க்கப்பயலே.

அரசன் விருத்தம்.

வந்தனமுனிவர்நாதா மைந்தனென்மீதுகோபம்
வந்தணிமகுடந்தன்னை மண்ணினில்விழவுதைத்தீர்
சுந்தரமாகவஃதிற் றொகுத்திடுமணிகள்பட்டே
உந்தன்மெல்லடிகள்நோகும் பிடித்துபசரிப்பேன்யானே.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

காயமாகியதோசுவாமி கஞ்சமலர்ப்பாதம்-ஐயோ (கா)

அநுபல்லவி.

தூயநவமணிகள் சுருக்கெனத்தைத்துமிகக் (கா)

சரணங்கள்.

ரத்தம்வருகின்றதோ ரணமாய்வலிக்கின்றதோ
இத்தனைகோபங்கள்வர ஏழையென்னபிழைசெய்தேன் (கா)
இந்தப்பாவத்திற்கென்செய்வேன் எவ்விதமினிநானுய்வேன்
எந்தவிதமுஞ்சகத் தென்னையாட்கொள்வதுன்பாரம் (கா)
அருந்தவம்புரிந்தகோவே அருள்முனிவோர்கள்தேவே
வருந்துமென்மீதேதேனும் வருத்தமிருந்தாற்கூறும் (கா)

வசனம்.

பிரபு, மிகவுங் கோபாவேசத்துடனிங்குவந்து என்னுடைய கிரீடத்தை மிதித்துத் தள்ளியவிசையினால் அக்கிரீடத்திலழுத்தி யிருக்கப்பட்ட நவமணிகற்களானதுதைத்துத் தங்களுடைய திருவடிகாயமுற்றிருக்கும் என்னிருகைகளால்பிடித்துபசரிக்கின்றேன், கோபமுறாதிருங்கள்.

முனிவர் வசனம்.

அடே கொடியவஞ்சகா என்னவார்த்தை சொல்லவந்தாய்.

முனிவர் விருத்தம்.

இந்திரமயேந்திரஜால மிபல்படன்கற்றுத்தேர்ந்த
தந்திரவஞ்சநெஞ்சச் சண்டாளாநொந்தவன்போல்
மந்திரபூர்வமாக வணங்கிநீயருவதாலே
உந்தியகோபந்தன்னை யொளிப்பேனென்றெண்ணினையோ

முனிவர் வசனம்.

அடே சண்டாளா இவ்விதமாக உபசரித்ததினால் எனக்கு உன்மேல் உண்டான கோபம் என்னைவிட் டகன்றுவிடும் என்ன மதித்தாயோ சபாஷ் யெஞ்ஞான்றும் ஒழிக்கத் தக்கதல்ல.

அரசன் விருத்தம்.

குடியாகநிற்றலிலே வுமக்கியாதோர்
குற்றங்கள் செய்தறியேன் பின்னுந்தங்கட்
கடிமையாயிருத்தலி லோர்குறைவுமில்லேன்
ஆகையாலிருந்தாப்போ லிருந்துகோடை
இடியிடித்ததன்மையதாய்க் கோபமிஞ்சி
இவ்விடத்திலெனது முடிதனையுதைத்த
அடிமலர்நொந்திடுமெனத் துன்பமடைவதல்லால்
அடியனேன்றலைநோமென் றழுங்கிலேனே.

அரசன் தரு.

ஜெகதீசா கரிவரதராஜா யென்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ஆதி..

பல்லவி.

என்னகுறைவுசெய்தேன்  இன்னான் உமக்  (கெ)

அனுபல்லவி.

பொன்மணிம  குடந்தள்ள
பொற்பாதங்கள்  சிவந்துதுள்ள
என்மீதிந்தக்  கோபங்கொள்ளஉமக்  (கெ)

(மு-ன்-வ-ம்.) அடே துஷ்டா இங்கு எதற்காக வந்தனை.

அரசன் தரு.

நாட்டையாளும்  ராஜர்வண்மை
வேட்டையாடல்  விதியவ்வண்மை
காட்டையடைந்த  காரணமுண்மைஉமக்  (கெ)

முனிவர் வசனம்.

என்னகாரணத்தினாலிங்கு வேட்டையாடவந்தாய் சொல்லடா சீக்கிரம்..



அரசன் தரு.

கடிநகரின்  குடிகள்சிந்தை
மிடியைத்தீர்க்கவே  நினைந்தே
அடியேன்வேட்டையாட  வந்தேன்உமக்  (கெ)

முனிவர் வசனம்.

மிருகங்களை ஏன் வதைத்தாய் அவைகளுன்னை என்னசெய்தன.

அரசன் தரு.

செய்யவளஞ்சீவ  ஜெந்துகளிதனை
செழித்தமிருகங்க  ளழித்ததாலதனை
வைவரிசிலைபால்  வதைத்தேனிங்கனைஉமக்  (கெ)

முனிவர் வசனம்.

சரீ மிருகங்களைத் தான் கொன்றாய் என்னைப்போலொத்த தவசிரேஷ்டர்கள் வாழ்ந்திருப்பதற்கு யோக்கியமாயுள்ள இவ்வனம் உனக்கு யென்னசெய்தது அத்தையேன் கொய்தாய்.

அரசன் தரு.

கொடுக்கண்மிருகங்களைக்  கொன்றிடச்சோலை
யிடுக்கண்ணாக  யிருந்ததினாலே
வடுப்படுத்தினேன்  வாளிகளாலேஉமக் (கெ)

முனிவர் வசனம்.

பன்றியை யேன் எய்தாய் அதுவுமுன்னை யென்னசெய்தது. அடே கொடிய பாதகா.

அரசன் தரு.

கரிபரிதேர்  காலாளித்தை
மரியச்செய்தன  வாலேனத்தை
எரிகணையினாலெய்தேன்  மிருத்தேஉமக் (கெ)

முனிவர் விருத்தம்.

ஞானமற்றதுற்கொடியனே நவின்றிடக்கேளாய்
நானனுப்பியவிலங்கினை முற்றிலுநசித்தாய்
கானழித்துயர்கவுலவக் துன்புறக்கடுத்தாய்
நினமற்றவன்போ லொருவனையும்யான்தெரியேன்.

முனிவர் வசனம்.

அடே ஞானங்கெட்ட கொடிய துரோகி நாமனுப்பிய விலங்கினங்களையும் கொன்று பூஞ்சோலையையும் கொய்து பன்றியையும் பாணத்தாலெய்து தவசிகளிருப்பதற் கிடமில்லாமலும் செய்தாய் இப்படிச் செய்த பாதகன் உன்னைப்போல உலகத்திலொருவருமில்லை.

அரசன் விருத்தம்.

என்னுடையதிருநாட்டை யழித்திட்டாலும்
எழில்பெருகுநன்னகரை யழித்திட்டாலும்
மன்னுமலர்க்காவனத்தை யழித்திட்டாலும்
வங்கிஷத்திலுள்ளவரை யழித்திட்டாலும்
இன்னுமிருவனமனைத்து மழித்திட்டாலும்
இயல்பாகத்தாங்கள் வரவிடுத்ததென்ன
உண்ணுவேனுகிலிந்தவிதஞ் செய்வேனே
உயர்தவசிகாமணியே முனிவர்கோவே.

அரசன் விருத்தம்.

சிறியரவர்தமக்குரிய தீமையன்றே
செய்குவதுமறைநான்குங் கற்றுணர்ந்த
அறிஞரன்றேவதைப்பொருப்ப தவ்விரண்டும்
அவரையல்லால் மற்றெவருலாற்றுமோதான்
நெறிதெரியாய்ச்சண்டாளனையென்னை
நீர்பொருளாயெண்ணிக் கோபிப்பீரானல்
பொறுமைபுங்கருணையு மென்மீதில்லாமற்
போனதோதீனதயா நிதியேகோவே.

அரசன் வசனம்.

என்மீதிருக்கும் கோபத்தை க்ஷமித்து ரக்ஷிக்கக் கோறுகின்றேன் பிரபூ.

முனிவர் விருத்தம்.

வாழியாய்நீதான்கற்ற வாசகமியாவுமெற்கிந்
நாழிகைதெரிவதாக நவிலவுஞாயமாமோ
வழிசையுனக்கிசைக்க வெய்துமென்மக்கட்மைப்
பாழிலேயடித்தசங்கை பகருவாயெனக்கிப்போதே.



முனிவர் வசனம்.

கேளாய்கோவே இதுவரையினும் நீ கற்றுணர்ந்த சாமர்த்தியத்தால் என்னுடன் பாஷிப்பது ஞாயமன்று நல்லதிருக்கட்டும் சங்கீத சாயுத்யவேணு கானங்களை நீ கேட்டுணர்ந்தும் தகுந்தவெகுமதி கொடுக்காது எனது இரண்டுகுமாரிகளையும் அடித்துத் துரத்துவது ஞாயமா அதன் விபரங்களை உண்மையாக எடுத்துரைப்பாயாக.

அரசன் தரு.

மாதவமே என்றமெட்டு.

இராகம்-கானடா-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

மைந்தனையாட்கொண்டமுனி மாதவதயாநிதியே
இந்தவண்ணம்வந்தகோபம் யாவுந்தீருமிதுததியே (மை)
அந்தவகையாவையுமிங் கடியவன்றவறிடாது
உந்தனிடங்கூறுகின்றேன் ஓகையாகக்கேளுமிப்போது (மை)
இந்தபெண்களுன்றன்பெண்க ளென்றறியேன்பின்னுமவர்
எந்தன்பாற்றருந்தவார்த்தை இயம்பிடாததாலேஐயனே (மை)
அடித்ததுண்மையாகுமிந்த அன்யாயத்தைப்பொறுத்தே
மடித்திடாதவரமருள்செயும் அடிக்கிக்கோடிசேவைசெய்தேன் (மை)

அரசன் வசனம்.

தமது பெண்களானபேர்கள் என்னிடம்வந்து அவர்கள்கற்ற வித்தைகளைக்காட்ட அத்தைகேட் டானந்தித்து அதற்குத்தக்க வெகுமதிகொடுத்தேன் அத்தைமறுத்து பூச்சக்கரக்குடையையும் வெற்றிமாலையையும் கேட்டார்கள் அதைக்கொடுக்கத் தக்கதில்லையென்றேன் பின்னர் அடியேனைச் சேரவேண்டுமெனப் பலவாறு தர்க்கித்ததால் அநீதிக்கி உட்படலாகாதென சேவகர்களால் தள்ளும்படிசெய்தேன் ஆகையால் அப்பெண்களை தமது பெண்களெனவு மறிந்திலேன் இவ்விதம் யான்செய்தகொடிய பிழையைப்பொறுத்து ரக்ஷிக்கக்கோறுகின்றனன் அருந்தவமுனி சிகாமணியே.

முனிவர் விருத்தம்.

கத்தியாற்கழுத்தறுத்து கைப்பிழைவந்ததென்று
யுத்தியாயுரைப்பதைப்போ லுரைத்தனையாகையால்நீ
முத்திநவறிவைப்பெற்றும் மூர்க்கமாயென்பாலுன்னைப்
பத்தியவொழுக்கம்போக பயம்போகவியம்பினையே.

முனிவர் வசனம்.

கேளாயரசனே ஒருத்யாகியிடம் யாசகன்சென்று தான் எண்ணியபொருளைக்கேட்டால் அச்சமயம் அப்பொருளை அவன்கொடுப்பதற்கு மனமில்லாவிடில் தகுந்தவார்த்தைகளைச் சொல்லி அனுப்புதல் நீதி அத்தைத்தவிர்த்து அடித்துத்துறத்துவதாகுமா இவ்விதம் செய்யலாமென்ற சுருதியாரால் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

அரசன் தரு.

சங்கரசிவசந்திர வென்றமெட்டு.

இராகம்-கல்யாணி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஐயனேநின் பாதசேவை
செய்தேன்செய்தேன் செய்தேன்செய்தேன் (ஐய)

அநுபல்லவி.

ஐயாநின்கோபம்நீக்கி அன்பானகடைக்கண்ணோக்கி
ஆளும் ஆளும் ஆளும் ஆளும்(ஐய)

சரணங்கள்.

மைதிகழ்நயனவிந்த மாதர்களைமோதியவெந்தன்
கையறுக்கினும் கண்ணைக்குத்தினும்
மெய்யறுக்கினும் வேணசெய்யினும்
மெத்தசம்மதம் மெத்தசம்மதம்(ஐய)

அரசன் வசனம்.

பிரபூ, தமது குமாரிகளென்றறியாது அவர்களை அடித்ததான எனது கைகளையறுத்தாலுஞ் சம்மதம் கண்களைத் தோண்டினாலுஞ் சம்மதம் தேகத்தை சல்லடைக்கண்களாக துளைத்தாலுஞ்சம்மதம் இன்னும்தாங்கள் எண்ணியபடிக்கெல்லாம் துன்பம்செய்வது மெத்தவுஞ்சம்மதம் கோபத்தைப் பொருத்தருளல்வேண்டும்.

முனிவர் விருத்தம்.

குன்றடர்வனங்களெல்லாங் கொய்ததும்விலங்கினத்தை
கொன்றதும்பன்றிமெய்யைக் குறைத்ததுமிசையைக்கேட்டு
இன்றடித்தினமாக வைத்துமென்மாணை
மன்றல்நீசெயிற்பொறுப்பேன் வழுத்துவாய்பதிலெமக்கே.



முனிவர்-வசனம்.

கேளாயரசனே கோபத்தை சாந்தம்பண்ணிக்கொண்டு ரக்ஷிக்க வேண்டுமென்று தெரிவித்தாயே அவ்விதம் செய்யவேண்டின் எனது பெண்களிருவரையும் விவாகம்செய்து கொள்ளவேண்டும் என்னதெரிவிக்கின்றாய்.

அரசன் தரு.

தேசமீதுயாருந்தீநெறி செய்திடினதைத்தீர்க்கும்நீரிவை
தாசனென்முன் சாற்றலென்சாரம்
நீதிகுலத்தோடி ராஜர்சேரல்
நீதியாகுமோ நீதியாகுமோ(ஐய)

அரசன் வசனம்.

உலகத்தின் கண்யாரேனும் தீங்குசெய்தால் அஃதைதாமே தீர்ப்பது கடமை அதைதவிர்த்து அடியேன்முன் இவ்விதம் சொல்வதுயாது பயன்படும் நீசர்களோடு அரசர்கள் சேரும்படிக்கு நீதியுளதாநாதா.

முனிவர் விருத்தம்.

குகையினில்வாழ்வசிஷ்டன் கொடுத்தசாபத்தினாலே
தகையிலாப்புலையனானோன் றன்சேயநீயன்றோமக்கள்
மிகையுறுங்களபந்தோய்ந்த மென்முலைமலையைச்சார்ந்து
நகையுறவாழ்ந்திருத்தல் நன்னெறியிலையோவேந்தே.

முனிவர் வசனம்.

நீண்டமலைகளின் குகைகளில் வாசம்செய்வதான வுனது குருவசிஷ்டரிஷியானவன் அக்காலத்தில் கொடுத்தசாபத்தினால் நீசதத்துவத்தையடைந்த திரிசங்குவின் புத்திரனாகிய நீயும்நீசனன்றோ அவ்விதமிருக்க கூடிய நீயெனது பெண்களின் மலைபோன்ற ஸ்தனபாரத்தைச்சார்ந்து சுகமனுபவித்து நன்மைபெற வாழ்ந்திருப்பது அறமன்றோ.

அரசன் தரு.

அன்றென்றுதைவசிஷ்டராலே அடைந்தநீசசாபந்தனையே
சென்றெளிதிற் றீர்த்தநீரிவண்
இன்றெமைப் புலையனுக்குவ
தேதுகாரணம் ஏதுகாரணம்(ஐய)

அரசன் வசனம்.

முனியே, அப்படியவரடைந்த நீசதத்துவத்தை நாமே நீர்த்து வைத்து இப்பொழுது என்னை இவ்விதகாரியத்திற்குட் படச்சொல்வது தமக்கே அழகோ.

முனிவர் விருத்தம்.

ஆதியிலுன்றன்றந்தை அடைந்தநீசதத்வந்தீர்த்தேன்
ஏதினிமின்னும்நீக்க வெனக்கரிதல்லவாமால்
ஓதினிவாசகங்கேட் டேனெங்கனிகூர்ந்தென்மக்கள்
மீதினிலாசையுற்று விவாகம்நீபுரிவாய்வேந்தே.

முனிவர் வசனம்.

கேளாயரசனே ஆதியில் உன்பிதாவடைந்த சாபத்தை நீக்கின எமக்கு இப்போது நீயடையப்போவதான நீசதத்துவத்தை அகற்றுவது எமக்கோர் பெரிதல்ல ஆனதால் நான்சொன்னபடியே என்மக்களை விவாகஞ்செய்துகொள்.

அரசன் தரு.

சொன்னபேச்சொங்கே யென்றமெட்டு.

இராகம்-நாபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

வந்தனந்தந்தேன் சுவாமி (வந்த)

அநுபல்லவி.

செந்தழற்கண்ணுற்சுடினும் தேகமுடல்விட்டுயிர்விடினும்
எந்தன்மெய்யைக்கூறிடினும் இதற்கிசைவேனோ செய்திடினும் (வந்)

முனிவர் விருத்தம்.

உரைத்தவாசகத்தையெல்லாம் உட்கொளாதறிந்தவன்போல்
இரைத்தனச்சமத்தைக்காட்டி தொழுதனைநன்றுநன்று
வரைத்தடமுலையாரென்றன் மக்களைச்சேரவிட்டால்
அரைக்கணத்துன்யானீயுஞ் சாபம்நீயடைகுவாயே.

முனிவர் வசனம்.

அப்படா, நான்சொல்லுகிற வார்த்தைக்கு நீ இணங்காவிடில் சாபமிடுவேன் பெறுவாயாக.



அரசன் தரு.

தங்களுக்கு வந்தகோபம்
தணிவதாய்நீர் தாரும்சாபம்
இங்கனம்பான் ஏற்றுக்கொள்வேன்
இட்டருளும் சிஷ்டர்கோவே (வந்)

முனிவர் விருத்தம்.

மின்னிடைமாதர்தம்மை விவாகமேபுரியேனென்ன
என்னிடமியம்புங்கள்வா யென்னவுன்திராணிஆஆ
புன்னிழிதொழிலேசெய்யும் புலைபனுக்கடிமையாவாய்
பின்னிதைத்தெரிந்துகொள்வாய் பேசினேன்பேசினேனே.

(மு-ர்-வ-ம்.) துஷ்டாநீ நீசனுக்கடிமையாகக் கடவது.

அரசன் தரு.

கொஞ்சிடுஞ்செய் சொற்குற்றத்தால்
வஞ்சித்தன்னை பாவிசெத்தாய்
நஞ்சிட்டா லதைவிலக்கும்
நன்னெஞ்சுள ரோபுவிக்குள் (வந்)

கொதிக்கிற்கடல் மாற்றத்தண்ணீர்
கொடுப்பவரோ வரிவண்ணீர்
எதிர்த்துமுனிந் திடுமென்பால்
எவரொவர்வந் தஞ்சமென்பார் (வந்)

தாயுந்தந்தையுந் தஞ்சமும்
சற்குருவும் நற்றெய்வமும்
நீயுண்டென்றே நினைந்திருந்தேன்
நின்னருள்செய் வாய்மகிழ்ந்தே (வந்)

முனிவர் விருத்தம்.

சந்ததமன்னைதந்தை தஞ்சமுமென்பாய்மீண்டும்
முந்தவாழ்வென்பாயாதி முதல்வனுமென்பாய்நீயே
எந்தனையிந்தவண்ணம் கெலிப்பவனிச்சமர்த்தா
உந்தனையல்லால்வேறே யொருவனைக்கண்டிலேனே.

முனிவர் வசனம்.

அடா இந்திரஜாலயெந்தலே இந்தவிதமாக ஸ்தோத்திரபாடம் செய்து என்னைக்கெலிப்பவனியல்லாது உலகத்தில் ஒருவனையுங் கண்டதில்லை சபாஷ்.

அரசன் தரு.

இருகண்ணினை வேண்டினும்
இராச்சியத்தை வேண்டினும்
திருவுடன்றரு வேனீச
ஸ்திரீகளைவேண்டேனே ராஜன் (வந்)

முனிவர் விருத்தம்.

மன்னர்மன்னவனேயிப்போ வழுத்தியவண்ணமீய்ந்தால்
அன்னதேநமக்குத்தக்க தாகுங்காணுகையாலே
சொன்னதேயமையும்நீயாள் சூழ்திரைக்கடல்ஞாலங்கள்
என்னதேஎன்னதேயாம் யிகத்தினிஉன்போலுண்டோ.

முனிவர் வசனம்.

மெத்தசந்தோஷம் வேந்தே இப்போது சொன்னவார்த்தையைக் காப்பாற்று இதுதான் நமக்குகந்தது.

முனிவர் விருத்தம்.

மருமலர்த்தாரணிந்த மன்னவாநின்னுவாலே
பெருநகர்நாடுசெல்வம் பிரீதியாய்த்தருவேனென்று
கருதினைஅந்தவண்ணங் கருதியமொழிமாறுதன்
அருளரசைக்கொடுக்கின் அமைந்திடுமெமக்குத்தானே.

அரசன் தரு.

உன்றன்மக்களைச் சேர்ந்தே
உறுநலன்வேண்டிலேன் கூர்ந்தே
என்றன்னகர் செல்வம்நேமி
ஈந்தேன்மொழிதவ னேன்சாமி (வந்)

முனிவர் விருத்தம்.

பெருமையாய்நீதானிப்போ பெருநகர்நாடுசெல்வம்
தருகிறேனென்றுநாவாற் சாற்றினுல்நம்புவேனே
ஒருவேளையில்லையென்று லுன்னையென்செய்வதாமால்
அருமையாய்த்தாரைவார்த்தால் யானதைநம்புவேனே.

(மு-ர்-வ-ம்.) நல்லது சொன்னபடியே தாரைவார்ப்பாய்.

(அ-ன்-வ-ம்.) நல்லது பிரபூ.



அரசன் தரு.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

தாரைவார்ப்போம்வாராய்பெண்ணே சந்திரமதியேகண்ணே (தா)

அநுபல்லவி.

நாரைமேல்க்கயல்பாய்ந்திடும் நறுந்தடத்துள்வாய்ந்திடும்
நிரைக்கெண்டியினில்மொண்டுநீவருவாய்கையிற்கொண்டு (தா)

சரணங்கள்.

நீடும்வேணிபூணுமிந்த ரிஷீஸ்வரர்க்குகந்த
நாடுநகர்செல்வந்தனை நல்கவேண்டியேயிங்கனை (தா)

அரசன் வசனம்.

பெண்ணே இம்முனிவருக்கு நமது நாடு நகர் செல்வம் இவைகளை தாரைவார்க்க வேண்டியிருப்பதால் இந்தக்கெண்டியைக் கொண்டுபோய் ஜலம்மொண்டு கொண்டுவா.

(ச-தி-வ-ம்.) இதோ ஜலம் கொண்டுவந்தேன்.

(அ-ன்-வ-ம்.) இதோ தாரைவார்க்கின்றேன் பிரபூ.

(மு-ர்-வ-ம்.) எங்கே வார்ப்பாயாக.

அரசன் விருத்தம்.

தேவரீருத்தரம்போற் றேவியும்யானுமாக
ஆவலாய்தாரைவார்த்தோம் அங்கையினேற்றுக்கொண்டு
காவல்பூண்டுற்றவென்றன் கடிநகர்நாடுசெல்வம
மேவருஞ்செங்கோல்தந்தேன் விரும்பிநீராளுவீரே.

அரசன் தரு.

இராகம்-காபி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

மண்டலநின்னது மாநகர்நின்னது
மணிரதகஜங்களும் வாசியுநின்னது
தெண்டன்செய்பெண்களும் செல்வமும்நின்னது
சேனையும்நின்னது தானையும்நின்னதே

முனிவர் விருத்தம்.

மன்னவாவெனக்குத்தாரை வார்த்ததாலுனதுநாடு
என்னதாய்விட்டதாகையா லினியான்மகிழ்ந்தே
என்னகர்நின்றேயிந்த விகமெலாம்புரப்பதற்கு
நின்னடையாளந்தன்னை நேயமாயீகுவாயே.

(மு-ர்-வ-ம்.) ஆனதால் உனது கணையாளியைக்கொடு

அரசன் விருத்தம்.

நல்லதுநகரம்நாடு நற்றிருவமைச்சுசேனை
வல்லபோர்வேழம்வெற்றி வாசிதேருழிமட்டும்
சொல்லருமுனியேயாண்டு சுகத்தினிலிருப்பீரிஃதோ
எல்லையாழிதந்தேன் இன்பமாய்க்கைக்கொள்வீரே.

அரசன் வசனம்.

முனிவரே இதோ கணையாழிகொடுத்தேன் பெற்றுக்கொள்ளுங்கள்.

அரசன் தரு.

வரகந்தனில்வாழும் மென்றமெட்டு.

இராகம் கமாசு தாளம் ஆதி.

கண்ணிகள்.

குடைகொடுத்தேன் அருங் கொடிகொடுத்தேன்பெரும்
படைகொடுத்தேன்திண் டேர்பரிகொடுத்தேன்
தடைகொடுத்தேனின்று தமியன்செல்கிறின்று
விடைகொடுத்தேகிடும் மெய்முனியே

முனி புங்கவர் விருத்தம்.

துணியிந்தனிநெஞ்சுடையா யுன்றன்றோள்மாலை
மணியும்வளையும்வலையங்களு முன்வடிவாளும்
அணியுமுடியும்சேயுந்தாயும் அணியும்பொற்
பணியுங்கழலும்தந்தேகின் றப்பால்நீயே.

முனிவர் வசனம்.

அரிச்சந்திரா உன்னுடைய மாலை கடக கங்கணகேயூரமும் உடைவாளும் ஆபரணங்களும் க்ரீடமும் உன் நாயகியும் பாலனுமணிந்திருக்கும் ஆபரணங்களும் வீரகெண்டாமணியும் அவிழ்த்துக்கொடுத்துவிட்டுச் செல்வாயாக.



அரசன் விருத்தம்.

நானணிந்தபூஷணமும்மணிமுடியுங் கடககங்கணங்களுந்திண்
தானணிந்தகேடகமும்வாளும் பீதாம்பரமும்சால்வையும்பெண்
மானணிந்தபூஷணமும்மகனணிந்த பூஷணமும்மகிழ்ந்தவிழ்த்தே
வானணிந்தமதியணிந்தவரனனைய முனியேநின்முன்வைத்தேனே.

அரசன் வசனம்.

பிரபூ எல்லாவற்றையும் இதோ கழற்றி வைத்துவிட்டேன் பெற்றுக்கொள்ளுங்கள்.

முனிவர் விருத்தம்.

உன்னையுமுனக்குவாய்த்த வொண்டொடியையுமுன்மைந்தன்
றன்னையும்விடுவதற்குப் புனையுமாபரணந்தந்தாய்
பின்னையுஞ்சேயும்நீயும் பேதையும்புனைந்திருக்கும்
மின்னனேர்வஸ்திரமீய்ந்து மேவுவாயப்புறத்தே.

முனிவர் வசனம்.

அரிச்சந்திரா உனது ஆபரணங்களைக் களைந்து கொடுத்துவிட்டனும் இன்னும் நீங்கள் மூவரும் அணிந்திருக்கக்கூடிய வஸ்திரத்தை அவிழ்த்துக் கொடுத்துவிடுங்கள்.

அரசன் தரு.

தெய்வமே என்செய்குவேன் யென்றமெட்டு.

இராகம்-சாமி-தாளம்-ஆதி.

பல்லவி.

விடைவாகனதுங்கனே உமைபங்கனே (வி)

அநுபல்லவி.

இடையுடையீந்தால்யென் செய்குவேந்தான்வென் (வி)

சரணங்கள்.

எவரிடஞ்சென்று யாசிப்போமின்று
விவரங்களொன்றும் விண்டிலேன்றன்றும்வென் (வி)

எவ்வுலகத்தோர்க்கும் எழில்வஸ்திரமானங்கார்க்கும்
அவ்வுரையுணர்ந்தோரே இவ்வுரைசெய்தாரோவென் (வி)

அவ்வியநாடுதந்தேன் அணிமணிப்பணிதந்தேன்
இவ்விதஞ்சொன்னக்கால்யென்சொல்வேன்வாக்கால்வென் (வி)

முனிவர் விருத்தம்.

கறைமிடற்றவனைநோக்கிக் கன்னியும்சேயும்நீயும்
முறையிடுகிறதைப்பார்த்தால் மொழியவாயில்லையென்றன்
அறையணிகாவிவஸ்திரத்தை முப்பங்குசெய்து
இறைவனைதந்தேனுந்த னிடையுடைதந்துசெல்வீர்

முனிவர் வசனம்.

அரசே நீ புலம்புவதைப் பார்த்தால் ரொம்பவும் இறக்கமாயிருக்கிறது நல்லது இதோ நானணிந்திருக்கக்கூடிய காவிவஸ்திரத்தை தருகின்றேன் பெற்றுக்கொண்டு அதுகளை குடுத்துவிட்டுச் செல்லுங்கள்.

(அ-ன்-வ-ம்.) அப்படியே தருகின்றோம் சுவாமி.

அரசன் விருத்தம்.

தாங்களீய்ந்திட்டகாவி வஸ்திரந்தனைத்தரித்தே
யாங்களூண்டிருந்தவஸ்திரம்விழ்த்திதோநின்முன்வைத்தோம்
ஈங்கனம்பெற்றுக்கொண்டு எமக்குநீர்விடைகொடுப்பீர்
தேங்கமழுமதிரண்டு திருவடிசரணம்தேவே.

முனிவர் விருத்தம்.

எந்தனையிப்போதேய்த்து ஏகவும்ஞாயமோதான்
அந்தநன்னகர்க்குயானு மருமுனிவோருமெய்தி
உந்தன்பாலிருந்தசெம்பொன் றுள்ளதையெல்லாமிங்கே
தந்தகன்றிடுவாயித்தை சாற்றினன்மன்னர்கோவே.

முனிவர் வசனம்.

சபாஷ் அடே யாரை மோசம்பண்ண எத்தனித்தாய் நல்லது நீ நம்மை இங்கிருக்கப்பட்ட முனிவர்களோடு ராஜ்பத்தை சேர்ப்பித்து நமக்கு நீ முன்னமே கொடுக்கவேண்டிய தொகையை என்வசம் ஒப்பித்துவிட்டு அப்பால் செல்லுவாயாக.

அரசன் விருத்தம்.

முன்னமேயுமக்குச்சொன்ன மொழியதுதவறியானும்
அன்னதொகைக்கொண்டிருந்த அருநிதிதக்தேனல்லேன்
நன்னகருடனேசெம்பொன் யாவுநீமகிழ்யாய்தந்தேன்
இன்னமுமுமக்குப்பொன் னீந்திடவென்பாலிடமுமுண்டோ.



முனிவர் விருத்தம்.

வருடனிந்தமோசமியம்புவ தறிவில்லாதோய்
வேரமாய்நகரோடேமுன் விளம்பியபொன்னையுஞ்சேர்த்
வேடம்யானீய்ந்தேனென்ன வின்றுநீவார்த்தநீரோ
வையாகச்சொல்லியீய்ந்த வுறுதியுமுளதோவேந்தே.

முனிவர் வசனம்.

நீ தாரைவார்க்கும்போது இதற்கு முன் யாகத்திற்காக கொடுத்தபொருளை நீக்கி தாரைவார்த்தே னென்பதாகச் சொன்னதுண்டா அவசியம் அப்பொருளைக் கொடுக்கத்தான் வேண்டும்.

முனிவர்-விருத்தம்.

பகுதியின்குலத்திலுற்ற பார்த்திபரொரும்நாவாற்
கருதியவசனமெந்தக் காலமுந்தவாரந்த
அருநெறியானதுன்ற னன்டையிற்காணோமாமால்
பொருபுலிதனக்குநித்தப் பூனையாய்ப்போவதுண்டோ.

அரசன்-தரு.

கர்கே தன்ஹாய்முலே யென்றமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

பொன்னைப்பழித்திலங்கும் புரிசடைமுனிவர்கோவே
என்னைப்பொருள் கேட்டிரின்றே
எங்குவைத்திருக்குகின்றேன் ஈந்திட-ஈந்திட-ஈந்திட-ஈந்திட(பொ)
இத்தனைநானிற்றுருவ தென்றியம்புவீரொனில்யான்
அத்தனைகாட்குள் நின்பொருள்
அருளத்தவனையருள் ஐயனே-ஐயனே-ஐயனே-ஐயனே(பொ)

அரசன்-வசனம்.

பிரபூ யாகப்பொருளைகொடுக்கவேண்டுமென்று உத்திரவாயிற்று அதை இத்தனைநாளென்று ஒருதவணைசொன்னால் செலுத்திவைக்கின்றேன்.

முனிவர் விருத்தம்.

ஊருநாடடர்ந்தகான முயாமலைபிவைகளிவ்வந்
தாருன்றேடைவனைதப்பட்டு அவைவார்யார்தவணையிவார்
நேருடனேநீயந்த நிதிமுழுவதுங்கொடுத்து
ருடனெப்புறத்தே செல்லடாவனைத்தடுத்தேன்.

முனிவர் வசனம்.

இந்தவிதமாக உன்னுடனேவந்து அலைவதுயார் தவணைகொடுப்பதுயார் சீ பயித்தியகாரா இவ்விடத்திலேயே அப்பொருள்முழுமையுங்கொடுத்து அப்பாற்செல்வாயாக.

அரசன் தரு.

இராகம்-கமாசு-தாளம்-ரூபகம்.

செய்தபிழைபொறுத்தேன் செங்கோலைத்தாவென்னவொத்தே
மெய்மகிழ்ந்தீய்ந்துநீரிடும் விடையடைந்தகன்றிடும்
வேளையில்-வேளையில் வேளையில்-வேளையில் (செ)

அழைத்தநீரெனக்கொப்பி அவதியிட்டாளனுப்பில்
பிழைத்தெங்கிருந்தாவது பெரும்பொருளீவேனது
பெற்றருள்-பெற்றருள் பெற்றருள்-பெற்றருள் (செ)

மாதவநின்னுடுகளில் மலைகளில்காடுகளில்
போதவேயுற்றிருக்கும் பொருளையல்லாமலையோ
புண்யனே-புண்யனே புண்யனே-புண்யனே (செ)

நின்னிதயத்திற்கரிய யென்னிடம்வேருவிதமாய்
நன்னிதியமிருந்தால் நாவால்நவிலுமிப்போ
நல்கிட-நல்கிட நல்கிட-நல்கிட (செ)

முனிவர்-விருத்தம்.

அமரசேரிதென்னி னைறைவன்கேள்தவணையீவேன்
ஏமகூடம்பொற்காசி யிவையிரண்டின்றியிப்பால்
நீமகிழ்ந்தீந்தநன்னு டாகையாலிதற்கப்பால்நின்
றேமப்பொன்னுதவவேண்டு மிங்கிருந்துதவக்கூடா.

முனிவர்-விருத்தம்.

இந்தவெல்லைக்குள்நின்றே யிப்பொருளீயக்கூடா
தந்தவெல்லைக்குட்சென் றீய்ந்தருளிடவேண்டும்அமால்
முந்தநீசொன்னவண்ணம் முக்யமாய்த்தவணையீவேன்
தந்தருளாமற்போனால் சத்தியம்யாதுசொல்வாய்.

முனிவர் வசனம்.

அரசனே இப்படிக்கி சம்மதியாகும்பக்ஷத்தில் ஒருஅளவுசொல்லுகின்றேன் அதாவது ஏமகூடபர்வதமும் காசியுமல்லாமல்இதற்கு இப்பாலுள்ள நாடுகளேயு நீ எனக்குத் தந்தவை இவைதூக்கப்பால் நீ



போவதுண்டானால் நீ கொடுக்கவேண்டியபொருளும்அங்குள்ள பொருள்களேயல்லது இங்குள்ள பொருள்களை நீ கொடுக்ககூடாது இந்த எல்லைக்குள்ளான இந்த பாக்கியான பொருள்களை கொடுக்கிறதல்லாமல் அந்த எல்லைக்குள்ளான பொருளை நீ கொடுக்க வல்லவனானால் நீ முன்னமே சொன்ன நியாயப்படி தவணை உனக்குக்கொடுக்கின்றேன் அத்தவணைக்குள் நீ கொடாமற்போனால் அதற்கு சத்தியம்யென்ன சொல்லுகின்றாய்.

அரசன் தரு.

ஈசனையவுமக்கு யானரும்பொருள்கொடுக்கும்
வாசகம்பிசகிற்சத்தியம் வழுத்துவேன்கேளும்நித்திய
மாதவா-மாதவா மாதவா-மாதவா (செ)

கற்பின்மிகுத்ததன்னின் சொற்பரதாரத்தையெண்ணி
இற்பிழைத்தவனாவேன் இப்பொருள்கொடேனேல்தேவே
என்னையாள்-என்னையாள் என்னையாள்-என்னையாள் (செ)

காசிநன்னாட்டிற்சென்ற காலத்தினிலேயுன்றன்
அசிலாப்பொருளீவேன் அந்தவணையிலதுநீர்
அருள்செய்வீர்-அருள்செய்வீர்-அருள்செய்வீர்-அருள்செ (செ)

அரசன் வசனம்.

பிரபூ உம்முடைய பொருளை கொடாமற் போவேனேயாகிற் அதற்கு என் உறுதியாவது யாதெனில் பதிவிரதா தர்மத்தையே நடத்திக்கொண்டு வந்து கணவனுக்கு நல்ல புகழ்வரச் செய்கின்ற அந்தபெருடைய மனைவியை எண்ணி இல்லறம் வழுவி நடந்தவனாவேன் ஆகையால் காசிநாட்டிற்குசென்ற தக்ஷணமே உமது பொருளை கொடுக்கின்றேன் அதற்கோர் தவணை கொடுக்கவேண்டும்.

முனிவர் விருத்தம்.

தாரிலக்குந்தடம்பு யரிச்சந்திரா
ஓரிருபதுநாளையிற் பின்னும்
சீரியதவவேள்விச் செம்பொன்னை நீ
ஜாரியாகவே தந்திடவேண்டுமால்

முனிவர் வசனம்.

இருபது நாளைக்குள்ளாகப் பொருளைக்கொடு.

அரசன் தரு.

அங்கெய்தநாள்தற்கு இருமடங்கடங்காதையோ
எங்கெய்தியீவேனிந்த இருநிதியையுமெந்த
னிறைவனே-இறைவனே இறைவனே-இறைவனே (செ)

முனிவர் விருத்தம்.

எந்தன்குற்றமில்லை யரிச்சந்திரா
இந்தமன்னரசர்க் குனும்வண்ணம்யான்
தந்தனுற்பத்தெட்டுத் தவணைநாள்
உந்தன்குற்றமிதற்குட் கொடாவிடில்

முனிவர் வசனம்.

இராஜர்களுக்கு யேற்பட்டவண்ணமே நாற்பத்தெட்டு நாளத் தவணை கொடுத்தேன் அதற்குள் அப்பொருளைக் கொடுத்துவிடு.

அரசன் தரு.

தாங்கள்சொன்னபடிக்கே சம்மதம்அப்பொருட்கே
சங்கடியேனுடனே யிப்பொழுதேதாராளனுப்பும்
இறைஞ்சினேன்-இறைஞ்சினேன் இறைஞ்சினேன் (செ)

முனிவர் விருத்தம்.

மற்றடம்புய மன்னவநீசெய்த
குற்றந்திரக் கொடுத்தபொருளெலாம்
உற்றகோசலை நற்பதிக்கென்னுடன்
இற்றைநாளில் வந்தொப்புவித்தேகுவாய்.

முனிவர் விருத்தம்.

பார்கொடுத்தாய்நாளை நின்பதியின்பாற்சென்றால்
யார்கொடுத்தாரென்பார் நின்னடியவரெல்லாம்ஆமால்
ஊர்கொடுத்திடவிப்போதென் னுடன்வரத்துணிவாயன்றேல்
நீர்கொடுத்தனுதானெற்கு நீனிலம்நிற்குந்தானே.

முனிவர் வசனம்.

ஆனதால் என்னுடனே அயோத்திக்கு வந்து அங்குள்ள ஒவ்வொன்றையும் ஒப்புவித்து அப்பால் காசிக்கி செல்வாய் அரசனே.

அரசன் தரு.

நல்லதுதாங்கள்திரு நன்னகர்க்கெழுந்தருளும்
புல்லன்தங்கள்பின்னின்றே பொருந்திவருகின்றேன்
போதனே-போதனே போதனே-போதனே (செ)



அரசன் வசனம்.

பிரபூ இதோ இருப்பதான ரதத்தின்மீது தாங்களும் அதோ யிருப்பதான யானைகுதிரைமீது தமது கூட்டத்தார்களும் எழுந்தருளிவாருங்கள். யாங்களுமிதோ வருகின்றோம்.

பொது வசனம்.

இவ்விதம் அரசன்சொன்ன தக்ஷணமே அங்கிருந்ததான தேர் மீது முனிவன் ஆரோகணித்ததன்றியும் அவனது சிஷகெணங்களும் பரியினுகரியினும் ஆரோகணித்து அயோத்தியைநோக்கி புறப்படலானார்கள் இவர்களுடன் அரசன் தானும் மனைவியும் புத்திரனும் சத்தியகீர்த்தி என்னும் மந்திரியும் பாதசாரியாக நடந்து செல்லலானார்கள்.

## நகர்க்குவரும்பாகம்.

அரசன் விருத்தம்.

மாமயிலைமதியேயென் மகனேயிம்மாமுனிக்கி
வழுத்தும்வண்ணம்
யாமவ்ரோடையயோத்திக் கெய்தியங்கேயிருக்கின்ற
யாவுங்காட்டி
நேமமுடன்ஒப்புவித்து விடையடைந்துபின்வேள்வி
நிதியைத்தீர்க்க
மாமனுமிக்குயிர்காச்சூழ் காசிநகர்க்கெய்தவென்பின்
வருகுவீரே.

அரசன் தரு.

இராகம்-நாதநாமகிரியை-தாளம்-சாப்பு.

பல்லவி.

வெயிலின்சூடுபொறுக்குதில்லையே வினைத்தொல்லையே (வெ)

அநுபல்லவி.

அயில்விழிபார்வதி அகமகிழுமாபதி
கயிலையில்வாழும்ஜீவ காருண்யகருணாநிதி (வெ)

சரணங்கள்.

வேரிவாவியைவிட்டு விஸ்வாமித்திரரைத்தொட்டு
பாரிலடிகள்பதைப் பதைத்துநடக்கின்றேமெந்த (வெ)

கல்லுடன்முள்ளுந்தைக்க கம்புகள்மெய்கிழிக்க
வல்லுனர்கொண்டாடுமிந்த வனத்தைக்கடந்தோம்வந்த(வெ)

முக்கனிகளுடைந்து முதிர்மதுசெய்யடைந்து
புக்கபைங்கூழ்வளர்க்கும் பொழிற்குவந்தோமெரிக்கும்(வெ)

கபரதபரிகாலாள் கவிந்துசூழ்ந்திடமாலாய்
நயனங்களிக்குமிந்த நல்வனத்தைக்கடந்தோம்(வெ)

பொது வசனம்.

இந்தவிதமாக அரசன் பாதசாரியாக விஸ்வாமித்திரருடன் அயோத்திக்கி சமீபமாகவர நகரின்ஜெனங்கள் தமதரசனை தேரின் மீது காணுதலாய் புலம்புவிதம்.

ஜெனங்கள் விருத்தம்.

என்னகாண்நேற்று வேட்டையாடவேசென்றநம்மன்
தன்னையிந்தரத்ன மாமணிரதத்திற்காணோம்
இன்னல்செய்முனிவன் ஓர்வன்எழுந்திருக்கின்றானீது
என்னகாரணமோஐயோ யின்னதென்றறிந்திடோமே.

இராகம்-தன்யாசி-தாளம்-ஆதி.

பல்லவி.

எவ்விதம்யாம்சகிப்போம் இக்கொடுமையை(எவ்)

அநுபல்லவி.

திவ்யரதத்திலிந்தச் சினமுனிவனெழுந்த
தெவ்விதம்இதுஅனி யாயமோநாயமோ(எவ்)

சரணங்கள்.

விரதயிந்தவகை விளைந்தவாறெந்தவகை
ஹரஹரஹரிஹரியே ஆவிதியே(எவ்)

மன்னர்மன்னவனுக்கும் மாதொமேகனுக்கும்
என்னபாவமவந்து எல்தியதிதை(எவ்)

அரசன் விருத்தம்.

தாங்களுத்திரவின்வண்ணம் தங்களைத்தொடர்ந்திப்போது
யாங்களின்னகர்க்குவந்தோம் ஆகையாலினிமேலிந்த
ஓங்காரமனைக்குள்ளாய்த்தி உற்றவனிருக்குமியாவும்
பாங்காய்ஒப்புவிப்பேன் பரிவுடன்வருகுவீரே.



அரசன் வசனம்.

பிரபூ, இதோ அயோத்திக்கி வந்துவிட்டோம் இனி இங்குள்ள ஒவ்வொன்றையும் இன்னன்னதென்று காண்பிவிக்கின்றேன் பார்த்து பெற்றுக்கொள்ளுங்கள். —

(மு-ர்-வ-ம்.) நல்லது அரசனே.

## விஸ்வாமித்திரருக்கு நகரை ஒப்புவிக்கிறபாகம்.

இராகம்-சஹானா-தாளம்-சாப்பு.

பல்லவி.

ஒப்புகொள்ளும்இனியே உயர்முனியே(ஒப்)

அநுபல்லவி.

ஒப்புக்கொள்ளுந்திகழ் உபரயோத்தியைப்புகழ்
உற்றகுடிபடைமற்றபசுவிடையும் ஒண்வருடையும்(ஒப்)

சரணங்கள்.

ஐங்கரன்கோயிலிது அவர்கனிஷ்டர் அறுமுகன்கோயிலிது
சங்கரன்கோயிலிது அவர்மனைந்த சங்கரிகோயிலிது
செங்கண்மால்கோயிலிது ஸ்ரீலக்ஷ்மிகோயிலிது
திருநந்தவனமிது பெருநஞ்செயுமிது புஞ்சையுமிது(ஒப்)

அன்னச்சத்திரமுமிது அதற்குவாய்த்த அழகுமடப்பள்ளியிது
வர்னமலர்ச்சோலையிது பந்தடித்திட வாய்த்தமணிமேடையிது
உன்னுபாகஞ்செய்வதிது மன்னுயோகஞ்செய்வதிது
உரியோரிடமிது பெரியோர்மடமுமிது தடமுமிது(ஒப்)

சுத்தித்திருமதிலிது சொர்னத்தாற்செய்த தூயவாசற்படியிது
முத்தினற்கோபுரமிது அநுதினமும் முரசறையுமண்டபமிது
உத்திரமாடமிது சித்திரகூடமிது
ஓங்குமாளிகை தாங்குதூண்களிது உத்திரங்களிது(ஒப்)

பாடநற்சாலையிது பெண்கள்தினமும் பரதம்செய்சாலையிது
பாடகசாலையிது வாத்யம்வாசிக்கும் பண்புள்ளசாலையிது
ஆடகரதமிது அருந்துரகதமிது
ஆனைக்குழுவிது சேனைக்குழுவுமிது தொழுவுமிது(ஒப்)

ஆயுதக்கொட்டியிது விருதுகள்யாவும் அடங்கியகொட்டடியிது
ஏயுநெற்களஞ்சியமிது நவதானியங்கள் இருக்குங்களஞ்சியமிது
பாயும்புலிக்கூடிது பகரிகள்வாழ்கூடிது
பணிகளறையிது மணிகளறையுமிது திறையுமிது(ஒப்)

காசுகளறை அறையிது கண்களித்திடும் தூசுகளறை அறையிது
பேசுமுன்னோர்பொன்னறையிது அடியேன்வைத்த
பெரும்பொன்னறைத் தொகையிது
தேசுறந்தப்புரமிது திருமணிமண்டபமிது
சிங்காசனமிது தங்கபீடமிது கபாடமிது(ஒப்)

அரசன் விருத்தம்.

இன்னதின்னதென்றெழி லரண்மனையுள்ளயாவும்
உன்னருட்படிகாட்டியே ஒப்புவித்தனனால்
இன்னரத்நசிங்காசன மீதினிலேறி
நன்னயத்துடன்வீற்றிரும் ஞானநன்முனியே.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

சரணம்சரணம் தவமுனியே (சர)

அநுபல்லவி.

கிரணவொளிசிறக்கும் கேசாதிபதத்திற்கும் (சர)

சரணங்கள்,

இன்னதென்றனும் எழிலுடனனும்
நின்னருள்தாரும் என்முகம்பாரும் (சர)

அரசன் வசனம்.

பிரபூ இச்சிம்மாசனத்தின்மீது ஆரோகணித்திருப்பது போல வே என்றனும் இதிலிருந்து இச்செங்கோலை செங்கையில் தரித்து இந்த அயோத்தியா புரியையும் இதற்குள்ளடங்கிய ஐம்பத்தைந்து தேசங்களையும் ராஜ்யபரிபாலனம் செய்து சுகமாக வாழ்ந்திருப்பீர்க ளாக யான் காசிமாநகருக்குச் செல்லுகின்றேன் அந்நாட்டை அடைந்தவுடனே தமது கடன் தீரும்பொருட்டு பூர்ண ஆசீர்வாதம் எனக்குக் கொடுக்கவேண்டும்.

பொது வசனம்.

இவ்வாறு அரசன் விஸ்வாமித்திரனை சிம்மாசனத்தின் மீதிருத்தி வந்தனை வழிபாடுகள் செய்யும் விதத்தைக் கண்ட பரிஜனங்கள் புலம்பும்விதமறிக.



பரிஜனங்கள் தரு.

இராகம்-தன்னியாசி-தாளம்-ஆதி.

பல்லவி.

இப்படியுமுண்டோ ஈசன்செயல் (இ)

அநுபல்லவி.

எப்படிச்சகித்திட என்றிடும்அய்யோ (இ)

சரணங்கள்.

மாயமகாமுனி மன்னவனிடமனி
யாயமதாய்நகரை அபகரித்துக்கொண்டான் (இ)

ஒலிவஸ்திரமணிந்த ஒண்ணிடைகளிலிந்த
காவிவஸ்திரமணிய காலமோகோலமோ (இ)

சிரமகுடமிழந்து திருப்பூஷணமிழந்து
பரதேசிபோலேநிற்கப் பாவமென்னசெய்தாரோ (இ)

அரசன் தரு

இராகம்-காபி-தாளம்-ஆதி-

பல்லவி.

அழுகாதீர்அடசரே குடிபடைகளே அமைச்சரே-நீர் (அ)

அநுபல்லவி.

பழுதாகாதெமக்குப் பண்டுசெய்தபடிக்கு
முழுதும்நீரிம்முனிக்கு முறைசெய்திடுமிதற்கு (அ)

சரணங்கள்.

எவர்க்கும்நல்
இவர்க்குநல்லவர் எனக்குமேனல்லவர் (அ)
என்றலைவிதியால் இன்னகராயிழந்து
இன்னவர்கடன்தீர்க்க ஏழில்காசிதேசம்போறேன் (அ)
அவரவர்க்குள்ள அருள்தாபு[illegible]
சுபமுடன்வாழுவீர் அருளின்[illegible] (அ)

பரிஜன வசனம்

பிரபூ தமது உத்திரவுமீறி நாங்கள் ஒப்பவும் நடக்கமாட்டோம் தங்களுக்கு இவ்விதியும் வரலாகுமா நாங்களெல்லாம் என்ன பாவம் செய்தோம்.

பொது விருத்தம்.

அறந்திரண்டுருவாகிய வரசனையவமே
புறம்பறைந்தகம் புன்மையேபுந்தியில்லாமல்
திறந்தெரிந்தவர்செயலிதோ வெனுகௌசிகன்மெய்
மறந்திருந்துபின் மற்றுமோர்வாசகமுறைப்பாம்.

பொது வசனம்.

இந்தவிதமாக கௌசிகன் பலவாறு அரசனுக்கிரங்கிப் பின் தன்னை மறந்து மனந்தெளிந்து அரசனைப் பார்த்துச் சொல்லும்விதம்.

முனிவர் விருத்தம்.

இந்தமாநிலமும் யிந்தயிருநிதியும் வேள்விக்காய்
தந்தபின்னிதியும்முன்னித் தரமொழிநிதியும்
உந்தனுக்கினமாயீவேன் ஆசையாலோசைக்கொண்டு
எந்தன்மக்களைப்புணர்ந்தே யிங்குவாழ்ந்திருப்பாய்வேந்தே

அரசன் தரு.

அன்னகர்பூமி யென்றமெட்டு.
இராகம்-பியாக்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

கைபிடித்திரு கவுசிகரேயிரு
கழலிணைதஞ்சமெனைக் காத்தருள்வீர் (கை)

அனுபல்லவி.

மெய்வழங்கச்செய்வதும் மிக்கவகைகள்செய்வதும்
மேதினிவழக்க மீதல்லாது
பொய்வழங்கச்செய்வதும் பு... பணச்சேர்வதும்
புண்ணியமல்லசெய்தாலும் புகழ்ச்சியுண்டோ (கை)

சரணங்கள்.

அவனியில்மநுவின்பின் அவதரித்தெனக்குமுன்
அரசா...வர்நுபத் தேழரசர்
அ... பகுவது கரிதானபெருஞ்சுமையை
அடியன்சுமந்திட முடியுமோதான் (கை)
நீதிகடாதசொல்லை நிருபயோகிப்பதில்
யாதினிப்பயனுண்டாம் ஆசையினால்
ஓதியபடிநிற்கு உதவவேண்டும்பொருட்டு
ஒருமனிதனையென்று ஊட்டனுப்பும் (கை)



179 வது பக்கம் காசிநகர்போகிறபாகம்.



முனிவர் விருத்தம்.

சொன்னவைசரியே தொல்புவியரசே
நன்னயமாக நாளையென்னுளே
நின்னகம்வரவே யேவுவன்நீயின்
னின்னகரைவிட் டேகுவையப்பால்

அரசன் தரு.

| | |
|---|---|
| தெரியாமற்சிறியவன் | செய்தபிழைகளெல்லாம் |
| பெரிதாகயிருந்தாலும் | பேணியதை |
| பரிபூரணகருணை | புரிந்துபொருத்தருளீ |
| பக்ஷம்வைத்திடவுன்றன் | பாரமையா (கை) |
| மெய்யியம்புமமைச்சர் | கூட்டம்இவர்மற்றும்மை |
| வையினுமறக்கினும் | மற்றோர்குற்றம் |
| செய்யினும்பொருத்தருள் | செய்திடவேண்டுமென் |
| ஐயனேயிவருமே | தடைக்கலமே (கை) |

(மு-ர்-வ-ம்.) நல்லது அரிச்சந்திரா.

(ச-தி-வ-ம்.) அநேகவந்தனம் அருந்தவபதியே

(தே-ன்-வ-ம்.) அனேகவந்தனம் சுவாமி.

அரசன் வசனம்.

அநேகவந்தனம் பரபூ யாங்கள் இந்த நகரைவிட்டுக் காசிமா நகருக்குச் செல்லுகின்றோம் உத்திரவு கொடுக்கவேண்டும்

(மு-ர்-வ-ம்.) நல்லது சென்றுவாருங்கள்.

## அரசன் நகர் நீங்கும் பாகம்.

அரசன் விருத்தம்.

கொடியிடையாய்திருமதலாய் கோசிகமாமுனிக்குரைத்த கொள்கை [யேபோல்
வடிவுறுநன்றுநகர் முதலாகவுள்ளதெல்லாம் வழங்கியன்றேன்
அடிபரவிவிடையடைந்தோம் யாமினியிங்கிருப்ப தழகல்லவாமால்
படிபுகழும்காசிநகர்ப் பாதைதனைநோக்கிடுவோம் பரிவாய்வாரீர்.

அரசன் தரு.

கானகத்தில் யானலேந்துகாதரு வென்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ரூபகம்,

கண்ணிகள்.

என்னசெய்வோமேதுசெய்வோம் எந்தன்பிராணரக்ஷகியே
ஈஸ்வரனற்றவத்தால் எய்தியகண்மணியே(எ

செந்நெல்விளைந்தோங்கும்மிந்த நன்னகரநாடிழந்தோம்
தேவாலயமிழந்தோம் சீர்குடிபடையிழந்தோம்(எ

ஐம்பத்தாறுதேசத்துள்ள அரசரையுமிழந்தோம்
ஆலோசனையில்மிக்க அமைச்சர்களையிழந்தோம்(எ

பைம்பனிமதிக்குடை படைமணிமுடியிழந்தோம்
பணிபூஷணமிழந்தோம் கணையாழியுமிழந்தோம்(எ

காவிவஸ்திரம்புனைந்து கண்டைவஸ்திரமிழந்தோம்
காளிகொடுத்ததேரும் வாளியும்வில்லுமிழந்தோம்(எ

தாவிவந்ததுஷ்டரைச் சயித்தணிந்ததாரிழந்தோம்
தனங்களையுமிழந்தோம் ஜனங்களையுமிழந்தோம்(எ

அஷ்டதசவாத்தியங்கேட் டகமகிழ்வகையிழந்தோம்
அந்தணரோதும்வேத சந்தங்கேட்பதிழந்தோம்(எ

திட்டமுள்ளடால்புனை திருவரண்மனையிழந்தோம்
சிங்காசனமிழந்தோம் செங்கோலையுமிழந்தோம்(எ

அரசன் விருத்தம்.

ஈதெல்லாம்யாமளித்தும் போதாமல்இவனைச்சும் மாவிடத்த
காதென்னவேநினைத்துப் பெருங்கடனுக்காளாக்கி வைத்தாரந்தத்
தீதெய்துமாமுனிவன் வன்கண்மைதானென்ன சேப்பப்போமோ
ஓதெய்வமேயுன்றன் கற்பனையோவென்றனது ஊழிதானே.

அரசன் தரு.

கர்கேகண் ஹாயுமுசே யென்றமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

அரனேயுன்னருளிதோ அறிகிலேம்யாங்களிதோ
பரதேசிபோலநின்று பரதவிக்கின்றோமின்று
பாதுகா-பாதுகா பாதுகா-பாதுகா(அர



முன்னமும்பின்னமுமுனக் கென்னகுறைவுசெய்தனம்
நன்னகர்நாடிழக்க வின்னஞ்செய்தாயேதக்க
ஞாயமோ-ஞாயமோ ஞாயமோ-ஞாயமோ(அர)

இடிவிழுந்தமரம்போலே ஏங்கிவாய்விட்டென்னாலே
முடிமன்னர்முதல்யாரும் முறையிடச்செய்தாயேபாரும்
முறையாமோ-முறையாமோ முறையாமோ-முறையாமோ(அர)

அரியாசனத்தின்மீது அமர்ந்தரசுசெய்யாது
விரியாரண்யம்நடக்க விதித்ததென்னகாலமிக்க
வேதனை-வேதனை வேதனை-வேதனை(அர)

இதுவும்போதாமலைத்தாய் யெதிகடன்சுமக்கவைத்தாய்
அதுவுமெவ்விதந்தீரும் அருந்தவனைக்குள்கூறும்
ஆதியே-ஆதியே ஆதியே-ஆதியே(அர)

சந்திரவதி தரு.

சாரசாக்ஷவாலா யென்றமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

ஏன்வருந்தவேண்டும்ஐயோ என்றன்பிராணநாயகனே (ஏ)

அநுபல்லவி.

ஏன்வருந்தவேண்டும்ஐயோ என்றன்பிராணநாயகனே
வான்வளருந்தேவர்முதல் வோன்செயும்செயலாமிது (ஏ)

சரணங்கள்.

வருந்திடில்ச்சாரமாமோ வல்வினைத்தொல்லையும்போமோ
திருந்தியதீரமட்டும் சிதையாமலிருக்கட்டும் (ஏ)

வரும்விதிராத்தங்காது மபங்கினாலும்விடாது
திருமலிகாசிஸ்தலம் சேர்வதுவேரெம்பநலம் (ஏ)

என்னபாவம்முன் செய்தோமோ
இறையோர்களை வைதோமோ (ஏ)

நன்னகர் நாட்டைமுனிக்கி
நல்கினேமினி யிதற்கு (ஏ)

அரசன் தரு.

இராகம்-காபி-தாளம்-சாப்பு.

பல்லவி.

நடப்போம்வாராய்இந்தத் தடத்தின்வழியாய்என்றனை
மடக்கிள்ளை மொழியாய் (நட)

அனுபல்லவி.

படப்பொதிபரவணி பரமன்சதங்கைமணி
சுடர்ப்பொன்னடியைமுடி சூடிநாடியிப்படி (நட)

சரணங்கள்.

விரக்கமலனித்த மென்பதங்களிலிந்தப்
பாரக்கற்களழுத்தப் படைத்தாரேமலர்ச்சித்தன் (நட)

பொது வசனம்.

இந்தவிதமாக அரசன் புலம்பிக்கொண்டு நடப்பதைக்கண்ட குடிபடைகள் யாவரும் ஒரு முகமாகத்திரண்டு புலம்பும் விதம்.

பொது விருத்தம்.

மயிரோடுஞ்சிறையிழந்த போகில்போல்வேலியொடு வரம்பிழந்த
பயிரோபோற் கரமிழந்தகரியேபோற் பொறியிழந்த பாவையேபோல்
உயிரோபோய்ப்பாதலிக்கு முடலேபோல்மந்தாதுள் ளுடைந்தனும்பும்
தயிரோபோற்றளர்ந்தலைந் துதத்தமக்குநிகழ்ந்தவெலாம்சாற்றலுற்றார்.

குடிபடை தரு.

கேள்கேளடாசாமி யென்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-சாப்பு.

பல்லவி.

ஈசனேநாங்களினிமேல் என்னசெய்வோம் ஏதுசெய்வோம் (ஈச)

அநுபல்லவி.

ராஜனிந்தத் தேசந்தன்னை
நனிக்கும்முனிக்கு நல்கினாய்யோ (ஈச)

சரணங்கள்.

தெரும்மாவும் குஞ்சரமும்
சிவிகையின் குழாமுமின்றி
பாருள்நடந் திடயாது
பாவம்செய்ததோ வேந்தன்பாதம் (ஈச)



அடிமிசை தொழுமரசர்
மடிமிசையு மன்றிச்சூட்ட
பொடிமிசை நடந்திடவும்
பொறுத்திட்டதுவோ புத்ரன்பொற்பாதம் (ஈச)

பஞ்சினுலும் மலரினுலும்
பதைபதைக்கும் பாதத்தாட்கு
பிஞ்சியதோர் கால்நடையோ
விதித்தான்வேதன் மேதினிதனிலே (ஈச)

அரசன் விருத்தம்.

கன்னலம்புரியையாளுங் காவலன்மதிகபதற்கு
அன்னம்போல்வந்துதித்தே ஆசைரஞ்சிதமேகேளாய்
இன்னகர்தனைக்கடந்தே யெழில்மிகுந்திலங்குங்காசி
நன்னகர்க்கேகவென்பின் னடந்துநீவருவாயின்றே.

அரசன் தரு.

சேருமுன்னே சேவல் யென்றமெட்டு.

இராகம்-காமசு-தாளம்-ரூபகம்.

பல்லவி.

என்னசெய்வோம் ஏதுசெய்வோம் என்கண்மணியே (எ)

அநுபல்லவி.

நன்னகரின்ஜனங்கள் நமைத்தொடர்ந்தவர்மனங்கள்
கன்னவிழுந்தழுகிறுரென்ன காலமோயினி (எ)

சரணங்கள்.

இவர்களெல்லாமித்தறை யினிவிருந்தழுமுறை
இவன்செவியிற்கேட்டிடக்குறை யாதுசெய்தோபேர (வ)

வெயிலின்கொடுமையாலே வேர்வைபராருதேமேலே
ஓயிலுன்திருகவாழ்வனத் தூ டக்க (வ)

சகிர்வளய்பெற்றநிந்தோ சரயுநதிக் ந்தோம்
இதிலின்திரவிருந்துகோலே லேருவோய்இபோ (வ)

அரசன் வசனம்.

கண்மணி பாலகா நாம் அயோத்தியைக் கடந்து இந்த சரயுநதிக்கரையை யடைந்தோம் சூரியனும் மேல்திசை யடையும் சமயமா

யின ஆகையால் இங்குள்ள கனிகளை பக்ஷித்து தீர்த்தபானம்பண்
இன்றிரவு இங்கிருந்து காலையில் எழுந்து காசிமாநகரின் பாதைக
ப்பார்த்து நடப்போம் வருத்தமடையாதீர்.

(ச-தி-வ-ம்.) உத்திரவுப்படியே.

பொது வசனம்.

இவ்விதம் அரசன் சரயுநதிக்கரையிலிருக்க சூரியனும் அ
மிக்க இதைக்கண்ட மந்திரிபிரதானிகள் யாவரும்வந்து அரசனை வ
ங்கிச் சொல்லுகிற விதம்காண்க.

மந்திரி வசனம்.

அநேகவந்தனம் மகிபதே தாங்களெப்போதிந்நகர்க் கெ
ருளக்கூடும்.

அரசன் விருத்தம்.

ஞானநூல்கற்றறிருந்து நற்றவம்புரிந்தோரான
மோனநன்விஸ்வாமித்ர முனிமனமகிழவின்று
தானமாய்நானளித்த ஜகம்புகழ்திருவயோத்தி
மாநகர்கெக்காலத்தும் வரத்தக்கதில்லைத்தானே.

அரசன் வசனம்.

பிரதானிகளே நான் மனப்பூர்ணமாக தவத்திற்சிறந்த விஸ்வாமித்ர ரிஷிக்கு அளித்த இந்த அயோத்திக்கு இனி எப்பவும் வருவதில்லை. நிச்சயம்.

மந்திரி சொல்வது

அகவல்.

தேவரீராதியிற் செய்ததீவினையோ
தேவநகர்முனி செய்ததோருதவி
ஆதியிலுண் டாகப்பிறப்பாடு
ஜெனியிற்செய் மிருந்தகைம்மாறோ
இட் ருமரசா கழியைகொடுத்தகன்று
இட் நங்காட்டி னிடத்தில்நடப்பது
ஒவரசேயவ் வுயர்முனிவோனை
யாவருமடித்துத் துரத்திவிட்டாக்கால்
எங்களையவன்று ஒன்னசெய்திடுவான்
இங்கவன்போருக் கியாங்கள்போதாதோ



இன்னுமியம்பு கின்றோமரசே.

மான்றேலேந்தும் மார்பினிற்கொம்புத்
தேன்றோய்பூந்தார் சிருடனேந்தவும்
ஏயதெண்டிகை மண்டலமேந்தும்
தியகைதனிற் செங்கோலேந்தவும்
பின்னியசடைகள் பிறண்டிடவேந்தும்
சென்னியின்மீது திருமுடியேந்தவும்
அவனியையரியா சனத்திருந்தாளவும்
அவன்மதிக்குடைக் கிழமர்ந்துவீணை
அவனிருபதத்தை யன்புடனேந்தி
இவிடம்வாழ்வதைப்பார்க்கினும்யாங்கள்
முதிருந்தீயினில் மூழ்கிவிடுவது
அதிகநலமாம் ஆகையாலவனை
சடையைப்பிடித்துந் தடங்கையைப்பிடித்தும்
உடையைப்பிடித்து முதைத்துமிதித்தும்
புக்கருங்வனத்திற் புகுந்துதிரிய
இக்கணம்வெருட்டி விடுகிறோம்தேவரீர்
நன்னகர்புரக்க நண்கெழுந்தருள்வீர்.

அரசன் விருத்தம்.

பன்னரியவமைச்சர்களே யென்னசொன்னீரையோ மாபாவமன்றோ
உன்னரியகுடிகெடினு முயிர்கெடினும்யா னுறுதியுடன்கொடுத்த
நன்னகரோடுள்ளதெலாம் மறுபடியும்வாங்குவது ஞாயமில்லை
என்னிடமிவ்விதமான சொற்களைநீரியம்பாதும் மிருக்கைசெல்வீர்.

அரசன் வசனம்.

அமைச்சர்காள் என்னவார்த்தைபாஷித்தீர் யான் மனப்பூர்வமாககொடுத்த நாட்டை மறுபடிவாங்குவது என்றும் புகழ்ச்சிதராது ஆகையால் நகர்க்கேகுங்கள்.

பொது வசனம்.

இவ்விதம் மந்திரிகளைப்பார்த்து அரசனியம்ப இதைக்கேட்டமாத்திரத்தில் அவ்வனத்தில் ஒளிந்திருந்த விஸ்வாமித்திரர் அரசனிடம் வருகிறவிதம்.

விஸ்வாமித்திரர் தரு.

தாண்டவநித்யஹரி யென்றமெட்டு.

இராகம்-கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

கோசிகமாமுனிவன் வந்தேனிதோ (கோ)

அனுபலவி.

காசியில்வசிக்கும் கவின்மணிதனெனக்கு
பூஜிதைபுரிந்திடவே வந்தேனிதோ (கோ)

சரணங்கள்.

அந்தரசொற்கமவை அமைத்துத்திரிசங்குவை
சுந்தரமாகவைத்தோன் வந்தேனிதோ (கோ)

அரசன் தரு.

விளவே ஓமனலோ யென்றமெட்டு.

இராகம்-நாட்டைகுறிஞ்சி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

கருணாவாரிதியே கவுசிகமுனியே-வந்தனம் (கரு)

அநுபல்லவி.

இருளிலெந்த னிடம்நீர்வந்த
ஏதுகாரணம் ஓதும்பூரண (கரு)

சரணங்கள்.

கோபமெத்தக் கொள்ளயாது
குறைவுசெய்தே னிப்போது
பாபமொன்றும் பண்ணியறியேன்
பாதுகாத்தருள் முனியேயதியே (கரு)

முனிவர் விருத்தம்.

வேடுவால்மிருகமெல்லாம் வனத்திற்கொன்றாய்
மேகநிறப்பன்றியையு மேவியெய்தாய்
பேடுறுமென்மக்களையுங் கானங்கேட்டுப்
பிரகரித்துதுரத்திவிட்டா யெனையும்வைதாய்





நாடெனையுள்ளதெலாம் நீயெனக்கு
நல்கியதையான் கொடுக்கவாங்காயாகில்
நீடுறநீசெய்தவித் தீமையைப்பொறுக்க
ரிஷியெனக்கெவ்வளவு மனம்வராதே.

அரசன் தரு.

சிறுத்தவர்கள் தெரிந்திடாது
செய்ததீமை யையிப்போது
பொறுத்திடாவிடில் முறையென்ன
பொறையென்ன புலமையென்ன (கரு)
ஒறுத்திடினும் வெறுத்திடினும்
உதவியதையோர் காலத்தினும்
மறுத்தினிமேல் வாங்கேன்யானும்
வையகம்புகழ் சீமானே (கரு)

முனிவர் விருத்தம்.

நீதியுடன்யானுரைக்கக் கேளாய்சத்ய
நெறிதவறாப்பூபதியே யென்னையின்று
ஓதியதோர்பிழைபொறுத்தேன் பெரியவேள்வி
யுலகறியமுடித்திடுதற் கீவேனென்றங்
காதியினிலென்னிடநீ யுரைத்தபொன்னை
அளிப்பாயோவளியாயோ வழியெனத்தை
கோதிலாதின்னொருக்கால் நாவினாலே
கூறுவாயெனது மனந்தேறுவேனே.

அரசன் தரு.

பொன்னார் மேனியனே யென்றமெட்டு.

இராகம்-[illegible]-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

தங்களுடனுரைத்த பொருள் தங்கட்கடியேன்மெத்த
தந்தவரசுரிமைசெல்வம் தன்னுடன்போனதென
அங்கறிந்திட்டேனெனினும் யானுமேகோபத்தினால்
அருள்வேனென்றுரைத்தசப தமினிமாறேனே
ஆள்விடிவிக்காட்டில்வெகு ஆதரவாய்க்கூட்டி
அருள்பெருகாசிசென்ற அப்பொழுதேயுன்றன்
வேள்விப்பொருள்தருவேன் உமைவேண்டினேன்சற்றிருவே
[illegible]மத்தநயைசெய்தருளும் வேதாந்தமெய்ப்பொருளே

அரசன் வசனம்.

பிரபூ, தங்களுக்குகொடுத்த நாட்டை எக்காலத்தும் கைக்கொள்ளேன் தமக்குகொடுக்கவேண்டிய யாகப்பொருளை வாங்கிவர ஓர் ஆள் அவசியம் அனுப்பவேண்டும்.

முனிவர் வசனம்.

நல்லதரசே உன்மனோபீஷ்டப்படி யிதோ ஆளனுப்புகின்றேன் அவனையழைத்துக் கொண்டுபோய் வேண்டியமரியாதிசெய்து அவன் வசம் நமதுபொருளை சரிவரக்கொடுத் தனுப்புவாயாக.

(அ-ன்-வ-ம்.) உத்திரப்படியே கொடுத்தனுப்புகின்றேன்.

பொது வசனம்.

இவ்விதம் விஸ்வாமித்திரன் சொல்லி அச்சராயுதியின் ஓர் பாங்கிலிருக்கும் பூங்காவனத்திற் பிரவேசித்து சுக்ரபகவானை யழைத்துச் சொல்லும்விதம்.

முனிவர் வசனம்.

சுக்ரபகவானே யெனக்குதவிசெய்யும் பொருட்டு தாம் இங்கனம்வர எதிர்பார்க்கின்றேன்.

சுக்கிரன் வசனம்.

அனேகவந்தனம் முனிசிரேஷ்டரே அழைத்தகாரணம் யாது.

முனிவர் வசனம்.

கேளும் சுக்ரபகவானே அயோத்தியை ஆண்டுவந்த அரிச்சந்திரனவன் நமக்கு சிலதிரவியம் கொடுக்கவேண்டியிருக்கிறது நீர் அவனுடன் காசிக்குச்சென்று அவனுக்கு அநேக துன்பங்களையுண்டாக்கி அத்திரவியமுழுமையையும் வாங்கிக்கொண்டு வருவதன்றியும் அவனைக் கஷ்டப்படுத்துகிற தன்மையை இன்னதெனச் சொல்லுகின்றேன் கேளும்.

முனிவர்-விருத்தம்.

வலியதீவினையனைத்தும் தனித்திருத்தி
வகைவகையேயெடுத்துரைத்து நீதான்சென்று
மலியஅவனுதவுபொருள் கவர்ந்திடாது
மதகரிமேற்கவண்சிலை போமளவுதந்தால்
சலியாதுகொண்டுநீ யவன்பின்போன
சம்பளமூர்த்தமையின் றிப் பற்றிக்கொண்டு
பலிதமுடன்வந்திடுவாய் வேதசுக்கிர
பகவானேயின்னமும்யான் பகர்வேன்கேளீர்.



இதுவுமது.

அவன்பசிக்கிச் சருகுகனி தேடும்போது
அமுதெனக்கு வேண்டுமெனக் கூறுதந்தால்
இவடநமக் கிதுவேலா தென்றியம்பு
இவனுண்டி பெற்றக்கா லன்றுநீபோன்
அவசியமாய்த் தருவதின்மு னுண்ணமாட்டேன்
அல்லவெனச் சொல்லெனவே தடுநானீந்த
தவனைவந்தால் நின்றவனை சாகூவைத்து
தருகாது மறுதினத்தில் வருகுவீரே.

இதுவுமது.

அருகில்வைத்து மனங்கலக்கி ரிஷிக்களித்த
அருண்மொழியை மாறியவன் அவியேனென்று
கருதுவனே லுன் னரசையான் றன்வாங்கிக்
காசுியுடன் றருவனென் பீரிணங்குவானேல்
அருவனத்திற் றடுத்தழைத்து வருவீர்நம்மட
கதுபோது மின்னுமும் மாலியன் றமட்டும்
பெருவினைகளிபற்றி யென்பால் வந்துசேர்வீர்
பேசியயிவ் வசனமெலாம் பிசகிடாதே.

சுக்கிரன் வசனம்.

நல்லது முனிபுங்கவா நீர்சொல்லிய பிரகாரம் என்னளவுங் குறை பாது முடித்துவருகின்றேன் விடைகொடும்.

(வி-ன்-வ-ம்.) நல்லது சென்றுவாரும் சுக்ராசாரியரே.

அரசன் தரு.

கமலநயன வாசுதேவா வென்றமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ரிஷியுடையதூதரெய்தும் நேரமாச்சுதேபெண்ணே (ரிஷி)

அநுபல்லவி.

நிசியில்வந்து நம்மையாது
சிஷ்டேம்செய்வாரோ யிப்போது (ரிஷி)

சரணங்கள்.

நாடுநகர்தனையிழந்து நாமுயிரதுந்தளர்ந்து
காடுதனில்வந்திருக்கக் கடவுள்படைத்தானேமிக்க (ரிஷி)

தவனைநந்தபிரபுவாம் அன்றோர் தபவிலாதவரன்றோ
அவரனுப்பவருமறையோன் யாதுபேருள்ளவரோ ஐயோ (ரிஷி)

கொடுமைமிகச்செய்குவாரோ கோபித்தேசிலைகுவாரோ
ஜடிலமுனிபொன்னையிங்கே தாவெனச்சொல்வாரோஐயோ (ரிஷி)

---

## நக்ஷத்ரய்யன் வருகிற பாகம்.

நக்ஷத்ரய்யன் விருத்தம்.

வடவையின்கனல்தானஞ்ச வாளிருகண்சிவந்து
விடமணியகிபோற்சீறி வெவ்வியகோபங்கொண்டு
கடல்மலைஅகிலம்வானம் கருதுபாதலம்நடுங்க
கடகடவெனவேசுக்ரா சாரியுந்தோன்றினேனே.

நோட்.

இராகம்-மத்தியமாவதி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

தேவர்க்கெதிரி யானதானவர்
யாவர்க்குங்குரு வானதயாளன்
கோபத்திற்கொரு தீபமதாகிய
கொடியசுக்கிரன் தோன்றினேன்

ஓதற்கரிய நீதிச்சதிரு
வேதத்தைக்கரை கண்டபுனைன்
நாதற்கரிய ஜோதிஸ்வரூப
நாடுஞ்சுக்கிரன் றோன்றினேன்

உருத்திராக்ஷம் வெண்ணீர்ப்பூச்சும்
லோகமெல்லாம் பாபமென்னவே
சுருக்கிற்கிட்டியகண் ணுந்தான்கொண்டு
தூயசுக்கிரன் றோன்றினேன்



சுக்கிரன் விருத்தம்.

யாரிவிடத்திலிந்த அர்த்தராத்திரியில்மூன்று
பேரிருந்தரனைநோக்கி பிரலாபித்தழுகனூற்நீர்
ஊரென்னபேர்தானென்ன வுற்றதிங்கென்னவித்தை
நீரெடுத்துண்மையாக நிகழ்த்திடவேண்டுமாமால்.

அரசன் விருத்தம்.

அடியேன்வாழ்ந்ததுவயோத்தி அரிச்சந்திரனென்பேரிந்தத்
துடியிடையாளென்பெண்டு சுதனிவன்கோசிகற்குக்
கடன்கொஞ்சங்கொடுக்கவேண்டி காசியைநோக்கிப்போரோன்
திடமிகுந்திலங்கிநிற்கும் தேவரீர்பேர்சொல்வீரோ.

சுக்கிரன் விருத்தம்.

திருநகர [illegible] கேளாய்
திருமலவிஸ்வாமித்ர ரிஷிக்குநீகொடுக்கவேண்டும்
பொருளதாங்கடனைவாங்க புகன்றவரனுப்பவந்த
தரகன்யான்பேர்நக்ஷத்ர சதுமறைவல்லோனுமே.

அரசன் தரு.

இன்னமும் நின்மனதிரங்கா வென்றமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

வாரும்வாரும்ஸ்வாமியுந்தன் மலரடிதுணையே
சீருடனேயெம்மைக்காக்கச் செய்யுங்கருணையே
மாமுனிவிஸ்வாரனுப்ப வந்ததூதரோ
பூமிமுழுதும்பேருபெற்ற புண்யநீதரோ
சதுர்மறையின்கரையைக்கண்ட ஜகமைதீகரோ
விதுவணியும்பரமனையமிகுவிவேகரோ
கஞ்சங்கண்டகதிரைப்போலக் கடுகிவந்தீரோ
செஞ்சரண்சிவக்கநடந்து சேவைதந்தீரோ
என்றுமென்றன்மீதிற் பக்ஷமுற்றிருப்பீரோ
இன்னுகாசிக்கெய்துதற் கிதயம்வைப்பீரோ

அரசன் வசனம்.

விப்ரஸ்ரேஷ்டா நமஸ்கரிக்கின்றேன் தாங்கள் எப்பொழுது வருவீரென எதிர்பார்த்திருந்தேன் தயவுசெய்துகூடவாருங்கள் காசிக்குச் செல்வோம்.

சுக்கிரன் விருத்தம்.

மன்னனேகேளாய்தேவ மாமுனிகோசிகர்க்கு
நன்னயயாகசீயும் நல்கவேண்டியவப்பொன்னை
என்னகந்தடைசொல்லாம லீய்ந்துவிட்டப்பாற்செல்ல
என்னசொல்லுகிறாய்சொல்லெலன் னிருக்கைநான்செல்வதற்கே.

சுக்கிரன் வசனம்.

அரிச்சந்திரா விஸ்வாமித்திர முனிவருக்கு நீகொடுக்கவேண்டிய கடன்பொருளை கொடுப்பதற்கு யென்னசொல்லுகின்றாய் கொடுப்பாயா இல்லையா சொல்சீக்கிரம் நான் என்பதிக்குச் செல்லவேண்டும் காலதாமசமாகின்றது.

அரசன் விருத்தம்

கரத்திலோர்பொருளில்லா தகாரியமெனையிப்போது
உரத்துடன்பேசிக்கோப முற்றிந்தகாட்டிற்பொன்னை
தரச்சொன்னாலிங்கென்செய்வேன் சதுர்மறைநகூத்ரய்யா
பிரத்ஞைசெய்யாநீர்காசி தேசஞ்சென்றிருவேனே.

சுக்கிரன் விருத்தம்.

கருதுவேனரசேகேள்நீ கழறியவண்ணமெல்லாம்
இருநிலத்திலவதற்கு யெந்தனால்முடியாதாமல்
குருமிசையாணைவைத்தேன் கோசிகர்க்கருளவேண்டும்
பொருள்முழுவதுங்கொடுத்தப் புரத்தினிலேகுவாயே.

சுக்கிரன் வசனம்.

அரசே, உன்னுடனேகூட அலைவதற்கு யென்னால்முடியாது இதோவுன் குருவின் மேலாணைவைத்தேன் பொருளைக்கொடுத்தப்பால் செல்லுவாய்.

அரசன் தரு.

அரவாபரணனே யென்றமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

குருமீதிலாணையிட — கொடுமையென் செய்தேன்றிடக்
கோசிகமுனி — தூதனே (௧)

கருமன்னிலத்திலுற்ற — கலிபிறிதிற்பேர்பெற்ற
சுபானுவன்றேனைவ் — னீதனே (௨)



193-வது பக்கம் இம்லைசபதிருபாகம்.



அவர்பேரினிலிவ்வண்ணம் நவன்றூற்பவமெவ்வண்ணம்
அகன்றிடுமெளிதி ஐயர் (கு)

தவணைக்குள்முனிபொன்னை அவசியந்தருவேணன்னை
சதிசெய்யவேண்டாம் மெய்யா (கு)

அரசன் வசனம்.

காசியில்போய் தருவதாக தவணைபெற்று வந்தேன் அதற்குள்ளாக இங்கேகொடுவென்று எனது குருமேலாணை யிடலாகுமோ அவர் என்னசெய்வார் வேண்டாம் ஆணையை விலகிவிடுங்கள் பிரபூ.

(சு-ன்-வ-ம்.) ஆணையை விலக்கிவிட்டேன் பொருளைகொடு.

(அ-ன்-வ-ம்.) காசிசென்றவுடனே தருகிறேன்.

சுக்கிரன் வசனம்.

சரிவுன்னை லெகுவாக கேட்டால் கொடுக்கமாட்டாய் நல்லது உன்னை இந்தக்கோட்டில் நிறுத்திவைத்திருக்கிறேன் திரவியத்தைக் கொடுத்து அப்பால்செல்லவேண்டும்.

அரசன் தரு.

இராகம்-காம்போதி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

காட்டினில்வேதியர் கோட்டில்மறிக்கிறார்-தெய்வமே
நாட்டினிற்பாவங்கள். நானென்னசெய்தேனோ-தெய்வமே
இப்பேரதெயித்துயர் அடைவதாகயிருந்தால்-தெய்வமே
எப்பேர்துகாசிக்கு ஏகுவதையையோ-தெய்வமே
என்னைப்போலேஜென்ம மெடுத்திடலாகுமோ-தெய்வமே
உன்னைப்பணிந்துமிதற் குட்படலானேனே-தெய்வமே
இப்படிமறித்தாக்கா லென்செய்குவேனையோ-விப்ரரே
எப்படியாவது யிதனைவிலக்குவீர்-விப்ரரே

அரசன் வசனம்.

பிரபூ, இப்பொழுதே இவ்வளவு அடாதுடிசெய்து கோட்டில் நிற்கவைத்தால் இதைக்கடந்து காசிக்குச்செல்வதெப்போ ஆனதால் தயவுசெய்து இதனைவிலக்கும்படி கோருகிறேன்.

சுக்கிரன் வசனம்.

சபாத் எனக்கு உன்னுடனேகூட வாண்டியவிதியில்லை இப்பவுமே பொருளைக் கொடுக்கவேண்டும் என்ன சொல்கிறாய்.

அரசன் வசனம்.

இப்படி தொந்தரித்தா லென்செய்வேன் இதனை விலகிவிடுங்கள் தருகின்றேன்.

(சு-ன்-வ-ம்.) சரிவிலக்கினேன் குடுதிரவியத்தை.

(அ-ன்-வ-ம்.) முன்னமே சொன்னேனே.

சுக்கிரன் வசனம்.

உன்னை குனியவைத்து அன்னுந்தாள் பூட்டியிருக்கின்றேன் நில்லப்படி.

அரசன் தரு.

விண்ணுந்தலத்தின் விஸ்வாமித்திரர்பொருட்டாக-தெய்வமே
அன்னுந்தாள்போட்டிந்த ஐபெரும்வைகுறார்-தெய்வமே

அரசன் தரு.

மன்னன்வரக் காணமல் மனமிகவாடினேன் பெண்ணமேமட்டே.

இராகம் மோகன தாளம் ஆதி.

பல்லவி.

அன்னுந்தாள்போட லாகுமோசுவாமி (அ)

அநுபல்லவி.

ஒன்றுதிருபொருக்க ஓகோராமனென்றுசெய்வேன் (அ)

சரணங்கள்.

கழுத்தும்வலிக்கின்றதே கால்கள்கடுக்கின்றதே
அழுத்தமுள்ளவிடையும் ஆகமும்சோருதே (அ)

காசிநகரடைந்த காலத்திலேயந்தக்
கோசிகமுனிபொன்னை குறைவறயிருந்தேன் (அ)

தருவனமீதில்மிக சதிசெய்யவேண்டாமிகக்
கருணைபுரிந்திதை கழற்றிவிடுவீரய்யோ (அ)

சுக்கிரன் வசனம்.

உன்னுடனே ஒவ்வொருதரமும் வாதாடுவதில் பயனில்லை இதை விலக்கிவிட்டேன் இதோநெற்றியில் கல்லைவைத்திருக்கிறேன் மேலே பார்த்துக்கொண்டே நில்லு.



195-வது பக்கம் நெற்றியில்கல்லைவைத்தி.



### அரசன் தரு.

இராகம்-காம்போதி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

நித்தியமுமுனை பக்திசெய்ததற்கின்று-தெய்வமே-யென்
நெத்தியிலிந்தகல்லைவைத்திடச் செய்தாயோ-தெய்வமே
தவமுனிவனாலே குவலயமிழந்தாலும்-தெய்வமே
இவடயித்துயருறலாகுமோ எனையாண்ட-தெய்வமே
கருணையங்கடலாய்நீ கவிந்திருந்தாலும் ஓ-தெய்வமே-இந்த
தருணத்நீயெமைக்காக்க சம்மதமில்லையோ-தெய்வமே

### அரசன் தரு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-சாப்பு.

பல்லவி.

நெற்றியில்வைத்தகல்லை நீக்குவீர்சாமி (நெ)

அநுபல்லவி.

சற்றுகிருபைசெய்யுமென்றன் றனேசரணமென்றன் (நெ)

சரணங்கள்.

கழுத்திலுள்ளநரம்பு கடுக்குதிதனைநம்பும்
வழுத்தும்வசனமென்றும் வழுவேனுனின்று (நெ)

திருவிக்ரமன்தாள்தனை திருயந்திரத்தாற்புனை
திருநாமமிட்டவிதில் தெண்டமைவைத்தீரோ (நெ)

இப்பொழுதிவ்விதம் இயற்றினதெவ்விதம்
செப்பொணாசிக்கி செல்வதெவ்வாறையோ (நெ)

### அரசன் வசனம்.

பிரபூ பொறுக்கக்கூடவில்லை கல்லை எடுத்துவிடுங்கள்

### சுக்கிரன் வசனம்.

கல்லது உனக்கு இரக்கப்படுவாருண்டோ ஆகினும் இதோ எடுத்துவிட்டேன் இதோ ஒற்றைக்காலை தூக்கி மடித்து அப்படியே நில்லு ஒற்றைக்காலில் நிற்கவைத்திருக்கிறேன் அப்படியே நின்று பொருளைக்கொடுத்து காலை எடுக்கவேண்டும்.

அரசன் தரு.

இராகம்-காம்போதி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

எற்றைக்குமுனக்காளாய் இருக்குமென்றனையின்று தெய்வமே
ஒற்றைக்காலில்நிற்க வைத்தாயென்பிழைசெய்தேன் தெய்வமே

அரசன் தரு.

பெறுவாரிமைன ஜாபுரோ வென்றமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ஆதி.

பல்லவி

ஒற்றைக்காலில் நிற்கச்செய்தெனை
உதைக்கின்றீரையோ யிங்கனே (ஒ)

அனுபல்லவி.

எற்றைநாளும்சொன்மொழி யான்பிசகேன்நல்வழி
கற்றஅவனியிற்பேர் பெற்றபொற்பேரீர் (ஒ)

சரணங்கள்.

என்னேரம்வரையுங்கேட் டிப்படிநிற்பதிங்கே
இன்னேரந்தயைசெய்யும் வழைநாளுய்யும் (ஒ)

---

அரசனை

# கிட்டிபோடும் பாகம்.

அரசன் வசனம்.

பிரபூ ஒற்றைக்காலால் நிற்கக்கூடவில்லையே கெந்தகரேனை தயவில்லையா எடுத்துவிடுங்கள் காசி சென்றவுடன் பொருளைக்கொடுத்துவிடுகின்றேன்.

சுக்கிரன் வசனம்.

நல்லது இவனை இந்தவிதம் லேசான தண்டனைவிதித்தால் வசூலியம்செய்து பொருள் கொடுக்கமாட்டாய் இங்கே வா உன்கையை நீட்டு அதில் கிட்டியை மாட்டினால்தான்சரி. நீட்டு கையை.

அரசன் வசனம்.

வேண்டாம் பிரபூ இவ்வளவு வேதனை செய்தது போதும் இனி பிரமாதக்கமாட்டேன்.



அரசனைக் கிட்டிபோடும்பாகம்.

சுக்கிரன் வசனம்.

நீட்டடா கையை பொருக்கமாட்டாயோ நீட்டு இதோகிட்டியை கட்டியிருக்கின்றேன். இதை அவிழ்க்க கூடாது உயிரைவதைசெய்து விடுவேன் ஜாக்கிரதை.

அரசன் தரு.

ஐயோமகனேபாம்புயென்றமெட்டு.

இராகம்-தேசிக ஹுசாரி-தாளம்-சாப்.

பல்லவி.

ஐயோகிட்டியைக்கட்டி ஐயரேகிட்டியைகட்டி
அடிக்கலாகுமோஎன்னையே கிட்டியைக்கட்டி (ஐ)

அநுபல்லவி.

கையோபுண்ணாகுதே கவின்விரல்நோகுதே
பொய்யோர்பொழுதும்சொல்லேன்போதும்பொருக்கவல்லேன் (ஐ)

சரணங்கள்.

முனிபொருள்மோசஞ்செய்யேன் முனிந்துனையென்றும்வையேன்
இனிநீரேகெதியல்லாது எவருளிரகமிது (ஐ)

எளியேனுக்கிரங்குவீர் இரக்ஷிக்க இணங்குவீர்
அளிகுழுமவரடிக் கடிமையடியேனென்றும் (ஐ)

கோபமென்மேல்வையாதீர் கொடுமைமிகச்செய்யாதீர்
கேவலமுற்றேனென்று கிலேசப்படவுமின்று (ஐ)

அரசன் விருத்தம்.

காதிமன்புத்திரனான கவுசிகர்கடனுக்காக
வேதினையடைந்தயென்கை மீதினிற்கிட்டிகட்டி
ஓதிடாவார்த்தையோதி யுதைப்பதுநன்றோவென்றன்
வேதியர்குலக்கொழுந்தே மிருதயைபுரிகுவீரோ.

அரசன் தரு.

சரசஞ்செய்யவா என்றமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

கைவலிக்குதே சுவாமி (கை)

அநுபல்லவி.

கைவலிக்குதென்ன செய்வேன் (கை)

சரணங்கள்.

துய்யமுனிபொருட்டாக வெய்யகோபங்கொண்டுநோக
அய்யனேநீர்கிட்டிகட்டி அடிக்கிறீர்அதட்டிஐயோ (கை)
எல்லாந்தெரிந்தநீதி இறைவனேஉமக்கிப்போதில்
புல்லறிவேன்என்னசொல்வேன் பொறுக்குதில்லையே-ஐயோ (கை)

அரசன் தரு.

இராகம்-காபி-தாளம்-சாப்பு.

பல்லவி.

கிட்டிவேதனைசகிக்காது கிருபைசெய்துவாங்குமிப்போது (கி)

அநுபல்லவி.

மட்டிலாமறையோர்குலத்துதி வள்ளலேயிந்தத்துதி (கி)

சரணங்கள்.

அஞ்சுவிரலும்நோகவேகட்டி அடிக்குறீரடிக்கடியதட்டி
நெஞ்சுதானிரும்போகல்லோகொஞ்சம் நெகிழ்ந்துருகிடாதோதஞ்சம்

அரசன் வசனம்.

பிரபு அகோரமாகிய ஆரணியத்தில் அடியேன்கையிற் கிட்டி
யைக்கட்டி முனிபொருளைக் கொடென்றால் எங்கிருந்துகொடுப்பே
ன் ஐயோ கருணையங்கடலே வேதனைசகிக்குதில்லை கிட்டியை அவிழ்
த்துவிடுங்கள்.

நரகன்வசனம்.

பொருளைக்கொடுத்தாலல்லது கிட்டியை அவிழ்க்கமாட்டேன்

சந்தரமதி விருத்தம்.

தேசமன்னர்திறைகொடுத்து வணங்கிநிற்க
செய்யமதிமந்திரிமார் பொருளுரைக்க
நேசமுடன்பூசுர ராசீர்வதிக்க
நேர்த்தியுள்ளகுடிபடைகள் நிறைந்திருக்க
மாசறுசிங்காசனத்தின் மீதிருந்து
மாநிலத்தைகயோர்குடைக்கீழ் வசித்தேயாண்ட
வாசவனேயென அதுளை ராஜன்கையில்
மட்டில்லாகிட்டிகட்ட லாமோசுவாமீ



சந்திரமதி-தரு.

எனிந்தநுயரம் செய்குறீர்யென்றமெட்டு.

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

நீதியிதுவாமோசொல்லுவீர் நீரென்றன்முன்னே (நீ)

அநுபல்லவி.

மாதிரமுனிவருக்கு வாய்த்ததுதகாவுமக்கு (நீ)

சரணங்கள்.

வானிலத்திலுள்ளோர்மதிக்க ஐம்பத்தாறுதேச
மகுடமுடிமன்னர் துதிக்க
மாநிலத்தை யாண்டதுய்ய
மன்னன்மேல் வர்மஞ்செய்ய (நீ)

கஞ்சமாமலர்க்கை வீங்குமே-தயவுசெய்து
கட்டியகிட்டியை வாங்குமே
கொஞ்சமேனு மிரக்கம்
கொள்ளவுமாகாதோ மிக்க (நீ)

வனத்திற்பொருளாயிபென்றால் எவ்விதமீவோம்
வாதுபுரிகுவது நன்றோ
மனத்திற் கருதியாதேதும்
வைத்திருக்கின் றோமோதுதும் (நீ)

கிருபைசெயும்சாமிநீரென்றே பலவிதமாய்க்
கெஞ்சியும்வணங்கி யும்நின்றே
வருந்துமென்றனை நீர்தான்
திரும்பிப்பார்க்க லாகாதா (நீ)

பார்த்தாலுமக்கின் றழிவோ சொர்க்கமாயுற்ற
பவுசுபாக்கியத்திற் குழிவோ
காத்தருள் களிகொண்டு
கனகோடி புண்யமுண்டு (நீ)

சந்திரமதி தரு.

சேருமுன்னே சேவல்கூவுதே யென்றமெட்டு.

இராகம்-யமாச-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஏனேயிந்தயிம்சைசெய்கிறீர் என்றுயகனே (ஏ)

அனுபல்லவி

ஞானமுனிநாதரே நளினமலர்ப்பாதரே
தினமறைதேர்ந்தநாதரே என்னையகணே (ஏ)

சரணங்கள்.

யாதுகுற்றஞ்செய்தோமோ அல்லதும்மைவைதோமோ
ஓதுமொழியேதுந்தவிர்ந்தோமோ என்னையகணே (ஏ)

கருணைவாராதோகொஞ்சம் கல்லோவுமதுநெஞ்சம்
தருணம்நின்றன்மலர்தஞ்சம் என்னையகணே (ஏ)

கெஞ்சியதெல்லாம்நேரோ கேட்டுமிப்போதுநீரோ
வெஞ்சினம்விளைக்குகின்றீரோ என்னையகணே (ஏ)

இதமுடன்பெண்பால்நின்று ஏங்கவுற்றனளென்று
இதயமிரங்காதோயின்று என்னையகணே (ஏ)

சந்திரவதி தரு.

தீந்தகாதா கருணைசெய்வாய் யென்றமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

இந்தவாது செய்வதேதுநீர் (இ)

அனுபல்லவி.

அந்தணகுலதீபனே அரியதிருரூபனே
எந்தனீதி சந்தான்மீதில் (இ)

சரணங்கள்.

சொன்னதேதுந்தவறினரோ துக்கமாகப்பேசினரோ
இன்னதென்று இயம்புமின்று (இ)

கன்னும்படியாகத்தாங்கள் கட்டியகிட்டியைவாங்க
இன்னுமன மில்லையோமிக (இ)

கஷ்டஞ்செய்குவதால்முனி கடன்பொன்வருமோஇனி
அஷ்டமிருகம் சூழ்வனந்தகம் (இ)

உக்கிரமயின்பிரேம் உபகாரிகளுக்குவாரும்
பொற்கிரணப் பூந்தாள்சரணம் (இ)



சந்திரவதி தரு.

மன்னன்வரக் காணேனே யென்றமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ஆதி.

பல்லவி.

தயவுசெய்வீரோ சதுர்மறையோரே (தய)

அநுபல்லவி.

உயர்வானதுஞ்ச வொண்பாதகஞ்சம் (தய)

சரணங்கள்.

காசியிற்சென்று கவுசிகரின்று
பேசியவண்ணம்பொன் பெறத்தருவோம்நின் (தய)

தேவரீர்செய்யும் கொடுமையையும்
யாவர்பொறுப்பார் அவனிமேல்செப்பாய் (தய)

பாவம்வராதோ பழிதொடராதோ
கேவலம்செய்வது கீர்த்தியோவிமது (தய)

சந்திரவதி தரு.

மன்னனைக்காணமல் மயங்குறேன் யென்றமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ஏகதாளம்.

பல்லவி.

கிட்டியைவாங்குமோ கெண்ணியனேபுண்ணியனே (கி)

அனுபல்லவி.

மட்டிலாநவமணி வைத்திழைத்தகூடாமணி
தொட்டிடுநிதிமெய்ச் சந்தராளந்தன்னை (கி)

சரணங்கள்.

மெத்தவுந்தொகுமே வேதனையாகுமே
கர்த்தனேதீருந்தன் கருணைபுரிந்திந்த (கி)

தர்மசாஸ்திரமுற்றும் தானுணர்ந்தவராயுற்றும்
வர்மமிங்கேசெய்ய மனமுவந்ததோவெய்ய (கி)

மனக்கருணையில்லையோ மாதரோடுதிக்கில்லையோ
தனக்கிதுநீதியோ தருந்தர்ரக்யாதியோ (கி)

தாங்கமுடியாதென்று நவிக்குருரையோகின்று
பூங்காம்வீங்குமே போதனோநாதனே (கி)

தவமுனிபொருட்கேதும் தடைசொன்னமோவிப்போது
பவமகல்காசியம்பதி சென்றேதருகின்றேன் (கி)

தேவதாசன் விருத்தம்.

சுருதிதேர்ந்துற்றநற்பூகரர் குலமணியேபோற்றி
கருதுவேன்கேளுமந்தக் கவுசிகர்கடனுக்காக
தருமபூபதியாமென்றன் றந்தைகைநோகும்வண்ணம்
கருணையில்லாமற்கிட்டி கட்டியதழகோசுவாமி.

தேவதாசன் தரு.

கணமயில்மீதேறிவா வென்ற மெட்டு.

இராகம்-நாதநாமகிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

என்றன்பிதாகைவீங்கும்-நீர் இந்தகிட்டியைவாங்கும் (எ)

அநுபல்லவி.

உன்றனடிக்கிக்கோடி வந்தனந்தந்தேனடி (எ)

சரணங்கள்.

காசிநகரம்சென்றேமுனி கவுசிகர்பொன்னையன்றே
பேசியபடிதானே பெரத்தருவேன்யானே (எ)

வர்மம்மிகச்செய்யாதீர்வாயில் வந்தபடிவையாதீர்
தர்மமில்லையுமக்கு தயவுசெய்குவீரையே (எ)

தேவர் வசனம்.

பிரபூ என் பிதாகையில் கட்டியிருக்கிற கிட்டியை அவிழ்த்து விடுங்கள் ரெம்பவருத்தப்படுகின்றார் கருணைசெய்யுங்கள் கருணையங் கடலே.

சுக்கிரன் வசனம்.

சபாஷ் நீயும் சிபாரிஷை செய்யவந்தாய் நல்லது என்ன அவன் கையுள்ளகிட்டியை அவிழ்க்கும்படி எப்படி ஆத்திரமாய் சொல்ல லானயோ அப்படியே நீ ஒருபொய் இல்லையென்று சொல்லுபார்ப் போம்.



தேவதாசன் தரு.

காசிமாநகர்க் கேகவாரும் வென்றமெட்டு.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-சாப்பு,

பல்லவி.

ஒருபோதும்பொய்சொல்லேன் சுவாமி சொல்லேன் சுவாமி(ஒ)

அநுபல்லவி.

உரைத்தமொழிதவறேன் உயர்தவநேமி (ஒ)

சரணங்கள்.

சுருதிகள்நான்கும்பொய்த்தாலும் பொய்த்தாலும்
அருள்மனுநெறிமுறை யணிபுரண்டாலும்(ஒரு)

கதிர்மதிதிசைமாறினாலும் மாறினாலும்
கொதிதிரைகடல்பொங்கி குறுகிவந்தாலும்(ஒரு)

அண்டபிண்டங்கலழிந்தாலும் அழிந்தாலும்
எண்டிசையுடனிந்த இகமழிந்தாலும்(ஒரு)

இன்னமென்னவிதிவந்தாலும் வந்தாலும்
அன்னையுந்தந்தையும் அபத்தஞ்சொன்னாலும்(ஒரு)

தேவதாசன் வசனம்.

பிரபூ, எக்காலத்தும் யான் பொய்சொல்வதற்குத் துணியமாட் டேன்.

சுக்கிரன் வசனம்.

இனி யென்னசெய்யலாம் இவனுக்காகவாவது கிட்டியை அவி ழ்த்துவிட வேண்டியதாயிருக்கிறது.

சுக்கிரன் வசனம்.

அரிச்சந்திரா முனிவன் கடனுக்கு என்னசொல்லுகின்றாய்.

(அ-ன்-வ-ம்.) காசிக்குச்சென்று கொடுக்கின்றேன்.

(சு-ன்-வ-ம்.) கிட்டியை அவிழ்க்கத்தான் வேண்டுமோ.

(அ-ன்-வ-ம்.) ஆம் பிரபூ வேதனை சகிக்குதில்லை.

(சு-ன்-வ-ம்.) சரி கையைநீட்டு அவிழ்த்துவிடுகிறேன்.

சுக்கிரன் வசனம்.

அடே பையன் இங்கேவா நீ சிறுபையனாயிற்றே உன்கரத்தில் அதிர்ஷ்டரேகை உண்டா இல்லையாவென்று பார்ப்போம் கையை நீட்டு.

(தே-ன்-வ-ம்.) இதோ கிட்டினேன் ஐயா.

(சு-ன்-வ-ம்.) நானும் கிட்டியைப் பூட்டினேண்டா பையா.

தேவதாசன் விருத்தம்.

திரத்தினில்மிருந்தவிப்ர சிரேஷ்டரேபோற்றிபோற்றி
சிரத்தினில்வேணிசூடும் திருமுனிகடனுக்காக
கரத்தினில்வெய்யகிட்டி கட்டினீர்சாட்டையாலே
உரத்தியேயடிப்பதிப்போ துமக்கழகாமோசுவாமி.

தேவதாசன் தரு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஐயையோகைவலிக்குதே-உயர் அந்தணர்குலமணியே
உந்தனடியே கெதியே (ஐ)

அநுபல்லவி.

மெய்மையென்றுந்தவறேன் பொய்மையென்றும்புகலேன்
துய்யமுனிபொருட்கு துரோகஞ்செய்யேனெனக்கு (ஐ)

சரணங்கள்.

மட்டிலாவனமீது மதலையென்றெண்ணாது
கிட்டியைக்கட்டப்போமோ திட்டியடிக்கலாமோ (ஐ)

வருத்தஞ்செய்தாலின்றே வந்திடும்பொருளென்றே
கருத்தினில்நினைத்தது கண்யமோபுண்யமோ (ஐ)

பொறுக்கமுடியுதில்லை புண்யரேயென்னதொல்லை
சிறுத்தனயேனல்லோ தேவரீர்சிக்கைதல்லோ (ஐ)

தவிக்கிறேனிங்கனே தயவுசெய்தேயிதனை
அவிழ்த்திவிட்டிடுங்கோடி யஞ்சலிசெய்தேனடி (ஐ)

காசிமாநகருக்குக் கடுகியேதவணைக்குள்
கோசிகர்பொன்னையங்கே கொடுத்திடுவேனிங்கே (ஐ)

அரசன் தரு.

ஸ்ரீசுப்ரமண்யனே யென்றமெட்டு.

இராகம்-காமசு-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

பாலன்கரம்நோகுமே பாபமுமக்குண்டாகுமே
ஓலமிட்டழுகிறானே ஓஓ யென்னசெய்வேன்யானே
யோகனே-யோகனே யோகனே-யோகனே (பால)



கருணைமனமீதோங்கி கட்டியகிட்டியைவாங்கி
அருமையுடனேகாப்பீர் ஐயோயிவன்முகம்பார்ப்பீர்
ஐயனே-ஐயனே ஐயனே-ஐயனே (பால)

மட்டிலாவனமீது மகப்பொருளையிப்போது
கொட்டிடவேண்டுமென்று கூறினாலெங்கேயிருந்து
கொடுப்பது-கொடுப்பது கொடுப்பது-கொடுப்பது (பால)

கஷ்டஞ்செய்யாதிரின்று காசிநகர்க்குச்சென்று
இஷ்டமாய்முனிகடனை யீய்ந்திடுவேனிவனை
ஏசாதிர்-ஏசாதிர் ஏசாதிர்-ஏசாதிர் (பால)

அரசன் வசனம்.

பிரபூ முனி கடனுக்காக பனிமதிவதன பாலகன் கையில் கிட்டியைக்கட்டி கஷ்டப்படுத்துவது தர்மமா கருணைசெய்து அவிழ்த்து விடுங்கள்.

அன்னகர்பூமி யென்றமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஐயோயென்பாலகன் அழுகுறான்கிட்டியை
அவிழ்த்துவிட்டிடும் வேதஅந்தணரே (ஐ)

அநுபல்லவி.

மெய்மையென்றுந்தவறோம் பொய்மையென்றும்புகலோம்
துய்யமுனிபொருட்கு துரோகம்செய்யோம்
எய்தரும்காசிசென்று எவ்விதமாவதன்று
ஏற்படுந்தவணைக்குள் யீய்ந்திடுவோம் (ஐ).

சரணங்கள்.

பரமன்றனை நினைந்து பலநாள்தவமிருந்து
பாலையான்பெற்றெடுத்த கோவைஐயா
சிரமம்செய்யாதிருந்தன் சேவடிகட்கனந்தம்
சேவைசெய்குறேன்றயை செய்யும்மெய்யா (ஐ)

சந்திரவதி வசனம்.

விப்ரகுல சிரேஷ்டரே யான் தவமிருந்து பெற்ற புத்ரசிகாமணி கெட்டிவேதனையால் துடிக்கின்றான். அவிழ்த்து விட்டிடுங்கள்.

சுக்கிரன் வசனம்.

சரி அவிழ்த்துவிட்டேன் சூரியன் உதயமாகும் சமயமாகின்றன புறப்படுங்கள்.

அரசன் விருத்தம்.

காதல்சேர்மாதேயென்றன் கண்மணிமகனேகேளீர்
ஆதவனுதயமாகும் சமயமும்வந்ததாமால்
ஆதரவாகவிந்தஅய்யனை யழைத்துக்கொண்டு
பாதகந்தீர்க்குங்காசிப் பதிக்குநாமேகுவோமே

அரசன் தரு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

கொடியிடையாய் கூடவாராய் (கொ)

அநுபல்லவி.

படியேழுந்துதிக்க பானுவுமுதிக்க
கடிவனப்பறவைகள் கண்டார்த்தநுகள் (கொ)

சரணங்கள்.

ஆதியில்வேதா அமைத்ததுபீதாம்
மேதினியில்நடந்து விரைவாயெனைத்தொடர்ந்து (கொ)

மூண்டிடுஞ்சூடு முதிர்முன்னிக்காடு
தாண்டியின்னமோரிடம் சாருவோம்என்னுடன் (கொ)

மாமதிபுனைந்து வாழ்சிவனைநினைந்து
நீமயங்காமலே நெஞ்சமும்தேறியே (கொ)

பொது வசனம்.

இவ்வாறு அரசன் சரயுநதியைவிட்டுநடக்க இப்பால் மந்திரியாகிய சத்தியகீர்த்தி அரசனை நாடிவரும்விதம்.

மந்திரி விருத்தம்.

மோக்ஷநல்குமேழ்புரியிற்பேருபெற்ற
முதற்புரியா மயோத்திபுரிதன்னையாண்ட
தீக்ஷண்யமானகதிர் குலத்திற்றோன்றும்
திரிசங்குபுத்திரனென வவதரித்து
வீக்ஷண்யமாகவெனை மதியாய்வைத்து
மிகுந்தமனத் தன்புடனேகாத்துவந்த
காக்ஷிமிகுஞ்சத்ய ஹரிச்சந்திரன்றன்னை
கணப்பொழுதும் விட்டிருக்ககருத்தொவ்வாதே.



இதுவுமது.

சுமதியாய்ப்பயமித்தக்காள் தொட்டிக்காள்மட்டுமென்னைத்
தமதுயிர்போலவேயெந் தனதுயிர்காத்துவந்த
எமதரசேகாவுன்னை யெப்படிவிட்டிருப்பேன்
சமயந்தீர்தயவுசெய்யும் தமியனும்வருவதற்கே.

அரசன் விருத்தம்.

பெருமதியுள்ளோய்யெந்தன் பின்னேநீவந்தாலந்தச்
சுருதிமாமுனிவருக்குச் சுருத்துள்ளார்யாருமுண்டோ
அருகிருந்தரசுசெய்ய வங்கறிவுள்ளோர்நின்போல்
ஒருவருமில்லையாமா லயர்நகர்க்கேகுவாயே.

மந்திரி விருத்தம். [செய்தேன்
கோதிலாப்பெருங்குணத்தாய் குற்றேவலின்னெடுநாள்கொடியேன்
ஆதலால்நீபோகுமருஞ்சுறத்திற் பணித்தபணியார்தான்செய்வார்
மாதாருடனேகமகனேக நின்னுடன்யான்வாரேனுகில்
வதிலாருனெனைனிக்கண மெந்தனைக்கூட்டிவருவாயே.

அரசன் விருத்தம்.

அருவிபோறகண்ணீரோட அழுதிடுஞ்சத்யகீர்த்தி
கருதுவேன்கேளாயையோ கதறுகேபதறுகேநீ
இருநயமீதுகொண்ட வெண்ணத்தின்படியேயென்பின்
வருகுவைநடந்துகாசி மாநகர்க்கேகத்தானே.

ம-ரி-வ-ம். நல்லதரசே.

அரசன்-விருத்தம்.

வஞ்சமில்மதியேயென்றன் மனைவியேமகனேகேளீர்
எஞ்சலிற்றாகர்நம்மை வரவில்லையென்றேயேகி
அஞ்சரண்சிவக்கமுன்னே யேகுவார்ஆகையாலே
சஞ்சலமனதின்றி தடத்தைநீர்நோக்கிவாரீர்.

அரசன் தரு.

ஐயனே யென்கரம்விங்கியென்ற மெட்டு.

இராகம்-காபி-தாளம்-சாப்பு.

பல்லவி.

தேவியேசேயேமதியே சேவிவாரும்இதுகதியே (மே)

அநுபல்லவி.

பாவியென்ன பாவமுன்னம்
பண்ணினேனோ பரிந்தறியேனே (மேவி)

சரணங்கள்.

நீங்களிந்தவேதனையும் நிஷ்டூரமும்வாதனையும்
சங்கனுபவிக்கவிதை யெந்தப் பார்க்க யானுடலெடுத்தேன் (மே)
பொறகனகஆசனத்தே பொருந்தியிருந்ததைத்தவிர்த்தே
கற்களோடுமுட்கள்தைத்துக் கடுக்க எடுக்க காலமோஎன்பின் (மே)

உல்லாசமாய்நடந்ததும்போய் உள்ம்வருந்நடக்கலாச்சே
எல்லாமீசன்செய்புஞ்செய லாமே காமேல் இனிநீவிர்தாமே (மே)

அரசன் வசனம்.

மந்திரீ, பெண்ணே பாலகா வெய்யிலோ அகோரமாயிருக்கின்றது விரைவில் நடந்து வாருங்கள்.

சந்திரவதி விருத்தம்.

பிறந்திருநாள்வரைக்கும் பெருஞ்சுகந்தனிலிருந்து
சிறந்ததுகைலைவாழும் சிவனுக்குப்பொறுதவண்ணம்
அறந்தழைத்தோங்குநாட்டை அருண்முனிக்களிக்கச்செய்து
அறந்தவர்வாழக்காட்டில் தான்புறவிட்டான்மன்னே.

சந்திரவதி தரு.

இராகம்-தேசிநதோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

சூடுபொறுக்கவென்றால் கூடுதில்லையேமன்னே (சூ)

அநுபல்லவி.

வாடும்படிசூரியன் போடும்வெயிலாலிந்த (சூ)

சரணங்கள்.

பொடிமணற்களுறுத்தி பொக்களமாகியேதத்தி
அடியெடுத்துவைக்கப்பய மாகவிருக்கின்றதுயர் (சூ)
வெயர்வைவழிந்தேதடும் விதமென்சொல்வேனும்மோடு
அயனுமிவ்விதமென்னை அமைத்தானோநானிங்கனே (சூ)

குறைவுயாதுசெய்தேனோ கொடுத்ததைவாங்கியுந்தேனோ
முறைதவறிநடந்தேனோ முத்தர்களையிகழ்ந்தேனோ (சூ)



இத்துயரடையும்வண்ணம் இயற்றவேண்டுமென்றண்ணல்
எத்தனைநாளாகக்காத்து இருந்தானோஅறியேனே (சூ)

சந்திரமதி வசனம்.

பிரபூ, இந்தவெயலின் சூடுசகிக்குதில்லையே.

தேவதாசன் தரு.

இன்னமுமின்மன திரங்காயென்ற மெட்டு.

இராகம் - செஞ்சுருட்டி - தாளம் - ரூபகம்.

கண்ணிகள்.

பெற்றனன்னையிந்தவண்ணம் யேங்கக்காலமோ
முந்தவினையின்பயனோ முனிசெய்கோலமோ (எ)

இப்படிவந்தெய்துமென்று யானறியேனே
எப்படிச்சகிக்கலாகும் எம்பெருமானே (எ)

உற்றசூடுமண்மிதிக்க வொட்டுதில்லையே
பற்றுதேபாதங்கள்ரெண்டும் பாழுங்கதிரில்லையே (எ)

மழலைப்பராயத்தில்நடக்க வன்முள்ளுமாச்சுதே
தழலிற்பட்ட பூங்கொடிபோற் றவிக்கலாச்சுதே (எ)

அடியவர்க்கருள்கொடுக்கும் அந்தவாரிதியே
கொடியெனைக்கண்பார்க்கக்கருணை கொள்ளும்சோதியே (எ)

தேவதாசன் வசனம்.

எ தெய்வமே நாடுநகரமுதலாயுள்ள மற்றயாவையும் முனிவனிடம் ஒப்புவித்தும் கடனுக்காளாகி பரதேசியைப்போல ருடம்புகளொடு இந்தக்காட்டின்வழியாகநடந்து காசிக்குச் செல்லும்படிசெய்தாயே இதுதர்மமா என்னகுறைவுசெய்தோம் ஐயோ இந்த அகோரமான காட்டில் நடக்கமுடியாது பூங்கொடிபோல் வாடுகின்றோமே நின்கருணை யின்னம் பிறக்கவில்லையா.

அரசன்-தரு.

இராகம்-முகாரி-தாளம்-சாப்பு.

பல்லவி.

சிவமேயெந்தனையேன் படைத்தாய்-பர (சி)

அநுபல்லவி.

தேவியலறிடச் சேயன்முறையிட
பாவியான்கண்டால் பார்த்துகொந்திட (சி)

சரணங்கள்.

தவமாமுனிசெயும் தந்திரமோ-இந்த
ஜகமீதெவர்செயு மந்திரமோ
புவனங்கள்மகிழப் புரிந்தவரசிழந்
தவதியடைந்திட அரண்யம்நடந்திட (சிவ)

சிறியேன்முறை செவிகேட்கிலையோ
திரங்கொள்மனம் இரங்கவுமிலையோ
நெறியேபிதா நீகல்கிலையோ
நினைந்தால்த்துய ருனக்கோர்மலையோ
பொறியாரவுமதி புனைகுரவுநதி
செறிசடையிலணி திருநயனமணி (சிவ)

அரசன் வசனம்.

இக்காட்டினிடமாக இவ்விதமான அவஸ்தையடையும்படியாக படைத்தாயே ஓ தெய்வமே.

மந்திரி-விருத்தம்.

பழுதிலாதென்னையாண்ட பார்த்திபசொல்க்கேளும்
முழுமோசக்காரனான முனிவின்செய்கபடமீதாம்
அழுதழுதாவதென்ன அமைத்ததுபோல்நடக்கும்
செழுமனந்தன்னைத்தேற்றித் தேவரீர்வருகுவீரே.

அரசன் தரு.

இராகம்-காபி-தாளம்-சாப்பு.

பல்லவி.

பெண்ணேபெண்ணரசே பிந்திடாதழுந்தியேவா (பெ)

அநுபல்லவி.

கண்ணேயென்கண்மணியே காதலருளணியே
கரும்பே அரும்பே காவிற்பொன்கரும்பே (பெ)

சரணங்கள்.

இருளும்வான்முகமேவும் பருதியுமழையும்மேவ
இருமின் னெடிமேவும் பெனில்மற்றெவைமேவாது (பெ)
இப்படியிருந்தாக்கா லெப்படியினியப்பால்
ஏக ஆக மேற்குமோயார்க்கும் (பெ)
காதும்புண்ணாகுதே மேலும்மண்ணாகுதே
காலம் பாலன் ஓலமிட்டழுகிறான் (பெ)



அரசன் தரு.

தானமயில் மீதேறிவா வென்றமெட்டு.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

நடந்துவாடாசுதனே-என்னைத் தொடர்ந்துவினையுடனே
கடந்திடுவோமிந்தக் கதித்தவனத்தைஐயோ (ந)

சூடுஜ்வாலதியாகுதே-நம்மன் ஆயதிரேகம்நோகுதே-இப்
பாடுபடவும்நம்மைப் படைத்தான் கடற்புவியில்-ஐயோ (ந)

இதற்கோவுன்றனைப்பெற்றேன்-நான் இனிமையுடன்வளர்த்தேன்
எதற்கோநானிந்தஜென்மம் யெடுத்துழல்கின்றேன்ஐயோ (ந)

பாதகமென்செய்தேனோ-மனு பகர்ந்தநெறிகொய்தேனோ
வேதனையடைந்திட வேதன்விதித்தான்ஐயோ (ந)

தேவதாசன் தரு.

மன்னவனேயுந்தனை மங்கையுந்தேடியே வென்றமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

அரசனிடம் சொல்வது.

ஓட்டுதென்காலிற்பொடி ஓகோயாவென்னசெய்வேன்
உற்றெனைப் பெற்றருள் உயர்தந்தையே

தேவதாசன் அரசனைப் பார்த்துச்சொல்லல்.

மட்டேறுநிந்தச்சூட்டில் மரங்களில்லாவிக்காட்டில்
வாடுகிறே னய்யோ மன்னவனே

தேவதாசன் சந்திரமதியைப் பார்த்துச்சொல்லல்.

தமியேனிவ்விதத்தொல்லை சகிக்கமுடியுதில்லை
தவமியற்றியே பெற்ற பெண்தாயே

தேவதாசன் மந்திரியைப் பார்த்துச்சொல்லல்.

நிமிடநேரத்தின்பின்னே நெருப்பொருள்முன்னே
நிகழ்த்துமந்திரியே அயன் நேர்மையிதோ

மந்திரி விருத்தம்.

நெடியவிக்கொடியபாலை நிலத்தினில்வெய்யிலால்நுண்
பொடியடிமீதுதாக்கி பொக்களமாகிநொந்து
துடிதுடித்தலறுமென்றன் சோதராவாவாயிரதக்
கொடியனேன்றோளில் தூக்கிக் கொண்டுநான்வருகின்றேனே.

(தே-ன்-வ-ம்.) இதுவுங்காலமா,

(ம-ரி-வ-ம்.) வருத்தப்படாதே யப்பா.

சந்திரவதி தரு.

மன்னவரே யென்னசெய்வோம் மென்றமெட்டு.

இராகம்-நாதநாமகிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

என்னசெய்வேன் எதுசெய்வேன்
எந்தனைமணந்தவதி சுந்தரநாதனே (எ)

அநுபல்லவி.

என்னகுமுருகுதே பொன்னடிகருகுதே
எப்படிநடப்பனினி இப்பெரியவெப்பத்தினில் (எ)

சரணங்கள்.

கற்பினிலேநடந்தேனே கடவுள்பணிமறந்தேனே
முற்பிறப்பில்மாதாவின் சொற்பிசகினான்பாவி
மோசமாய்நடந்தேனோவிவ் வேஷமாகினேனேயினி (எ)

சங்கரன்மால்அயன்கதியோ தவமுனிகோசிகர்சதியோ
தங்கள்குலத்தரங்களைப் வெங்கதிர்வாய்ந்துமலைனுல்
சற்றுஞ்சுகமுற்றதில்லை பற்றுதடியிற்பொடிநான் (எ)

அரசன் தரு.

ஷை மெட்டு.

இராகம்-நாதநாமகிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

அழுகாதே ஐயோமாதே-நமக்
காதியிலமைத்தபடி நீதியாய்நடக்கும்படி (அ)

அநுபல்லவி.

பழுதின்றிச்செய்விதேனுக செழும்பஞ்சணைமேற்பாதம்
பட்டிடிற்நோகுமென்றலோ பட்டிடிற்நோகாதோஐயோ (அ)

137.



சரணங்கள்.

சந்திரதயன்றந்தகண்ணே சற்குணமிகுந்தபெண்ணே
தொந்தரவொன்றில்லாது எந்தன்புயத்தின்மீது
தூக்கிவருகின்றேனின்று ஜாக்கிரதையாய்வாவாநின்று (அ)

அரசன் வசனம்.

பெண்கள் சிகாமணியே அழவேண்டாம் என்புயத்தின்மீது ஏறிக்கொள் தூக்கிக்கொண்டு வருகின்றேன்

சந்திரவதி விருத்தம்.

பூமகளும்புவிமகளும் புகழ்ந்தேறியிருந்தது பொருந்தவண்ணம்
நேமமுறுகோசிகமாமுனி மகிழவேகொடுத்த நின்றோண்மீது
சமமுறும்நாயினிது மிகழ்வானயானடியாள் ஏறிலேயோ
நிமலியுமெரிநரகிற்பட்டுழல்வேன்கதிர்க்குலத்திற் செனித்தவேந்தே.

சந்திரவதி வசனம்.

பிரபு, என்னவார்த்தை பாலித்தீர் நாயினுமிழிவான யான் தமது வெற்றிபொருந்திய புயத்தின்மீது எழுந்தருளவேண்டுமென நினைத்தாலுமே கொடியநரகத்திற் கானாவேன் எழுந்தருளியிருந்தால் எந்தவிதமான நரகத்திற்காளாவேனோ தெரிகிலேன் இப்பேர்ப்பட்ட சொல்லும் காதிற்கேட்கவா பிரம்மன் என்னைப்படைத்தான் இவ்விஷயத்திற்கு எவ்வளவும் சம்மதியேன்.

அரசன் விருத்தம்.

எந்தனுக்கின்றுநீதியம்பிய பெண்ணேகண்ணே
உந்தனுக்கென்றுமிந்த வுபாதியுள்ளதாமால்
கந்தனைத்தந்தவீசன் கழலினைமனத்திலெண்ணி
வெந்தழற்பாலைமீது விரைவுடன்நடந்துவாராய்.

அரசன் தரு.

என்மேனிநந்தகோபம் ஏனய்யா யென்றமெட்டு.

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

அரனையுந்தன்கதியோ அம்முனிவன்சதியோ
அறியேன்-அறியேன் அறியேன்-அறியேன் (அ)

வரிவிழிமாதிப்பாழ் வனத்தில்நடக்கவுமூழ்
வலியோ-வலியோ வலியோ-வலியோ (அ)

பூவணையில்மிதிக்கப் பொருக்கால்பொடிமிதிக்கப்
பொறுமோ-பொறுமோ பொறுமோ-பொறுமோ (அ)

வேலணையயிந்தப் பாலனழவுழந்த
விதியோ-விதியோ விதியோ-விதியோ (அ)

பயங்கொள்ளுநிந்தழர்க்க பாலவனத்தைப்பார்க்க
பாவி-பாவி பாவி-பாவி (அ)

சுக்கிரன் விருத்தம்.

அக்கொடுவிஸ்வாமித்ரற் கருள்பொருள்நீகொடுக்க
கைக்கொடுவருவாயென்னைக் கடுகியுளனேடுவந்தேன்
எற்கொருசுகமிலாது எழிலிப்பாலைமீது
இக்கொடுஞ்சூட்டிலெய்த பெந்தலைவிதியோவேந்தே.

இதுவுமது.

உந்தனேடெய்தியிப்போ துற்றவெந்துயனாலேயோ
எந்தனுற்சகிக்கொணுது இருடியின்பொருளையிங்கே
தந்தருள்வாயேல்நன்று தராவிடலதினுநன்று
வந்ததோர்வழியைப்பார்த்து வாழ்பதிக்கேகுவேனே.

சுக்கிரன் வசனம்.

அப்பா அரிச்சந்திரா உன்னுடைய விதிதான் இவ்வனத்தில் இந்தவிதமான அவஸ்தையை அடைகிருய் எனக்கென்ன என்றல் இந்த அவஸ்தைப்படமுடியாது கால்களோ வெந்துபுண்ணுகிவிட்டது இனிஉன்னுடன் வரச்சம்மதிக்கேன் முனிவன் பொருளைக்கொடுத்தாலாச்சுது இல்லாவிடில் இல்லையென்று சொல்லிவிடு ரொம்பவும் நன்று என்பதிக்கிச் செல்லுகின்றேன்.

---

## அரசன் நக்ஷத்திர அய்யரை
## தூக்கிச்செல்கிற பாகம்.

அரசன் விருத்தம்.

அதிகதுன்புற்றேனென்ற அந்தணர்கோவே அந்த
எதிபொருளெக்காலத்து மில்லையென்றியம்பேன்நாவால்
பதிதனக்கேகவேண்டாம் படபடத்தேரவேண்டாம்
முதுகினிலேறிக்கொண்டு முறையுடன்வருகுவீரோ.

அரசன் வசனம்.

பிரபு, கோபம்வேண்டாம் பென்முதுகிலேறிக் கொண்டுவாருங்கள் சுமந்து நடக்கின்றேன்.



கேரிதேரோனைந்திக வென்றமெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

வாசிபோலவாகனமும் ஆகினேனேயீசனே (வா)

அநுபல்லவி.

காசினியுள்ளோரெவரும் கண்களிகூரகிவரும்
மாசிலாதமாகெதி ஐயையோ-ஐயையோ (வா)

சரணங்கள்.

தூசிமெய்யினிற்கோர்ந கடுபொடியடியிற்றுக்க
கோசிகர்தன் றூதர்க்கே ஐயையோ-ஐயையோ (வா)

காலுங்கடுக்கின்றதே கையும்வலிக்கின்றதே
மேனும்நோகுகின்றதே ஐயையோ-ஐயையோ (வா)

தாங்கமுடியுதில்லை தவிக்குறேனென்னசெய்தால்லை
சங்கடியேன்பாலையில் ஐயையோ-ஐயையோ (வா)

ராஜரீகம்செய்யும்நாளில் நானெவரையுமிவ்வண்ணம்
தேசமிதுசெய்தேனே ஐயையோ-ஐயையோ (வா)

சந்திரவதி விருத்தம்.

ஆகமபரிபாலேந்தா அண்ணலேஅரசர்கோவே
யூகமாமுனிவர்க்குற்ற வலகினையிழுந்துமிந்த
வேகரும்பாலைமீது வேறியர்க்கசுவம்போல
வாகனமாகும்வண்ணம் மலரயன்வகுத்திட்டானே.

சந்திரவதி தரு.

ஆ யென்றன ருமைக்கண்மணியே யென்றமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

வாகனமாகவும்விதியோ ஓமன்னவர்மன்னனே (வா)

அநுபல்லவி.

ஆகமகூத்தி ரையர்க்கிகூனத்தில்
அரிதாகியபரிபாலையில் பெரிதாகியபரிபோலலே (வா)

சரணங்கள்.

காட்டினில்நடப்பதுமரிதேஇந்தக்கனமும்பெரிதே (கா-டி)
குட்டினிலிப்படி தூக்கிக்கொண்டேப்படி
துரிசாகவேவருவீர்சிவ பெருமானதுகருணையிதோ (வா)

சந்திரவதி வசனம்

பகவானே இப்படி வருத்தப்படுத்தினதால் தங்களுக்கு திரவியம் வந்துவிடுமா சுவாமி வேண்டாம் தயைசெய்து வருத்தப்படுத்தாதீர்கள், சொல்வதற்கு கூசி வருத்தத்தை யுணர்ந்து நிற்கிறார்.

(சு-ன்-வ-ம்.) சரி போதும்-போதும்.

அரசன் விருத்தம்.

வித்தகமதியேயென்றன் மின்னிடையாளேசேயே
இத்தனைவருத்தமுற்று வந்ததோர்பாரமில்லை
இதத்தியுங்கள்கண்ணு லேதிட்டுப்பாரீர்நேராய்
எத்தனைவிஷஜெந்துக்க ளிருப்பவையென்செய்வோமே.

அரசன் தரு.

கடையூரீசா வென்னசெய்குவேன் என்றமெட்டு.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

என்னசெய்குவோம் பெண்ணே-யெய்
திணைமிக்காணின் கண்ணே (என்ன)

இன்னுளிதென் தொல்லையே-இதில்
வகமன தில்லையே (என்ன)

எவ்விதம்யாம் நடப்போம்-இதை
எப்போது யாம்கடப்போம் (என்ன)

தவ்விப்பட யெடுத்தே-கொடும்
சர்ப்பந் தீண்டெடுத்தே (என்ன)

நட்டுவாக்காளி கொட்டுதே-மிக
நவியுங்கொடுந் தேள்கொட்டுதே (என்ன)

கட்டெளி கடிக்குதே-தீய
கட்டெறும்பு நைக்குதே (என்ன)



பூரானரணை தீண்டுதே-ஐயோ
பொல்லா அட்டைகள் தீண்டுதே (எ)

காரார்குளவி கொட்டுதே-இங்கு
கடுஞ்செங்குளவி கொட்டுதே (எ)

அரசன் தரு.

ஒருநாளும் பிரியாத வென்றமெட்டு.

இராகம்-முகாரி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

உந்தன் மனைதனி ஆற்றிருக்கா் தாகி-மந்திரி-ஐயோ
இந்த அவஸ்தையில் கேனடைகின்றனே-மந்திரி
எங்கள்விதியினால் யாங்களுழல்கின்றோம்-மந்திரி-ஐயோ
இங்கனம்தியும்வந் தேனுழல்கின்றனே-மந்திரி
வாளரவம்நட்டுவாக்காளி யெறும்புடன்-மந்திரி-ஐயோ
தேளரணைபூரான்தீண்டியே நொந்தாயே-மந்திரி
இத்துயரைக்கண்ணால் ஏதிட்டுப்பார்க்கவும்-மந்திரி-ஐயோ
இத்தலத்திலுடலையா னெடுத்தேனப்பா-மந்திரி

மந்திரி வசனம்.

பிரபூ என்னையோர் பொருளாக நினைத்து எனக்கு அழவேண்டாம் எல்லாம் சிவன்செயல் நடந்துவாருங்கள்.

சந்திரவதி தரு.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

பல்லவி.

பயமாயிருக்குதே படவரவுசீறி-யென்
னிடம்வருகுதே மன்னு (பய)

அனுபல்லவி.

அயனுமெனையிப்படி அவஸ்தையடையும்படி
ஆதியில்மைத்தானே நீதிதவிழ்த்தேனே-மன்னு (ப)

சரணங்கள்.

தவ்விமிகவெருண்டு வெவ்வியகோபங்கொண்டு
தத்தளித்தேகடிக்க எத்தனிக்குதே-மன்னு (ப)

அடியிற்பொடிபட்டதே கொடியவிதங்கெட்டதே
யாதுசெய்வேனிதற்கிப் போதுஅடியவட்குப் (ப)

எங்குபார்த்தாலுமுந்தும் பொங்கும்வல்லிடிஜெந்து
வகமாய்த்திரியுதே மூர்க்கமாய்வருகுதே (ப)

சக்கிரன் விருத்தம்.

கோசலைநாடாண்ட வரிச்சந்திராகேளாய்
கொடுங்காட்டில் நடந்திருகால்நொந்தேனென்ன
பேசவுநீமுதாகின்பிசை ஆக்கிவந்தாய்
பெருங்கருணைகொண்டு வந்தேனுனையோ
மோசமதாய்வலியவிஷ ஜெந்துவந்து
மொய்த்ததன்வாயாற் றீண்டுதென்ன செய்வேன்
வாசமதாய்வந்தவழி பார்த்துச்செல்வேன்
மாமுனிபோன் னில்லையெனவழுத்துவாயே.

அரசன் விருத்தம்.

தங்களைமட்டுந்தானு தழல்விஷந்தீண்டுதையோ
எங்களையுந்தானேயின் விடத்தினிற்றீண்டுகின்ற
தெங்கனம்பாங்களைத்தை யியல்நடவ்வடைகின்றோமோ
அங்கதைத்தேவரீரும் அடைவதுகடமையன்றே

சக்கிரன் விருத்தம்.

என்னசொன்னாயிது நீதியாகுமோதான்
இக்கணமேயெதி பொருளையில்லையென்றால்
அன்னவன்பாலுரைத்திருக்கை செல்லுகின்றேன்
அவன்பாடுன்பா டென்றனட்டும்யாரும்
அன்னவாகனன்விதியால் நீங்களிந்த
அவஸ்தையடைகின் றீர்க ளுங்களோடு
இன்னபடிவந் தவஸ்தைப்படவும்போகா
தெனக்கென்னதீவிதியோ இராஜகோவே.

தேவதாசன் தரு.

ஐயா நக்ஷத்ரய்யாயிந்த வென்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

வாளரவங்கள்சீறியே வருகுதென்பிதாவே
தேளரவைப்பூரம்பிர திரியுதென்பிதாவே
செங்குழவிகருங்குளவி நிண்டுதென்பிதாவே
இங்குவெய்யிற்கொடுமை சகிக்கேனென்றன்பிதாவே
பார்க்கபயப்பகொள்ளுதையோ பாலையென்பிதாவே
யேர்க்கநமக்கிவ்வினையும் இழைத்தாரென்பிதாவே
அடியெனன்னையுந்தாங்களும் அமைச்சுமென்பிதாவே
படிமந்திந்தஅவஸ்தைப் படலாமோவென்பிதாவே
தாகாிந்தச்சதிசெய்திட தகுமோவென்பிதாவே
சாலவதிமறையோன் விதித்தானோவென்பிதாவே

அரசன் தரு.

திருக்கடையூரில்வாச மென்றமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

கதறுதேயென்சுதனே கலங்காதேலோகிதனே (கத)

அநுபல்லவி.

இதமாகவேநமக்கு மேற்பட்டபடிகிடைக்கும்
அதனுள்ளொருசந்தேகம் அல்லவேயுன்றுகழ்கோக (கத)

சரணங்கள்.

இனிமேலிவ்விதத்திங்கு பெய்காதகொபாராங்கு
கனிகள்மலிந்ததுங்கும் காவனப்தோறுதோங்கு (கத)

அங்கணேவோரும்செல்வோம் அரசந்திரத்துகொள்வோம்
வெங்கதிரும்அஸ்தமிக்கும் வேளையாச்சுதேயிதற்கு (கத)

(தே-ன்-வ-ம்.) கல்லு பிதாவே.

——

# கோமதி யாறடையும் பாகம்.

அந்தணரேயருள்மதியே அமிழ்துயோ பான்பெற்றவரேகேளீர்
வெந்தழல்கோர்பாலைதனை வெயிலாலும்விஷத்தாலும் வெப்பமேசிந்தே
சுந்தரனின்வசனது கருணையினால்பாம்பினைமுந்தும் சோலையுந்த
இந்நாளுங்கோமதியா றெய்தினமிங்கின்றிரவு யிருந்துசெல்வோம்

அரசன் வசனம்.

யாமெல்லோரும் இந்த கோமதியாற்றின் கரையில் இளைத்திருந்து காலையிற் செல்லுவோம். சூரியனும் அஸ்தமனமாகும் சமயமாயின.

மந்திரி வசனம்.

பிரபூ இங்கிருங்கள் யான்சென்று நமது பசிதீரும் பொருட்டு காவனத்திலுள்ள கனிகளில் நல்லகனிகளாக கொண்டுவருகின்றேன்.

(அ-ன்-வ-ம்.) நல்லது மந்திரி.

மந்திரி தரு.

இராகம்-ஆரபி-தாளம்-ஆதி.

பல்லவி.

கனிகள்கொய் கிறேன்-பசிக்
களையதுதணியவே காவினில்மேவி (க)

அநுபல்லவி.

இனிமையாகக்கொம்பி னிடம்பழுத்தேகிரம்பி
புனிதமுடனிருக்கும் பொற்புள அற்புதாற்புதமாவின் (க)

சரணங்கள்.

பார்க்கயிருகண்ணுக்கும் பருகவேநாவினுக்கும்
ஏர்க்கருசியைத்தரும் இந்தநறுந்தருவினினுறைபலவின் (க)
குலைகுலையாய்க்கொழுத்து கொம்பினிலேபழுத்து
நிலைகுலையாதிருக்கும் நேர்த்திமிகுத்துள்நீடியவாழை (க)

மந்திரி வசனம்.

அநேகவந்தனம் பிரபூ இந்தப் பூஞ்சோலையிலிருக்கிற பழங்களில் நல்லபழங்களாக வேண்டியமட்டும் கொண்டுவந்திருக்கிறேன் இதை யாவர்களுமருந்தி பசியைத்தீர்த்துக் கொள்வோம்.

(அ-ன்-வ-ம்.) நல்லது மந்திரி.

அரசன் வசனம்.

சுவாமி எனது மந்திரியாற் கொண்டுவரலான கனிகளில் நல்ல கனிகளாகப்பொறுக்கி யெடுத்துத் தங்களுக்காக கொண்டுவந்திருக்கின்றேன் இதைப்புஜித்து தீர்த்தமுமருந்துங்கள்.

சுக்கிரன் வசனம்.

பேஷ் இந்திரஜாலத் கற்றகள்வன் உன்னையல்லது வேறொருவனையுங் கண்டிலன் நான்தோறும் மூன்றுவேளையும் ஷட்ரசத்துடனே போஜனமருந்தி புஷ்டியடைந்த இச்சரீரமானது பாலைநிலத்தின்



நடந்து ருட்டிலும் விஷத்திலும் அவஸ்தைபுற்றதுடனே ரொம்பவும் மெலிவுரலாயினன் இனிகாசிதேசம் செல்வதற்குள் என்ன ஸ்திதியா வேனோ தெரியவராது அந்த விஸ்வாமித்திரனைப்போலவும் உன்னைப் போலவும் காயுங்கனியும் கிளங்குஞ்சருகும் இலையும்புசித்து எனது வயிற்றைவளர்க்கவில்லை ஆனதால் சாதம்கொண்டுவந்து கொடுத்தால் ஒழிய இக்கனியை யருந்ததக்கதல்ல

அரசன் விருத்தம்.

காடுநகருமுனிக் கஞ்சித்துநானடியாக்
காடுதிசைநோக்கி வந்தமைநீகண்டிலையோ
வாடுந்தமியேன் விருந்திப்போய்ப்பாலடிசில்
தேடும்பரிசளநோ செப்பாய்தருவதற்கே.

(சு-ன்-வ-ம்.) ஆ ஆ அப்படியா நல்லது நல்லது.

சந்திரமதி வசனம்.

சுவாமி யாதொரு கல்நெஞ்சாகிய விஸ்வாமித்திரமுனிவரது நெஞ்சம்போல் வலிதாகிய நெஞ்சோ உம்முடைய நெஞ்சமும் தயவு செய்து இக்கனிகளையருந்தி புசியைத்தணித்துக் கொள்ளும்.

சுக்கிரன் வசனம்.

நல்லது சந்திரவதி யேதோவெனது பூர்விகவினையயன் காய்கனி சருகுகளை புசித்து உடல்வளர்க்கும்படி யேற்பட்டிருக்கின்றது சாப்பிடுகிறேன்.

பொது வசனம்.

இவ்வாறு அரசன்முதல் ஐவரும் கனிகளையருந்தி தாகசாந்தி செய்து மயக்கமகற்றி அக்கோமதி யாற்றின்கரையில் அமர்ந்திருந்தார்கள் அச்சமயம் விஸ்வாமித்திரன் வருகிறவிதம்.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

இத்தலம்புகழ்பெற்றோங்கும் ஏழ்கடற்கதிபனான
வித்தகன்வருணனெனக்கிவ் வேளையிலுதவிசெய்ய
சித்தமோற்கருணைகொண்டு சீக்கிரமென்முன்பாக
இத்திவருவாயென்ன வெண்ணினேன்வருகுவாயே,

வருணன் விருத்தம்.

சந்ததந் தவம்புரிந்து தன்னைத்தானேயறிந்த
சுந்தரவிஸ்வாமித்ர சுவாமியேசரணந்தாங்கள்
இந்தநற்கோமதிக்கே யிக்ஷணம் வரும்படிக்கு
எந்தனையழைத்தமாற்ற மின்னதென்றியம்புவீரே.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

இந்திரன் றன்சபைதனிலே யியற்றிவந்தசபதந்தனை வேற்றவெண்ணி மந்திரவாளனிந்த வரிச்சந்திரன்பால்மாநகரோ டியாவும்வாங்கித் தந்திரமாய்க்கட னுக்கு முட்படுத்தித்துறத்திவிட்டேன் சலனமுற்று வந்திருக்கின்றானவனும் அவன்மேல்நீ மழைபொழிவாய் வருணமன்னா

(வ-ன்-வ-ம்.) உத்திரவுபோலவே செய்கிறேன்.

(பொது-வசனம்.) இவ்வாறு மழைபொழிந்தன.

அரசன் விருத்தம்.

மண்டலமுமந்தரமு மைபோலிருள்மூடி
அண்டபகிரண்டமதிர வெடித்திடித்துக்
கொண்டல்படர்ந்து கொடுங்காலடித்தூவ
கண்டமதிரமழைக் காலூன்றிவீழ்ந்தனவாம்.

அரசன் தரு.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-சாப்பு.

பல்லவி.

மழையோ பொழியுதையோ-அடி
மங்கையே இங்கேயே (ம)

அநுபல்லவி.

பிழையென்னசெய்தோமோ பேருலகினில்யாமோ
தழைமேகம்வழுங்கூடி சார்ந்தொருமுகமாய்நாடி (ம)

சரணங்கள்.

மண்டலமும்நடுங்க விண்டலமும்நடுங்க
எண்டிசையும்நடுங்க இருள்மூடியேகலங்க (ம)

காற்றடிக்கும்கொடூரம் சருகவொன்றுதிக்கேறும்
ஏற்றமாகமின் வெட்டி இடியிடித்தேபதட்டி (ம)



முனிசெயும்மாயமோ முதல்வனுபாயமோ
இனியிதைஎவ்விதம் யாம்சகிப்போமிவ்விதம் (ம)

அரசன் விருத்தம்.

பெருநிலம்நடுங்க பெய்திடுமழையுமித்தத்
தருணமோவிடமாட்டாது தாகமேயிருக்குதாமால்
அருநதிபெருகுமுன்னம் அக்கரையனுகவேண்டும்
வருகுவீர்தயவுசெய்தே மலரடிசரணம்சுவாமி.

சுக்கிரன் விருத்தம்.

அடாவரிச்சந்திரா நெஞ்சிலச்சங் கிஞ்சிற்றுமின்றி
விடாமழைதனில்நடக்க வேண்டுமென்றுயிப்போது
சடாரிஷிபொருளுக்காய்நீ சாருமூர்தோறுமுன்றன்
உடன்வரமின்றனுக் குக்காரயாதுறுதாய்.

அரசன் விருத்தம்.

பொன்னடிசரணமெங்கள் புகரர்கோவேகேளும்
என்னகரிற்குஞ்செல்லேன் இடர்வனம்விட்டுக்காசி
நன்னகர்தனையடைந்த நாளிலேயுமக்குயானும்
சொன்னவப்பொருளாயிவேன் சுறிதமாய்வருகுவீரே.

சுக்கிரன் வசனம்.

நல்லது புறப்படு சீக்கிரம்.

அரசன் வசனம்.

பெண்ணே சந்திரமதி என்கரத்தைப் பிடித்துக்கொண்டு நடந்துவா.

(ச-ந்-தி-ம்.) அப்படியே வருகிறேன்.

அரசன் வசனம்.

சத்யகீர்த்தி தேவதாசனை தூக்கிக்கொண்டுவா.

(ம-ரி-வ-ம்.) உத்திரவுபோல.

அரசன் தரு.

பஞ்சமாபாதகியானேனே யென்றமெட்டு.

இராகம்-பரசி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஐயோநடந்தென் னுடன்வருவீரோ
அக்கரைசேரவே அக்கரையாகவே

மைபேரிருள்கவிந்து மழைபெய்யுதே
வழிதெரியவில்லையே பழிவினைத்தொல்லையே
காலால்நடவிவ்வழி காண்பிரோ
கட்டைகளிடறுதே கவிந்தவேரிடறுதே
ஆலாலங்கொள்ளரவு அடிக்குதுதே
அடர்ந்திடிபிடிக்குதே படர்ந்தகாற்றடிக்குதே
இதுதானேஇன்னதியின் யிக்கரையே
இறங்கிநடந்திடுவோம் இதனைக்கடந்திடுவோம்
அதிவேகமாகவெள்ளம் வந்திட்டதே
அருகினிற்கூடியே வருகுவீர்நாடியே
இங்கேதண்ணீர் விரைவாய் இழுக்கின்றதே
என்னுபாயஞ்செய்வோம் எவ்விதமாமுய்வோம்
அங்கேசெல்வோமோ செல்லமாட்டோமோ
அதினுமிருக்கட்டும் ஏகிடுவோம்நீர் மட்டும்
மாதவன்பாதமதை மறவாதீர்
வல்வியவினை தீர்ப்பான் எவ்விதமுங்காப்பான்
வேதனைநாமு மிகவடைந்தே
மிக்கமின்னொளியினு விக்கரையடைகிறோம்.

அரசன் விருத்தம்.

மிக்கமாமதியேதூய மீன்விழியாளேசேயே
தக்காமாமறையோன்றன்னைச் சரண்புரிந்தழைத்துக்கொண்டு
புக்கனுமாற்றில்நீந்தி புலம்பியேயவனையுற்று
இக்கரைவந்தடைந்தோம் இனிப்பயமில்லைத்தானே.

அரசன் விருத்தம்.

தேவியேசேயேபுத்தி திகழுமந்திரியேமிக்க
கானினில்விலங்கினங்கள் கனதிரளாகக்கூடி
தாவியேகூவியார்க்கும் தன்மையைப்பாரீர்ஆமால்
மேவியகங்குல்நீங்கி விடிந்தபின்செல்குவோமே.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

அலைகடல்சூழுமிந்த அகிலமீதானைநோக்கி
நிலைபெறச்செய்ததான நீள்தவமகிமையாலே
தலைமேசெரிவ்வனத்தில் தூவியேயென்றும்வாழும்
மலைநிகர்வேதாளங்கள் வந்திடவேண்டுந்தானே.



225 வது பக்கம் வேதாளம்வருகிறபாகம்



# வேதாளம் வருகிறபாகம்.

வேதாளம் விருத்தம்.

படியெலாம்புகழு மதிபரமனைநோக்கிமேனாள்
கொடியமாதவம்புரிந்த கௌசிகமுனியேபோற்றி
கடிமலர்வனத்தினின்றுத்திரி காலத்திற்றேவிரிங்
கடினமையவரவழைத்த காரணமருள்செய்வீரே.

வேதாளம் வசனம்.

முனிபுங்கவரே இக்காலத்தில் எம்மையழைத்த காரணம்யாது.

முனிவர் விருத்தம்.

நல்லதுவாரீர்வேதாளங்களே நவிலக்கேளும்
சொல்லருமரிச்சந்திரனுடன் சுதன்மதிமனைவியோடே
வல்லவோர்மறையோனுடன் வந்திருக்கின்றானிங்கே
வெல்லருமவன்பாற்சென்று வெருக்கொளச்செய்துமீள்வீர்.

(வே-ம்-வ-ம்.) உத்திரப்படியே செய்கிறோம்.

பொது விருத்தம்.

பாதகமுற்றெழு பைம்பொழிற்கண்ணி
வேதமிருந்தவ ரெய்தியகாலில்
மாதவனேவிய வன்கணபேயும்
பூதமும்வந்து புகுந்தனவன்றே.

இதுவுமது.

பேயருந்தசை யானையின்வெளிச்
செய்யவருந்தசை தின்குவன்பரனித்
தையலருந்தசை தம்பினெனக்கிரி.
பையவினைத்தசை பற்கொளிகென்னும்.

இதுவுமது.

சென்பினடக்கு செதிற்றிவர்தம்முள்
கொன்பினெமித்தசை கூறுதுமென்று
தின்பினினைத்தனை செப்பினெனப்போய்
பின்முன்னெருங்கின பேயொடுபூதம்.

வேதாளம் விருத்தம்.

மாசா யபாக்கன்பாரும் அருளனைத்தன்னிலெந்து
பேரதிதிறமுற்றுப் பெருச்சிதன்னில்வந்திர்
போதாயுங்கட்குற்ற பேசொன்னவூர்தானென்ன
சாரமாயுரைக்கவேண்டும் தவதிறல்விடமாட்டேனே.

வேதாளம் வசனம்.

யாரடா இவ்விடத்தில் இந்துபேர் வந்திருக்கின்றது உங்கள் பெயர்யாது ஊர்யாது சொல்.

அரசன் விருத்தம்.

யானிருந்ததுவயோத்தி அரிச்சந்திரனென்பேர்ந்த
மானினியெந்தன்பெண்டு மதியிவரிவனென்பாலன்
மானிலம்புகழுமென்பின் வந்தமாமறையோரின்னோர்
வானிலமளாவிநிற்கும் நின்பெயர்வழுத்துவாயே.

அரசன் வசனம்.

யான் அயோத்தி என்பெயர் அரிச்சந்திரன் இவள் என்மனைவி இவன் என்பாலன் இவர் என்மந்திரி இவர் என்னுடன்வந்த பிராமணர் நீயாரு உனது விவரம் தெரிவிப்பாய்.

வேதாளம் விருத்தம்.

விவரம்யான்சொல்வேன்கேளாய் வேந்தர்கள்வேந்தேயிந்த
நவமுறும்வனத்தினுக்கு ராஜன்யான்பேர்வேதாளம்
புவனமேழ்புகழயோத்தி புரந்தநீமனதில்மெத்தக்
கவலையுற்றிங்குவந்த காரணம்யாதுசொல்வாய்

வேதாளம் வசனம்.

கேளாயரசனே இவ்வனங்களை பரிபாலித்து வருவதான ராஜன் யான் என்றுமதேயமோ வேதாளம் யாதொரு அயோத்தியாபுரியை அரசாகதி செய்துவந்த நீ இவ்விதவேஷமடைந்து மிகவும் மனக்கவலையுற்று இங்கேவந்த காரணம்யாது.

அரசன் விருத்தம்.

கோசிகமகரிஷிக்குக் கொடுக்கவேண்டியபொருட்காய்
காசிமாநகருக்கேக கருத்தினிலெண்ணிவந்தேன்
வீசியமாரிபெய்த விசையிறைப்பொறுக்கமாட்டா
தாசிலாவிக்கானக்கி அக்கரைவிட்டுவந்தேன்.

அரசன் வசனம்.

கேளாய் வேதாளமே விஸ்வாமித்ரமுனிக்குக் கொடுக்கவேண்டிய திரவியத்துக்காக நாட்டைவிட்டுமழையிலுலவல்லதயடைந்து இக்கானகம்சேர்ந்துகாசிநகரைநோக்குகின்றேன் நீ என் கேட்கின்றாய்.



வேதாளம் விருத்தம்.

நல்லதுமன்னகேளாய் நமக்குறும்பசியின்றன்மை
சொல்லவும்போகாதாமால் சொகுசுடனுன்பால்நிற்கும்
வல்லபார்ப்பனனையென்றன் வாய்க்குணவாகத்தந்தால்
சொல்லரிதாமுனக்கு சுகிருதங்கோடியாமே.

வேதாளம் வசனம்.

அரசனே யிப்போது எனக்குண்டாயிருக்கின்ற பசியின்றன்மையை என்னொரு நாவால்சொல்ல சாத்தியப்படாது யாதெனில் இதோ உனதருகில் நிற்பதான பிராமணனை என்வாய்க்குணவாகத் தந்தால் உடனேபுசித்து பசியைத்தணித்துக் கொள்வேன் இவ்வளவு உபகாரம் எனக்கு நீ செய்தால் இதன் மூலமாக உனக்கு ரொம்பவும் புண்ணியமுண்டாகும்.

அரசன் விருத்தம்.

எங்களில்யாரைபேனு மிப்பொழுதுன்பசிக்கி
இங்களமுன்னிலெற்கு ரொம்பவுந்ரசமதங்கான்
துங்கமாய்நானிருக்கத் தொல்மறையோனைநீதான்
பங்கமேசெய்கொடுக்கேன் பத்திரம்வனவேதாளா

அரசன் வசனம்.

நானிருக்கஅன்னவனைக் கொடுக்கேன்பத்திரம்

வேதாளம் விருத்தம்.

மன்னவனென்றுகொஞ்சம் மனத்தினுள்மதித்தன்பாகச்
சொன்னதைத்தடுத்துமெத்த துடுக்குடன்பேசலானாய்
என்னடாவுன்றிராணி எனக்குநீயெந்தமட்டு
உன்னருங்காத்திற்பஞ்சா பூதமேவனுணருவாயே

அரசன் விருத்தம்.

தன்னவனென்டத்திற்கும் ராஜனாயிருக்கவென்னை
உன்னருங்காத்திற்பஞ்சா பூதமேயென்றுவீரம்
சொன்னவேதாளாவுன்றன் சூரத்தனமென்ன
முன்னமேவாடாபோற்குன் முனைதனைப்பார்க்குகின்றேன்

அரசன் தரு.

இன்பமாயின்று மருவிடவருவாய் யென்றமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ரூபகம்.

பல்லவி.

வாடாநீபோராட என்னுடனே-மணி
வாளாலுனைவெல்வேன்வே தாளாவிளைவில்லெதிரே (வா)

அநுபல்லவி.

நீடாகிருதியாய் நின்றாலுறுதியாய்
நின்னைக்கண் டற்சேவெனை
உன்னிக்கொண் டனையோ அடா (வா)

சரணங்கள்.

வேண்டாமரியாதையாக வுன்றன்குலத்துடனே-சேர்ந்து
மெத்தச்சவுக்கியமுற் றிருப்பதுன்றன்கடனே
வண்டாநீதுள்ளுறாய் இல்லாதைவிள்ளுறாய்
இதுவோர்வீரத்தொடுசேர்ந் ததுவோஒடித்திரிகுறாய்(வா)

அச்சமுற்றேடுடுவே னெனவும்மதித்தாயோ-எங்கள்
ஐவரையுங்கொன்ற ருந்தவெனநினைத்தாயோ
இச்சணங்கொன்றுன்னை எகமாயிங்கனை
இருக்குங்கூளிக்கிறையே சுருக்கில்த்தருவேனெதிரே(வா)

அரசன் தரு.

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஆடாவுன் பேருர்கூறடா-மிகு
ஆக்ரமத்துடனேமாப ராக்ரமஞ்செய்கின்றவனீ (ஆ)

அநுபல்லவி.

பாரடாமனத்திடமே சேரடாபதிதடமே
பாவியெந்தன்முன்னேவந்து தாவிநிற்குகின்றவனீ (ஆ)

சரணங்கள்.

கோசிகர்கடனுக்காகக் காசிசெல்லுகின்றவென்னைக்
கோஷ்டிசெய்துமறிக்கிறாய் குடிகேடா
மாசிலாதசனடி நேசமாய்ப்பணியவந்தேன்
மார்க்கந்தனைவிடடா மூர்க்கந்தனைக்கெடடா (ஆ)



அண்டபகிரண்டமுத லெண்டிசைநவகண்டங்கள்
ஆண்டவரிச்சந்த்ரனென வறியாது
வண்டனேயெனைவணங்கு கொண்டுவாதுசெய்தவுன்னை
வாட்டியேவளமுறுமிக் காட்டினூடுசெல்லுவேன் (ஆ)

மற்றுமென்மந்திரியுடன் மாதுமகனைத்தந்தாலும்
மறையவனைக்கொடேனே மதிகேடா
கொற்றவனனைவெனையுன் கொடியபசிக்கிரையாக்கிக்
கொண்டிந்தவிடத்தைவிட்டுக் குணமாய்ச்சென்றிடடாநீ (ஆ)

இந்தக்கானகங்களெல்லா முந்தன்காவலென்றிருந்தால்
எதடாவழியுமிங்கே யெனைமூடனே
குந்தகஞ்செய்யாமலேநீ அந்தமாய்விலகாயானல்
இந்தவாளினாலேவிசி யெந்தனுள்மகிழ்ந்திடுவேன் (ஆ)

ஷை வசனம்.

அடா கொடியவேதாளமே மரியாதையாக வுயிர்பிழைத்தோடிப்போயிடுவாயாக இல்லாவிடில் இவ்வாளுக் கிரையாக்கிவிடுவேன்.

வேதாளம் வசனம்.

என்ன ஆச்சரியம் எண்டாநீ என்னுடையவனத்தில் வந்ததுமல்லாமல் என்னைமிகவும் உதாசனமாகப் பேசவுந்துணிந்தனையோ நல்லதிருக்கட்டும் இதோ இருக்கும் இப்பிராமணனைத்தின்று என்பசியைத்தீர்த்துக்கொண்டு பின்னடி உங்களையுந்தின்று களிப்படைகின்றேன்.

நக்ஷத்ரையன் வசனம்.

ஐயையோ அரிச்சந்திரா நானென்னசெய்வேன் நீ என்னையேச்சிழுத்துக்கொண்டுவந்து இந்த வேதாளத்துக் கிரையாகக்கொடுத்துத் தப்பித்துப்போகலா மென்றெண்ணியோ இந்த அளப்படுத்தாய் அடேசண்டாளா நீ முனிவர்பொருளைக் கொடுக்கவேண்டாம் என்னைமட்டும் பாதுகாத்துக்கொள் உனக்குக் கோடிசுகிர்தமுண்டு பயமாயிருக்கிறது.

அரசன்வசனம்.

பிரபூ அஞ்சவேண்டாம் இவ்வேதாளத்தை இதோ கொன்றுவிடுகிறேன் சமீபத்திலிருங்கள்.

(நக்ஷத்திரன்-வ-ம்.) நல்லது அரிச்சந்திரா.

அரசன் தரு.

இராகம்-மமாசு-தாளம்-ஆதி.

பல்லவி.

போடாவேதாளமேசமர் பொருதாதிருணமேஅடா(போ)

அநுபல்லவி.

நாடாதட்டாகுடி கேடாஅடாதது
கூடாதடாயிங் கூடாதடாமதி
மூடா மோடா ஈடா சோடா ஓடிப் (போ)

சரணங்கள்.

வாழ்ந்தநகரயோத்திநகல் வரம்பெறுஞ்சத்யகீர்த்தி-வா
சூழ்ந்தஅரிச்சந்த்ர துரைபுவிக்கிந்திரன்
தாழ்ந்தவர்க்குபகாரன் சத்ருவுக்கபகாரன்
சத்திபகுணமெனைஸ்த வுத்தியம்புரிந்திதவரும்
நித்தியும்பணிவரைத் துத்தியமுடனறியா
தம்பா-ஒம்பா-டம்பா கும்பா-எம்பிப்(போ)

காசிநீகசந்தனக்குச்செல்லக் கடுகிவந்தேனெனக்கு-கா
விசிநடக்கவழி விடுகின்றுபாபழித்
தோசியல்லதுயுத்தம் தொடுக்குகின்றுயாயுத்தம்
சொல்லுஇரண்டிலொரு சொல்லுமெதிர்பொருதி
நில்லுஅல்லாவிடிலோ செல்லுமரியாதையாய்
கட்டு-மட்டு-கெட்ட கெட்டி-பெட்டிப்(போ)

கோசிகர்க்கென்புவி செங்கோல்நகர்நிதியுதவிக்-கோ
தேசிகரவர்கடன் தீராதநாற்பா
தேசிப்போலகொர்ந்தே காசியைநோக்கிவந்தேன்
தீயவினையவ்வித மேயவுறினுமெந்தன்
ஆயடனவலிமை போயதுமோஅடா
திண்டா-மிண்டா-முண்டா கிண்டா-ஒண்டிப்(போ)

அஷ்டதிக்விஜயம் செய்திட்டவெனக்குப்பயப்-அஷ்
பட்டடவிழிலோடா கஷ்டஜென்மமேவாடா
இஷ்டமுடன்பணிந்தே ஏகாவிடிவினிநீ
எதோபாரடாவுந்தன் மதோன்மதத்தையொழித்
தமோகமுருக்கிறை இதோசெய்குவேன்வாளால்
எத்தா-பித்தா-கித்தா சுத்தா-உய்த்துப்(போ)

1148



அரசன் வசனம்.

அடாவேதாளமே மரியாதையாய்ப்போய்விடு.

வேதாளம்-வசனம்.

நல்லது நீ எவ்வளவு அரட்டினாலுந் தானென்ன பார்க்கின்றேன் உனது தைரியத்தையும் எனது சாமர்த்தியத்தையும் செய் யுத்தம்.

அரசன் வசனம்.

வீண்வார்த்தையாடாதே வழியையுமறிக்காதே இப்பொழுது உன்னை எமலோகம் சேர்த்துவிடுவேன் மரியாதியாகச் செல் அப்பால்.

(வே-ம்-வ-ம்.)போவதில்லை செய் யுத்தம்.

அரசன் தரு.

அன்னமே ஓ செழுந்தேனே யென்றமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-அடதாளம்.

பல்லவி.

வீணிலேன்டாமாண்டுபோறாய் வேதாளமேநீதான்கூறாய் (வீ)

அநுபல்லவி.

ஆணவமேனோ அதிப்புகழ்காரோ
அகீர்த்தியமாமோ அரட்டிடப்போமோ
அடடா நடடா (வீ)

சரணங்கள்:

எத்தனைசொல்லியுமையோ இன்னும்தெரியவில்லையோ
புத்திபற்றவனே பொறுமையற்றவனே
புதுமையுற்றவனே புன்மைபெற்றவனே
போடா மூடா (வீ)

அரசன் தரு.

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

துள்ளாதேஎன்முன்னே துணிப்பேனுன்னை (து)

அநுபல்லவி.

நன்விராவிலேசி காடிக்கைவிசி (து)

சரணங்கள்.

சொன்னதைமறந்தாய் துடுக்காகவந்தாய்
வின்னமுறந்தோசி வெட்டிடுவன்சீசீ (து)

# அரசன் காசியை நாடும் பாகம்.

அரசன் விருத்தம்.

அடியிடையாளேசேபே சுந்தரமதியேகேளீர்
கொடியவேதாளந்தன்னை கொன்றனன்வாளினாலே
விடியுநேரந்தானுச்சு மேதினிபுகழுங்காசிக்
கடிநகர்க்கேகுவோம்நீர் களிப்புடன்நடந்துவாரீர்

அரசன் தரு.

சொன்னபேச்செங்கே யென்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ரூபகம்,

பல்லவி.

நடந்துவாபெண்ணே யென்பின் (நட)

அநுபல்லவி.

படர்ந்தயிவ் வனந்தனையே
கடந்திடுவோம் தொடர்ந்தென்னையே (நட)

சரணங்கள்.

பூருவவினையினாலே புவியையிழந்தடவியேலே
சிறுஅடிகள்நொந்து சிந்தைநைந்துநடக்கலானோம் (நட)

வருத்தமிகவடையாதே வாழ்வைநினைந்திடையாதே
திருவரனம்முகம்பார்ப்பான் தீவினைகொய்தென்றுங்காப்பான் (நட)

சத்தியமீதேயென்றும் சாஸ்வதமாகுமின்று
பத்திதனைமறந்திடாது பாங்குடனேயிப்போது (நட)

பொது வசனம்.

இவ்விதம் அரசன்முதல் இவரும் கடவுளைத்துதித்து வனத்தில் நடந்துவரும்போது விஸ்வாமித்திரன் அக்கினிபகவானை யழைத்துச் சொல்லும்விதம்.

முனிவர் விருத்தம்.

தக்கிஷமாகத்தேவர் காவன்சமுகந்தன்னிற்
புக்கியான்றீரமாகப் புகன்றவச்சபதமின்று
முக்கியமாகயானும் முடித்திடத்துணையாயெற்கு
அக்கினிபகவானேநீ ரன்புடன்வருகுவீரோ.



முனிவர் வசனம்.

ஏ அக்கினிபகவானே யாதொருதேவேந்திர மகராஜன் சமுகத்தில் செப்பிவந்த சபதம்நிறைவேறும் பொருட்டு இக்காலம் தாம் எமக்குதவிசெய்ய இங்ஙனம் வரக்கோருகின்றனம்.

அக்கினிதேவன் வருகிற தரு.

இராகம் - தன்யாசி - தாளம் - ஆதி.

பல்லவி.

அக்கினிதேவன்வந்தானே ஆரணியத்தில்(அக்)

அநுபல்லவி.

திக்கிலுள்ளோர்நடுங்க திசைநாகங்களொடுங்க
உக்கிரமுனிவன் உன்னியவண்ணமிதோ (அக்)

சரணங்கள்.

உலகில்வசிப்பதான உயிர்ப்பிராணிகட்கமை
நலமுறவோங்கிக்கும் நாதனுகியநீத(அக்)

அக்கினி விருத்தம்.

பூரணப்பொருளைக்கண்டு புகழ்ந்தருந்தவம்புரிந்த
காரணவிஸ்வாமித்திர கனவானேபோற்றிபோற்றி
வாரணமுதலாய்வாழும் வனத்தகமென்னையழைத்த
காரணமின்னதென்னக் கழறுவீர்கருணைசெய்தே.

அக்கினி வசனம்.

அநேகவந்தனம் முனிசிகாமணியே என்னையழைத்த காரணம் யாது.

முனிவர் விருத்தம்.

தனற்கடவுளேயுமக்குக் கழறுவேனிக்
கடிவனத்தைப்பொடிபடவே யெரித்துக்காசி
நகர்க்குவருமயோத்தி யரிச்சந்திரராஜன்
றனையுமனைவியையு மகவினையுமன்னோன்
மனக்கருணைக்கிசைந்த மந்திரியையுந்தீயிப்போ
வழிமறித்தேயாக்கிரமித்துச் சக்கிரனோடு
எனக்கினியோர்தடை யியம்பாதினிமேலைத்
திடவாய்தவருமற் றடுகுவாயே.

அக்கினி விருத்தம்.

மன்னனேநெறியில்மிக்கோன் மங்கையோகற்பின்மிக்காள்
இன்னதன்மையனையின்று யான்சுடமுடியாதாமால்
சொன்னவையறுக்காவன்னத் தொலைவினிலிருந்திப்போது
பொன்னகர்வரையுயர்ந்து பங்கயாசனேறுவேனே.

முனிவர் வசனம்.

அக்கினிபகவானே நீரிப்போதுரைத்த வண்ணமே செய்யும் யான் சென்றுவருகின்றேன்.

(அ-னி-வ-ம்,) கவ்வுநமுனிகோமனிரோ,

பொது வசனம்.

இந்தவிதமாக விஸ்வாமித்திரன் சொற்படி அக்கினிதேவன் அவ்வனத்தைப் பொடிபடுத்தி ஆகாயம் வரையுயர்ந்தெரியலானான்.

## அக்கினியாற்றுப் பாகம்.

அரசன் விருத்தம்.

ஒவ்வொருமைச்சேசேயே வொன்றொடியாளெனினீர்
அவ்வபோத்திலைக்கடந்தே யண்டவெளியெட்டுமெனத
எவ்வனத்திலுமிவ்வண்ணம் யாமுமேகண்டதில்லை
இவ்வனத்திற்புகைதெறுகாரணமேயாதோதான்

அரசன் தரு.

என்னமாயமோ தெரிகிலைக்கைபெண்ற பெட்டு.

இராகம்-கருப்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

என்னமாயமோ இந்திதிலைக்கை வந்ததிபஅபாரஞ்சே (எ)

அநுபல்லவி.

தீயமுனிக்கதோசந்திர சேகரன்சொல்லிதோ
வயனின்று இன்னதென்று
யானறியேனடி காணகரிலேலியோ (எ).

சரணம்.

மண்டலத்திலிருந்தேஅந்த வானமளவையுயர்ந்தே
விண்டவண்டாண்டம் வெடிக்கும்படியார்த்து
மண்டவிட்டெரிக்கும் வெங்கனல்தீதோன்றுதுலேயோ (எ).



விலங்கினம்பதறிவாய் விட்டுமிகக்கதறி
கலங்கியோடுதே கண்டுமெய்வாடுதே
இலங்கும்பறவைக ளிறக்கச்சுடமூழ்ந்ததையோ (எ)

எவ்விதம்கடப்போம்இதை எப்போதுகடப்போம்
இவ்வினைக்குநாம் என்னசெய்குவோம்
இவ்வழவெவ்வழ லினைத்தெரிகின்றதடையோ (எ)

அரசன் விருத்தம்.

அன்னமேமயிலேமானே ஆசைரஞ்சிதமேஇந்தப்
பின்னமிலாவனத்தைப் பிடித்தெரிகின்றதைப்பார்
இன்னவையூழித்தீயோ வெந்தீயோவறிகிலேன்யான்
என்னமாயிதைக்கடந்தின் றேகுவோங்காசிக்கையோ

அரசன் வசனம்.

பெண்கள்சிகாமணியே இவ்வனத்தைப்பிடித்துக்கொண்டு அஷ்டதிக்கிலும்பரவி அண்டம்வரையுயர்ந்தெரிவதான இந்நெருப்பு எந்நெருப்போ அறிகிலேன் இனியெவ்விதம் காசிக்குச்செல்வது.

சந்திரவதி வசனம்.

பிராணரக்ஷகா இந்தநெருப்பின் தன்மையை எவ்விதமாகச் சொல்வேன் ஒன்றுந்தெரியவில்லையே ஐயா இது எவர்செய்த கபடமோ அறிகிலேன்.

தரகன் விருத்தம்.

அருமைபசியாலழன்றே யண்டகோளத்தைத்தாவித்
திருந்தவேயெரியுந்தீய செந்தழலானதிந்த
இரும்புவியரசர்வஞ்சித் திலொருவினையாவ
தருந்திறலலகுவிணை யகன்றிடாதறிவாய்வேந்தே.

வசனம்.

கேளாய் அரசனே அரிதானபசியினாலே கொதித்து யாதொரு அண்டகோளத்தைத் தாவியெரிவதான இந்த நெருப்பானது புவியை யரசாட்சிசெய்யும் சூரியகுலத்தரசர்களில் ஒருவினை யுண்டாலல்லது இது விலகப்போகமாட்டாது இதுநிச்சயம்.

அரசன் தரு.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

பொன்னேசுவமணியேபனைப் பூங்கிளியேமாங்குயிலே
பொறுப்பது மற்புதச்செழும்(பொ)

அநுபல்லவி.

இன்னெருப்போருயிரைத் தின்னுதணியுமானல்
யானொருவனையிறப்பேன் தானுஞ்சேயுந்தரையில்வாழும் (பொ)

மந்திரி விருத்தம்.

என்னுயிர்காத்துவந்த இறைவனேபானுகோவே
இன்னுரைகேளும்நிற்கு யான்றுணையாயிருக்க
நின்னுயிர்விடுதல்நல்ல நீதியோநில்லும்நில்லும்
துன்னுமின்னெருப்பின்மீது சுருக்கில்யான்போய்வீழ்வேனே.

அரசன் ஷெமெட்டு.

என்னுசைமந்திரியேஐயோ ஏகாதீர்நில்லும்நில்லும்
வாகாயுரைத் திடக்கேளும் (எ)
மன்னர்களையல்லாது மறறோருயிரையிந்த
வன்னமுள்ளவன்னியுண்ணுதென்னவுங்கேட்டேனிவரால் (எ)
நின்னுயிரைவிடுக்கிலிப்போ தென்னுயிர்விடுவேனுமால்
தன்னுயிர்விடாதீர் சொன்னேன் (எ)
இன்னமிருவோரும் இப்போதிறந்தோமானல்
இவரையோர்பதியிற்சேர்க்க எவர்துணைபுரியம்பும் (எ)

மந்திரி வசனம்.

அரசே தாம் சொல்வது நியாயமாகிலும் யானிருக்க தாம் இந் நெருப்பில் வீழ்வது நலமல்ல யானும் விழவொட்டேன்.

சந்திரவதி தரு.

இராகம்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

வருந்தாதீரொன்றன்மன்னு வழுத்துவேன்கேளுமின்னுள்(வரு)

அநுபல்லவி.

திருந்தும்விவேகமுனி செய்கபடமாமிதினி(வரு)

சரணங்கள்.

மாந்தராலிறத்தல்வாழ்தல் மாதர்களுக்கென்றுபன்னூல்
ஆய்ந்தபெரியோருரைக்க அன்புடன்கேட்டிருக்கின்றேன்(வரு)
தானுமந்திரியுமின்று தழலில்வீழ்தல்தருமமன்று
யானவந்துவீழ்வேனிவிர் இன்னுயிர்பிழைத்துவாழ்வீர்(வரு)



நாடுநகரையிழந்து நாங்கடனுக்காளாயிந்தப்
பாடுபடும்படிஅயன் படைத்தானிதற்கென்செய்வோம்(வரு)

சந்திரவதி வசனம்.

பிராணரக்ஷகா தாம் இந்நெருப்பில் வீழ்வது ஞாயமன்று யானேவிழ்வேன் தாமும் மந்திரியும் தநயனும் விழவேண்டாம்.

தேவதாசன் தரு.

இராகம்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

நில்லுநில்லு மென்றன்தாயே
சொல்லும்சொல்லைக் கேட்பாய்நீயே (நில்)

அநுபல்லவி.

புல்லறிவுடையேனுன்றன் பொன்னடிபணிந்தேன்சற்று(நில்)

சரணங்கள்.

பேருலகில்நீங்களென்னைப் பெற்றதந்தாகப்பின்னை
சேருந்துன்பங்கள்யாவையும் தீர்த்துதவிசெய்பவன்றே(நில்)
பூருவகருமத்தாலே புத்திகேடியான்முன்னுலே
நேருடனேசென்றுபற்றும் நெருப்பினில்வீழ்வேன்சற்று(நில்)
சஞ்சலம்நெஞ்சிற்கொள்ளாது தைரியமுற்றிப்போது
எஞ்சலிலுயிர்பிழைத்து வருவீர்நீவீர்சற்று(நில்)

சந்திரவதி விருத்தம்.

அப்பணிவேணியாள னருள்வரத்தாலுதித்த
கப்பகக்கொழுந்தேதிவ்ய கதிர்குலமணியேயின்னும்
செப்பரும்பல்வீழ்ந்தில்லாய் திருமுலைமறந்தாயில்லை
அப்பவித்துணிவுமிந்த அறிவுமெங்கடுத்ததின்றே,

சந்திரவதி தரு.

மன்னனைக்காணுமல் மயங்குறேன் என்றமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ஏகம்.

பல்லவி.

மேவும்அக்கினியைவிலக்க விடைகொடுப்பீர்(மே)

அநுபல்லவி.

தேவலோகம்புகழ சென்னிமகுடந்திகழ
பூவல்லையபாக புரிந்தபுரந்தரனே(மே)

சரணங்கள்,

மண்டலத்திலிருந்தே வானம்வரையுயர்ந்தே
மண்டலமிட்டெங்கும் வனைந்துகொழுந்துவிட்டு(மே)

புண்ணியகாசியடுத்து போதன்கடனைக்கொடுத்து
கண்ணியமுடன்வாழ்கக் கற்பின்மகத்துவத்தால்(மே)

வருத்தமிகக்கொள்ளாதிர் வழுத்துமொழிதள்ளாதிர்
திருத்தமாய்மகிழ்வுற்றுச் சீர்த்தியாய்வாழ்த்திடியே(மே)

சந்திரவதி வசனம்.

அரசே, எனது கற்பின்மகத்துவத்தால் இந்தஅக்கினியை யான் விலக்கும்பொருட்டு தாம் விடைகொடுக்கக் கோறுகின்றேன்.

(அ-ன்-வ-ம்.) நல்லது ரஞ்சிதமொழி வஞ்சியே.

## சந்திரவதி அக்கினியில்பாயும் பாகம்.

பஞ்சமாபாதகி யானனே யென்றமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ஆதி.

கண்ணிகள்,

அக்கினிபகவானே வருத்தாதே
ஐயவுமைப்பணிந்தேன் அடியவளுந்தாணிந்தேன்
திக்கினிலரும்பவஞ் செய்தேனுகில்
தீங்குபுரிந்தேனுகில் தெய்வத்தைப்போற்றேனுகில்
வேதநெறிகடந்து நடந்தேனுகில்
விருந்தையிகழ்ந்தேனுகில் விப்ரனைவைதேனுகில்
பேதகமாகக்கொலை புரிந்தேனுகில்
பிறர்மனையயந்தேனுகில் பிறர்மனம்நைத்தேனுகில்
பிறங்குங்குருமொழியை மறந்தேனுகில்
பெரியோரையிகழ்ந்தேனுகில் பெற்றோரைநொந்தேனுகில்
அறங்கள்புரிகுவதைத் துறந்தேனுகில்
அருகியர்க்கிடேனுகில் ஆய்ந்துகொல்லுவாய்போய்க்தேன்

பொது வசனம்.

இவ்விதம் சந்திரவதியானவள் அக்கினிபகவானைத் துதித்துப் பாய்ந்தவுடனே இவளதுகற்பென்னும் கொடியதீ நம்மைசுடுமெனப்பயந்து அவ்வக்கினிபகவான் சூரியனைக்கண்ட பனிபோல அடங்கிக் கொண்டனன்.



சந்திரவதி விருத்தம்.

வேந்தர்கள்வேந்தேநின்பால் விடையதுவாங்கிநோக்கி
பாய்ந்தவிக்கணத்திலிங்கே படர்கொடுங்கனலொடுங்கி
வாய்ந்தசூரியனைக்கண்ட மைபிருளெனப்பயந்து
ஓய்ந்ததுவாரீர்காசி யுயர்நகர்சேர்வதற்கே.

வசனம்.

பிரபு, தாம்விடைகொடுத்த அனுகூலத்தால் கொடிதாகிய அக்கினியும் கழிந்துவிட்டன இனி காசிநகர்க்குப் புறப்படலாம் வாரும்.

அரசன் விருத்தம்.

வண்டணிகுழலணங்கே மதிதயன்மகளேயிங்கு
மண்டழல்தணிந்தேவேய்ஞும் வனமெலாம்வாவியாகி
முண்டகங்குமுதநீலம் முளரிகளிறையப்பூப்பக்
கண்டனனுன்றன்கற்பின் காதலியென்சொல்வேனின்றே.

அரி வசனம்.

பெண்ணே உனது கற்பின்மகத்துவத்தை யென்னென்று புகழுவேன்.

(ச-தி-வ-ம்.) எல்லாம் தமது செயலே யாம் ஏதுமில.

(அ-ன்-வ-ம்.) நல்லது நவரசக்குயிலே.

(ச-தி-வ-ம்.) பிரபு, இன்னுமெவ்வளவு தொலைவிருக்கும் காசிதேசம்.

அரசன் வசனம்.

பெண்ணே இனிசமீபமாகத் தானிருக்கும் காசி நடந்துவா.

## காசிதேசஞ்சேரும் பாகம்.

அரிச்சந்திரன் விருத்தம்.

சிருலவுசந்த்ரதயன் றவத்துதித்த
சேயிழையேயெனமனந்த தேவியேகேள்
பெருலவுமயோத்தி கடந்தேகடந்து
பெருங்கானிலெல்லைருபே பிரவேசித்துப்
பாருலவுமங்கை நடை நாடின்றிப்
பழமருந்திப்பசியகற்றிச் சென்றுட்போந்திக்
காருலவுஞ்சோலைவனங் கனிந்துயர்ந்த
காசிநாடுற்றனம் நின்கண்ணுற்பாராய்.

இராக-பூரிகல்யாணி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

தேவியேயதோபாராய்காசி தேசந்தெரியுதேசீராய்ச்
செல்வம்பொழியுதே நேராய்த்(தே)

அநுபல்லவி.

பாவிநாமும்பண்டுசிறக்கப் பண்ணியகொடும்பவங்கள்பறக்க்
தாவியஜென்ம ஸாபல்யம்பெறச்
சாத்திரப்படிகரங்குவிப்பாய் தோத்திரப்படனமுஞ்செபிப்பாய்(தே)

சரணங்கள்.

பூவினிலென்றும்புகழ்ச்சிறுழும் போதன்விஸ்வநாதன்வாழும்
கோவிலின் திருமதிலிற்
கொண்டற்படியெழிலினையே கண்டற்புதமடைகுவையே(தே)

பதுமையுடனேபைஞ்சிகரங்கள் படைத்திலங்கும்பாரகோபுரங்கள்
குதுகலமிகக் கொண்டந்தரத்தைக்
கோபித்தேசமர்செய்தே தாவிச்சோதிநிகழுதே(தே)

இடரிலர்தவெழில்மயனாலே இயற்றியவிமானத்தின்மேலே
படரும்பைம்பொன் பதித்தஸ்தூபி
பகல்மதியெனவொளியிடுதே புகல்பவரொருளர்புவியிசை(தே)

கோட்டைகளுடன்குளிர்வனங்களும் கோமடங்களும்கூர்தடங்களும்
பாட்டையான பன்பூனைகளும்
படைத்துறுமதற்கிணையெதனைப் பகருவதிளமயிலனைய(தே)

அரசன் வசனம்.

பெண்கள்சிகாமணியே ஆதிவிசாலாக்ஷிசமேத விஸ்வநாதபெருமான் வீற்றிருப்பதான காசிக்ஷேத்திரத்தின் சேர்த்தியை எண்ணி என்றனசெய்வேன் கரங்குவிப்பாயடி கமலவதனியே.

சந்திரவதி வசனம்.

பிராணநாயகா விஸ்வநாதன் வீற்றிருக்கும் கோயிலைப்பார்த்து வந்தனம் செய்தேன்.

அரசன் வசனம்.

நல்லது நாயகி இதுதான் கங்காநதி இதின்சிங்காரம் செப்புகின்றேன் கேட்பாயாக.



அரசன் தரு.

இராகம்-காம்சு-தாளம்-ரூபகம்.

பல்லவி.

கங்கையின்சிங்காரம் பார்-டியென்
காதலியே கண்மணியே

அநுபல்லவி.

தங்க அலைகளில் சூழ்செம்மணிகளும்
தூயமுத்துகளும் துலங்கப்புரளுதே
அங்கரையிற்கரு மகில்சந்தனங்களும்
அசைந்தேதமிக அடர்ந்தேஉயர்ந்
திசைந்தேயுறு மியல்பென்சொல்வேன் (கங்)

சரணங்கள்.

நுரைதொறும்புரளுதே
வீரைதொறும்புரளுதே
மரகதத்தொடு
வளரரவொண்முடி
புரதகனன்புகழ்
புனலாடிதோ
கனமாகிய
கூறுவதற்கரிதான
குஞ்சரத்தின் தூய்ய
மீறும்புகழுள்ள
மேவின்மணிகளும்
மாறுதலின்றி
வடிவாயொளி
அடியாருறை
மரையின்மலரினும்
வண்டுகளின்றெளி
வீரைநதியினிடை
மீண்டுசிறைகள்
பொனாயிலாதுயர்
புதர்மணியின்
நிதம்விசிடும்

தண்ணியவண்ணப்பட்டங்கள்-நல்ல
விரைமதுவுண்ணும்வண்டினங்கள்
வயிரத்தினங்களும்
வைத்தரத்தினங்களும்
புஷ்பராகங்களும்
ஒளிவீசுதே
வனமேவிய(கங்)

பலசுவமணிகளும்-மத
கொம்புகளிலுள்ளமணிகளும்
சங்குமணிகளும்
கன்னல்மணிகளும்
மணற்குப்பைகளெல்லாம்
முடுதேசிவன்
கெடிதாகிய(கங்)

புன்னைமரத்திலுமிருக்கும்-கரு
வானலையொலியையடக்கும்
மேவித்தானஞ்செய்து
உலர்த்தும்பட்சுகளுய்த்து
புளினத்தைமறைக்கும்
பதமானது
இதமாகிய(கங்)

தந்திகள்போயிந்தச் சலத்தினில்நின் றகங்களித்து-நீண்ட
தன்கையால்வாரியெறிந் தவராமனியனைத்தும்
சிந்திச்சிதறி எழுந்துவிளங்கொளி
திருந்துமாகாயத்தி லிருந்துபலவெள்ளி
வந்துதிர்ந்தது போலுதிர்கின் றதே
மயிலாடுதே கிளிபாடுதே
குயில்கூவுதே குளிர்சோலைசூழ்(கங்)

அரசன் வசனம்.

பெண்கள்நாயகமே இக்கங்காநதியின் சிறப்பை ஆதிசேடனு ஞும் அறையத்தக்கத்தாகுமோ பார்த்து சந்தோஷமுறுவாயடி இள ங்குயிலே.

சந்திரவதி வசனம்.

பிராணரக்ஷகா இக்கங்காநதியின் சிங்காரங்களைப்பார்த்து ஆன ந்தித்தேன்.

அரசன் விருத்தம்.

அன்னமேமதியேயென்றன் அப்பனைசெப்பக்கேண்மின்
முன்னமேசெய்தபாவ முற்றினுமகற்றவிந்த
நன்னதித்தீர்த்தமாடி நாமனுஷ்டானஞ்செய்து
பொன்னகரணையகாசி புக்குவோம்வருகுவீரே.

வசனம்.

மாதரசே, மந்திரீ, பாலகா, நாம் அக்காலத்திற்செய்த அரும் பாவங்களனைத்தும் அகலும்பொருட்டு இந்தகங்காநதியில் தீர்த்தமா டி அனுஷ்டானஞ்செய்து காசிமாநகர்க்குச் செல்வோம்வாருங்கள்.

(ச-தி-வ-ம்.) தமதுத்திரவுபோலவே.

இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

தீர்த்தமாடுவீர்செய்த தீவினைநீய்ந்திட
ஜென்மசாபல்யம் வாய்ந்திடக்-கங்கை (தீர்)

அநுபல்லவி.

ஆர்த்துநடந்துற்ற ஆபாசமகற்ற
அண்டர்கள்புகழ்பகிரதன்முன் கொண்டுவந்ததண்-கங்கை (தீர்)



சரணங்கள்.

மந்திரசங்கற்பங்கூறி மாலரனைமனதுட்கோதி
மாய்நின்று
இந்திரமுக
எழிலுறு சுருதியின்படியே
பொழிலுறு புனிதவங்-கங்கை (தீர்)

(அ-ன்-வ-ம்.) நீங்கள் தீர்த்தமாடி யாச்சுதா.

(ச-தி-வ-ம்.) யாங்கள் தீர்த்தமாடி யாச்சுது அரசே.

(அ-ன்-வ-ம்.) நல்லது இனி அனுஷ்டானஞ்செய்வோம்.

(ச-தி-வ-ம்.) அப்படியே.

(அ-ன்-வ-ம்.) கண்மணி காசிநகர்க்குச் செல்வோம் வாரும்.

(ச-தி-வ-ம்.) வருகிறோம் அரசே.

---

## காசிநாட்டுச்சிறப்பு.

அரசன் விருத்தம்.

பூவேந்தும்புயசயிலமதிதயனுரின்றிடும்பொற்கொடியேபொன்னூர்க்
காவேந்தும்புகழ்ந்தேற்றுமயோத்தி யரசைநிறைகலைகள்யாவும்
நாவேந்துங்கௌசிகமாமுனிக்களித்து நாமன்பட்டதுயர்கள்தீர
மாவேந்துமலர்த்தேன்கள்நிறைவாவிக் காசிபுரிவளங்கள்பாராய்.

இராகம்-சகானா-தாளம்-சாப்பு.

பல்லவி.

தாவ்ஷமகமுள்ளகாசி நாட்டின்வளங்கலைநின்
தடங்கண்ணுலிங்குபாரம சந்திரவதியே (கா)

அநுபல்லவி.

காட்டின்தருவின்மலர் சூட்டியங்கைஜலம்
காவின்வழியுபர்கழனிகளைத் தேடிவோடுநாடி (கா)

சரணங்கள்.

உழவர்களிதையறிந்தலப்பைகளை உயர்தோளிலுற்சமந்தே
அழகுடன்மனமகிழ்ந்தே எருதுகளை யன்புடனேட்டிவந்தே
கழுருதவேரிற்பூட்டி சன்னறகழிகைக்கோட்டி
கடுகவிடித்தாழ நெடுசமுத்தினமே-சிதறிடுமே (கா)

விரும்பிப்பரம்படிப்பதும் அங்கரங்களால் வித்துகளை விதைப்பதும்
திருந்திப்பயிர்முளைப்பதும் அதனைக்கொய்து சேர்மள்ளியர்நடுவதும்
நெருங்கியேவளர்வதும் நிறைகதிர்பறிவதும்
நெற்களறுப்பதும் நிலத்திலடிப்பதுமே-எங்கினுமே (தா)

வயல்களெல்லாஞ்செந்நெல்களின் மருங்கெலாம்வரனக்கயல்கள்
கயல்களெலாமணங்கள்காவனமெல்லாம் கரியகுற்கொண்டபுயல்கள்
புயல்களெல்லாம்புகையே புகைகளெல்லாமகிலே
புகனுமவ்விலகமந் சந்தனமே-தேவதாரமே(தா)

அரசன் தரு.

இராகம்-தன்னியாசி-தாளம்-ஆதி.

பல்லவி.

கண்ணே சந்திரவதியே
காசிவளம்பாராய் காரிகையேநேராய் (கண்)

அநுபல்லவி.

விண்ணளாவிய சோலைகடனிலே
வண்ணமாகிய மயிலினக்குயிலே
திண்ணமாயிசை பாடுதேயாடுதே
சேவலைத்தேடுதே நாடுதேவாடுதே (கண்)

சரணங்கள்.

வண்டுலாவிய மலர்செறிவாவி
தொண்டைவாய்மட வார்புனல்சொரியக்
கண்டுசேலினங் தாமரைமுகையெனக்
குதிக்குதுதனங்களிற் குதிக்குதுபாரிதோ (கண்)

தித்திப்பாகிய கரும்பினையொடித்து
வெத்தியுழவர்கள் மேதியையடிக்க
சுத்திச்சிதறிய முத்துகளைப்பாரிதோ
சோதியும்வீசுதே ஆதிநிலவைப்போலே (கண்)

வாவிநீர்படித் துறைகளுமணமே
மாதராடல்செய் கரைகளுமணமே
மேவிவானெழுந் சோலையுமணமே
வீதியுமனம்பெண்கள் சோதிமுலைக்கலவை (கண்)



245 வது பக்கம் காசிகாண்டம்



அன்னமேமட — அன்னங்களுனது
ஆனநடையினைக் — காணவேதனது
சொன்னமாகிய — மேனிகள்வாடுது
துயரத்திலாடுது — துளிர்முகங்கோடுது (கண்)

அரசன் வசனம்.

சந்திரவதியே இக்காசிநாட்டின் சிங்காரத்தையும் வளத்தையும் பூர்க்கப்பார்க்க எனது மனம் சந்தோஷத்தை யடையலானது.

(ச-தி-வ-ம்.) எனக்கும் அப்படியே.

---

## காசிநகர்ச்சிறப்பு.

அரசன் விருத்தம்.

கோதில்லாமதிதயனார் தவத்துதித்த
குணமணியேகுஞ்சரமே குயிலேகேண்மினீ
சோதிமணிகொழிக்கும் நதித்தீர்த்தமாடி
சுருதிவனபியா மனுஷ்டானம்புரிந்து
நீதியுடனேநடந்து கெடியகாட்டின்
நேர்த்தியெல்லாம் பார்த்ததனைக்கடந்துநாடி
ஆதிவிஸ்வநாதபிரா னமருங்காசி
அடுத்திட்டோம் அகவிசனம்விடுத்திட்டோமே

அரசன் தரு.

காசிவிஸ்வநாதர்வள யென்றமெட்டு.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

கயிலைநிகரான திருக் — காசியின்சிங்காரம்பாராய்
கண்ணே — யெந்தன்-பெண்ணே
குயில்பெறுங்கார்மண்டலத்தோ — டுறவாடுங்கோட்டைமதில்
டமே — விச்சித்-திரமே

வசனம்.

கண்மணி ஆதிசேடனாலும் சொல்வதற்கரிய கயிலையம்பதிக்கு நிகரான இக்காசிமாநகரைச்சூழ்ந்த கோட்டைமதிலானது மேகமண்டலத்தோடு சதா உறவாடிக்கொண் டிருப்பதாக விருக்கின்றனபார்.

(ச-தி-வ-ம்.) பார்த்தேன் பிராணநாயகா.

அரசன் தரு.

அகழியிற்கலக்கியயானைகள் தாமரைத்தண்டென்ன
அடுத்தே ஆதிசேடனை-யெடுத்தே
அதன்முடிமணியொளியால் அக்கனமேஉற்கையென
அறியும் அதையப்பாலே-யெறியும்

வசனம்.

பெண்மணி யாதொரு மும்மதம்பொருந்திய யானைகள் தமது பசிதீரும்பொருட்டு இந்த அகழியினிடம்வந்து தமது நீண்டதுதிக்கைகளால் கலக்கி அங்கிருக்கும் ஆதிசேடனை தாமரைத்தண்டென மதித்து அடுத்துப்பிடித்திழுக்கும் விசையினால் அச்சேடனானது வருந்தி தனதுமுடியிற் பதிந்திருக்கும் இரத்தினத்தைக்கக்க அதைப் பார்த்து இது கொள்ளிக்கட்டையென அறிந்து அப்புறத்தே வீசியெறிவாதாலவிசித்திரத்தையும் பார்.

(ச-தி-வ-ம்.) பார்த்தேன் நாதா.

அரசன் தரு.

கீர்மதில்கடக்கவஞ்சிக் கதவுதிறக்கும்வரையும்
காப்பான் சமையம்-பார்ப்பான்

வசனம்.

நாயகி ஏழுபச்சைக் குதிரைபூட்டிய ஒருருளை இரதத்தின்மீதாரோகணித்துக் கீழ்பால் உதயமாகிவருவதான சூரியனானவன் இக்காசிநகர்த் திருமதிலைக்கடந்து செல்வதற்கு முடியாமல் கதவுதிறக்கும் சமயம்பார்த்துக்காத்திருப்பான் என்பதற்கையமில்லை ஏனெனில்அவ்வளவுஉன்னதம் பெற்றதாயிருக்கின்றன கோட்டைத் திருமதில்பார்.

அரசன் தரு.

சந்திரன்பெண்கள்பணியணியத் தன்னைக்கண்ணாடிபோற்காட்டும்
சகியே வர்ணச்-சிகியே

வசனம்.

பிரணசகீ சோடசகலைகளைப்பெற்ற பூரணசந்திரனானவன் இக்காசிநகரில் வசிக்கும்பெண்கள் திலதமுதலாயுள்ள பூஷணங்களணிந்துகொள்வதற்கு தன்னையெந்நாளும் நிலக்கண்ணாடிபோலக் காட்டுவான்போலும்.

157



அரசன் தரு.

மாடங்கிரணம்விரித்தவடி வால்வானகரைப்பார்த்தே
வையும் சதாநகையே-செய்யும்

வசனம்.

மாதரசியே, இக்காசிமா நகரிலமைந்துள்ள அரண்மனைகளின் மேன்மாடங்களானது கிரணங்களை விரித்தசிங்காரத்தினால் மகாரம்மியம் பொருந்திய பொன்னகரைப்பார்த்து நீ எக்காலத்திலும் எனக்கு நிகராவையோவெனப் பலவாறுவைது புன்னகைசெய்வனபோலுமிருக்கின்றனபார்.

அரசன் தரு.

இன்னமாளிகைகழுத்தி லின்றமேகமும்பதுமை
ஏந்தும் வடிவிற்சுண்ணச்-சாந்தும்
பொன்முடியிலிளம்பிறையும் பொருந்தியதாலேசிவனைப்
போலாம் புகல்வதற்குமேலாம்

வசனம்.

பெண்மணி இந்தமாளிகையானது தனது கழுத்தில் மேகமும் விசித்திரமான பதுமைகளையேந்திக்கொண்டிருப்பதான தேகத்தில் சுண்ணச்சாந்தும் பொன்னிறமான திருமுடியில் இளம்பிறையும் பொருந்தி இருப்பதினால் யாதொரு சர்வஜீவகாருண்ணியனான ஸ்ரீசிவபெருமானுக்கு ஒப்பாகுமென்பதில் ஐயமேயில்லை.

(ச-தி-வ-ம்.) உண்மைதான் பிரபூ.

அரசன் தரு.

கல்லினிழைத்தமர கதக்கிரணத்தைப்புல்லெனக்
கடிக்கும் பசுக்கள்யாவும்-நடிக்கும்

வசனம்.

வனிதாரத்தினமே யாதொரு சாணைக்கல்லினாலிழைக்கப் பெற்றதான மரகதக்கிரணங்களை பசுக்களானது பசும்புல்லெனக் கடித்து நடிக்கும்.

அரசன் தரு.

சன்னலிற்றோன் றுஞ்சந்திரனைச் சசிவதனமெனவெண்ணிச்
சார்வார் மனதுவெட்கிச்-சோர்வார்

வசனம்.

தையற்கரசியே இந்நகரிற்புதிதாக விவாகஞ்செய்துகொண்ட பொற்கொடிபோன்ற பெண்கள் தாம்வசிக்கும் மாளிகையின் பலக ணிப்புறத்தின்றோன்றிய சந்திரனை அங்குமறைந்திருந்து பார்க்கும் தமது சகிமார்களின் முகமென்றெண்ணி தற்காலம் நாயகரைத் தழு வியகைகளால் கண்களைமூடிக்கொண்டு நாணமுற்றுசோர்வார்கள்.

அரசன் தரு.

பொற்சசிறற்சாளரத்திற் புகுந்துடலந்தேய்தலினால்
புகழ்வான் இளம்பருவந்-திகழ்வான்

வசனம்.

பெண்ணே அழகிய பூரணசந்திரனானவன் மணிகட்டிய மேன் மாடச்சாளரவாயிலில் நுழைந்துநுழைந்து உடலானது தேய்தலினா லே தனக்கு எக்காலும் இளம்பிறைப்பருவமே நன்றெனவெண்ணிப் பிரகாசிப்பான்.

அரசன் தரு.

இராகுபெண்கள்முகமென்று மெழில்மதியென்றுமறியா
திடையும் என்றுஞ்சந்தேகம்-அடையும்

வசனம்.

மங்கையே இராகுவென்னும் நாகமானது மேன்மாடத்தினுலா வும் பெண்கள் முகமென்றும் சந்திரனென்றும் அறியா தகமிடைந்து சந்தேகத்தை யடைவதாயிருக்கும்.

அரசன் தரு.

சந்திரகாந்தக்கற்குடத்தின் ஜலத்தைக்கதிரோன்குதிரை
சாரும் அருந்திக்களி-கூரும்

வசனம்.

கண்மணீ, உன்னதமான மேல்வீட்டில் வைக்கப்பட்ட சந்திர காந்தக் கற்குடங்களிலே சந்திரனாற் கக்கலான தண்ணிய ஜலத்தை சூரியபகவானுடைய ஏழுகுதிரைகளும் குடித்து இளைப்பாறிநடக்கும்

அரசன் தரு.

கொடிகள்தேவரகளைவெல்லக் குறித்துப்படங்கட்டியபோல்
குலவும் பிரகாசித்து-உலவும்



240-வது பக்கம் காசிவிஸ்வநாததெரிசனம்



வசனம்.

ஆசைரஞ்சிதமே கொடிகளானது நாம் இக்காசிமாநகர் முதல் மற்றநகரங்களையும் வென்றோம். இனித் தேவநகரை வெல்லவேண்டுமெனக் குறித்துப் படங்களெழுதி கட்டியதுபோலு மிருக்கின்றன பார்த்தாயா.

அரசன் தரு.

வந்தவர்பசிதணித்து — வசிக்குஞ்சத்திரமாமிது
மயிலேயெனக்கு — வாய்த்த-குயிலே
சுந்தரமுனிவர்முத்தர் — சூழுமடாலயமிது
சுகமேதுலங்கிடுங் — கற்-பகமே
பண்ணும்வேதவேதியர்கள் — பாங்குடன்வாழ்வீதியிது
பதியேசுந்தர — சந்திர-வதியே
மின்னுமணிக்கிரீடம்பூண்ட — வேந்தர்கள்வாழ்வீதியிது
மின்னேஉயர்ந்த — ஆணிப்-பொன்னே
சிறிதுலாபஞ்சேர்ந்துவிற்குஞ் — சீர்வணிகர்வீதியிது
தேனே இளம் — பருவ-மானே
நெறிதவறுதுழுதுண்டுவாழ் — நேர்ந்தியானசூத்ரர்வீதி
நிலையேபொருள் — மிகுந்தசுகலையே
ஆதிவிஸ்வநாதன்வாழும் — அழகுமணிக்கோயிலிது
அனமேவிலை — மதியாத்-தீனமே
நீதிபுடனுமிங்கேகி — நின்றுபணிந்துவருவோம்
நேராய்நடந் — தென்னுடன்-வாராய்.

அரசன் வசனம்.

பெண்ணே இந்நகரின் சிங்காரங்களைப் பார்த்தானந்தித்து இதோ விஸ்வநாதன் சந்நிதிக்கு வந்தோம் இனி மந்திரபூர்வமாக அன்னவனைவணங்கி அல்லலை யகற்றுவோம் வருவாய் மாங்குயிலே.

(ச-தி-வ-ம்.) உத்திரவுபோல் வருகிறேன் சுவாமி.

---

# காசிவிஸ்வநாதர்தெரிசனம்.

அரசன் விருத்தம்.

தன்னைதன்சங்கே தாயமையேபூவே
தருமதுவேமிகுரசமே தளராவண்டே
மண்ணைமண்மரமே வான்கிளியேவாய்ந்தே
வளர்தனிரேவண்சரியே கனியேவித்தே
விண்ணேவிண்கதிரே வெண்மதியேசப்த
மேகமேமினிர்சோதி மின்னேபொன்னே
என்றேன்யென்கண்மணியே காசிவாழ்வே
கவுசிகர்தங்கடன்றீரக் கருணைசெய்யே.

அமுர்தலிங்கேஸ்வரா நின் சமுகசேவை யென்றமெட்டு.

இராகம்-நாட்டைக்குறிஞ்சி-தாளம்-ஆதி.

பல்லவி.

காசிவிஸ்வேசா வுன்னைப் பூசனை செய்தேனென்னைக்
காத்தருள் செய்வதுநின் கடனே கண்ணியா-மிகு-புண்ணியா (கா)

அநுபல்லவி.

காசினியுள்ளவர் யாவருமே துதி
கன்னிவிசாலாக்ஷியைக் கலந்தகருணாநிதி
தேசிகனுகவந்த சிவசண்முகனைப்பயந்த
தேவா-ஞானசின்மய ரூபா-மகானுபாவா (கா)

சரணங்கள்.

தீராதபாவமெல்லாம் தீர்க்குமணிமருந்தே
தேடவரியமறைக்குருந்தே தேனே-ஸ்ரீமானே
நாரணனுந்திரு நான்முகனுந்தரு
ராஜனுந்தேவரும் ஞானமுனிவரும்
ஆரணப்படியுற்ற அஞ்சலிசெய்யப்பெற்ற
ஐயா-கஞ்சமலர்க் கையா-மெய்யா-துய்யா (கா)

நாடுநகரனைத்தும் ஞானமுனிக்களித்து
நான்விதியாற்கடனுக்காளாய் நலிந்தே-மிக-மெலிந்தே
காடுகளிற்பெரும் பாடுகள்பட்டிரு
கால்கடுக்கநடந்து கருத்துடனிங்குவந்து
நாடுமெனக்குன்மிக்க நற்றெரிசனங்கிடைக்க
லாச்சே-துன்பங்களெல்லாம் போச்சே-காசிமிகு (கா)

நெடியதவங்கள்செய்யும் அடியவர்களேவெய்யும்
படிநல்லவரந்தருவோனே பரனே-மிகு-திரனே
முடிமிசைகங்கையும் வடிவுளதிங்களும்
மோகமுடனணிந்த முழுமுதலேயிந்தப்
படிபுகழ்முத்தழக பாரதிதமிழ்க்கருள்செய்
பதியே-யெமக்கென்றும்நீ கெதியே-யிதுதநிமெய (கா)

அரசன் தரு.

ஆதரிப்பாய் களத்திரா யென்றமெட்டு.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

காத்தருள்வாய் காசிநாதா-நற்
கருவே அருவுருவே திரு மருவே அருள் குருவே யெனைக் (கா)



அனுபல்லவி.

பார்த்தருள்வாயேவுன் பங்கயக்கண்ணுலென்
பரனே அரி-கரனே திரி புரனேமிகு-திரனே-யெனைக் (கா)

சரணங்கள்.

தீதுறச்செய்திடும் பாதகமியாவையும்
தீர்த்திடுங்காசியம் பதியே-நன்றாய்
ஓததற்கெட்டாத வேதமுடிவினில்
ஓங்குங்கருணைவா ரிதியே
மானுரியத்துடன்பரடும் சாதுஜனர்கொண்டாடும்
மகாராஜனே-சுகபோஜனே அகநேசனே-ஜகதீசனே (கா)

இந்தஜன்மந்தனி லுந்தன்றெரிசனம்
இங்குகிடைத்திடப் போதே-இன்று
எந்தன்விபத்துங் கடனுமேதீர்ந்ததாய்
எண்ணினேன் யான்மனமீதே
சந்திரஜடாதரசிவசிவ சம்போசங்கரஹரஹர
தவவேஷனே-பவநாசனே சுபவாசனே-புவனேசனே (கா)

காரணவஸ்துவாயிங்கு மங்குமெங்கும்
கனிந்துசூழ் பவனே-பரி
பூரணமானவைங் கோணமனையிற்
பொருந்தியே வாழ்பவனே
நாரணகுலமுத்தழக பாரதிதமக்கருள்சுக
நாதா-வெகுநீதா மலர்ப்பாதா-அருள்தாதா-யெனைக் (கா)

அரசன் வசனம்.

ஸ்ரீ விசாலாக்ஷி சமேத விஸ்வநாத பெருமானே யாதொரு விஸ்வாமித்திர முனிவர்க்குக் கொடுக்கவேண்டிய கடனைத் தீர்ப்பதற்கு இக்காசிமாநகர்க்குவந்து நினது பாதாரவிந்தமே கெதியென வடைந்தேன் காத்துரக்ஷிப்பாய் கருணையங்கடலே.

அரசன் வசனம்.

பெண்ணே சந்திரவதி நீயும் விஸ்வநாதனை தெரிசனஞ்செய்து சந்தோஷமடைவாயாக.

(ச-தி-வ-ம்.) நல்லது பிராணகாந்தா.

சந்திரவதி விருத்தம்.

சடையோனே தண்மதியுங் கங்கையுங்கொள்
தலையோனே தவம் புரியுஞ்சகனே பூதப்
படையோனே பழமறையுந் தேடிக்காணுப்
பதத்தோனே பவமகற்றும் பரனே காவி
யுடையோனேவுலகுயிருக் குணவளிக்கும்
உத்தமனே ஓம்நமசிவாயனே தூய
விடையோனே காசிவிசாலாக்ஷிபாக
வித்தகனேவிரும்பியுனே வேண்டுவேனே

சந்திரவதி-தரு.

காசி விஸ்வநாதா வென்றமெட்டு.

இராகம்-உசேனி-தாளம்-சாப்பு.

பல்லவி.

காருஞ்சர்வேசனே நற்-காசிவாசனே (காரு)

அநுபல்லவி.

பாருனேமிகுந்த சீருலவுமிந்தப்
பதியிலிருந்துநற் கதியுதவு-சிவ
பரமனேநற் கிரமனே-நின்
பரிமளப்பத தெரிசனப்புகழ்
தெரியவுற்றனை பரிவுடன் (காரு)

சரணங்கள்.

அரும்பேஅதிஇனு சுரும்பேருசிதரு
கரும்பேமதுராமுக் கனிகலந்த-தெள்
ளமுதமேபூங் குமுதமே-இன்
றடியளுக்குனு கொடியவிப்பெரு
மிடிதொலைத்திரு படியிலே (காரு)

ஆதியேஅருட் சோதியேபொருட்
கதிபதியேபெருங் கதிர்மதியே-யென
தாண்டவாதிருத் தாண்டவா-என
தையனேமனத் துய்யனே-தவ
மெய்யனேமழுக் கையனே (காரு)



மாதவம்புரி வேதஅந்தணர்
மனமகிழஅவர் மனதிலிருந்-தென்றும்
வாழ்பவாஎங்கும் சூழ்பவா-திரு
மழலையான முத்தழகபாரதி
கழறுகற்றமிழ்க் கழனே (காரு)

கடையூரீசா வென்னசெய்குவே னென்றமெட்டு.

இராகம்-ஸாவேரி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஈசாகாசிவிஸ்வேசா ஜகதீசா-நின்
னிருதாள்சரணம் சர்வேசா-ஜகதீசா
பூஜாபலஞ்செய் பவர்க்கு-மனம்
பூரித்தருள் கொடுக்கும்-ஜகதீசா
ஓநமசி வாயமே-நல்ல
தீநதயா பரமே-ஜகதீசா
சுக்ஞானச் சுடரொளியே-திரு
மெஞ்ஞானபர வெளியே-ஜகதீசா
வேதாந்தமெய்ப் பொருளே-மணி
நாதாந்தநல் லருளே-ஜகதீசா
நல்விசாலாக்ஷி நேயனே-என்
தொல்வினைதீர்க்குந் தூயனே-ஜகதீசா
நிறைவேணி பூண்டவனே-என்
குறைகொய்வா யாண்டவனே-ஜகதீசா
முத்தழக பாரதிசொல்
முத்தமிழ்க் கதிபதியான (ஈசா)

சந்திரவதி வசனம்.

போற்றி போற்றி விசாலாக்ஷி சமேத விஸ்வநாத பெருமானே உன்னையே கெதியென வந்தடுத்த எமது கடன்தீர இன்றருள்புரிவாய் அண்ணலே.

தேவதாசன் துதி.

விருத்தம்.

அய்யனேயன்பரதகத் தமர்ந்துலாவும்
அத்தனேயருளளிக்கும் அமலனேபொன்
மெய்யனேவேதாந்த வித்தேமுத்தே
வேணியனேவினையகற்று மெய்மருந்தே

துப்பனேசுடரொளியே தும்பைபுன்னை
குமரனேகருணைத் தோன்றலேபூங்
கையனேகாசி விஸ்வநாதனேநின்
குஞ்சவடிகஞ்சமெனைக் காப்பாயின்றே.

இராகம்-உசேனி-தாளம்-சாப்பு.

பல்லவி.

அஞ்சலிபீசனே ஆதிவிஸ்வேசனே (அ)

அநுபல்லவி.

மஞ்சனைக்காப்பாய் வல்வினைதீர்ப்பாய் (அ)

சரணங்கள்.

கருணைவாரிதியே தருணம்கதியே (அ)
பூதநாதனே நாதகீதனே (அ)
ஞானதீபனே நினரூபனே (அ)
செஞ்சடையோனே கஞ்சவடியோனே (அ)
அம்பிகைநாதனே சம்பிரமயோகனே (அ)
சுருதியுறுபொருளே அரியதிருவருளே (அ)
நந்திவாகனனே மந்திரமோகனனே (அ)
மான்மழுக்கரனே தேன்மலர்ச்சிரனே (அ)
வானவர்கீதவே தினர்கள்கோவே (அ)
பத்தன்முத்தழக பாரதிவாழ்குக (அ)

தேவதாசன் வசனம்.

கடவுளே உனதடைக் கலமெனப்புகுந்தோம் இன்று விஸ்வாமித்திரமுனிவர்க்குக் கொடுக்கவேண்டும் பெரியகடன்தீரும்படி கருணைபுரிவாய் காசியம் பதிவாழ்வே.

மந்திரி விருத்தம்.

சகுனையிமையவர்தம் கோனேதேனே
இருவினையாவையு மகற்றுமென்னதையெனில்
வேசனேஇங்கோனா விட்டில்மேவும்
விற்பனனே,ஆகுகி விசாலாக்ஷிக்குற்ற
நேசனேநின்மலவிஷ்களனே,தூய
நிமலனேநிரஞ்சனனே கொடியகாசி
வாசனேமுனிக்கரசன் கொடுக்கவேண்டும்
வன்கடனின்றேயகல வரமீவாயே.



கங்காதர பார்வதி சமேதர தேவனேயென்றமெட்டு.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

பல்லவி.

சம்போசிவசங்கர தயாபரதேவனே-நின்
தாளேசரணஞ் சிற்சொரூபனே (சம்)

அநுபல்லவி.

அம்புலியை அஞ்சடையி லணிதூயனே-என
தன்னைவிசாலாக்ஷி தன்நேயனே (சம்)

சரணங்கள்.

பரப்பிரமபரிபூர்ண பரமேசனே
இரக்கம்வைத்து ரக்ஷிவிஸ்வேசனே (சம்)
சண்டனைத்தாள்கொண் டுதைத்ததாளனே
கொண்டல்வண்ணன் மைத்துனகுணாளனே (சம்)
பத்தனெனுமுத்தழக பாரதி
முத்தமிழ்க்கு முதல்வாகருணைநிதி (சம்)

வசனம்.

ஹரஹர சம்போசங்கர விஸ்வேசனே போற்றிபோற்றி எனதரசன் விஸ்வாமித்திரமுனிக்குக் கொடுக்கவேண்டிய கடன் தவணைக்குள்தீரும்படி கருணைக்கண் பரப்பிப் பார்ப்பாய் கடவுளே.

அரசன் வசனம்.

ஏ பெண்ணே ஏ பாலகா ஏ மந்திரி நீங்கள்மூவரும் விஸ்வநாதனைப் போற்றினீர்களா.

(ச-தி-வ-ம்.) ஆம் அரசே.

அரசன் வசனம்.

கண்மணி அயோத்தியைவிட்டுப் புறப்பட்டநாள்முதல் இந்நாள்வரை காய்கனிகிழங்குகளைப் புசித்தோமல்லது அன்னம்புசித்தோமில்லை இனிமேல் சத்திரங்களிலாவதுபோய் சுயம்பாகம்வாங்கி சமையல்செய்து பசியைத்தீர்த்துக் கொள்வோம்.

(ச-தி-வ-ம்.) அப்படியே செய்யும் பிராணநாயகா.

அரசன் வசனம்.

மந்திரி, ஏதோ இங்கோர் மண்டபமிருக்கின்றது இதிற்பிரவேசித்து சமையல்செய்து பசிதணித்திருக்கலாமா.

மந்திரி வசனம்.

அரசே, நாம்வசித்திருப்பதற்கு இதுவேதகுந்த இடம் வீற்றிருங்கள் நான்கடைக்குப்போய் என்னிடமிருக்கும் பொருளுக்கு சமையலுக்குவேண்டிய சாமான்வாங்கிக்கொண்டு வருகின்றேன்.

(அ-ன்-வ-ம்.) நல்லது மந்திரி.

பொது வசனம்.

இந்தவிதமாக மந்திரி கடைவீதிக்குச்சென்று சமையலுக்கு வேண்டிய சாமான்வாங்கிக் கொண்டுவந்து தனதுமாதாவாகிய சந்திரவதியிடம்கொடுக்க அதைஅந்த அம்மணிவாங்கி சமையல்செய்து தாகன்முதல் நால்வர்க்கும்படைத்து தானுமுண்டு பசிதணித்தார்கள் சூரியனும் குடதிசையை யடைந்து தனதுகுலமகன் குறையை யகற்றக் கீழ்பாலுதயமானன்.

அரசன் வசனம்.

அநேகவந்தனம் அந்தணகுலசிகாமணியே கங்கைக்குச்சென்று காலைக்கடனை முடித்துவருவோம் வாரும்.

(த-ன்-வ-ம்.) நல்லது வா அரிச்சந்திரா.

பொது வசனம்.

இந்தவிதம் அரிச்சந்திரன்முதல் ஐவரும் கங்கைக்குச்சென்று தீர்த்தமாடி காலைக்கடன் முடித்துக்கொண்டு நகர்க்குவந்தார்கள் அச்சமயம் தாகன் சொல்லுவிதம் யாதெனில்.

தாகன் வசனம்.

அடா அரிச்சந்திரா நீ கௌசிகரிஷிக்குக் கொடுக்கவேண்டிய கடனுக் கென்னசொல்லுகின்றாய் இனி யென்னால் காத்திருக்கமுடியாது.

அரசன் வசனம்.

சுவாமி இவ்வளவு கோபம்வைத்தால் தாங்கமாட்டேன் எவ்விதமாவது மாமுனி கடனைக்கொடுக்கிறேன்.

தாகன் வசனம்.

முனிபொருளை எவ்விதமாவது கொடுக்கிறேன் கொடுக்கிறேனென்று கூறுகிறாயேயன்றி இதுவரை கொடுத்ததாகவில்லையே இவ்விதமேசொல்லி ஏய்த்துவிடலா மென்றெண்ணமோ.

-163-



அரசன் வசனம்.

எப்படியான எண்ணமும் எக்காலத்தும் இதயத்துட்கொள்ளேன் சுவாமி தவணைக்குள் அவசியம் பொருளைத் தருகின்றேன்.

தாகன் வசனம்.

அடா ஜாலக்காரா உனக்கு இவ்விதம் சொல்வது வழக்கமாக இருந்தபோதினும் இனி அவ்வழக்கத்தைத்தள்ளி முனிபொருளை தருகிறேன் அல்லது தரேனென்று கண்டிப்பாய்ச் சொல்.

அரசன் வசனம்.

பிரபு, தவணைக்குள் பொருளைத்தருவேனேயல்லது தரமாட்டேனென்ற வசனம் சாற்றவேமாட்டான் மோசமுஞ்செய்யேன் சத்தியமுந்தவறேன் கோபத்தைத் தணித்துக்கொள்ளுங்கள்.

தாகன் வசனம்.

அடா கொடியவஞ்சகா ஞாயமாகப் பொருளைக்கொடு வெனக் கேட்டால்கோபத்தைத் தணித்துக்கொள்ளுங்களெனக் கூறுகின்றாய் சபாஷ் இனிப்பொருளைக் கொடுத்தாலல்லது கோபத்தைத் தணிக்கமாட்டேன்.

அரசன் தரு.

கமலநயன வாசுதேவா வென்றமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

முனிகடனுக்கு இனியென்னவகை
மொழிகுவேன் விஸ்வநாதா (மு)

அநுபல்லவி.

பனிமதிகாணுக் குமுதம்போலப்
பரதவிக்கின்றேன் சில (மு)

சரணங்கள்.

இட்சணமிந்த நட்சத்திரையர்-செய்
திடுங்கொடுமைக்கு ளொடுங்கி
தட்சகன்வாயிற் பட்டதேரைபோல்
தயங்கிறேன் தர்மமோ (மு)

தவணைக்குட்பொருள் தருவதாய்ச்சொல்லி
இவடத்திற்கு வந்தேனே
கவலைதீர்ப்ப தானதுபாரம்
கழுசிணைபணிந் தேனே (மு)

வசனம்.

அந்தோ விஸ்வநாதா யாதொரு விஸ்வாமித்திரருடைய பொருளைக்கொடுப்பதற்கு கையில் ஓர்வெகுவில்லாது வருந்துகின்றேன் அப்பொருட்கடன் தீரும்பொருட்டு சிறியேன் முகத்தை சற்றேறிட்டுப் பார்ப்பாய் கருணையங்கடலே தாகர்செய்யுங் கொடுமை சகிக்குதில்லை.

தாகர் வசனம்.

அடா பாசாங்குக்காரனே நீபட்டகடனைக் கொடுப்பதற்கு நீ ஜவாப்தாரியேயன்றி வேறொருவருடல்ல அடிக்கடி விஸ்வநாதனை நொந்துகொள்வதினும் யாதொருபயனல்ல குறத்தனஞ்செய்யாமல் கொட்டடா பொருளை.

(அ-ன்-வ-ம்.) ஐயோ இதற்கென்செய்வேன் விஸ்வநாதா.

சந்திரவதி விருத்தம்.

சதுர்மறையோர் குலமணியே நயவுரைக்குந்
தன்கடமைதருமவுருக் கருவேவான்றோய்
விதுவுனியும்வெளியானையனின்வா
மித்திரமாமுனிகடனைத் தவிர்காட்குள்
எதுவிதத்துந்தந்திடுவோ மன்றியில்லை
யெனவுரையோங்கனவிலும்பொய் மறவோம்நாமல்
இதுவரையும்பொறுத்திருந்த படியேயின்னும்
இங்கிருந்துசிந்தைசெய்யா திரக்ஷிப்பீரே.

சந்திரவதி தரு.

இந்தக்கொடுமைசெய்வதேது யென்றமெட்டு.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

இந்தசிந்தைசெய்யலாமோ இறைவனேநீர்மையலாமோ (இந்)

அநுபல்லவி.

சந்திரமிகுந்திலகும் அந்தணபுரந்தரரே (இந்)

சரணங்கள்.

கண்டவர்நகைத்திடுவாரே கருமியென்னவுரைத்திடுவாரே
அண்டியதோர்தொண்டர்களை ஆதரியாதுநின்முறையும் (இந்)
ஓதியமொழிவழுவினேமோ உம்மைவிட்டுநழுவினேமோ
நீதமுநன்னீதிபதி மீதிலுமக்கியாதுவன்மம் (இந்)
தவனைக்குள்முனிதங்கடனையே தருவோங்கருணைசெயுமிங்கனையே
புவனமிசைநுவலரிய புண்ணியமுண்டுகெண்ணியமுண்டு (இந்)



வசனம்.

சுவாமி என்துபிராணேசனை இவ்வளவு வருத்தப்படுத்துவது தருமமல்ல எவ்விதத்திலாவது தவனைக்குள் முனிவர்கடனைத் தருகிறோம் அதுவிஷயத்தில் அவநம்பிக்கை வேண்டாம் இந்நகரில்வசிக்கும் கனவான்கள்கண்டால் பலவிதம் நகைப்பார்கள் தயவுசெய்து கோபத்தைத்தணித்து எங்களை ஆதரிப்பீர் அந்தணகுலமணியே.

தாகன் வசனம்.

நல்லது மதிதயன்மகளே உன்பர்த்தாவைப்போலவே நீயும் பாசாங்குக்குறத்தியாக விருக்கின்றாய் நல்லதிருக்கட்டும் பொருளைக்கொடுத்தாலல்லது கோபத்தைத்தணியேன் என்னசொல்கின்றாய்.

சந்திரவதி வசனம்.

சுவாமி கிரேமாகிய கோபத்துடனே வற்புறுத்திக் கேட்டால் எவ்விதமுகாந்திரத்தை யெடுத்துரைக்கக்கூடும் இது தர்மமல்ல.

தாகன் வசனம்.

அரிச்சந்திரா நீயும் மனைவியும் இவ்விதம்சொல்வது சரியல்ல என்னால் காத்திருக்கமுடியாது பொருளைத் தருகிறதில்லை யெனச்சொல் இக்ஷணமே என்பதிக்குச் செல்கின்றேன்.

அரசன் தரு.

கைசஜாதுடாவனசயா-வென்றமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

பெரியதவனேசமீ சிந்தையென்செய்குவோம்-பெண்ணே (பெ)

அநுபல்லவி.

கோசிகர்கடன் கொடுக்கவோவில்லையே
காசினியொன்றுமே கையிலில்லையே-கண்ணே (பெ)

சரணங்கள்.

எவ்விதங்கடன் தீர்த்தவர்க்
கியாமக்கல்லவர்க ளாவோம்
அவ்விதந்தெரியவு மில்லையே
இவ்விதம்வந்ததே தொல்லையே-கண்ணே (பெ)
தாகர்செயும் வேதனை
சகிக்கத்தகுமோ என்னால்
பரவாகதேவன் பதமலரைச்
சரணாகதிசெய் தவமோஇது-கண்ணே (பெ)

வசனம்.

கண்மணி தவணைநாளோ சமீபித்தது எவ்விதம் கடனைத்தீர்த்து கவுசிகமுனிவர்க்கு நாம் நல்லவர்களாவோமோ தெரியவில்லையே இதற்கென்செய்வேன் இளங்குயிலே.

சந்திரவதி விருத்தம்.

படிபுகழும்பானுகுல மணியேயென்னைப்
பதிவுடனேமணம்புரிந்த பதியேசொர்னு
முடிதிகழுந்திரிசங்கு தவத்துதித்த
முழுமுதலேமுகிலேதண் முத்தேஆதி
நெடியவனைத்துதிபுரியும் நித்தியநேம
நிருபனேபுயசயில நேசனேநற்
கடிநகரைச்சடிலமுனிக் களித்தவன்று
கலங்காதநெஞ்சமின்று கலங்கலென்னே.

## சந்திரவதிக்கும் அரசனுக்கும் தர்க்கம் தரு.

இராகம்-முகாரி-தாளம்-ஆதி.

பல்லவி.

மன்னுநீரும்மனது வாடுவதேனோ-எனது (மன்)

அநுபல்லவி.

கன்னல்விற்கொள் மன்மதனோர்
கண்ணியரோ புண்ணியரோ (மன்)

அரசன் தரு ஷெமெட்டு.

பல்லவி.

பெண்ணேயென் செய்வேனின்றே
பெருங்கடனால் வாடுகின்றேன்(பெ)

அநுபல்லவி.

கண்ணேயென் கண்மணியே
கற்பகமே அற்புதமே(பெ)

சந்திரவதி சரணம்.

எந்தனையும்மைந்தனையும் இந்தவூரின்றுவிற்றே
அந்தமுனீந்திரர்கடன் அனைத்துந்தீரும் அருளைக்காரும்(மன்)



(அரசன்)

உந்தனையும்மைந்தனையும் இந்தவூரின்றுவிற்க
எந்தவிதம்சிந்தைவரும் எந்தனுக்குகந்தஆசைப்(பெ)

(சந்திரவதி)

இந்தவிதமெந்தனிடம் உந்தனுவால்உற்றுரைத்தால்
அந்தமாமுனீந்திரர்கடன் தந்தருள்வதெந்தவிதம்(மன்)

(அரசன்)

மானேயென்னைநானேவிலை தானேசெய்திம்மாநகரில்
ஞானபானுமாமுனி நாதன்கடன்நல்குவேனே (பெ)

(சந்திரவதி)

மனைவியுடன்தனையனுமிங் கினிதுடனிருக்கும்போது
நினைவிற்றந்தமுனிகடனை நீக்குவதுநீதியல்ல(மன்)

(அரசன்)

கொண்டபெண்டைக்குலமகனைக் கொண்டுவிலைகூறிவிற்ற
கண்டனென்றேகண்டவர்கள் தண்டுமிண்டாய்விண்டுரைப்பார்(பெ)

சந்திரவதி விருத்தம்.

உலகிலுள்ளோர் பலவிதமாய் நம்மைத்தாழ்வாய்
உரைக்கிலென்னும் சிரிக்கிலென்னும் ஒறுக்கிலென்னும்
இலகவதையாம் பார்த்து நாளைமுற்றின்
றேங்கிலென்னு மிடைகுவதி லென்னம்வேத
குலமகனுக் காசைமொழி கூறிலென்னும்
கொண்டபெண்டை விற்பதற்குக் கூசிலென்னும்
அலகில்லாமுனிகடனைத் தவணைக்குள்ளே
அகற்றியறங் காப்பதன்றோ வழகாம்வேந்தே

சந்திரவதி தரு.

சாரசாக்ஷவாலா பெட்லு யென்றமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

என்னைவிலைகூறிவிற்று இருடியின்கடனகற்றும் (எ)

அநுபல்லவி.

தன்னைநிகரில்லாமுனி தானனுப்புந்தூதரினி
நின்னையிம்சைசெய்வார்மன்னு நெஞ்சில்வேறுமெண்ணுதின்னுள்(எ)

சரணங்கள்.

ஈசன்செயலையெப்போதும் எவரும்வெல்லமுடியாது
யோசனைசெய்தாவதென்னும் உத்தமகுணமன்ன (எ)
வருவ்விதிராதங்காது வருந்திடினும்விடாது
ஒருமனதாகநின்று உளமெலிபாமலின்று (எ)
எவ்விதங்கடன்றீர்ப்பது எவ்விதஞ்சத்தியங்காப்பது
அவ்விதமறிந்திடாது இவ்விதமேங்குவதேது (எ)

அரசன் தரு.

ஷை மெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

உன்னைவிலைகூறிவிற்க ஒவ்வுமோவென்னுள்ளமிங்கே (உ)

அநுபல்லவி.

முன்னைநாளினிலேகந்தா முதுமறைப்பிரமனுந்தான்
என்னையிவ்விதம்படைக்க என்பவஞ்செய்தேனோமிக்க (உ)

சரணங்கள்.

இந்தவண்ணமெய்துமென்றே யானறிகிலேனையன்றே
சந்திரநயன்தந்தகண்ணே சற்குணமிருந்தபெண்ணே (உ)
விலைகூறிவிலுமென வின்றும்போதேயென்மனம்
உலைமேல்மெழுகுபோல உருகுதென்செய்வேனிக்காலம் (உ)
நானிருக்கவுன்னைவிற்கல் நகையாரோநானிலத்தார்
வானிருக்குமின்னிடையாய் மாமடவன்னநடையாய் (உ)

வசனம்.

பெண்ணே நானிருந்துகொண்டு உன்னையும் புத்திரனையும் விற்பதாக இருந்தால் உலகம் சிரிக்குமே என்னசெய்வேன்.

சந்திரவதி தரு.

சாமிராடே மத்துமே யென்றமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

அவசியமென்னைவிற்று தவமுனிகடனகற்றும் (அ)

அநுபல்லவி.

கவலையேசம்பித்ததேத சையோகமன்ன-யெந்தன்
சையோகமன்ன நீ-நின்னுள் (அ)



சரணங்கள்.

தர்க்கஞ்செய்தாற்சாரமென்னும் சற்குணநிதி-எந்தன்
சற்குணநிதி இத்-ததி (அ)
சத்தியநெறியைத்தவறு உத்தமாநேமா-எந்தன்
உத்தமாநேமா நற்-பூமா (அ)
குறையையெண்ணிக் கொண்டுவருந்தல்
முறையோசாமியே-வேத முறையேசாமியே-நேமியே (அ)
இவ்விதம்வீரியம்பிறைக்கடன் எவ்விதந்திரும்-கடன்
எவ்விதந்திரும் விலை-கூறும் (அ)

சந்திரவதி வசனம்.

பிரபூ அவசியம் என்னைவிற்று முனிகடனைத் தீரும்.

அரசன் தரு ஷைமெட்டு.

இராகம் - பியாக் - தாளம் - ஆதி.

பல்லவி.

தையலேவுன்னைவிலையே செய்யவுமனமில்லையே (தை)

அநுபல்லவி.

ஐயையோநானென்னசெய்வேன் ஆசைக்கண்மணி-எந்தன்
ஆசைக்கண்மணி பெண்மணி (தை)

சரணங்கள்.

கன்னல்மொழிக்கதிர்வேல்விழி அன்னமேமின்னே-நட
அன்னமேமின்னே பைம்பொன்னே (தை)
என்னகுறைநான்செய்தேனோ சொன்னமேதேனே-மணிச்
சொன்னமேதேனே கலைமானே (தை)
தேவிதன்னைவிற்றதிய பாவியென்பாரோ-கொடும்
பாவியென்பாரோ கண்டோரோ (தை)
என்னைவிற்றேயழிவுமுனிகடன் பொன்னையளிப்பேனே-கடன்
பொன்னையளிப்பேனே களிப்பேனே (தை)

அரசன் வசனம்.

பெண்ணே உன்னைவிற்பது ஞாயமல்ல என்னை நானேவிற்றுக்கடனைத்தீர்க்கின்றேன் கலங்காதே கண்மணி.

சந்திரவதி விருத்தம்.

இவ்விதமாயிங்கொருவர்க் கொருவர்தர்க்க
மியற்றியிடைந்தேங்கு வதிற்பயனொன்றில்லை
எவ்விதமுமுனிகடனைத் தவணைக்குள்ளே
யின்னவர்பால்யாமளிக்க வேண்டுமன்றேல்
வெவ்வியபாழ்நரகுறுவோ மெய்மைகாவா
வினையெனப்பேர்புனைவோம் ஆமால்சிந்தை
ஒவ்வியிந்தவுயர்நகரின் வீதிதோறும்
உலவியெனைவிலைகூவி விற்பீர்வேந்தே

மன்னவாவென்னைவிற்று மாமுனிகடனைதீரு மென்றமெட்டு.

இராகம்-நாதநாமகிரியை-தாளம்-ரூபகம்.

பல்லவி.

வீதிவீதிகள்தோறும் விரைவினில்விலைகூறும் (வீ)

அனுபல்லவி.

மேதினிபுகழ்பூமனே மெய்யரிச்சந்திரநாமனே (வீ)

சரணங்கள்.

உத்தமகுணசீலனே சித்தசினிகர்கோலனே
சித்தவருத்தமனைத்தும் இத்தரியகற்றிமெய்த்து (வீ)
திவ்வியமலர்த்தாளனே சிறந்தமணவாளனே
இவ்விதஞ்சொன்னால்தீரும் எவ்விதங்கடன்தீரும் (வீ)
பூசிதைபுரிநேசனே தேசிகவிஸ்வாசனே
காசினியோர்விணையின்றாள் பேசியதிலாவதென்னும் (வீ)
மற்றடம்புயாசலனே குற்றமிலாரகுகுலனே
பெற்றவர்க்குப்பேசுதற்கு உற்றநீதியாதுமுண்டோ (வீ)

அரசன் தரு ஷைமெட்டு.

பல்லவி.

என்னமாயிந்நகரில் யானுனைவிலைசெய்வேன் (எ)

அநுபல்லவி.

அன்னமேமடமயிலே அன்பே-அம்பூங்-கொம்பே-குயிலே(எ)

சரணங்கள்.

சந்திரதயன்றந்தகண்ணே இந்திராணியனையபெண்ணே
உந்தனைவிற்பதற்கே சிந்தைவருமோவெனக்கே(எ)



வண்டணையகுழலியே முண்டகப்பூங்கழலியே
கொண்டபெண்டைவிற்றனென்று கண்டவரேசாரோயின்று(எ)

தன்னைநிகரில்லாதாளே மின்னைநிகரிடையாளே
உன்னைப்பெற்றதந்தைநேரே என்னைத்திட்டியேசுவாரோ(எ)

கோகிலாக்கற்புக்கனியே சோதிமதிகுலமணியே
நீதியாதுமுண்டோவென்று ஓதியதமுகோ-ஐயோ(எ)

அரசன் வசனம்.

கண்மணி என்மனந்துணிந்து இக்காசிமாநகரின் வீதிகளிற்பிரவேசித்து நாவினால்விலைகூவி உன்னை எவ்விதம் விற்பேன் இவ்விதமும் பிரமனெழுதினனே.

சந்திரவதி வசனம்.

பிரபு, இவ்விதம் சஞ்சலமுற்று வருந்துவதில் முனிகடன் மேலசாகாத்திருமா தவணைநாளோ சமீபித்தன இனித்தடைசொல்லாது இந்நகரிலுள்ள வீதிகள்தோறும் சென்றுவிலைகூறுங்கள்.

அரசன் வசனம்.

மாதரசே, முனிவர்கடனைக் கொடுப்பதற்கு யாதொருவகையுமில்லாது இந்தக்கர்மசண்டாளன் எனது குமாரியையும் பேரனையும் விற்றானென்றனது பிதா சூரியராஜன் பலவாறாக என்னைநிந்திப்பாரே இந்தப் பெரியபாபத்திற் கென்செய்வேன் பிராணசகீ.

சந்திரவதி வசனம்.

அரசே. என்னாளும் கீர்த்தியைத் தருவதான சத்தியத்தைக்காப்பாற்றும்பொருட்டு இவ்வூரில் என்னையும் பாலகனையும் தாம்விலைகூறி விற்றதைப்பற்றி எனதுபிதா சந்தோஷத்தையடைவாரேயல்லது சஞ்சலமடையார் ஒருக்கால் சஞ்சலமடைந்தாலும் தம்மைப்பற்றி பேசுதற்கு யாதொரு நீதியுமில்லை ஆகையால்பலவாறாக யோசனைசெய்யாது சீக்கிரத்தில் விலைகூறிவிற்றுக் கடனைபகற்றி வாழ்ந்திரும்.

தரகன் வசனம்.

அரிச்சந்திரா காலதாமசமாகின்றது முனிவர்பொருளுந் தென்னவகை சொல்லுகின்றாய்.

(அ-ன்-வ-ம்.) சுவாமி தவணைக்குள் தருகின்றேன்.

(த-ன்-வ-ம்.) எவ்விதம் பொருள்கொடுப்பதாக யோசனை.

அரசன் வசனம்.

முனிநாதரே இக்காலம் எமதுகையில் யாதொரு விதமான பொருள் இல்லையில்லை எங்களில் யார்சரீரத்தையாவது விலைகூறியார்க்கேனும் விற்றுத்தான் பொருள்கொடுக்கவேண்டும் அதுவரை பொறுத்திருங்கள்.

தாசன் வசனம்.

நல்லது வேந்தே சீக்கிரத்தில் பொருளைக் கொடுத்தனுப்பும்

அரசன் வசனம்.

தமது சித்தப்படியே பொருளைக் கொடுத்தனுப்புகிறேன்

சந்திரவதி தரு.

கந்தநாதா கருணைசெய்வா யென்றமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

என்னை விற்க — ஏனிந்தாமசம் (என்)

அநுபல்லவி.

சொர்னமாமகுடமணி — தூரந்தரர்வந்துபணி
மன்னவனே — மணவாளனே (என்)

சரணங்கள்.

அந்தணர்மிகவுங்கோபி — ஆகையால்நீர்விலைகூவி
இந்தவூரி — விதயத்தேறி (எ)

மதியிலாதவர்போல்நின்றே — வருந்துவதழகோவின்றே
எதிருண — மீளவிதெவ்வனம் (எ)

அரசன் தரு.

ஷை மெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

நின்னை விற்க — நீதியாகுமோ (நின்)

அநுபல்லவி.

கன்னல்ரசகன்மொழியாய் — கடைக்கெடுத்தவேல்விழியாய்
மின்னலிடை — யன்னநடையாய்(நின்)



சரணங்கள்.

விலைகூறக்கூடுமோ — மிகுமனம்நாடுமோ
கலைமானே — கனியேதேனே(நின்)

நேயமாபெண்ணைநான்விற்றே — ரிஷிகடன்றருவேனுற்றே
சேயும்நீயும் — க்ஷேமமாயிரும்(நின்)

வசனம்.

பெண்ணே என்னை நானே விலைகூறிவிற்று முனி கடனைச் செலுத்துகின்றேன் நீயும் சேயனும் கன்னோசி நாட்டையடைந்து மதிதயன் சவரக்ஷணையி லிருந்துவாழுங்கள்.

சந்திரவதி வசனம்.

பிராணரக்ஷகா இவ்விதங்கூறியது ஞாயமன்று, ஏனெனில் உலகத்தில் பர்த்தாக்கள் எவ்விதமான இன்பதுன்பங்களை யடைகின்றார்களோ அவைகளைப் பத்தினிகளு மடையவேண்டுமெனச் சுருதிமுறையிடுவதால் அதற்கிணங்க இனிமேல் யாதொரு விசனமின்றி என்னையும் புத்ரசிகாமணியையும் விலைகூறி விற்று விஸ்வாமித்ராருடைய கடனைக் கொடுத்துவிடுங்கள்.

அரசன் விருத்தம்.

காரடங்கப்பறைமுழங்குங் கன்னோசிமதிதயன்காதலியேவுன்னைச்
சீரடங்குங்காசிநகர்வீதியிலே நின்றுவிலைசெப்பநெஞ்சம்
நேரடங்குதில்லையிக்கப்பார்க்கக் கோல்செலுத்தும்சிருபரொன்றும்
போரடங்காமன்னர்வசைபேசமனங் கூசிநின்றுபுலம்புவேனே.

அரசன் தரு.

இராகம்-சுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

பெண்ணேயென் னுயிர்க்குயிரான — பேடைமயிலே-விலை
பேசிநானுனைக்கூசாமலேவிற்கப் — போமோகாசியிலே-அடி(பெ)

அநுபல்லவி.

மண்ணியாத்தின — முடிமன்னரோசாரோ
மாதாரடவரும் — வசைபேசாரோ(பெ)

சரணங்கள்.

மாத்தில்லாச்சொர்னமே — கன்னோசி
மதிதயன் — அன்னமே
கோத்திரத்திலுயர்ந் — திடும்மானே
கொஞ்சுங்கிளிமொழி — பஞ்சுகமானே(பெ)

சந்திரமாமதியே மதிமுகம்
தங்கிய ரதியே
கொந்துகொந்தாகவே இடாதுவந்தாலும்
கோசிகர்பொன்னைக் கொடாமல்நானிருந்தாலும்(பெ)

நாடிழந்தாலும் சேனைபரி
ரதமிழந் தாலும்
கோடாதசெல்வங்கள் யாவுமிழந்தாலும்
கொண்டபெண்டைவிற்பா ருண்டோநீசொல்லுவாய்(பெ)

அரசன் வசனம்.

பெண்ணரசே, எவ்விதம் உன்னைவிலைகூறிவிற்பேன் என்மனம் நாணுதே என்செய்வேன்.

சந்திரவதி வசனம்.

அரசே, தாம் நாணமடைந்தால் கடன்தீராது திடசித்தத்துடன் சீக்கிரம் விலைகூறும்.

அரசன் வசனம்.

கண்மணீ, இந்த கர்மசண்டாளன் விலைகூறி விற்கின்றேன் வா.

மந்திரி விருத்தம்.

படியையயாருகுடைநிழற்கு லிருந்துகாத்த
பார்த்திபனேநின்மனது பதரவேண்டாம்
வடிவுறுமொண்முகஞ்சோர்ந்து நாணவேண்டாம்
வண்குமுதவாய்திறந்து வருந்தவேண்டாம்
துடியிடைபென்றுயுடனே துணைவன்றன்னைத்
தொன்னகரில்விலைகூறி விற்கவேண்டாம்
அடியவனைவிற்றுமுனி கடனைத்திரும்
அடிபணிந்தேனகவிசன மகற்றுவீரே.

அரசன் வசனம்.

மந்திரீ யாதொரு விஸ்வாமித்திரமுனிவர்க்குக் கொடுக்கவேண்டும் கடனுக்கு ஜவாப்தாரி நானேயல்லது நீயல்ல உன்னை விலைகூறி விற்பதும் ஞாயமல்ல சத்தியத்திற்குப் பழுதுவரும் இந்தஎண்ணத்தை விட்டுவிடு விசனமுறாதே.

ம-ரி-வ-ம். நல்லது அரசே.



269-வது பக்கம் சந்திரமதியைவிற்கிறபாகம்.

ஸ்ரீ

அரசன்மனைவியை

# விலைகூறும்பாகம்.

அரசன் விருத்தம்.

காருலவும்நாடுநகை ரிழக்கச்செய்தாய்
கனமன்னரனைவரையு மிழக்கச்செய்தாய்
போருலவும்நாற்படையு மிழக்கச்செய்தாய்
பொற்புநற்பூஷணங்க ளிழக்கச்செய்தாய்
பாருலவுபரதேசி யாகச்செய்தாய்
பரிவுடனெயிப்பதிக்கு வரவுஞ்செய்தாய்
சீருலவுமுனிகடனுக் காகவின்று
தேவியையான்விற்கவுமோ செய்தாய்தேவே.

அரசன் தரு.

நீசொன்னதே பொய்சொல்லலாகுமோ என்றமெட்டு.

இராகம்-தேசிதோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

என்னென்னபாவங்கள்செய்தேன் சிவனே-நான் (எ)

அநுபல்லவி.

உன்னடியைவேண்டியே உயர்குருவெண்ணிய
இன்னகர்வீதியில் என்றனுமையாள்விற்க (எ)

சரணங்கள்.

கண்டவர்நகைப்பாரே கருமியென்றுரைப்பாரே
மண்டலமீதென்றும் மறைக்கொணாதுமே (எ)
(டை-ம்.) கடவுளே இதுவுமுன் செயலேயல்லது வேறல்ல.

அரசன் வசனம்.

பெண்ணே, உன்னையும் பாலனையும் விற்பதற்கான அடையாள மொன்றுமில்லையே இதோபார் சிறுபுல் இத்தை தலையிற்கட்டிக் வாருங்கள் விலைகூறுகின்றேன்.

(ச-திவ-ம்.) உத்திரவுபடியாகவே யவ்வாறுசெய்யுமென்க.

அரசன் விருத்தம்.

மதியறுகுகொன்றைதும்பை யணிந்தவேணி
மாதேவாருளினால் வலியவந்து
சதிசெய்முனிகவுசிகனுர் கடனால்நொந்து
தனையனையும்மனைவியையுந் தமியேன்விற்கப்
பதியிலுயர்காசிநகர் வீதிதோறும்
பாவிவிலைகூவுகின்றேன் பசுவுபாக்ய
நிதியுடையகனவான்கள் யாராநாலும்
நிமிஷமதில்வந்துவிலை கொள்ளுவீரே.

அரசன் தரு.

மதுரைமீனாக்ஷி யென்றமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ரூபகம்.

பல்லவி.

தேவியைகானே-விலை செய்யத்துணிந்தேனே-என் (தே)

அநுபல்லவி.

காவிவிழியழகி கலைமதிமுகத்தழகி
கண்மணிபெண்மணி கனகமாமணியான (தே)

சரணங்கள்.

வேதமுதலாயுற்ற வெகுவிதகலைகற்ற
விற்பனஉற்பன பிருந்தகற்பனமான (தே)

தோகையிளமாமயில் துணர்விரிகாவுறைகுயில்
துடியிடைபிடிநடை சொர்னவடிவுடைத்தான (தே)

சிற்றிடைமாதர்க்கரசி தினமெனக்குற்றசரசி
சித்தினிபத்தினி தர்மவகத்தினியான (தே)

பேணிமதிதயன்முந்து பெருந்தவஞ்செய்ததால்வந்து
பிறந்தவள்சிறந்தவள் அதர்மமறந்தவளான (தே)

பாவியெனைப்போலெந்தப் பதியிலுமில்லையிந்தப்
பதியோரேதிதியோரே குபேரலக்ஷிதியோரே-யென் (தே)

வசனம்.

இக்காசிமாநகரிலுள்ள கனவான்களே தெய்வவரப்பிரசாதத்தால்கிடைத்த எனதுநாயகியை கவுசிகமுனிவருடைய கடன்திரும்பொருட்டு இங்குவிற்கத்துணிந்தேன் யாரேனும் பொருள்கொடுத்து அடிமைகொள்ளுங்கள்.



ஐயையோ யென்னசெய்குவேன் யானே யென்றமெட்டு.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

விதியாலெந்தன் மெல்லியைநானே
விற்கஇக்கணை மேவுகின்றேனே (வி)

பதியெழ்புகழ் கெதியுள்ளோரே
பருங்காசி மாநகரோரே (வி)

பாவியெனப் பூவுலகின்மீதே
பட்டந்தரித் திட்டேனிப்போதே (வி)

ஆவிவெட்டிக் கூவிக்கூவியே
அச்சமுற்றே யிகழுணர்ந்தாவியே (வி)

திடமாமுனி கடன்பொருளாலே
நிதிலாத வீதிகளிலே (வி)

மடமானிகர் மாதிவளையே
மான்பாய்விலை சொல்வேனிவ்வேளையே (வி)

வாங்கப்பொருள் மழைபெய்குவீர்
மகத்துவம்நீவீர் மிகுத்தாய்குவீர் (வி)

சந்திதயம் கோங்கிவாருமே
எந்தன்முக பின்னுபாருமே (வி)

வசனம்.

யாதொரு ஆயிரம் பணமுடியைக்கொண்ட ஆதிசேடனை மிஞ்சிய விவேகமும் குபேரனைமிஞ்சிய சம்பத்துமுடைய காசிதேசவாசகனவான்களே இந்தக்காமசண்டாளன் வருந்துகின்றதற்காவ திரங்கிவந்து யான்சொல்லும் பொருளைக்கொடுத்து இவளை அடிமைகொள்ளுங்கள் உங்களனைவர்க்கும் அனேக புண்ணியமுண்டு கருணைசெய்யுங்கள்.

அரசன் விருத்தம்.

காசிநகர்வாசிகளே கேளும்நல்ல
கருமத்தாற்காசினியை யிழந்தாங்கெய்திக்
கோசிகமாமுனிகடனை யகற்றுதற்குக்
கொடியனிடமவகாச மில்லாதிந்நாள்

மாசில்லாமனைவியுடன் மகனைவிற்க
மனந்துணிந்தேன்மகிழ்வுடனே வந்துநீவிர்
கூசிடாதரும்பொருளைக் கொடுத்துக்கொள்வீர்
கோடிபுண்ணியங்கூடும்விலை கூறுவேனே.

அரசன் தரு.

சுந்தரேசா யெந்தனையாள்வா யென்றமெட்டு.

இராக-தேசிகதோடி-இராகம்-ரூபகம்.

கண்ணிகள்.

கொண்டபெண்டைக் கூறுவேன்விலை-விலை
கொள்ளவும்வாரும் உள்ளபொன்தாரும் வள்ளன்மைசேரும்
கூவி-பாவி குலமகனுடன்(கொ)

இயானைமேலோராளிருந் தவன்கையால்-கையால்
எறிகவண்கல் யேகுமந்நிலை யிருசிநிமலை
யீவீர்-நீவீர் இந்தவீதியில்(கொ)

கோசிகர்பொன்கொடுக்க வகையின்றியின்றிக்
கூசியேபரதேசிபோலவே காசிமாநகரைக்
கூடி-நாடி கொடியகருமியான்(கொ)

கோடியபுண்யம்நாடிடும் மகிழ்மகிழ்
கூறும்வதனம் பாரும்விதனம் தீருமித்தினம்
கோல-சீல குணமுள்ளோர்களே(கொ)

வசனம்.

கேளுங்கள் காசிமாநகரிலுள்ள கனவான்களே எனது பத்தினியையும் பாலகனையும் விற்பதானவிலை எவ்வளவெனில் மும்மதம்பொருந்திய ஓர்யானையின்மீது ஓர்மனிதன்நின்று அவன்கையாலெறிந்த கவண்கல்லேகும் அளவு செம்பொன்னாகும் இவ்வண்ணமேகொடுத்துஇவர்களையும் அடிமைகொள்ளுங்கள்.

அரசன் விருத்தம்.

காசியாவணங்கள்தோறுங் காதலிதனக்குரோக்கம்
பேசினேன்கனகம்நல்கும் பெருந்தனமுடையார்காணேன்
தேசுறுமின்றுமுள்ள தெருக்களுமிலையேசொல்வேன்
கோசிகமுனிபொன்றந்து கொள்ளுவோர்வருகுவீரே.



அரசன் தரு.

தங்கமேயெந்தக்காலம் வந்தெனைத்தாயே யென்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

மாதுடன்குல மகனையும்விற்பேன் வாங்கவாருமே
வேதமாமுனி நாதர்தங்கடன் வினையைத்தீருமே(மா)

மாநிலத்தில் மனுத்தெய்வமென வழங்கும்ஜேஷ்டரே
மேனிலத்தோர் வேண்டும்வேத விப்பிரசிரேஷ்டரே(மா)

வசனம்.

உலகத்திற்கு மானிடதேவதையாகப் பிரகாசிக்கும் ஜேஷ்டராயும் தேவர்களனைவரும் வேண்டத்தக்க நான்குவேதங்களையும் உணர்ந்து கரைகண்டவராயுமிருக்கின்ற விப்பிரசிரேஷ்டர்களே யாதொரு விஸ்வாமித்திர முனிவருடைய கடனென்னும் வினையைமீட்டுதற்காக எனதுபாலனையும் பத்தினியையும் விலைகூறிவிற்கத் துணிந்திங்குவந்தேன் நான்சொல்லும் பொருளைக்கொடுத்து இவர்களை யடிமைகொள்ளுங்கள் மிகவும்புண்ணியமுண்டு.

ஐயோ தெய்வமே இந்த அக்கிரகாரத்தில்வந்து யானடைந்த குறையையெடுத் தெவ்வளவோசொல்லியும் ஒருவரேனும் என்னெதிரில்வரவில்லை இதுவுமுனது திருவருளோ அறிகிலேன் இனி அடுத்த வீதிகளிலாவதுசென்று விலைகூறுகின்றேன்.

அரசன் தரு.

மன்னுயிரைத் தன்னுயிர்போல் மதிக்கும்நேசரே
மன்னும்ரத்ந மகுடம்புனைந்து வயங்கும்ராசரே (மா)

வசனம்.

யாதொரு வையகத்திலுள்ள மன்னுயிரைத் தன்னுயிர்போல மதித்துக்காப்பதில் நேசமுள்ளவராயும் அழகுபொருந்திய ரத்தினமணிமகுடம்புனைந்து பிரகாசிப்பவராயுமிருக்கின்ற அரசர்களே கௌசிகமுனிவருக்குக் கொடுக்கவேண்டிய கடனுக்காக எனதுமனைவியையும் மகனையும் விலைகூறவிற்கவந்தேன் பொருள்கொடுத்து பெற்றுக்கொள்ள வாருங்கள்.

கடவுளே இந்த அரசர்வீதிகளில் நின்று எவ்வளவோ யான்வருந்தியும் ஒருவரேனும்வந்து விலைகேட்கவில்லையே இனியென்செய்வேன் இன்னும் அடுத்தவீதிகளிலடுத்து விலைகூறுகின்றேன்.

அரசன் தரு.

அரும்புகழ்சேர் ஆதிசேட — னனையபூகரோ
வரும்பொருள் தெரிந்துரைக்கும் — மதிவிவேகரோ (மா)

வசனம்.

இத்தெருவீதியில்வசிக்கும் மந்திரிமார்களே நான்பட்டகடனைக்கொடுப்பதற்கு ஐவேறில்லாது பெண்பிள்ளை யிருவரையும் விலைகூறி விற்கவந்தேன் பொருளைக்கொடுத்துப் பெற்றுக்கொள்ளுங்கள்.

கருணையங்கடலே இங்கும் முறையிட்டதில் ஒருவரும் எதிர்வரக்காணேனே யாது பாபஞ்செய்தேன் இன்னும் வேறு தெருவீதியில் மேவி விலைகூறுகின்றேன்.

அரசன் தரு.

கொண்டபடியே கூறிலாபங் — கொஞ்சப்பெறுவேரோ
மண்டலத்துள் வணிகரென்ன — வழங்கியுறுவோரோ (மா)

வசனம்.

இவ்வீதியின் கண் வீற்றிருக்கும் மூன்றாவது வர்ணவணிகர்களே இக்காலமெனக் குண்டாகிய கடனைத்தீர்க்கும் பொருட்டு இவ்விருவரையும் விற்கத் துணிந்தேன் விருப்புற்றவர்கள் வந்து பொருட்கொடுத்து வாங்கிக்கொண்டு செல்லுங்கள்,

அந்தோ காசிவிசாலாக்ஷி சமேத விஸ்வநாதபெருமானே இங்கொருவரும் எனைக் கேட்கவில்லையே இதற்கியாதுபாயஞ் செய்வேன் இன்னும் வேறுவீதியிற் சென்று விற்கின்றேன்.

அரசன் தரு.

கணக்கிலாத வல்லமைக்குக் — காரணர்தரோ
இணக்கமான பூவைசிய — ரெனுங்குலத்தோரோ (மா)

வசனம்.

சகல வல்லமைக்கும் காரணர்தாகப் பிரகாசிப்பதான பூவைசியரென்னும் வேளாளர்களே முனி கடனால் முறையிடுகின்றேன் யான் சொல்லும் பொருளைக்கொடுத்து இவர்களை யாட்கொள்ளுங்கள்.

ஈசனே இங்கும் இவர்களை விலைக்கு வாங்குவதற்கு ஒருவரேனும் வரக்காணேனே.



அரசன் தரு.

அளகைநாட்டை யாள்குபேர — னனைபதியோரோ
களபமுறித்த கடவுள்வாழும் — காசிப்பதியோரோ (மா)

விள்ளற்கரிய வேணியானை — வேண்டும்அசைவரோ
உள்ளக்கருணை வெள்ளமோங்கும் — உயர்ந்தவணிகரோ (மா)

காசுசேரும் நவமணிகளின் — கற்கள்விற்போரோ
மாசுமையுறும் தங்கம்பொன்வெள்ளி வைத்துவிற்போரோ (மா)

எவரும்பூண வெழிற்பணிசெய்து — என்றும்விற்போரோ
அவமதிப்பின்றி வட்டிக்குப்பொரு — ளளிக்கும்அறிஞரோ (மா)

வேண்டியபல சரக்குகள்வைத்து — விற்குங்கடையோரோ
பூண்டிடவர்ணப்பொன்னுடைவிற்கும் — புதியகடையோரோ (மா)

வசனம்.

தெய்வமே விஸ்வாமித்திர முனி கடனைக் கொடுக்கும்படியான பொருளுள்ளவர்கள் இப்பெரிய நகரில் ஒருவருமில்லையோ.

இராகம்-தேசிகதோடி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

வருகுவீர்மாதனை — வாளே-யெந்தன்
மனைவியுடன்மகனை — வாங்கநீர்தானே (வரு)

கரியின்மேதொருவ — னின்றெறிந்த-தவன்
கல்லேகுமளவுபொன் — கல்கிடவென்முன் (வரு)

முனிதாதர்செய்திடுஞ் — சதியே-ஐயோ
இனியென்னுற்பொறுக்க — வேலாதிதுதியே (வரு)

வருந்துமென்வதனத்தைப் — பார்க்க-கொண்ட
பெருந்துயரியாவையும் — பேணியேதீர்க்க (வரு)

கொடியவன்மேற்கருணைகீர் — கொண்டு-எந்தன்
மிடியையகற்றுதற்கு — கிளைவினிற்கண்டு (வரு)

பொது வசனம்.

இவ்விதம் அரசன் விற்கிறதும் விலைகூறக்கேட்டுக் காலகண்டன் வருகிறவிதம் அறிவீர்கள்.

காளகண்டன் விருத்தம்.

காசினிபுகழுஞ்ஞானக் காதிமன்சேயனான
கோசிகன்மாய்கையாலே கோசலதேசமன்னன்
மாசிலாமனைவியோடு மகனையும்விலைக்குவாங்கக்
காசியில்வாழுங்காள கண்டனும்வருகின்றானே.

இராகம்-தன்யாசி-தாளம்-ஏகம்,

பல்லவி.

வந்தானே காளகண்டன் சபைதனிலே (வந்)

அநுபல்லவி.

சிந்தைமிகமகிழ்ந்து திருநாமமுமணிந்து
விந்தையுறநடந்து வேகமுடனே (வந்)

சரணங்கள்.

கையிற்பிரம்பிலங்க கவசக்குழைதுலங்க
மெய்யினுடைவிளங்க விண்ணோர்புகழ (வந்)

நரைத்ததாடியுந்துன்ன நற்றலைக்குல்லாமின்ன
வரைத்தடத்தோளினுன்ன மாதிரிகொண்டு (வந்)

அரிச்சந்த்ரன்மகனையும் அவன்மனைவியையும்
கிரிச்சிந்த்ரன்புகழ்ந்தோங்க விலைக்குவாங்க (வந்)

காளகண்டன் விருத்தம்.

தருவரசன்சபையின்முன்னே சாற்றிவந்த
சபதமுடித்திடமுனிவன் றன்சொற்போலே
திருவுறுவாளரிச்சந்திரன் றேவியோடு
சேயனையும்விலைகொள்ள வக்கினிதேவன்
பெருமைபெறுங்காசிநகர் மீதுவேதப்
பிராமணர்தங்குலத்துதித்துப் பெரியோர்வாழ்த்த
அருள்பெருகுகாளகண்ட னென்னநாமம்
அணிந்திட்டேன்சபையில்வரத் துணிந்திட்டேனே.

வசனம்.

மகாரம்மியம் பொருந்திய தேவலோகத்தில் தேவேந்திரமகாராஜன் முன்னிலையில் யாதொரு விஸ்வாமித்திரமுனிவன் சொல்லிவந்த சபதத்தின்பிரகாரம் அரிச்சந்திரனைப் பொய்யனாக்கும்படிக்கான வுபாயத்திற்காக அவனது மனையாளையும் மகனையும் கிரையத்திற்கு வாங்கும்பொருட்டு அவைது வுறுதிபோலவே அக்கினிதேவனாகிய

174



யான் இக்காசிமாநகரத்தில் வேதப்பிராமண குலத்துதித்துப் பெரியோரனைவரும் வாழ்த்த காளகண்ட அய்யனென்ற பெயரைவகித்து இவன் வரத்துணிந்தேன்.

மீண்டும் யாதொரு கோசிகமுனிவன் அவ்வரிச்சந்திரனை யெவ்வளவோ கஸ்டமடையும்படிசெய்தும் அவனதற்குள்ளாகி சத்தியத்தைக் காப்பதுவே தர்மமென்றிருக்கின்றான் அவனைப் போலவே அவன்மனைவியும் மகனுமிருக்கின்றார்கள் இப்பேர்க்கொற்ற தர்மபூபதியைஜெயிப்பதற்கான தந்திரமுள்ளவர் யாவர் ஆனால் முனிவனுடையவுறுதிப்படி நம்மாலென்றமட்டும் பார்ப்போம்.

இக்காலம் யாதொரு விஸ்வாமித்திரமுனிவருடைய வுத்தரவு போல அரிச்சந்திரனது மனைவியையும் மகனையுங்கிரையத்திற்கு வாங்கும்பொருட்டு பிரீதியுற்றவனாக இங்ஙனம்வந்தேன் அவ்விடத்தில் யாரோ ஒருவன் மாதையும் மகனையும் விற்பேன்விற்பேனென நெடுநேரமாகவுருந்தி விலைகூறுகின்றான் ஆனால் ஒருவேளை அவன் அரிச்சந்திரனாக விருப்பானோ யாராயிருந்தாலும் சரி நாம்போய்ப்பார்ப்போம்.

ஆ ஆ என்ன ஆச்சரியம் அவ்விடத்தில்யாரோ ஒருவன் ரதிமனை என்போலும் நிற்கின்றானே ஒருக்கால் அவன்றானே அரிச்சந்திரன் நல்லதிருக்கட்டும் அங்கவனிடஞ்சென்று விசாரிப்போம்.

காளகண்டன் விருத்தம்.

பவமிலாமகத்துங்காசிப் பட்டணவீதிதோறும்
அவமுறக்கொண்டபெண்டைச் சுதனைநான்விற்பேனென்ன
விவரமாய்க்கூவிக்கூவி மெலிந்திடுமனிதன்யாரோ
அவனையிங்கின்றென்ன வறிகிலேனறிகிலேனே.

வசனம்.

இக்காசிமாநகரிலுள்ள தெருவீதிகள்தோறும் கொண்டபெண்டையும் குமாரனையும் கிரையத்திற்கு விற்பேன்விற்பேனென்று கூவிமெலிவுறும் மனிதன் யாவனோ அவனை இன்றென்ன வறிகிறேன், யாரப்பா இங்குபெண்பிள்ளையை விலைகூறியவன்.

அரசன் விருத்தம்.

தனைநிகரில்லாவேத சற்குணமணியேகேளும்
அனைவரும்புகழுமிந்த அருள்நகர்வீதிதோறும்
வினைவலியாலேகொண்ட விற்பனமனைவியோடு
தனையனைவிற்பேனென்னச் சாற்றியபாவியானே.

வசனம்.

கொண்டபெண்டையும் பிள்ளையையும் விற்பெனென வழுத்திய கருமசண்டாளன் யானே சுவாமி.

காளகண்டன் விருத்தம்.

இருகண்ணீ ரருவிபாய இவ்விதமுரைத்தநீயார்
திரிநகர்பாதுநாம தேயமும்யா திங்குன் றன்
அருகினில்நிற்குஞ்சேயார் அவன்யாரிவ்வந்தணன்யார்
இருதயந்தேறிமெய்யா யியம்புவாய்தெரியத்தானே.

வசனம்.

இவ்வித பரிதாபத்தோடுரைத்த நீயாவன் உனது ஊர்பேர்யாது இங்குனதருகில் நிற்பவர்கள் யாவர் தெரியச்சொல்வாயப்பா.

அரசன் விருத்தம்.

அடியவனரசன்பேரூர் அரிச்சந்திரனயோத்தியித்த்
துடியிடையாளென்பெண்டு சுதனிவன்சுமதியன்றேன்
கொடியனேன்கொடுக்கும்பொன்னைக் கொள்வதற்காகவந்த
வடிவுறுமறையோனின்னோர் வாய்மையீதறிவீர்சுவாமி.

வசனம்.

கேளும் சுவாமி அடியேன் அயோத்தியாபுரியை யாண்ட அரிச்சந்திரன் இவள் எனது நாயகி இவன் எனது குமாரன் இவர் எனது மந்திரி இவர் நான் கொடுக்கவேண்டிய கடன் பொருளை வாங்கிக் கொண்டு போகவந்த வேதியர்.

காளகண்டன் விருத்தம்.

சொந்தமாய்வாழ்ந்திருந்த தொன்னகர்நாடிழந்து
பந்தமேயில்லாத்தூய பரதேசிபோலவிந்நாள்
இந்தநன்னகர்க்குளெய்தி யிலக்குமிபோன்மாதோடே
கந்தனேர்மகனைவிற்கக் காரணம்யாதுவேந்தே

வசனம்.

அரசே நீ நாடுநகரையிழந்து இந்நகர்க்குவந்து பெண்டுபிள்ளை யிருவரையும் விற்கக் காரணம்யாது சொல்லும்.



அரசன் விருத்தம்.

கோசிகமகாமுனிவர் நீசகுலமாதர்தமைக்
கொள்வாயென்னப்
பேசியசொற்கிணங்காதுபெருநகரைத் தருவனென்றேன்
பெற்றுக்கொண்டு
மாசிலாவேள்விசெய வழங்கியவப்பொருட்வகை
வழுத்தா யென்னக்
காசியிற்போய்த்தருவனென்று நகரையுமழைத்துநகர்
கடந்திங்குற்றேன்.

காளகண்டன் விருத்தம்.

வேந்தனேயென்னகத்து வேலைகள்புரிவதற்கோர்
ஏந்திழையாளுஞ்சேயு மிருந்திடின்றுவேண்டும்
பாந்தமாயுனதுசொந்தப் பாரியைப்பாலனை நீ
யீந்திடுவாயோ அல்ல தியாயோவறிகிலேனே.

அரசன் விருத்தம்.

வீதிகடோறுஞ்சென்று விலைக்கியான்விற்பேனென்ன
ஓதியும்வாங்குதற்கின் றொருவருவ்வரவேயில்லை
ஆதியிற்செய்தபுண்யம் அந்தணராகவந்நீர்
மாதொடுமகனைவிற்பேன் வாங்குவீர்தயவுசெய்தே.

காளகண்டன் விருத்தம்.

இலக்குமிபோன்றனிந்த வேந்திழையாளையிங்கு
விலைக்குநான்கொண்டபின்னர் வீட்டினிலுள்ளவேலை
நலக்குறச்செய்யாவிட்டால் நானென்னசெய்வதாமோ [வே
துலக்குறவிவளென்னென்ன தொழில்செய்வாள்சொல்லுவா

அரசன் விருத்தம்.

பதுமைமேலெழுதுவாள்பூம் பஞ்சணையலங்கரிப்பாள்
மதுமணமலரெடுத்து வகைவகையாய்த்தொடுப்பாள்
குதுகலக்கலவைச்சாந்து கூட்டுவாள்கூறுதற்குப்
பதில்மொழிகூறுள்சத்திய பங்கமுஞ்செய்யாள்சுவாமி.

வசனம்.

எனது மிடியைத்தீர்க்க வந்த மறையவர் சிகாமணியே எனது மாதானவள் பொவன பதுமைகள் எழுதுவாள் விசித்திரமாகப் பஞ

சனை யலங்கரிப்பாள் தேனொழுகப்பெற்ற புஷ்பங்களை மாலையாகத் தொடுப்பாள் கலவைச்சாந்து சேர்ப்பாள் சொன்னவார்த்தைக்குப் பதிற்சொல்லமாட்டாள் சத்தியபங்கஞ் செய்யாள் சுவாமி.

காளகண்டன் விருத்தம்.

இவ்விதந்தேகநோகா தொழிற்பணிசெய்யுமிம்மா
தெவ்விதமெனதகத்தி னேவலைச்செய்வளாமல்
ஒவ்விடத்தக்கதல்ல வுன்மனப்படியார்க்கேனும்
இவ்விடமதனில்விற்று இருடியின்கடன் றீர்ப்பாயே

அரசன் விருத்தம்.

மாவினையனையரூப மாதவா கோபம்வேண்டாம்
ஏலவேதாங்கவெந்த வேவலைச்செயச்சொன்னாலும்
இலையாய்ச்செய்வளன்றிச் செய்திடாதோடாளாமல்
சாலநானுரைக்கும்பொன்னைத் தந்துநீகொள்வீரின்றே.

காளகண்டன் விருத்தம்.

அப்படியானாலந்த அருள்முனிகடனைகற்ற
இப்படிமைந்தனோடே யேந்திழையாளைவிற்கும்
துப்பதுமாணிப்பொன்னின் தொகையுமெவ்வளவுஅத்தைச்
செப்புவாயிவளைவென்னத் தெரிவதற்கெந்தன்முன்னே.

அரசன் விருத்தம்.

மும்மதம்பொருந்துமியானை முதுகினிலொருவனின்று
தம்மலர்க்கையால்வீசுந் தனிக்கவண்சிலைபோந்தூரம்
கும்மலாய்ப்பொருட்குவித்தாற் குணமுடனிவளைத்தந்து
அம்மகாமுனிருணத்தை யகற்றுவேன்மனநவைநோனே.

காளகண்டன் வசனம்.

சரி நீ சொல்லியபிரகாரமே பொன்தருகின்றேன் விபரமான சாசனம் எழுது வேந்தனே.

(அ-ன்-வ-ம்.) இதோ எழுதுகின்றேன்.

அரசன் ஆவணமெழுதும் ஆசிரியவிருத்தம்.

அருள்மேவுகாசிமாநகர்மேவுகாளகண் டையர்க்கயோத்தியாண்ட
அரசரிச்சந்த்ரனென் அங்கையாலெழுதிய அருளுமாவணம்யாதெனில்
தருமேவுவனவாசமுனிகோசிகர்க்கின்று தவணையின்பிரகாரமே
தவறுதமலுதவவேண்டியபெருங்கடன்பொரு டமக்கியானீடாகவே
திருமேவுமெந்தேவிமாசந்திரமதியுடன் செய்தேவதாசனையுமே
தேவரீருக்கடிமையாகவேவிற்றெனதுசிந்தைகளிகொண்டுபெற்ற
பொருளானைமிசைஏறிஒருவீரனெறிகவண் பூண்டசிலைபோகுமளவே
பொங்குமுடனேயிதற்குச்சாக்ஷிநக்ஷத்திர பூசுரனுமதியுமாமே.



அரசன் வசனம்.

சுவாமி சாசனம் எழுதியாச்சுது பார்த்துக்கொண்டு பொருளைக் கொடுங்கள்.

காளகண்டன் வசனம்.

அரசனே, நான் கொடுக்கும்பொருளைப் பெற்றுக்கொள்பவர் யார்.

(அ-வ-ம்.) இதோநிற்கும் நக்ஷத்திரையர்தான் பெற்றுக்கொள்பவர்.

காளகண்டர் வசனம்.

கேளும் நக்ஷத்திரையரே பொருளை உம்மிடம் கொடுக்கின்றேன் அரசனிடம் பெற்றுக்கொண்டதாகச் சொல்லும்.

நக்ஷத்திரையர் வசனம்.

அரிச்சந்திரா நீ விஸ்வாமித்திரருக்குக் கொடுக்கவேண்டிய கடன் பொருளை யான் இவரிடம் பெற்றுக்கொண்டேன்.

அரசன் வசனம்.

சுவாமி உண்மையாய் இவரிடம் பொருளைப் பெற்றுக்கொண்டீர்களா.

(ந-ன்-வ-ம்.) ஆம் அரசே.

அரசன் வசனம்.

பிரபு, தேவரீர் அயோத்திக்குச்சென்று அந்த விஸ்வாமித்திரரைக்கண்டு என்வந்தனம் சொல்லவேண்டும்.

(ந-ர்-வ-ம்.) நல்லது வேந்தனே.

## சந்திரவதி பிரிகின்றபாகம்.

காளகண்டன் வசனம்.

அரசனே, உன் அபிப்பிராயப்படி பொருளைக் கொடுத்துவிட்டேன் உனது பத்தினியையும் பாலகனையும் நம்மிடம் ஒப்புவிக்க இன்னும் தாமசம் யாது.

(அ-ன்-வ-ம்.) இதோ ஒப்பிவித்தேன் சுவாமி.

(கா-ன்-வ-ம்.) அடியே சந்திரவதி அடாபயலே வா அகத்துக்கு.

சந்திரவதி வசனம்.

சுவாமி எனது பர்த்தாவிடம் சொல்லிக்கொண்டு வருகின்றேன் கோபம்வேண்டாம் சற்றிருங்கள்.

சந்திரவதி விருத்தம்.

அரசர்கட்கரசேயெந்த னுசைநாயகனே தர்மக்
கரதலத்தோனேயுந்தன் கழலினைபோற்றிபோற்றி
பரவைசூழ்பாரிலென்ன பவமிழைத்தேனோவின்னுள்
பிரமனுமும்மைவிட்டுப் பிறிந்திடவிதித்தானேயே.

ஆசைமன்னவா வென்றமெட்டு.

இராகம் - சங்கராபரணம் - தாளம் - ரூபகம்.

பல்லவி.

ஏன்றுசெய்குவேன்-இனி     ஏதுசெய்குவேன்-துரையே (ஏ)

அநுபல்லவி.

பன்னகாபரணப்     பரமன்கிரணப்
பொன்னடியைத்தினம்     போற்றும்பலனிதோ (ஏ)

சரணங்கள்.

சத்தியவாக்கி     யரோ-குண
சாந்தயோக்கியரோ     துரையே-சத்திய
எத்திசையும்புக     ழேகசக்கிராதிப
இத்தினமும்மைவிட்     டெப்படிப்பிறிவேன் (ஏ)

ஆகத்தே றுமோ     எந்தன்
ஆசைமா றுமோ     துரையே-ஆகம்
யோகவசிகர     பூதகுணகர
ஆகமனோதுபு     ராணமுணர்ந்தவா (ஏ)

சகிக்கமுடியுமோ     இதை
வகிக்கமுடியுமோ     துரையே-சகி
அகிர்த்தியமென்ன     அவனியிற்செய்தேனோ
மகத்துமைமுன்னை     மறையோரழைக்கிறார் (ஏ)



வசனம்.

பிரபூ, இக்காலம் கௌசிகமுனிவரது கடனால் யாதொருபிரமன் தம்மைவிட்டுப் பிறியும்படிக்கும் விதித்தானே யாதுசெய்வேன்.

அரசன் விருத்தம்.

தேவியேகின்சொற்போலச் சேயையுமுனையும்விற்றுக்
காவியவிஸ்வாமித்திரர் கடனையின்றொழித்தேன்வெய்ய
பாவியென்போலேயிந்த பாரினில்யாருமுண்டோ
நீவிசனப்படாதே நீள்வினைப்பயனிதாமே.

ஆசைமன்னவா வென்றமெட்டு.

இராகம் - சங்கராபரணம் - தாளம் - ரூபகம்.

பல்லவி.

அழுவதாகுமோ அயன் அமைப்புப்போகுமோ-கண்மணீ (அ)

அநுபல்லவி.

செழுபடமயிலே     சீராருங்குயிலே
பழுதுறுக்கிளியே     பங்கஜவனிதே (அ)

சரணங்கள்.

வனிதாமத்     தினமே-நவ
மணிமுத்தினமே.     கண்மணி-வனி
முனிவர்செய்திடும்     அனியாயமாயிதை
இனியெண்ணிடிற்பய     னேதேனுமில்லையே (அ)

கட்டிக்     கரும்பே-மணம்
கமழ்மலரரும்பே     கண்மணி-கட்டி
மட்டிலாப்புகழ்     மன்னன்மதியன்
இஷ்டமுடன்பெற்ற     கட்டழகியாளே (அ)

கற்புக்     கரசியே-எந்தன்
காதற்கரசியே     கண்மணி-கற்பு
நற்பொருளுற்றோர்     நான்குமறையும்
உற்பனமாய்க்கற்ற     விற்பனியாளே (அ)

வசனம்.

கண்மணி யாதொரு சுருதிகளின் பொருளைத்தெரிந்த விற்பனியாயிருந்தும் நீ இவ்வண்ணம் வருந்துவது அழகோ.

சந்திரவதி விருத்தம்.

மனைகடல்சூழுமிந்தக் காசினிமீதுவாழும்
மனைவியர்க்குற்றதெய்வம் மணாளனென்றருந்தவத்தோர்
நினைவிலேபுணர்ந்துநூலில் நிகழ்த்தினராகையாலே
அனையதையெண்ணியெண்ணி யகமெலிவுற்றேன்வேந்தே.

நாதனைப்பிறிந்திட வசமோதுரையே யென்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

நாயகனைப்பிறிய லாமோ-துரையே
நானிலத்திற் கிறைவே-துரையே (நா)

அநுபல்லவி.

தூயமெய்ஞ்ஞானச் சுடரொளியான
தேயமெய்க்குத் தெய்வங்கட்குத்
தீங்கொன்றுஞ் செய்தறியேன்-துரையே (நா)

சரணங்கள்.

சகலருஞ்சூழ தரணியில்வாழ
திகழுஞ்சந்திர திவாகரறிய
திருமணஞ்செய் தவர்கள்-துரையே (நா)

மனத்துளென்மேல்கத்தி வைத்தவின்பத்தைப்பற்றி
நினைக்கநினைக்க நெஞ்சமுமுடலும்
ரொம்பவும்வருந்து தையோ-துரையே (நா)

மறையவர்வைவார் வன்கண்மைசெய்வார்
இறைவனேநா னென்றுசெய்வேன்
எவ்விதமாக வுய்வேன்-துரையே (நா)

வசனம்.

அரசே, இதுவரை யாதொரு தெய்வங்கட்கோர் குறையேனுமி ழைத்தறியேனே இக்காலம் நமக்கிவ்விதிவரக் காரணமென்னே.

அரசன் விருத்தம்.

இகத்தினும்பரத்தினுந்தா னேந்திழைமார்க்குத்தெய்வம்
மகத்துவனுளனென்ப வாய்மையவனையநீர்மை
அகற்றினன்விஸ்வாமித்ர முநினுமன்பாயுந்தன்
அகத்துள்யானிருப்பதாக வனுதினமெண்ணுவாயே



நாதனைப் பிரிந்திடவசமோ யென்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

என்னசெய்திடலாம் எனதுகண்மணியே
யென்றுங்கற்புக் கனியே-கண்மணியே (எ)

அநுபல்லவி.

அன்னமென்னடையாளே அங்கொடியிடையாலே
முன்னான்செய்த முழுப்பவத்திற்கு
மூவரையே வருந்தி-கண்மணியே (எ)

சரணங்கள்.

முன்பரமேட்டி முடித்தலையோட்டில்
இன்பமுடனே யெழுதியவெழுத்தை
யெவர்வெல்லக் கூடுமடி-கண்மணியே (எ)

வருத்தமுற்றுமனது வருந்துவதாலது
இரக்கமுற்று யாதுபயனோ
மெய்க்கிடுமித் ததியில்-கண்மணியே (எ)

விலைக்கொண்ட வேதகாளகண்டர்
நலத்துடனே ரக்ஷித்திடுவார்
நற்றயைவைத் திடுவார்-கண்மணியே (எ)

வசனம்.

கண்மணி, ஆதியில் அயன் விதித்தவிதியை யாவரால் விலக்கத் தகும் விசனமுறாதே உன்னை அடிமைகொண்ட காளகண்டையர் வன் கண்மைசெய்யாது பாதுகாப்பார் மனதைத்திடப் படுத்துவாயடி மாங்குயிலே.

சந்திரவதி விருத்தம்.

இதுவரையொருவர்க்கேனு மிடுக்கமிட்டறியேன்பாதி
விதுவணிவிமலனுக்கோர் வினைபுரிந்தறியேனையோ
எதுவிஷயத்தினாலோ இவ்விதிவந்ததிந்நாள்
அதுவிதமின்னதென்ன வறிகிலேனரசர்கோவே.

மாதவமேயிவ்வுருவாய்வந்ததுகா வென்றமெட்டு.

இராகம்-சகானா-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஐயையோ இவ்விதிதானோ    அனுசியகாரணமேனோ (ஐ)

அனுபல்லவி.

மெய்யையே    வின்றும்விவேகா
வீர-சூர    தீர-யோகா (ஐ)

சரணங்கள்.

தங்களைப்போல்நீதியுளார்    தாரணியில்யாவருளார்
வெங்கண்முனிதங்கபட    மேன்மையென்சொல்வேனும்மிடம் (ஐ)

விற்றுருணக்தீர்த்திட்டாலும்    மெய்யையின்றுகாத்திட்டாலும்
உற்றுமைப்பிறிவெதெனி    னுள்ளமொவ்வுமோவிங்கினி (ஐ)

அன்னவரோ அதிககோபி    அருளிலாக்கொடியபாபி
என்னனான்பஞ்செய்குவாரோ    யானறியேனிந்தாளில் (ஐ)

இப்படிவந்தனைப்பற்றி    யெவர்சகிப்பாரிருகிலத்தில்
எப்படியிந்துவிசனம்    எனக்குதிக்கவெய்திமேனை (ஐ)

அரசன் விருத்தம்.

விதிவழியாலேஇந்த மேதினிமிசையனேகர்
சதிமிகவடைந்துபின்னர் சௌக்கியமுற்றுரொன்ன
மதிமிகுகுருவசிஷ்டர் வழுத்தவுங்கேட்டேனமால்
கதிதருமிறைவன்காப்பான் கவலையையொழிப்பாய்கண்ணே

மாதவமேயில்வுருவாய் வந்தது வென்றமெட்டு.

இராகம்-சகானா-தாளம்-ரூபகம்,

பல்லவி.

கன்னியேகலங்கலாமோ    கழறியசொல்மறந்துபோமோ (க...

அனுபல்லவி.

அன்னிதந்    செய்தார்முனிவே
அழுவதினிலாவ    தென்னினியே (க...

சரணங்கள்.

நாடிழந்துநகரிழந்து    நடந்துகாசிதேசம்வந்...
காடிவிதிதோறுங்கூவி    நானுனைவிற்றேனேபாவி (க...
ஈசுரன்செயல்வன்னமே    மெய்துமென்பதுந்திண்ண...
புத்திரன்மனையுள்நட்பாய்    புத்திரனுடன்வாழ்ந்திருப்பாய் (க...



துன்பமெள்ளளவுஞ்செய்யத்    துணியமாட்டாரிந்தவய்யர்
இன்பவெள்ளமென்றுநகொள்வாய்இதயவிசனத்தைவெல்வாய் (க)

சந்திரதயன்றவத்துதித்து    சந்ததமெனைத்துதித்து
இந்திரனும்புகழமாலை    யிட்டகட்டழகியாளே (கன்)

வசனம்.

பெண்ணே நீயே இவ்விதம் கலங்கினால் யானென்னசெய்வேன் கலங்காதடீ கட்டிக்கரும்பே.

சந்திரமதி விருத்தம்.

பெருமைசேர்தமதுகையைப் பிடித்தநாள்முதலாயையோ
ஒருகுறைவேனுமிந்த வுலகினிலடைந்ததில்லை
அருள்முனிகபடத்தாலே யடையவுமானேனன்றேன்
திருவுளமிருப்பாகல்லோ தெரிகிலேன்மன்னர்கோவே.

விரகமான வார்த்தைவேண்டாமென்ற மெட்டு.

இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

உந்தனைப்பிறிந்திருக்க    ஒவ்வுமோவின்றன் (உந்)

அநுபல்லவி.

சந்ததம்யானென்னசெய்வேன்    சற்குணமன்ன (உந்)

சரணங்கள்.

அவனியிலோர்பவமுமிழைத்    தறிகிலோமன்றே
இவனிவ்விதஞ்செய்யநாயந்    சிறக்குமோவின்றே (உந்)

பெண்களென்னிறபேயு    மிரக்கும்பேருலகிலே
விண்கவுசிகர்க்கிரங்கா    விதமறிகிலேன் (உந்)

இவடம்நம்போலவன்தை    யுற்றோரொருமில்லையே
கேவலமாகஇவ்விதக்கதை    கேட்டதில்லையே (உந்)

தேவரீர்பதாதிகேசத்    திருவழகையே
அவலோகிக்காண்பதென்றோ    ஐயோவினியே (உந்)

தருமமேயோருருவமாகச்    சமைந்தபுண்ணியரோ
சத்தியசத்தியத்தைக்    காக்குங்கண்ணியரோ (உந்)

வ-ம். நாயகா எவ்வா றும்மைவிட்டுப் பிறிவேன்.

அரசன் விருத்தம்.

கொடியமாதவசிரேஷ்டக் கோசிகமுனிவரிக்கப்
படிபுகழயோத்தியைக்கைப் பற்றுதற்கிழைத்தவெவ்வோர்
மிடியையுங்கற்றசித்து வித்தையின் றிரத்தையுந்தீங்
குடிலமுமெவ்வாறென்னக் கூறுவேனிக்நாள்மாதே.

விரகமான வார்த்தைவேண்ட மென்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

பண்டுசெய்தபாவத்தாலே பரமனிம்மையிலெ (ப)

அநுபல்லவி.

பெண்பிள்ளைதம்மைவிட்டுப் பிறித்தனன்மயிலே (ப)

சரணங்கள்.

சிவன்செய்யாவிடினுமந்தச் சிவன்செயலாலே
தவமுனிகோசிகர்செய்த சதியாம்புலிமேலே (ப)

இன்னமுமவரென்செய்வாரோ யானறிகிலேன்
நின்னகமெலிந்தழாதே நேசப்பூங்குயிலே (ப)

அளவிலாதவின்பமும் அங்குறுநிதியே
தளர்வதினல்யாதுபயன் தருமித்தநிதியே (ப)

மன்னவனென்தாத்திற்கேற்க வாய்த்தபெண்மணியே
என்னிலத்துங்கேடினுங்கிட்டா வெக்தகன்கண்மணியே (ப)

பற்பலபுராணங்கற்ற பாக்கியவிற்பனியே
கற்பினிலருந்ததியைக் கடிந்தபத்தினியே (ப)

வசனம்.

கண்மணி அதிவிற்செய்த பாவத்தினால் நானுன்னைவிட்டுப் பிறிந்திருக்கும்படி சிவபெருமான் கட்டளையிட்டிருக்கின்றான் இனி வருந்துவதில் யாதுபயனுண்டாகும்.

காளகண்டர் வசனம்.

ஆ ஆ இதென்ன ஆச்சரியம் ஏண்டா அரிச்சந்திரா நீயென்னிடம் தந்திரமாகப்பொருளைவாங்கி முனிவர்கடனைத் தீர்த்துவிட்டு உன்பத்தினியையும் பாலனையும் கம்முடனனுப்பாது இவ்விதம் ஒருவர்க்கொருவர் ஒலமிட்டழுதுகொண்டிருந்தால் நான் அகத்துக்கேகுவதெப்படி சீ இதுசரியல்ல சீக்கிரத்தில் அனுப்பு.



அரிச்சந்திரன் வசனம்.

இதோ அனுப்புகிறேன் சுவாமி கோபங்கொள்ளவேண்டாம்.

காளகண்டன் வசனம்.

அடியே பாசாங்குக்காரி வாடியென்னுடன் வீட்டுக்கு.

சந்திரவதி வசனம்.

சுவாமி எனது பர்த்தாவிடம் வருதிபெற்றுவருகின்றேன் சற்று பொறுத்திருங்கள் கோடிசுகிர்தமுண்டு.

சந்திரவதி விருத்தம்.

இருகரத்தாலேமாலை யிட்டிந்நாள்வரையிகத்தில்
ஒருசிறுகன்றனேனு முமைப்பிறிந்தறியேனையோ
அருமறைக்கிழவனித்தை யறிந்துசோதிக்கநெஞ்சிற்
கருதியிவ்வினைசெய்தானோ கதிர்குலத்துதித்தவேந்தே.

சோதியேயென் றுர்தனைத்தீர்ப்பா யென்றமெட்டு.

இராகம்-நமாசு-தாளம்-ஆதி.

பல்லவி.

ஐயையோவென் செய்குவேனண்ணலே (ஐ)

அநுபல்லவி

வையகராஜனே மார்த்தாண்டபோஜனே. (ஐ)

சரணங்கள்.

வேந்தனே வி-வேகசாந்தனே
மாந்தளிர்நேர்மேனி வாடுதினிநானிங்(கை)

மெய்யனே பூ-விரியுங்கையனே
ஐய்யராஜமுனி கூறுதென்சொல்வேனினி (ஐ)

அன்பனே பெ-னகமகிழின்பனே
என்பவஞ்செய்தேனோ இறைவனைவைதேனோ (ஐ)

தந்திரனே இந்-தாரணிக்கிந்திரனே
உந்தன்முகம்நானே எந்தநாட்காண்பேனோ (ஐ)

ஆளனே கண்-அரவிந்தத்தாளனே
காளகண்டசுவாமி கடியகோபியாமிங் (ஐ)

வசனம்.

அரசே, என்னையடிமைகொண்ட காளகண்டசுவாமி மிகவுங் கோபியாகவிருக்கின்றாரே எவ்வாறு ஆதரிப்பார் ஐயோதெய்வமும் இவ்விதக்கொத்ததே இதற்கென்செய்வேன்.

அரசன் விருத்தம்.

அருத்தியிற்செய்தபாவம் அகனும்நாளகனுமத்தை
யொருத்தரும்விலக்கப்போகா வுண்மையீதறிவாயாமல்
திருத்தமுற்றிலங்குமுந்தன் சிந்தையைத்தேற்றிடாமல்
வருத்தமிங்குறுவதாலே வரும்பயன்யாதாமாதே.

சோதியேயென் றுர்தனைதீர்ப்பாயென்றமெட்டு.

இராகம் - கமாசு - தாளம் - ஆதி.

பல்லவி.

மங்கையேநல் மடநங்கையே (மங்)

அநுபல்லவி.

அங்கமேநொந்தழு காதேமாதேசெழு(மங்)

சரணங்கள்.

கண்மணியென் காதற்பெண்மணி
ஒண்மணியாமீசன் உன்னையாள்வானேச(மங்)

தேவியேமெய் நிறந்திடும்ஆவியே
பாவிமுனிஜாலம் பகர்வதெவர்காலும்(மங்)

அன்னமேயென் அருள்பெறுசொர்ணமே
இன்னிலத்தின்மீதே யேதுக்குமஞ்சாதே(மங்)

பூவையேநும் புவிகுலக்கோவையே
நீவைத்தஇன்பத்தை நினைந்திடைவேனோ(மங்)

தையலேயென் சையோகமையலே
ஐயர்தஞ்சொற்படியே செய்திடுவாய்பணியே(மங்)

வசனம்.

மாதர்க்கரசியே அடிமைகொண்ட அந்தணர்சொற்படி அகத்தி
லுள்ள வேற்றொழில் செய்துவாழ்ந்திருப்பாயாக.

சந்திரமதி விருத்தம்.

கருத்தறியக்கற்புநிலை கடந்ததில்லை
கடவுளர்தம்பணிவிடையை மறந்ததில்லை
ஒருத்தருக்குமொருகுறையுஞ் செய்ததில்லை
உயர்ந்ததவமுனிவரை யிகழ்ந்ததில்லை
பெருத்தமனுநெறிதவறி நடந்ததில்லை
பிச்சையெடுப்போர்க்கியா திருந்ததில்லை
திருத்தமுறுஞ்சத்தியமொழி பிறண்டதில்லை
தெய்வம்நமையிந்தவிதஞ் செய்ததென்னே.



சாரசாக்ஷிவாலாபெட்ரு வென்றமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

யானுமைப்பிறிபகீதி யாகுமோஇவ்வகிலமீதில் (யா)

அநுபல்லவி.

வானுலகில்வாழ்மாதரும் மன்னுலகில்வாழ்மாதரும்
தானுணர்ந்திழிவாயென்றும் சாற்றுவாரோஐயோஇன்று (யா)

சரணங்கள்.

வேலையொன்றுஞ்செய்தறியேன் வெகுண்டவார்த்தைகேட்டறியேன்
காலகண்டரடிப்பாரென்னு காலமோவிதுதான்மன்னு (யா)

வெற்றிசேருங்காட்டின்மீது வேட்டையாடப்போகும்போது
ஒற்றையாயிருக்கவஞ்சி யும்முடன்வந்தேனேகெஞ்சி (யா)

அவனியெங்கும்பேர்பெற்றும் அருந்தவனுகவுற்றும்
அவர்சதிசெய்தாரல்லோ அகந்தானிரும்போகல்லோ (யா)

அரசன் விருத்தம்.

இன்றுநாங்கொடியபாவ மிழைத்திடாவிடினும்பாரில்
அன்றுநாமிழைத்திருந்தா லதுநமைவிடுமோஆமால்
என்றுநாஞ்சத்தியத்தை யியல்புறக்காப்போமாகில்
மன்றுள்நாமேலாம்வீட்டில் வாழ்கலாமென்றன்மாதே.

சாரசாக்ஷவாலாபெட் ரு வென்றமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ஆதி

பல்லவி.

வருத்தமுறுதேபெண்ணே மதிநயன்பெற்றகண்ணே (வ)

அநுபல்லவி.

ஒருத்தருமிழிவாய்ச்சொல்லார் உனையுலகிலுள்ளநல்லார்
கருத்தைத்திருத்துவையே கடவுளைத்துதிப்பையே (வ)

சரணங்கள்.

வேலைசெய்யும்விபரந்தனை வேதியர்சொல்வாரதனை
சீருடனேதெரிந்து செய்துவருவாய்மகிழ்ந்து (வ)

இன்பமானகாலத்திலே இன்படைந்தோம்ஞாலத்திலே
அன்பிலாதமுனிவனாலே ஆனோமிவ்விதமிதாலே (வ)

வசனம்.

கண்மணீ மனவருத்தப்படாதே யாதொரு சர்வஜீவதயாபர
னை கடவுள்காப்பார் அஞ்சாதே.

காளகண்டன் வசனம்.

அடிவாடி சந்திரவதி அகத்திற்கு இனிநின்றால் அடிப்பேன்.

சந்திரவதி விருத்தம்.

ஈசனேயென்னையாளு மிறைவனேயினிப்பிரானே
நேசனேவயோத்தியாண்ட நிருபனே அடிமைகொண்ட
பூசுரன்வெகுண்டுசீறிப் பொற்கரம்பிடித்துப்பல்வா
றேசியேயவரகத்திற் கிழுக்கிறானென்செய்வேனே.

வசனம்.

பிரபூ, இதோ அந்தணர் கோபங்கொண்டுசீறி யெனதுகரத்தைப்பிடித்துப் பலவாறுஏசி அவரது அகத்திற்கு வாடிவெள்ளாட்டி யென்றிழுக்கின்றாரே இக்கொடுமைக்கென்செய்வேன் எவ்வாறும் மைவிட்டுப் பிரிந்துசெல்வேன் ஐயோ இப்படியும் விதியென்தலையில் விதித்தானே.

அரசன் விருத்தம்.

கொண்டலைப்பழித்தகூந்தற் கோதையேகுளிர்வெண்டிங்கள்
கண்டநள்தனம்வாய்ந்த கன்னியேகானகத்திற்
கண்டசொற்பனத்தினுற்ற காரணம்பழுதுறாமல்
மண்டலமீதுமெய்யாய் மழுங்கவுமானதின்றே.

## அரசனுக்கும் சந்திரவதிக்கும் தர்க்கம்.

பேசியதவனை சமீபத்ததென்செய்குவோ யென்றமெட்டு.

இராகம்-நாபி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

மாதேயுனைப்பிரிய வருத்தானேமலரயன்
ஏதினிமேல்நா னென்னசெய்குவேன்
மேதினிமீதெவ் விதமுய்குவேன்-அயன்(மா)

சந்திரவதி சொல்.

என்னசெய்திடலாமின்று னென்றன்பிராணநேசமன்று
நன்னகர்முதலாய் நல்கியுமுனி
இன்னவண்ணஞ்செய்தா னொன்றுதினி-மன்ன(எ)

அரசன் சொல்.

மன்னர்முதலானோர்சூழ மகிழ்ந்துநீயுமியானும்வாழ
கன்னேசிநாட்டின் கண்ணுழைந்தே
நின்னேதைபோல நினைமணந்தேன்-அயன்(மா)



சந்திரவதி சொல்.

ஈசன்கட்டளைப்படியே யென்றுதையும்நாடியே
நேசமோடுதேவ ரிக்கங்கன்றே
வாசமோடுதாரை வார்த்தார்நின்றே-மன்ன(எ)

அரசன் சொல்.

மங்கல்பத்தைக்கண்டோர்க்கன்றே வழங்கலாகுமென்றானோர்
அங்கெனததிஷ்டம் அறுதெரிந்தே
மங்களமுழங்க மணம்புரிந்தேன்-அயன்(மா)

சந்திரவதி சொல்.

திருமங்கலநாண்சகிதம் ஜெனித்தவெனக்கேயதன்
உருஅடியிற் தெரியுமெனில்
அருளோடேவ றறிவாரினி-மன்ன(எ)

அரசன் சொல்.

இவ்விதமகத்வமுற்றே யென்னைநாதனுகப்பெற்றே
ஒவ்விவாழ்ந்திருந்த யோகந்தனை
எவ்விதுமெனச்சொல் வெளிக்கதோ-அயன்(மா)

சந்திரவதி சொல்.

மன்மதனிரதிபோலே வாழ்ந்திருந்தோம்பூமிமேலே
சின்மயமுனிக்கே செங்கோல்தந்தே
இன்னகோலமானோ மிங்கேவந்தே-மன்ன(எ)

காளகண்டன் வசனம்.

என்னடி ஜாலக்காரி காலதாமசம் செய்கின்றாய் வாடி சீக்கிரம்.

அரிச்சந்திரன் வசனம்.

சுவாமி இன்னும் சற்றுநேரம் பொறுத்திருங்கள் அனுப்புகின்றேன். (கா-ன்-வ-ம்.) அடா அரசனே இவ்விதமினிச் சொல்வது சரியல்ல.

அரிச்சந்திரன் விருத்தம்.

செவ்விசேர்மதியவன்றன் செல்வமேமீனகேனாய்
இவ்விதமக்கிகாள்வர் தெய்தமென்றனைந்தேனுகில்
ஒவ்விபேதிக்காட்டிற் குற்றமெனப்பேசினானான்
வெவ்விபபாவியானேன் மேதினிமீதானே.

வசனம்.

பெண்ணே இக்காலம் இவ்விதவிதிவருமென்று முன்னமே தெரிந்திருப்பேனாகில் நான்பனதொல்லி யேதித்தகன்றேசி நாட்டிற்

குவந்து உன்னைமணம்புரிகுவேனு ஐயோ இவ்வுலகத்தோர்களெல்லாம் பலவாறுநிந்திக்கும்படியான கொடியசண்டாளனுனேனே இதற்கென்செய்வேன்.

சந்திரவதி விருத்தம்.

பூமகளுடனேநீண்ட புவிமகடனையுமிந்த
மாமணித்தோளிலேற்றி வையகம்புரந்தகோவே
கேமமாமுனிவன்செய்த நேர்மையிதாகுமித்தைத்
தாமனமீதிலுன்னித் தளர்வதிற்சாரமென்னே.

வசனம்.

வேந்தே யாதொரு கவுசிகமுனிவர்செய்த கபடத்திற்கு பலவாறுவருந்துவதில் பயனுள்ளதோ மனதைத்திடப்படுத்திக்கொள்ளும்.

## அரசனுக்கும் சந்திரவதிக்கும் தர்க்கம்.

அன்னமே நான்தொட்டசொர்னமே யென்றமெட்டு.

இராகம்-அபுரூபம்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

தையற்கரசியேமையற்சாசியே என்செய்குவதென்னினியே
பதுமினியே செழுங்கனியேநான் சகிப்பேனு-இதைவகிப்பேனு-வ

சந்திரவதி சொல்,

மன்னவநாயினியென்னசெய்வோமுனி இன்னபடிசெய்தார்
புவிகொய்தார் நமைவைதார் வாசனே-பிராணநேசனே-நே

அரசன் சொல்.

சந்ததமும்நீயேதந்தநகந்தனை யெந்தனகம்பதித்தே
மிகமதித்தே மனங்கொதித்தே தயங்குவேன்-மெத்தமயங்குவேன்-ம

சந்திரவதி சொல்.

மெத்தவுமுந்தன்மெய்ச்சித்தம்வருந்துவ துத்தமும்ஆமோ
வினைபோமோ இதைவமோ விண்டிடீர்-நன்றாய்க்கண்டிடீர்-க

அரசன் சொல்.

விண்டாலும்நானிதைக்கண்டாலுந்தேறத் துண்டாகுமோதானே
கலைமானே பசுந்தேனே வேதனை-சிவன்சோதனை-சோ

சந்திரவதி சொல்

வாழ்வுமொருகாலம்தாழ்வுமொருகாலம் ஆழ்கடற்பூமேலே
ஆகையாலே இனிமேலே மலங்காதீர்-மனம்கலங்காதீர்-க



அரசன் சொல்.

உந்தன்பிதாவானசந்திரதயராஜன் எந்தன்குமாரியெங்கே
உரையிங்கே யெனிலங்கே-யென்ன ஓதுவேன்-ஐயோமாதுவே-மா

சந்திரவதி சொல்.

என்னைப்பெற்றபிதாஎன்னைப்பெற்றதாள நின்னைப்பற்றியேசார்
ஒன்றும்பேசார் மனங்கூசார் இடையாதீர்-துயர் அடையாதிர்-அ

அரசன் சொல்.

தேவியைவிற்பவன்பாவியின்னுனெனப் பூவிலுள்ளோர்சிரிப்பார்
சொல்விரிப்பார் மனம்புரிப்பார்-பெண் சிங்கமே-பசுந்தங்கமே-த

சந்திரவதி சொல்.

சத்தியமேமண்மிசைநித்தியகைவல்லியமென் றற்றிருக்குந்துய்யனே
உயர்மெய்யனே யெனதய்யனே சாந்தனே-புவி வேந்தனே-வே

அரசன் சொல்.

இவ்விதமென்மனதொவ்வியுனைவிட்டு எவ்விதம்யான்போவேன்
உடல்தேர்வேன் மனம்ஆர்வேன் இங்கையே-அழமங்கையே-ம

காளகண்டர் வசனம்.

அடியே கொடிசூரி என்னைமோசம் பண்ணவேண்டுமென்றெண்ணி இவ்விதம் ஒருவர்க்கொருவர் பலவாறு குறையையடைந்தவர்போல் முறையிட்டழுகின்றீர்கள் சகபாஷ் இந்த இந்திரஜாலவித்தையெங்குகற்றுக் கொண்டீர்கள் நீ யென்னுடன்வாடி யில்லிற்கிவ்வழியாக.

சந்திரவதி விருத்தம்.

வாய்மையேதவறுநீதி வாக்கியவாதனேநற்
றாய்மையேகுடிகொண்டுற்ற கருணைனேபாருமிந்தக்
காய்சினக்காளகண்டர் கடுகியேயிழுக்குகின்றார்
போய்வருகின்றேன்வேனா புத்திபோதிப்பீர்போற்றி.

கர்க்கேதன்னைப்பூசை யென்றமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

போய்வருகின்றேன்மன்னு பூசுரன்மனைக்கின்னுள்
தூய்மையுறும்புத்திமதி சொல்லியனுப்புமித்தநி
தோன்றலே-தோன்றலே தோன்றலே-தோன்றலே(போ)

இதுவரைமெய்வாடாமனே ஏவல்புரிந்தறியேனே
இதமுடனினிமறையோன் இல்லிலெவ்விதம்புரிவேன்
இறைவனே-இறைவனே இறைவனே-இறைவனே(போ)

எவ்விதம்வேலைசெய்வேனே எவ்விதம்வினைகொய்வேனே
இவ்விதம்வந்ததேகாலம் என்செய்வேனிக்காலம்
இன்பனே-இன்பனே இன்பனே-இன்பனே(போ)

ரதிமதன்போலவாழ்ந்தோம் நாடங்கும்நற்பேர்சூழ்ந்தோம்
எதிசதியாற்கதிதாழ்ந்தோம் இன்றுதுயரத்திலாழ்ந்தோம்
ஏந்தலே-ஏந்தலே ஏந்தலே-ஏந்தலே(போ)

அரசன விருத்தம்.

தேன்மொழிகுமுதவாயொன் டிங்களோர்முகமைக்கூந்தல்
மான்விழிசங்குகண்டம் வளைசெவிமுல்லையம்பல்
கான்மயிற்சாயலன்னக் கதிநடைவாய்ந்தவுன்னை
யானினியெந்நாட்கண்டென் னிதயமுமகிழ்வேன்பெண்ணே.

அரசனுக்கும்-சந்திரவதிக்கும் தர்க்கம்.

இராக-தேசிகதோடி-இராகப்-சாப்பு.

கண்ணிகள்.

பெண்ணேயெனைநீவிட்டுப் பிரிந்துபோருயோ
கண்ணேஉனர்தேருதல் கனிந்துகூருயோ(பெ

சந்திரவதி சொல்.

ராஜாதிராஜனே நானென்ன செய்வேன்
ஈசானனமைப்பினை யெவ்வாறுகொய்வேன் (ரா)

அரசன் சொல்.

மந்திராதிமுனிக்கிந்த வஞ்சகமாமோ
இந்திராதிதேவதைக் கேற்கவும்போமோ(பெ)

சந்திரவதி சொல்.

கருணையில்லாமுனி கபடமென்சொல்வேன்
இருநாட்டிலும்மைவிட் டெவ்விதஞ்செல்வேன் (ரா)

அரசன் சொல்.

இனியாரைநாயகி யென்றழைப்பேண்டி
அனியாயமனியாயம் யான்சகிக்கேண்டி(பெ)

சந்திரவதி சொல்.

இன்றுகண்டநின்முகம் என்றுதான்காண்பேன்
நன்றுடன்கண்டன்று நல்லின்பம்பூண்பேன் (ரா)

அரசன் சொல்.

உலைமேல்மெழுகுபோல வுள்ளமுமுருகுதே
விலைமதியாதபொன் மேனியுங்கருகுதே(பெ)



சந்திரவதி சொல்.

அலைவாய்த்துரும்புபோல வாகினேன்பாவி
விலைகொண்டவேதியர் மெத்தவுங்கோபி (ரா)

அரசன் சொல்.

இவ்விதிநமக்கெய்த லாகுமோமானே
எவ்விதமிதைவகிப் பேனடிதேனே(பெ)

சந்திரவதி சொல்.

தெய்வங்களுமிவ்விதஞ் செய்திடலாமோ
வையகத்தனிலுள்ளோர் வகிக்கவும்போமோ (ரா)

அரசன் சொல்.

கணவனேதெய்வமென்னுங் கற்புடையாளே
குணமிகுந்திலங்கும்பொற் கொடியிடையாளே(பெ)

சந்திரவதி சொல்.

இணைக்கன்னத்திலோர்முத்த மிட்டாகந்தேர்வேன்
துணைக்கழலிரண்டையுந் தொழுதியானேர்வேன் (ரா)

காளகண்டர் வசனம்.

அடியே வாடி யிப்படி அடியே போடி யிப்படி இனித் தாமசித்தால் இருத்துவேன் கையால்.

(ச-தி-வ-ம்.) இதோவருகின்றேன் சுவாமி.

அரசனுக்கும் சந்திரவதிக்கும் தர்க்கம்.

பெண்ணே யெந்தனைவிட்டுப்பிரிந்துபோருயோ வென்றமெட்டு.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

உத்தாரந்தாருமின்று ருத்தமகுணாளமன்னு
இத்தரணியாண்டகோனே இரவிகுலஸ்ரீமகானே(உத்)

அரசன் சொல்.

பொன்னேயின்றெனைப்பிரிந்தே போருயோமெய்மெலிந்தே
மின்னேயினவின்கனியே மெல்லியமொழிக்கிளியே(பொ)

சந்திரவதி சொல்.

என்னகாலமென்றன்காலம் இருடிசெய்தவலங்கோலம்
இன்னிலத்திலெவரிடத்தில் இதையியம்பியானழுவேன்(உத்)

அரசன் சொல்.

ஐயர் தான்வைவாரோ அடிப்பாரோயென்செய்வாரோ
ஐயையோவறிகிலேனே அம்மதிவதனமானே (பொ)

சந்திரவதி சொல்.

பேதகமென்செய்தேனே பெண்களைத்தான்வைதேனே
பாதகியாகினேனே பாருலகின்மீதுநானே (உத்)

அரசன் சொல்.

உன்மனமுமென்மனமும் ஒன்றல்லால்வேறுளதோ
பொன்னகரில்வாழ்பவர்க்கும் பொருந்துமோமுனிசெய்மாயம் (பொ)

சந்திரவதி சொல்.

ஒருகணமேனுமையோ வும்மைப்பிரிந்தறியேனே
பெருமுனிருணத்தினாலே பிரியலானேன்தரணிமேலே (உத்)

அரசன் சொல்.

அரும்பாவியென்னைப்போலே அருமுன்போவதிலே
பெரும்பாவழ்வருந்துவேனே பேருலகின்மீதுநானே (பொ)

காலகண்டர் வசனம்.

அடபயலே நீ என்னதப்பித்துக்கொள்ளவா வழிபார்க்கின்றாய் வாடா இப்படி வராவிடி லடிப்பேன் கையால்.

தேவதாசன் வசனம்.

ஐயோ தெய்வமே இதுவும் உனது செயலோ.

தேவதாசன் விருத்தம்.

படிபுகழயோத்திநாட்டைப் பனிமதிக்குடைக்குளாண்ட
வடிசுடர்வேற்கரத்து மன்னவாவென்பிதாவே
கொடியமாமறையோன்மிக்க கோபமுற்றங்கைதொட்டு
அடியனையிழுக்கின்றானே ஐயகோவென்செய்வேனே.

தாயுடன்கூடுமென்னை யென்றமெட்டு.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

அன்னையோடென்னையுந்நீர் ஐயர்க்குவிற்றதுண்டோ
அவ்வகையின்னதென அருள்வீரோ-அருள்வீர் (அ)

அரசன் சொல்.

நின்னையும்அன்னையையும் நீதமறையோர்க்கின்று
நிதிக்குநான்விற்றதுண்டு அறிவாயே-அறிவாய் (நி)



தேவதாசன் சொல்.

இதுவரைநீர்சமர்த்த இச்சுமைதனையிங்கே
இரக்கிச்சுகமுற்றீரோ ஐயாவே-ஐயா (அ)

அரசன் சொல்.

இதுவெல்லாமீசன்செய லென்செயலல்லயப்பா
இனிவருந்தாமற்சென்று வருவாயே-வருவாய் (நி)

தேவதாசன் சொல்.

சென்றுவாவென்றிங்கே தேவரீர்செப்பினீரே
திரியேனுமைமெக்காலம் காண்பேனோகாண்பேன் (அ)

அரசன் சொல்.

நன்றுடனுன்னைக்கண்டு நான்தேறக்களிகொண்டு
நாள்தோறும்வருகுவேன் அஞ்சாதே-அஞ்சாதே (நி)

தேவதாசன் சொல்.

அஞ்சேலென்றுரைத்தீரே அந்தணரடிப்பாரே
ஐயோநானென்னசெய்வேன் ஐயாவே-ஐயா (அ)

அரசன் சொல்.

மிஞ்சேல்கெஞ்சுற்றுபாரம் வேதியருந்தன்மீது
விருப்புற்றவராகவே இருப்பார்-இருப்பார் (நி)

வசனம்.

பாலகா துயாக்கடலில் மூழ்காதே அடிமைகொண்ட வேதியர் ஆதரிப்பார் நின்தன்னையுடனேசென்று வாடா இளஞ்சிங்கமே.

தேவதாசன் தரு.

தங்கமே யெந்தக்காலம்வந்தேனோ வென்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

எந்தவண்ணமுந்தனைப்பிரிந் திருப்பேன்தந்தையே
இந்தவண்ணம்வந்ததேகாலம் என்னவிந்தையே-ஐயா (எந்)

அரசன் சொல்.

இருடிகடனல்லாதுனைப் பிரிந்திடவுமாச்சுதே
இருநிலத்திலிந்தவிதி மெனக்குவாச்சுதே-அப்பா (இ)

தேவதாசன் சொல்.

பெருந்தவம்புரிந்தியெனைப் பெற்றபலனிதோ
திருந்தவேகாப்பேசலைசெய்யுந் தெய்வபலனிதோ-ஐயா (எந்)

அரசன் சொல்.

ஒருத்தனைநொந்துகொள்வதிற் சாரமொன்றுமில்லையே
அருத்தியிற்கொடும்பாவிசெய்த அரும்பவத்தொல்லையே-அப்பா(இ)

தேவதாசன் சொல்.

இனியெவரையெந்தையேயென்ன யானழைப்பேனே
அனியாயஞ்செய்தார்முனிவரிதற்கு யாதிழைப்பேனே-ஐயா(எந்)

அரசன் சொல்.

வெண்முத்தனையகண்ணீரோட விட்டழுகாதே
விண்முத்தனையேவேண்டுவாயே மெய்மையொழுகாதே-அப்பா(இ)

அரசன் வசனம்.

பாலகா அழாதே நினதன்னையுடன் மறையோர்வீட்டுக்குச் சென்றுவா ஆதிவிஸ்வநாதபெருமான் ஆதரிப்பான் அஞ்சாதே அருந்தவச்செல்வமே.

தேவதாசன் வசனம்.

உத்திரவுப்படி பிதாவே.

சந்திரவதி-தரு.

காளகண்டையா வென்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

நான்போய்வருகிறேன் துரைராஜனே (நா)

அநுபல்லவி.

தான்பவளவாய்திறந்து தாரும்விடைசிருடனே (நா)

சரணங்கள்.

மைந்தனுடன் அந்தணர்தம் மாளிகைக்கிந்நாளினிலே (நா)
நெஞ்சமிசைகொண்டதான சஞ்சலங்களொந்துவாழும் (நா)
முந்தவினையிந்தவிதம் மூண்டதெமையாண்டவரே (நா)

வசனம்.

சுவாமி மனோவியாகுலமின்றி தமது பவளவாயைத்திறந்து தமியளுக்கு விடைகொடுத்தருளும்.

அரசன் விருத்தம்.

காசியவிஸ்வாமித்ரர் கடன்றனையகற்றுதற்காய்
தேவியோடருமையுற்ற சேயனைவிலையேகூறி
மேவியந்தணர்பால்விற்றுன் வெவ்வியபாவியென்னக்
கூவியேநீயழாமற் குணமுடன்போய்வாமாதே.



நர்க்கேதன் ஓமாய்முசே யென்றமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

போய்வருவாய்சுகமே பூசுரன்வாழகமே
வாய்மைதவருதபடி மார்க்கமாய்நடப்பாயடி
மங்கையே-மங்கையே மங்கையே-மங்கையே(போ)

எப்போதொருவர்க்குநீயோ டேவலாளாகினையோ
அப்போதவர்க்குப்படிந்தே அடிமைசெய்யவேண்டுமுயர்
அன்னமே-அன்னமே அன்னமே-அன்னமே(போ)

ஒன்றுக்குநீயஞ்சாதே உள்ளக்கவலைமிஞ்சாதே
நன்றுக்குவித்தானவனை நம்புவாயவனுனை
ரக்ஷிப்பான்-ரக்ஷிப்பான் ரக்ஷிப்பான்-ரக்ஷிப்பான்(போ)

இந்தவிதம்ஆதியிலே யெய்துமென்றறிகிலேன்
சிந்தையைநீதேற்றியே செய்யகுருவைப்போற்றியே
தெளிவுடன்;தெளிவுடன் தெளிவுடன்-தெளிவுடன்(போ)

வசனம்.

நாயகி சிந்தையைத்தேற்றி தேசிகனைப்போற்றி சேயனைக்கூட்டி வேதியருடனேசென்று வருவாயடி தேவியே.

சந்திரவதி-வசனம்.

பிராணநாயகா உத்திரவுப்படியே சென்றுவருகின்றேன்.

அரசன் வசனம்.

சுவாமி தாம் திரவியங்கொடுத் திவர்களை யடிமைகொண்டபோதிலும் இவர்களை தமது பிள்ளைகளாகப் பாவித்துக் காப்பாற்றுங்கடமை தம்மையே சார்ந்தது.

காளகண்டன் வசனம்.

அரிச்சந்திர நீ சொன்னபடியே இவர்களைக் காப்பாற்றுவேன்.

(அ-ன்-வ-ம்.) நல்லது சுவாமி.

காளகண்டன் வசனம்.

அடிபோவாடி வெள்ளாட்டி சீக்கிரம் அடயலே இந்தமூட்டையைக் கொண்டுவாடா போடி யிப்படிபோடா இப்படி.

சந்திரவதி தரு.

இன்னமென்ன தன் வரக்காணோமென்றமெட்டு.

இராகம்-ஜாபி-தாளம்-சாப்பு.

பல்லவி

இன்றுகொடும்பாவியானோம் என்னசெய்வோம்என்மகனே (எ)

அநுபல்லவி.

அன்றுசெய்த அரும்பவமோ
அறியோம்குறியோம் அரனருளிதுவோ (எ)

சரணங்கள்.

காடுநகரையிழந்து நற்பணியுடையிழந்து
காடியேகானகம்புகுந்து நடந்தே-கடந்தே-நற்காசியுற்றோம் (எ)
மாமுனிதங்கடனுக்கிந்த மறையவர்க்கடிமையாகி
காமவேல்ராசனைப்பிரிந்துநலிந்தே-மெலிந்தேநடக்கவுமானோம் (எ)
இப்படியும்விதிநமக்கு பெழுதினானோ இறைவனின்னாள்
எப்படிச்சகிப்போமடா இனியே-கனியே-இப்புவிமிசையே (எ)

பொதுவசனம்.

இந்தவிதம் வருந்திய சந்திரவதியையும் உலோகிதனையும் காளகண்டன் அழைத்துக்கொண்டு தனதகத்திற்குச் சென்றான் இனி அரசன் வருந்தும்விதம் காண்பீர்கள் கனவான்களே.

# அரசன் புலம்புகிற பாகம்.

அரசன்சொல் விருத்தம்.

காதிமன்றவத்துதித்த கவுசிகர்கடனுக்காகக்
கோதிலாமனைவியோடென் குலமகனையுமிக்காகி
வேதியர்க்கடியேன்விற்று மெய்மெலிந்தொண்டியானேன்
நீதியோவிடைமீதேறும் நிமலனேயெம்பிரானே.

ஐயோ மகனே பாம்பு அப்பா மகனே பாம்பு வென்றமெட்டு.

இராகம்-சாமா-தாளம்-சாப்பு.

பல்லவி.

ஐயோசிவமேஇன்று ஆதிசிவமேஇன்று
அரும்பாவியாகினேனே சிவமேசிவமே-இன்று (ஐ)

அனுபல்லவி.

செய்காசுவிலைதயானேன் தேன்காரசியானேன்-இனி
தையலுடன்மகனை சாமியன்காண்பதுமென்றோ (ஐ)

187



சரணங்கள்.

கதிர்காணக்கஞ்சமானேன் களைகாணுவோடமானேன்-இனி
மதிமிகுமாதுடன் மகவைக்காண்பதுமென்றோ (ஐ)

கார்காணுமயிலானேன் கலைகாணுமானானேன்-இனி
சீர்பெறுந்தேவியுடன் சேயைக்காண்பதுமென்றோ (ஐ)

மதிகாணுவானானேன் மழைகாணுப்பயிரானேன்-இனி
துதிபெறும்பாரியுடன் சுதனைக்காண்பதுமென்றோ (ஐ)

தாய்காணுச்சேயானேன் தனங்காணுப்பேழையானேன்-இனி
ஆயிழையுடனென தரசைக்காண்பதுமென்றோ (ஐ)

ஆன்காணக்கன்றானேன் கான்காணவண்டானேன்
மீன்கண்மின்னாளுடனே வேந்தைக்காண்பதுமென்றோ (ஐ)

வசனம்.

கடவுளே இதுவுமுன் செயலோ.

சம்போஹரகங்காதர வென்றமெட்டு.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

ஐயோவென்னசெய்வேன் பன்னகாபரணனே
சையோகவிசாலாக்ஷியைத் தழுவசுகுணமே
என்னுபவமுன்னாட்புரிந் தேன்விஞ்சுவோனே
இன்னவளையிவ்வண்ணமே னிறைந்தாயேனோ
உன்னகமிரும்போகல்லோ வூழின்தொல்லையோ
என்னகமிங்கிரங்கச்செவிக் கேறவில்லையோ
அடியார்களைப்படிமீதினி லாளும்ஜோதியே
கொடியேனெனையாளாததென்ன குறையோஆதியே
கருணைக்கடலாமுமேசனக் கவலைதீராயோ
அருணக்கடைக்கண்ணாலுற்று அவஸ்யம்பாராயோ
என்போற்றுன்பமெவர்தா னுற்றாரிந்நிலத்திலே
உன்போலதைத்தீர்ப்போரெவ ருயர்நிலத்திலே

வசனம்.

தெய்வமே இக்காலம் கொடியபாதகனைச் செய்தனையே நீதியோ இனியென்செய்வேன்.

கல்லோதானுன்மனது கலங்காதோ வென்றமெட்டு.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

மங்கையுடனேகுல மகனையும்பிரிந்தேனே
சங்கையில்லாத்துயரந் தானடைந்தேனே (மங்)

இனிமேலவர்களைநா னெப்போதுகாண்பேனோ
இனிதுடன்கண்டப்போது இன்பம்பூண்பேனோ (மங்)

இப்படிச்செய்யவென்று மெத்தனைநாட்காத்தே
இப்படியிலிருந்தாய் இதயமுங்கூர்த்தே (மங்)

ஆதாரமில்லாவொரு அரும்பாவியானேனே
நீதானிவ்விதஞ்செய்தல் நெறியோஸ்ரீமானே (மங்)

தீனதயாளனெனத் திருநாமங்கொண்டதேவே
ஞானமுனிவோர்பவி நன்மணிக்கோவே (மங்)

உன்மேலென்மனஞ்சதா வுருகாதுள்ளதோதான்
என்மேலின்னுமுருகா தேனிவ்வநாதா (மங்)

வசனம்.

ஐயோ கருணாகரப்பொருளே சதா வுனது பாதாரவிந்தமேகெதியென நம்பியிருந்த நாயேனை இத்துயர்க்குள்ளாக்கினையே இதுதருமமா இனி யாதுசெய்வேன்.

மந்திரி விருத்தம்.

முத்திவீடடைவதற்கு மூனைத்தெழும்வித்தாயுள்ள
சத்தியநிலையையென் றுஞ் சதமெனவெண்ணுந்தாங்கள்
முத்தினைகண்ணீர்விட்டு முழுமலர்வாய்திறந்து
புத்தியற்றோரைப்போலப் புலம்புவதழகோவேந்தே.

வசனம்.

பிரபூ சத்தியத்தைக் காக்கும்பொருட்டல்லவோ தமது பத்தினியையும் பாலனையும்விற்று விட்டுப்பிரியலாயின, இனி அதைப்பற்றி வருந்துவதில் யாதுபயனுண்டு.

அரசன் வசனம்.

மந்திரி இனி என் மனைவியையும் மகனையும் என்றுகாண்பேன் குவலயத்திற் கொடியசண்டாளனென்ற பெயரின்றெடுத்தேனே இத்தீவினைக்கென்செய்வேன்.



தாகன் விருத்தம்.

என்னகாண்சத்தியகீர்த்தி யானிவணிருக்குஞ்செய்தி
இன்னதென்றறிந்திடாதுன் னிறைவனமுவதும்நீ
அன்னதையகற்றத்தேர்ச்சி யறைவதும்பார்த்தாலிஃது
என்னகாரணத்திற்கோதா னின்னதென்றறிகிலேனே.

வசனம்.

அடா சத்தியகீர்த்தி இங்கு நீங்களொருவர்க்கொருவர் செய்துகொள்ளும் இந்திரஜாலத்தைப் பார்க்குங்கால் என்னகாரணத்தை யுத்தேசித்தோ தெரிகிலேன் ஆனால் நான் இங்கு காத்திருக்குகின்ற சங்கதி யின்னதென் றறியாதிருக்கின்றீர் இதென்ன குறத்தனம் இது சரியல்ல.

மந்திரி விருத்தம்.

மாதொடுமகனைவிற்று மாமுனிகடனைத்தீர்த்து
தொடுஞ்துயரத்தாலே யழல்வதேயல்லாதின்று
யாதொருகாரணத்தை யெண்ணியிங்குழலவில்லை
ஈதொருகபடென்றெண்ணு திருக்கைநீர்செல்வீர்சுவாமி.

வசனம்.

சுவாமி அரசன் தமதுமனைவியையும் மகனையும்விற்று அவர்களைவிட்டுப்பிரிந்ததையெண்ணி யழுவதையல்லாது யாதொருகாரணத்தைப்பற்றியும் வுழலவில்லை ஆகையால் இதையொரு கபடென்றெண்ணுது தாம் எதாஸ்தானத்திற்குச் செல்லும்.

தாகன் விருத்தம்.

எந்தனையேய்த்துவிட்டின் றேகவோமென் றுநீவிர்
இந்தமகேந்திரஜால மிங்கிழைக்கின்றீரோதான்
அந்தருவனத்திலும்மை யடைந்துமின்னவல்லதையுற்று
வந்ததற்கின் றுகூலி வாங்கிடாதகலுவேனோ.

வசனம்.

போடா பயித்தியகாரா என்னையேய்க்கலாமென்றெண்ணமோ முனிவர்கடனை வாங்குவதற்காக இதற்குமுன் சரயுநதிக்கரைக்குவந்தும்மைக்கண்டு அதைவிட்டுப்புறப்பட்டு உங்களுடன் அநேக அவஸ்தையுற்று வந்ததற்கு இன்றுங்களிடம் கூலிவாங்காமல் போவேனோ கொடுங்கள் சீக்கிரம்.

அரசன் தரு.

மனந்தடுமாறுதே யெந்தன்மைந்தா யென்றமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

இதற்கென்ன செய்குவேனினி யீசாவிஸ்வேசா (இத

அநுபல்லவி.

அதட்டிமிருபதட்டமுடன் ஐயர்நக்ஷத்திரரிவ்விடம்
இதத்துடன் தாருசம்பளம்
ஈங்கேகொன்-வாங்காமல் நீங்கே-னென்கிறார் (இத

சரணங்கள்.

அன்பனுக்கன்பனாகவே யமர்ந்தசற்குருவே-உயர்
அண்டபிண்டசராசரத் துள்நிறைபருவே
துன்பறுக்கும்தூய்மருந்தே சுத்தசுருதிக்குருந்தே
உம்பர்பணியும்விருந்தே யுருவே-திருவே-பருவே-ஐயோ (இத)

வசனம்.

கருணையங்கடலே யாதொரு ஐவேசுமில்லாத என்னிடம் இந்த அந்தணர் தாருசம்பளம் வாங்காமல் நீங்கத்தக்கதில்லையென வற்புறுத்துகின்றாரோ இக்கொடுமைக் கென்செய்வேன்.

அரசன் விருத்தம்.

செப்பரும்விப்ரவம்ஸ சிரேஷ்டரேயென்பின்வந்த
அப்பெருங்கூலிவாங்கா தப்புரமகலேனென்ன
இப்படியெல்லாங்கோபித் தேகினலடியேனித்தை
யெப்படிவகிப்பதையோ வினித்தயைபுரிகுவீரே.

வசனம்.

சுவாமி தாருசம்பளம் கொடுத்தாலல்லது இவ்விடத்தை விட்டகலேனெனக் கோபித்தேகினல் எப்படிச்சகிப்பேன் தயைபுரியுந் தயாளுவே.

தாரகன் வசனம்.

அடா அரிச்சந்திரா தயவுசெய்யுமெனச் சாற்றவந்தாயே தாருசம்பளத்திற் கென்னவகை சொல்லுகின்றாய்.



அரசன் தரு.

அரவாபரணனே அபிராமிநேசனே யென்றமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

இங்கேயென்னைத்தாரு ஈகெனக்கேட்டீரோ
இதுதர்மமோ நாதனே
எங்கேவைத்திருக்கின்றே னீந்திடுவதற்கின்றே
இதமானமுனி நாதனே
பெண்டுபிள்ளையைவிற்றுப் பிச்சைக்காரன்போலுற்றுப்
பெருந்துரோகி வருந்துறேனே
விண்டுதாமறியாத விஷயமேதேனுமுண்டோ
விளம்புவீர் ஸ்ரீமானே
காவித்துணியல்லாது கையினிற்காசேது
கண்டிருந்தாற் சொல்லுமே
கோபிப்பதிலென்சாரம் குணமணியேயிந்நேரம்
கொடியேனெந்தனை யாளுமே

வசனம்.

சுவாமி யாதொரு கெதியில்லாத இக்கொடிய சண்டாளன் எங்கிருந்து தாருசம்பளம் தருவேன் கோபிக்காது தமதுபதிக்குச் செல்லுங்கள்.

தாரகன் விருத்தம்.

இன்னிலமன்னர்போற்று மிறைவனேயிம்பக்கேளாய்
உன்னுடன்வந்தகூலி யுதவுதற்கிடம்பாடொன்றும்
என்னருங்கையிலில்லை யென்னநீபழுவதாலே
நின்னைநானிலேசாய்விட்டு நீங்குவேனென்றெண்ணாதே.

வசனம்.

அரசனே உன்னிடம் கூலிவாங்காமல் போகமாட்டேன்.

அரசன் விருத்தம்.

என்கரமதில்பாதொன்றுமில்லை யென்றியம்பக்கேட்டும்
நின்னருந்திரங்காதென்ன நேர்மையோவறிகிலேன்யான்
நன்கழல்நோகவேதான் நடந்துவந்திட்டகூலிப்
பொன்கணக்கென்னவத்தைப் புகலுவீர்புண்ணியவானே.

நாதன்வரக்காணனே நானென்னசெய்குவேன் யென்றமெட்டு.

இராகம் - கமாசு - தாளம் - ஆதி.

பல்லவி.

சிரமஞ்செய்யாதீர் திருமறையோரே (சிர)

அநுபல்லவி.

அரவிந்தமலரடி சரணமெனையிப்படி (சிர)

சரணங்கள்.

தரகினளவு தானெவ்வளவு
உரைசெய்வீரின்றே உமக்களிக்கின்றேன் (சிர)

வசனம்.

சுவாமி தாம் கேட்டபடியே தரகு சம்பளம் தருகின்றேன் அத ன்கணக் கிவ்வளவென் றுரைக்கவேண்டும்.

தரகன் வசனம்.

பதினாயிரம் பொன் கொடுக்கவேண்டும் பார்த்திபனே.

அ-ன்-வ-ம். கொடுக்கின்றேன் குணக் குன்றமே.

## அரசன் விலையாகும் பாகம்.

அரசன் விருத்தம்.

தன்னைநேரில்லாவேந்தன் சத்தியகீர்த்தியேகேள்
முன்னையூழ்வினையாமீறு மொழியவும்போகாவாமால்
என்னையிங்கெவருக்கேனு மினிவிலைகூறிவிற்றுப்
பொன்னைநீவாங்கியிந்தப் பூசுரர்க்குதவுவாயே.

வசனம்.

மந்திரி நீர் இக்காசிமாநகரில் என்னை யார்க்கேனும் விற்று பதி னாயிரம் பொன் வாங்கி இந்தப் பூசுரர்க்குக் கொடுத்தனுப்பும்.

மந்திரி விருத்தம்.

அன்னைபிதாபோலுற்றுந்த னருகினிலிருத்தியன்பாய்
என்னைநீதுய்ரைதற்காத்த இறைவனேபானுகோவே
வின்னியேனென்காசிநாட்டினில் விற்கப்போருமோவி
நின்னைவிலைகூறிவிற்க நெஞ்சமும்வருமோவேமோ.

வசனம்.

பிரபூ இப்பெரிய நகரின் வீதிதோறும் விலைகூறித் தம்மை வி பதற்கு எனது நெஞ்சமும் துணியுமோ ஐயோ.



அரசன் வசனம்.

மந்திரீ மிகவும் வருந்தாதே அவசியம் என்னைவிற்றுப் பொன்னைவாங்கிப் பூசுரர்க்குக் கொடுத்தனுப்பும்.

மந்திரி விருத்தம்.

யானிவணிருக்கவும்மை யான்விலைகூறிவிற்றால்
நானிலத்துள்ளோரெல்லாம் நாடொறும்நகைப்பராமால்
தானினித்தயவுசெய்து தமியனைச்சார்பாய்விற்றே
மாநிதிவாங்கியிந்த மறையவர்க்குதவுவீரே.

வசனம்.

அரசே என்னைவிற்று இருநிதி வாங்கி இவர்க்குக் கொடுத்தனுப்பும்.

அரசன் விருத்தம்.

புழுதிமெய்யெல்லாம்பற்றப் புரண்டடிமுடிபுனைந்தே
அழுமதிவல்லோயிந்த அரும்பவத்திற்கென்செய்வேன்
எழில்நிதிக்குனைவிற்றீத லேற்குமோயார்க்குமையோ
மொழிவழியெனைவிற்றின் னேர்மொழிபொருளீகுவாயே.

வசனம்.

மந்திரீ யான் ஒருவர்க்குக் கொடுக்கவேண்டிய பொருட்காக வுன்னை விற்பது நீதியல்ல என் சொற்படியே என்னைவிற்றுப் பொன்னைவாங்கி இவர்க்குக் கொடுத்தனுப்பும்.

மந்திரி விருத்தம்.

சோதிமாமணிக்கிரீடஞ் சூட்டியமன்னதுசென்னி
மீதினிற்புல்லைச்சூட்டி வேதியர்தருக்காக
வீதிதோறுஞ்சென்று விலைபதாகூறிவிற்க
ஆதியிலென்னபாவம் அடியவனிழைத்தேனேவந்தே.

வசனம்.

பிரபூ தம்மை விலைகூறி விற்க ஆதியிலென்ன பாவம் செய்தேனோ அறிகிலேன் இனி யென்செய்வேன்.

அரசன் விருத்தம்.

அவனியுளகாட்செய்த அரும்பவமாமிதித்தை
இவணினிநினைத்தழாது விதயமேதேறிபின்பாய்
அவசியமென்னைவிற்றின் றரும்பொருள்வாங்கியோங்கும்
தவமுனிதராக்கிவாய் சற்குணமதிவல்லோனே.

வ-ம். அவசியம் என்னை விற்பாய் அமைச்சே.

(ம-ரி-வ-ம்.) இதுவும் விதியோ தெய்வமே.

மந்திரி விருத்தம்.

பெருந்தவமாமுனிகடனை யகற்றவேந்தன்
பெண்பிள்ளை யிருவரையும்விற்றேயேங்கி
வந்தருணமாமறையோ னவ்வளைதயுற்று
வந்ததற்குக்கூலிபதி னாயிரம்பொன்
தரும்படிகேட்டிடவிவருந் தாமோவென்னச்
சாற்றியதந்தருமமிலை யாகினுந்தான்
இரும்புவிமீதென்னை யிதுவரைதறகாத்த
எந்தையைவிற்றுய்வேனோ வெம்பிரானே.

தரகன் விருத்தம்.

ஏதடாசத்தியகீர்த்தி யிவன்றனைவிற்கச்சொன்னால்
நீதமாவெனைத்தற்காத்த நிருபனைவிற்றுய்வேனோ
நாதனேயெனவருந்தி நாழிகைபோக்குகின்றாய்
ஈதழகல்லவென்ற னிருந்திரீகுவாயே.

வசனம்.

அடா சத்தியகீர்த்தி நீ இவ்விதம் ஏய்ப்பது சரியல்ல எனக்குக் கொடுக்கொடுக்கவேண்டிய பதினாயிரம்பொன்னையும் கொட்டடா இப்படி பாசாங்குசெய்யாதே.

மந்திரி வசனம்.

கொடுக்கின்றேன் சுவாமி கோபங்கொள்ளவேண்டாம்.

மந்திரி வசனம்.

இக்கொடிய சண்டாளன் இறைவனை விலைகூறுகின்றேன்.

மந்திரிவிருத்தம்.

விந்தைநேரன்னையொடென் விவேகநற்றுணைவன்றன்னை
விந்தையாய்விற்றதன்பம் மிளைவுமில்லையயினும்
சிந்தையான்றேறிக்காசித் தெருக்களிற்சென்றுபெற்ற
எந்தைநேரரசன்றன்னை யெப்படிவிற்பேன்றேவே.

பாம்புக்கோவனை யென்றமெட்டு.

இராகம்-எதுகுலகாம்போதி-தாளம்-அடதாளம்.

கண்ணிகள்.

தன்னுயிர்போல — என்னுயிர்காத்த
சத்தியவான்றனையே — நல்ல-தர்மாகனையே
சக்கிரேசனையே — தரணியன்றனையே-ஐயோ
காசியேவிலைகூவிடவந்தேன் — பாவியெங்கனையே(தன்)



சதுர்மறைகளை — நிதமுணர்ந்திடும்
தக்கவேதியரே திரு — க்ஷத்திரியரே
தருவைசியரே — சதுர்த்தஜாதியரோ-எந்தன்
தலைவனை விலைகொள்ளவாருமே — தங்களில்யாருமே(தன்)

எந்தஜாதிய — ராகிலுஞ்சரி
இதயமுமகிழ்ந்தேநீவீர் — இங்கேவந்தே
எழிற்பொன்தந்தே — இவரையேயடைந்தே-நன்றாய்
இப்போதழைத்தேவருமில்லிடத்தே — இயம்பினேனுமக்கே(தன்)

மந்திரி விருத்தம்.

சீருலவுகாசிநகர் மீதுவாழும்
ஜெனங்களேயானசிறியன் செப்பக்கேண்மோ
தாருலவுசதுர்மறையோர்க் குதவவேண்டும்
தரகானும்பழவினையின் றன்மையாலும்
ஏருலவுமெனதிறையை விற்கவந்தேன்
எக்குலத்தோராகிலுஞ் சம்மதமேஐய
கூருலவுபொன்பதி னாயிரங்கொடுத்துக்
கொள்ளுவீர்மனமகிழ்ச்சி கொள்ளுவீரே.

வசனம்.

தெய்வமே இதுநேரவரையிலும் இவரை விலைகூறியும் வாங்குதற்கொருவரேனும் வரவில்லையே இதுவுமுனது திருவருளோ அறிகிலேன்.

அரசன் விருத்தம்.

உத்தமகுணத்தில்மிக்க யுத்திசேர்சத்தியகீர்த்தி
இத்தனைநேரமாய்நீ யென்னைவிலைகூறியுந்தான்
இத்தலத்தொருவரேனு மெதிர்வரக்காணோமால்
இத்தகியென்னைநானே யிவண்விலைகூறுவேனே.

வசனம்.

மந்திரி நீ இதுநேர வரையிலும் என்னை விலைகூறியும் வாங்குவதற்கு ஒருவரேனும் நேரில்வரவில்லை ஆகையால் இனியென்னை நானே விலைகூறுகின்றேன்.

ம-ரி-வ-ம். நல்லதரசே விலைகூறுங்கள்.

அரசன் விருத்தம்.

தவமுனி தூதர்க்கிந்நாள் தருதற்கிடுவதற்கே
இவணவகாசமில்லை தென்னைநானேயிவ்வேளை
விவரமாய்வீதிதோறும் விலைபகரகூவுகின்றேன்
சுபமுடன்வாங்கவாரும் சுரர்புகழ்காசியோரே.

மதுரை மீனாட்சி யென்றமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ருபகம்.

பல்லவி.

விணையினால்நானேயென்னை விலைகூறுகின்றேனே (வினை)

அநுபல்லவி

கனைநிரைகடற்சூழும் காசிநகரில்வாழும்
கதியோரே-நிதியோரே கனத்தமதியோரே-யெந்தன் (வி)

சரணங்கள்.

மறவாதுவேதமோதி மகத்துவம்பெற்றநீதி
மறையோரே-இறையோரே வாய்ந்தமறையோரே-யெந்தன் (வி)

திரிசூலவணிகரே சேமமிகுதனிகரே
தீனரே-கானரே சித்தாபிமானரே-யெந்தன் (வி)

ஓபாதிரவலர்க்கு உதவும்பெரும்பொருட்கு
உடையோரே-கொடையோரே உயர்கடையோரே-யெந்தன் (வி)

மறையவர்தரகாலே வருந்துகின்றேன்மென்மேலே
வருகுவீர்-உருகுவீர் பொருள்தருகுவீர்-யெந்தன் (வி)

அதிகபுண்ணியஞ்சேரும் ஐயோவென்முகம்பாரும்
ஆக்ரரோ-சூத்ரரோ அருள்சத்பாத்ரரோ-யெந்தன் (வி)

பாலன்வரக்காணேனேயோ வென்றமெட்டு.

இராகம்-நாபி-தாளம்-ஆதி.

பல்லவி.

என்னைவிலைகொள்ளவாரீர் வந்தேன்பாரீர்-ஐய (எ)

அநுபல்லவி.

தன்னைநிகரில்லாதோரே தருந்தகாசிநகரோரே (எ)

சரணங்கள்.

தியன்கூவுகின்றசத்தம் செவிகேட்கிலையோ
நேயமாகவென்முன்வந்தே நிசழ்ந்தியபொருளைத்தந்தே (எ)



தரகர்செய்யுஞ்சிரமமென்றால் சகிக்குதில்லையே
கருணைசெய்வீர்கவலைகொய்வீர் கனமிகுபுகழுடையீர் (எ)

சதுர்வர்ணத்தில்யார்கொண்டாலும் சம்மதமின்றே
அதுவிஷயத்திற்சந்தேகம் அடையவேண்டாமுங்களாகம் (எ)

கோடிபுண்ணியுங்கூடுமுங்கள் கோத்திரத்திற்கே
நாடியேநீரின்பம்நண்ணி நாயேனையோர்பொருளாயெண்ணி (எ)

பொது வசனம்.

இந்தவிதம் அரசன் தன்னை விலைகூறக்கேட்டு வீரவாகு வருகிற விதங்காண்குக.

## வீரவாகு வருகிற பாகம்.

வீரவாகு விருத்தம்,

இந்திரராஜன்சமுகம் விஸ்வாமித்ரன்
இயம்பிவந்தசபதமுடித் திடவேயன்னேன்
தந்திமுத்தரம்போல் வயோத்தியாண்ட
சத்தியவரிச்சந்திரனை விலைக்குவாங்கத்
தந்திராமயெமதருமன் காசொட்டித்
தாழ்ந்தபுலைமகனைத் தானதித்துப்
புத்திமகிழ்வீரவாகு வென்னாமம்
புனைந்திட்டேன்சபையில்வர நினைந்திட்டேனே.

இராகம்-தன்யாசி-தாளம்-ஆதி.

பல்லவி.

வீரவாகுதான்வந்தேன் சபைதனில் (வீர)

அநுபல்லவி.

வீரவாகுதான்வந்தேன் மெத்தவுமகிழ்ந்தேன்
சாரமுடன்பூஷணங்கள் தானணிந்துகாசிவாழும் (வீர)

சரணங்கள்.

நெற்றியில்நீறணிந்து நீண்டகச்சைவரிந்து
வெற்றிபெறவேகாலில் மிதியடியும்புனைந்து (வீர)

கரும்பனைக்கட்குடித்து கையிற்கம்பும்பிடித்து
விரும்பிவேதாந்தம்பாடி விஸ்வாமித்ரன்சொற்படி (வீர)

கோசலநாடாண்ட அரிச்சந்திரனை
மாசிலாப்பொன்கொடுத்து வாங்கவினைவுடனே (வீர)

விரவாகு விருத்தம்.

இன்னகர்வீதிதோறுமே இடைவிடாதென்னைவிற்பே
னென்னவேயாமற்கூவி யேகுவதானையேநீ
நின்னகமகிழ்ந்துசற்று நின்றுநான்சொல்லும்சொல்லை
இன்னதென்றறிந்துபின்ன ரேகலாம்தெரிகுவாயே.

வசனம்.

ஆரையே வீதிதோறும் என்னைவிற்பேன் என்னைவிற்பேனெ ன்று ஓயாமற்கூவி நடக்கின்றது சற்றுநில்லு நான் சொல்லும்சொல்லை இன்னதென்றறிந்து அதன்பின் அப்பால்நடக்கலாம்.

அரசன் விருத்தம்.

எதற்கென்னையிங்கேநின்று யானுரைப்பதனைநீகேட்
டதற்குமேலேகலாமென் றவசரமாகக்கூவிப்
பதட்டமாயோடிவந்தாய் பதியெதுகுலம்பேர்யாது
இதத்துடனதையெமக்கு இயம்புவாய்தெரியத்தானே.

வசனம்.

அப்பா இவ்வளவு அவசரத்துடன்வந்த வுனது ஊர்பேர் குலம் யாதூ தெரியச்சொல்வாயாக.

விரவாகு விருத்தம்.

நெடியநாளாகநான்வாழ் நிறைபதிகாசியாகும்
வடிவுளவீரவீர வாகுவாமென்பேர்ஜாதி
குடிமையேசெய்யுநீச குலாதிபன்வீட்டுவேலைக்
கடிமையாளொன்றுவேண்டும் அதற்காகவந்தேன்ஐயே.

வசனம்.

கேள் ஐயே நானிருப்பது இக்காசிதேசம் என்பேர் விரவாகு என்குலம் நீசகுலம் இக்காலம் எனதுவீட்டுவேலைகள் செய்வதற்கு ஓர் அடிமையாள் வேண்டியிருக்கின்றது அதற்காக வந்தேன்.

விரவாகு விருத்தம்.

வந்தவென்னெண்ணம்போல மறுமொழிசொல்லாமல்நீ
எந்தனில்வேலைசெய்ய விசைந்தையேயானுலின்று
செந்தளிர்நாவினுலே செப்பியகிறையந்தந்தே
உந்தனையடிமைகொள்வேன் உறுதியிதறிகுவாயே.



வசனம்.

கேள் ஐயே இவ்விதம் வந்த எனதெண்ணம்போல நீ மறுமொழிகூறுது என்து வீட்டுவேலை செய்ய இசைந்தாயே யானுல் இன்று உனது நாவினுல் நீ கேட்கும் கிறையத்தைத் தந்து அடிமை கொள்ளுவேன் இது உண்மையே உனதபிப்பிராயம் யாது சொல்லையே.

அரசன் விருத்தம்.

தேசறும்பாவமெல்லாந் திரண்டொருவடிவாயெங்கும்
வாசமாய்த்திரிந்தலைந்து வாரிசூழ்மானிலத்தோர்
ஏசவேயிழிவாயுள்ள வேலைச்செய்யுமிந்த
நீசனும்விலைக்குக்கேட்க நேர்ந்ததோகாசிவாழ்வே.

கோரிகெரி கைநதிக பென்றமெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

நீசன் விலைகேட்கவும்நன் வீதியோபிரம்மா திடே (நீச)

அநுபல்லவி.

பூசனைபுரிந்துன்தாளைப் போற்றும்பலனோஇவ்வேளை
ஈசனேவிஸ்வேசனே ஐயையோஐயையோ-ஈசனே (நீச)

சரணங்கள்.

இவ்வையல்லாமல்வேறெ யெவருமிங்கில்லையோயினி
ஏகனேவைபோகனே ஐயையோஐயையோ-ஏகனே (நீச)

இந்தவிதியெனக்கு மிட்டனையோவுனக்கு
எந்தன்மீதுயாதுவாயம் ஐயையோஐயையோ-எந்தன்மீது (நீச)

இவ்விதஞ்செய்யவுந்தா னெத்தனைநாட்காத்திருந்தாய்
எவ்விதஞ்சகிப்பதினை ஐயையோஐயையோ-எவ்விதஞ் (நீச)

பெண்பிள்ளையைப்பிரிந்த பெருந்துயர்போதாதென்றிந்த
பேச்சுங்கேட்கலாச்சுதே ஐயையோஐயையோ-பேச்சுங் (நீச)

இதுநீசெய்தநியாயமோ எழில்முனிசெய்மாயமோ
இன்னதென்றறிகிலேனே ஐயையோஐயையோ-இன்னதென் (நீச)

வசனம்.

தெய்வமே நீசனும் விலைக்குக் கேட்கவோ என்னைப் படைத்தாய் இது தர்மமா இனி யென்செய்வேன்.

### வீரவாகு விருத்தம்.

நீசனெனை விலைகேட்க லாச்சேயென்ன
நீலகண்டன்றனை நினைந்து வருந்துமந்தியார்
மாசகலவுற்றகுலம் யாதுனக்கு
வழங்கிவரும் பேர்யாதுவூரும்யாது
நேசமுடனருகில் நிற்குமிவருமிந்த
நீதமறையோரு மெவர்நீயிக்காசி
தேசம்வரக்காரணமென் னுனக்குவந்த
தீங்கென்னவதனையென்முன் செப்புவையே.

### வசனம்.

கேள்ஐயே நீசன் விலைகேட்டானென்னப் பலவாறு பகவானை நொந்துகொண்டாயே நீயார் உன்பேரூர் குலம்யாது உனதருகில்நிற்கும் இன்னவரும் இந்தப்பிராமணனும் யாவர் நீ இக்காசிக்குவரவேண்டிய காரணமென்ன இக்காலம் உனக்குவந்த கஷ்டம்யாது அதனைத் தெரியும்படி சொல்லுவையே.

### அரசன் விருத்தம்.

என்குலஞ்சூரியகுலம் பேரரிச்சந்த்ரன்றான்
எழில்நகரயோத்தியதை யாண்டவேந்தல்
நன்குலவுமிவர்மந்திரி சத்தியகீர்த்தி
நங்கூடவந்த நக்ஷத்ராயரின்னோர்
மின்குலவுசடில கவுசிகமுனிக்கென்
விதியால்நன்னாடு நகர்யாவுமீய்ந்தும்
பின்கடனுக்காளாகி யிங்குவந்து
பெண்பிள்ளைதம்மைவிற் றின்றதைத்தீர்த்தேனே.

### இதுவும் அரசன்விருத்தம்.

கடன்றனைத்தீர்த்துமம்மைதைக் கைப்பற்றிக்கொண்டவிந்த
விடந்திகழ்நக்ஷத்ராயர் வெகுண்டுநானுங்கள்பின்னே
நடந்துவநததற்குக்கூலி நல்கெனவதற்கிணங்கி
இடந்திகழிந்நகர்க்கு ளெனைவிலைகூறினேனே.

### வீரவாகு வசனம்.

நல்லதையே நல்லது ஏன் ஐயே நீ நீசன் விலைகேட்டானென நிமலனைநோக்கி வருந்தினையே நீசனுடையதன்மை யின்னதெனத் தெரியவருமா சொல்கிறேன்கேள் ஐயே.



### வீரவாகுசொல்லும் வருணாச்சிரம ஞானவெட்டித்தரு.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-அடதாளம்.

### பல்லவி.

சாதியைச்சொல்லுகிறேன் என்னுண்டையே
சாதியைச் சொல்லுகிறேன் (சா)

### அநுபல்லவி.

சாதியினில்பாப் பிரமகுலத்தினில்
தந்தையெனுஞ்சதுர் வேதசிகாமணி
சோதிதனில்ஞான சூட்சஜடாதார
துய்யமதிசந்தி ஐயனெங்கள்குலம்
பூதாதியைந்தும் புனலில்மருவிய
வேதாகமத்தில் விளங்குஞ்சுகாதீத
ஆதாரமூலமே லாதாரமீதாற
டங்கியவீட்டினி லாண்டையென்சாதிதான் (சா)

### சரணங்கள்.

அந்தரவட்டத்தின் வானம்புவிக்குள்ளே
அலங்காரமாகப் பதினாலுஞ்சேர்ந்திடும்
சந்திரன்போலுந் துலங்கியபூரண
சாதிகுலநதனி லாதிகுலங்காணும்
இந்திரனக்கினி யெமனிரிதியாய்
எகவருணன்கு பேரனீசானியன்
சந்திரப்பிரகாசத்தின் மூலத்திலுள்ளே
தழைத்திடுமென்குல சாதியிதாண்டையே (சா)

மன்னும்வின்னும்வன்னி வாயுசத்தங்களும்
பண்ணும்மறைவேதம் நாலுமுதித்தவ
ரன்னுமின்னுமாறு சாஸ்திரசூத்ரமும்
என்னுமினியென்குலத்தி லுதித்தவாறு
வேதியரிட்டகட் டளைப்பிரகாரமும்
மேதினியோர்கள் விளங்குமனுநீதி
ஆதியென்றேபல சாதிகுலவர்க்கம்
சேதியாண்பெண்ணிரு சாதிகளாவதும் (சா)

ராசாங்கஞ்செய்த நடத்தையிதின்குறி
வேதாகமத்தில் விதித்தவாறல்லகாண்
ஆசாரமல்லபீ சாபலயோகமே
கோசாபீசத்தில்க் குலங்கள்செனித்ததே
மனிதனுகப்பிறந் தவனிமிதினிலே
மானுகாளுங்கள் வளப்பமறிவதும்
யோனிகாலல்லவோ ஏழுவகைப்படி
யோகதிசைஞான வெட்டிவிளங்குமே (சா)

வசனம்.

ஏ ஐயே நான் எடுத்துரைத்த ஞாயங்க ளியாவையும் தெரிந்து கொண்டாயா.

(அ-ன்-வ-ம்.) ஆம்.

வீரவாகு விருத்தம்.

இந்தவிதமகிமைபடைத் திலங்குமெந்தன்
இயல்பதனையாதிசிவ னொருவனன்றி
எந்தமனிதருமறிய வேலாதென்னில்
இவ்விடத்துநீயறிய வேனுமோர்தான்
நிந்தனையாயெனையுரைத்த தாலெனக்கு
நீயடிமையாவாயோ வாகாபோவின்
றெந்தனகத்திற்சேகக வேண்டுமுந்தன்
எண்ணந்தானியாததனை யியம்பாயாண்டே.

வசனம்.

ஏ ஐயே நீஎன்னை நீசெனன நிந்தனையாயுரைத்ததால் எனக்கடிமையாவாயோ ஆகாயோ அறிகிலேன் உனதபிப்பிராயந்தானென்ன சொல்லையே சீக்கிரம் குடிசிற்சேககவேண்டும்.

(அ-ன்-வ-ம்.) சற்றுநில்லப்பா ஆலோசித்துச் சொல்கின்றேன்.

(வீ-கு-வ-ம்.) நல்லதையே.

அரசன் விருத்தம்.

இத்தலம்புகழுமந்த்ரீ இயம்புவேன்கேளாய்வேத
வித்தகர்க்குதவவேண்டும் மிகுபொருள்கொடுப்போரிந்த
உத்தமன்றனையல்லாதிங் கொருவருமில்லையாமால்
இத்ததிபிவர்க்கேயென்னை யின்புடன்விற்பாய்நீயே.



(வ-ம்.) மந்திரீ இவர்க்கே யென்னைவிற்பீராக.

(ம-ரி-வ-ம்.) நல்லதரசே.

(வீ-கு-வ-ம்.) என் ஐயே இவனைவிற்கும் தொகையெவ்வளவு

மந்திரி வசனம்.

கேளாய் வீரவாகுவே இவனைவிற்பதான தொகை அளவு பதினாயிரம் பொன்.

(வீ-கு-வ-ம்.) சரி தருகிறேன் முறிச்சிட்டு எழுதும் ஐயே.

(ம-ரி-வ-ம்.) இதோ எழுதுகின்றேன் வீரவாகுவே.

மந்திரி முறிச்சிட்டு எழுதும் அகவல்

கஞ்சவாவிசூழ் காசிமாநகர்வாழ்
பஞ்சமவீர பாகுவுக்கின்று
கிளர்மதிசத்திய கீர்த்திதன்கரத்தால்
தளர்விலாதெழுதித் தந்தஆவணமாம்
ஆரணைமுழங்கும் அயோத்தியையாண்ட
தாரணிபுயத்தரிச் சந்திரராஜன்
கோதகல்மாதவக் கோசிகமாமுனி
நாதர்தந்தூதராம் நக்ஷத்திரற்கு
கொடுக்கவேண்டுங் கூலிக்காக
அடுக்கவேநானுனக் கன்னவர்தமையே
விற்றிவனுன்பால் விரும்பியேமெய்யாய்ப்
பற்றியபைம்பொன் பதினாயிரமே
இதற்குச்சாக்ஷி யானுமிப்பொருளே
இதத்துடன்கொள்ளும் இம்மறையோனுமே.

மந்திரி வசனம்.

கேளாய் வீரவாகுவே நீ சொல்லியபிரகாரம் முறிச்சிட்டெழுதிவிட்டேன் இதைவாசித்துப் பார்த்துக்கொண்டு பதினாயிரம் பொன்னையும் கொடு.

வீரவாகு வசனம்.

இதோ பதினாயிரம்பொன் தந்தேன் பெற்றுக்கொள்ளும்.

(ம-ரி-வ-ம்.) பெற்றுக்கொண்டேன் வீரவாகுவே.

(வீ-கு-வ-ம்.) சரி ஐயே.

மந்திரி வசனம்.

வாரீர் முனிதூதரே உமக்குச் செல்லவேண்டியபொன் பதினையி ரத்தையும் இதோகொடுத்தேன் பெற்றுக்கொள்ளும்.

(ந-ன்-வ-ம்.) பெற்றுக்கொண்டேன் சத்தியகீர்த்தியே.

(அ-ன்-வ-ம்.) சுவாமி தரகுசம்பளத்தைப் பெற்றுக்கொண்டீரா.

(ந-ன்-வ-ம்.) பெற்றுக்கொண்டேன் அரசனே.

(அ-ன்-வ-ம்.) சுவாமி எதாஸ்தானஞ் சென்று வருகின்றீரா.

ந-ன்-வ-ம். நல்லதரசனே சென்றுவருகின்றேன்.

அரசன் வசனம்.

அனேக வந்தனம் சுவாமி முனிவருக்கும் என் வந்தனம் இயம் பவேண்டும்.

ந-ன்-வ-ம். இயம்புகின்றேன் இறைவனே.

பொது வசனம்.

இந்தவிதம் அரசனிடம் சுக்கிரன் தரகு சம்பளம் பெற்றுத்தன் பதியைச் சாரலானன் இனி அரசன்கதையதிவீர் ஆய்ந்தபெரியோரே.

அரசன் விருத்தம்.

நாடிமுந்திட்டதான நாள்முதலிந்நாள்மட்டும்
ஈடிலாதடைந்தநன்ப மென்றலைவிதியாம்ஆமால்
நீடிபவயோத்திக்கேகி ரிஷிக்குநீ துணையாயுற்று
வாடிடாதரசுசெய்து வாழ்குவாய்மதிவல்லோனே.

மந்திரி விருத்தம்.

தவமுனிக்குதவியாகத் தாழ்விலாதரசுசெய்ய
அவனியோர்புகழயோத்திக் கனுகுவாயெனவுரைத்தீர்
அவனுமைப்பார்க்கினுந்தா னருளுயர்ந்தோனேவாமால்
இவனுமக்கேவல்செய்தே யானுயிர்வாழ்வேன்வேந்தே.

அரசன் விருத்தம்.

ஏவல்செய்தேன்பாலென்று மிருப்பனென்றுரைத்தாபெற்குச்
சேவலயேவல்செய்யக் கிடைத்ததுவினையாலிந்நாள்
நீவருவதுநன்றல்ல நின்னகந்தேறிபெங்கே
யாவதுபோயிருந்துன் னுருயிர்பிழைப்பாய்மந்த்ரி.



## மந்திரிக்கும் அரசனுக்கும் தர்க்கம்.

வாயைநீதிறந்து ஒருவார்த்தைபேசடா யென்றமெட்டு

இராகம்-தோடி-தாளம்-ரூபகம்.

எப்படியுமைப்பிறிந் தேகுவேனின்னுள்
இப்படியுளோர்புகழ்ந் தேற்றுமென்மன்னா

அரசன் சொல்.

என்னசெய்யலாம் இதற்கெந்தன்மாமதியே
அன்னவாகனன் எனக்கமைத்ததிவ்விதியே

மந்திரி சொல்.

நீதுவனாயுமமைவிட்டு இருந்துநானறியேன்
ஏதுவனாயினிவிட்டு இருப்பதோகுறியேன்

அரசன் சொல்.

தூயசங்கரன்பண்டு தொகுத்தவண்ணமே
நோய்மாயுள்ளபலன் நடத்தல்திண்ணமே

மந்திரி சொல்.

என்னசெய்வேனே இதற்கேதுசெய்வேனே
உன்னருட்பணி செய்யாதுலகிலுய்வேனே

அரசன் சொல்.

சிவனைநினைய்ச சேதஞ்செய்யாமல்நீயே
ஏவல்செய்வதாய் சதாஎண்ணிவாழ்வாயே

மந்திரி சொல்.

தேவரீர்தமையென்று நியன்காண்பேனே
ஆவலோடுகண்டுந்தன் அடிகள்பூண்பேனே

அரசன் சொல்.

கவலைகொள்ளாதே காசிக்கட்புளர்காப்பார்
இடைமவிட்டுநீ இப்போதேகுவாயப்பா

வசனம்.

மந்திரி பிரேவடா நீ மனக்கவலைகொள்ளாது சென்றுவா அப்பா வருந்தாதே.

மந்திரி விருத்தம்.

விரும்பியான்நங்களன்னை மேவியமுதலாய்த்தங்கள்
சுரும்பாடுக்கேதன்பூந்தாள் துணையெனநம்பிநித்தப்
பெரும்புவிமீதுமக்குப் பணிவிடைபுரியப்பெற்ற
அருந்தவப்பேரின்றோடே யற்றதோவரசர்கோவே

(ம-ரி-வ-ம்.) அடியேன் சென்று வருகின்றேன் அரசே.

(அ-ன்-வ-ம்.) வருத்தமில்லாது சென்றுவாரும் மந்திரி.

பொது வசனம்.

இவ்விதம் மந்திரி அரசனைப் பிரிந்து ஓர் சாவடியை யடைந்திருந்தான் இப்பால்,

அரசன் வசனம்.

ஐயோ தெய்வமே இரக்கமின்றி யெனது மந்திரியைப் பிரிந்து போகச் சொன்னேனே இனி அவரை யென்று காண்பேனோ கொடியசண்டாளனானேனே யென்செய்வேன்.

விரவாகு வசனம்.

ஏ அடிமையே மந்திரியைவிட்டுப் பிரிந்தேனே யெனப்பலவாறாக தெய்வத்தைநோக்கி வருந்திக்கொண்டிருந்தால் இந்தமாமிசக்காவடி என்வீடுபோய்ச்சேருவதெப்படி தூக்குசீக்கிரம் தோளில் தூக்கிக்கொண்டு என்பின்வா.

(அ-ன-வ-ம்.) நல்ல ... குவே.

---

# அரசன் மாமிசக்காவடிசுமக்கும் பாகம்.

அரசன் விருத்தம்.

பத்தியால்த்தினமெனக்குப் பணிவிடைபுரிந்துவந்த
சத்தியகீர்த்திதன்னைத் தான்பிரிந்தொண்டியாகி
சுத்தியில்லாதமாம்ஸம் தோய்ந்தகாவடியையெந்தன்
வெத்திசேர்தோளிற்றூக்க விதித்தையோவிஸ்வநாதா.

இராகம்-பியாக்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மாமிசக்காவடிசுமக்க வருத்தாயோதேவே (மா)

அநுபல்லவி.

பூமிதேவியும் பூவின்தேவியும்
பொருந்தியிருந்த புயமிசையிந்த (மா)

சரணங்கள்.

நாற்றங்குடலைப் பிறட்டுதையையோ
நானென்ன செய்வேன்-நாற்றம்
தோற்றவிப்படித் தூக்கியெப்படிச்
சுமந்துசெல்லுவேன் துன்பம்வெல்லுவேன் (மா)


௨௦௦

சாபம்
கவுசிகருதவு — பலித்துதே-கவுசிக
கைமேற் — வாதனேயுந்தன்
மவுலியணிந்த — டிதமோ-இதமோ (மா)
மனதிற்கிதுசம்
லத்துதித்து
உத்தமகு — யாண்டதும்போய்-உத்தம
உலகை — இத்தரியில்நீச
இத்தலத்தோசே — தயக்கமும்பெற்று (மா)
தத்துவமுமுற்றுத்
மென்மீதுனக்
என்னவர்ம — செய்தேன்-என்ன
கென்பிழை — யேன்னவேதுதி
நின்னடியேகெதி — யேன்செய்தாயோ (மா)
யென்னையிவ்வன்ன

(வ-ம்,) இக்கொடிய விதிக்கென்செய்வேன் தெய்வமே,
கோதிக்கோதிக் குழல்முடிப்போ யென்றமெட்டு.

இராகம்-எதுகுலகாம்போதி-தாளம்-அடதாளம்.

கண்ணிகள்.

என்வகுத்தாயீஸ்வரனே
இந்தவிதியெந்தனுக்கு — நான்பிழைசெய்தேன்பரனே (இந்)
இந்தகாளிதுந்தனுக்கு — பிள்ளையையும்பிரிந்தேனே
பெற்றெடுத்தபெண்டேனே — அகலவிட்டுத்தளர்ந்தேனே (இந்)
அறிவுடையஅமைச்சனையும் — காவடிசுமக்கின்றேனே
கடையனுக்காளாகினேனே — முன்வினையோஅறியேனே (இந்)
முடைசகிக்கமுடியேனே — பணிப்புயமும்வலிக்குதே
வச்சிரவாகுவலயம்பூண்ட — நானினியென்செய்குவேனே (இந்)
நச்சரவாபரணனே

(வ-ம்,) கடவுளே இதுவும் உனதருளோ.

வீரவாகு வசனம்.

ஏ அடிமையே இதுதான் நமதுருசுக இவ்விடத்தில் காவடியை
றக்கிவை.

(அ-ன்-வ-ம்,) இதோ வைத்தேன் வீரவாகுவே.
(வீ-கு-வ-ம்,) சரி நான் சொல்லுகிறதைக் கேளு.

வீரவாகு விருத்தம்.

உந்தனையடிமைகொள்ள வுள்ளமேகருதியங்கே
வந்தரும்பொன்வழங்கி மகிழ்ந்துனைக்கொண்டழைத்து
வந்தவோர்சிரமத்தாலே மலரடிநோகுதாமால்
பிந்தநீதடைசொலாது பிடித்துபசரிப்பாயன்றே.

வசனம்.

ஏ அடிமையே யெனதிரண்டு திருவடிகளும் புண்ணாக நோகுது உனது கைகளால் பிடித்துபசரிப்பாயாக.

(அ-ன்-வ-ம்.) நல்லதையா வீரவாகுவே.

இராகம்-நாதநாமகிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

இதுவும்தலைவிதியோ ஜெக    நீசாவுன்றன்கதியோஐயோ (இ)

அனுபல்லவி.

சதுர்மறையின்முடிவே    தளராஞானவடிவே
விதுவணியுஞ்சிரனே    விண்ணோர்பணிபரனே (இ)

சரணங்கள்.

உன்கால்பிடித்துப    சரிப்பதும்போய்நீசன்
தன்கால்பிடித்துப    சரிக்கவுஞ்செய்தையே (இ)

என்னையிவ்விதஜென்மம்    எடுக்கச்செய்திவ்வன்மம்
தன்னையேசாதிப்பது    தருமமோதரணியில் (இ)

நீயேகேவலஞ்செய்ய    நினைத்தையோயானல்வெய்ய
தீயேனெவனைநேர்வேன்    சிற்பரமானதேவே (இ)

அன்பனைக்காக்குங்கடன்    அமைந்திருந்துமுன்னிடம்
இன்பங்கிஞ்சித்தில்லாத    தென்னகாரணமோஐயோ (இ)

வசனம்.

ஐயோ சிவமே நீசனுடைய காள்பிடித் துபசரிக்கும்படி செய்தையே உனக்கிது தருமமா.

வீரவாகு வசனம்.

ஏ அடிமையே நீ பிடித்த சொருசினல் எனது பாதமிரண்டும் சௌக்கியமுறலாயின. போதும் போதும் இனி பிடிக்கவேண்டாம்.

அரசன் வசனம்.

நல்லது வீரவாகுவே இன்னும் ஏதேனும் வேலையிருந்தால் சொல்லும் செய்கின்றேன்.



வீரவாகு வசனம்.

கேளாய் அடிமையே அதோ இருக்கும் கொட்டத்தில் கட்டியிருக்கும் மாடுகளெல்லாம் இரையில்லாது பசியோடிருக்கின்றது நீ ஊரருகிலிருக்கும் நஞ்செய்க்குச் சென்று இந்த அரிவாளால் அங்கிருக்கும் புற்களையறுத்து இந்தக் கயிற்றால் ஒரு கட்டுக் கட்டிக்கொண்டுவா சீக்கிரம்.

(அ-ன்-வ-ம்.) உத்தரவுப்படி கொண்டுவருகின்றேன்.

இராகம்-பியாக்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

புல்லறுக்கப்போறேன்தெய்வமே    புவிபோற்றும்சிவமே(புல்)

அனுபல்லவி.

அல்லல்தீர்ப்போனே    யென்றும்-ஆதரிப்போனே
பல்லுயிரைப்பாரின்மீது    பாதுகாப்போனே-பசும்(புல்)

சரணங்கள்.

வெட்டியான்விளம்    பியபடியே-அவன்
வீட்டின்மாட்டிற்    காயடியேன்-வெட்டியான்
கட்கமுமணிந்தேஇந்தக்    கடிநகர்கடந்தே
கணக்கிலாதநஞ்செய்யின்வளம்    கண்டுநான்கடந்தே-பசும்(புல்)

வசனம்.

தெய்வமே எஜமானன் வீட்டு மாடுகளின் பசியைத் தீர்க்கும் பொருட்டு அவசரமாக வருகிறேன் போல புல்லறுத்துக் கட்டிக்கொண்டு போவதற்கு நகரைக்கடந்து நன்செய்க்கு வந்து சேர்ந்தேன் இனி இந்த அரிவாளைக் கரத்திற்பிடித்துப் புல்லறுக்கின்றேன்.

---

## அரசன் புல்லறுக்கும்பாகம்.

இராகம்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி

புல்லறுக்கிறேன்தெய்வமே    புலையன்பசுவுக்குமே(புல்)

அநுபல்லவி.

அல்லலுற்றகந்துடித்தே    அரிவாளையான்பிடித்தே(புல்)

சரணங்கள்.

மதுரமுக்கனித்தேன்வாய்ந்தே    வாய்க்கால்வழிபாய்ப்பாய்ந்தே
சதுர்விதச்செந்நெல்வளர்க்கும்    தண்கழனிகளில்மொய்க்கும்(புல்)

புரவலனுயிருந்த புகழ்நீபொருமலிந்த
சிரமடையும்வண்ணஞ் செய்தாயேயென்ன திண்ணம்(புல்)

காமுமிகநோகுதே விரலும்புண்ணுகுதே
அரனேசங்காதரனே அடியேனென்செய்குவேனே(புல்)

உன்பாதகெதியென்றே உன்னியிருந்ததற்கின்றே
வன்பாடுபடவிதி வகுத்தாய்கருணாநிதி(புல்)

வசனம்.

புலையனைப்போல் புல்லறுக்கும்படியும் செய்தாயே தருமமோ தாணுபரமேஷ்டியே.

## அரசன் புல்கட்டுசுமக்கும் பாகம்.

விருத்தம்.

பல்லரிவாளாலிந்தப் பணிவயல்வரம்பிலுள்ள
புல்லறுத்தொன்றாய்ச்சேர்த்துப் புரிகயிற்றாலேகட்டி
எல்லினீன்மணியாற்செய்த வெழில்முடியணிந்தவெந்தன்
சொல்லருந்தலையில்வைத்தைத் தூக்கவும்விதியோதேவே.

சரசஞ்செய்யவா ராஜாவென்றமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

என்னசெய்குவேன் சிவமே(என்)

அநுபல்லவி.

என்னசெய்குவேன்சிவமே யேதுசெய்குவேன்சிவமே (எ)

சரணங்கள்.

பன்னகாபரணனே பாவஹரணனே
என்னகாலம் என்னகோலம்
எளியே னிக்காலம்-சிவமே (எ)

எந்தவிதம்யானடப்பேன் இந்தநஞ்செய்யைக்கடப்பேன்
எந்தவிதம் சேதியடுப்பேன்
இதைக்கொண்டு கொடுப்பேன்-சிவமே (எ)

பாரமுச்சியுறுத்துதே பசுங்கழுத்தையிறுத்துதே
சிரடிதத் தளிக்குதே
தேகம் வலிக்குதே-சிவமே (எ)





குறுக்குமிகக்கடுக்குதே குறுவெயர்வெடுக்குதே
யொருக்கமாட்டு தில்லையையோ
பூர்வ தொல்லையோ-சிவமே (எ)

வசனம்.

வீரவாகுவே இதோ தாம்சொன்னவண்ணமே புல்லறுத்துக் கட்டிக்கொண்டுவந்தேன்.

வீரவாகு வசனம்.

அடிமையே அதோ கட்டியிருக்கிற நமது மாடுகளுக்குப் பகுந்துபோட்டு விட்டிங்குவா.

அரசன் வசனம்.

உத்திரவுப்படி போட்டுவிட்டு வந்தேன் இனி ஏதேனும் வேலையிருந்தால் சொல்லும் செய்கின்றேன்.

வீரவாகு விருத்தம்.

ஞானமிருங்கரும்பனையின் கட்குடித்தே
நான்வருமுனிந்தவடி வாளாவிந்த
ஊனமிலாக்கன்றையறுத் தொட்டுந்தோலை
யுறித்ததனுள்ளுற்றிருக்கு மாமிசத்தை
தானெடுத்துவகைவகையாய்த் தவறுநிந்தத்
தட்டுகளில்வைத்ததிக பத்திரஞ்செய்து
சனமிலாவென்வீட்டுக் காரிக்கேவல்
பின்புடனேசெய்திருப்பா யேகிவாறேன்.

வசனம்.

கேளாய் அடிமையே யான்போய் கட்குடித்துவருவதற்குள் இக்கன்றை அறுத்து அதனுள்ளிருக்கும் மாம்சாதிகளை எடுத்து இத்தட்டுகளில்வைத்து பின்னர் என்வீட்டுக்காரிக்கேவல் செய்துகொண்டிருப்பாயாக இதோ சென்றுவருகின்றேன்.

(அ-ன்-வ-ம்.) அவ்விதமே செய்கின்றேன்.

## அரசன் கன்றறுக்கும் பாகம்.

இராகம்-நாதநாமகிரியை-தாளம்-ரூபகம்.

பல்லவி.

இப்படியும்விதியெனக்கு வெய்தவும்செய்தாயேதேவே(யிப்)

அநுபல்லவி.

எப்படிமனம்சகிப்பேன் இந்தக்கன்றையானறுப்பேன(இப்)

சரணங்கள்.

மறையுவர்க்கனேகம்பசுக்கள் வழங்கிய அம்மலர்க்கையாலே
பறையன்சொற்போலிதையறுக்கப் பாபமென்செய்தேன்மண்மேலே
என்றுமிதனைதர்மரூப மென்றுவேதமுறையிடுமே
குன்றுதேயென்றேகமிந்தக் கொடுமைக்கென்செய்வேன்சிவமே

சிவமேயென்றனை யேன்படைத்தாய் யென்றமெட்டு.

இராகம்-முகாரி-தாளம்-சாப்பு.

பல்லவி.

பரமேலும் பரப்ரம்மமே (பர)

அநுபல்லவி.

வரமருள்குருவே மாமலர்மருவே
வாருமேயென்முன்வாருமே வாருமேகலிதீருமே-சிவ (பர)

சரணங்கள்.

விதியோ வல்வினையோயிது
மதியேபருதியே மகரவுததியே
வானமே உயர்வானமே
வானமே மெஞ்ஞானமே-சிவ (பர)

ஆவின் இளங்கன்றையே
பாவியறுக்கவும் பழிசுமக்கவும்
படைத்தயோ எனைப்படைத்தயோ
படைத்தயோ புகழுடைத்தயோ-சிவ (பர)

இதையே யெவ்விதமறுப்பேன்
இதயங்கலங்குதே கைகைநடுங்குதே
எந்தையே என்னெந்தையே
எந்தையே என்னிந்தையே-சிவ (பர)

அடியேன் உனதடிமையன்றோ
வடிசுடரொளியே வான்பரவெளியே
வாகனே மலைவாகனே
வாகனே உமைபாகனே-சிவ (பர)

அரசன் வசனம்.

தெய்வமே எவ்வாறு மனந்துணிந்து என்கைகட்கத்தால் இக்கன்றையறுப்பேன்.



என்னபாவஞ்செய்தேனோ சிவமே யென்றமெட்டு.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

ஹரஹர ஓம் ஆதியே அரனே-உயர்
அண்டபிண்டத்துள் நிறைவோனே

அரவையாரமா யணிபுயனே-திரு
ஐந்தெழுத்தினுள் அமர்வோனே

ஒற்றைக்காலைமண்டி யிட்டிருந்தே-யெந்த
னுள்ளம்பதறி யுடல்நொந்தே

ஒற்றைக்கையில் கட்கமுமணிந்தே-கன்றை
யுற்றுப்பார்த்து உனைநோக்கியே

கெங்கைதிங்களிலங்கும் வேணியனே-இந்தக்
கன்றின்கழுத்தை யறுத்தேனே

வெங்கரியின்றோ லுரித்தவனே-கன்றில்
மேவுந்தோலை யுரித்தேனே

அம்பிகாசமேத ஐமுகனே-கன்றில்
அடர்ந்தகுடலை யெடுத்தேனே

எம்பிரானேசம்போ சங்கரனே-கன்றின்
ஈரல்தன்னையே யெடுத்தேனே

முக்தியும் பக்தவத்ஸலனே-கன்றின்
முன்கால்களை முறித்தேனே

முத்தர்போற்றப்பெற்ற நற்பதனே-கன்றின்
முதுகெலும்பை முறித்தேனே

பிரமஞானதர்ம வடிவனே-கன்றின்
பின்கால்களைத் துணித்தேனே

உருவில்லாதஅருப சிற்பரனே-கன்றின்
உடலின்மலத்தை கழித்தேனே

மாமிசத்தின்மாசு நீக்கினனே-இந்த
மரக்கலத்தினில் வைத்தேனே

தாமிதமில்லாதறுக் கையிலே-இந்த
சமயமெந்தன் வினையாலே

கையில்வெய்ய சுத்திபட்டுதே-என்ன
காலமோரத்தம் கொட்டுதே

ஐயோகானென்ன செய்குவேனே-இந்த
அரிபகாசிப் பெருமானே (ஹ)

தலைவிதி யெவராலும் யென்றமெட்டு.

இராகம்-எதுகுல காம்போதி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

இனியென்னசெய்குவேன் எவ்விதமுய்குவேன்
எந்தையேகாசிவளர் விஸ்வேசனே-எனக்
கிப்படிவரலாமோ சர்வேசனே (இ)

கமலமலர்க்கரத்திற் கத்தியறுத்துரத்தங்
கழகவெழுன்றொழுகுதே கங்காதரா-மனக்
கருணையில்லையோ சிவகருணாகரா (இ)

இவ்வேதனைபொறுக்க யென்னால்முடியுதில்லை
பெரியதேகரமையோ கைலாசனே-உனக்
கிதுவுந்தர்மமோ யின்றுஜெகதீசனே (இ)

தோட்டிச்சி தரு.

இராகம்-முகாரி-தாளம்-அடதாளம்.

கண்ணிகள்.

ஐயோபரம சிவமே-இந்த
அபத்தத்தென் செய்குவேனினிமேல்
கையோவலிக்கு தென்றே-இவன்
கத்துகிறான்மிக கத்துகிறான்
யார்பெற்ற பாலகனோ-இவன்
எக்குலத்தினி லுதித்தவனோ
சிறுத்தில விருத்த-தெந்தம்
தேசமோநாம மேதோவறியேன்
கண்ணுற்றுப் பார்க்குகையில்-இவன்
கரியமால்போலத் துலங்குகின்றான்
எண்ணாற்றதுன்ப மின்னான்-இவர்க்
கெய்தியதெவ்விதம் யாம்கேட்போம்
அப்பாநீயிக் கெதிக்கே-இன்று
ஆளானகாரணம் யாதுசொல்வாய்

அரசன் சொல்வது

செப்புவேன் கேளுமம்மா-எந்தன்
தேசமயோத்தி யரிச்சந்திரனும்



கோசிகமா முனிக்கே-நான்
கொடுக்குங்கடனுக் காயிங்குவந்தே
மாகில்லா மனைவியுடன்-குல
மகனையும்விற்றுக் கடன்தீர்த்தேன்
இதுவும்போதாம லின்று-முனி
யேவலர்க்குத்தர கிவதற்கே
குதுகலமாய் நானும்-உங்கள்
குடிசிற்கடிமை யாய்வந்தேனே

வீரவாகு வருவது.

என்யோகமே யோகம்-எந்தன்
ஈமங்காப்பதற் கினிதுடனே
நன்மைசே ரயோத்தி-ஆண்ட
ராஜனைவந்தின்று நாடினனே
என்போலத் தந்திரமுள்ளோர்-இந்த
இத்தின்மிசையே யெவருண்டோ
சம்போ சிவமயமே-என்னை
சந்தோஷமாக வந்தாளுமையே

தோட்டிச்சி.

எங்காணும் நாயகனே-நீர்
எந்தனுக்குத் தெரிவிக்காமல்
தாங்காரும்பொன் கொடுத்து-இந்த
தர்மவடிவனை வாங்கிவந்து
கன்றையுறிக்கச் சொன்னீர்-அவன்
கத்தியாற்கையி லறுத்துக்கொண்டான்
இப்பாவத்திற் கென்செய்வேன்-ஐயோ
எப்படியித்தை யினிச்சகிப்பேன்
அப்பா அம்மா சிவமே-என்ன
அகமெலிக்கே அழுகனுற்றான்

தோட்டி.

போடிகொடு நீலி-இத்தப்
புன்மையுற்றோனுக்கோ வருந்துகின்றாய்
வாடியிங்கே விரைவாய்-உன்னை
மங்கைபென்றேயித் திவனங்கையிலே

வாளாலறுத்துக் கொண்டு-மெத்த
வருந்துகிறு னிந்திரஜாலஞ்செய்தே
தாளாவிவனை யின்று-யிப்போ
தாக்கியேவேலைகள் வாங்குகிறேன்பார்

வீரவாகு விருத்தம்.

உன்னிடம்நான்கட்குடித்து வருவதற்குள்
உயிர்விடுத்தகன்றை புரித்தநனுளுற்ற
மன்னியமாமிசங் கட்டைஅறுத்தெடுத்து
வைத்திடெனச்சொல்லி யதைத்தவிர்த்துநீயும்
என்னிநயமகிழ்கூறப் பூறுவேலை
யியற்றுமற்பாசாங்கு செய்திப்போது
மின்னியவாளாற்கரத்தி லறுத்துக்கொண்டு
மெலிகுவதாலென்காலால் மிதித்திட்டேனே.

அரசன் தரு.

தலைவிதியெவராலு மென்றமெட்டு.

இராகம்-எதுகுலகாம்போதி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

வெட்டியானடியேனை எட்டியேமிதிக்கவும்
விதியோகாலைதியோ வுமைநேசனே-உனை
வேண்டும்பலனிதுவோ விஸ்வேசனே

இப்போதுநீசொன்னை எட்டிமிதித்திருன்றன்
எழில்மலரடியெட்ட புண்ணாகுமே-ஐயோ
இத்துன்பத்தாலென்மனம் பிகநோகுமே

கருணைபுரிந்திந்தக் கம்பாலென்னையடிப்பீர்
கனகோடிபுண்ணிய முண்டாகுமே-எனை
கவிந்தபவங்களெல்லாம் இன்றேகுமே

தானிட்டகட்டளைபோல் தவறுதவேலைசெய்வேன்
தன்னையேய்த்திடுமென்னைக் கொன்னேனே-கொண்ட
சத்தியநிலைவன்றுந் தள்ளேனே

இதுவரைசெய்திருதே யேவலின்றுசெய்ததால்
யான்மனப்படட்டமுங் கொண்டேனே-அப்போ
தென்கையில்வாளாலுக்கக் கண்டேனே

அறியாமல்செய்தபிழை யாதலாலிதைப்பொறுத்
தன்புடனுள்வதுன்றன் கடைதானே-எனை
ஆட்கொண்டநீசகுல ஸ்ரீமானே



அரசன் வசனம்.

பிரபு, இதுவரைசெய்யாத வேலையையின்று புதிதாகச்செய்த மையால் அறியாது கத்தியாற்கரத்தை யறுத்துக்கொண்டேன் இனி நமதுவுத்திரவுப்படி எந்தவேலையிட்டபோதிலும் தவறுதுசெய்கின் றேன் இப்பிழையைமட்டும் பொறுத்து ரக்ஷிக்கக்கோருகின்றேன்.

(வீ-கு-வ-ம்.) ஆ ஆ அப்படியாகல்லது.

வீரவாகு விருத்தம்.

மன்னர்குலத்துதித்தவ்னீ யன்றேயிற்கு
மதிப்பானவேலையிட வேண்டும்ஆமால்
இன்னகர்மயானமெற்றுச் சொந்தமெங்கே
யேகிவரும்பிணங்களைத் தகனஞ்செய்து
மன்னவொருபிணத்திலுக்குச் சுதந்திரந்தான்
வாய்க்கரிசிகாற்பணமோர் முழத்துண்டுண்டு
அன்னதைநீதவறாது வாங்கித்தம் (
அனுப்பியுளாராய்ப் பரண்மீதமர்வாய்தானே.

வீரவாகு வசனம்.

கேளாய் அடிமையே நீராஜவம்சத்தில் அவதரித்தவனாகையா ல் உனக்குமதிப்பான வேலைகொடுக்கவேண்டுமென எண்ணுகின்றே ன் அதாவது இன்னகரிலிருக்கும் மயானம் நமக்குபூர்வீகசொந்தம் அங்குநீசென்று வரக்கூடியபிணங்களை தகனம்செய்து ஒவ்வொரு பிணத்திற்கும் சுதந்திரம் காற்பணம்முழத்துண்டு வாய்க்கரிசி இம்மூ ன்றும் தவறாமல்வாங்கி ஒருங்குசேர்த்து அன்றாடகம் நாம்அனுப்பும் ஆளிடம் கொடுத்தனுப்பி உஷாராக பரண்மீதிருந்து காவல்புரிவா யாக.

அரசன் வசனம்.

தாம் சொல்லியபடி நடப்பதோடும் ஒருசங்கதி தெரியப்படுத்தி க்கொள்கின்றேன் அதாவது.

பார்வதிநேசா வென்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

எந்தவேளையாகிலும் இறையவனேகேளும்(எந்)

அநுபல்லவி.

உந்தன் சொற்போல்மயா — னந்தனிலிருந்துயான்
பந்தோபஸ்தாகவென்றும் — பாதுகாப்பேனின்று(என்)

சரணங்கள்.

ஊக்கமாய்வரும்பி — ா — பொன்றுக்குக்காற்பணம்
வாய்க்கரிசியுந்துண்டும் — வாங்கியனுப்புவேன்விண்டு(என்)

நெஞ்சில்வஞ்சகமெண்ணேன் — நினக்குந்துரோகம்பண்ணேன்
மிஞ்சியபுகழ்சேர்சத்திய — விரதந்தவறிடேனித்தியம்(என்)

சங்கதிநானென்று — சாற்றுவேனதைக்கேட்டின்று
இங்ஙனம்பதிலெனக் — கியம்பும்நாவாலேதினம்(என்)

சுடலையிலேசிறக்கும் — தொழில்புரிகுவதற்கு
இடம்வேண்டுமேயதற்கு — செப்புமோர்வகையெனக்கு(என்)

ஏற்படுமென்புசிக்கே — ஏதாகிலுமெனக்கே
ஏற்பாடுசெய்தாலல்லோ — யானுய்வேன்மனங்கல்லோ(என்)

பசிக்குதையோவென்செய்வேன் — பாவியென்னென்றுசொல்வேன்
புசிக்கவுண்வுதாரும் — புல்லன்மயக்கத்தைத்தீரும்(என்)

வீரவாகு வசனம்.

அவசியம் உனதுகுகலிவாதையைத் தீர்க்கும்படியான வகைசொல்லத்தான்வேண்டுமோ நல்லது.

வீரவாகு விருத்தம்.

சுடலையிலெனக்குண்டான சுதந்தரங்களிலெந்நாளும்
இடறில்லாப்பனமூன்றுண்டு மெனக்குநீயனுப்பியங்கே
அடறும்வாய்க்கரிசிதன்னை அருந்திநின்மயக்கந்தீர்த்துன்
உடனுடன்மனமுந்தேறி யூக்கமுற்றிருப்பாய்தானே.

(அ-ன்-வ-ம்.) நல்லது எஜமானனே என்னையாள்வது நின்கடனே.

வீரவாகு வசனம்.

வாராயடிமையே நீ மயானகாவல் புரியுங்கோலங் கொள்வதற்கானதுஸ்துகள் யிதோயிருக்கின்றது இந்தைதரித்துக்கொண்டு நீதரித்திருக்கும் காவிவஸ்திரத்தை நம்மிடம்கொடுப்பாயாக.

(அ-ன்-வ-ம்.) அவ்விதமே கொடுக்கின்றேன்.



இன்னமுநின்மன திரங்கா யென்றமெட்டு.
இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

ஹரஹரஓம்நமசிவாய — ஆதிசிவபரமே
பரமகுணமணியேகாசிப் — பதியேசிவபரமே
தங்குமணிகிரீடஞ்சூட்டுந் — தலையிற்சிவபரமே
மங்குமிந்ததண்டுசூட்ட — வைத்தாய்சிவபரமே
துய்யவாகுவலயந்தாங்குந் — தோளிற்சிவபரமே
மைதிகழ்கம்பளிதாங்க — வகுத்தாய்சிவபரமே
எல்திகழ்வாள்கச்சைபூண்ட — இடையிற்சிவபரமே
சல்லடங்கச்சையும்பூணச் — சமைத்தாய்சிவபரமே
கருத்துடன்செங்கோல்பிடித்த — கையிற்சிவபரமே
விருதுநத்தின்கம்பும்பிடிக்க — விதித்தாய்சிவபரமே
நீசனணிந்தவுடையை — நன்றேசிவபரமே
ராஜனணியச்செய்தது — நன்றோசிவபரமே

அரசன் வசனம்.

தெய்வமே இக்காலம் நீசனுடைய உடையை யணியும்படியாகவும் படைத்தாயே இதுதர்மமா?

அரசன் வசனம்.

கேளும் எஜமானனே தாமசொன்னவண்ணமே தமதுடைகளைத்தரித்து காவிவஸ்திரத்தை அவிழ்த்து இதோகொண்டுவந்தேன் பெற்றுக்கொள்ளும்.

(வீ-கு-வ-ம்.) சரி இனிமயானகாவல் புரியச்சென்று வா.

அரசன் வசனம்.

உத்திரவுப்படி சென்றுவருகின்றேன் ஒருசங்கதி தெரிவிக்கிறேன்.

(வீ-கு-வ-ம்.) என்னசங்கதி தெரியப்படுத்துகின்றாய்.

அரசன் வசனம்.

தமக்குச் சொந்தமானசுடலை இன்னவிடத்திலிருக்கிறதென்பதாக தெரியவாறு சொல்லவேண்டும்.

வீரவாகு வசனம்.

அடிமையே சாளியயாகத்திலிருக்கின்றது தெக்கைக்கரையோரம்.

(அ-ன்-வ-ம்.) சென்றுவருகின்றேன் நிரவியசயம்பன்னனே.

(வீ-கு-வ-ம்.) நல்லது சுடலைக்குச்சென்றான்.

ஸ்ரீ

# அரசன் மயானத்திற்குச் செல்லும் பாகம்.

அரசன் விருத்தம்.

சதுர்மறைமுடிவேஞான தற்பரவடிவேயாகி
விதுவணிமுதலேதிய வினைக்கருமருந்தேஐயோ
ஏதுவிதக்குறையாலென்னை யிக்கதிக்காளாய்ச்செய்தாய்
இதுவுமுன்னருளோயானும் இன்னதென்றறிகிலேனே.

இராகம்-நாப்பி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

கோசிகமகாரிஷி   கொடுமையாலே-தெய்வமே
கோசிகநாடிழந்து   குடிபடையையிழந்து
அரண்மனைசிம்மாசன   மரசிழந்து-தெய்வமே
அரசர்குழுவிழந்து   அமைச்சர்குழுவிழந்து
இரதகஜதுரகபாதா   திகளிழந்து-தெய்வமே
எழிற்பணிகளிழந்து   இடையுடையையிழந்து
காவிவஸ்திரம்புனைந்து   கடனுக்காளாய்-தெய்வமே
காட்டில்நடந்துநொந்து   காசிநகர்க்குவந்து
காவிவிழித்தேவியு   மகனையுமே-தெய்வமே
காளகண்டர்க்குவிற்று   கடன்பொருளைக்கொடுத்து
நாடிஎன்றனோடுவந்த   நக்ஷத்ரய்யர்க்குத்-தெய்வமே
நல்குந்தரக்காயேகி   நான்கடையனுக்காளாகி
ஈடில்பதினாயிரம்பொன்   னீய்ந்தனுப்பியே-தெய்வமே
ஈந்தென்மந்திரியைப்பிரிந்தே   என்தலைவிதியைநொந்தே
தோளில்மாமிசக்காவடி   சுமந்திறக்கியே-தெய்வமே
சொல்லியபணிகடனை   சோர்வறச்செய்தபின்னை
அருமெந்தன்விரவாகு   அனுமதிபோலே-தெய்வமே
வெட்டியானைப்போலயானும் வேடங்கொண்டு-தெய்வமே
மெய்மொழிதவறாது   வேலைகள்செய்யவிப்போது
கட்டெழில்கொள்காசியிமம்   காக்கப்போகிறேன்-சிவமே
கருணாகரப்பொருளே   காசித்திருவருளே(கோ)



அரசன் விருத்தம்.

எப்படிச்சுடலைக்கேகி என்மனமுவந்தங்குற்றே
தப்பரவரும்பிணத்தை நகனித்துவரிநான்வாங்கி
அப்பறையனுக்கனுப்பி அரிசிதின் றுடல்வளர்ப்பேன்
அப்பனேசிவமேவுன்றன் அடிபணிபலனோவின்றே.

வாராரிதோ வச்சிரபாணி யென்றமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ஏகம்

கண்ணிகள்.

போகிறேன்மயானகாவல்   புரிந்திடவே
வாகிலுயர்வீரவாகு   வறுதிபோலவே(போ)
தியநீசர்வாசஞ்செய்யுந்   சேரிதாண்டியே
எயதெருவீதிகளி   லேகிவேண்டியே(போ)
கோவில்குளம்சத்திரமடங்   கோட்டைகடந்தே
காவியம்பூங்காவனனுன்   கண்டுநடந்தே(போ)
ராஜகோலத்துடனிருந்த   நானிதுசதியே
நீசகோலத்துடனிருக்க   நேர்ந்ததென்விதியே(போ)
பெண்டுபிள்ளையிருவரையும்   பிரிந்தேனவாயே
கண்டுகொள்வதென்றோவினிக்   காசிவாழ்துரையே(போ)
நேருடையமந்திரியையும்   நீங்கிநொந்தேனே
பேருலகிற்பாவியென்னப்   பேர்புனைந்தேனே(போ)
ஊர்ப்பிணவாய்க்கரிசிதின்ன   வுட்லெடுத்தேனே
காற்பணமுந்துண்டும்வாங்கக்   கரம்படைத்தேனே(போ)
பவஞ்சுடுசெங்கோலணிந்த   பாங்குநீங்கியே
சவஞ்சுடும்வெங்கோல்தன்னைத்   தடங்கைதாங்கியே(போ)

அரசன் விருத்தம்.

வித்தகவீரவாகு விளம்பியதிசையைநோக்கி
இத்தனைதூரம்வந்தே னிங்கெனதெதிரேயிப்போ
சுத்தமில்லாதப்ரேதம் சுடுபுகைதோற்றுதையோ
அத்தலந்தானோவீமம் அல்லதுவேறோதேவே.

கந்தனுதா கருணைசெய்வாய் யென்றமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

அதுதானோ   சுடலை-ஐயோ   (அ)

அனுபல்லவி.

அதின்பாலெவ்வோரிடத்தே   அக்கினிபிடித்தடர்த்தே
எதிராக   யெரிகின்றதே (அ)

சரணங்கள்.

சவத்தின்மண்டைவெடிக்கும் சத்தம்இடி இடிக்கும்
தன்மைபோலத்தான் கேட்குதே (அ)
துர்நாற்றம்வீசுதே தூயமனங்கூசுதே
தின்மையென்னசெய்தேனோ முன்னம் (அ)
இந்தவிதவேலைசெய்ய வந்தவிதியேனோஐய
எந்தவிதம்யான் செய்குவேன் (அ)
அதிவேகமாய்நடந்தே அருள்காசியைக்கடந்தே
இதமாக இங்கு வந்தேனே (அ)
(இதுதானோசுடலை ஐயோ.) (இ)

அரசன் வசனம்.

கடவுளே இக்காலம் நீசகோலம்புனைந்தவனாகி அகோரபூதப்பிரேதபிசாசமுலாவாநின்ற சுடலையை காப்பதற்குவந்தேன் ஆனால் இச்சுடலையை காப்பதற்கு எஞ்ஞான்றும் வீற்றிருக்க ஓர் இடம் வேண்டுமே அவ்விடம் இங்கு எவ்விடத்திலிருக்குமெனச் சுற்றிப்பார்க்கின்றேன் சிவமே.

அரசன் விருத்தம்.

மட்டிலாப்பொருள்வழங்கி யெனைக்கொண்ட
வெட்டியார்குலவேந்த னமர்ந்திவண்
அட்டியின்றி யரசுபுரிந்திடக்
கட்டியகொள்ளிக் கட்டைப்பரணிதோ.

இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

இப்பரம்பிசைதேவா எப்படிகாமுந்தருள்வேன் (இப்)

அனுபல்லவி.

[illegible]பரியகற்பகமே திவ்யதேஜோமயானந்தமே (இப்)

சரணங்கள்.

வெந்தகொள்ளிக்கட்டையாலும் மேவும்பாடைக்கழிகளாலும்
நைந்தவெவ்வாசந்தியாலும் நாடிச்செய்யலான வெய்ய (இப்)
இக்கெதிக்காளாவேனென்று யானறிகிலேனே இன்றுள்
இக்கொடுமீமத்தில்நின்று எப்படிக்காத்திடுவேனின்று (இப்)
வன்பிணஞ்சுடுகோல்தாங்கி மண்குழைக்குங்கொட்டில்வாங்கி
என்பெரியதுன்பம்நீங்கி இக்கணமிகடம்நோக்கி (இப்)



ஸ்ரீ

# அரசன்மயானங் காக்கிறபாரகம்.

அரசன் விருத்தம்.

நவமணியாலிழைத்தநற் சிம்மாசனத்திருந்து
நவமணிக்குடைநிழற்றத் தரணியாண்டதும்போய்
சவமணிகளியாற்செய்தத் தனிப்பரண்மீதிருந்து
அவமணிகுடைநிழற்ற அடவிகார்த்திடச்செய்தாயெ.

சுந்தரேசா எந்தனையாள்வாய் யென்றமெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

சமங்காக்கயென்றலை விதியோ-விதியோ
ஈசனேசர்வேசனே விஸ்வேசனேயென்மேல்
ஏது-வாது இங்கேயிப்போது (சம)

பக்திமிகுத்தசத்திய கீர்த்தியை-கீர்த்தியை
பறக்கவேவிடுத்துபறைச்சேரியடுத்து பறைக்கோலமெடுத்து
பாவி-கூவி பரண்மிசைதாவி (சம)

தேசஞ்செல்வஞ்செங்கோ லிழந்தே-இழந்தே
தேவியையும்சேயனையும் தியங்கியேவிலை
செய்தே-உய்தே சிந்தைதேறியே (சம)

என்னபாபம்யான்செய்தே னையோ-ஐயோ
இக்கதியிட்டாய்இருவினைநட்டாய் எங்கிடவிட்டாய்
இங்கும்-அங்கும் எங்கும்நிறைந்தவா (சம)

அரசன் விருத்தம்.

புத்தியில்மிகுத்திலங்கும் புண்ணியமந்திரியான
சத்தியகீர்த்திதன்னைத் தாகரால்பிரிந்துயானும்
இத்தினச்சுடலைகார்க்க யெய்தியிப்பரண்மீதுற்று
கத்திடுமென்வேடத்தை நாடிநீபாராய்தேவே.

சேருமுன்னே சேவல்கூவுதே யென்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

இப்படியும்வேடம்பூண்டிங்கே எய்தவும்செய்தாய் (இ)

அநுபல்லவி.

அப்பணிசடையாளனே அம்பிகைமணவாளனே
செப்பரியத்திருத்தாளனே ஜெகத்திலென்னை (இ)

சரணங்கள்

மணிமுடிசூட்டியிருந்த வான்றலைமீதிலிருந்த
துணியதனைச்சூட்டவைத்தாயே ஜோதியேயென்னை (இ)
அம்பரத்துணிதாங்கும் அணிபுயத்தினிலோங்கும்
கம்பளியைத்தாங்கவைத்தாயே கருணைகரா (இ)
ஒழுக்கமுடன்பிதாம்பரம் உற்றணிந்தசரீரம்
அழுக்குத்துகிலணியவும்வைத்தாய் அரனேஎன்னை (இ)
எல்நிகருடைவாள்கொண்ட இடையிற்புலையன்கொண்ட
சல்லடமுங்கச்சையுங்கொள்ள சதிசெய்தாயே (இ)
இரும்போவுன்தசிந்தை இறங்காததென்னவிந்தை
அரும்பாவியாக்கினாய்ஐயோ அறமோயிது (இ).

அரசன் வசனம்.

சம்போமகாதேவா இக்கெதிக்காளாக்கினையோ இதுதர்மமா.

---

## பாரிஸ்நடத்துகிற பாகம்.

பொது வசனம்.

இவ்வாறு அரசன் பரண்மீதமர்ந்து மயானகாவல்புரியும் சமயம் காசிநகரிலிருந்து அநேகபிரேதங்களைக்கொண்டு சிலர் ஈமத்தலத்தை நாடிவருகலானார்.

நகர்ஜனங்களின் வசனம்.

யாரப்பா இச்சுடலைக்கதிகாரி இங்குவா

(அ-ன்-வ-ம்.) இதோவந்தேன் ஐயே யாதுகாரணம்.

நகர்ஜன வசனம்.

இந்த பிரேதத்தை தகனிக்கவேண்டும் இதற்கு இடம் தயார் செய்துகொடு.



அரசன் வசனம்.

இதோ தயார்செய்துவிட்டேன் நீங்கள் எவ்விதம் செய்யவேண்டுமோ செய்துகொள்ளுங்கள்.

நகர்ஜன வசனம்.

சரி காவலனே எருவடுக்கி பிரேதத்தைவைத்து நெருப்புமூட்டி விட்டோம் இத்தை பத்திரமாய் பார்த்துக்கொள் நாங்கள் போய்வருகிறோம்.

அரசன் வசனம்.

சகபாஷ் ஏதோ யிவன் இங்கு புதிதாக வந்திருக்கின்றானென மதித்தோ எனது எஜமானனுக்கு சேரவேண்டிய சுதந்தரங்கொடாமற் எய்த்துவிட்டுச் செல்லுகின்றீர்கள் நில்லுங்கள் அப்படி.

நகர்ஜன வசனம்.

இதென்ன அநீதமாயிருக்கின்றது எங்களுக்கேர்ப்பட்ட வயிற்றெரிச்சலென்ன நீ அத்தை உத்தேசியாது சுதந்திரம் கேட்கின்றையா தருவதில்லை.

அரசன் விருத்தம்.

சுடலையின்வழக்கம் அடைவுடன்தெரிந்தும்
சுத்தமாய்த்தெரிந் திடாதவர்போல்
திடமனமுடைய திருடர்போலெய்த்துத்
தேறியேஎதிராகநூல்
புடமிவணமைத்துப் பிணமதைவைத்துப்
பொறகனல்மூட்டினீரறமோ
நடநடவிதனைத் தூக்கியப்புறத்தே
நாடிடிற்சாடுவேனுனே.

அரசன் விருத்தம்.

வழக்கம்போற்பிணக்கடன்னை
வைத்திங்கேசுடுவதானால்
வழக்கம்போற்பிணமொன்றுக்கு
வரிப்பொருள்சொல்வேன்கேளீர்
வழக்கம்போல்பணங்கால்துண்டு
வாய்க்கிடும்அரிசிஇத்தை
வழக்கம்போல்யீந்தாலன்றி
வன்னியாற்சுடச்செய்வேனே.

அரசன் வசனம்.

ஓய் நகரின்ஜனங்களே ஒரு பிரேதத்தை தகனம்செய்வதாக விருந்தால் அதற்குவரி காற்பணம் ஒருமுழத்துண்டு வாய்க்கரிசி இம்மூன்றும் கொடுக்கவேண்டும் இவ்விதம்கொடுத்தா லுங்கள் பிரேதத்தை தகனம்செய்வேனன்றே லப்பாலெடுத்துச்செல்லுங்கள்.

நகர்ஜன வசனம்.

அடே அப்பா இவனென்ன ரெம்பவும் ஊக்கமுற்றவனாக இருக்கின்றான் சுதந்திரங் கொடாவிடில் விடமாட்டான்போலு மிருக்கின்றது நல்லது வாராயப்பா காவலனே கோபித்துக் கொள்ளாதே இதோ காற்பணம் முழத்துண்டு வாய்க்கரிசி இருக்கிறது எடுத்துக் கொள் சரிதானா.

(அ-ன்-வ-ம்.) சரிதான் போய்வாருங்கள்.

பொது வசனம்.

இவ்வாறு அரசன் ஒவ்வொரு பிரேதங்களுக்கும் யேற்பட்டபடி சுதந்திரம்வாங்கி அதில் தனக்குச்சேர்ந்த வாய்க்கரிசி துண்டுசெய்து ஒருகூடையில் வைத்துக்கொண்டு மீதபாகத்தை தனது எஜமானனுக்கு கொடுத்தனுப்பி சுடலைகாத்திருக்கலானான் அன்று சூரியனுமஸ்தமனமாகி கிழ்பாலுதித்தனன்.

அரசன் வசனம்.

கடவுளே என்னைக்கொண்ட எஜமானன் இவ்விதவேலை யிடுவானென நேற்றையதினத்தில் தெரிந்து இருக்குமாகில் எனது மந்திரியையும் என்னுடன்கூட்டி வந்திருப்பேன் ஐயோ அறியாது அவரை என்னைவிட்டு எங்கேனும் போய்பிழைத்துக் கொள்ளுமென்பதாக சொல்லிவிட்டுப்பிரிந்து இங்குவந்தேனே யிதுவரை அவர் என்னஸ்திதியிலிருக்கின்றாரோ அறிகிலேன்.

அரசன் விருத்தம்.

என்னுயிர்போலெண்ணி யிதுவரைசத்யகீர்த்தி
தன்னுயிர்காத்துவந்த தன்மையின்றன்மையாலல்
அன்னவனென்னைத்தேடி அலைந்திவண்டானுகிக்கண்டு
இன்னமுமவனாலேவ லியற்றிடக்கிடைக்குந்தேவே.



அரசன் வசனம்.

கருணாகரா என்னுயிர்போல எண்ணி யிதுவரை சத்தியகீர்த்தியென்னும் மந்திரியை யான்காத்துவந்ததன்மையாகின் அன்னவன் என்னைத்தேடி யிங்குவந்து என்னைக்கண்டு அதன்பின் எப்போதும் போல இன்னமும் அவனால் எனக்கு சிற்றேவல் செய்யக்கிடைக்கும்

பொது வசனம்.

இவ்வாறு அரசன் மந்திரியைநோக்கி வருந்தலானான் இனி அம்மந்திரி அரசனைக்காணாது வருந்தும்விதம்.

---

# மந்திரி அரசனைத்தேடுகிறபாகம்.

மந்திரி விருத்தம்.

கோசிகரால்நாடிழந்து கடனுக்காளாய்
கொடியவனமீதுநடந் தையோ இந்தக்
காசியெய்தித்தாயுடனே துணைவன்றன்னைக்
கானகண்டரண்டைவிற்றுப் பிரிந்துபின்னும்
ஏசியவன்தரகருக்குங் கூலிநல்க
இறைவனிவ்வூர்ப்பறையனுக் காளாகிநொந்தே
தேசிகனை அவரெனைவிட் டகன்றிரண்டு
தினஞ்சென்றுந்தேடாதிங் கிருக்கின்றேனே.

போய்வாமயிலே யென்றமெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

எங்கே தேடுவேன் — என்துரையை (எ)

அநுபல்லவி.

சங்கரிநேசா — தாசவிஸ்வாசா
எங்கனுமிறைந் — திடுமீசபரமேசா (எ)

சரணங்கள்.

தன்னுயிர்போலே — தாணியின்மேலே
என்னுயிர்காத்தபிதாவை — என்சாமியை (எ)
ராஜாதிராஜன் — ரகுகுலபோஜன்
ஈசன்பதமறவாததாசன் — என்னேசனை (எ)
கருணைபங்கடலான் — கனபுண்யவுடலான்
மருவலரைஜெயிக்குமடலான் — என்திடவானை (எ)

மந்திரி விருத்தம்.

ஆதரவாகவுற்ற அரசர்கட்கரசன் றன்னைக்
கோதகலின்னகர்குட் கூகமாய்க்காணவேண்டி
வேதசன்னியாசிபோலவேடம் யான்புனைந்தேவோங்கும்
பூதம்வாழ்மடத்தைவிட்டு புறப்பட்டேனெம்பிரானே.

அருமைக்கண்மணியைக் காணேனே யென்றமெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-அடதாளம்.

கண்ணிகள்.

என்னசெய்வேனையோ சிவமே-எனக்
கிப்படிவரலாமோ பவமே
மன்னவனைஎப்போக் காண்பேன்-எந்தன்
மனமகிழ்ச்சிஎப்போ பூண்பேன்
தன்னந்தனிமையாய் நின்றே-பா
தவிக்கவிட்டாயென்னை யின்றே
இன்னகர்வீதிகள் யீதே-நான்
எகியேகாண விப்போதே
அதிவினாவாய்நடக் கின்றேன்-இந்த
அருவழியைக்கடக் கின்றேன்
எதிரில்நன்றாகப் பார்க்கின்றேன்-என்றன்
எந்தலைக்கண்ணால் நோக்கின்றேன்

மந்திரி விருத்தம்.

ஒன்குமின்னகரிலுள்ள ஒவ்வொருவீதியாகப்
பாங்குடன்சென்றுங்காங்கு பற்பலரிடத்தும்மேவி
எங்குமென் னுயிரைக்காத்த எந்தையாகியராஜேந்திரன்
இங்குநீர்வரக்காணீரோ வெனவிசாரிப்பேன்நாதேன்.

ஐயோமகனே என்ன செய்வேன்டா யென்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-அடதாளம்.

கண்ணிகள்.

நீதிதவறாத வேதியரோ-என்றன்
நிருபனிங்கேவரக் காணீரோ
கோதிலாமன்னர் குலத்தோரோ-என்றன்
கோமானிங்கேவரக் காணீரோ
வையம்புகழும்பூ வைசியரோ-என்றன்
மன்னவனிங்கேவரக் காணீரோ



ஐயமிட்டுண்ணுங் கோவைசியரோ-என்றன்
அரசனிங்கேவரக் காணீரோ
பொய்யுரையாத் தனவைசியரோ-என்றன்
பூமானிங்கேவரக் காணீரோ
செய்யபூஜைசெய்யுஞ் சைவோரோ-என்றன்
ஸ்ரீமானிங்கேவரக் காணீரோ
மாதவனைநுதி வடுகர்களே-என்றன்
வள்ளலிங்கேவரக் காணீரோ
காதகஞ்செய்யாத கள்ளர்களே-என்றன்
கர்த்தனிங்கேவரக் காணீரோ
அடியவர்புக ழகம்படியர்களே-என்றன்
அண்ணலிங்கேவரக் காணீரோ
வடிவுறும்வீர மரவர்களே-என்றன்
வரதனிங்கேவரக் காணீரோ

மந்திரி விருத்தம்.

இத்தனைவீதிதோறும் எகினுங்காங்குற்ற
அத்தனைமனிதர்பாலு மரசனைக்காணீரோவென்
றெத்தனைவிதமோபாவி எடுத்தெடுத்துரைத்துக்கேட்டும்
பத்தர்போலிருந்துவிட்டார் மறுமொழிவழுத்தாதையோ.

இன்னமுநின்மனதிரங்கா யென்றமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

இதற்கினிநானென்னசெய்வே னிமயவாசனே
யென்னபாவம்முன்செய்தேனோ எழில்விளவேசனே
இதந்துடனேயென்னையாண்ட எந்தல்தன்னையே
இந்நகரிலென்றுகாண்பேன் என்றன் அன்னையே
இப்படியும்வினையெனக்கு மிறைவனுக்குமே
யெய்தவுஞ்செய்தாயேஞாய மிதுவோசிவமே
எப்படியிதைச்சகிப்பே னிகத்தில்ஆதியே
இதுவரையுன்பதம்பணிந்த பலனோஜோதியே
எந்தவிடமென்றுகண்டு ஏகுவேன்யானே
இங்கொருவரோனுவந் தியம்பக்காணேனே
உந்தன்மனமுங்கலோ விரும்போவயிரமோ
உளம்வருந்துமென்மேற்கொஞ்ச முருகாதென்னமோ

மந்திரி விருத்தம்.

பின்குலப்பறைபனுக்கென் பிதாவைநான்விற்றேனன்றே
நன்குறும்சேரிதன்னை நாடித்தானிருக்கவேண்டும்
இங்கினித்தேடிப்பார்ப்பதிற் பயனில்லையாமால்
அங்கினிதேடிப்பார்க்க அடைவுடனடக்கின்றேனே.

இராகம்-உசேனி-தாளம்-சாப்பு.

பல்லவி.

தேடுறேன்மன்னனை — தெய்வமே-தெய்வமே-தெய்வமே(தே)

அனுபல்லவி.

தேடுமெனக்கித்ததி — ஜெகமிசையிந்தவிதி
நாடலாகுமோ — நாதனே-நாதனே-நாதனே(தே)

சரணங்கள்.

மகுடமுடியணியும் — மன்னரெல்லாம்பணியும்
தகுதிருமலர்த் — தாளனே-தாளனே-தாளனே(தே)
ஜெகமதியோர்குடைக்கீழ் செங்கோல்செலுத்தியேவாழ்
திகழ்கதிர்குல — தீபனே-தீபனே-தீபனே(தே)
எப்போதவரைக்கண்டு — என்மனம்மகிழ்வுகொண்டு
அப்போதுதொண்டு — செய்குவேன்-செய்குவேன்(தே)
இதுதானேபவம்சூழும் — ஈனப்புலயர்வாழும்
பதிவானசேறி — பரனே-பரனே-பரனே(தே)
துன்னுற்றம்வீசுதே — தூயமனங்கூசுதே
என்னமாயிதிலேகுவேன் — ஏகுவேன்-ஏகுவேன்(தே)
கழுகுகாகம்சுத்துதே — கடிநாய்கள்குறைக்குதே
கொழுநேரெலும்புகுத்துதே — குத்துதே-குத்துதே(தே)
மாட்டினற்றோள்களும் — மாமிசத்துண்டங்களும்
வீட்டினிற்கட்டிதொங்குதே — தொங்குதே-தொங்குதே(தே)
இத்தெருவோர்கள்பால் — இனிவிசாரித்ததின்மேல்
மற்றயோசனைசெய்யலாம் — செய்யலாம்-செய்யலாம்(தே)

மந்திரி வசனம்.

கருணையங்கடலே கானமர்ந்திருந்த பாழ்மடத்தைவிட்டு புறப்பட்டு எனதரசனைத்தேடிப் பார்க்கும்பொருட்டு இப்பறைச்சேரிக்கி வந்தேன் இங்கு யாரோ ஓர் ஈனன்வருகின்றான் அவனிடம்விசாரிப்போம்.



மந்திரி விருத்தம்.

அதிவிரைவுடனேசெல்வ தாரப்பாயிங்கேநீவா
நிதியிதுவீரவாகு நேற்றொருமனிதன்றன்னை
மதியிடம்விலைக்குவாங்கி வந்தனனன்றோஅன்னோன்
கதிதனையடைந்தஅந்த காந்தமெனக்குற்றான்சொல்லே.

மந்திரி வசனம்.

அதிவிரைவாகச் செல்லுகின்றதாரப்பா இங்குவா ஒருசங்கதிகேட்கவேண்டும்.

(ப-ன்-வ-ம்.) என் ஐயே யிவ்வளவு ஆத்திரமாக அழைக்கின்றாய்.

மந்திரி வசனம்.

இத்தெருவில்வசிக்கும் வீரவாகுவென்னும் பெயருடையோன் நேற்றையதினம் இந்நகரில் ஓர் மந்திரியிடத்தில் ஒருமனிதனை கிரயத்திற்கு வாங்கிவந்தானல்லவா அது வுனக்குத்தெரியுமா.

(ப-ன்-வ-ம்.) கொஞ்சந்தெரியும்.

மந்திரி வசனம்.

நல்லது அந்த வீரவாகுவின் கதியையடைந்த அந்தமனிதன் எங்கிருக்கின்றான் தெரிந்துசொல்லப்பா.

பறையன் விருத்தம்.

எங்குலவீரவாகு யிருத்திகொடுத்தோராளை
இங்குநேற்றழைத்துவந்தே என்றுந்தன்சொந்தமான
பொங்குசீச்சுடலைகாவல் புரியவேதிட்டஞ்செய்து
அங்கவன் அனுப்பிவிட்டான் அறிகுவேன்அறிகுவாயே.

பறையன் வசனம்.

கேளைய்யே வீரவாகு நேற்றோர்ஆளை விலைக்குவாங்கி தனதுசொந்தமான மயானங்காக்கும்படி அந்த ஆளை அனுப்பிவிட்டான் இது சங்கதி எனக்கு நன்றாய்த் தெரியவரும்.

(ம-ரி-வ-ம்.)நல்லதப்பா சென்றுவா.

மந்திரி வசனம்.

ஐயோ ஸ்ரீவிசாலாக்ஷி சமேதவிஸ்வநாதா எனதரசன் இதுவரை படைத்த விருதினைபோதாதென்றோ இக்காலஞ் சுடலைகாவல்புரியும்படிக்குச்செய்தனை உனது திருவருள்விதமுமுளதோ.

மந்திரி வசனம்.

சரி இனிதாமதித்துஇருந்து வருந்துவதில் யாதொருபயனுமில்லை சுடலைக்குநடந்துசெல்வோம் சூரியனுமஸ்தமனமாகினான்.

## மந்திரிசுடலைக்கேகும்பாகம்.

மந்திரி விருத்தம்.

வெவ்வியசுடலைக்கேகி வேந்தனுந்தனித்திருத்தங்
கெவ்விதம்கொடியகாவ லியற்றுகின்றாரோயின்று
அவ்விதமறியேன்பாவி ஆகையாலவர்பாலுற்றே
ஒவ்வியான்தொண்டுசெய்ய உறுதியாய்நடக்கின்றேனே.

மந்திரி விருத்தம்.

பறையர்வாழ்சேறிமீது பாங்குடனேகியாங்கு
இறைவனின்றடைந்ததன்மை யாவுமேகேட்டவர்க்கு
முறையுடன்பணிகள்செய்தே முழுமலரடிக்கீழ்வாழ
நறையிலாச்சுடலைதன்னை நாடிநான்நடக்கின்றேனே.

மந்திரிவிருத்தம்.

வெட்டியார்சேறிதாண்டி மிருதெருவீதிதாண்டி
மட்டிலாக்கோவில்தாண்டி வாவியஞ்சோலைதாண்டி
கெட்டியாங்கோட்டைதாண்டிக் கிளிர்ந்திடுஞ்சாலைதாண்டி
துட்டவாரலகையாடுஞ் சுடலையில்வந்திட்டேனே!

மந்திரி விருத்தம்.

இத்தலமீதிலொவ்வோ ரிடத்திலுஞ்சவத்தைப்பற்றி
எத்தனைபுடங்களோவெந் தெரியுதேபுகைகள்தாவி
எத்துதேஇருளில்மன்ன னெத்தலத்திருக்கிறாரோ
அத்தலமறியேனுமா லவரைநான்தேடுவேனே.

மந்திரி விருத்தம்.

அனைபிதாபோலுமுந்தன் அருகினிலிருந்தியன்பாய்
அனைபிதுவரைதற்காத்த வந்தலேபாலுகோவே
உனையகன்றிருக்கமாட்டா துன்னிருப்பிடங்கேட்டிங்கே
வினையினேனணுகித்தேடி மெலிகுறேன்வேந்தர்வேந்தே.

மந்திரி விருத்தம்.

கறைமிடற்றவனையொக்குங் கவுசிகமுனியனுப்பும்
மறையவன்றனக்குக்கூலி வழங்கவேகாசிவாழும்
பறையனுக்கடிமையாகிப் படர்சுடுகொடுகாக்கும்
இறைவனீரெவ்விடத்தி லிருக்கிறீரியம்புவீரே.



மந்திரி விருத்தம்.

நன்றுடனும்மைக்கண்டு நான்மனமகிழ்வுகொண்டு
இன்றுநன்னேற்றுமன்றி இயற்றியேவந்ததொண்டு
என்றும்யானியற்றியுந்த னிணையடிக்கீழேவாழ
இன்றுளங்கருதியிங்கே யெய்தினேன்மன்னர்கோவே.

மந்திரி விருத்தம்.

தேடியேதிரியுந்திய சிறியேனென்மீதுன்னுள்ளம்
நாடியேயெனக்குவாய்த்த ரகுகுலமந்திரியேநீ
வாடியேவருந்தாதிங்கே வாவெனவாய்திறந்து
ஆடியநாவினாலே யழைத்திடாதென்னோமன்னோ.

### அரசனுக்கும் மந்திரிக்கும் சம்பாஷணை.

அரசன் வசனம்.

இதென்னவிபரீதம் இந்தராத்திரிவேளையில் யாரோ ஒருவன் இங்குவந்து பலவாறுகவருந்துகின்றான் இவன் பூதப்ரேதபைசாசனோ என்னமோதெரியவில்லை அருகிற்சென்று விசாரிப்போம்.

அரசன் விருத்தம்.

எவனடாவிந்நேரத்தில் என்னனுமதியில்லாமல்
இவடமென்காவலுக்கு ளெய்தினையெய்துமநீதான்
எவடம்நின்நாமம்யாது யிங்குநீதுணிந்துவந்த
விவரமியாதவதையெடுத்து விளம்புவாய்மெய்யாயின்றே.

மந்திரி விருத்தம்.

விளம்புவேன்கேளாயிம மேவுகாவலனேயென்னூர்
வளம்பெருமயோத்தியென்பேர் மந்திரிசத்தியகீர்த்தி
தளம்புடைசூழ்ந்த தரணியையாண்டவென்றன்
உளம்புகழ்துரையைத்தேடி யுற்றனனிங்கேநானே.

அரசன் விருத்தம்.

கடல்புடைசூழுமிந்தக் காசினிபுகழவுன்றன்
அடல்மிகுவேந்தனுண்ட அருள்நகரேதுபேர்யாது
இடரிலாதன்னேனென்செங்கோ லேனியற்றுமவிவ்வூர்
சுடலையையடைந்தானத்தைக் சொல்லுவாய்தெரியத்தானே.

## மந்திரி அகவல்.

சொல்லுவேன்கேளாய் கடலைகாவலனே
தொல்லுலகோர்புகழ் துரந்தரன்விபரம்
அவர்பெயர்சத்திய அரிச்சந்திராம
அவரிருந்தாண்ட தயோத்தியாபுரியே
கோசிகர்செய்த கொடுமையாலவர்க்கு
பேசியபடியே பிரிதியாய்த்தமது
அருட்பெருமன்னு டரசுஞ்செல்வமும்
திருக்குடிபடையும் சேனைசைனியமும்
தத்தமாயளித்துந் தவமுனிமீண்டும்
அத்ததிகருணை யனுவளவின்றி
நிருபனைப்பார்த்து நீயும்மனைவியும்
திருமகனுந்தான் றேகமீதணியும்
ஆபரணங்களை யளியெனவவிழ்த்துத்
தாபதன்கையிற் றந்தனர்பின்னும்
மூவரும்பூணும் முத்தனிஆடையை
தாவெனவுடனே தரணியன்வருந்தக்
கண்டமாமுனிதன் காவித்துணியைமுத்
துண்டமாய்கிழித்துத் துரிதமாயிய
அதனையம்மூவரும் அணிந்துதன்றுடையை
உதவியேயவர்பால் உத்தரங்கேட்க
அக்கணம்நீயெனக் கருமகப்பொன்னை
இக்கணங்கொடுத்தா லீவேன்விடையென
அதற்குடன்பட்டென் அரசனுமவர்பால்
இதத்துடன்நாற்பத் தெட்டுநாட்டவணை
வாங்கிவணங்கி வருதியும்பெற்று
ஓங்கியநாட்டை ஒப்பிவித்தகன்று
தானும்மனைவிச் சந்திரமதியெனும்
மானுமவரது மகனுலோகிதனும்
நானுமயோத்தி நன்னகர்தாண்டி
தேனுறைசரயுத் திருநதியடைந்தோம்
அன்றிரவப்பொருள் அடங்கலும்வாங்கிச்
சென்றிடகூத்த் திரகெனும்நாமங்
கொண்டவோரந்தணன் குறுகினனவனை



தெண்டன்செய்தே சிறப்புடனழைத்து
தெய்வமுமிக்கதி செய்ததேயென்று
ஐவருமந்த அடவியிற்புகுந்தே
செய்யதாள்நோகத் தினம்தினம்நடந்து
வெய்யவநேக வினைகளடைந்து
அதிற்சிலநாட்கழித் ததைக்கடந்திந்தப்
பதிக்குவந்தரனை பணிந்தனமதன்பின்
தவமுனிகடனைத் தரவவர்தந்த
தவணைநாள்வந்து சமீபித்ததினால்
சத்தியங்காக்கத் தன்மனைவியையும்
புத்திரனையுமோர் பூசுரனை
காலகண்டர்க்கு காவலன்விற்று
எலவேஆவணம் எழுதிக்கொடுத்து
நிதிதனைவாங்கி நீள்கடன்தீர்த்து
விதிதனைநொந்தே வேந்தனும்யானும்
பொருந்துங்காசி புரித்தெருவீதியுள்
வருந்தருவாயில் மாமுனிதூதன்
எங்களைத்தீர்த்து இதுவரைநானும்
உங்களோடலைந்தை உற்றுவந்ததற்கின்
றிங்கினிபதினா யிரம்பொன்கூலி
வாங்கிடாதகலேன் வழங்கென்வரசன்
தன்னையேவிற்று ஜடுதியிற்கூலிப்
பொன்னையீகென்னப் புகலநான்பாவி
விதியிலவரை விலையதுகூவி
சாதியிற்பறையனும் தனிகனுமான
வீரவாகுவுக்கு விற்றென்கையால்
சீரதாயாவணந் தீட்டிக்கொடுத்து
பதினாயிரம்பொன் பாங்குடன்வாங்கி
சதுர்மறையோர்க்குத் தந்தனுப்பியபின்
பூபதிவருதி போலவேஅவரை
பாபநீசன் பால்விட்டிறைஞ்சி
பாவிநான்பிறந்தோர் பாழ்மடத்தின்கண்
தாவிநேற்றோர்நாள் தனித்திருந்தேனே
இருந்துமவரைவிட் டிருக்கமாட்டாது
வருந்தியேபுலையர் வாழ்தெருவெய்தி

அங்குவிசாரித் ததிலெனதரசன்
இங்குவீற்றிருப்ப தாகவேரினன்
உரைக்கக்கேட்டு ஓடிவந்தேனென்
துரைத்தனனெங்கே சொல்லுவாயெமக்கே.

மந்திரி வசனம்.

காவலா எனதரசன் எங்கிருக்கின்றார் சொல்வாயாக.

அரசன் விருத்தம்.

ஆமவனரசுசெங்கோ லருள்நகர்நாடுசெல்வம்
வாமமார்சேனைதானை வாழ்குடிபடையமைச்சு
மாமணிக்கிரீடமாழி வஸ்திரபூஷணம்வாள்யாவும்
நேமகோசிகனுக்கீய நேர்ந்தநீங்கென்சொல்வாயே.

மந்திரி வசனம்.

எனதரசன் ராஜ்யபரிபாலனஞ்செய்து வருங்காலத்தில் ஓர்நாள் மிருகங்களனுகி நாட்டின்வளங்களை யழிக்கக்கேட்டு காட்டைநாடி வேட்டையாடி அன்றிரவொழிக்க ஓர்பூங்காவெய்தியிருந்தனர் விடிந்தபின் நகர்க்குப்புறப்பட எத்தனிக்குந்தருவாயில் இரண்டு நீசஸ்திரிகள்வந்து நர்த்தனஞ்செய்து குடையையும் வெற்றிமாலையையும் கேட்டனர் அரசன் கொடுப்பதில்லையெனமறுத்தனர் மீண்டும் தன்னைச்சேரவிருப்புற்றனர்அத்தெரிந் தரசனவர்களைசேவுகரால்தள்ளிவிடச்சாற்றியதக்ஷணமே விஸ்வாமித்திரமுனிவன் வெகுண்டுவந்து வேந்தன் மகுடத்தைமிதித்துத்தள்ள இவர்யாதுகுற்றஞ்செய்தேனென அவர் எனது குமாரிகளைபரிசுகொடாது அடித்துவிரட்டினதா லிவ்விதம் செய்தேனென இறைவன் இப்பிழையை மன்னிக்கவேண்டுமென இருடி எனதுபுத்திரிகளை நீவிவாகம்செய்து கொண்டாலல்லது மன்னிக்கமுடியாதெனவுரைத்தனர் அரசன் அதற்கிணங்காது எனதுநாடுநகரை கேட்டபோதினும் தருவேனெனச் சாற்றியதற்கு முனிவரிணங்கி தாவாவென உடனேதாரைவார்த்தும் முன்னமேகொடுத்த யாகப்பொன்னுக்குவகைசொல்லென காசியிற்சென்று தருவேனென நாற்பத்தெட்டுநாள்த்தவணைவாங்கி இப்பதியடைந்தனர்.

(அ-ன்-வ-ம்.) கடனளவென்ன.

மந்திரி வசனம்.

யானைமீதொருவ னின்றெறிந்த கவண்கல்லேகுமளவு.



அரசன் வசனம்.

சரி இவ்விதகஷ்டமடைந்த சண்டாளனை எதற்காகத்தேடிவருந்துகின்றனை.

மந்திரி வசனம்.

ஏ காவலா தர்மஸ்வரூபியான எனதரசனைப்பற்றி இவ்விதம்பாஷிப்பது ஞாயமன்று.

அரசன் வசனம்.

அடா நீ இவ்வளவு உரித்தோடுங் கூடிக்கேட்கின்றையே வுனது அரசனைக்கண்டபின்மேலென்ன செய்யப்போகின்றாய்.

மந்திரி வசனம்.

கேளாய் காவலனே எனதரசனைக்கண்டு இதுவரையில் அவர்க்குச்செய்துவந்த தொண்டேயியம் இன்னம் அவர்க்கேசெய்யக் கருதியிருக்கின்றனன்.

அரசன் வசனம்.

நீ அவனது மந்திரி என்பதாகச் சொல்லுகின்றனையே உன்னைப் பார்க்குங்கால் சன்னியாசிபோலு மிருக்கின்றாய்.

மந்திரி வசனம்.

மெய்யே எப்போதெனதரசனைப் பிரிந்தேனோ அப்போதே யான்துக்கசாகரத்தில் மூழ்கினவனாகி இனி இவ்வேடமே நமக்குத்தக்கதென மதித்தெடுத்தேன்.

அரசன் வசனம்.

ஈதுண்மையாகின் இக்காவி உடையை களைந்துவை பார்ப்போம்.

(ம-ரி-வ-ம்.) இதோ களைந்துவைத்தேன் பார்க்கலாம்.

(அ-ன்-வ-ம்.) உனதரசனை அவசியம் பார்க்கத்தான் வேண்டுமோ.

(ம-ரி-வ-ம்.) ஆம் பார்க்கத்தான்வேண்டும்.

அரசன் வசனம்.

யாதொரு புலையனுக்கடிமையாகி உன்னைவிட்டுப் பிரிந்துவந்த மன்னனாகியக் கொடியசண்டாளன் இதோநிற்கின்றேன் பார்மந்திரி.

(ம-ரி-வ-ம்.) ஐயையோவரசே வுமக்குமிவ்விதி யெய்தியதோ.

மந்திரி விருத்தம்.

ஐயகோவரசேயெந்த னண்ணலேயனைபிதாவே
வையகம்புரந்தகோவே வான்கதிர்குலவிளக்கே
மெய்யறங்கருணையோங்கும் வித்தகவுமக்கிந்நாளில்
வெய்யவோர்சுடலைகாக்க வேதனும்விதித்திட்டானோ.

அ-ன்-வ-ம். மந்திரி பூருவ கருமத்தின்பலனுக் கென்செய்வது அழாதே.

மந்திரி விருத்தம்.

அந்தணர்கள்ஜெயஜெயெனவாசிகூற
　அரசர்வந்துதிறைகொடுத்துவணங்கிநிற்க
இந்துவட்டக்குடைநிழற்றக்கவரிவீச
　ஏந்திழைமார்நடமாடவாணர்பாட
மந்திரமாருகிருக்கக்குடிகள்சூழ
　மாளிகையில்வாழ்ந்திருந்தவண்மைநீங்கி
விந்தநகர்வேதாளப்பூதப்பேய்கள்
　மேவுமிந்தச்சுடலைபுக்கவிதியோவேந்தே.

அரசன் விருத்தம்.

வேதனுஞ்சிவனுமாலும் வெல்லுதற்கரியதான
மேதகுவிதியைநம்மால் வெல்லவுந்தரமோமேனாள்
நீதமாயனுமத்தவண்ணம் நேர்வதிற்றடையொன்றில்லை
ஆதலாலிதற்குவாடி யடிக்கடியழாதேமந்திரி.

(அ-ன்-வ-ம்.) மிகவும் வருந்தாதே மந்திரி.

மந்திரி வசனம்.

நல்லதரசே தாம் நேற்றையதினத்தில் புலையனுக் கடிமையாகி யென்னைவிட்டுப்பிரிந்து அப்புலையன்வீட்டை யடுத்தது முதல் இச்சுடலைகாக்க வந்தவரையிலும் அதனுள்நடந்த சங்கதிகளைக் கேட்க வேண்டுமென்றெண்ணம் தயவுசெய்து சாற்றல்வேண்டும் பிரபு.

(அ-ன்-வ-ம்.) சொல்லுகின்றேன்கேளும் அமைச்சே.

## அரசன் அகவல்.

மலைநிகரிருபுய மந்திரியேகேளாய்
புலையனுக்கடிமை புகுந்தனைப்பிரிந்து
வருந்தியவன்கொடு வந்ததுர்நாற்றம்
பொருந்தியமாமிசம் பொதிந்தகாவடியை
சுமந்துநடந்து தொடர்ந்தவன்குடிசில்
அமர்ந்தெதன்விதியா லவனிருதாளைத்
தொட்டுப்பிடித்துச் சுரபிக்கரும்புற்
கட்டுக்கொணர்ந்துக் கன்றையுரித்து
தாமிதமின்றித் தகுதியாயுள்ள
மாமிசமெடுத்து மரக்கலத்தமைத்துக்



கூரிதுநேரமயங் கூரியகத்தியென்
சீரியகரத்திற் றீண்டிடக்கண்டு
கூவிபழுதேன் கொண்டவனென்னை
மேவியேகாளால் மிதிக்கவுமடியேன்
இவ்விதஞ்செய்த விருப்பிழைபொறுத்தின்
றெவ்வியேகாப்ப துன்கடனென்றேன்
அதற்கவனென்னை யழைத்தருகிருத்தி
இதத்துடன்சொந்த வியங்காக்கவும்
வருபிணமியாவையும் வன்னியிறுக்கவும்
ஒருபிணமொன்றுக் குற்றசுதந்திரம்
ஊத்தைவாய்க்கரிசி யொருமுழத்துண்டு
ஏற்காற்பணமாம் இம்மூவகைபோல்
அனைத்திற்கும்வாங்கி யனுப்புவாயென்ன
எனைக்கொண்டவாபசிக் கென்செய்வேனென
அங்குரைத்தவி லவன்மனதிரங்கி
இங்குவாய்க்கரிசியை யெடுத்துக்கொள்ளென
விடைகொடுத்தனன்றேன் மெய்யணிசுடலை
உடைகொடுத்தணிய் வுரைத்தனனணிந்து
காவித்துணியைக் களைத்தவர்க்கீந்து
கூவித்தாவிக் கொடியணிகெய்தி
இரண்டொராளாக வித்தொழில்புரிந்திப்
பரண்மீதமர்ந்து பாதுகாக்கின்றேன்.

(அ-ன்-வ-ம்.) மந்திரி இதுதான் நேற்றையதினத்தில் நடந்த காரணம்.

மந்திரி விருத்தம்.

கடையனுக்கடிமையாகிக் காவடிதூக்கியன்றே
னுடையவிடெய்திச்செய்பா தூறும்பணிசெய்தேகிந்த
உடையினையணிந்துகாவி யுடையினையிழந்துபூகப்
படையுறைகொடுற்ற பாழ்வினைக்கென்செய்வேனே.

அரசன் விருத்தம்.

இந்தவாறுநாயின் றிடைவதிற்பயனென்றில்லை
எந்தனீருடல்வளர்க்க விரண்டொராளாகவிங்கே
வந்தவாய்க்கரிசிதன்னை வைத்திருக்கின்றேனித்தை
யெந்தவாறருந்தவேண்டு மியம்புவாய்மதிவலோனே.

மந்திரி விருத்தம்.

இந்தவாய்க்கரிசிதன்னை யெவ்விதமுண்பதென்னில்ச்
செந்தளிர்ப்புல்லினுள்ளேச் செலுத்தியோர்பசுவிற்கூட்டிப்
பிந்தவேயதுதான்போடப் பெற்றசாணத்தினுற்ற
அந்தவாய்க்கரிசிதன்னை யலம்பிச்சோறுக்கியுண்பாம்.

அரசன் வசனம்.

மந்திரி சூரியனுதயமாகும் சமயமாயின இந்த வாய்க்கரிசியை யெடுத்துக்கொண்டுபோய் நீ சொல்லிய பிரகாரமே சமையல்ச்செய்து கொண்டுவா இருவரும் புசிக்கலாம்.

மந்திரி வசனம்.

உத்திரவுப்படியே செய்கின்றேன் வேந்தே.

## மந்திரிவாய்க்கரிசியைச் சமையல்செய்யும் விதம்.

மந்திரி விருத்தம்.

பூவினிறவாய்க்கரிசி யெடுத்துக்கொண்டேன்
புற்பதித்தேயதனையிதிற் பொதிந்துகொண்டேன்
ஆவினிதாயுணக்கொடுத்துக் காத்துக்கொண்டேன்
அதுபோட்டசாணிகளை யள்ளிக்கொண்டேன்
வாவியிலேமாசகல வலம்பிக்கொண்டேன்
வஸ்திரத்தில்வைத்துலர்த்திக் குத்திக்கொண்டேன்
காவிநிறச்சட்டியிலே போட்டுக்கொண்டேன்
கனலேற்றிச்சோறுக்கிக் கொண்டேன்தேவே.

மந்திரி விருத்தம்.

சவத்தின்வாய்க்கரிசிக்குற்ற சாற்றருந்தோஷந்தன்னை
நிவர்த்திசெய்தடிசிலாக்கி நீள்கரமீதுகொண்டே
இபத்தினையனையவேந்தற் கின்றுறும்பசியின்வெய்ய
உபத்திரவம்நீக்கவேண்டி யுற்றனன்சுடலைமன்னே.

மந்திரி விருத்தம்.

தங்களுத்தரம்போற்றுங்கள் தந்தவாய்க்கரிசிதன்னை
அங்கரத்தெடுத்தின்றேகி யடியவனடிசிலாக்கி
இங்கனங்கொண்டுவந்தே னிதனைநின்மனமுவந்தே
மங்களமாகவுண்டு மயக்கந்தீர்த்திருப்பீர்வேந்தே.

மந்திரி வசனம்.

அரசே இதோ சமையல்செய்துச் சாதங்கொண்டுவந் திருக்கின்றேன் இத்தையுண்டுச் சோபத்தை யகற்றிக்கொள்ளுங்கள்



அரசன் வசனம்.

நல்லது மந்திரி உமதுகையால்க் கொஞ்சம்கொஞ்சமாக எடுத்தடுத்துக்கொடும் புசிக்கின்றேன்.

(ம-ரி-வ-ம்.) அவ்விதமே கொடுக்கின்றேன் அண்ணலே.

## அரசன்வாய்க்கரிசியின் சோறுண்ணல்.

ஐயையோயிதென்னவந்தமென்றமெட்டு.

இராகம்-நாதநாமகிரியை-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

இவ்விதியெனக்கெய்த லாகுமேவிந்நாளில்
யாதுசெய்குவேனினி மந்திரியே-மந்திரியே-மந்திரியே
எவ்விதமனஞ்சகித் திங்கிருந்திதனையே
யானருந்துவேனிப்போ மந்திரியே-மந்திரியே-மந்திரியே
தெய்வமுமிச்சதி செய்ததேசெகத்தினுள்
தீவினையென்செய்தேன் மந்திரியே-மந்திரியே-மந்திரியே
ஐம்கோசவத்தின்வாய்க் கரிசியினுற்செய்த
அடிசிலருந்துகின்றேன் மந்திரியே-மந்திரியே-மந்திரியே
ஷட்ரசவர்க்கத்துடன் சம்பாநெல்லினரிசிச்
சாதமுண்டநிற்கின்று மந்திரியே-மந்திரியே-மந்திரியே
இட்டவினையாலேயா யெவரோனும்விரும்பாத
இச்சாதமுண்கிறேன் மந்திரியே-மந்திரியே-மந்திரியே
இடுகாட்டுத்தவசியென் றெழிலுடனியாவரும்
இயம்பவுடலெடாது மந்திரியே-மந்திரியே-மந்திரியே
சுடுகாட்டுத்தொழில்செய்யும் தோட்டியென்றனைவரும்
சொல்லவுடலெடுத்தேன் மந்திரியே-மந்திரியே-மந்திரியே
சாதம்போதும்பசியுந் தயக்கமுமயக்கமும்
தணிந்ததுபாருமென் மந்திரியே-மந்திரியே-மந்திரியே
மீதத்தைநீயுண்டிவ் வேளையிலுமக்குற்ற
மிகுபசிதணித்துக்கொள் மந்திரியே-மந்திரியே-மந்திரியே

அரசன் வசனம்.

மந்திரீ மீதசாதத்தை யுண்டு பசியைத் தணித்துக்கொள்.

(ம-ரி-வ-ம்.) நல்லது துரையே இதோ தீர்த்தம் பருகுங்கள்.

(அ-ன்-வ-ம்.) பருகின்றேன் அமைச்சே.

மந்திரி வசனம்.

வேந்தே மீதச்சாதத்தை யுண்டு தீர்த்தமும் பருகினேன் இனி நான் தமக்குச் செய்வதான வேலையின்னதென வியம்பவேண்டும்.

அரசன் வசனம்.

மந்திரி நீ யெனக் கிப்போ தெவ்விதஞ் செய்தையோ அவ்விதமே யெப்போதுஞ் செய்தென் அருகில்லிற்றிருப்பாயாக.

(ம-ரி-வ-ம்.) நல்லது ரவிகுலதீபனே.

பொது விருத்தம்.

இந்தவாறுகவேந்தனீம மீதமர்ந்தேசொந்த
மந்திரியாற்கொடுக்கலான வாய்க்கரிசியின்சோறுண்டு
சந்ததங்காவல்செய்தே சௌக்கியமுற்றிருக்குங்காலை
வந்தவாறெடுத்துரைன்றுப் வழுத்துவேன்வழுத்துவேனே.

## காசிராஜன்கொலுவிருக்கும்பாகம்.

காசிராஜன் விருத்தம்.

அருமறையோர்ஜெயஜெயெனவாசிகூற
அரசர்வந்துதிறைகொடுத்துவணங்கிநிற்க
அருமையுறுமணமச்சர்சூழாமருங்கிற்சூழ
அரம்பைநிகர்ப்பெண்கள்நடனங்களாட
பெருமைபெறுங்கட்டியர்கள்காத்திருக்கப்
பிறங்குமணிச்சத்திரவட்டக்குடைநிழற்றத்
திருவுறைசிம்மாசனத்திற்காசியாளும்
தேர்வேந்தன்கொலுவிருக்கத்தான்வந்தேனே.

அரசன் தரு.

இராகம்-பியாக்ரானம்-ஏகம்.

கண்ணிகள்.

ராஜாதி — ராஜமகாராஜன்
புஜாபலமே — பெருகுபோஜன்
ஈசனிரு — பதமறவாதேசன்
தேசமன்னர்பணி — பதாதிகேசன்
துஷ்டரையடக்கு — மதிசூரன்
இஷ்டரைப்பரி — பாலிக்குந்தீரன்



மன்னுயிரைத்தன் உயிர்போற்காப்போன்
பன்னும்பெரியோர்வரவு பார்ப்போன்
சதுர்விதப்படை யுடையதாமன்
விதுகுலாதிபதி யெனும்விமன்
கன்னியர்கள் வெண்சவரிவீச
சென்னியணி கிரீடமொளிவீச
கனகமணி யாசனத்திற்றனே
காசிமகா ராஜனிருந்தேனே

காசிராஜன் வணக்கம்.

நமசிவாயனே யென்றமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

சங்கரசிவா-அருள் தங்குமாதவா
தாண்டவம்புரிஆண்டவாசடை நீண்ட சைவமயிலுன்னுகின்
தாஷ்டீகாவுன் தாள்தனை-தாள்தனை
தாள்தனையெந்த நாளுமறவேன் (சங்)

சங்கரிகணவா-கங்கை திங்களணிபவா
தகுந்தசிம்மாசனந்தனில்யான் எழுந்தருளியிருந்திட
சார்பாயுன்றன் தயவுசெய்-தயவுசெய்
தயவுசெய்குவை சுயம்பிரகாச (சங்)

வசனம்.

இயாதொரு முப்பத்துமுக்கோடி தேவர்முதல் யாவரும் வணங்கும்படியாக இக்காசிக்ஷேத்திரத்தில் ஸ்ரீவிசாலாக்ஷிதேவி சமேதராக விளங்கி பக்தர்களுக்கு வேண்டிய வரப்பிரசாதங்கொடுத்து நித்தியமங்களனென்ற திருநாமத்தைவகித்து நிராமய வஸ்துவாகத் துலங்காநின்ற ஸ்ரீவிஸ்வநாதப் பெருமானே இச்சிம்மாசனத்தின்கண் வீற்றிருக்கும்பொருட்டு நின்னைப்போற்றினேன் கருணைசெய்யுங் கருணையங்கடலே.

அரசன் வசனம்.

சேவகா நமதுமுதன்மந்திரி இங்குவாராதகாரணம் யாதோ தெரியவில்லை சீக்கிரம் அழைத்துவா.

(சே-ன்-வ-ம்.) உத்திரவுப்படி அழைத்துவருகின்றேன் அரசே.

(அ-ன்-வ-ம்.) நல்லது சேவகா.

சேவகன் வசனம்.

அநேகவந்தனம் மந்திரிசிரேஷ்டரே தங்களை அழைத்துவரும்படி அரசன் ஆக்ஞாபித்தார்.

(ம-ரி-வ-ம்.) நல்லது சேவகா இதோவருகின்றேன்.

(சே-ன்-வ-ம்.) பிரபூ இதோவருகின்றார் ப்ரதான்.

மந்திரி வசனம்.

நெடியகடல்சூழ்ந்த இவ்வுலகின்கண் மகாமேன்மைதங்கிய இக்காசிமாநகரை ஒப்பற்ற சந்திரவட்டக்குடை நிழலின்கீழிருந்து மனுநெறிதவராது அரசாட்சிசெய்துவருவதான நம்தரசே மந்திரியாகிய யான் வந்தனம் செய்கின்றேன்.

அரசன் வசனம்.

கல்யாண் மந்திரிசிரேஷ்டா இங்கிதுவரை வராதகாரணம் யாது.

மந்திரி வசனம்.

பிரபூ பிராதஸ்நானஞ்செய்து சந்திஜெபதபப்பூஜை முதலானது முடித்துவர சற்றுதாமிதமாயின க்ஷமிக்கவேண்டும்.

(அ-ன்-வ-ம்.)நல்லது மந்திரி அருகில்வீற்றிரும்.

(ம-ரி-வ-ம்.) உத்திரவுபோலவே வீற்றிருக்கின்றேன் அரசே.

அரசன் வசனம்.

மந்திரீ நமதாளுகைக்குட்பட்ட ஐம்பத்தைந்து தேசங்களின் பிரபாவங்களையும் ஆங்காங்கு நடக்கும் அதிசயங்களையும் கேட்கவிருப்புற்றவனாக விருக்கின்றேன் உமதெண்ணம் யாது.

மந்திரி வசனம்.

அரசே தாங்களெது சமயம் கேட்பீர்களென்றே எதிர்பார்த்திருக்கின்றேன்.

—∘∘⁂∘∘—

## காசிராஜன் தேசவிசாரணை.

அரசன்-தரு-லாலணி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

கடல்புடைசூழும்காசினிபுகழும் காசிநகரைமந்த்ரீ
திடமுறுங்கடவுள்செயலினலரசுசெய்துவருகிறேன்மந்த்ரீ



வசனம்.

மந்திரீ சொல்லுதற்கரிய சுவர்க்கமத்திய பாதலமும் புகழ்ப்பெற்றதான இக்காசிமாநகரை ஒப்பற்றபூச்சக்கரக் குடைநீழலின்கீழிருந்து ஸ்ரீவிஸ்வநாதன் செயலினால் யாதொருவிக்கினமின்றி இராச்சியபரிபாலனஞ்செய்து வருகின்றேனல்லவா.

(ம-ரி-வ-ம்.) ஆம் மகராஜ்.

அரசன் தரு.

திட்டமாயாக்ஞைசக்கரநமது — தேசங்கள்தோறுஞ்சென்றே
சிட்டபரிபாலன துட்டநிக்கிரகம் — செய்துவருகுதாநன்றே

வசனம்.

மந்திரீ நமது ஆக்ஞைசக்கரமானது பிரதிதினமும் நமதாளுகைக்குட்பட்ட ஐம்பத்தைந்து தேசங்களினுஞ்சென்று துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனஞ் செய்துவருகின்றதா.

மந்திரி வசனம்.

புடவிகடகமென வுடைபடும்படியாகத் துரகம்நடாத்தக்கூடிய வேந்தே நமது ஆக்ஞைசக்கரமானது ஐம்பத்தைந்து தேசங்களினுஞ் சென்று துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனஞ் செய்து வருவதினாலன்றோ நமது நாடுசெழித்து பகைவரில்லாதிருக்கின்றது.

அரசன் தரு.

மானிடத்தெய்வமறையவர்தினமும் — மகிழ்வுடனே மந்த்ரீ
மானிலஞ்செழிக்கவேதங்களோதி — வருகின்றாராமந்த்ரீ

வசனம்.

பிரதான் உலகத்தில்வசிக்கும் மானிடர்களுக்குற்ற தெய்வமாகிய பிராமணசிரேஷ்டர்கள் பிரதிதினமும் நமது பாடசாலையில் வேதம் ஓதிவருகின்றார்களா.

மந்திரி வசனம்.

பிரபூ யாதொரு பிராமணசிரேஷ்டர்கள் வேதமோதிவரும் நன்றியாலன்றோ மாதமூன்று மழைவருஷித்து நமது நாடுசெழிப்புற்றிருக்கின்றது.

அரசன் தரு.

சவியாதெமதுசிற்றரசர்கள் — சந்ததமும்மந்த்ரீ
வலிமையோடாயுதப்பரீக்ஷைகள்செய்து — வருகின்றாராமந்த்ரீ

வசனம்.

அமைச்சே நமது வருதிக்குட்படிந்து நடக்கும் சிற்றரசர்கள் யாவரும் மனஞ்சலியாது பிரதிதினமும் வலிமையுடன் ஆயுதப்பரிக்ஷைகள் செய்துவருகின்றார்களா.

மந்திரி வசனம்.

வேந்தே மேற்கூறிய சிற்றரசர்களனைவரும் ஆயுதப்பரிக்ஷைகளிற்றேர்ச்சியுற்றவர்களாய் தாமெப்போதழைப்பீர்களென எதிர்பார்த்திருக்கின்றார்கள் இதுவிஷயத்தில் ஐயம்வேண்டாம்.

அரசன் தரு.

கொண்டமுதலுக்குக்கொஞ்சமிலாபங் கூறிக்கைகொண்டுமந்திரி
மண்டலம்புகழுவணிகர்வாழ்ந்து வருகின்றாராமந்திரி

வசனம்.

மந்திரி யாதொரு வணிகர் தாம்கொண்ட முதலுக்குச்கிறிதுலாபஞ்சம்பாதித்துப் பொய்சொல்லாது வாழ்ந்துவருகின்றார்களா.

(ம-ரி-வ-ம்.) அவ்விதமே வாழ்ந்துவருகின்றார்கள் அரசே.

அரசன் தரு.

அவல்கொண்டரியசூத்திரஜாதிய ரனைவோர்களுமந்திரி
மாவிபசாயத்தொழிலதுசெய்து வருகின்றாராமந்திரி

வசனம்.

அமைச்சே யாதொரு சூத்திரர்கள் பெரியவிபசாயத் தொழில் செய்து வருகின்றார்களா.

மந்திரி வசனம்.

பிரபூ மேற்கூறிய சூத்திரர்கள் விபசாயத்தொழில்செய்து வரக்கூடிய வரும்படிகளில் ஆறிலோர்கடமை நமக்குக்கொடுத்து க்ஷேமமுற்று வாழ்ந்துவருகின்றார்கள்.

அரசன் வசனம்.

மந்திரீ மிகவும் குதூகலம் நமது நகர்சோதனைசெய்யும் தலையாரிகள் வந்திருக்கின்றார்களா.

(ம-ரி-வ-ம்.) அதோவந்திரிக்கின்றார்கள் அரசே.

அரசன் வசனம்.

அடா தலையாரிகளே நேற்றிரவில் ஏதேனும் நகரில் அதிசயமுண்டா

(த-ஏ-வ-ம்.) ஓரதிசயமுமில்லை அரசே.



363-வது-பக்கம் மயானகாண்டம்.



அரசன் வசனம்.

அடா தலையாரிகளே இனிமேல் நீங்கள் அஜாக்ரதையாயிராது பிரதிதினம்போலவே இன்றிரவிலும் நகர்சோதனை செய்வதில் மிகவும் உஷாராக விருக்கவேண்டும்.

(த-ள்-வ-ம்.) உத்திரவுப்படி நடக்கின்றோம் மகராஜ்.

(அ-ன்-வ-ம்.) நல்லது சென்றுவாருங்கள்.

பொது வசனம்.

இந்தவிதமாகக் காசிராஜன் தேசவிசாரணைசெய்து கொலுக்கலைந்து எதாஸ்தானஞ் சென்றனன் இனிச் சந்திரவதிகதை அறிகுவீர் கனவான்களே.

# மயானகாண்டம்.

பொது விருத்தம்.

வல்லியுமகனுமந்த மறையவன்மனையிற்சேர்ந்து
சொல்லியபணிகளெல்லாஞ் சோர்வறச்செய்தபின்னர்
எல்லிபோர்சாமமென்ன வெழுந்திருந்தேவனமுற்றி
யல்லிருசாமஞ்சென்று ஒளித்தகூமுண்டுறங்கி

சந்திரவதி தரு.

நாட்டுக்குநாயகமாக வயோத்தியிலென்றமெட்டு.

இராகம்-எதுகுல-காம்போதி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

குவலயம்புகழுமே கோசலநாட்டினில்வாழ்ந்தேன்-இன்று
தவமுனிகடலைசநர் மறையோர்விட்டிற்சாந்தேன்
சம்பங்கித்தைலங்கள் சந்ததந்தேய்த்திட்டதலையே-இன்று
வெம்படர்குப்பையால் விரிசடையானதென்னிலையே
சந்தனம்பன்னீர்ஜவாதுகள் தேய்ந்திட்டபுயமே-இன்று
செந்தவிடுமியுஞ் சேர்ந்துதோய்ந்திட்டதென்னயமே
பத்தரைமாற்றுப்பசும்பொன்னைப் பழித்திட்டதேகம்-இன்று
மெத்தவேலைசெய்திடும் வேலையால்மெலிந்ததென்சுகம்
விலைமதியாவெழிற் கலைகள்புனைந்திட்ட இடையே-இன்று
தொலைவிலாநீர்க்குடஞ் சுமந்திடலானதென்முடையே
வளையுங்கணையாழியும் மாறுமற்றிருட்டிட்டகரமே-இன்று
விளையுப்நெற்கள்குத்தி மிகவும்புண்ணானதென்கரமே

பாதசரந்தண்டை பாடகமிட்டபூம்பதமே-இன்று
தீதுறுசானமுஞ் சேருஞ்சிறந்ததென்விதமே
உதாசனமானசொல் லொருபோதுங்கேட்டறியேனே-இன்று
சதாகாலுமின்னவர்தம்மிடங் கேட்கவுமானேன்

வசனம்.

சம்போ மகாதேவா இக்காலம் இக்கதிக்காளாக்கினையே உனக்குத்தர்மமா இன்னும் எவ்வளவு நாட்கிங்கிருந்து அவஸ்தைப்படுவது ஐயோ கருணையங்கடலெனுந் திருநாமத்தைப்பூண்ட வுனதுமனம் கருங்கல்லோ இரும்போ வயிரமோ வறிகிலேன்.

சந்திரவதி விருத்தம்.

வாசவனும்வானவரும் வணங்கப்பெற்ற
வான்வரத்தாலவதரித்த மகனேகேளாய்
தேசமன்னர்தினம்புகழு மயோத்திதன்னைத்
தீவினையாலன்றிழந்தித் திருநாடெய்திப்
பேசரியிப்பிராமணன்பால் நம்மைவிற்றுப்
பெருமுனிதங்கடன்றீர்த்துப் பிறிந்துசென்ற
ராசனையாம்நானிலத்து ளென்றுகண்டு
நாடுவோம்நல்லின்பங் கூடுவோமே.

இராகம்-உசேனி-தாளம்-சாப்பு.

பல்லவி.

மன்னனைக்காணேமே அடாமகனே-மதிமுகனே (ம)

சரணங்கள்.

சொன்னசொற்பிசகாமல் தொன்மறையோன்பாலில்
முன்னமேநம்மைவிற்று முனிகடன்றீர்த்த (ம)

அநுபல்லவி.

என்னுளவரைக்காண்போம் இணையடிசிரம்பூண்போம்
அன்னுளிலயனமக் கமைத்தவிதியிதோ (ம)
கண்டோவெகுநாளாச்சே கருதித்தவிக்கலாச்சே
கொண்டோர்தமக்குப்பொருள் கொணரச்சென்றனரோ (ம)
மேதகுவினையாலும் விட்டுப்பிறிந்ததாலும்
ஏதமுற்றேங்கியே யெங்கலைகின்றனரோ (ம)
ஒருவேளையிங்கேதேடி யுளம்நாடியோடோடி-
வருவாரோஅல்லாது வாராரோஅறியேன் (ம)



சந்திரவதி வசனம்.

அருந்தவத்தாலவதரித்த அரசே இயாதொரு விஸ்வாமித்திரமக
ரிஷிக்குக் கொடுக்கவேண்டிய திரவியத்திற்காக நம்மிருவரையும்
இவ்வேதியனுக்குக் கிரையஞ்செய்த நமதிறைவனும் மந்திரியும் எங்
குற்றுரோ அன்னவரையென்று காண்போமோ கண்டவரடிகளைச் சி
ரமேற்பூண்போமோ அயனும்நமக்கிவ்விதி விதித்தனனோவறிகிலேன்.

தேவதாசன் விருத்தம்.

பெருந்தவமாமுனிகடனைத் தீர்த்தவன்றன்
பிராமணனுமெனைவெகுண்டு பிடித்திழுத்து
வருந்தருணமன்னவனை மீறிவந்தே
மன்னவன்றன்வான்கழுத்தைத் தழுவியானும்
வருந்தியையவும்மையெந்நாட் காண்பேனென்ன
வழுத்தியதற்கனுதினமும் நின்பால்வாரேன்
வருந்தாதேயெனவனுப்பிச் சென்றோரின்னும்
வாராதகாரணமென் வழுத்தாய்தாயே.

வசனம்.

அன்னையே நம்மிருவரையும் வேதியர்க்கு விற்கிரையஞ்செய்த
காலையில் அன்னவர்வெகுண்டடியனைப் பிடித்திழுக்கக்கண்டு மீறி
ஓடோடியும்வந்து என்பிதாவின் கழுத்தைக்கட்டிக்கொண்டு ஏ ஐயா
உம்மை யெந்நாட்காண்பேனெனப் பலவாறுவருந்திய என்னைப்பார்
த்து அடாதநய நீவசிக்கும் இடத்திற்கனுதினமும்வந்து நின்னைப்பா
ர்த்துப்போவேன் நீவருந்தாது மறையவருடனே சென்றுவாவென
அனுப்பியவர் இவ்வளவுகாலமாகியும் வந்தனரிலையே யாதுகாரண
மோ வறிகிலேன்.

சந்திரவதி வசனம்.

கண்மணி நம்மைவிட்டுப் பிறிந்தபெருந்துயராலும் பூருவகர்மா
னுபவத்தின் பயனாலும் இறைவனிதுவரை யெக்கதிக்காளானரோ
வறிகிலோம் இனிநாம்பலவாறு விசனிப்பதில் யாது பிரயோசனம்.

காளகண்டன் வசனம்.

அடியே காளகண்டி நம் ஆத்துமோழியிலே சத்தமென்ன அதை
ப்பார்த்துவா சீக்கிரம்.

காளகண்டி வசனம்.

ஏங்காணும் ஆத்துக்காரரே சதாநம்மாத்திலே அழுதுகொண்டி
ருப்பதற்காகவா இவர்களை விலைக்குவாங்கிவந்தீர் இப்படிக்கிருந்தால்

நம்மாத்து வேலையார்செய்கிறது இதுவிஷயத்தில் உமக்கேன் விவேக மில்லை.

காளகண்டன் வசனம்.

என்னடியிதென்ன வறட்டுத்தவளைபோலும் முறட்டுத்தனமாய்க்கத்துறியே வெர்னேயிரு.

காளகண்டன் வசனம்.

அடியேசந்தி அடார்கிச்சான் என்றைத்துவேலை செய்வதற்கஞ்சி ஓடிப்போகலாமென் றெண்ணத்தைக்கொண்டு ஒருவர்க்கொருவர் கூடிப்பேசிக்கொள்ளிறியளோ வாருங்களிப்படி.

(ச-தி-வ-ம்.) சுவாமி இதோ வருகின்றேன்.

காளகண்டன் வசனம்.

சரி நம்மாத்து வேலைகளை நன்றுகச்செய் காளகண்டி பொல்லாதவள்.

(ச-தீ-வ-ம்.) அவ்விதமே செய்கின்றேன் சுவாமி.

(கா-ண்-வ-ம்.) அடா கிச்சான் இங்குவாடா சீக்கிரம்.

(தே-ன்-வ-ம்.) இதோ வந்தேன்சுவாமி யென்னவுத்தரவாகின்றது.

காளகண்டன் விருத்தம்.

பையனேநானுனக்குப் பகருவேன்கேளாயெந்தன்
மெய்பணிவேஷ்டிதன்னை விருப்புடனெடுத்துக்கொண்டு
துய்யநற்கங்கைக்கேகித் தோய்த்ததைப்பிழிந்துநன்றாய்க்
கொய்துமடித்துக்கட்டிக் கொப்பெனவருகுவாயே.

வசனம்.

அடாபையா நமதுவேஷ்டியெல்லாம் அஞ்சாறு தினமாகத்தோய்க்கமல் அதோகிடக்கின்றது அத்தையெடுத்துக்கொண்டு கங்கைக்குப்போய் நன்றாய்த்தோய்த்துப் பிழிந்துகொய்து மடித்துக்கட்டிக் கொண்டு சீக்கிரத்தில்வா நமது மாடுகளெல்லாம் பட்டினியாயிருக்கிறது அவைகளையெல்லா மேய்த்துக்கொண்டு வரவேணும்.

தேவதாசன் வசனம்.

சுவாமி தமது உத்திரவுபோல் வேஷ்டிதோய்த்து வருகின்றேன்.

தேவதாசன் வசனம்.

சிவசிவ இவ்விதவேலைசெய்யும்படிக்குப்படைத்தையே.



விடென்னதொலையா யென்றமெட்டு.

இராகம்-தோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

வேட்டிதோய்க்கின்றேன் ஐயர் (வே)

அநுபல்லவி.

ஆட்டுணையில்லாது அகத்தைவிட்டிப்போது
ஆற்றுக்குள்ளேவந்தே ஊற்றுப்போட்டுகந்தே(வே)

சரணங்கள்.

கிழிந்திடாதலசிப் பிழிந்துகொய்தேசசி
கிளர்ந்தநிறமென்னப் பிளந்தகல்லினுன்ன (வே)

காலும்வலித்திட மேனுஞ்சலித்திட
கையுங்கடுத்திட ஐயருடுத்திட (வே)

சடிலமுனியாலே அடிமையாயிக்காலே
தாதையைப்பிறிந்தே பாதகனைநொந்தே(வே)

கருணையங்கடலே கடிமலர்மடலே
களிவளர்தேவே கடவுளர்கோவே(வே)

வசனம்.

சுவாமி இதோவேஷ்டி தோய்த்துக் கொண்டுவந்தேன்.

காளகண்டன் வசனம்.

நல்லது அதோ இருக்குங்கொடியிலுலர்த்தி விடு.

(தே-ன்-வ-ம்.) உத்திரவுப்படி யுலர்த்தி வந்தேன் சுவாமி.

காளகண்டன்-வசனம்.

அடா கிச்சான் நமது மாடுகளையவிழ்த்துக்கொண்டு நஞ்செய்க்குப்போய் நன்றாய் மேய்த்துக்கொண்டுவா.

(தே-ன்-வ-ம்.) அவ்விதமே மேய்த்து வருகின்றேன்.

தேவதாசன் தரு.

சேருமுன்னே சேவல்கூவுதே யென்றமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மாடுமேய்க்கச்செய்தாயே தேவா மறையோன்விட்டு (மா)

அநுபல்லவி

விடுதனைக்கடந்து மாடுகளைத்தொடர்ந்து
மேடுபள்ளமீதிலேநடந்து வெட்டியன்போல (மா)

சரணங்கள்.

புஞ்செய்நஞ்செய்வரம்பிலோட்டிப் புசிக்கவிட்டுத்தண்ணீர்காட்டி
வெஞ்சினவெயிலடித்துந்த வெயர்வைசிந்த (மா)

செங்கோலணியுங்கையிற் சிறுகம்பணிந்துமெய்யில்
வெங்கோபமுனிவனீந்திடும் வேஷ்டியிடுனுடு (மா)

இவ்விதஞ்செய்யவுந்தா னெத்தனைநாட்காத்திருந்தாய்
வெவ்வியவினையென்னசெய்தேன் மேதினிமீது (மா)

வசனம்.

ஐயோ ஜகரட்சகா இவ்விதக்கதிக்கும் ஆளாக்கினையே யிது தர்மமா உனக்கென்ன குறைவுசெய்தேன்.

தேவதாசன் வசனம்.

சுவாமி தமதுத்திரவுப்படி மாடுகளை மேய்த்துக்கொண்டு வந்தேன்.

காளகண்டன் வசனம்.

சரி அடாகிச்சான் கட்டுத்துறைகளிற் கட்டிவிடு.

(தே-ன்-வ-ம்.) உத்திரவுப்படி கட்டியாச்சுது.

(கா-ன்-வ-ம்.) அடாபயலே சந்தியைவரச்சொல்லடா இங்கே.

(தே-ன்-வ-ம்.) அம்மா ஐயர் அழைக்கின்றார்.

(ச-தி-வ-ம்.) அனேகவந்தனம் சுவாமி அழைத்தகாரணம்யாது.

(கா-ன்-வ-ம்.) இப்படிவாடிசந்தி சொல்லுகிறேன்.

---

# தேவதாசனைக்காட்டுக்கு
## அனுப்புகிறபாகம்.

காளகண்டன் விருத்தம்.

சந்திரவதியேயுந்தன் தநயனைவனத்திற்சென்று
மந்திரகிரிகைக்காக வளர்குசைசமித்துகாஷ்டம்
பந்திசேர்முசிட்டைமுன்னை பச்சிளம்பிரண்டைகாரை
யுந்திடமாகக்கொண்டிங் கொல்லெனவரச்சொல்வாயே.

வசனம்.

கேளாய் சந்தியே நாம்செய்யவேண்டிய மந்திரகிரிகைக்காக வுனதுகுமாரனை வனத்திற்குச்சென்று தெற்பைசமித்துவிறகுமுன்னை



முசிட்டை பிறண்டை காரை இவ்வளவும் ஜாஸ்தியாகச் சேகரித்துச் சீக்கிரத்தில் கொண்டுவரும்படி சொல்லியனுப்பு.

சந்திரமதி விருத்தம்.

பூசுரசிகாமணியே கேளுமென்றன்
புத்திரனுக்கைந்துவய தாகவில்லை
நேசுறுபல்லின்னும்விழுந் துதிக்கவில்லைத்
திக்குடனேதிசையறியச் செயனுமில்லை
பேசுவதெல்லாமழலைப் பேச்சேயன்றிப்
பிறங்குவண்ணம்பேசுதற்குத் தெரிந்தானில்லை
ஈசுரன்மால்புகழ்வனத்திற் கிவனெவ்வண்ண
மேகிவருவன்றமிய லேகிவாரேன்.

அரோமதுபானமேமுராவாபோலே யென்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

மறையவரேயான் வனம்போய்வாரேன் (மறை)

அனுபல்லவி.

நிறையுமகத்துவ நீதாகலோரதரீ-தவ (மறை)

சரணங்கள்.

மைந்தனுமுன்னி வனந்திரந்தன்னி
லெந்தவிதஞ்சென்றிவிட மேகிவருவான்மா-தவ (மறை)
அரிகலைதந்தி நரிபுலிமந்தி
திரிவதைக்கண்டறண்டு சிந்தைநொந்திடைவன்-தவ (மறை)
அரணேதென்பூர மருவுரும்கோர
ஆரணியஞ்செல்லச்சொல்ல லாமாகுமோமா-தவ (மறை)
ஒருவனையின்று ஒல்லெனச்சென்று
வருவழியுந்தெரியான் வாதுசெய்வதேது-தவ (மறை)
தெற்பைசமித்து தேடியேபறித்து
இப்பொழுதேவாரேன் ஏகவிடையீயுந்-தவ (மறை)

வசனம்.

சுவாமி துஷ்டமிருகங்கள் வாசஞ்செய்கிற கானகத்திற்கு அதிபாலியனாகிய எனதுமைந்தனை சென்றுவரச்சொல்வது தர்மமன்று நானேசென்று சாமக்கிரிகைகள் சேகரித்துக் கொண்டுவருகின்றேன் விடைகொடும்.

காளகண்டன் வசனம்.

சந்தி நல்லயோசனைசெய்தே நம்மாத்துக் கிரைப்பாத்திக்கி ஆர் தண்ணீ.ரிறைப்பா கிச்சானிறைத்தால் கிணத்திலன்றோ விழுந்திடுவான் பென்பணமெல்லாம் வீணாய்ப்போயிடுமேடி கிச்சானைத் தான் போகச்சொல்லவேணும்.

சந்திரவதி தரு.

கரவொடியாலேனதேரே யென்றமெட்டு.

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஒற்றையாகவே போகமாட்டான்
ஓங்குமூங்கில்-நாங்கில்வேங்கை கோங்குசூழ்-வனத்தில்(ஒற்)

அநுபல்லவி.

கற்றவர்புகழும் நற்றவர்திகழும்
காளகண்டபூசுரரே பாலனும்-வனத்தில்(ஒற்)

சரணங்கள்.

வழியதிகாணான் வகையதுபேணான்
கழுகுபருந்துநரி கதறும்வனத்தில்(ஒற்)
துட்டவிலங்கு வட்டமிட்டடங்கு
மட்டடங்காமலேவாழும் கெட்டவல்வனத்தில்(ஒற்)
அடியவன்சென்றே யன்புடனின்றே
கடிவனத்தடத்துகொய்து கைக்கொடுவாரோவிங்(ஒற்)

வசனம்.

பிரபூ இவன் சிறுவனானதால் அவசியம் நானேசென்று தாம் சொல்லிய சாமான்களைத் தயார்செய்து கொண்டுவருகின்றேன் உத்திரவுகொடுக்கவேண்டும்.

காளகண்டன் வசனம்.

ஏண்டி இதுவரை தினந்தோறும் சாமக்கிரிகைகொண்டு வருவதற்காகச்சென்றுவந்தவனை இன்றேன் அனுப்பிவிக்கத் தடைசெய்து நான்போய்வருகிறேனென்பதாகச் சொல்லுகின்றாய் காரணமென்ன.

சந்திரவதி வசனம்.

சுவாமி இதுவரை அயலகத்துப் பாலகருடனே ஆரண்யத்திற்கு போய்வந்தவனை இன்று தனிமையாகப்போகச் சொல்லுகிறனால்த் தான்நான் போய்வருகிறேனெனச் சொல்வது.



காளகண்டன் விருத்தம்.

மதலைவனஞ்சென்றுவர மாட்டான்றானே
வழுத்தியவோர்தெற்பைமுதல் யாவுங்கொண்டு
இதமுறநான்வருவனென வியம்பினையென்
இல்லனுவலியாவர்செய்வா ரிந்த்ரஜாலி
புதுமைபெறுமயலகத்துப் புதல்வர்கானம்
போகின்றாரவருடனின் புதல்வன்றன்னைப்
பதிவுடனின்றனுப்புதற்குப் பயமுமுண்டோ
பகருவாய்பதட்டமின்றிப் பரிவாய்நீயே.

வசனம்.

ஏண்டி இவளவுபதட்டமென்ன அடுத்தாத்து சுப்பு சேசு வெங்கு அனந்து ராமு இவனெல்லாம் போகிறானேலியோ அவாளுடனே உன்மகனை ஆரண்ணியத்திற்கு அனுப்புவிக்க ஐயமென்ன.

(ச-தி-வ-ம்.) சுவாமி அவர்களைக்காணேமே.

(கா-ன்-வ-ம்.) அவர்களின்னும் அரைநாழிகைக்குள் வந்திடுவார்கள்.

(ச-தி-வ-ம். நல்லது சுவாமி.

சந்திரவதி விருத்தம்.

அப்பனேயென்னிருகண் மணியேகேளாய்
ஐயருனையயலகத்துப் பாலரோடு
செப்பரியவனமணுகித் தெற்பைகாரை
திகழ்சமித்துகாஷ்டமுனை முசிட்டையாதி
இப்பெரியசாமான்க ளிதமாய்ச்சேர்த்தின்
றீங்குகொண்டுவரும்படியா யென்பாற்சொன்னார்
இப்பொழுதங்க னுகிவரு வதற்குநீயென்
னியம்புகின்றாயிவ்வினைக்கென் செய்குவோமே.

சந்திரவதி வசனம்.

பாலகா நமதந்தனர் உன்னை அயலகத்துப்பாலருடன் ஆரண்ணியத்திற்குச்சென்று சாமக்கிரிகை கொண்டுவரும்படியாகச்சொன்னார் சென்றுவருகின்றையா.

தேவதாசன் விருத்தம்.

வந்தனமன்னையேநம் மறையவர்வருதிபோல
எந்தனைவனத்திற்கேக வியம்பினைதெறந்தான்
சுந்தரமாகவேட்டி தொய்த்துமால்விடைகள்மெய்த்து
வந்தகோர்களைப்பிறைலே வாயிர்பரிக்கின்றதையா.

இராகம்-காபி-தாளம்-ஆதி,

பல்லவி.

எவ்விதஞ்செல்வேன்    அம்மா அம்மா    (எவ்)

அநுபல்லவி.

ஒவ்விவனஞ்சென்றுவர    வுரைத்ததுசரியே    (எவ்)

சரணங்கள்.

பசியுமகோரம்    பாராயிந்நேரம்
பசிதணித்தருள்வதுன்    பாரங்குமாரன்    (எவ்)

அன்னமுண்ணாது    ஐயரிப்போது
சொன்னசொற்படியே    தோழரேயேழை    (எவ்)

அன்னவர்க்குரைப்பாய்    அசனம்படைப்பாய்
இன்னசோபந்தணிப்பாய்    இறைஞ்சினேனுன்னை    (எவ்)

வசனம்.

அனேகவந்தனம் அன்னையே நீ அந்தணராக்ஞைப்பிரகாரம் அடியேனை அயலகத்துப்பாலருடன் ஆரண்யத்திற்கனுப்பி வரவழைத்ததறமாகினும் இதுவரைபார்த்த வேலைகளின் சிரமத்தாலுண்டாகிய வயிர்பசியின்றன்மையைச் சாற்றுதற்கேலாதாகையால் நீ அன்னவரிடத்திற்சொல்லி கொஞ்சம் அன்னம்வாங்கிக்கொண்டு வந்திட்டால் அத்தையருந்தி அரைநொடியிற்சென்றுவருவேன் தயவுசெய்.

சந்திரவதிசொல் தரு.

ஐயோமகனேயென்னருமைக்கண்மணியே யென்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஐயோயென்கண்மணியே    யென்செய்குவேன்யானினியே
ஐயருங்கோபியே    அவர்பெண்டீர்பாவியே
ஐயபசிக்கே    அவர்அன்னமீயாருனக்கே

தேவதாசன் தரு.

மைகாத்திரும் அவர்காச்சசதா காமஹேமுரு யென்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ஆதி,

கண்ணிகள்.

அன்னமன்றோஎளியாசொன்ன    வறைந்தாய்-அம்மணி
என்னரும்பசிதணிப்ப    தெவ்வா-றம்மணி



சந்திரவதி சொல்.

எவ்வகைகண்டுநா    னியம்புவேன்வாய்விண்டு
அவ்வகையுன்னிட    அறைகுவையென்னிடம்
யெவ்வனபாலா    இனியாதுசெய்குவேன்சிலா

தேவதாசன் சொல்.

யாதுசெய்வேனென்றாய்    பசியதிகம்-அம்மணி
ஆதலினுற்காசொன்றுவ    தளியும்-அம்மணி

சந்திரவதி சொல்.

காசுகேட்டாயேஅடா    கதிரவன்குலசேயே
தேசமிழந்திந்தப்    பூசுரன்மனைவந்த
தோசிநான்றாசில்லூர்    காசுமுடிந்தறியேன்

தேவதாசன் சொல்.

காசுமுடிந்தறியேனென்றாய்    தூசி-லம்மணி
பூசுரர்பால்வாங்கியீயும்    புண்ய-மம்மணி

சந்திரவதி சொல்.

ஐயரைக்கேட்டால்    காசளிக்கவுமேமாட்டார்
ஐயோஅவர்தன்பாரி    அடாதகொடுமைக்காரி
வையகந்தன்னில்இவ்    வல்வினைக்காளானேமே

தேவதாசன் சொல்.

கடையில்லட்டுலாடு    பூந்திகண்டே-னம்மணி
கடையில்லாதுவாங்கித்    தாரும்தர்மம்-அம்மணி

சந்திரவதி சொல்.

எப்படிவாங்கிநா    னீருவேனுகம்நோங்கி
அப்பனேகையிலோர்    அரைக்காசுமில்லையேபார்
இப்போகடைக்கேவர    ஏற்குமோடாவெனக்கே

தேவதாசன் சொல்.

இந்தவூரில்யா    ரிடத்திலாவ-தம்மணி
எந்தனுக்காய்யாசகஞ்    செய்தீயு-மம்மணி

சந்திரவதி சொல்.

யாசகம்புரிந்தே    காசளியென்றேதெரிந்தே
வாசல்கடக்கப்போரா    மறையவன்விடைதரான்
ஈசனும்நம்மைஇன்    றிவ்விதம்படைத்தானே

தேவதாசன் சொல்.

அச்சமின்றிஅய்யனைக்கேட் டாவ-தம்மணி
பச்சரிசிவாங்கிக்கொடுப் பாயெ-னம்மணி

சந்திரவதி சொல்.

பாலன்னந்தின்றசெம் பவளவாயாலென்றன்
பாலிலனுகியே பச்சரிசிகேட்டையே
பாலனையென்னபெரும் பாவஞ்செய்தேனோமுன்னம்

தேவதாசன் சொல்.

பொறுமையில்லாப்பூசுரன்பாற் புகன்றெ-னம்மணி
சிறுகுறுணைவாங்கித்தாரும் றின்பே-னம்மணி

சந்திரவதி சொல்.

கோதுமைலட்டுகைக் கொண்டுண்டதைவிட்டு
ஆதுலன்போலின்று அருங்குறுணைகொடென்று
ஓதினை தூயா அவ் வேதியனுமீயார்

தேவதாசன் சொல்.

எய்க்குதேமெய்பசியினாலே யெந்த-னம்மணி
நொய்க்குறுணையாவதியும் நுகர்வே-னம்மணி

சந்திரவதி சொல்.

தித்திக்கும்பாயாசந் தின்றவுந்தன்வாயால்
இத்தினம்நொய்க்குறுணை யீயென்றாயேகருணை
வைத்திடாநெஞ்சன்அம் மறையவனோவஞ்சன்

தேவதாசன் சொல்.

கேட்டதெல்லாமில்லையென்றாய் கிருபைசெய்-தம்மணி
நீட்டுத்தவிடாவது கிஞ்சிற்றீ-யம்மணி

சந்திரவதி சொல்.

சர்க்கரையள்ளிநீ சாப்பிட்டதைத்தள்ளி
இக்கணம்பச்சரிசி யின்றவிடுகேட்டாயே
உக்ரமுள்ளோன் அதுவும்முதவானையோ

தேவதாசன் சொல்.

எவ்விதமும்அவரிடஞ்சென் றியம்பி-அம்மணி
வெவ்வியபசிதணித்து விப்பா-யம்மணி



தேவதாசன் வசனம்.

அம்மா எவ்விதமாவது ஐயரிடஞ்சென்று பசிதீரும்படியான உணவுவாங்கிக் கொண்டுவந்துகொடு.

(ச-தி-வ-ம்.) என்னமோ கேட்டுவருகின்றேன் இங்கிரு.

சந்திரவதி விருத்தம்.

அந்தணர்கோவேயென்னை யடிமைகொண்டாளுந்தேவே
மைந்தனைவனத்திற்கேகி வரவுமேயுரைத்தேனல்லேன்
எந்தன்பால்வயிர்பசிக்குதென்னவேபலவாறேங்கி
யுந்தன்பாலன்னம்வாங்கி யுதவெனவுரைத்தானின்றே.

பெண்ணேபெண்ணரசே பிந்திடாமல்முந்தியேவா யென்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-சாப்பு.

பல்லவி.

வந்தனம் அந்தணரே (வந்)

அநுபல்லவி.

உத்தனடியெந்தன்முடி வந்தமுந்தத்தந்தேன்கோடி (வந்)

சரணங்கள்.

பாலகன்றன்வயிறு பசிக்குதென்றேபெரும்
பாலு-மேலு மோலமிட்டழுகின்றான் (வந்)

நாதனேநீரின்று சாதமளித்தென்றும்
வாதி-லாது பாதுகாத்தருள்செய்யும் (வந்)

காளகண்டன் தரு.

இராகம்-பூரிகல்யாணி-தாளம்-ஆ காளம்.

கண்ணிகள்.

போசனம்ரொம்பவடித் திருக்கின்றதோசந்தி-தேவை
தாசனதையுண்டு சயனித்திருக்கவோசந்தி

சந்திரவதி சொல்.

திருமகனரும்பசி தீரும்படியரிசி
ஒரு-பிடி தருகுவீரையோ (வந்)

காளகண்டன் சொல்.

அரிசிகுறுமைநிறைய விருக்குதோசந்தி-வெகு
பரிவுடனீயுமென்றாய் கிடையாதம சந்தி

சந்திரவதி சொல்.

தேவனேநின்கருணை செய்துகொஞ்சங்குருணை
யாவ-நீயும் சோபமகன்றிட (வந்)

காளகண்டன் சொல்.

கருணைமிகக்கொண்டு குருணைகொடென்றாயேசந்தி-இங்கு
ஒருபிடிகூடவது கிடையாதடீசந்தி

சந்திரவதி சொல்,

ஐயநீருள்கொண்டு நொய்தாருமுகங்கண்டு
தையல்-பைய ளுய்யவுளமகிழ்ந்தே (வந்)

காளகண்டன் சொல்.

பையன்பசிக்குநொய் படையுமென்றாயடீசந்தி-இங்கு
நொய்யென்றபேச்சுக ளேதேனுமுண்டோடிசந்தி

சந்திரவதி சொல்.

கபடமென்பதைவிடும் தவிடுகொஞ்சங்கொடும்
சாமி-நேமி சதுர்வேதரூபி (வந்)

காளகண்டன் சொல்.

நீட்டுத்தவிடுநீ கேட்கவந்தாயடீசந்தி-நம்மன்
வீட்டுறும்பானையில் மெத்தவிருக்குதோசந்தி

(ச-தி-வ-ம்.) சுவாமி கொஞ்சம் தண்ணீராவது தாரும்.

காளகண்டன் வசனம்.

போடிபயித்தியகாரி காளகண்டிபொல்லாதவள் அவளைக்கேளாமல் ஒருகாரணங்களைச்செய்தால் அடிக்கவருவள் ஆகையால் நமது கிச்சானை குளத்திலிருக்கும் தண்ணீரைக்குடித்துக் கொப்பெனவனத்திற்குப்போய் வனபதார்த்தங் கொண்டுவரச்சொல்லடி.

(ச-தி-வ-ம்.) நல்லது சுவாமி.

(தே-ன்-வ-ம்.) தாயே அய்யனென்ன சொன்னார்.

சந்திரவதி வசனம்.

அப்பா தேவதாசா ஐயரிடத்தில் அன்னம் அரிசிகுருணை நொய் தவிடு இவ்வைந்தில் ஒன்றாவது கொடுமெனக்கேட்டதற்கு ஒன்றுமில்லையென்று சொல்லிவிட்டார் இதற்கென்செய்வேன்,

(தே-ன்-வ-ம்.) அம்மா தண்ணீராவது தந்தாரா.



சந்திரவதி வசனம்.

அடாகண்மணி தண்ணீராவது தாருமென்றதற்கு அவர் உன்னைக் குளத்திலிருக்கும் தண்ணீரைக் குடித்துவிட்டு வனத்திற்குப் போய் வனபதார்த்தங் கொண்டுவரச்சொன்னாரப்பா இது யாரிழைத்தசெயலோ வறிகிலேன்.

தேவதாசன் தரு.

மாதேபோய்வாரோ னென்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

வனம்போய்வருகிறேன் என்மாதாவே (வ)

அனுபல்லவி.

மனத்தளராமலேவிந்த மாளிகையில்வீற்றிருப்பாய் (வ)

சரணங்கள்.

தீர்த்தனநுகீர்த்தனசற் றீர்த்தமதைத்தீயனுண்டு (வ)
வேதநிதமோதுதவ வேதியர்தஞ்சேகருடன் (வ)
கொண்டவர்தாம்விண்டசாமான் கொண்டுவரவண்டிலவும் (வ)
தந்திமுகிமந்திகளை பந்தியுடன்உந்தியேதோர் (வ)

வசனம்.

தாயே யாதொரு ஸ்ரீமந்நாராயணனது நாமசங்கீர்த்தனமென்னும் தேவாமூர்த்தத்தையுண்டு வனஞ்சென்று வருகின்றேன் மனவருத்தமடையாதே தோழர்களினும் வரவில்லையே காலதாமசமாகின்றதே.

சந்திரவதி வசனம்.

அப்பா ஏதோ இன்னும் தோழர்வரவில்லை ஐயரைக்கேட்டு வருகின்றேன்.

சந்திரவதி வசனம்.

சுவாமி இன்னும் அபலைத்துப் பாலர்வரவில்லையே யாது காரணம்.

(கா-ன்-வ-ம்.) இதோ வந்திடுவார்களடி சந்தி.

அபலைத்துபிள்ளைகள் வருகிறதரு.

இராகம்-தன்யாசி-தாளம்-ஆதி.

பல்லவி.

அந்தணர்பாலர்வந்தார் அகமகிழ்ந்தே (அ)

அனுபல்லவி.

சந்தனப்பொட்டுமிட்டு சாதமுஞ்சாப்பிட்டு
புந்திமகிழ்ந்துபல பூஷணங்களணிந்து (அ)

சரணங்கள்.

பட்டுவஸ்திரந்தரித்து பனிமலர்சிரம்வைத்து
வெட்டரிவாள்பிடித்து வேதங்களைப்படித்து (அ)

கனக்கவேகட்டுச்சாதம் கட்டிக்கொண்டுவிநோத
வனத்தடகுகொய்து வரவேமனமுழுப்பது (அ)

மெல்லியமிதியடி மின்பதத்திற்புனைந்து
கல்வியுணர்ந்தகாள கண்டையர்வீடுதேடி (அ)

வெங்கு வசனம்.

அடா சுப்பு ராமு அனந்து சேசு எல்லாரும் வாருங்கோடா நம்ம காளகண்டத்தாத்தா இருக்காரோவியோ அவாத்துக்குப்போய் அங் கொருகிச்சான் இருக்கான்பாரு அவனையும் கூட்டிக்கொண்டு காட் டிற்குப்போய் வருவோம் வாங்கடா.

(வெ-கு-வ-ம்.) தாத்தா.

காளகண்டன் வசனம்.

ஏண்டா வல்லாரோழி பிள்ளைகளா தூங்கிறபோது ஏன்வந்து எழுப்பிறியள்.

வெங்கு வசனம்.

நம்மாத்துக்கிச்சான் காட்டுக்குவாராணு இல்லையா கூப்பிடுகிறதுக் காகவந்தோம் என்னத்துக்குகாதாட்டிபோலக்கத்துறீர் இவையே.

காளகண்டன் வசனம்.

என்னடா குளிரியளோ யென்ன நம்மாத்துக்கிச்சான் அதோ இருக்கான் கூட்டிக்கொண்டு போங்களேண்டா.

வெங்கு வசனம்.

நீ கூப்பிட்டு அனுப்பியுமே யென்னைப்போய்க் கூப்பிடச்சொன் னல் நாங்கள் முன்னாலே போயிடுவோம்.

காளகண்டன் வசனம்.

இருங்கோடா பட்டிபிள்ளையளா நான்போய்க் கூட்டிக்கொண்டு வந் தனுப்புகிறேன்.

காளகண்டன் வசனம்.

அடியேசந்தி அசலாத்து கிச்சானெல்லாம் வந்துட்டான் நம்ம கிச்சானையும் அவாளோடகூட காட்டுக்கனுப்பிக்கிறதுக் கென்னநா மசம்.

(ச-தி-வ-ம்.) சுவாமி இதோ அனுப்புகின்றேன்.



காளகண்டன் வசனம்.

என்னடி அனுப்புறேன் அனுப்புறேனென்னு சொல்லிக்கிண்டி ருந்தால் எப்போ அனுப்புறது.

சந்திரவதி வசனம்.

சுவாமி எனது புத்திரன் பசியினால் வருந்துகின்றமையால் யா னவனைக் கொஞ்சதூரங் கூட்டிக்கொண்டுபோய் அன்னவன்பசிதணி யும்படி கொஞ்சம் ஜலம்மொண்டு கொடுத்துண்டிடும்படிசெய்து இன் னவர்களுடன் அனுப்புவித்து வருகின்றேன் விடையளிக்கவேண்டும் வேதியகுல சிகாமணியே.

காளகண்டன் வசனம்.

ஏண்டி ரொம்ப நன்னாயிருக்கு கிச்சானைமுதலில் அனுப்பிவிட்டு நீயும் பின்னாலேயோடிப்போ யிவிடலாமென்று பார்க்கிறியாயென்ன

சந்திரவதி வசனம்.

சுவாமி அப்பேருள்ளயெண்ணம் என்னிடத்திலில்லை அவசியம் விடையளிக்கவேண்டும்.

(கா-ன்-வ-ம்.) சரிபோயிட்டு சுருக்காவாடி.

(ச-தி-வ-ம்.) நல்லது சுவாமி.

சந்திரவதி விருத்தம்.

ஈசுரன்வரத்தால்வந்த வெனதுகண்மணியேயிந்தப்
பூசுரன்மனையைவிட்டுப் புறப்படும்பொழுதேநம்முன்
ஏசுதற்சகுனந்தோன்று தெவ்விதமிருள்வனத்திற்
காசுடன்றோழரோடே யனுப்புவேனுன்னைநானே.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஐயோ இந்தச்சகுனம் உனக்
காகாதடா மகனே (ஐ)

அனுபல்லவி.

ஐயோவொருவேதியன் அல்லோமொகவாரான்
பையோடிருகோமுட்டி பதறியெதிரில்வாரான் (ஐ)

சரணங்கள்.

கூடையிலெண்ணெய்க்குடங் கொண்டோர்வாணிகன்வாரான்
பேடைமயில்போலொரு பெண்ணுமழுதுவாரான் (ஐ)
பட்டவிறகுகட்டிப் பாவிெனாருவன்வாரான்
வெட்டரிவாள்பிடித்து வீரனொருவன்வாரான் (ஐ)

விரித்ததலையுடனேர் விதந்துவெருண்டுவாரான்
கருத்தவுடைபுனைந்தோர் கம்மாளனேரில்வாரான் (ஐ)

படியிலேதோளர்பூனை பாய்க்தேயிடமாகுதே
கொடியவிஷங்கொள்சற்பங் குறுக்காய்வலமேருதே (ஐ)

ஆந்தைகூட்டமாய்க்கூடி யலறுகின்றதேநேரோ
வேந்தர்க்கிதுகெடுதி விளைக்குமெனச்சொல்வாரோ (ஐ)

வசனம்.

பாலகா இவ்விததுர்ச்சகுனங்களாகின்றதே உன்னை எவ்விதமென் னிருதயங் துணிந் திவர்களுட னிருள்வனத்திற் கனுப்புவேன் ஐயோ இக்கதிபாவர்செய்மாயமோ.

தேவதாசன் வசனம்.

எனதன்னையே யாதொரு மனிதர் அவரவர்காரியா காரியத்திற்கும் விலங்குபறவைகள் அதது இரைதேடுவதற்கும் நமஸ்காரஞ்செல்லாமலிருக்கக்கூடுமோ நீயேனதைப்பற்றிக் கவலையடைகின்றனை நானிவர்களுடன் கானகத்திற்குப்போய் சாமக்கிரிகைகொண்டு வருகின்றேன் நீ வேதியர்வீடு சேர்வாயாக.

சந்திரமதிசொல் தரு.

வாருமுனிவே அரண்மனைக்கெழுந்தருளிரீ ரென்றமெட்டு.

இராகம்-தோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

காவினிலுஷாராகவே மேவிவருவாயென்கண்ணே (கா)

அநுபல்லவி.

தாவிவருந்தோழர்களைத் தான்பிரியாதிவ்வேளைநீ (கா)

சரணங்கள்.

சிங்கங்கரிபன்றியங்கு சேர்ந்துவிளையாடுமெங்கும்
அங்கதனைக்கொல்வேனென்றே ஆர்த்திடாதேபார்த்துநின்றே (கா)

புலிகரடிமந்திகளை புதருள்ளெம்பவுண்டங்கிலே
வலிதினிற்பார்ப்போமென்றே மைந்தாபோகாதேகனன்றே (கா)

எட்டிக்கனியைமாங்கனி யென்றுபறித்தாங்குநீ
சுட்டித்தனமாகத்தின்று துஞ்சிடாதேநெஞ்சுநான்றும் (கா)

இன்னமனேகஞ்சுள்ள இனிமைக்கனிபோலெள்ளம்
அன்னவைகளைப்பறித்தே அருந்தாதேசொன்னேன்குறித்தே (கா)



விறகொடிக்கமரமேறி வீழ்ந்திடாதேதிரமீறி
அறவுறைசுனையைக்கண்டு இறங்காதேஆவல்கொண்டு (கா)

புத்தின்மேலேறுதேயுந்தும் பொறியரவஞ்சீறிவந்து
கொத்துமிதையேயுணர்ந்து கொள்வாய்கூறினேனறிந்து (கா)

பாதையைநோக்கிநடந்தே பாலருடனேதொடர்ந்தே
பேதைசொல்லேவேதமெனப் பேணியெஜமான்விடைபோல் (கா)

வசனம்.

கண்மணீ இப்போது துற்சகுனங்களைக்கண்ட வோர்அச்சத்தினாலே இப்பெரிய புத்திபோதித்தேன் இவ்வண்ணமே பிசகாது சென்று சிக்கிரம் வருகின்றையா.

தேவதாசன் வசனம்.

நல்லதன்னையே கொஞ்சம் தீர்த்தங்கொண்டுவந்துகொடு.

(ச-தி-வ-ம்.) அப்பா இதோ இருக்கும் குளத்திற்குவா.

(தே-ன்-வ-ம்.) நல்லதம்மணி.

(ச-தி-வ-ம்.) தீர்த்தம் இதோ இருக்கின்றது பருகுவாயப்பா.

(தே-ன்-வ-ம்.) தீர்த்தம் பருகினேனம்மணி.

தேவதாசன் தரு.

கருணைன்சரா கருணைநீதே யென்றமெட்டு.

இராகம்-பைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

தடையின்றியே விடைதாவன்னையே
சரண்கானஞ்சென்று வரநீயின்று (தடை)

அநுபல்லவி.

விடைவாகனனை வேண்டுமவர்தனை
இடையூறொன்றும் அடையாதென்றென்றும் (தடை)

சரணங்கள்.

துர்ச்சகுனம்நேரிற் றேன்றியதெனவும்
அச்சமுற்றிடா தையர்வீட்டுப்பாய்
இட்சணத்திலிந்த வெழிற்றேழரோடே
யெய்தியேதெற்பை கொய்துவருவதற்கே (தடை)

வசனம்.

தாயே கடவுளைத் தியானித்துக் கானகத்திற்குச்சென்று வருகின்றேன் விடைகொடு.

சந்திரமதி தரு.

இராகம்-காபி-தாளம்-சாப்பு.

பல்லவி.

வனம்போய்வாடா மகனேலோகிதனே

அநுபல்லவி.

மனந்தளராமலே மறையோர்பாலருடனே (வனம்)

சரணங்கள்.

காரைபிறண்டை காஷ்டஞ்சமித்து முன்னைக்
கிளைமுசிட்டைதெற்பை கிழங்குவகைகடன்னைக்
கிட்டிபேகொய்து கட்டிகேயளை
விட்டிடாதநீ எட்டியேவா (வன)

வசனம்.

அப்பா இத்தோழர்களுடன் சென்று வனபதார்த்தங்கொண்டு அதிசீக்கிரத்தில் வருவாய்கண்மணி.

(தே-ன்-வ-ம்.) உத்திரவுபோற் சென்றுவருகின்றேன் தாயே.

சந்திரமதி தரு.

நீசொன்னேனும்பொய்சொல்லலாகுமோ வென்றமெட்டு.

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

நீசொன்பாலகனை ரக்ஷிப்பீர் ஐயா நீ (சொன்)

அநுபல்லவி.

காருமுமதுதஞ்சம் கருணைசெய்குவீர்கொஞ்சம்
பாரும்பசியால்மஞ்சன் பரதவிக்கின்றனெஞ்சம் (என்)

சரணங்கள்.

தாங்கள்சேகரித்திடும் சாமக்கிரிகையொடும்
ஆங்கணிவனுக்குஞ்சே கரித்துக்கொடுப்பீரென்றே (என்)

வசனம்.

கேளும் வேதியர்பாலர்காள் எனது புத்திரனை உங்களடைக்கலமாக அனுப்புகின்றேன் அவனைக் கூட்டிக்கொண்டுபோய் நீங்கள்சேகரிக்கும் சாமக்கிரிகைகளோடு என்புத்திரனுக்கும் சேகரித்துக்கொடுத்து இவ்விடத்துக்குக் கூட்டிவரவேண்டியது.

(தோழர்-வ-ம்.) நல்லதம்மணி.

சந்திரமதி வசனம்.

அப்பா கண்மணி நான் அந்தணர் வீட்டிற்குச் செல்லுகின்றேன்.

(தே-ன்-வ-ம்.) நல்லதன்னையே சென்றுவா.



தேவதாசன் தரு.

பிராணநாதபிரானபுரோ வென்றமெட்டு.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

பல்லவி.

வாருந்தோழரே வனம்போய்வர (வா)

அநுபல்லவி.

பாருமென்வதனம் பனித்தேனனம்
தாருவெய்யபசி தீரும்நீர்விரசில் (வா)

சரணங்கள்.

தெற்பைமுன்னைகாரை சிர்முசிட்டைக்கிளை
பொற்புறுசமித்து புரண்டைபறித்து
சொற்பமின்றிக்கட்டிச் சுமந்துகொண்டெட்டி
நற்பதிக்குவந்தே நாம்சேர்வதற்கே (வா)

வசனம்.

தோழர்காள் வாருங்கள் வனத்திற்குப்போய்வருவோம் சீக்கிரம்.

(தோழர்-வ-ம்.) நல்லதடா கிச்சான் நடந்துவா.

(தே-ன்-வ-ம்.) இதோ நடந்துவருகின்றேன்.

தோழர் வசனம்.

ஏண்டா கிச்சான் இதுவரையிலும் உன்வரலா றெடுத்துரைத்தா யில்லையே இன்றுவதுவரை பார்ப்போம்.

(தே-ன-வ-ம்.) நல்லது தோழர்காள்.

---

## தேவதாசன்வரலாறுசொல்லல்.

அகவல்.

இராகம்-தன்னியாசி.

சீர்பெறும்வேதியர் செல்வர்காளறியுமென்
ஏர்பெறும்வரலா றியம்புவேன்கேண்மின்
வாழ்ந்தவயோத்தி மாநகர்கீர்த்தி
சூழ்ந்தவென்றந்தை அரிச்சந்திரனும்
அருமையாய்ப்பெற்ற அன்னைசந்திரமதி
பெருமையாயுற்றவென் பேர்லோகிதனும்
இவ்விதமாக யாங்கள்மாநகரைச்
செவ்விசேர்செங்கோல் செலுத்தியேவருநாள்

ஒருநாட்கோசிக னுற்றுயர்வேள்விக்
கருமாகிநீகேட் கவுமளித்தேதாமதை
எம்பாலொப்புவித் தேகினனுடனே
கும்பாய்க்குடிகள் குறுகிநன்னுட்டின்
புலன்களையெல்லாம் புனத்தகம்வாழும்
விலங்கினமணுகி வீய்த்ததென்றியம்பக்
கேட்டங்கேகிக் கொடிபெறுமாக்களை
வேட்டம்புரிந்தோர் வேரியம்வாவிக்
கரையடைந்தன்று கழித்தனங்காலையில்
விரைவுடனிரண்டு வெட்டியார்குலத்து
அணங்கனுமெய்தி யாடல்பாடல்செய்
திணங்கியேசேர்வா யென்னவுமிறைவன்
சீறியேறுதாறச் சீக்கிரந்தள்ளெனக்
கூறியவுடனக் கோசிகன்குறுகி
பதத்திலுல்முடியைப் பாரிவிற்றள்ள
இதத்துடனவரை யெந்தையுமிறைஞ்சி
இப்பிழைபொறுப்பா யென்னவுமுனிவன்
எற்பெண்களைச்சேர்ந் திடிற்பொறுப்பேனென
அதற்கிணங்காதேம் மரசனுமவனியை
இதத்துடனீவே னெனமுனிமகிழ்ந்து
தாதாவென்னத் தந்தனரதுவும்
போதாதென்னப் புனைபணியுடையை
அவிழ்த்துவையென வவிழ்த்தவண்வைத்தே
தவித்தனமதனைத் தான்கண்டெதியும்
காவித்துணியைக் களைந்துகொடுத்தே
தாவிக்கனமுன் றந்தபொன்றன்னை
என்னவுமிறைவன் எழிலுறுகாசி
நன்னகர்க்கேகி நல்குவேனென்னுத்
தவணைநாள்வாங்கித் தரணியையொப்புவித்
தவணைவிட்டேகியப் பொருளடங்கலும்
வாங்கவேவந்தவோர் மறையவன்றன்னை
யாங்கழைத்தடவியி னகத்தில்யாம்நடந்தே
சின்னுட்கழித்துத் தெய்வச்செயலால்
இன்னுடுற்றவன் றென்னையுந்தாயையும்
விதியுள்மேவி விலையதுகூவி



வேதியரிடத்தில் விற்றுளமெலிந்தே
வெங்கடன்றீர்த்து வேந்தனுமந்திரியும்
எங்குசென்றனரோ யானறிகிலனே.

(தே-ன்-வ-ம்.) தோழர்காள் இதுதான் என்வரலாற்றின் விபரம்.

(தோழர்-வ-ம்.) அப்படியா நல்லது வாடாகிச்சான் வனத்திற்கு.

தேவதாசன் தரு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

அடியேன்மிகுகொடியேனிதற் கையோயென்னசெய்வேன் (அடி)

அநுபல்லவி.

படிமேழ்பாழ்மறையோர்தவப் பயனுல்வந்தவர்களே (அடி)

சரணங்கள்.

மதிவனஞ்சென்றுவா மாட்டானெனஅன்னை
இதமாயையர்க்கெடுத்துரைத்தும் ஏற்காதவர்பின்னை
எனையெபெற்றபைசமித்து முன்னைமுசிட்டைபிரண்டை
தன்னையெகொளவுஞ்சொன்னர் முன்னையவினிப்பிதுஇன்னுள் (அடி).
சொன்மொழியிடுமேலவன்றோ கோபித்திடுவாரோ
விண்மொழித்தமொழிக்குமபு தண்டாம்அண்ணமாரே
பின்னுமிதற்கொருயுகம் கொள்ளுமேதவயிரமசிதாகம்
கன்றுணாயவழிகொக [illegible] முன்னுதன்னைதனபாரும் (அடி)

(வ-ம்.) தோழர்காள் இக்கொடிய வினைக்கென்செய்வேன்.

(தோ-ர-வ-ம்.) அஞ்சாதே இச்சான் நடந்துவா,

தேவதாசன் தரு.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

[illegible]காடு பிருக்குதோ-வனம் (ஏவ)

அநுபல்லவி.

தவமறையோர்கள் தகயோர்வினவும்-வனம், (எவ)

சரணங்கள்.

[illegible] கடுவிசையாலேந்தன்
பொற்புமிரண்டினும் புண்ணுனதேயினும் (எவ)
பருதிவெம்மையினுலும் பசியின்றன்மையினுலும்
அருள்பெறமசரவுவர்க்கே யாகமும்நோகுதே (எவ)

சினத்தந்தனரப்போது சிறுவனென்றும்பாராது
வனத்திற்கனுப்புவித்த வன்கண்மையென்சொல்வேன்(எவ)
தாய்தந்தைகுருதெய்வம் தாங்களாகையாலங்கே
போய்வரும்வரையென்னைப் பூர்த்தியாய்க்காத்திடும்(எவ)

(வ-ம்.) தோழர்காள் இன்னும்வனம் எவ்வளவு தொலையிருக்கும்

(தோ-ர்-வ-ம்.) அடேகிச்சான் இனிவனம் சமீபத்தில் தானிருக்கும்.

தேவதாசன் வசனம்.

நல்லது விப்பிரகுலவிளக்குகாள் நடந்துவாருங்கள் சிக்கிரம்.

(தோ-ர்-வ-ம்.) நல்லதடா கிச்சான்.

தேவதாசன் தரு.

கந்தநாதாகருணைசெய்வா யென்றமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ஆதி.

பல்லவி.

அதுதானே அடவிசொல்லும் (அ)

அநுபல்லவி.

அதியுன்னதமுமுற்றே அதிவிலாசமும்பெற்றே
எதிராகத் தெரிகின்றதே (அ)

சரணங்கள்.

நதியோடைமேடுபள்ளம் நாணல்தாழைமூங்கில்வெள்ளம்
பதிவாகப் பாருந்தோழரே (அ)

திக்குத்திசையுமிங்கே தெரியவில்லையேயங்கே
புக்குவதெவ் விதம்புகல்வீர் (அ)

பாதைதன்னைப்பாருங்கள் பகவான்றனைக்கோருங்கள்
எதையோ இனிச்சகிக்கேன் (அ)

(தே-ன்-வ-ம்.) தோழர்காள் அதுதானு ஆரண்ணியம்.

(தோ-ர்-வ-ம்.) ஆமடா கிச்சான்.

தேவதாசன் விருத்தம்.

நண்படருந்தோழர்களே நவிலக்கேண்மின்
நன்னகர்காசியைக் கடந்துநடந்துநாடி.
விண்பருதியெரிக்கும்வெயில் மெய்யிற்றுக்க
வேர்வைசிந்தப்பார்சுட வெங்கல்லுமுள்ளும்
ஒண்பதத்திற்றைக்க நமதுளமெலிந்தே
ஓங்குதருவுறைவனத்து ளுற்றோமன்றோ
பண்பரவுவேதமுணர் பார்ப்பனன்சொற்
படிவனபதார்த்தமதைப் பறிப்போம்வாரீர்



வசனம்.

தோழர்காள் தெய்வகிருபையால் இவ்வனத்தை யடைந்தோம் இனிமேல் நாம்கோறிவந்த பதார்த்தங்களைச் சேகரிப்போம் வாருங்கள்.

தோழர் வசனம்.

நல்லது கிச்சான் உனக்குவேண்டிய பதார்த்தங்களை சீக்கிரம் சேகரித்துக்கோ இதோநாங்களும் எங்களுக்குவேண்டிய பதார்த்தங்களைச் சேகரிக்கின்றோம்.

(தே-ன்-வ-ம்.) போய்வாருங்கள் பூசுரர்புத்திரரே.

இன்னமும் நின்மனதிரங்கா யென்றமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தளம்-ரூபகம்.

கண்ணிகள்.

வயிறுபசியால்மெலிந்திவ் வனத்திற்-பரசிவமே
வெயிலிற்சமித்திலைபுரக்க விட்டாய்-பரசிவமே
என்னைவிலைகொண்டவையர்க் கின்றே-பரசிவமே
முன்னையின்கீரைபிடுங்க முறையோ-பரசிவமே
விசித்ரமான ஆழியணிந்த விரலாற்-பரசிவமே
முசிட்டைக்கீரைகாய்பூகொய்ய முன்னாழ்-பரசிவமே
அடர்ந்திருக்குஞ்செடிகள்மீது ஐயோ-பரசிவமே
படர்ந்தவிளம்பிறண்டைகொய்யப் படைத்தாய்-பரசிவமே
கையில்முள்ளுத்தைத்திரத்தங் கழறப்-பரசிவமே
மெய்வருந்தக்காரைக்கீரை கொய்தேன்-பரசிவமே
வெட்டரிவாள்கைப்பிடித்து வேர்த்தே-பரசிவமே
பட்டகட்டைவெட்டிக்கட்டப் படைத்தாய்-பரசிவமே

(வ-ம்.) தோழர்காள் எனக்குவேண்டிய சாமான்கள் சேகரித்துக்கொண்டு வழக்கம்போல இந்த ஆலமரம்வந்து சேர்ந்தேன் இனித்தெற்பை கொய்யாததுதான்பாக்கி

இங்குதயைசெய்துசற் றிருங்கள்தோழரே
அங்குதெற்பைகொய்துவாரே னடியேன்தோழரே.

(வ-ம்.) சினேகிதர்களே இங்கு சற்றுநேரமிருங்கள் அவ்விடந்திற்குச்சென்று தெற்பைகொய்து வருகின்றேன்.

தோழர் வசனம்.

ஏண்டா கிச்சான் தெற்பைக்காக இவ்வளவு தயக்கமேன் நாங்கள் கொண்டுவந்திருப்பதில் ஆளுக்குக்கொஞ்சம் தருகின்றோம் வாங்கிக்கொள்ளேன்.

தேவதாசன் வசனம்.

தோழர்காள் நீங்கள் தெற்பை கொடுப்பது மெய்யாயினும் எனதுகரத்தால் கொய்யாவிடில் சத்தியத்திற்குப் பழுதாகும் ஆகை யால் நானே கொய்துவருகின்றேன் விடைகொடுங்கள்.

எமிசேது எடுலசைதா யென்றமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ரூபகம்.

பல்லவி.

இந்தஆலாவிருட்சத்தின் கீழிருங்கள்தெற்பைகொய்துவாரோன் (இ)

அநுபல்லவி.

எந்தனைத்தனியாய்விட்டு ஏகிடாதோர்நாழிகைமட்டும் (இந்த)

சரணங்கள்.

வாதுசெய்யாதன்னையினுனை வகித்துநீவிர் துவளா
பாதுகாத்ததும்போலின்னும் பரிந்துகாப்பதற்கிருக்கின்றாய் (இந்த)
தங்களைத்துணைகொண்டுவந்த தருவனத்திற்கடியேன்வந்த
சங்கதியறிவீர்தங்கள் தாட்குக்கோடிசரணஞ்சரணம் (இந்த)
இருக்கின்றேமென்றியம்பிநகர்க்கு ஏகிடாதீர்வரும்வரைக்கும்
உருக்கமாகப்பெற்றவளிடம் ஒப்புவிப்பதுங்களின்கடன் (இந்த)

வசனம்.

தோழர்களே இந்த ஆலாவிருக்ஷத்தின்கண் ஓர்நாழிகையளா விருங்கள் அதற்குள் அடியேன் தெற்பைகொய்து கொண்டுவந்திடு கின்றேன் பிற்பாடு எல்லோரும்சேர்ந்து நகர்க்குச்செல்வோம்.

தோழர் வசனம்.

நல்லது கிச்சான் சீக்கிரத்தில் தெற்பை கொய்து கொண்டுவா இங்கிருக்கின்றோம்.

(தே-ன்-வ-ம்.) போற்றிபோற்றி பூசுரகிராமணிகளே.

நைநாமோரிரோ யென்றமெட்டு.

இராகம்-சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

எங்கேதேடுவேன் தெற்பைப்புல் (எங்)

அனுபல்லவி

இங்கேகாணேனேஐயோ என்னசெய்குவேனினி(எங்)



சரணங்கள்.

இருக்குமிடந்தெரிய வில்லையேபெரிய
தருக்கள்வளர்ந்தடர்ந்து இருப்பதினால்நடந்து(எங்)
பார்க்கப்பயமுறுதே பசியதிகரிக்குதே
கார்க்கடலில்நீரைவாரிக் கார்க்குலம்பொழியுதே(எங்)
அருட்கண்தோழர்களாலா விருட்சத்தருகில்மாலாய்
இருக்கின்றனரோநாட்டிற் கேகினரோகாட்டில்(எங்)

வசனம்.

ஐயோ தெய்வமே தெற்பைபுல் எவ்விடத்தி லிருக்கின்றதோ தெரியவில்லையே இனி யெவ்விதந் தேடிக் காண்பேன் கருணைசெய் வாய் கடவுளே.

தேவதாசன் விருத்தம்.

இத்தனைநேரமாக வெங்கினுந்தேடிப்பார்த்தும்
இத்தகிடைக்காதாலே யேங்கியான்வந்தேனிங்கே
கர்த்தனும்விஸ்வநாதன் கருணையாற்காளகண்ட
சித்தனுக்கேற்றதைம்புற் றெற்பையைக்கண்டேன்மாதோ.

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி.

கண்டேன்கண்குளிர தெற்பைப்புல்இதோ(கண்)

அநுபல்லவி

மண்டலம்புகழ்காள கண்டபூசுரர்க்காக
தண்டகாரணியத்தில் தானலைந்திவ்விடத்தில்(கண்)

சரணங்கள்.

அவருக்காகக்கிடைத்த தாகுமல்லாமல்மற்ற
எவருக்குக்கிடைக்கும் இதுபோலடவிக்குள்(கண்)

(வ-ம்.) யாதொரு கருணாகரக்கடவுளினது உதவியால் எனதெ ஜமானனுக்கேற்ற தெற்பைப்புல் விங்கனம் கண்டனன் இனி இதை பிடுத்துதெற்பை கொய்கின்றேன்.

பொது வசனம்.

இவ்விதமாக தேவதாசன் தெற்பைகொய்யச் செடியநாடியசம யம் விஸ்வாமித்திரன் மாய்கையால் வேலன் பாம்புருவாக வந்து அச் செடியினிடமிருந்து நீண்டுகிறவிதம்தெரிகுக.

ஸ்ரீ

# தேவதாசன் தெற்பை

## கொய்யும்பாகம்.

இராகம் - காபி - தாளம் - ஆதி.

பல்லவி.

தெற்பைகொய்கிறேன் சிவமே-சிவமே (தெற்)

அனுபல்லவி.

விற்பனவிவேககுண வேதியர்க்கிட்சணம் (தெற்)

சரணங்கள்.

தோற்றுதலிங்கு தோன்றிடாதெங்கு
சிற்றுச்சிற்றென்று சிறுதேமீறும் (தெற்)

சரசரவென்னும் சத்தமிங்கின்னும்
திரமூடன்கேட்குதே தேறியேசிறியன் (தெற்)

இச்செடிக்குற்ற வேற்கையோமற்ற
எச்செடிக்குமிந்த வேற்கையோதெரியேன் (தெற்)

நின்பதம்போற்றி நேசனைவாழ்த்தி
செம்பவளவிரலால் சிந்தையுமகழ்ந்து (தெற்)

தேவதாசன் விருத்தம்.

அரகராசிவமேகாசி யண்ணலேயமரர்போற்றும்
பரமனேயென்னைக்கொண்ட பார்ப்பனர்க்காகவிங்கே
பரவியகுசையைப்பற்றிப் பறித்தனன்பறித்தகாலை
கரமிசைகொடியநாகங் கடித்ததென்செய்வேனையோ.

இராகம்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

அரவங்கடித்ததையோ அரனேநானென்னசெய்வேன் (அர)

அனுபல்லவி.

பரவுங்குசையைப்பற்றிப் பறிக்குஞ்சமயங்கையில் (அர)

சரணங்கள்,

மாகுருவபோத்திதன்னை மாமுனிக்களிந்துமற்றும்
பூசுரனுக்காளானது போதாதெனவோபுற்றின் (அர)



கடனுல்மறையவர்க்குக் காவலன்விற்றுரவர்க்குக்
திடமுடன்பணிவிடை செய்யவந்தயென்னையிங்கே (அர)

அன்னையெவ்வளவோமதி யறைந்துமறந்தேனித்ததி
முன்னைபூழ்விதிஞயமோ முனிவன்செய்தமாயமோ (அர)

சிவனைவிட்டிவிடாது சேர்த்தசாமக்கிரிகைதனை
ஆவலுடனேகொண்டேக அனுக்ரகஞ்செய்வாயிப்போ (அர)

வசனம்.

சிவமே இக்காலம் அந்தணர்க்காகத் தெற்பைகொய்யுஞ் சமையம் சற்பமானது கரத்திற்றீண்டும்படி செய்தனையே இதற்கென்செய்வேன் விஷவாதனை சகிக்கமுடியுதில்லையே சேகரித்த சாமானை அன்னவர்க்கெவ்வாறு கொண்டுசென்று கொடுப்பேன் உன்பாதம் பணிந்தபலனே இது.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-அடதாளம்.

பல்லவி.

அர்வுகடித்ததேயீசனே ஆதிவில்வேசனே (அர)

அனுபல்லவி.

பரவியிதிற்றிரிந்தே பதரியெனைத்தெரிந்தே
படமெடுத்தடமுடனடுத்ததன் திடமிகுத்தபல்படவிடத் (தர)

சரணங்கள்.

வேதன்விதித்தவிதியோ விண்முனிசதியோ
நாதனேயுன்கதியோ நாரணர்க்குஞ்சம்மதியோ
ரத்தந்துலங்கவும்-சித்தங்கலங்கவு வர்த்தமிலங்கவும்-புத்தடி (அர)
அன்னைபிதாவைவதைத்தேனே அநீதஞ்செய்தேனே
முன்னஞ்செய்பாபமோ முன்னவர்சாபமோ
முத்தனே-திரிகர்த்தனேஜெக சித்தனே-யெனையீத்ததி (அர)
பாலர்களிருக்கின்றனரோ பதிசென்றனரோ
ஆலயமுந்தூர அல்லோவிருக்கிறேநரம்
அப்பப்பாவவர்க்-கெப்படித்தெரிந்திப்போவந்து-சொல்லிப்பர்கள் (அர)
கண்களுமேபஞ்சடையுதே காதடைக்குதே
வெண்கபமடைக்கின்றதே வெயர்வையொழுகின்றதே
விடமுமேறுதே-சடமுஞ்சோருதே உடலும்நீறுதே-கடவளே (வா)

வசனம்.

சிவமே இக்கொடியவினைக் கென்செய்வேன் விஷவாதை சகிக்குதில்லையே இது சங்கதி தோழர்களுக் கெவ்விதத்தெரியும் ஐயோ அன்னவர்களிங்கென்னைத் தேடிவராகின்றா கருணைசெய்வாய்கடவுளே.

வெங்கு வசனம்.

ஏண்டா சுப்புராமு நம்மிடம் விடைபெற்றுக்கொண்டு தெற்பை கொய்து வருவதற்காகச் சென்ற தேவதாசன் இங்கின்னும் வராத காரணம் யாதோ தெரியவில்லை அன்னவனைத் தேடிப்பார்த்துக் கூட்டிக்கொண்டு நம்மகத்துக்குப் போவோம் வாருங்களடா.

(சு-பு-வ-ம.) நல்லதடா வெங்கு.

தோழர்கள் வசனம்.

ஏண்டா பிச்சான் தாத்தாவுக்கு தெற்பை கொய்துவருவதற்காக எங்களிடம் விடைபெற்றுக்கொண்டு வந்த நீ இங்கு பலவாறு வருந்தி மயக்கமுற் றிருக்கவேண்டிய காரணம் யாது சொல்லடா.

(தே-ன்-வ-ம.) சொல்லுகின்றேன் கேளும் தோழர்காள்.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

கூரத்திலரவங் கடித்ததே-உவ்சன்
கட்டுவிலுலே திட்டுதீர்பாரும்
நட்புளரோவென் கட்பதுமப்பூவ் (கூ)

அநுபல்லவி.

இரத்தமும்வருகுதே உரத்தமெய்கருகுதே
யென் றனைக்கொண்டவைபார்க் காயடியேனைபய
நிரத்தருசங்கொய் திடுகிகஷ்டம்பெய்ப்
பீட்டியெளித்தொலி காட்டிமணிப்படம்
குட்டியடர்த்திகல் நாட்டியேபற்படக் (கூ)

சரணங்கள்.

உங்களைக்காண ஆடைத்தேனே-நீர்
ஓடி வந்தீர்மகிழ் வடைந்தேனே
இங்கனம்விடத்திறை விடைந்தேனே-இனி
யென்செய்யலா மென்றிருந்தேனே
சங்கரன்கதிபிதோ தவமுனிசதியிதோ
பங்கயன்விதியிதோ பாரில்யார்மதியிதோ
பங்கப்பட இந்தப் பருவத்திலேவந்த
பாள்வினையோதரு சூழ்வனமீறாய
நின்புதர்மேவுதன் பேழ்விரிவாயினால் (கூ)



வசனம்.

ஐயோ தோழர்காள் இக்காலம் எனக்கிவ்விதியெய்தின இதற்கென்செய்வேன்.

தோழர் வசனம்.

அப்பாதேவதாசா நீபடும்பரிதாபத்தைப் பார்க்குங்கால் வயிறு பகீரென்குதே யாங்கள் என்செய்வோம்.

## தேவதாசன்சொல் அகவல்.

அந்தணர்குலத்தி லழகெலாமமைந்து
வந்தவதரித்த மைந்தர்காள்கேண்மின்
மறையெலாந்திரட்டி வாய்மடுத்துண்ட
நிறையுடைகாளகண் டர்க்கிந்நிமிடம்
நேரதாயத்தெற்பையென் னிகரம்பற்றப்
பாரதிலியாவரும் பயங்கொளும்பாம்பு
பரிந்தங்கோர்பால் பாரப்புதரில்
இருந்தென்கைதீண் டியததோபாரும்
என்னசெய்வேனினி யீசன்செயலோ
உன்னதமாய்விஷமுச சிக்கேறுதே
ஓகோவிதனை நீ ரொழிக்கியானப்ப
வாகோடெந்திர மந்திரந்தெரிந்திடில்
மந்திரித்திடுவீர் மாண்புடன்விரைவாய்
உந்திருப்பதமலர்க் குவிமனன்சரணே

வசனம்.

எனதன்பரே இவ்விஷவாதைதீர்ந்து யான்பிழைத் தும்முடன் வரும்பொருட்டு மந்திரந்தெரிந்தால் மந்திரிப்பீராக உமதுபாதத்திற் கனேகவந்தனம்.

தோழர்கள் வசனம்.

ஐயோ பாலகா உன்போலொத்த சிறுவர்களாகிய எங்களுக்கென்ன மந்திரந்தெரியும் மந்திரிப்பதற்கு இப்போதுன்னைப் பார்க்கப் பார்க்கப் பரிதாபமாயிருக்கின்றதே உனதன்னையானவ ளுன்னைப் பாது காத்துக்கூட்டிவரும்படி யெங்களுக்குரைத்தனளே அன்னவளுக்கியாதுரைப்போம் ஐயா.

அன்னமே நான்பெற்ற வென்றமெட்டு.

இராகம்-அபுரூபம்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

ஐயோவிதற்கென்ன செய்குவேனுன்முன்னம்
செய்தபவமிதோ முனிசூதோ-பின்னமோதோ
அழுகாதீர் துயரில்-முழுகாதீர்
எந்தனன்னையிடம் உந்தன்மைந்தன்காட்டில்
எயிற்றரவாலிறந்தான் உணமறந்தா-னெனச்சிறந்தாய்
கியம்புவீர் இன்று-இயம்புவீர்
இயம்பியபோதெந்தாய் இங்குவரவெண்ணி
யெங்கிடில்நீர்மறுப்பீர் தேர்ச்சியுரைப்பீர்-துயராறுப்பீர்
இன்பமே யென-தன்பமே

வசனம்.

தோழர்காள் என்னையடிமைகொண்ட வேதியர்க்கினும் சிற்றேவல்செய்யாதிறக்கும்படி யெயிற்றரவங்கடிக்கலாயின இக்காரணத்தை யெனதன்னையிடமியம்பி அன்னவளிங்கு வராதிருக்கும்படி யான்தேறுதலுரைத்து உங்கள் எதாஸ்தானத்திற்குச்சென்று சுகமாக வாழ்ந்திருங்கள் இனிமேல் பேசுவதற்குப் பிரக்கினையில்லை அழாதீர் அன்பரே.

(தோ-ர்-வ-ம்.) உனக்கு யிவ்விதி வரலாமோ அப்பா.

(தே-ன்-வ-ம்.) அழாது நகர்க்குச் சென்றுவாருங்கள் அன்பர்களே.

தோழர் வசனம்.

எவ்விதமுன்னைத் தனிமையாய்விட்டு நகர்க்குச்செல்லுவோம் அப்பா.

தேவதாசன் கடவுள்துதி விருத்தம்.

சடிலமேனிப்பரமனுமை யுடனேவாழ்கத்
தாமோதரன் திருவைச் சார்ந்துவாழ்கக்
கொடியிடைப்பாரதியுடனே பிரமன்வாழ்கக்
குருவசிஷ்டரருந்ததியுங் குலாவிவாழ்க
வடிவாளேந்தெனதுபிதா சத்தியம்வாழ்க
மாதாவின்கற்புமுழு வாதுவாழ்கப்
படிபுகழுந்தெய்வமே நற்சாயுஜ்ய
பதவியருள்செய்வாயுநின் னுதவிதானே.



பொது வசனம்.

இந்தவிதம் தேவதாசன் கடவுளைத்துதித்துக் ககனநாடடைந்தனன் அதன்பின்னர்.

தோழர் வசனம்.

அடே சுப்பு ராமு சேஷா நம்மைநம்பிவந்த தேவதாசன்சர்பத்தாலிறந்துவிட்டான் இந்தக்கொடிய பாவத்திற் கென்னசெய்வோம்

சுப்பு வசனம்.

அடே வெங்கு ராமு சேஷா இனிகாமழுவதிற் பயனில்லைசூரியனோ அஸ்தமனமாவதற்கின்னும் ஒருநாழிகைப்பொழுது தானிருக்கும் இவனை நாய்நரி கழுகு காகம் தின்னாதிருக்கும்படி இலைகளாலும் குழைகளாலும் மறைத்து இவ்விடத்தில்வைத்துவிட்டு நாம்சேகரித்த சாமான்களைத் தூக்கிக்கொண்டு நகர்க்குச்செல்லுவோம் வாங்கடா.

(தோ-ர்-வ-ம்.) நல்லதடா சுப்பு.

பொது வசனம்.

இந்தவிதம்தோழர்கள் தேவதாசனை இலைகளாலும் குழைகளாலும் மறைத்தோரிடத்தில்வைத்து அவரவர்சேகரித்த சாமான்களை யெடுத்துக்கொண்டு நகரைநோக்கி நடக்கலுற்றனர் இனிசந்திரவதி கதையறிக.

## சந்திரவதி தநயன் வாராதுபற்றி வருந்தும்பாகம்.

சந்திரவதி விருத்தம்.

வானகத்தில்வளர் சுருப்போல் வழியோர்க்கு
வழங்குதாரம் வாய்த்ததோரென்
தேனகத்தின்வருத்தமெலாந் தீர்த்தனையே
யடிமைகொண்ட குறைவிலாத
மானகத்தின்மனமறையோர் மகிழ்ந்திடநற்
றர்ப்பைகொய்து வருவதற்காய்க்
கானகத்திற்சென்றவென் கண்மணியிங்
கின்னும்வரக் காண்கிலேனே.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-சாப்பு.

பல்லவி.

பாலனைக் காணேனே-சிவ
பரனே-பனிமதிசேர் சிரனே-சிவனேயென் (பா)

அனுபல்லவி.

சிலமறையவர்க்குத் தெற்பைப்புல்கொய்வதற்கு
கோலவரண்யத்திற்குக் குறுகிய அறுமைப் (பா)

சரணங்கள்.

பசுமேய்ந்துநீர்பருகிப் பால்மடுவெட் பெருகிச்
சிசுமீதகமுருகித் தேடிவந்தனவே (பா)

சோகத்தினாலேபெருஞ் சுமைசுமக்கமாட்டாது
ஆகத்துள்வருத்தமுற் றலறுகின்றனவே (பா)

அதிகாலையிற்சென்றவன் அஸ்தமனமாகியும்
இதுவரைவராதின்ன தென்றறிகிலேனே (பா)

புந்திமகிழ்ந்துகூட்டிப் போனவினியதோழர்
வந்ததும்வராததும் மாபாவிதெரியேன் (பா)

ஒருவேளையன்னவர்க ளொற்றையாயங்குவிட்டுத்
தெரியாமலிங்குவந்து சேர்ந்தனர்களோவென் (பா)

இருண்டிதால்வழிதெரியா திதயந்திகைத்து
மருண்டுபலவிதமாய் வருந்துகின்றனனோ (பா)

உலைமேல்மெழுகுபோலே உள்ளமுருகுதையோ
விலைமதியாதபொன் மேனியுடையவென் (பா)

(வ-ம்.) ஐயோ சிவமே அதிகாலையில் அயலகத்துப்பாலருடன் ஆரணியத்திற்குச்சென்ற அருமைமகன் இதுவரை இங்குவரக்காணேனே இதற்கென்செய்வேன்.

இராகம்-காம்போதி-தாளம்-சாப்பு.

பல்லவி.

வனம்போனமகன் வரக்காணேனே சிவமே
வரிநெடும்புலி-யரிகொடுங்கலை கரியுடும்புகள்-திரியுமிந்தரு (வனம்)

அநுபல்லவி.

தன்தாகவிலைகொண்ட தனிகராங்காளகண்ட
கனவானுக்குப்பயந்தே காலையிலேயெழுந்தே
கடியபசியுடன்நெடியவயலக வடிவழகருடன் அடிகள்மெலிவுற (வன)

சரணங்கள்.

இதுவரைபசிதாங்கி யிருந்தானோவல்லதேங்கி
சதுர்வேதமக்களிடம் சாதங்கேட்டானோஅவர்
தந்தனரோவங்கு தந்திலரோயேதும்
தந்திரங்கள்செய்து வந்தனரோவிங்கு (வன)



மலைமீதிலேறியுந்தும் வான்குகையுட்புகுந்தும்
கலையாவுங்கற்றுணர்ந்த கனத்தபெரியோர்தமைக்
கண்டுமனங்களி கொண்டுதினந்தொறும்
தொண்டுபுரிந்திட அண்டினனோவின்னும் (வன)

மரமீதேறியுகந்து வான்கொம்பிலேயிருந்து
திருமாங்கனிகள்கொய்து தின்னுகின்றானோவுற்ற
ஸ்னேகருடன்சுனை யாகமிரங்கியே
தாகமொழிந்திட ஜலம்பருகின்றானோ (வன)

இன்னதென்றெனவெற்கே உன்னவில்லையிதற்கே
யென்னசெய்குவேனையோ ஈசாகாசிவிஸ்வேசா
இசைபெறுங்கதிர் வசையறுங்குட
திசையடைந்தனன் விசையில்நடந்தரு (வன)

வசனம்.

கருணாகரா கானகத்திற்குச்சென்ற கதிர்குலசிகாமணி இதுவரை இங்குவராதென்ன காரணத்தைப்பற்றி யங்கிருக்கின்றானோ தெரியவில்லையே சூரியனும் குடதிசையை யடைந்தானே இக்கொடிய பாபத்திற் கென்செய்வேன் ஈஸ்வரனே.

சந்திரவதி விருத்தம்.

பன்னுதிருமாமறைபோன்பகர்ந்தபடி யயலகத்துப்பாலரோடு
மன்னுமுதயாதியிலிம்மனைகடந்து வயிர்பசியால்வருந்திச்சென்றும்
துன்னுகுசைமுதலாயசாமான்கள் சேகரித்தச்சூழல்தாண்டி
இன்னுமகனிங்குவரா திருப்பதற்குக் காரணமென்னெம்பிரானே.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

இன்னும்வரக்காணோமே ஐயோ
என்னருமை மகனங்கே என்னசெய்கி-றானோவிங்கே (இன்)

அநுபல்லவி.

அன்னமென்றழுதவன் அயலகத்தாருடன்
என்னமாய்வனஞ்சென்றானோ எங்குமயர்ந்தின்றானோ
என்னவின்று-இன்னதென்று உன்னவில்லை-யென்னதொல்லை (இன்)

சரணங்கள்.

பாடுபடுகின்றதைப் பார்க்கிலும்பரிவுடன்
காடுதனிலிருத்தல் காகமியென்றிருந்தானோ
கருகுதுடல்-உருகுதகம் பெருகுதுகண்-ணருவியினி (இன்)

கோபமோமிகுமனஸ்   தாபமோயெவரிடம்
சாபமோபண்டுசெய்   பாபமோதெரிகிலன்
தற்பரனே-சிற்பரனே   அற்புதனே-பொற்பதனே (இன்)
எந்தனன்னேயே கண்டு   இதோதெற்பைகொய்துகொண்டு
வந்தனனெனத்திரு   வாய்திறந்தோதுதற்கு
வந்தருள்-யெந்தன்முன்னே   அந்தணர்-மைந்தருடன் (இன்)

(வ-ம்.) சிவமே அதோ தோழர்கள் வருவதாகக்காணப்படுகின்றது அன்னவர்களிடம் விசாரிப்போம்.

(ச-தி-வ-ம்.) வாரீர் தோழர்காள்.

(தோழர்-வ-ம்.) வந்தோம் அம்மணி.

சந்திரவதி தரு.

இராகம்-பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

தங்கள்பின்னேவந்த   யென்றநயனையெங்கே (த)

அனுபல்லவி.

துங்கமிகுமந்தணர்கள்   அங்கண்மணிகாள் (த)

சரணங்கள்.

பொன்னளித்தடிமைகொண்ட   பூசுரர்சொற்போல்
வின்னமுற்றதெற்பைகொய்து   வருவதற்காக (த)
ஆதவனுமேல்வாரி   யடைந்ததினாலே
பூதலமிருளானதே   பொங்கமுடனே (த)
பட்சியெல்லாங்குட்சியோம்பிப்   பார்ப்பினைத்தேடி
கட்சிவந்தடைந்ததந்தி   காலையில்காடி (த)
இருங்கானினிற்றனியாகவிட்   டேகிவந்திரோ
அரும்பாரஞ்சுமக்கமுடி   யாதழுகுறானே (த)
இருளில்வழிதெரியாதவ   னேங்குகின்றானே
திருவயிர்பசியால்மெத்தத்   தியங்குகின்றானே (த)
பெற்றமனம்பித்தெனப்   பெரியோருரைப்பார்
உற்றதையொளியாதென்று   ரைத்தருள்வீரோ (த)

சந்திரவதி வசனம்.

அந்தணர்மைந்தர்காள் தங்களைத் துணைகொண்டுவந்த எனது தநயன் தங்களுடன் வராதகாரணம்யாது அத்தை யுண்மையாகவுரையுங்கள்.



தோழர் வசனம்.

அம்மணி உனது தநயனிதோவந்திடுவான் அழாதே.

சந்திரவதி வசனம்.

தோழர்காள் இவ்வளவு பரிதாபத்தோடுரைக்கின்றீர்களே உள்ளதைச்சொல்லுங்கள் ஒளியாதீர்கள்.

தோழர் வசனம்.

அம்மணி எங்களுடன்வந்த உனது பாலகன் பாம்பு கடித்திறந்துவிட்டனன் ஐயோ யாதுசெய்வோம்.

இராகம்-சாமா-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

ஐயோமகனேபாம்பால் அப்பாமகனேபாம்பால்
அடவியிலிறந்தாயோடா மகனே-மகனே-பாம்பால் (ஐ)
ஐயருக்காயின்றே அன்புடனேசென்றே
ஐயநிதைத்தைபையக் கொப்துகோவென்றலறி
மகனே-மகனே-பாம்பால் அடவியிலிறந்தாயோடா (ஐ)
உன்பிதாவைப்பிரிந்த பின்புனைக்கதியென
நம்பியிருந்ததற்கு நட்டாற்றில்விட்டதுபோல்
மகனே-மகனே-பாம்பால் அடவியிலிறந்தாயோடா (ஐ)
அரும்பசியகலவே அன்னமிங்கருந்தவே
விரும்பித்தோழருடனே திரும்பிவாராமலே
மகனே-மகனே-பாம்பால் அடவியிலிறந்தாயோடா (ஐ)
செப்பியசொற்படியே சேர்த்தசாமான்களையே
இப்போதுகொண்டுவரா தென்றுதெண்டியழுதே
மகனே-மகனே-பாம்பால் அடவியிலிறந்தாயோடா (ஐ)
அதிசிவன்கதியோ அயன்விதித்தவிதியோ
கோதிலாதகனைக்கை கொண்டகோசிகன்சதியோ —
மகனே-மகனே-பாம்பால் அடவியிலிறந்தாயோடா (ஐ)

இராகம்-நாபி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஐயையோவாவென்ன செய்வேன்டா
அப்பனே-ஐயனே விற்பன-மெய்யனே
வெய்யபாவியெவ்விதஞ் செய்வேன்டா
வீரனே-சூரனே தீர-வொய்யாரனே

உந்தாதையைப்பிறிந்து சொந்தேண்டா
ஊழ்வினையா-லேயர் வாழ்மனை-சேர்ந்துய்ய
எந்தாயுந்தனைநம்பி யிருந்தேண்டா
எவர்செயன்-பாயமோ தவமுனி-மாயமோ
விடியற்காலம்படுக்கை விட்டெழுந்தே
வெவ்விய-பசியுடன் திவ்ய-சிறுருடன்
கொடியவந்தணர்க்கஞ்சித் துடிதுடித்தே
குசைகொய்து-வரவெந்தன் வசம்விடை-பெற்றுத்தக்
காட்டிற்குச்சென்று யடாகண்மணியே
காலமோ-அஸ்தமன காமையாகியும்-நீதான்
வீட்டிற்குவராததால் மெலிந்தேனே
விண்ணிடி-விழுதல்போல் புண்ணியர்வந்-தென்பால்
அம்மாநின்மகன்தெற்பை யறுக்குகையில்
அரவுகடித்-தங்கே மரணமானு-னென்றார்
எம்மாவினிச்சகிக்க வேலாதே
இருநிலமீ-தெனக் கொருதுணை-யில்லையே (ஐ)

வசனம்.

ஐயோ பாலகா வுனக்கும் இவ்விதி இறையோன் எழுதினனோ இனி யென்செய்குவேன்.

பாலகனே லோகிதனே யென்றமெட்டு.

இராகம்-தோடி-தாளம்-ஆதி

பல்லவி.

என்னசெய்வேன் கண்மணியே
என்னரசே லோகிதனே (கண்)

அனுபல்லவி.

பன்னகத்தின் தீயவாயிற்
பட்டிறந்தாயே சுதனே (என்)

சரணங்கள்.

உன்னைவைத்திடேரலாமென் றன்னியிருந்தேன் றுரையே
என்னைவைத்திடேழினையே எந்தையெநற்சர்க்கரையே (என்)
இப்படியும்விதியுனக்கு எழுதினனோபிரமனன்னாள்
எப்படியுனையிழந்து யானினியிருப்பேனின்னாள் (என்)
சூரியகுலமின்றோடே தொலைந்ததோவெண்ணியனே
பாரினில்யான்செய்ததவம் பாழானதோபுண்ணியனே (என்)



உன்முகம்நான்பாராமலும் என்முகம்நீபாராமலும்
என்முறைநீகேளாமலும் எய்தினையோவானுலகம் (என்)
அந்தரமாய்நின்றுபாவி யலறுகின்றேன்ஐயோகூவி
என்தஜென்மமுந்தனைக்கண்டின்பங்கொள்வேன் இகத்தின்மீதே (என்)

சந்திரவதி வசனம்.

கண்மணீ யாதொரு கௌசிகரிஷியின்கடனால் காளகண்டைய ர்க்கடிமையாகிக் காவலனைப்பிறிந்து இதுநாள்பரியந்தம் உன்னைப்பா ர்த்து மனமகிழ்ந்திருந்ததற்கு நட்டாற்றில்விட்டனையேஐயோ இனி மேலுன்னை யெந்தஜன்மத்திற் காண்பேன் இதுவும் கடவுள் திரு வருளோ.

சந்திரவதி விருத்தம்.

பெருமைசேரயலகத்துப் பிள்ளைகாள்சிவன்வரத்தால்
அருமையாயெனக்குதித்த வாருயிர்ப்புதல்வனந்த
இருள்வனத்திடத்தேயெந்த விடத்தினிலிறந்தானத்தை
அருளுடன்விபரமாக வறைகுவிராறிவதற்கே.

வசனம்.

வாரீர் அயலகத்துப்பிள்ளைகாள் சிவபெருமான் திருவரப்பிரசா தத்தால்ஜெனித்த வெமதுபுத்திரன் அவ்வனத்துள் எவ்விடத்திலிறந் துகிடக்கின்றான் அவ்விடத்தைக் குறிப்பிட்டுக் கூறுங்கள்.

தோழர்கள் வசனம்.

'சொல்லுகின்றோம் கேளும் அம்மணி' நாங்கள்வருகின்ற வழி யில்நிற்கிற ஆலவிருட்சத்திற்கு பக்கத்தே கிஞ்சிற்று வடக்குத்தி சையில் தர்ப்பைபடர்ந்து முளைத்திருக்கின்ற மேட்டுக்குத்தென்புற த்திலே உன்மகனிறந்துகிடக்கின்றான் அன்னவனை நாய்நரிகள் தீண் டாதிருக் கும்பொருட்டு இலைகளாலும் குழைகளாலும் மறைத்துவை த்திருக்கின்றோம் தெரிந்துகொள்ளும் நாங்கள் அகத்துக்குச்சென்று வருகின்றோம்.

சந்திரவதி வசனம்.

நல்லது சென்று வாருங்கள் செல்வர்களே.

சந்திரவதி விருத்தம்.

அடிமைகொண்டவந்தணர்சே கேளுந்தங்க
ளனுமதிபோவெனறுமகன் றேழரோடே
கடியலர்க்கானகமனுகிச் சாமான்சேர்த்துக்
கருத்துடனேதருப்பைகொய்த கணத்திற்கையில்

கொடியவிடவரவுகடித் திறந்தானுமென்
குப்பிகொதிக்கின்றதையோ வென்னசெய்வேன்
அடியவன்றனையெடுத் தின்றடக்கியெய்த
ஐயவுந்தன்றிருவுளம் யானறிகிலேனே.

உமைப்பிறிய வுருகுமேத னெஞ்ச மென்றமெட்டு.

இராகம்-நாபி-தாளம்-ஆதி.

பல்லவி.

உத்தடவெனக் குதவுமென்சுவாமி (உத்)

அநுபல்லவி.

புத்தரவாலே பூங்காவிலே
செத்தபாலனைத் தேடியேகாண (உத்)

சரணங்கள்.

தேடியேகண்டு திருவாய்விண்டு
ஈடிலாமலே யேங்கியேயழவே (உத்)
ஏங்கியழுதே யெடுத்தேகியே
ஒங்குமிமத்தி அற்றடக்கஞ்செய்ய (உத்)
உற்றடக்கஞ்செய் தோடிவிங்குவற
சற்றுநீரொன்மேல் தயவுபுரிந்தே (உத்)

வசனம்.

சுவாமி தமதனுமதியின் பிரகாரம் அயலகத்துப் புதல்வருடன் வனபதார்த்தங்கொண்டுவர வனத்திற்குச்சென்ற எனது புதல்வன் அங்கு தருப்பைகொய்த தட்சணமே சற்பங்கடித் திறந்துவிட்டா னும் அன்னவனைக் கண்டெடுத்து நல்லடக்கஞ்செய்து வரும்பொரு ட்டு உத்தரவு கொடுக்கவேண்டும்.

காலகண்டன் வசனம்.

ஐயையோ வென் திரவியமெல்லாம் போச்சே இனி யென்ன செய்வேன் தெய்வமே.

(ச-தி-வ-ம்.) மனவருத்த முறவேண்டாம் சுவாமி.

காலகண்டன் விருத்தம்.

அந்தரத்தில்மகனிறந் தானவனைக்கண்டே
அடக்கிவரவனுமதி கேட்டாயேயேடி
எந்தனுக்கின் றுண்டான குறையேயன்றி
யென்னரியபெரும் பொருளுக்கழிவுவந்தால்



உந்தனுக்கிங்கேதேனுங் குறைகளுண்டோ
உற்றுவிலைப்பட்ட சிறு பயல்தனக்குச்
சொந்தமுள்ள தாயுமுண்டோ போடியப்பால்
துய்யவனமேகவருள் செய்கிலேனே.

வசனம்.

அடியே கொடிய நீலி நீ இவ்வித பரிதாபத்தோடு யென்னெதி ரில் நின்று விடைகொடுக்க வேண்டுமென்றே கேட்கவந்தாய் அட்டி அனேகநா ளரும்பாடுபட்டு சம்பாதித்தவெனது பெரிய பொருளுக் கழிவுவந்த குறையே யல்லாது உனக்கேதேனும் குறைகளுண்டோ அன்றியும் என்னிடம் விலைப்பட்ட அந்தப் பயலுக்குச் சொந்தமான தாயு முண்டோ போடியப்பால் எவ்விதமுகாந்திரம் பற்றியும் விடை கொடுக்கப்படமாட்டாது.

சந்திரவதி விருத்தம்.

அருள்மிகுமந்தணர் குலத்துளவதரித்த
ஐயவுமடிக்கடிமை யாளானாலும்
இருள்வனத்திலந்தமா யிறந்தானென்றால்
யெளியவட்குப் பெற்றவயிர்கொதித்திடாதோ
கருதுவீரங்க ளாகி யவனைத்தேடிக்
கண்டடக்கிக் கதிருதயமாகுமுன்னே
தருகாதுநின்சமுகம் வரவுத்தாரம்
தருகுவீர் தாவிதயமுருகுவீரே.

சந்திரவதி வசனம்.

சுவாமி நான் தமக்கடிமையான போதிலும் பெற்றவயிறு கொ திப்புறுதா ஐயோ அநாதியாக ஆரணியத்தில் அரவாலிறந்த யெனது ருமைமகனைத் தேடிக்கண்டு அடக்கஞ்செய்துவர அனுமதி கொடுத் தருளும் பிரபு.

காலகண்டன் விருத்தம்.

எத்தனைவிதமாய்நீயிங் கியம்பியேயேங்கினாலும்
உத்தரமீவதுஞ்சென் னுள்ளமுமொவ்வாதாமால்
இத்தறியெமதகத்தி லேற்படுமேவலியாவும்
சுத்தமாய்ச்செய்வாயுந்தன் சூதெலாமறிவேனானே

வசனம்.

அடியே கபடசித்தமுடைய கள்ளி நீயெத்தனைவிதமாக இங்கிரு ந்து விடைகொடுக்க வேண்டுமென வியம்பியேங்கின போதிலும்

கொடுப்பதற் கென்னுள்ளம் ஒவ்வாது ஆகையால் இப்போது நமதக த்தி லேற்படக்கூடிய எல்லா வேலைகளையும் பரிஷ்கார மாகச் செய்ய உன் சூதெல்லா மெனக்கு நன்ருய்த் தெரியவரும்.

சந்திரவதி வசனம்.

சுவாமி சூதுள்ள எண்ணமுடையவள் யானல்லள் இனியென்ன வேலை செய்யவேண்டும்.

# சந்திரவதி வேலை
## செய்யும்பாகம்.

காளகண்டன் வசனம்.

அடியே சந்தி நம்மாத்துக் கொட்டத்திலிருக்கும் சாணத்தை யெடுத்துச் சட்டியிற் போட்டுக் கரைத்துக்கொண்டு வாசல் முத்தம் புழக்கடை இவைகளில் நன்ருய்த் தெளித்துவாடி சீக்கிரம்.

(ச-தி-வ-ம்.) நல்லது சுவாமி.

## சாணி தெளிக்கிற பாகம்.

குங்குமம் பன்னீரொன்றமெட்டு.

இராகம்-எதுகுலகாம்போதி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

மட்டில்லாததங்கச்சட்டியைத் தொட்டதும்போச்சே-இப்போ
கெட்டியில்லாச்சாணிச்சட்டியைத் தொட்டிடலாச்சே

பன்னீரிற்சந்தனம்பரவிக் கரைத்ததும்போச்சே-இப்போ
இன்னீரிற்சாணத்தை யிட்டுக்கரைக்கவுமாச்சே

மீறியஅத்தரை வாரியிறைத்ததும்-போச்சே-இப்போ
நாறியசாணத்தை வாரியிறைக்கவுமாச்சே

எந்தன்மகனையிழந்து மலைனக்காணது-இப்போ
இந்தவேலைசெய்யவென்னைப் படைத்தையேதெய்வமே

(வ-ம்.) சுவாமி தமதுத்திரவுப்படி சாணந்தெளித் தாய்விட்டது இனியென்னவேலை செய்யவேண்டும்.

காளகண்டன் வசனம்.

சொல்கிறேன் கேளடீ சந்தி சாணந்தெளித்த இடங்களையெல்லாம் வாருகோலால் கூட்டு சீக்கிரம்.

(ச-தி-வ-ம்.) அவ்விதமே கூட்டுகின்றேன் சுவாமி.



## வாருகோலால் கூட்டுகிறபாகம்.

ராஜாதிராஜர்பணி யென்றமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்,

சூரியவாளரவால்மாண்ட குழந்தையைத்தேடாமல்
சீரிலாதவாருகோலைத் தேடவிட்டாய்சிவமே
புஷ்பச்சென்டுபிடித்தயெந்தன் பொற்கரத்திற்சிவமே இப்
போதுவாருகோல்பிடிக்கப் புரிந்தனையேசிவமே
மாடந்தனைக்கூட்டக்கண்டு மகிழ்ந்ததும்போய்ச்சிவமே
கூடமுத்தம்கொல்லைவாயில் கூட்டுகின்றேன்சிவமே
கூட்டியகுப்பையெல்லாம் இந்தக்கூடையிலேசிவமே
தோட்டிச்சிபோலள்ளியள்ளிச் சுமக்குகின்றேன்சிவமே

வசனம்.

சுவாமி சாணந்தெளித்த இடங்களெல்லாம் வாருகோலால் கூட்டியாய்விட்டது.

காளகண்டன் வசனம்.

சரி கொட்டத்துமூலையில் கொட்டியிருக்கிற சுண்ணக்கட்டியை யெடுத்திழைத்துக் கோலம்போடடி சந்தி.

(ச-தி-வ-ம்.) நல்லது சுவாமி.

---

## கோலமிடுகிறபாகம்.

வாராரிதோவச்சிராமணி யென்றமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

எம்மகனையிழந்தும்போதா தென்னவே-சிவமே
இம்மனையிற்கோலமிட விழைத்தையோ-சிவமே
தூய்யவேலைப்பொடியிழைக்க கையாலே-சிவமே
வெய்யகோலப்பொடியிழைக்க விட்டாயே-சிவமே
பொற்கருவிக்குள்வயிரப் பொடியிட்டே-சிவமே
பொற்கரத்தாற்கோலமிட்ட புகழ்விட்டே-சிவமே
வெந்தசுண்ணத்தின்பொடி கொண்டந்தோ-சிவமே
எந்தன்விரல்நோகக்கோல மிடுகின்றேன்-சிவமே

(வ-ம்.) சுவாமி கோலமிட்டாயிவிட்டது.

காளகண்டன் வசனம்.

நல்லதடீசந்தி நம்மகத்திலிருக்கும் குடத்தையெடுத்துக்கொண்டு குளத்திற்குப்போய் ஜலங்கொண்டுவாடி சீக்கிரம்.

(ச-தி-வ-ம்.) அவ்விதமே கொண்டுவருகின்றேன் சுவாமி.

## தண்ணீர்கொண்டுவருகிற பாகம்.

தண்ணீர்க்குடமெடுக்க வென்றமெட்டு.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

அந்தரமாயிறந்த அப்பனைக்காணுதையோ
இந்தவேலைபுரியவும் இசைத்தாயின்றே
தங்கக்குடமெடுக்கத் தளருமிடையில்லையோ
வங்கக்குடமெடுக்கவும் வருத்தாயின்றே
சீரத்தைமொண்டுதூக்கத் திகைக்குங்கரத்தாலேயோ
நாரத்தைமொண்டுதூக்கவும் லபித்தாயின்றே
பன்னீர்க்குடஞ்சுமக்கப் பதருந்தலையிலேயோ
இன்னீர்க்குடஞ்சுமக்கவும் இழைத்தாயின்றே.

சந்திரவதி வசனம்.

சுவாமி தமதுத்தரவுப்படி தண்ணீர்கொண்டுவந்து வைத்துவிட்டேன் பார்த்துக்கொள்ளுங்கள்.

காளகண்டன் வசனம்.

நல்லதுசந்தி நம்மாத்துக்கூடத்தில் மத்தியானம் காயப்போட்டெடுத்துவைத்திருக்கிற நெல்லைக்குத்தடீ சீக்கிரம்.

சந்திரவதி வசனம்.

ஆக்ஞைப்பிரகாரம் நெற்குத்துகின்றேன் சுவாமி.

## நெற்குத்துகிறபாகம்.

ஒருகையிலேபாலமுத வென்றமெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

பொற்கல்லுரல்புரட்டிவைக்கப் பொறுகாதகையாலே
நற்கல்லுரல்புரட்டிவைக்கத் தொல்வினையோயீஸ்வரனே



தந்தவுலக்கைபிடிக்கச் சலிக்குமிந்தக்கையாலே
இந்தவுலக்கைபிடிக்க என்விதியோயீஸ்வரனே
நவமணிநெல்போட்டுக்குத்த நாடாதகையாலே
அவமணிநெல்போட்டுக்குத்த அமைந்ததையோயீஸ்வரனே

ஆதிபராபர வென்றமெட்டு.

இராகம்-முகாரி-தாளம்-அடதாளம்.

கண்ணிகள்.

சந்த்ரஜடாதர சங்கரசம்போ
சாதசிவ மெய்ப்பொருளே
அந்தணர்சொற்படி யிந்தநெற்குத்த
வமைந்ததோ வுன்னருளே
உந்தனுக்குப்பயந் திந்தப்பணிசெய்
துளமகிழ்தல் போச்சே
அந்தணர்க்குப்பயந் திந்தப்பணிசெய்
தயர்ந்திடவும் ஆச்சே
கைகள்வலிக்கவும் மெய்கள்சலிக்கவும்
கால்கள் கடுக்கவுமே
துய்யதாகவெய்ய நெல்முழுதுங்குத்தித்
தோண்டுகின்றேன் சிவமே.

(வ-ம்.) சுவாமி நெல்முழுதும் குத்தியாச்சுது.

காளகண்டன் வசனம்.

சரி குத்தியநெற்களை அரிசிவேறு குறுணைவேறு தவிடுவேறு உமிவேறாகும்படி சுளகைக்கொண்டு புடையடீ சந்தி.

(ச-தி-வ-ம்.) உத்திரவுப்படியே புடைக்கின்றேன் சுவாமி.

## குத்தியநெல்லைப்புடைக்கும் பாகம்.

கங்கைச்சடைமுடியா வென்றமெட்டு.

இராகம் - எதுகுலகாம்போதி - தாளம் - ரூபகம்.

கண்ணிகள்.

பன்னகத்தாலிறந்தாவெந்தன் பாலனைப்பார்ப்பதும்போய்
தொன்மறையோனகத்தில்இந்தத் தொழில்புரியவுஞ்செய்தாய்
கன்னலின்முத்துமியைமனங் களித்துப்புடைப்பதும்போய்
சென்னலின்முத்துமியைஇப்போ திகைத்துப்புடைக்கவைத்தாய்

பொற்களருப்பிடித்துமுத்தைப் போட்டுக்கொழிப்பதும்போய்
புற்களருப்பிடித்துஇத்தைப் போட்டுக்கொழிக்கவைத்தாய்
தங்கத்தின்சல்லடையால்முத்தின் தவிடுசலிப்பதும்போய்
வங்கத்தின்சல்லடையில்இத்தை வைத்துச்சலிக்கவைத்தாய்

வசனம்.

சுவாமி அரிசிவேறு குறுணைவேறு தவிடுவேறு உமிவேறாகச் செய்துவிட்டேன் பார்த்துக்கொள்ளுங்கள் இனியாதுவேலை.

(கா-ன்-வ-ம்.) சரி திருவிளக்கேற்று சீக்கிரம்.

(ச-தி-வ-ம்.) நல்லது சுவாமி.

## திருவிளக்கேற்றுகிறபாகம்.

ஜகதீசாபரமேசா வென்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

உமைபாகா உயர்யோகா (உ)

அநுபல்லவி.

இமையோர்கள் திபாகா
எளியோர்கள் ஸ்நேகா (உ)

சரணங்கள்.

சுந்தரக்கதிர்குலச் சுடர்விளக்கையெடுத்துத்
தோற்றவேற்று மலிங்கடுத்து
இந்தவிளக்கை யானெடுத்து
ஏற்றும்படிசெய் தாயிதறமோ (உ)

(வ-ம்.) சுவாமி திருவிளக்கேற்றி யாச்சுது.

(கா-ன்-வ-ம்.) சரி எண்டி இவ்வளவு பதட்டமென்ன.

சந்திரவதி வருத்தம்.

ஞானநூலுணர்ந்தநீதி நன்மறையோரேயுந்தன்
வானகவேலையாவும் வழுவறச்செய்தேனுமால்
கானகமணுகிச்சேயைக் கண்டெடுத்தடக்கியிங்கே
யான்வரக்கருணைகூர்ந்தின் றீகுவீர்விடையெமக்கே.

இராகம்-நமாசு-தாளம்-ஆதி.

பல்லவி.

வேதவேதியரே விடைதாருமே(வே)



அநுபல்லவி.

மாதயாநிதியே மனுத்தெய்வபதியே
பாதமலர்கதியே பாருமிதுதகுதியே(வே)

சரணங்கள்.

படர்வனமடுத்துப் பாலனையெடுத்து
சுடலையிற்றகனித்து துரிதமாய்வரமெய்த்து(வே)

சந்திரவதி வசனம்.

சுவாமி தமதாக்ஞைப்பிரகாரம் தமதகத்தின் வேலைகளியாவும் செய்தாயின இனிமேல் யான் ஆரணியத்திற்கேகி யெனதுபாலகனைத் தேடிக்கண்டெடுத்து சுடலைக்குச்சென்று தகனித்துவரும்பொருட்டு தயவுசெய்து விடைகொடுக்கவேண்டும் உமதுபாதமே கெதியென்ற டைந்தேன் கருணைபங்கடலே.

காளகண்டன் விருத்தம்.

அடிபணிந்தேங்கிநிற்கு மடமையேகேளாயெந்தன்
கொடியநீதாரகத்தில்வேலை ரொம்பவுண்டானதாலக்
கடிவனத்தேகிச்சேயைக் கண்டெடுத்தடக்கியிங்கே
விடியுமுன்வருவாயாகில் விடைகொடுத்தனுப்புவேனே.

வசனம்.

அடியே சந்தி நான்சொல்லுகிறதைக்கேள் அதாவது யென்னக த்தினில் இனும் செய்யவேண்டியவேலைகளோ ரொம்பவுமுண்டு அதுஉன க்குத்தெரிந்தவிஷயமே ஆனதால் அந்தவனத்திற்குச்சென்று நீயுன் மகனைக்கண்டெடுத்து தகனஞ்செய்து விடியுமுனிங்கு வருவா யாகில் யான்விடைகொடுப்பேன் இல்லாவிடில் கொடுக்கமாட்டேன் என்னசொல்லுகின்றாய்.

சந்திரவதி வசனம்.

சுவாமி தமதுத்திரவுப்படி விடிவதற்கு முன்னமே இங்குவந்து சேருகின்றேன் சந்தேக முறவேண்டாம் சந்தோஷமாய் விடை கொடும்.

(கா-ன்-வ-ம்.) நன்றுசென்று வருவாயடி சந்தி.

(ச-தி-வ-ம்.) அநேகவந்தனம் சுவாமி சென்றுவருகின்றேன்.

ஸ்ரீ

# சந்திரவதி குழந்தையைத் தேடுகிறபாகம்.

சந்திரவதி விருத்தம்.

அருண்முனிக்கயோத்திசனை யளித்திங்கெய்தி
யருங்கடலைந்தனர்க் கன்றடிமையாகி
ஒருகணமேனும்பிரியாக் கணவன்றன்னை
யுலகமிசையான்பிரிந் தாழ்வினையினாலிவ்
விருமனைசேர்ந்தேவல்பல வியற்றிச்சேயை
யிதுவரைபார்த்தின்புற்றே னிதுபோழுதின்
றிருள்வனத்திலன்னவன் பாம்பாலிறக்க
விழைத்தனையேயீதறமோவெம்பிரானே.

இன்னமெந்தன்கவலைநீங்காதென்றமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

ஐயையோநானென்னசெய்வே    னறமோஈஸ்வரனே
தையல்மீதுதயவில்லையோ    தகுசர்வேஸ்வரனே
தீயபாவியெனவேயாருந்    செப்பவைத்தனையே
எயவேயெனக்கிவ்விதவினை    யேனிழைத்தனையே
ஒருமகனைநம்பியானு    முளமகிழ்ந்திருந்தேன்
செருவரவால்மரணமாகச்    செய்ததுபொருந்தேன்
பெற்றரும்பிபற்றுதேயிது    பிரமன்றன்விதியோ
கற்றவர்புகழ்ந்தேற்றுஞ்ஞானக்    கௌசிகர்சதியோ
இந்தவிருளிலேகிவனத்தை    யெவ்விதங்காண்பேன்
எந்தன்மகனைக்கண்டெடுத்தின்    றிதயமகிழ்பூண்பேன்

வசனம்.

ஐயோ கடவுளே யெமக்கேற்பட்ட கர்மானுபவத்தால் கணவனைப்பிரிந்து காளகண்டரகத்திலமர்ந்து தினந்தோறும் செய்வதற்கரிதாகிய வேலைகள்செய்து குக்ஷிவாதையைத் தீர்த்துக்கொள்வதாயிருந்தாலும் எனது புத்திரசிகாமணியைப்பார்த்து சற்று மகிழ்வடைந்திருந்தேன் நீ இதுவும்போகாதென்றெண்ணியோ அன்னவனின்று ஆரணியத்தில் அரவுகடித்திறக்கும்படி செய்தனை யிதுனக்கறமா யாதுசெய்வேன்.



சந்திரவதி விருத்தம்.

கொடியவாளரவதின்டிக் குளிர்வனத்திறந்தவென்றன்
வடிவுடைமகனையுன்னை மாண்புடன்காண்பதற்குத்
துடிதுடித்தையரண்டை சொல்லியான்விடையடைந்தே
கடிநகர்தாண்டியிந்தக் கழனியையடுத்திட்டேனே.

இன்னம்நாதன்வரக்காணேன் என்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-சாப்பு.

பல்லவி.

இருளிற்பாதைதெரிகிலேனே    என்னசெய்வேன்லோகிதனே(என்)

அநுபல்லவி.

அருள்முனிசெய்    அபகடமோ
அறியேன்-குறியேன்    ஐயகோபாவி(என்)

சரணங்கள்.

நிரம்புந்தோப்புத்துறவுகளும்    நீண்டவாவியேரிகளும்
வரம்புகளும்வாய்க்கால்களும் வளைந்தே-விளைந்தேவாய்த்திருக்கிறதே
கற்களொடுமுட்கள்பற்றக்    கடியவரம்அடியிற்சுற்ற
இக்கொடியபுற்கொடிகள்    இழுக்க-வழுக்கஎன் றலைவிதியோ (என்)
எவ்வழிகண்டேகுவேண்டா    இங்கேநின்றேயேங்கிறேண்டா
இவ்வழியோ அவ்வழியோ    ஈசன்-நேசம்இவ்வளவுதானோ(என்)
யாவுந்தெய்வச்செயலாமென்றே    இயம்பியபடியேயின்றே
ஆவிதேறிடக்கிறேண்டா ஐயா-துய்யா ஆணிப்பொன்மெய்யா(என்)

(வ-ம்.) இதுவும் ஈஸ்வரன் திருவருளோ பாலகா.

சந்திரவதி விருத்தம்.

சுடர்விரிகதிர்குலத்திற் றோன்றியசுதனையாதி
கடவுளர்கருணையாலுங் ககனமீதொளியினாலும்
நடமதுகண்டுநீண்ட தன்வயல்முழுதுந்தாண்டிப்
படர்பயமில்லாவிந்தப் பாலையையடுத்திட்டேனே.

இந்த இடத்திலெங்கே தேடுவேனென்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

ஏகவெளியாயிருக்குதென்    செய்வேன்-என்கண்மணியே
இவ்விடத்தி    லியாதுசெய்குவேன் —
ஏகதேவனிழைத்த    மாயமோ-என்கண்மணியே
இறைவன்விதித்த    விதியின்றாயமோ.

ஆரணியந்தெரிய வில்லையே-என்கண்மணியே
ஐயோவிதுவுமென்ன தொல்லையே
நேரமோரெம்ப நேரமாகுதே-என்கண்மணியே
நெறியோவீது நெஞ்சம்நோகுதே
எவ்வளவுதொலை தூரமோ-என்கண்மணியே
யானறியேன்முனி செய்கோரமோ
இவ்வளவுதூரம் வந்தேனே-என்கண்மணியே
எவ்விடத்திருக் கின்றாய்தானே
பார்க்கப்பார்க்கப்பயமுங் கொள்ளுதே-என்கண்மணியே
பாறையிடறிப் பாதந்துள்ளுதே
மார்க்கமின்னதென் றறியேனே-என்கண்மணியே
மனந்துணிந்து நடக்குகின்றேனே
கருந்தேள்நட்டுவாக்காலி தீண்டுதே-என்கண்மணியே
கடியபூரானை தீண்டுதே
கருங்குளவிசெங்குளவி கொட்டுதே-என்கண்மணியே
காலிற்பாம்பு கனமாய்த்தட்டுதே

வசனம்.

இக்கொடியவினைக் கென்செய்வேன் பாலகா இன்னும் ஆரணியம் எவ்வளவுதூர மிருக்கின்றதோ உன்னை யெப்போது காண்பேனோ தெரியவில்லையே.

சந்திரவதி விருத்தம்.

புக்கருப்பாலைமீதுபுகலொணு வவஸ்தையுற்றிங்
கிக்கணம்வந்துசேர்ந்தே னீஸ்வரனருளாலிங்கே
மைக்கணுற்பார்க்குங்காலை வழியொருவிடத்துங்காணேம்
எக்கணமுன்னைக்காண்பே னிருள்வனத்தகத்தேபாலா

என்னபாவஞ்செய்தேனோ சிவமே யென்றமெட்டு.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஐயகோவென்செய்குவேன்மகனே அடவியின்னதென்றறியேனே
மையையேசவந்ததேஇருளே வழியுமெதுவோகுறியேனே
புல்லும்பூண்டுமுள்ளுமுடனுமே பொற்பதத்தினிற்றைக்குதே
கல்லுங்கறடுஞ்செடியுங்கொடியுமே கணக்கில்லாதிருக்கின்றதே
பள்ளமேடுபடுகுழியுமே பார்த்தவிடமெல்லாந்தோற்றுதே
வள்ளமோடையுடைப்பும்வெளியுமே வளைந்துநீண்டிருக்கின்றதே

254



வசனம்.

பாலகா இவ்விதகொடிய இடங்களில் நடந்துபலவாறு தேகம் நோகலாயின இனியென்செய்வேன்.

சந்திரவதி விருத்தம்.

இவ்விதமவஸ்தையுற்றிங் கித்தனை தூரம்வந்தும்
செவ்விசேரடவியின்னுந் தென்படவில்லையேவையோ
எவ்விடத்திருக்குகின்ற தெத்தனை தூரமோதான்
இவ்விடத்துரைக்கயாரு மெதிர்வரக்காணேன்பாலா

பாலைவனந்தனிலே யென்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

எவ்வளவுதொலை யிருக்குகின்றதோவனம்(எவ்)

அநுபல்லவி.

இவ்வளவுதொலையென் றியானறிகிலனேயினம்(எவ்)

சரணங்கள்.

அப்பாவுன்றேகத்தை யரும்பேய்களருந்தியதோ
இப்பாவபரப்பயன் எழுதமனம்பொருந்தியதோ(எவ்)
யான்வரும்வரையங்கே இருப்பாயோவென்னமோ
கான்வழிதெரியவில்லை ஓநாசிகர்செய்வினைமோ(எவ்)
விண்ணொளிமறையும்வண்ணம் மேகங்கள்கவிந்ததே
மண்ணொளிதெரியாவண்ணம் மாயிருள்படிந்ததே(எவ்)
சுழல்காற்றடிக்குதே ஊசிமெய்யிற்குத்துதே
தழல்போல்மின்னலமின்னுதே தமியள்சிந்தைகருன்னுதே(எவ்)
எப்படியினிநடப்பேன் இவ்வழியையான்கடப்பேன்
எப்படியுனையடைப்பேன் இருகரத்தாலெடுப்பேன்(எவ்)

சந்திரவதி விருத்தம்.

அடர்ந்துநீண்டுயர்ந்துவிம்மி யண்டகோளத்தைமுட்டிப்
படர்ந்திருண்டேதோகேரிற் பார்க்கவோர்மலைபோலித்த
விடத்தனிற்றோன்றுகின்ற திதுபனியிருளோவல்ல
திடக்கிசுமடவியோயா னின்னதென்றறிகிலேனே.

பாலாவென்னகாலம் வந்ததோடா வென்றமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

ஐயோமகனே அடவியிதுதானே-இதுதானே
அண்டம்வரையுயர்ந் தண்டவெளியின்றிக்
கொண்டல்நிறமென மண்டியிருக்குதே (ஐ)
நரிகளுடன்நாய்களுமிந் நூளையிடுதே-ஊளையிடுதே
நாடிமிருகங்கள் கூடிபொன்றோடொன்று
சாடியாரபாரித் தோடியுலாவுதே (ஐ)
பறவைகளுந்திறகையடித் தொலிக்கிறதே-ஒலிக்கிறதே
பாங்காகவண்டுகள் பூங்காவித்தேனுண்டு
ஓங்காரமிட்டதி ரீங்காரஞ்செய்யுதே (ஐ)
குயிலுமடமயிலுமிகக் கூவுகிறதே-கூவுகிறதே
கொடியகட்கூகைகள் படிமிசைகூவுதே
கெடிபெருமார்த்தைகள் நெடில்கிளைகூட்டுதே (ஐ)

(வ-ம்.) பாலகா இதுதானவனம்.

சந்திரவதி வனத்திற்குட்

பிரவேசிக்கிறபாகம்.

விருத்தம்.

இவ்விருள்வனத்திலோங்கு மெழில்மிருதருவினங்காள்
செவ்விசேர்விலங்கினங்காள் சிறகுடைப்புள்ளினங்காள்
வெவ்விடநாகந்தீண்டி வீய்ந்தவென்மகனைநீங்கள்
இவ்விடம்பாவிபோது மியல்புடன்காண்கிலீரோ

ஐயோமகனே அருமைக்கண்மணியே யென்றமெட்டு.

இராகம்-நாபி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

என்மகன்றன்னை யிங்காருங்காணீர்களோ
என்மனமுருகுதே யென்னுடல்கருகுதே
என்னசெய்குவேன் இனி யாதுசெய்குவேன் (என்)



414-வ . . . . ந்திரவதி வனத்திற் செல்லுகிறபாகம்.

அத்தியே ஆலேபலாவே — மாவே அகிலே
இத்தியே வேங்கையே — இருப்பையே இலந்தையே
பத்திசேர் புங்கே — வெட்பாலையே கோங்கே (என்)

அரசே புரசே நல் — ஆத்தியே பூவரசே
பரவு சண்பகமே — பசும்பாரிஜாதமே
உரமிகு வேம்பே இங் — குயர் மருதே கடம்பே (என்)

படர்ந்த வாகையே நற் — பைம்பொன் மாதுளையே
அடர்ந்துயர் முக்கிலே — அரம்பையே நாங்கிலே
தடம்பெறு கமுகே — செந்தாழையே சோகே (என்)

செஞ்சொற்கிளியே — செந்தேன் புசிக்கும் அளியே
அஞ்சொல் ராஜாளியே — அன்னமே கோழியே
இஞ்சொற்குயிலே நல் — பிணையுடமா மயிலே (என்)

யானையே புலியே வல் — யாளியே கரடியே
பூனையே சிங்கமே — புல்வாயே கோடரமே
ஏனமே கலையே — எருமை நட சிவங்கியே (என்)

வசனம்.

இக்காட்டினிடமிருக்கின்ற தருக்காள் விலங்குகாள் பறவைகாள் எனதன்பிற்குரிய மைந்தனை உங்களில் யாரேனும் கண்டீர்களா கண்டிருந்தாற் கழறுங்கள்.

சந்திரவதி விருத்தம்.

அந்தணர்பால் விலையடைந்தே அருங்காசி நகர்கடந்திவ்வலைதையுற்
றிந்தவனங்கண்டு புகுந் திங்குறையு மாமிருகபக்ஷியின்பால் [றின்
எந்தையனிறந்தவிடமியம்புமெனக் கேட்டுமொன் றுமியம்பவில்லை
எந்தவிதமின் னிரவி லுந்தனையான் கண்டெடுப்பே னிராஜகோவே.

கானகத்தில் யானறனியே கதறவிதிவசமோ வென்றமெட்டு.

இராகம்-நாபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஆரண்யத்தி லுன்னைத் தேடி — யலைகிறேனடா கண்மணி (ஆ)

அநுபல்லவி.

ஆரணநாலோதுமன்ன — அந்தணர் தமைந்தர் சொன்ன
ஆலயமின்னதென் — றறிகிலேனடா கண்மணி (ஆ)

சரணங்கள்.

விரிதலைக்கரடிகளும் — வெம்முகக்குரங்குகளும்
வரிநெடுங்கைபாலடிக்க — வருகுதேயடா கண்மணி (ஆ)

அத்திகளும்ஞாளிகளும் யாளிகளும்பன்றிகளும்
வெத்திமதமேபெருகி விறட்டுதேயடாகண்மணி (ஆ)
புலிகளும்வேங்கைகளும் புகலரியசிங்கங்களும்
வலியுடனேசீறிப்பாய வருகுதேயடாகண்மணி (ஆ)
தவ்விவருமிருகங்கட்குத் தப்பியுந்தனிடத்திற்கு
எவ்விதம்வந்துனையெடுத்தின் றேகுவேனடாகண்மணி (ஆ)
சித்திரமுற்றிங்கேமேவும் செடிகொடிமுள்மாறுயாவும்
வஸ்திரத்தைக்கிழித்திரத்தம் வழியுதேயடாகண்மணி (ஆ)
எவ்விடமென்றுபாவி இனிக்குறித்தேகுவேன்தாவி
அவ்விடந்தெரியவில்லை அயன்விதியொடாகண்மணி (ஆ)

வசனம்.

கண்மணி இந்தஅகோரமான ஆரணியத்துள் எவ்விடத்திலிருக்குகின்றனையோ தெரியவில்லையே.

ஆயெந்தனருமைக் கண்மணியே யென்றமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

நானினியெங்கேதேடுவேன் நவரத்தினமேயுனை (நா)

அநுபல்லவி.

வானிலத்திலுள்ள வானவர்மதிக்க
மகுடமுடிமன்னர் வந்தடிதுதிக்க
மாநிலத்தையாள வந்துதித்ததிரு
மகனேமதி-முகனேஅதி சுகனே-அருளகனே (நா)

சரணங்கள்.

அங்குனசயும்அதனெய்படுத்தே ஒருஆல்விருக்ஷமும்
இங்கிருக்கின்றதாய் இயம்பினரோதோழர்
இதுவரைதேடியும் இன்றுமதைக்காணோம்
எங்கிருக்கின்றதோ எத்தனைதூரமோ
எளியானறி-கிலனேயிது எதிமாயமோ-விதிஞாயமோ (நா)
உந்தனைக்கண்டெடுத்தேகுதற்கே இங்கேஓடியலைந்திடும்
எந்தனைக்கண்டே யாராகிலுமந்த
இடத்தைக்காட்டுதற் கெதிர்வரக்காண்கிலேன்
இந்தஜன்மந்தனி லென்பிவஞ்செய்தேனோ
இதனேயெழில்-மதனேமலர்ப் பதனேஉலோ-கிதனேஉனை (நா)



வசனம்.

பாலகா உன்னை யெவ்வாறுகாண்பேன் ஐயோ நீ எவ்விடத்திலிருக்குகின்றாய் தோழர்சொன்ன ஆலமரமுந்தென்படவில்லையே இக்கொடியவினைக் கென்செய்வேன்.

இந்தஇருளிலுந்தனைநா யென்றமெட்டு.

இராகம் - காபி - தாளம் - ஆதி.

கண்ணிகள்.

இனியுனைநான்பனியிருளி லெங்கேதேடுவேன்
இனதெனவழியுந்தெரிகிலையையோ யெவடம்நாடுவேன் (இ)
கானகத்தருக்கள்விழக் காற்றுச்சீறுதே
வானகமெல்லாமேகம்பரவி மையிருள்மீறுதே (இ)
இடைவிடாதுமின்னல்மின்னி யிடியிடிக்குதே
பெடைமயில்களிடையமாரி பெலத்தடிக்குதே (இ)
கருமணற்கள்வாறியிறைத்துக் கண்களுறுத்துதே
தருவின்வேர்முளைகட்டகளிடறித் தாள்களைவிறுத்துதே (இ)
வருணனுக்கருணையின்னும் வரவுமில்லையே
இருடிசெய்மாயமோவறிகிலனிதுவு மென்னவேதால்லையே (இ)
உனையிழந்துமுனைக்கண்டின்ப முறுவதன்முன்னே
எனையிவ்விதவல்வினைபிடிக்கலாகுமோ பைம்பொன்னே (இ)

வசனம்.

பாலகா இக்காலம் உன்னையிழந்தும் உன்னையிவ்வனத்தின் கண்ணே காண்பதற்குள் இத்தவிதமான கொடியவினைகள் என்னையணுகலாகுமா ஆதியிலென்னபாவம் செய்தேனோ வறிகிலேன் அருமைத்துரையே.

எங்கேயென்றுதேடுவே யென்றமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

எங்கிருக்குகின்றாயடா என்னருமைக்கண்மணியே (எ)

அநுபல்லவி

இங்கிருந்துபலவாறாய் ஏங்கிறேனுனைக்காணமல் (எ)

சரணங்கள்.

வழிதெரியவுமில்லை வடவிருட்சந்தோன்றவில்லை
பொழியுதேமழைமேகம் பொற்றருவனத்தின்கண்ணே (எ)

உன்னையேநான்கதியென்றே உன்னியிருந்ததற்கின்றே
என்னையேதனியாய்விட்டே யிறந்தையேபாம்பாலேயோ (எ)

பாவியிவளெனவே பற்பலரும்பகரவே
பூவுலகிலுடலெடுத்தேன் புத்திமிகுபுத்திரனே (எ)

(வ-ம்.) கதிர்குலசிகாமணியே நீ எவ்விடத்திலிருக்குகின்றாய்.

சந்திரவதி விருத்தம்.

பணமிருக்கும்பாரவிடப் பாம்பால்மாண்ட
பாலகனேபானுகுல பதியேமேனாட்
பிணமிருக்கும்பேரிடத்திற் பெரியபூதப்
பேய்கழுகுகாகம்நரி நாய்பருந்துக்
கணமிருக்குமெனப்பெரியோர் கழறும்வண்ணங்
கண்டேனுனக்கினியக் கணத்துளேங்கிக்
குணமிருக்குங்கூர்விழியா லுன்னைக்காணக்
கூடுவேன்கூடிநன்றாய்த் தேடுவேனே.

இராகம்-சஹானா-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

மைந்தனேவுன்னைக்காண நாடுகின்றேன்-நான்
அந்தவிடந்தனிற் தேடுகின்றேன்
ஏதோவிங்கோர்வழி கண்டேனே-நான்
ஈதோமனத்திடங் கொண்டேனே
தோழர்சொன்னகுழியை நோக்குகின்றேன்-இச்
சூழலிலேசுற்றிப் பார்க்குகின்றேன்
மட்டில்லாவாலமர மிதுதானோ-நீ
கட்டிவைத்தசாமா னிதுதானோ
தெற்பைப்புதவென்பது மிதுதானோ-நீ
புற்பறித்தவிட மிதுதானோ
அரவிருக்கும்புற்று இதுதானோ-அது
பரவிகடித்தவிட மிதுதானோ
கதரிப்புரண்டதட மிதுதானோ-நீ
பதறியிறந்தவிட மிதுதானோ
இந்தக்குழியையெல்லாங் கண்டேனே-கண்டும்
உந்தனைநானிங்கே காணேனே

சந்திரவதி விருத்தம்.

எங்கும்நான்றேடித்தோழ ரியம்பியகுழியைக்கண்டும்
எங்குமணிதானிங்கே யிருக்கவுங்காணேனையோ
பொங்கும்நாய்நரிகள்கௌவிப் போனதோவல்லதோங்கும்
கங்குல்சேர்பேய்கள்தின்று களித்ததோவறியேன்தேவ.



419-வது பக்கம் பேய்கள் வருகிறபாகம்.



ஐயோமகனே யென்னசெய்வேனடா வென்றமெட்டு.

இராகம்-நாபி-தாளம்-அடதாளம்.

கண்ணிகள்.

என்னசெய்வேனையோ யீஸ்வரனே-காசி
நன்னகர்வாழுஞ்சர் வேஸ்வரனே
இன்னமும்யானிங்கே தேடுகின்றேன்-தோழர்
சொன்னகுறிதனை நாடுகின்றேன்
செல்வனைக்காணவருள் செய்வாயே-எந்தன்
வல்வினையாவையுங் கொய்வாயே
நோக்கிவர்தேனிக்கு மலைபோலே-கொடும்
பேய்க்கணமிற்குதே முன்னாலே
இதிலனுகத்திடம் பூண்பேனே-எந்தன்
மதிமுகமைந்தனைக் காண்பேனே

சந்திரவதி விருத்தம்.

திருவனம்பிடோகாற்று தென்றலோகிழுதிர்த்த
சருகுபஞ்சணையோபட்சி சாலம்வாத்தியமோவெய்ய
மிருகம்நாற்படையோநிற்கும் விருட்சம்நின்குடியோவிங்கே
பெருகுபேயரசரோநான் பெற்றகண்மணியேபாலா.

# பேய்கள்வருகிறபாகம்.

இராகம்-மத்தியமாவதி-தாளம்-ஆதி.

பல்லவி.

பேய்கள்வந்ததே பெலத்த (பே)

அநுபல்லவி.

வாய்மதமிகப்பேசியே வல்லக்கைகளைவீசியே (பே)

சரணங்கள்.

அலைபோலும்நாக்கைநீட்டி மலைபோலுமூக்கைக்காட்டி
ஆவெனத்திறந்தவாயோ டாங்காரங்கொண்டுகொட்டில் (பே)
வக்கிரதந்தங்கள்துலங்க வார்சடைபுரண்டிலங்க
உக்கிரமுகக்கண்களிடை யக்கினிப்பொறிசிதறப் (பே)
அண்டம்நடுநடுங்க அகிலங்கிடுகிடுங்க
கண்டவர்நடுக்கிடவே கருமலைபோற்றிரண்டு (பே)

தாய்ப்பேய்வசனம்.

ஆ ஆ ஆ ஆ அடா மக்களா இங்கே ஏதோமானிடவாடை யடிக்குதுடா சத்தியாருங்கடோ.

(குட்டிப்பேய் வ-ம்.) ஆகட்டும்பிள்ளா ஆத்தோ.

என்னசெய்வேன் யென்றமெட்டு.

இராகம்-புன்னாகவராளி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஐயோயென்ன செய்வேனடா பாலா
அதிசிவனரு ளிதுவோ பாலா
வெய்யோன்குல மணிவிளக்கே பாலா
வேந்தர்பணி பூந்தாளனே பாலா
பேருலகம் நடுநடுங்கப் பாலா
பேய்க்கணங்கள் கத்துதடா பாலா
அருதவி யாரண்யத்தில் பாலா
அருள்முனிசெய் அபகடமோ பாலா

தாய்ப்பேய் தரு.

கொந்தகைவிருவா யென்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

ஆரடீ இங்குவந்தாய் அர்த்தராத்திரிநேரத்திலே
சேரடியெமக்கிரையாய்த் தின்றுகளிகொண்டிடவே (ஆர)

சந்திரவதி தரு.

மெய்யைத்தொட்டுத்தூக்குதற்கே பாலா
வேதாளம்வருகுதடா பாலா
கையைத்தொட்டு இழுப்பதற்கே பாலா
கரும்பூதம் நெருங்குதடா பாலா

தாய்பேய் தரு.

எங்கேயோடுகின்றாயடி யேங்கியேங்கியேந்திழையே
இங்கேவாடியுன்னையுந்தின் றெக்களிப்படைந்திடவே (ஆர)

குட்டிப்பேய் தரு.

ஆ சுத்த வென்றமெட்டு.

இராகம்-சமாசு-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

மண்டைக்கறிவேணுமே வதனக்கறிவேணுமே
தொண்டைக்கறிவேணுமே தோள்கறிவேணுமே-வேணுமே



சந்திரவதி தரு.

[illegible] இழுப்பதற்கே பாலா
[illegible]பேய்கள் குறுகுதடா பாலா
சாக்கினிதான் தலைமுடிக்க பாலா
[illegible]னிகள் தவ்வுதடா பாலா

குட்டிப்பேய் தரு.

[illegible]க்கறிவேணுமே பெருகும்ரத்தம்வேணுமே
[illegible]வேணுமே ஒட்டுமீரல்வேணுமே-வேணுமே

சந்திரவதி தரு.

[illegible]தலைப்பிடித்துத்தள்ள பாலா
பெண்பேய்க ளண்டுதடா பாலா
இடையுடைமை இழுப்பதற்கே பாலா
இடாகினிகள் எய்துதடா பாலா

குட்டிப்பேய் தரு.

இடைக்கறிவேணுமே இருகைக்கறிவேணுமே
[illegible]டைக்கறிவேணுமே சுவட்டுக்கறிவேணுமே-வேணுமே

சந்திரவதி தரு.

[illegible] முந்தனைான் பாலா
இருவிழியாற் காண்பேனோ பாலா
இந்தவினை செய்தவளோ பாலா
என்னாசை யென்றனையே பாலா

சந்திரவதி விருத்தம்.

தாய்பிதாக்களை[illegible] நன்மொழிமறுத்தேனோகில்
வாய்மையேவழுவிப்போகும் மனுநெறிதவிர்த்தேனோகில்
தெய்வ[illegible] சொழித்திட்டேனோவில்ப்
பேய்களே[illegible] பேசாமற்செல்வீரின்றே.

பேய்கள் வசனம்.

அடே அப்பா இவளுடைய கற்பின்நெருப்பு நம்மைச்சுட்டு விடும்போலிருக்குது வாருங்கள் அப்பாலே ஓடிப்போய்விடுவோம்.

ஸ்ரீ

# சந்திரவதிகுழந்தையையெடுத்துப் புலம்பும்பாகம்.

கண்ணேயென் கண்மணியே யென்றமெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

வாடா வென் கண்மணியே மரகதமே பச்சை மாணிக்கமே
தாடாவொரு முத்தம் நீ சற்குணனே ஆணிப்பொற்கனனே (வா)

பாம்பாலிறந்தாயோடா பாலகனே யெந்தன் லோகிதனே
தீம்பாவி யானேனடா தேடியுங்கிட்டாத் திரவியமே(வா)

ஆதரவா ரினிமேல் அங்கமுநோகுதே அங்கனியே
சாதனுடன் கலைகள் கற்றவனே யென்னைப்பெற்றவனே(வா)

பொன்னுல காளுதற்கே போனாயோவென்னைப் புலம்பவிட்டே
என்னசெய்வேன் துரையே இவ்விதியும்விதியெழுதினனோ அடா(வா)

பஞ்சமாபாதகம்படாராதா யென்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஐயையோநா னென்ன செய்வேண்டா
வெய்யபாவியெவ்வித முய்வேண்டா
தெற்பைப்புத ரருகேசென்றாயோ
புற்பைபக்கொய் தப்போதுநின்றாயோ
படத்தாடரவின் கடிபட்டாயோ
விடத்தாலேமெய் மெலிந்திட்டாயோ
இந்தவனந்தனிலே யிறந்தாயோ
எந்தனைநீயின்று மறந்தாயோ
தீயபசாசுஞ் சூழ்ச்சிறந்தாயோ
தூயவுலகாசையைத் துறந்தாயோ
பொன்னோடேகெதியெனப் போனாயோ
அன்னைதனுக் கடிய னானாயோ
அருந்தவத்தாலுதித்த வம்புயனே
திருந்தும்விவேக குணஸ்ரீமானே
ஓதற்கரியதிரு வொண்மணியே
காதற்கரும்பே இருகண்மணியே



வசனம்.

பாலகா இனிமேலுன்னை யெந்தஜென்மத்திற் காணப்போகின்றேன்.

சந்திரவதி விருத்தம்.

அரும்பசியுடனேயிந்த வடவியிலணுகியின்று
விரும்புநற்றோழர்தம்மை விட்டுபுதர்க்குட் சென்று
பெரும்புகழ்ப்பிராமணர்க்குப் பிரீதியாய்த்தெற்பைகொய்து
திரும்பியேவாராதிந்தத் தீவினைக்காளானையோ.

மோகனுரையேயின்னம்மோடி யென்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

பாலகாநானேகொடும் பாவியானேனே (பா)

அநுபல்லவி.

ஆலமுண்டோன்றந்த அருள்வரத்தால்வந்த (பா)

சரணங்கள்.

நினைக்கதியென்றே நினைந்திருந்தேனின்றே
எனைத்தனியேவைத்தே இறந்தனையேவிகத்தே. (பா)
பங்கயக்கண்ணு பைம்பொன்வண்ணு
அங்கமுருகுதே ஆவிகருகுதே (பா)
இந்தவயசில் இன்றுன்சிரகில்
இந்தவிதியோ யெழுதினன்விதியோன் (பா)
கதிர்க்குலந்துலங்க கனபுகழிலங்க
உதித்தகண்மணியே வயிரநவமணியே (பா)
கடவுள்நேசனே கருணைப்ரகாசனே
திடமனவாசனே தேவதாசனே (பா)
திங்கள்வதனனே திருவுருமதனனே
தங்கமேதிட சிங்கமேஅட (பா)

வசனம்.

பாலகா சதாகாலமும் எனக்கு நீயே கெதியென வெண்ணி மனமகிழ்ந்திருந்ததற்கு என்னைத் தனிமையாய்ப் புலம்விட்டு புற்றரவாலிறந்தனையே இனி உன்னைவிட் டெவ்வாறுய்வேனடா கண்மணி.

சந்திரவதி விருத்தம்.

அட்டதிக்கரசர்போற்ற வவனியையாளவந்த
வட்டமாமதிமுகத்து மைந்தனேயிதுவரைக்கும்
பட்டதோர்துன்பமெல்லாம் பத்தாதென்றெண்ணியோநீ
துட்டவாளரவாலிந்தச் சூழலிலிறந்தாயையோ

கண்களுந்தேடுதே சாமி யென்றமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

இவ்விதிக்கென்செய்வேன் பாலா-இனி
யெவ்வண்ணமுய் குவேன்சீலா (இ)

அநுபல்லவி.

தவ்வியரவுன் றடங்கரமீது
வெவ்விடப்பல் லாலேயப்போது
கவ்விடவே கடித்திறந்தாயோ (இ)

சரணங்கள்,

உன்னைநம்பினா னுற்றதற்கினியே
என்னையேங்க விழுந்தனைகனியே
நன்னீதியே ரத்னமணியே (இ)

தந்திரமுனிவன் சதியோதெரியேன்
மந்திரதேவதை மாயமோகுறியேன்-அதன்
தந்திரமின்ன தென்றறியேன் (இ)

காலகதியோ கடவுள்சம்மதியோ
காளகண்டர் கபடமதியோ
தாலமீதெவர் செய்சதியோ (இ)

யாம்புவியு ளிதுவரைகளித்தே
பாம்புக்கிரையாம் படிவனத்தகத்தே
விம்புக்கோ பெற்றுனைவளர்த்தேன் (இ)

சந்திரவதி விருத்தம்.

செவ்விசேருருவம்வாய்ந்த செல்வமேயரசர்கோவே
ஒவ்விராமிதுவரைக்கு முலகினிலொருவர்க்கேனும்
வெவ்வினைபுரிந்ததில்லை மெய்மொழிதவிர்ந்ததில்லை
பெவ்விதந்தானுனக்கின்றிவ் விதிவந்ததையோ



சேருமுன்னே சேவல்கூவுதே யென்றமெட்டு.

இராகம்-சாமா-தாளம்-ரூபகம்.

பல்லவி.

இப்படியுமுண்டோபாலகா ஈஸ்வரன்செயல்(இப்)

அநுபல்லவி.

அப்பனேயெனதையனே அரவிந்தப்பூங்கையனே
இப்பதிக்கினியமெய்யனே ஈஸ்வரன்செயல்(இப்)

சரணங்கள்.

சித்தமிகமகிழ்ந்தே திங்கள்பத்துஞ்சுமந்தே
பெத்தரும்பிபத்துதேநொந்தே ஈஸ்வரன்செயல்(இப்)
இதற்கோவுனைநான்வைத்தே இதுவரைபரிபாலித்தேன்
எதற்கோவிறந்தனையிகத்தே ஈஸ்வரன்செயல்(இப்)
எல்லவோபுத்தியங்கே யாருனக்கியம்பியுங்கேட்
டல்லவுமறந்தையோவிங்கே ஈஸ்வரன்செயல்(இப்)
தனக்குநிகரில்லாக்கோனே சற்குணமிகுங்கோமானே
எனக்குக்கதியாரடாதேனே ஈஸ்வரன்செயல்(இப்)
இத்துயரந்திருமோ வெந்தனுடல்தேறுமோ
இத்தருணமித்யம்ஆறுமோ ஈஸ்வரன்செயல்(இப்)
எவ்விதமென்றுபாவி யாருனைத்தழுவேன்கூவி
இவ்விதிவந்துதேதாவி ஈஸ்வரன்செயல்(இப்)

வசனம்.

பாலகா நீ சிவபெருமானது திருவரப்பிரசாதத்தால் ஜெனித்தும் இக்காலம் இவ்விதிக்காளானையே எவ்வாறு சகிப்பேன் கண்மணி

சந்திரவதி விருத்தம்.

கற்பகக்கொழுந்தேமின்னுங் கனகமாமணியேகண்ணே
பொற்பனிமலர்த்தேனே புதியகற்கண்டேவண்டே
சிற்பனருமைபடைத்த சீவியேயிவ்வனத்திற்
றுற்பசாசங்கள்சூழத் தூங்கவுந்தியாமோ

சுந்தரோ சாயெந்தனையாள்வா யென்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்

தூங்கிறாயோசுந் தினிமையாய்-இனிமையாய்
சூரனே அடல்வீரனே திடதீரனே அடா
தூயாசேயா ஜோதிமணிவாயா (தூ)

நற்றவத்தாற் பெற்றதாயென்றே-யென்றே
நந்தல்துறந்தே நண்புசிறந்தேநயனந்திறந்தே
நாகரீக மாகப்பாராது (தூ)
கொடியபாவிக் கோதையென்மிசை-மிசை
கோபமோமனஸ்தாபமோ என்னபாபமோஐயோ
கூறுப்நேராய் கோலவொய்யாரா (தூ)
வெஞ்சருகைப் பஞ்சணையென-யென
விரித்துநெஞ்சம் புரித்துத்துஞ்சக்குறித்துநீயதன்
மீதுசோர்து ருதுஇப்போது (தூ)
விரும்பியென்னைத் திரும்பிப்பார்த்துநீ-பார்த்துநீ
மெத்தவழுது கத்தல்பழுதுஉத்தமியென
வேகமாக விண்டுரையாது (தூ)

வசனம்.

இவ்வனத்தின் கண்ணே கொடிதாகிய சருகைப் பஞ்சணையென விரித்து நித்திரைசெய்வதான புத்திரனே நினது கண்ணைவிழித்துக் கவலையையொழித்து இந்தக்காதகி முகத்தைப் பார்க்லாகாதா ஐயோ என்னபாவஞ்செய்தேன்.

சந்திரவதி விருத்தம்.

நான்புரிபவமோநீமுன் நாட்புரிபவமோநம்மன்
கோன்புரிபவமோதீய கோள்புரிவிஸ்வாமித்ரர்
தான்புரிபவமோமுன்னோர் சாபமோவிக்காவிந்தக்
கான்புதராவத்தாலே ககனநாடடைந்தாய்கண்ணே

நந்தினமே யென்றமெட்டு.

இராகம்-பைரவி-தாளம்-சாப்பு.

பல்லவி.

என்மகனேநீ-இந்தவனந் தனில்வந்துமடிந்தாயே(என்)

அநுபல்லவி.

என்னகருஞ்சீர்த்தி யுன்னருளேயோத்தி
நன்னகண்டீர்த்தி துன்னமுடியேத்தி
ராசரீகஞ்செய் வாய்என்ற
யோசனையைமுனி நாசமதுசெய்தார்(என்)

சரணங்கள்.

நட்டாற்றிலேயென்னை விட்டாத்ரமாயுனைக்
கிட்டாதசித்தனை அட்டாட்சரத்தனைக்
கிட்டினையோ விண்றேஅடா
கீர்த்திமிகுகுண பார்த்திபனருளும்(என)



சத்தியையுமுந்தன் புத்தியையுமந்த
யுத்தியையுந்தெய்வ பத்தியையும்மெந்தன்
சித்தமினை நினைந் தேஐயோ
நித்தியமுமிகக் கத்தியலறுவேன்(என்)
தாட்டிகமுளவையர் வீட்டின்வேலைசெய்ய
மாட்டிடாமல்மதி கேட்டிடாமற்கதிர்ச்
சூட்டிலலைந்தலைந்தே வெய்ய
வாட்டிமலரவு நீட்டிவிடமுயர்ந்(தென்)

வசனம்.

கண்மணி உன்னை நம்பியிருந்த வென்னை நட்டாற்றில் விட்டனையே இனியெவ்வாறு மனஞ் சகித்திருப்பேன் ஐயோ.

சந்திரவதி விருத்தம்.

பவத்தினையகற்றுமாதி பகவன்சோதனையோமேனு
ளவத்தமில்லாதவேத னமைத்ததோர்விதியோவெய்ய
நவக்கிரகத்தால்வந்த நந்தலோநாயேன்செய்த
தவக்குறைதானோபாம்பாற் சாகவுமானாய்பாலா

பாலைவனந்தனிலே யென்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

நானினியென்செய்குவேன் ரவிகுலதிலகனே (நா)

அநுபல்லவி.

மானிலத்தோர்புகழ்க்க மாபாவியாகினனே (நா)

சரணங்கள்.

வாலவயதினிலே வந்திவ்விடந்தனிலே
ஆலயிடத்தரவா லழுயிறந்தனையே (நா)
வட்டமதிவதனனே வாழ்வுயர்மகனனே
மட்டலர்புயனனே வாய்ந்தமஞ்சசயனனே (நா)
தித்திக்குஞ்சர்க்கரையே தேவர்புகழ்துரையே
சத்தியவாக்கியனே சான்றோர்இலக்கியனே (நா)
முத்தியருளணியே முடிக்கணிவெண்மணியே
புத்திமிகுந்தவாசைப் புத்திரசிகாமணியே (நா)
அருகிருந்னைவாவென அழைத்தாலெனம்மாவென
வருவையேயென்னைக்கொஞ்சி மடியிலிருப்பதற்கே (நா)

(வ-ம்.) பாலகா இக்கொடிய பாதகத்திற்கினி யாதுசெய்வேன்.

சந்திரவதி விருத்தம்.

பாதலத்தாதிசேடன் பாரியகருவமுற்றின்
றேதடாவிகத்தயோத்திக் கிறைவன்சேயெமக்குமேலா
யேதமில்விவேகமுற்று னென்றிவனைப்திக்கொண்டு
போதல்நன்றெனவிவ்வாறு புரிந்தொளிந்தானேபாலா.

இன்னம் நாதன்வரக்காணே யென்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-சாப்பு.

பல்லவி.

என்மகனேயென்னசெய்வேன் எவ்விதம்யான்சகிப்பேன் (எ)

அநுபல்லவி.

இன்னனிசூழ் பொன்மலர்வாழ்
இறையோன்-முறையோ மறையோன்-குறையோ (எ)

சரணங்கள்.

தெற்பைகொய்யக்கானேகவும் சிற்றரவாலேசாகவும்
சற்பனையார்தான்செய்தாரோ சாமி-பூமி-தனையாளும்-நேமி (எ)
பற்பலநூல்யாவுங்கற்றே பரீட்சையிலேதேர்ச்சியுற்றே
அற்புதமடைந்திருந்த அகனே-சுகனே-அம்மதி-முகனே (எ)
பருதியின்குலம்விளங்கப் பார்த்திபரெல்லாம்வணங்க
அருமையுடனவதரித்த அன்பே-இன்பே-அம்பூங்-கொம்பே (எ)
திடமிகப்படைத்திலங்கும் தீரனேவீரனேபொங்கும்
கடலமுதேகண்மணியே கருவே-உருவே-கனமிகு-திருவே (எ)

வசனம்.

பாலகா இனியெவ்விதம் சகிப்பேன் ஐயோ அனியாயமாக அரவத்தினலாரண்ணியத்தி லிறந்தனையே.

சந்திரவதி விருத்தம்.

எத்தனைவிதமோபாவி யேங்கியுநீதான்கேட்டுச்
சித்தமிதெண்ணாதென்ன திண்ணமோதெரியேனென்மீ
தித்திதயவுசெய்திங் கென்முகநோக்கியுந்தன்
முத்தணிவாய்திறந்தோர் மொழிமொழிந்திடுவாய்பாலா.

தங்கதமயெந்தக்காலம் வந்தெனை யென்றமெட்டு.

இராகம் - காபி - தாளம் - ரூபகம்.

கண்ணிகள்.

மகனேயுந்தன்வாய்திறந்தோர் வசனங்கூறடா
மிகவும்பாவியகமிசைகொண்ட விசனந்தீரடா-ஐயோ (மக)



பெற்றவனென்றுசற்றுமிரக்கம் சித்தத்தில்லையோ
இத்தருணமிப்படிவந்த தென்னதொல்லையோ-ஐயோ (மக)
ஜென்மலாபல்பந்தருதற்காய்ச் செனித்தபுண்ணியனே
மன்னர்தாழநன்னகரான வந்தகண்ணியனே-ஐயோ (மக)
இற்றைநாள்வரைகுற்றங்குறைவு இழைத்தறியேனே
பிற்றையுனக்குப்பேதகஞ்செய்து பிழைத்தறியேனே-ஐயோ (மக)
சத்தியவரிச்சந்திரர்க்குதித்த சற்குணாளனே
நித்தியமும்நேயர்மீது நீள்தயாளனே-ஐயோ (மக)
சோதியான ஆதிசிவனைத் துதிக்கும்ஆகனே
வேதியரிடம்வேலைசெய்வதில் மிகுவிவேகனே-ஐயோ (மக)
நிலத்திற்கலியைநீக்குவாயென நினைத்திருந்தேனே
குலத்திற்கோர்சுடர்விளக்கெனவுனை குறித்திருந்தேனே-ஐயோ (மக)

வசனம்.

கண்மணீ இவ்வாறு புலம்பியும் இன்னும்வாய்திறவாம லிருக்கின்றனையே இதுதர்மமா.

சந்திரவதி விருத்தம்.

மதிநிகர்வதனமுந்தின் மந்தாபுயமும்வாய்ந்த
அதிபெலமார்புமானத்தங் கரதலமுமோங்கும்
மதியுறற்குணமும்பெற்ற வடிவமேவுனைகாணித்தப்
பதியினுனெக்காட்கண்டு பரிவுடன்மகிழ்வேனையோ.

இந்தநேரமிங்குவந்து யென்றமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

எந்தஜென்ம முந்தனைக்கண்டே
இன்பங்கொள்ளுவேன்-இந்தத் துன்பந்தள்ளுவேன் (எ)

அநுபல்லவி.

இந்தஜென்மமந்தணர்க்காய் இங்குவந்தாய்தே
செந்தனிர்வனத் தெற்பைகொய்தே
சிறந்தாயே-சிவா-பாம்பால் இறந்தாயே-பாலா (எ)

சரணங்கள்.

உன்பிதாவைப்பிறிந்தபின்னே புனைக்கதியென்றே
இன்படனி குந்தநற்கின்றே
எங்கேவைத்தாயே-துயா ஒங்கவைத்தாயே (எ

| | |
|---|---|
| அன்னகரயோத்திபுரியை | யாண்டிடாவிடினும் |
| கன்னலம்புரி | தன்னையாகினும் |
| ஈக்கலாகாதா-கவலை | நீக்கலாகாதா (எ) |
| ஈடிலாதபஞ்சணைவிட் | டெழுந்தாதிநின்றாய் |
| வாடாவாசை | மகனேயென்றால் |
| வருவாய்ஸ்ரீமானே-முத்தந் | தருவாய்செந்தேனே (எ) |
| குலபத்தினியென்னைப்போலே | கொடியவளுண்டோ |
| தவமுனிசெய் | சதியோவிது |
| தங்கமேகிளியே-இளஞ் | சிங்கமேஅளியே (எ) |

வசனம்.

பாலகா இவ்விதகுணாதி சயப்படைத்தவுன்னை எந்தஜென்மத்திற்காணப்போகின்றேன்.

சந்திரவதி விருத்தம்.

கோசிகர்க்கனைத்தாமீந்து கோசலநாட்டைவிட்டே
காசிமாநகரைநோக்கிக் காட்டினில்வரும்போதங்கே
வீசியவக்னியாற்றில் வீழ்ந்திபான்வியேனென்னப்
பேசியெம்முன்னேசென்ற பெற்றியைமறந்திட்டாயோ.

பாதகியானேனே யென்றழுமெட்டு.

இராகம்-உசேனி-தாளம்-சாப்பு.

பல்லவி.

| | |
|---|---|
| ஆறுமோவென்மனம் | ஐயனே-ஐயனே-ஐயனே (ஆ) |

அநுபல்லவி

| | |
|---|---|
| தேறுதலுனைப்போலே | சீருடனினிமேலே |
| கூறுவோரெவர் | குயிலே-குயிலே-குயிலே (ஆ) |

சரணங்கள்.

| | |
|---|---|
| மானிலங்காப்பாயென்றே | மகிழ்ந்திருந்ததற்கின்றே |
| மேனிலந்தனில் | மேவினாய்-மேவினாய்-மேவினாய் (ஆ) |
| உன்பிதாவந்தென்பால் | உன்னையெங்கேயென்றால் |
| என்புகல்வேனெதிரே | எதிரே-எதிரே-எதிரே (ஆ) |
| பாட்டனாந்திரிசங்கு | பதிபார்க்கநினைந்தங்கு |
| தேட்டமுடனேசென்றாயோ | சென்றாயோ-சென்றாயோ (ஆ) |



| | |
|---|---|
| ஏவல்செய்வதற்கஞ்சி | இதயத்துட்பயமிஞ்சி |
| மேவரவினால்வியந்தாயோ | வியந்தாயோ-வியந்தாயோ (ஆ) |
| விமலன்வரத்தைப்பெற்று | விளங்குநுசேயெனச்சற்றும் |
| இமனுக்கிரக்கமில்லையோ | இல்லையோ-இல்லையோ (ஆ) |

வசனம்.

பாலகா சர்வஜீவகாருண்ணியனான சதாசிவனது வரப்பிரசாதத்தாற் ஜனித்துலாவுவதான தேவதாசன் இவனெனவெண்ணிப்பாராது இரக்கமற்றுன்னைக்கொண்டு சென்றானே ஐயோ இனியெவ்வாறு எனதுசிந்தைதேறும் கண்மணி.

சந்திரவதி விருத்தம்.

உன்னையேசதமென்றெண்ணி யுளமகிழ்ந்திருந்ததற்கின்
றென்னைநீதனியாய்விட்டிங் கிறந்தனைவிதியினால்
முன்னையூழ்வினையோவேணி முனியபகடயோவல்ல
தன்னைபங்காளனாதோ வதிவேலனாசர்கோவே
இன்னமுமின்மனமிரங்கா தென்னதொல்லையோ வென்றழுமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

| | |
|---|---|
| உன்னைப்பிறக்கெவ்விதம்பெ | குழகுவேன்-பாலா |
| என்னைமறந்ததேயாவிறை | யிறந்தையே-சீலா (உ) |
| இகபரசாதகமருள | வேறுநடன்னியனே |
| ஏகமுழுதுஞ்செங்கோல்புரியச் | செனித்ததனயனே (உ) |
| அக்கரவுரைமெட்டும்வண்ண | மனமர்ந்தருபனே |
| வெங்கதிரின்வம்சத்தை | விளக்குந்தீபனே (உ) |
| தீக்குணமடைபத்திரமும் | நினைக்குங்குகனே |
| உத்தமகுணத்திறசிரேஷ்ட | முற்பயோகனே (உ) |
| சற்குருவசிஷ்டர்மெச்சத் | தருந்தசிட்டனே |
| பொற்கனகவாசனத்திற் | பொருந்துமாடனே (உ) |
| தேசமன்னர்வணங்கப்பெற்ற | திருக்கானனே |
| வாசமிகுமாமலர்த்தார் | வளைபுயதீரனே (உ) |
| மாதாவேபென்றெனையெக்காலம் | வந்தழைப்பாயோ |
| ஆதாரமாய்வந்திருந்தென் | றருளிழைப்பாயோ (உ) |

அலையிற்பட்ட துரும்புபோல வலையவைத்தாயே
உலையிற்பட்ட மெழுகுபோல வலையவைத்தாயே (உ

(வ-ம்.) கண்மணி இக்காலமுன்னையிழந் தெவ்வாறுய்குவேன்.

சந்திரவதி விருத்தம்.

உத்தமமுனிவர்க்கன்று ளுயர்நகர்நாடுதன்னைத்
தத்தமாயளித்துமன்னேன் றன்மனங்குளிராதின்றுள்
சித்தர்சூழ்வனத்தின்மீதுன் சிவனைக்கொள்ளைகொள்ளப்
புத்ராப்போலேவந்து புரித்துனைத்தீண்டினரே.

மனந்தடுமாறுதே யென்றனைமைந்தா வென்றமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

தங்கமேவான்சிங்கமேநான் இங்கென்செய்குவேன் (தங்)

அநுபல்லவி.

மங்களவசீகரனே மன்னர்கிருபாகரனே
வெங்கணரவங்கடித்து மிரண்டு-புரண்டு-இறந்தா-யடா (தங்)

சரணங்கள்.

எந்தனுக்கெள்ளுந்தண்ணீரும் இறைப்பாயென்றிருந்தேன்-இன்று
உந்தனுக்கெந்தனையிறைக்கச்செய் தாயுளம்பொருந்தேன்
அந்தமுனிசெய்சதியோ ஆதியிலயன்விதியோ
சுந்தரேசன்றூர்க்கதியோ சுதனே-இதனே-மதனே-அடா (தங்)

எண்ணியதோரெண்ணமெல்லாம் எண்ணமற்கெடுத்தே-நீ
இந்நிலத்தில்இயம்பரிய விருந்துயர்கொடுத்தே
விண்ணிலத்திலேயடுத்தே மெத்தச்சவுக்கியம்படைத்தே
நண்ணியிருக்காயோமெய்த்தே ராச-போச-நேசனே-அடா (தங்)

இப்படிநீசெய்தது[illegible] ளவுஞ்சரியாமோ-இதை
இப்படியிலெப்படிச் சகித்திடப்போமோ
அப்பனேதெள்ளமுதே அற்புதப்பூங்குமுதமே
செப்பரியகற்பகமே தீர-வீர-சூரனே-அடா (தங்)

வசனம்.

கண்மணி விஸ்வாமித்திரர் கடனைத் தீர்க்கும்பொருட்டு நாம் அந்தணர்க்கடிமையான போதினும் பின்னால் நீ எனக் கெள்ளுந்தண்ணீரு மிறைப்பாயென விதய மகிழ்வுற்றிருந்ததற்கு இக்காலம் நானுனக் கிறைக்கும்படியாகச் செய்தனையே எவ்வாறு மனந்துணிவேன் என் பாலகா.



சந்திரவதி விருத்தம்.

வேலனையனையரூப வித்தகாவின்னோர்போற்றும்
ஆலமுண்டோன்வரத்தா லவனியுளவதரித்த
பாலனென்றெண்ணுகிந்தப் பாழ்ம்புதர்ப்பாம்புவந்துன்
கோலமாமுயிரைக்கொள்ளை கொண்டதேவெளிதாயையோ

சிவமேயென் கதியதைப்பார் யென்றமெட்டு

இராகம்-முகாரி-தாளம்-சாப்பு.

பல்லவி.

சேயேயென் செய்வேனடா (சே)

அநுபல்லவி.

மாயவரவாலே வானடவிமேலே
மாண்டாயோவின்றும் மாண்டாயோ
மாண்டாயோஎனை வேண்டாயோ-அடா (சே)

சரணங்கள்.

கனியேயறக்கனிரசமே முனியபகடமோமூவர்கள்திடமோ
மோசமோஎன்னமோசமோ மோசமோதவராசமோ-அடா (சே)

அரும்பேபொன்சுரும்பேஎழில் கரும்பின்மொழியேகதிர்வேல்விழிவ
காலமோஎன்னகாலமோ காலமோஅலங்கோலமோ-அடா (சே)

சகனேமதிமுகனேஐயோ இகமிசைதுணையேயெவருளரினியே
எந்தையேயெந்தன்சந்தையே எந்தையேயென்னவிந்தையே-அடா ()

மயிலேஇளமாங்குயிலே வெயிலவன்குலனேவேந்தர்கள்நலனே
வீரனேதிடவீரனே வீரனேஅதிசூரனே-அடா (சே)

(வ-ம்.) பாலகா உனக்கும் இவ்விதியோ இறைவோன் எழுதினன்.

சந்திரவதி விருத்தம்.

செப்பருந்தருமமெல்லாந் திரண்டுருவாகவந்த
அப்பனேயரசர்போற்றும் அண்ணலேயரனியத்தா
இப்படியரவுக்குன்னை யிரையெனக்கொடுத்துப்பாவி
யெப்படியுயிர்பிழைத்திவ் விகத்தில்யான் வாழ்வேனையோ

பெண்ணே பெண்ணரசே பித்திடாமலென்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-சாப்பு.

பல்லவி.

கண்ணேகண்மணியே காலமோஅலங்கோலமோ-அடா (கண்)

அநுபல்லவி.

விண்ணோர்மதிமுகனே வெய்யோன்குலமகனே
விதியோன்விதியோ விமலன்றூர்மதியோ (கண்)

சரணங்கள்.

அரிட்டசாபமோ அன்றுசெய்பாபமோ
அறியேன்குறியேன் யாதெனத்தெரியேன் (கண்)

பெற்றவயிறெரிய வைத்தேனையேயுரிய
பிள்ளாய்கிள்ளாய் பெருந்தேர்ச்சிவிள்ளாய் (கண்)

பரவிபெங்கினும்நிற்கும் பலபேய்க்குழாமுனக்குப்
படையோன்விடையோன் பரித்தியற்தகொடையோ (கண்)

இணைபெறுமுலகினில் துணையெனக்காரினி
இபமேபவமே இனியாற்றவமே (கண்)

ஆணாமகனேயென யானழைப்பேனென
தரும்பேசரும்பே அதிரசக்கரும்பே (கண்)

எந்தாயுன்றலைமன்னி லீடேரலாமென்றெண்ணி
இருந்தேனுன்பரிந்தே இனியுளம்பொருந்தேன் (கண்)

வசனம்.

புத்திரா இவ்வுலகின் கண்ணே நான் உன்னாலீடேர லாமென்றி ருந்ததற்கு அநாதியாக விட்டனையே யாதுசெய்வேன்.

பாலன்கைநோகுமே என்றமெட்டு.

இராகம்-நாதநாமகிரியை-தாளம்-சாப்பு.

பல்லவி.

பாதகியானேனே பாரினில்யானே (பா)

அநுபல்லவி.

காதலுற்றதுரையே கற்கண்டேசர்க்கரையே
யாதுசெய்வேனினியே யெந்தன்கண்மணியே (பா)

சரணங்கள்.

முப்பத்திரண்டறத்தின் முறையிலொன்றுங்குறையேன்
இப்பதியினில்லோரை யிகழ்ச்சியாயுரையேன் (பா)

சொற்சோர்வுபடவின்னேன் அறவோர்சொல்மொழிதள்ளேன்
உற்சாகமன்னனைவிட் டொருவனையுமுள்ளேன் (பா)



சுருதிநீதிசெழித்துச் சூழ்புறநாடழித்து
வருசேனைவைத்தாள்வதை மங்கைநானறியேன் (பா)

கருதும்நீதியினுரை கருதாதமதியுரை
அருமணிவாயிலி னகத்தில்வைத்தறியேன் (பா)

அடுத்துக்குறையிழைத்து அருவினைதான்விளைத்து
இடுக்கஞ்செய்குடியைவைத் திருந்தும்நானறியேன் (பா)

சந்ததந்தேகியென்று சந்தோஷமாய்நுவன்று
வந்தவர்க்கில்லையென வழுத்தியுமறியேன் (பா)

மாதவத்தின்பயிரோ மணியுடலுயிரோ
வேதனைற்குமிதுவோ விதித்தவிதியையோ (பா)

வசனம்.

பாலகா இக்காலத்தி லுன்னையிழந்திவ்வண்ணம் ஏங்கி யழும்ப டியாய் என்தலையிலிறையோன் எழுதினனோ ஐயோ கொடிய பாதகி யாகினேனே இனியாதுசெய்குவேன்.

அன்னமே நான்தொட்ட சொர்னமே யென்றமெட்டு.

இராகம்-அபுரூபம்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

பருதியினுலொக்கே பசியதினுல்றூங்கே
பாம்பின்கடிபடைக்கேதவிக்கும் படர்ந்தே-இங்கே-கிடந்தேதீ
பறந்தாயோ-பறந் திறந்தாயோ-இ-இ-இ
என்னென்றுயர்வாழ்வோம் என்னென்றின்பஞ்சூழ்வோம்
எந்தனிறையோனும்மந்திரி தானும்பாவி நானும் இனி
எம்பியே-எவரை நம்பியே-நம்பியே-நம்-நம்
ஒன்கமுகின்கிற கோசையுற்றசெய
பூடிருக்கவியலோடீசத் தபலோர்-செய்தசெயலோ-அடா
போகனே-பொன்னின் தேகனே-தேகனே-தே-தே
அவின்பிரங்கல்போல் யானின்றிரங்கநீ
ஏனென்றதுயில்லையே-திடஞ் சொல்லையே-அடா
ஐயனே-மலர்க் கையனே-கையனே-கை-கை

வசனம்.

கண்மணி யாதொரு கன்றையிழந்த கறவைபோல் யானெவ்வ ளவோ வருந்தியும் நீ என் அம்மாவென இயம்பினுயில்லையே இக் கொடுமைக் கென்செய்வேன்.

## சந்திரவதி அகவல்.

இரகாம்-ஆரபி.

சீர்புனையென் றிருச் செல்வனே திகழ்மலர்த்
தார்புனைநின் றிருத் தாதையுமியானும்
இலங்குமிச்செகத்தி லிரவியின்மரபு
துலங்கவேநமக்கோர் சுதனிலையென்னப்
பெருந்துயரடைந்தே பின்பருளோங்கும்
அருந்தவவசிஷ்ட ரனுமதிப்படியே
அன்பருக்கன்பனை யனுதாரகனைய்
இன்பருக்கின்பனை யெங்கும்ப்ரகாசனைய்
விளங்குந்தனிமுதல் விமலனைவேண்டி
உளங்குளிர்ந்தன்னை னுபர்தவம்புரிந்தே
அவர்வரப்பிரசா தத்தினலெற்குக்
கவலைகளொழியக் கருப்பமுண்டாகித்தே
திடம்பெறுமோராந் திங்களிலெந்தன்
உடம்பெலாம்பூரித் துண்மகிழ்ந்திருந்தேன்
இரண்டாந்திங்களி லென்னிடைபெருத்துத்
திரண்டியர்கொங்கைகள் சிறப்புடன்விம்ம
மூன்றாந்திங்களில் முகமதிவெளுத்தே
என்றுங்கிருகிய வெழில்நுனிகறுத்துப்
பலவாறுகப் பசுநரம்போடி
இலகியமெய்சற் றிளைத்திடவானேன்
திருந்துமோர்நான்காந் திங்களில்மசக்கையால்
அருந்துமுணவும் தாசையில்லாது
திடங்குறைந்தைந்தாந் திங்களிற்றேகம்
புடங்கொளுந்தங்கம் போல்நிறங்கொடுக்கச்
சிறந்துபின்பாறாந் திங்களிலெந்தன்
அறந்தழைத்தோங்கு மடிவயிர்கனத்துத்
தேறியேயேழாந் திங்களிற்றீம்பாற்
சோறினிதருந்திச் சுகமிகவடைந்தே
திகழுமோரெட்டாந் திங்களிலெவரும்
புகழ்சீமந்தம் புரிந்திடப்பெற்றே
ஒன்பாந்திங்களி லுன்பதையொழித்துன்
றன்பாரந்தனைத் தாங்குதற்கஞ்சித்
தியங்கியோர்பத்தாந் திங்களிலென்னிரு
குயங்களிற்றீம்பால் கொப்பளித்தொழுகி
இடுப்புவலியன் றெடுத்திடக்கண்டு
வடுப்படாமருத்து வச்சியர்வந்தே
பிரசவம்பார்க்கப் பிறங்குநல்வேளையில்
நார்புகழ்ந்தேற்ற நானுனைப்பெற்றே





சாதகங்கணித்துச் சக்கரைவழங்கி
வேதமங்களஞ்சொல் வேதியர்தமக்குச்
சோடசதானமென் னூந்தான்செய்துனக்
காடகப்பணியுட னுடைரும்புனைந்தே
உலோகராசனு யுறும்பொருட்டுனக்கே
உலோகதாசனென் றோர்பெயரிட்டுப்
போற்றிவளர்த்துப் புகழ்பெறுமனுநூல்
சாற்றியபடியே சற்குருவிடத்தில்
பஞ்சவயதிற் படிக்கவைத்ததுமுதல்
எஞ்சலில்சீதா னெழிலுடன்கற்று
வருங்கலைதன்னை மாண்புடன்கேட்டிடம்
பெருங்கலைநெகிழப் பெட்புறுநாளில்
ஊழ்வினையாலே யுயர்முனிக்கன்று
வாழ்நகர்நாட்டை வழங்கியாம்வருந்தி
காசியையடைந்து கடனுற்கலையுணர்
தேசிகர்க்காளாய்ச் சிறந்தரிச்சந்திர
அண்ணலையாம்பிரிந் தன்னவரகஞ்சேர்ந்
தெண்ணரிதாம்பல வேலல்களிழைத்தே
இதுவரைநின்முக வெழில்தனைப்பார்த்துக்
குதுகலமிகவுங் கொண்டிருந்ததற்கு
இன்றெவரிழைத்த விருஞ்செயலாலோ
என்றனைநீவிட் டிறந்தனையிங்கே
இனியெனக்காதர வெவரடாவிகத்தில்முக்
கனிரசமொழியுடைக் கட்டிரத்தினமே

## சந்திரவதிகுழந்தையை தூக்கிக்கொண்டு மயானத்திற்குப் போகிறபாகம்.

---

விருத்தம்.

உத்தனுடன் யானுமிறந் திடுவோமென்று
  னுனையெடுத்தின் றெரித்திடக்க வுரியாரில்லை
அத்தனரு மம்மணியுங் கொடியகோபி
  யனுமதிபோல் விடியுமுன்னங் கனுகேறுகில்த்
தொந்தரவு செய்குவதோ ரெம்பவுண்டு
  சொல்லவொண்ணு தத்துயரம் ஆகையாலே
செந்தழல்சூழ் தீயசுடு காடுநோக்கிச்
  செல்லுவோ மெழுந்திரடா ஜெயசிங்கேறே.

மைந்தனே இவ்வனந்தனில்வந்திறந்த யென்றமெட்டு.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ரூபகம்.

பல்லவி.

எழுந்திரடா கண்மணியே
பெந்தன்மீது கருணைசெய்தே (எழு)

அனுபல்லவி.

செழுந்தருக்களடர்ந்து செறியும்வனங்கடந்து
கொழுந்துவிட்டெரியும்வல்ல கொடுந்தீச்சுடலைசெல்லக்
கோபமின்றி மகனே கோபமின்றி துரையே
கோபமின்றி சுதனே கோபமின்றி என்மிசை
கோபமின்றித்தாபமின்றிக்குஞ்சரம்போல்கோகிலம்போல் (எ)

சரணங்கள்.

கொடியமறையோர்பால் கூறிவந்ததுபோல்
விடியுமுன்னவருடைய விடடையவேண்டுமுயர்
விற்பனனே-மகனே விற்பனனே-துரையே
விற்பனனே-சுதனே விற்பனனே-கண்மணி
விற்பனனே-உற்பனனே அற்புதனே-பொற்பதனே (எ)

வெகுநேரமாச்சு விடிந்திடிலோயேச்சு
மிகவும்கொடும்பாவியின்று தகனஞ்செய்துமீளநின்று
மெலிகிறேண்டா-மகனே மெலிகிறேண்டா-துரையே
மெலிகிறேண்டா-சுதனே மெலிகிறேண்டா-கண்மணி
மெலிகிறேண்டாமிளிர்தங்கமே வலியவிளையான்சிங்கமே (எ

வசனம்.

பாலகா யென்மீதுகருணைசெய்து எழுந்திரடா மயானத்திற்குச் செல்வதற்கு ரொம்பவும் நேரமாகின்றது.

சந்திரவதி விருத்தம்.

வடிவுறும்வனத்திற்பாம்பால் மாண்டவென்மகனேயின்று
விடியுமுன்சுடலைக்கேகி மெய்ப்புடனுனையடக்கிப்
படிபுகழ்மறையோராக்ஞைப் படியவர்மனையேசேரக்
கொடியள்யான்றேளிற்சாத்திக் கொண்டுபோகின்றேன்வாராய்.

இராகம்-நாமி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

வாடாகண்மணியே-யெந்தன் மாதவப்பூங்கிளியே-அடா (வா



அநுபல்லவி.

வாடாகண்மணியே மதுரமுக்கனியே
மட்டிலாதயினந்த சுட்டிடுஞ்சுடலைக்கு (வா)

சரணங்கள்.

பேய்கள்கூடுதடா பிசாசுகளாடுதடா
நாய்கள்காடுதே நரிகள்கூடுதே
நானென்னசெய்குவேன் ரத்தினமே-அடா (வா)
கொள்ளிவாய்ப்பூதங்களும் கொடுங்கோரவேதாளங்களும்
துள்ளிவருகுதே சோகையதருதே
சோதனையோமுனி சாதனையோ-அடா (வா)
இந்தவனந்தாண்டி ஜெகதீசுவரனைவேண்டி
உந்தனைத்தூக்கி உற்றவழிநோக்கி
உன்னிடக்கவே உன்னினேனென்னுடன் (வா)
எவ்வளவுதொலை இருக்கின்றதோசுடலை
இவ்வளவுதொலை யென்றறியேனையோ
இனிவிரைவாகவே ஏகுகிறேனடா (வா)

வசனம்.

கண்மணி இன்னுஞ்சுடலை எவ்வளவு தூரமிருக்கின்றதோ தெரியவில்லை வாடா செல்லுவோம்.

எத்தவழியப்பக்கண்டு யென்றமெட்டு.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

எவ்வழியென்றுகண் புலியுனைத்தூக்கிக்கொண்
டேகுவேன் லோகிதனே
என்கரும்பாவியென் றிபம்படைபெடுத்தேன்
இதற்கென்ன செய்குவனே-அயன்
இந்தவிதியுமிட்டானோ-விஷ்ணு இந்தமதியுந்தொட்டானோ-சிவன்
இந்தக்கதியும்விட்டானோ-முனி இந்தச்சதியுங்கட்டானோ(எவ்)
காடுமேடுஞ்செறிந்த நாடுஞ்செந்நாய்களுனைக்
கொணிய பிறக்குதடா
பேடுபோடேனப்பல பொன்னாதயேப்குழாம்
புகன்றெனைத் தொடருதடா-கொடும்
பூதங்களை தட்டுதடா-அது பேசுதென்றறட்டுதடா-மிக
வாதங்களிழைக்குதடா-மின்னும் வாவென்றழைக்குதடா(எவ்)

காகமுடன்பருந்துங் கழுகுஞ்சிறகடித்து
கடுகியே மோதுதடா
ஏகமாகவேவுழி யிட்டுநரிகள்வந்தே
யென்மிசை தாவுதடா-காலில்
ஏர்கற்களைத்துதடா-கொடுங் கூர்முட்கள்குத்துதடா-மரத்
தூர்தட்டிச்சுழுக்குதடா-செடி. வேர்பற்றியிழுக்குதடா(எவ்)
கௌசிகமுனிதந்த காவிவஸ்திரந்தனைக்
காடுதொட் டீர்க்குதடா
மௌலியணிந்த்குரு வசிஷ்டர்க்குசம்மிசை
மாதய வில்லையோடா-இந்த
வனத்தினைக்கடந்தேனே-இந்த வழிதனைத்தொடர்ந்தேனே-பதம்
வலிக்கவுங்நடந்தேனே-தன் வயல்களையடைந்தேனே(எவ்)

வசனம்.

கண்மணி கொடிதாகிய ஆரண்யத்தைத்தாண்டி இந்த நன்செய் நிலங்களையடைந்தேன் இனி சமத்தலம் எவ்விடத்திலிருக்கின்றதெ னப்பார்த்து நடக்கின்றேன்.

பொருவசனம்.

இவ்விதம் சந்திரவதி தனது தனயனைத்தூக்கிக்கொண்டு சுடலை யைநோக்கி நடக்கலானாள் இனி அரிச்சந்திரமஹாராஜன் அச்சுடலை யிலிருந்து வருந்துகின்றவிதம் அறிக.

## அரிச்சந்திரன் சுடலைகாவல்

## புரியும்பாகம்.

தேசாதிதேசமரசுபுரிக் கென்றமெட்டு.

இராகம் - எதுகுலகாம்போதி - தாளம் - அடதாளம்.

கண்ணிகள்.

ஐம்பைத்தைந்து தேசவரசர்வணங்க
வயோத்திமை யாண்டிருந்தேன்-இப்போ
துன்பத்திற்காளாகித் தூயமுனியாலே
சுடலையை யாளவந்தேன்
இறையவனுக்காளாகி யிறைவனைப்போலவே
யெங்கும்புகழ் குழந்தேன்-இப்போ
பறையனுக்காளாகிப் பறையனைப்போலவே
பலிகழுத் தாழ்ந்தேன்



செங்கனகமணிக் கிரீடம்புனைந்துயர்
சிங்காசனத் திருந்தேன் - இப்போ
பங்கரையானதுண் டும்புனைந்திந்தப்
பரண்மீ திருக்கவந்தேன்
அம்பரத்தூணி பணிந்துசெங்கோலினை
அடியேன் பிடித்திருந்தேன் - இப்போ
கம்பளிதன்னைப்பணிந்து வெங்கோலினைக்
கருதிப் பிடிக்கவந்தேன்
கூறற்கரியபீ தாம்பரசாலுவை
குணமுடன் பூண்டிருந்தேன் - இப்போ
பீறற்பலவுறும் காறற்பழந்துணி
பேணியே பூணவந்தேன்
வீரமணியுடை வாளுடன்கச்சையும்
விரும்பி வரித்திருந்தேன் - இப்போ
சாரமில்லாதொரு சல்லடைக்கச்சையும்
தமியன் வரிப்பவந்தேன்

வசனம்.

தேவ பரப்ரம்மஸ்வரூபியே இவ்விதசோகத்தையடைந்து சமகாவல்புரியும் படிபாகவு மென்னைப்படைத்தனையே உனக்கென்ன குறைவுசெய்தேன்.

அரசன் தரு.

சிவமே யென்கதிபதைப்பா யென்றமெட்டு.

இராகம்-முகாரி-தாளம்-சாப்பு.

பல்லவி.

அரனேநின் அருளிதுவோ
அடருமனைக் காடுறைந்திருந்
சுடலைகாவல்செய் திடவுமிழைத்தனையே
ஐயனே-ஈசனே ஐயனே-மழுக்கையனே-இரு (அ)

அநுபல்லவி.

பரனேபரம்பரனே-இரு பதனே பதாம்புயனே
பரண்மீதிருக்கவும் பகற்பொழுதுடனே
இரவில்விழிக்கவும் பரதவிக்கவும்
படைத்தனையே-மெய்யாய் படைத்தனையே
படைத்தனையேபுரா முடைத்தனையே-இரு (அ)

சரணங்கள்.

சவத்தைச்சுந் தகஞ்சுடவும்-புகை
நாவிமெய்யிற் றூன்படவும்
அவற்றின்முடை அடித்திடவும் ஐயோ
அதிலுலகம் அறண்டிடவும்
பவத்தினுருவுற்ற பறையன்போல்நின்றே
அவத்தமறவரி அடியன்வாங்கவும்
பகுத்தையேவினை பகுத்தையே
பகுத்தையே இன்பம் தொகுத்தை-திரு (அ)

வசனம்.

இவ்விதகதிக்கும் ஆளாக்கினையே இதுதர்மமா கருணாகரக்கடவுளே.

சேருமுன்னே சேவல்கூவுதே யென்றமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

கயிலைநாதா வென்கோலத்தைக் கடைக்கண்ணாற்பாராய் (கயி)

அநுபல்லவி,

மயிலனையமாதோடெந்தன் மகனையும்பிரிந்தேனுந்தன்
செயலுமிதோதெரிகிலேன்மைந்தன் தேவர்புகழும் (கயி)

சரணங்கள்.

தேசமெல்லாமோர்குடைக்கீழ் செங்கோல்செய்திந்நகர்வாழ்
நீசனுககாளாகினேனிந்நாள் நெறியோவிது (கயி)

பாடைக்கம்புகளினாலே பாணியற்றியிதின்மேலே
நாடிநான்காவல்புரிகின்றேன் ஞாயமோ விது (கயி)

வாய்க்கரிசியின்சோறுண்டு வயிற்றைவளர்த்துக்கொண்டு
பேய்க்கணத்துடனிருந்திங்கே பிழைக்கலானேன் (கயி)

என்னுளித்துன்பந்தீரும் என்னிருதயங்களிகூரும்
முன்னுளிழைத்தபாவமோ முனிதிரமோ (கயி)

வசனம்.

கடவுளே இவ்விதமின்னும் எத்தனைநாளுக் கேமகாவல் புரிந்திருப்பது ஐயோ இச்சண்டாளன்மீது கருணையில்லையோ.

கார்க்கேதுன் றாய்முகே யென்றமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

இதுவுமுனதருளோ இறைவனே விஸ்வேசனே
எனைப்போல்நூபம்புனைக் திச்சுடலையாளவினை
இழுத்தையே-இழுத்தையே இழுத்தையே-இழுத்தையே (இ)



தேசதேசராஜர்வந்தே சேவைசெய்வதுந்தவிர்ந்தே
கோசமுடன்பேய்கள்வந்தே கூக்குரற்சத்தந்தந்தே
கூடுதே-கூடுதே கூடுதே-கூடுதே (இ)

அருள்நகரத்திலிருந் தனுதினமிங்கேவரும்
அருஞ்சவத்தைச்சுடவும் அனற்புகையென்மேற்படவும்
அமைத்தயே-அமைத்தையே அமைத்தயே-அமைத்தயே (இ)

வறுமையுற்றவர்க்குண்டி வழங்கியதும்போயிங்கண்டி
வயிறுவளர்ப்பதற்கே வாய்க்கரிசிவாங்கும்படி
வகுத்தையே-வகுத்தையே வகுத்தையே-வகுத்தையே (இ)

சோடசதானஞ்செய்த துய்யமலர்க்கையாலேயோ
வாடரியகாற்பணமும் வழுத்துமுழத்துண்டும்வாங்க
வகுத்தையே-வகுத்தையே வகுத்தையே-வகுத்தையே (இ)

வசனம்.

அன்னைபங்காளனே இவ்வித கேவலத் தொழிலைச்செய்து வாய்க்கரிசியின்சோறுண்டு காலங்கழிக்கும்படி செய்தனையே ஆதியிலுனக் கியாது குறைவுசெய்தேன் அண்ணலே.

இன்னமுநின்மனமிரங்கா வென்றமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

ஏழையின்மேற்கருணைகொள்ளா தென்னமாயமோ
என்னகுறைமுன்னிழைத்தேதா விதுவும்ஞாயமோ
வாழைக்குக்கீழ்க்கன்றுண்டாக்கி வைத்ததுபோலே
வளரவைத்தாயெனதுசெல்வ மகிதலமேலே
பாவலனுமெனையிருத்திப் புகழ்ந்ததும்நீயே
புலையனுக்கடிமையாகப் புகப்புரிந்தாயே
இரவுபகலுனைக்கெதியென் றிருந்தவென்னையே
சுமகாவல்புரியும்படி யிழைத்தாயென்னையே
அம்புவியிலடியன்பாவி யாகினும்நீதா
னடியவரோடென்புடன்சேர்த் தாளலாகாதா
நம்புமெனக்கிந்தவினை நாடலாகுமோ
நாடினுமெனையதுவும்விட் டென்னுளிலேகுமோ
வருந்துமென்முன்வந்துதேர்ச்சி வழுத்தமாட்டாயோ
வழுத்திமெய்க்கன்பைத்தைக்கி மகிழ்ச்சியூட்டாயோ

275



பெருந்தவபுரிந்தெனையும் — பிரதானியுமே
பெண்டுடனென்பிள்ளையையும் — பேணியாளுமே

வசனம்.

கடவுளே இவ்விதம் வருந்துகின்ற எளியேன்மீது இன்னும் கருணையில்லையோ ஐயோ இனியாது செய்குவேன்.

கானமயில்நீ தேறிவா வென்றமெட்டு.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஈசா இதுதர்மமோ — விஸ்வேசாஎன்மேல்வர்மமோ
பாசாங்குசதரனைப் — பரிவுடன்பெற்றஜெக (ஈசா)

ராசாங்கமானதும்போய் எனை — நீசாங்கமாகவைத்தாய்
தாசாங்கமானசிவ — சம்போசங்கரஜெக (ஈசா)

நாட்டையன்றாண்டதும்போய் சுடு — காட்டையின்றாளவைத்தாய்
கேட்டையகற்றுமுயர் — கெங்காதரனேஜெக (ஈசா)

அரண்மீதிருந்ததும்போய் இந்தப் — பரண்மீதிருக்கவைத்தாய்
தரணிபுகழுஞ்சந்த்ர — ஜடாதரனேஜெக (ஈசா)

தேர்வேந்தர்சூழ்ந்ததும்போய் வெய்ய — வார்பேய்கள்சூழவைத்தாய்
மார்பில்மணியரவை — மாலையாயணிந்தஜெக (ஈசா)

மணிக்கிரீடம்பூண்டதும்போய் இந்தத் — துணிக்கிரீடம்பூணவைத்தாய்
பிணிக்கரியமருந்தே — பிரமவடிவேஜெக (ஈசா)

அம்பரத்துணியும்போய் கருங் — கம்பளிதாங்கவைத்தாய்
உம்பர்வணங்குமதி — யுக்தமசற்குணஜெக (ஈசா)

செங்கோல்பிடித்ததும்போய் இந்த — வெங்கோல்பிடிக்கவைத்தாய்
அங்கோடணிந்தமத — வானையையுரித்தஜெக (ஈசா)

சங்கீதங்கேட்டதும்போய் பேய்கள் — வெங்கீதங்கேட்கவைத்தாய்
இங்கிதங்கொண்டுமைபோ — டிருந்தவரும்ஜெக (ஈசா)

நற்றாமமுகர்ந்ததும்போய் பிணத் — துற்றாமமுகரவைத்தாய்
சற்றானுமேதாகருணை — தயவினுக்காகஜெக (ஈசா)

பவத்தைச்சுடுவதும்போய் வரும் — சவத்தைச்சுடவும்வைத்தாய்
தவத்தோர்புகழும்ஞான — தற்பரசிற்பரஜெக (ஈசா)



வசனம்.

ஐயோ ஜகதீசனே இங்கிருந்திவ்வாறு பரிதாபப்படுகின்ற வெளியேன்மீது நின்னுங்கருணையிரங்கவில்லையோ ஆதியிலென்னபாவஞ் செய்தேனோசிவமே.

மந்திரி வசனம்.

பிரபு பூர்வீகவினை வசத்திற்கிவ்வாறு தாமழுது பிரலாபிப்பதில் பிரயோசனம் யாதுளது சித்தத்தைத் திடப்படுத்திக்கொள்ளுங்கள்.

ஆதிசிவசங்கரனே யென்றமெட்டு.

இராகம்-நீலாம்புரி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

இக்கிளைசிதார்செயவோ — விச்சுடலைகாக்கலானேன்
பகவனிருபதம்பணிந்த — பலனிதுவோமதியே

மந்திரி சொல்.

பகவனுமேபண்டொருநாள் — பார்வதியுடனேசேர்ந்து
தகவுறநர்த்தனஞ்செய்த — சாலையீதாந்துரையே

அரசன் சொல்.

விறகடுக்கிப்பிணத்தைவைத்தே — வெந்தழல்மூட்டியதன்பின்
உறவினர்துற்றாற்றமதி — அழுவதேன்மதியே

மந்திரி சொல்.

இந்தமணங்கொண்டதற்கிங் — கெங்கரூனும்ருத்திரனார்
சொந்தமுடன்வாழ்ந்திருப்பார் — சோர்விலையென்துரையே

அரசன் சொல்.

கரத்திற்பிணந்தடுகோலேந்திக் — காவலிதையான்புரியத்
திருத்துடனேயாதுகர்மஞ் — செய்தேனோதான்மதியே

மந்திரி சொல்.

இருநிலத்தோர்புரிவதான — வின்பதுன்பமன்பருளைத்
தருமனதிந்திதமே தி — சார்ந்திடுங்கோல்துரையே

அரசன் சொல்.

இப்பவினமிதமர்ந்தே — யானிதயம்நைந்துருக
இப்பதியிலேதுசதி — யிழைத்தனோவென்மதியே

மந்திரி சொல்.

எட்டுமதத்தையொடுக்கி — யென்றகத்தையடக்கி
மெட்டிடனேசாம்பவனார் — மேவுகிலைதுரையே

அரசன் சொல்.

பூதப்பேதபைசாசங்கள் போடுமொலிகாதிற்கேட்கப்
பாதகமும்பழியுமெனன பண்ணினேனோமதியே

மந்திரி சொல்.

காளியைப்போலம்பிகையுங் கன்யமுடன்வடிவெடுத்த
நாளிலவள்சொற்கேட்டிட நாடுகெணந்துரையே

அரசன் சொல்.

என்னையிற்றட்டிதொட்டே பித்துணியைமெய்யிலிட்டே
புன்புலையன்போலிருக்கப் புகல்விதிபோமதியே

மந்திரி சொல்.

கர்த்தன்புலித்தட்டிதொட்டுக் கரித்தோலைமெய்யிலிட்டே
நர்த்தனம்புரிந்ததான ரந்திரமாந்துரையே

அரசன் சொல்.

தூய்யமலர்க்கையால்சிதறு சுடுகூலிவாங்கவும்யான்
வையகத்திலென்னபிழை செய்தனனோமதியே

மந்திரி சொல்.

முதல்வனிட்டவாக்கினையின் முறைவழுவிச்செய்ததான
அதருமத்தின்பகுதியிதென் றறியுமென்றன்துரையே

அரசன் சொல்.

தவமுயருந்தேவியுடன் றாபனைப்பிறிந்திருக்கச்
சிவனடியாரிடையவென்ன தீங்குசெய்தேன்மதியே

மந்திரி சொல்.

முத்திதருஞ்சத்தியமே நித்தியமெனக்கினைத்தே
பத்தியுடனிங்குவந்தீர் பார்புகழ்சூழ்துரையே

அரசன் சொல்.

சூழுமன்பராசையுடன் சுற்றத்தார்நேசமெங்கே
வாழும்பந்துவர்க்கமிங்கே வாராததேன்மதியே

மந்திரி சொல்.

துள்ளுமீனுக்காசைவைத்தே சூழ்ந்தகொக்குநீவாங்கில்
உள்ளுவந்தேவெறிடப்போ யுலவுமியல்துரையே

அரசன் சொல்.

அமைச்சர்களிலேயொருவன் ஆகந்தளர்ந்தேகாமலே
எமைச்சதமென்றிருப்பதான வின்பமென்னோமதியே



மந்திரி சொல்.

உயர்நனினமந்திரி னுற்றே யுலர்ந்திடினுமுலர்ந்துதிக்கும்
துயர்களைந்தேமெய்மைதனைச் சொல்வோன்முறைதுரையே

அரசன் சொல்.

இப்பொழுதுனுக்கம்வரு கின்றதெந்தன்காவலினை
ஒப்பொடுபுரியவரார் உரைத்தருள்வீர்மதியே

மந்திரி சொல்.

அடியவனிக்காவல்தனை யன்புடனேசெய்வேனிந்தக்
கொடியபரண்மீதுநித்திரை கொள்ளுமெந்தன்துரையே

வசனம்.

பிரபூ நாம்புரியும் காவலை யான்புரிகின்றேன் தயவுசெய்து இப் பரண்மீது நித்திரைசெய்யும்.

(அ-ன்-வ-ம்.) நல்லது மந்த்ரீ.

பொது வசனம்.

இந்தவிதம் அரசன்பரண்மீது நித்திரைசெய்து ஓர் கனவுகண்டு டனேயெழுந்து மந்திரியிடஞ்சொல்லும்விதம் அறிவீர்கள்சபையோர்களே.

அரசன் கனவின் அதிசயம் உரைப்பது அகவல்.

இராகம்-நன்யாசி-அல்லது-ஆரபி.

அமைச்சனேகேளா யருங்கானிபாலே
சமைத்தவிப்பரண்மேற் றமியனுஞ்சற்றே
பொற்புடைநித்திரை புரியுமப்பொழுதோர்
சொற்பனங்கண்டேன் சொல்லுவேனதனைப்
பாங்குடன்செவிப்ப பலன்றனைத்தெரிந்தே
யீங்குரைசெய்வா யெமக்குநீதாமே
பெரியவோர்பூதம் பிதிகொண்டோடுமெத்
திசையுநற்றிறுன்று திகழ்ந்திடாதோட்டிநீ
அந்தெருமமையிபெறு வன்புடனுரைத்தே
புதுமையாய்நர்த்தனம் புரிந்திடக்கண்டேன்
ஒப்பற்றுமெய்ப்புத மொன்றெருகினை
யோதிமென்றனைத் திருக்கவுங்கண்டேன்
அரவுருவாக வார்த்தொருபூதம்
விரவிடமகனில் மீதுறக்கண்டேன்
கைகாலில்லாக் கரியவோர்பூதம்
எய்திமேலாய் சென்றிடக்கண்டேன்

கொள்ளிவாய்ப்பசாசுங் கூடவோர்பிடாரியும்
புள்ளியாட்டின்மேற் பொருந்தவுங்கண்டேன்
திருடனைப்போலச் சிறந்தொருபூதம்
எருமைக்கடாமீ திருக்கவுங்கண்டேன்
ஐந்துதலையுட னரியவோர்பூதம்
உய்ந்துபுன்சிரிப்புற் றுலவவுங்கண்டேன்
சங்குடன்சக்கரந் தடக்கையிற்கொண்டோர்
மங்குல்நேர்பூதம் மகிழ்ந்திடக்கண்டேன்
நான்குதலையுட னடியோர்பூதந்
தான்குதூகலமாய்த் தவ்வவுங்கண்டேன்
மெச்சியோரானை மீதொருபூதம்
வச்சிராயுதத்துடன் வந்திடக்கண்டேன்
இன்னுமநேக விகற்பெரும்பூதம்
உன்னுமகோர வுருவத்துடனே
எய்திடக்கண்டே யென்வாய்குளறி
மெய்மறந்தேங்கி மீண்டுளந்தேறி
ஓடிந்திடாவெள்ளி யுதித்திடப்பொழுது
விடிந்ததென்றெண்ணி வெருண்டெழுந்துடனே
அருட்பெருஞ்செங்கோ லங்கையிற்றரித்தே
விருப்புடன்றேச விசாரணைசெய்யவுங்
கண்டேனிதென் காலமோவறியேன்
விண்டேநீரிதை விளம்புவீரின்றே.

வசனம்.

மந்திரீ இவ்விதமாகக் கனவுகண்டேன் இதன்பலனை ஆலோசி த்தியம்பும்.

மந்திரி வசனம்.

உத்திரவுப்படி சொல்லுகின்றேன் கேளும் அரசே அதாவது மனப்பீதிகொண்டு பதுங்கியொடுங்கிய பெரியபூதமானது இதுவரை நமக்கநேக வினைவிளைத்ததான விஸ்வாமித்திர முனிவராகும் அரசே.

இன்னும் தம்மைப்பார்த்து அடாதோட்டி நீ ஜெயத்தைப்பிறக் கடவாயெனச்செப்பி நடனம்புரிந்த மற்றொருபூதமானது தமதுகுல குருவாகிய வசிஷ்டமகாரிஷியாகும்.

மற்றும் ஓர் பெண்பூதமானது ஓர் குழந்தையைத் தோளின்மீ தேந்தி அக்குழந்தையைத் தமது முன்பாகவைத்து நிற்கக்கண்டதா னது தமதுபத்தினியும் பாலகனுமாம்.

மீண்டும் ஓர் சிசுவின்மீதுறைந்ததான பூதம் சுப்பிரமணியக்கட வுளாகும்.



பின்னும் தம்மைநோக்கி நீ மேன்மையையடையக் கடவாயெ னக்கூறிய கைகாலில்லாப்பூதமானது நவக்கிரகத்திலொருவராகிய சனீஸ்வரபகவானாகும்.

அன்றியும் ஓர் ஆட்டின்மீதேறிவந்த கொள்ளிவாய்ப்பசாசும் அதனுடன்வந்த பிடாரியும் அக்கினிதேவனும் சுவாலாதேவியுமாம்.

மற்றும் திருடனைப்போல எருமைக்கடாவின்மீதேறிவந்தவோர் பூதமானது எமதருமராஜனாகும்.

அப்பால் ஐந்துதலையுடனே ஆனந்தமுற்றுநடிப்ப பூதமானது சா க்ஷாத் சிவபெருமானாகும்.

பின்னர் சங்குசக்கரத்தைத் தடக்கையிற்கொண்டுவந் தாடியபூத மானது ஆதிமகாவிஷ்ணுவாகும்.

மீண்டும் நான்கு தலையுடன் நாடியபூதமானது பிரமதேவனாகும்.

ஓரியானையின்மீதேறி கையில் வச்சிராயுதத்தைத்தாங்கி வந்த பூதமானது தேவேந்திரமகாராஜனாகும்.

இன்னும் அநேக அகோரரூபத்துடன் தோன்றிய பூதங்களா னவை முப்பத்துமுக்கோடி தேவகணங்கள் முதலாயுள்ள மற்றகணங்களாகும்.

நாம் அவைகளைக்கண்டு பயந்து வாய்விட்டேங்கியதானது பின் னால் அவர்களைக்கண்டு ஸ்தோத்திரஞ்செய்து ஆனந்தமுறலாகும்.

மீண்டுமிப்பால் வெள்ளியுதித்ததைக்கண்டது சுக்கிரபக வானையாம்.

அன்றியும் பொழுதுவிடிந்ததைக்கண்டு செங்கோலைத்தரி த்துத் தேசவிசாரணை புரிந்ததாகக்கண்டதுயாதெனில் இதுகாறும்பரிய ந்தம் அல்லலடைந்ததான வினையெனுமிருளொழிந்து சுகமெனும் பொழுதானது விடிந்து மேற்கூறிய தேவாதிகணங்களைப் பிரத்திய க்ஷமாகப்பார்த்துவணங்கி அவரது வருளின்படி அக்கௌசிகனைவெ ன்று அயோத்திக்குச்சென்று பட்டாபிஷேகஞ்சூட்டி எப்போதும் போல் இராச்சியபரிபாலனஞ்செய்யக்கிடைக்கும் அதானது மெய்யாயும் சித்தித்திருக்கின்றது அரசே.

அரசன் வசனம்.

மந்திரி இதென்ன விபரீதமாக விருக்கின்றது.

மந்திரி வசனம்.

பிரபு இதனை அறிந்துபார்க்கலாம் கவலையுறாதீர்.

(அ-ன்-வ-ம்.) நல்லது மந்திரீ.

பொது வசனம்.

இவ்விதம் அரசன் தமது மந்திரியுடனிருந்த விமத்தலத்தை நாடி சந்திரவதி தன்குழந்தையைத் தூக்கிக்கொண்டு நடக்கின்றவிதம் அறிவீர்கள் கனவான்களே.

சந்திரவதி விருத்தம்.

அத்திருவனத்திற்குள்ளே யவஸ்தையுற்றதைக்கடந்தே
இத்திருவிடத்திலேவந் தெய்தினேனினிமயானம்
எத்திசைதனிலிருக்கு கின்றதோவறியேன்பாலா
அத்திசைதனிலேயேதோ வக்கினிசொலிக்குதையோ.

இராகம்-ஆரபி-தாளம்-ஆதி.

பல்லவி.

அதுதானோ மகனே
அடர்பிணபுடமெரி சுடலையினிடமென்ப (அது)

அநுபல்லவி.

சதுர்முகன்றனைநொந்தே சற்குருவைநினைந்தே
தீவியேநடக்கின்றேன் தடத்தினைக்கடக்கின்றேன் (அ)

சரணங்கள்.

இடிக்குதிகோரகவே படீர்ப்படீரென்னவே
வெடிக்குதேவதையாதோ விண்முனிசெய்குதோ (அ)

துற்புகைவீசுதே துர்நாற்றம்வீசுதே
துர்பிசாசாடுதே துர்சத்தம்போடுதே (அ)

நீண்டகொழுந்துவிட்டு நெருப்பெரியுதேயதில்
மூண்டநிணங்கருகி புடைகிளம்புதேஐயோ (அ)

இதுதானோமகனே இரும்பிணமெரிந்திடு
மருஞ்சுட லையென்பதாம் (இ)

வசனம்.

பாலகா இதுசுடலையென்பதற்கையமில்லை நன்றாகப் பார்த்துக் கொண்டேன் இனி நானுரைப்பதைக் கேளடா உலோகித நாமனே ஐயோ.





## சந்திரவதிதன்மகனுக்குக்

## கொள்ளிவைக்கிறபாகம்.

விருத்தம்.

சுடரிரவிகுலமணியே சொல்லக்கேளாய்
கருதிமறையோனிடம்யான் வருதிபெற்றவ்
வடவியடைந் தங்குனையே தேடித்தேடி
அரன்செயலாற் கண்டெடுத்துத் தோளிற்சாத்தி
இடர்பலவா யடைந்துநடந் திங்குவந்தேன்
இனியுனைநான் றகனிக்க வேண்டுமென்றே
திடமுடனே யதற்குரிய சாமான்தேடச்
செல்லுகின்றேன் வரும்வரையிங் கிருப்பாய்தானே.

வசனம்.

கண்மணி கடவுள்செயலால் கானகத்திலுன்னைக்கண்டு தோளி ற்றூக்கிக்கொண்டு அதைக்கடந்து நடந்து இச்சுடலைக்குவந்துசேர்ந் தேன் இனி உனைத் தகனஞ்செய்வதற்கு வேண்டிய சாமான்களைத் தேடியெடுத்துக்கொண்டு வரும்வரையில் இவ்விடத்திலிருப்பாயடா என்செல்வனே.

கவிராதா இதுவன்னருளோ வென்றுவிட்டு.

இராகம்-ஸ்ரீராகம்-தாளம்-ஆதி

கண்ணிகள்.

எந்தன் மைந்தனைக் காரும் சிவமே
சுமந்திவிலனைச் சாமத்திலேசுட
சாமக்கிரிகைதேட நேமத்துடன்செல்கிறேன் (எந்)

வசனம்.

கடவுளை படவாவால்மாண்ட லோமதுபாலனைத் தகனஞ்செய்யு ம்பொருட்டு சாமான்தேடக்கொண்டு வருவதற்காக இங்கேயனைவுனது காவலில்வைத்துச்செல்கின்றேன் யான்வரும்வரைபாதுகாத்துக்கொ ள்ளவேண்டும்.

கொள்ளிக்கடமைக் கெடுக்கின்றேன்
கொத்துகொந்தாகவே கந்துகத்தினை
முத்துடக்கன்பிளை வொத்துகரித்தருமாச் (கொள்)

வசனம்.

பாலகா முன்னமே வெந்துகரிந்த குறைக் கொள்ளிக் கட்டைக ளை யெடுத்துக் கொண்டேன்.

விருட்டிபொருக்க விட்டாய்விதியே
வெந்தும்வேகாமலும் நைந்தும்நையாமலும்
இந்தவிடங்களிலே சிந்தியேகிடக்கும்(விரு)

(வ-ம்.)கண்மணி விருட்டி பொருக்கிக் கொண்டேன்.

சுப்பிகுவிக்க வைத்தாய்சுதனே
சூழ்ந்ததருவினின்று வீழ்ந்துபலர்மிதிக்கத்
தாழ்ந்துநாண்புழுதிக்கு ளாழ்ந்துகிடக்குமிந்தச்(சுப்)

(வ-ம்.)அடா கண்மணி சுப்பிகள் பொருக்கிக்கொண்டேன்.

மகனேவுனைத் தகனஞ்செய்ய
வாடியேயிங்குனைவைத் தோடியேசாமக்கிரிகை
தேடியேகைக்கொண்டுனை நாடியேயிங்குவந்தேன்(மக)

வசனம்.

உலோகிதா உன்னைத் தகனஞ்செய்வதற்கான சாமக்கிரிகைகொண்டுவந்தேன் பாரடா அப்பா.

இங்கேபுட மமைக்குகின்றேன்
எரிந்தகட்டைகளாலும் கரிந்தமுட்டைகளாலும்
முரிந்தசுப்பிகளாலும் தெரிந்தமட்டுஞ்செல்வனே (இ)

வசனம்.

அடா அருமைச்செல்வனே உனைத்தகனிப்பதற்கு இங்கு கட்டைமுட்டை சுப்பிகளால் தெரிந்தமட்டும் ஓர்புடம் அமைக்குகின்றேன் புத்திரனே.

புடத்திற்படுக்க வாடாமகனே
பூதலமிசையுள மாதர்களெனையரும்
பாதகியெனவசை யோதவுடலெடுத்தேன்(புட)

(வ-ம்.) புத்திரசிகாமணி இப்புடத்திற் படுக்கவாடா.

கட்டையில் வைத்தேனடாகண்மணி
காசுக்குக்கதியின்றித் கல்லையெடுத்துவைத்தேன்
மாசற்றவரிசிக்காய் மணல்தனைக்கொல்லுறேன்(கட்)



வசனம்.

கண்மணி இக்கட்டைமீதுன்னைவைத்து கொள்ளிக்காசுக்கு யாதொரு கெதியின்றி இங்குகிடக்கும் கல்லையெடுத்து வைத்தேன் இதனோடும் வாய்க்கரிசிக்கும் யாதொரு வகையில்லாது மணலைக்கெல்லி நின்வாய்க்கிட்டேண்டா.

மீதவிருட்டி யடுக்கின்றேன்
வெய்யவன்குலதுங்க வையனேயெனதிரு
கையினலள்ளியுன் மெய்யின்மிசையெளியன்(மீத)

வசனம்.

அடா சூரியகுலசிகாமணி இங்குகிடந்த மீதவிருட்டிகளையும் அள்ளியுன்மீ தடுக்கினேண்டா.

விருத்தம்.

சத்தியந்தருமங்கற்பு சற்குருவாக்யந்தெய்வ
பத்தியிவ்வைந்துமுற்ற பதிவிரதைநானேயானல்
இத்தினமரவால்மாண்ட வென்மகன் றனக்குக்கொள்ளி
லவைத்திடமன்னனிங்கே வந்திடச்செய்வாய்தேவே.

வசனம்.

கைலாசபதியே நீ இவ்மாதபதிவிரதை நானாகில் இச்சமயம் அரவாலிறந்த ஆசைக்குமாரனுக்குக் கொள்ளிவைக்க எனது நாயகனிங்குவரும்படி செய்வாய் ஐயனே.

இப்போவருவீர் மணவாளா
இந்தவிடந்தனிலென் மைந்தனைச்சுடுவதற்
கெந்தவிடந்தனிலி ருந்தபோதினுமென்முன் (இ)

வசனம்.

ஆ எனது பிராணரக்ஷகா இச்சமயம் இவ்விடத்தில் உமது புத்திரனைத் தகனஞ்செய்யும்பொருட்டு தாம் எவ்விடத்தி லிருந்தபோதினும் என்முன்வரவேண்டும்.

திகட்டுகின்றே னடாமகனே
திட்டமுடன்புடத்தைத் தொட்டெரித்திடுங்கொள்ளிக்
கட்டையெடுத்துவந்து முட்டைகளிலேவைத்துத் (தி)

வசனம்.

பாலகா வேறுபுடங்களி லெரிவதான கொள்ளிக்கட்டையையெடுத்துவந்து இந்த முட்டைகளில் வைக்கை யுதிர்த்து நெருப்புக்கூட்டுகின்றேன் அப்பா.

விருத்தம்.

எனக்குநீசுற்றத்தார்க ளியாவருஞ்சூழ்ந்திலங்க
மனக்குறையின் றிக்கொள்ளி வைத்திடாதையோவிக்நாள்
உனக்குநான்பேய்கள்சூழ வொண்டியாய்வருந்தியிங்கே
சினக்குமிக்கொள்ளிவைக்கச் செய்தையேநெறியோபாலா.

கள்ளிபோற்கொள்ளி வைத்தேன்பாலா
கஞ்சமலர்வதன ரஞ்சிதமேயிளங்
குஞ்சரமேயுனது நெஞ்சின்மிசையிவ்வேளை (கள்)

வசனம்.

கண்மணீ ஈவதிரக்கமில்லாத கொலைக்காரக்கள்ளியைப்போலத் துணிந்து என்னிருகரத்தால் உனக்குக் கொள்ளிவைக்கலானேனடா குமாரனே.

கனலெரியுதே அடாமகனே
கட்டைகளுடனொரு முட்டைகளையும்பற்றி
மட்டுப்படாக்கொழுந்து விட்டெத்திடமுடனே (கன)

வசனம்.

கண்மணீ இக்கொடியபாதகத்திற் கென்செய்வேன்.

ஐயோமகனே பாம்பு யென்றமெட்டு.

இராகம்-சாமா-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

அப்பாமகனே இன்று ஆசைமகனே இன்று
அனலிலெரியலாணேயோ மகனே-மகனே இன்று-அனலி (அப்)

தப்பிதமென்செய்தேன் சதிகளுமென்செய்தேன்
ஒப்பிநீசற்பத்தா ஓயரடவியிலிறந்தே
மகனே-மகனே இன்று அனலிலெரியலாணேயோ-மகனே (அப்)

கும்பிகொதிக்குதடா குலைகளோபத்துதடா
நம்பியிருந்ததற்கு நட்டாற்றிலென்னைவிட்டே
மகனே-மகனே இன்று அனலிலெரியலாணேயோ-மகனே (அப்)

வேந்தில்லாநாடானேன் விளக்கில்லாவீடானேன்
வந்திழையாளுனை யெக்காலங்காண்பேனடா
மகனே-மகனே இன்று அனலிலெரியலாணேயோ-மகனே (அப்)

தருவில்லாவனமானேன் ஜலமில்லாக்கிணறுமானேன்
மருவில்லாமலரானேன் மாபாதகியுமானேன்
மகனே-மகனே இன்று அனலிலெரியலாணேயோ-மகனே (அப்)



வசனம்.

கண்மணீ இனிமேலுன்னை யெக்காலத்திற் காணப்போகின்றேன் ஐயோ உனக்கு மிவ்விதியோ விதித்தான் பிரமன் இனி யென்செய்வேன்.

பொது வசனம்.

இவ்விதம் சந்திரவதி வருந்திய முறையைக்கேட்டு அரசன் யாரோ இருளில் தெரியாது திருட்டுத்தனமாகச் சவத்தைவைத்துத் தகனஞ்செய்கிறப்போதுந் தோன்றுகின்றதெனப் பார்த்துத் தமது மந்திரியிடம் சொல்லும்விதம் அறிவீர்கள் சபையோர்களே.

அரசன் வசனம்.

மந்திரீ இங்குயாரோ ஒருவள்வந்து திருட்டுத்தனமாகச் சவத்தைத் தகனிப்பதாகத் தெரிகின்றதுபோய்ப் பார்த்துவருகின்றேன் அதுவரை நீரிங்கிரும்

(ம-ரி-வ-ம்,) உத்தரவுபோலரசே.

## அரசனுக்கும் சந்திரவதிக்கும்

### தர்க்கபாகம்.

அரசன் விருத்தம்.

அடாதவிந்த விரவுதனி லச்சமின்றி
யரக்கியைப்போ லிங்கனுகி யாவரேனும்
தொடாதகட்டை முட்டைகளைத் தொட்டெடுத்துத்
துரிதமுட னேயடுக்கிச் சுடுந்தரத்தைக்
கொடாதபடி யிதிற்சவத்தை வைத்தேதீயைக்
கொளுத்தியைப்போ வையோசோ மகனேயென்ன
விடாதழுதிங் காற்றுமிந்த ஜாலியேயென்
விடையின்றி நீயுமிங்கே மேவலாமோ.

எவரம்மா இங்குவந்தீர் யென்றமெட்டு.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-அடதாளம்.

பல்லவி.

எவளம இங்குவந்தநீ (எவள)

அநுபல்லவி.

சவத்தைப்புடத்திற்காட்டித் தழலையெடுத்துமூட்டிக்
கத்தியேமிக-கத்தியே அடா புத்திராவெனக்-கத்தியநீ (எவ)

சரணங்கள்.

இந்திரஜாலக்கள்ளிச்சியோதீய இகொட்டிற்றிரியும்வேடிச்சியோ
தந்திரகாளியோ தாவிடுங்கூளியோ
சண்டியேஅடி-லண்டியேதிண்டு மிண்டியேஇங்-கண்டியநீ (எவ)
மந்திரமாயமோகினியோபெரு வல்லசாகினிடாகினியோ
கெந்திருவஸ்திரீயோ அரத்தமுலப்பேயோ
கெடுகாலியே-கெடுநீலியே படுமூளியே-கொடுசூலியே (எவ)

(வ-ம்.) அடியேநீ யாவளடி- இன்னும் வாய்திறவாமலிருக்கின்றனே.

அதர அதரமதுரமதுர வென்றமெட்டு.

இராகம்-நமாசு-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

ஆரடிநீ யாரடியென்
றடிக்கடிநானுன்னையே அதட்டிக்கேட்டுமென்னையே
மதித்திடாமற்பின்னையே பதிற்சங்கதிதன்னையே
அறைந்திடாதொதுங்குகின்றனை மறைந்துநீபதுங்குகின்றனை
உறைந்திங்கேயொடுங்குகின்றனையே உத்தமமோஇத்தநிநீதான்
கள்ளிபோல வெள்ளியவிரு
கண்ணையுருட்டிவிழிக்கின்றாய் கருவமுறிநெளிக்கிறாய்
மருமமுமேறிச்சுழிக்கிறாய் வெருவியேதத்தளிக்கிறாய்
கஷ்டமோகலத்தைப்பார்க்கிறாய் கடுங்கனற்படத்தைநோக்கிறாய்
கண்ணில்நீர்கனத்துருக்கிறாய் காளியோகந்தர்வியோசொலாய்
உற்றதையெ டுத்துரையா
தூமையோவிருக்கிறாய் உறத்துடனேநிற்கிறாய்
புறத்திலோடிநடிக்கிறாய் குறத்திபோலவடக்கிறாய்
உரைத்திடாவிடிலிங்கினியே கரத்தின்வாளாலேயுன்றனையே
சிரச்சேதஞ்செய்வேனிவ்வேளையே சீக்ரமென்னைத்திரும்பிப்பாரடி

வசனம்.

அடியே லண்டி என்முகத்தைப்பார்த்து உண்மையைச் சொல்லாவிடில் என்கைக்கட்கத்தாலுன்னைச் சிரச்சேதஞ் செய்குவேன் மூர்க்கையே.

சந்திரவதி தரு.

விதியோ ஜெகதீசா வென்றமெட்டு.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

இதுவுந்தலைவிதியோ யென்கண்மணியே (இ)



அநுபல்லவி.

உத்திலவனையுமிந்த வுலகிறுனையிழந்தும் (இ)

சரணங்கள்.

சாமவேளையிலுனைத் தகனஞ்செய்யக்கண்டேனே
சமகாவலன்வந்தே பேசுகின்றனென்செய்வேன் (இ)
சனனுகவிருந்தும் இதயத்துட்கொஞ்சமேனும்
தீனதயாளமின்றி திட்டுகின்றனே-ஐயோ (இ)
என்னபாவஞ்செய்தேனோ இறைவனைவைதேனோ
இன்னவல்வரன்முறை யின்றியேபேசுகின்றான் (இ)

வசனம்.

கண்மணி இக்காலம் யானுன்னையிழந்தும் உன்னைத்தகனஞ்செய்யவேண்டுமென்றெண்ணி யிக்குவர்து கட்டையிலேற்றிக் கனல்மூட்டிவருந்துஞ்சமயம் யாரோ ஊர்புலையன் என்னெதிர்த்து மரியாதையில்லாத பேச்சுகள்பேசிப்பலவாறாக ஏசுகின்றனே இதுவும் நூர்விகவிதியின் பலாபலனோவறிகிலேன் அப்பா இதுயாவர் செய்த மாயமோ.

அரசன் விருத்தம்.

ஆரடிபெண்ணேக்கேட்டு மதற்கொன்றும்பதிற்சொலாமற்
காரடவிருளிற்சோரக் கள்ளிபோலிங்கேநின்று
கோரமாய்மகனைநோக்கிக் கோவெனவலறுகின்றாய்
சாரமாயினியுண்மை சாற்றிடேற்றுக்குவேனே.

வசனம்.

அடியே மூர்க்கி இனி உண்மையை யுரையாவிடில் இக்கொவாளினைப் பிரகிப்பேன் திரும்பிப்பார்த்துப் பேசடி கள்ளி.

சந்திரவதி விருத்தம்.

இந்திரசித்திரஜாலககள்ளியல்ல
இருளைத்திற்றிரியும்வேடிச்சியல்ல
கந்திருவஸ்திரியல்லபூதமல்ல
காளியல்லகூளியல்லப்பேயுமல்ல
மந்திரடாகினியுடன்சாகினியுமல்ல
மாயமோகினியல்லலண்டியல்ல
இந்தவுலகத்திலுள்ளபெண்களுக்குள்
யானொருபெண்கிப்தியராஜகாவலோனா.

வசனம்.

காவலா இவ்வுலகின்கண்ணுள்ள பெண்களுள் யாதொருபெண் ஈதுண்மை வேறுவிதமா யென்னவேண்டாம்.

## அரசனுக்கும் சந்திரவதிக்கும் தர்க்கம்.

இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

எங்கிருந்து இங்குவந்தா யிந்திரஜாலக்கள்ளியே
இந்திரஜாலக்கள்ளியே இந்தரா விற்றுள்ளியே

சந்திரவதி.

ஒங்குமவ்வனத்திலிருந் தீங்குவந்தேனடியே
ஈங்குவந்தேனடியே இவ்விருளிலோடியே

அரசன்.

அவ்வனத்திலிருந்தாவந்திங் கணுகுவானேன்சொல்லமை
அணுகுவானேன்சொல்லமை அறுவானேன்தில்லமை

சந்திரவதி.

அருமைமகனாவிறுமேல் ஆரண்யத்திலிறந்ததால்
ஆரண்யத்திலிறந்ததால் அங்கிருந்திங்கணுகினேனே

அரசன்.

நீயிருப்பதெந்தவூர் நின்னின்பெயருமியா தடி
நின்பெயரும்யாதடி நீதியாகவோதடி

சந்திரவதி.

நானிருப்பதரியகாசி நாமதேயஞ்சந்திரியாம்
நாமதேயஞ்சந்திரியாம் நாதியற்றகன்னியாம்

அரசன்.

எத்திசையாகவிருந்தும் இக்கொடியவிருளிலே
இக்கொடியவிருளிலே யெவ்விதமிங்கெய்தலாம்

சந்திரவதி.

செத்தசவத்தைத்தகனஞ் செய்துசெல்லலாமென்றே
செய்துசெல்லலாமென்றே யெய்தினேனுனிங்கின்றே

சந்திரவதி வசனம்.

ஏ காவலா அரவத்தினுலிறந்த எனது சவந்தைத் தகனஞ்செய்து வீட்டிற்குச் செல்லலாமென்றெண்ணி யிங்குதூக்கிக்கொண்டுவந்தேன்.



அரசன் வசனம்.

சஹபாக்ஷ அடியே துஷ்டீ இந்த மயேந்திரஜாலவித்தை யெங்கு படித்தனை.

அரசன் விருத்தம்.

ஒழுக்கமுள்ள பெண்ணாக நீயிருக்கின்
ஒண்டியாய் வீட்டைவிட்டுச் சவத்தைத்தூக்கி
அழுக்குடைய விவ்விருளி லிங்குவந்து
ஆராமல்நீ மூட்டுவையோ வங்கையாலே
இழுக்குடைய ளாயிருப்ப தாலன்றோநீ
இத்தனிதஞ் செயத்துணிந்தா யிச்சமர்த்து
அழுத்தமுட னெங்கெவர்பாற் கற்றுக்கொண்டாய்
அருங்கபட வகத்திருடீ யழகிதாமோ.

## அரசனுக்கும் சந்திரவதிக்கும் தர்க்கம்.

ஆசையாகி வந்தேனிங்கே யென்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

எந்தனுத்தரவில்லாம லிந்தவிருளிலே
எப்படியென்காவலுக்கு ளேய்தலாமடீ.

சந்திரவதி.

எந்தனைநீபலவிதமா யேசாதேஅப்பா.
இங்குகாவலிருக்குமென்ன யானறியேனே

அரசன்.

இதற்குடனேயிமமென்ன வேற்பட்டதானல் அதை
யென்றுங்காக்குங்காவல னிருப்பானல்லவோ

சந்திரவதி.

இதற்குரியகாவலான னிருப்பதுண்மையே
இரவிலுமிருப்பானென யானினைத்திலேன்

அரசன்.

இங்குவந்தவேதற் சூரியகாவலன்
இருப்பதுமிராதனுந் தெரிந்திடவேண்டுமன்றோ

சந்திரவதி.

சங்குழந்தையிறந்த விசனத்தினாலே தை
யான்றெரிந்துகொள்வதற்கு கலினில்லையே

அரசன்.

யானிருந்தகாலல்லவோ இங்குனைக்கண்டேன்
இல்லாவிடிலோடிப் போயிருப்பாயல்லவோ

சந்திரவதி.

தானிருந்தது தெரியேன் தயவுசெய்தே
சண்டாளிசெய்தபிழையை க்ஷமித்துக்கொள்வையே

அரசன்.

பெண்பாலானதினாலிந்தப் பிழைபொறுத்தேன்டி
பிணத்திற்குரியசுதந்தரத்தை சுணத்திலீயடீ

சந்திரவதி.

பெண்பாவினானைவேறில்லாப் பெரியபாவிநான்
பிரேதசுதந்தரமெவ்விதம் பேதையிகுவேன்

அரசன்.

இன்றைவருமியம்பக்கேட்டே யிச்சவத்தையே
இங்கெனுமாய்ச்சுடலாமென வெண்ணிவந்தாயோ

சந்திரவதி.

இன்றைவருமிந்தவண்ணம் மியம்பவோயில்லை
இச்சுடலையின் வழக்க மென்னுமல்வந்தேன்

வசனம்.

காவலா இச்சுடலையின் வழக்கமெனக்குத் தெரியவாராதுநானோ ஐவேறில்லாத அரியபாதகி என்மீது தயவுசெய்து நான்செய்தபிழையைப்பொறுத்துச் சவத்தைத் தகனஞ்செய்வாயப்பா.

அரசன்வசனம்.

அடியே லண்டை சவத்திற்கேற்பட்ட சுதந்தரத்தைக் கொடுக்கின்றையா இல்லையா.

சந்திரவதி வசனம்.

காவலா ஐவேவிருந்தால் கொடுப்பேன் இல்லாவிடி லென்செய்வேன் தயவுசெய்து தநயனைத் தகனஞ்செய்வாயப்பா.

அரசன்விருத்தம்.

மடக்கொடியேபென்வருதி யின்றியிந்த
மையிருளில்மனந்துணிந்து மயானமெய்தி
அடக்கமுறுந்திருடியைப்போல் நீதான்செய்த
அரும்பிழையையாம்பொறுத்துச் சுதந்தரத்தைக்





கொடுத்திடெனக்கேட்டதற்குக் கிடையாதென்னக்
கூறியதாற்கொடியகனல் பிடித்துத்தாவும்
புடத்திலிட்டசவத்தையெடுத் தோடிப்போடி
பொற்பாதத்தாலெத்திவிட்டேன் பூமிமேதே.

சந்திரவதி தரு.

ஐயையோநா னென்னசெய்குவே னென்றமெட்டு.

இராகம்-தன்னியாசி-தாளம்-ஆதி.

பல்லவி.

இதுவென்ன காலமடா ஐயோ ஐயோ சுதனே (இ)

அநுபல்லவி.

இதுவென்காலமோ எவர்செய்தகோலமோ
எதிர்த்துக்காவலனுனை யெட்டிமிதித்தான்காலால் (இ)

சரணங்கள்,

விலைபதியாதவுன் மெய்யினிலரியபுன்
புலையன்கால்பட்டபவம் புரிந்ததெதோவிதியேன் (இ)
செந்நெல்வளமிருந்த திருநாடுருழுயிர்த
நன்னகரில்வழங்கும் நன்னெறியிதோவிங்கு (இ)
பட்டதுயரனைத்தும் பத்தாதெனநினைத்து
இட்டகுலதெய்வமும் இச்சதிசெய்ததோ (இ)

வசனம்.

அடா என்தருமைச்சுதனே இக்காலம் இக்கொடிய கடையனவன் தனது காலாலுன்னை மிதித்துக் கீழேதள்ளிவிட்டானே இனியெவ்வாறுன்னை தகனிப்பேன் கண்மணி.

அரசனுக்கும் சந்திரவதிக்கும் தர்க்கம்.

மகனேமகனே யென்று ஜெகசாலமிருட்டில் யென்றமெட்டு.

இராகம்-மோகனம்-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

சுதனேசுதனேயென்னக் கதறியிருளிலாதி
முதல்வினைநினைப்பது மேதடி-அடி
அதன்விபரங்களும் யாதடி
பதறியெருறத்திபோற் பாசாங்குசெய்கிறாய்
பார்த்தெனையுன்மையை யோதடி

சந்திரவதி.

ஏதடியெனவிவன் பேதகமாய்ப்பேசும்
இழிவானமொழிகேட்க வானதே-அதால்
எந்தனுடம்புகுன்றிப் போனதே
நாதன்றிருவடியை நாடோறும்போற்றியும்
நாடாதகெதிநாட லானதே

அரசன்.

கற்பினிலையின்மிக்க விற்பனியாகினிச்
சற்பனைவருவானேன் நில்லடி-மிகு
கற்பனையாகுமுன் சொல்லடி
துற்பிணங்கள்தின்னும் துற்பேயேதுற்நாயே
சுருக்கினிஇன்பதி செல்லடி

சந்திரவதி.

பிணங்களையருந்திடும் சுணங்கனென்றெனையிவன்
பெருவிதமாய்ப்பேச லாச்சுதே-இந்த
இருவினையிந்நாளில் வாச்சுதே
கணங்கள்மலியுஞ்சுடுகாட்டுத் தோட்டிக்குக்கொஞ்சம்
கருணைவில்லாமலும் போச்சுதே

அரசன்.

தோட்டியென்றெனைநாவை நீட்டியுரைக்கவும்
தாட்டிகம்வந்ததோ லண்டியே-இந்த
மேட்டிமையென்றிண்டு மிண்டியே
ஊட்டியையுறித்துனை யொழிப்பேனிக்கோலாலே
ஓட்டிஜெகஜால சண்டியே

சந்திரவதி.

ஜெகஜாலசண்டியென் றிகழ்வுறவெனையினன்
புகலவுமதைக்கேட்கப் படைத்தையோ-அதால்
மிகவும்நீயகமகிழ் வுடைத்தையோ
ஜெகமிசையென்பவஞ் செய்தேனுநிசிவமே
திருவடிபணிந்துங்கை விடுத்தையோ

அரசன்.

ஆதிசிவனைமெத்த யாசித்தவள்போல
ஆபத்துக்குதவெனப் போற்றுறாய்-எந்தன்
ரூபத்தைப்பலவாறு தூற்றுறாய்
கோதிலாச்சுதந்தரங் கொடுவெனக்கேட்டாக்கால்
கொடுக்காமற்கள்ளிபோ லேற்றுறாய்



சந்திரவதி தரு.

தொடாதடாபாவி யென்றமெட்டு.

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

கண்ணிகள்,

இதுஞாயமாமோ ஈமகாவலனே
எதிராடிநீயே ஏசுகின்றாயே (இ)

அரசன்.

என்னடிதுணிவாய் இவ்விதஞ்சொல்கிறாய்
என்னஞாயந்தனை யிங்குகண்டனை (எ)

சந்திரவதி.

ஜாதிக்கேற்றபடி சாற்றுமவிப்படி
மோதித்தின்டுமிண்டாய் முன்னேசாற்றினால் (இ)

அரசன்.

என்வரிதராமல் ஏகாதிங்கிருந்தால்
நின்னையானேசாமல் லேசாய்விடேனால் (எ)

சந்திரவதி.

பேயிரங்குமுன்னால் பெண்ணொன்றுசொன்னால்
நீயிரங்காதென்ன நேர்மையேூவையோ (இ)

அரசன்.

சிட்டியென்முனின்றே கெஞ்சாதேயின்றே
எட்டியேபிணத்தை யெடுத்தேகடி (எ)

சந்திரவதி.

கெதியொன்றுமில்லை இனையுமிங்கில்லை
ததியிதுசேயைத் தகனிப்பையே (இ)

அரசன்.

வழக்கம்போலுன்பால் வரிநான்வாங்காமல்
தழுற்படவொட்டேன் சலந்தன்னையே (எ)

சந்திரவதி விருத்தம்.

அடியே யிந்திரஜாலக் கள்ளியென்றும்
அரக்கியென்றுங் குறத்தியென்று மலகையென்றும்
கொடியதொரு நீலியென்றுஞ் சுதந்தரத்தைக்
கொடுக்கவில்லை யென்றுமிந்தப் புடத்திலிட்ட
வடிவழகன் றனையடிபால் மிதித்துத்தள்ளி
வன்கோபங் கொண்டோடிப் போடியென்றும்
படபடத்துப் பேசுவது நீதியன்றோ
பாலனைச் சுடக்கருணை பாலிப்பாயே,

வசனம்.

ஐயோ மயான பரிபாலக புண்ணியனே நீ இவ்வாறு பாஷிப்ப து நீதி யன்று இனிமேல் கருணைகூர்ந்து எனது புத்திர சிகாமணியை த் தகனஞ்செய்யும்படி அனுமதி கொடுக்கவேண்டும்.

அரசன் விருத்தம்.

கவடமேமனதிற்கொண்ட கள்ளியேசமுறக்கேளாய்
இவடமிக்காரணத்தை யென்னெஜமானன்கண்டால்
அவமதிப்பாய்மதிப்பா ராகையாற்றடைசொலாதுன்
சவமதைத்தூக்கிப்போடி தருகிடிற்றுக்குவேனே.

அரசன் தரு.

சேருமுன்னே சேவல்கூவுதே யென்றமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ஏகம்.

பல்லவி.

போடியுந்தன்பிணத்தைத்தூக்கியே அப்புறத்திலோடிப்(போ)

அநுபல்லவி.

சாடிடுவேனிக்கோலாலே தருகிறின்றுனிமேலே
நாடிவந்தவீழியைநோக்கியே ரணமூர்க்கியே(போ)

சரணங்கள்.

எவ்வளவோநானுனக்கு இயம்பியுமுன்செவிக்கு
அவ்வளவுமேறவில்லையே அடீகள்ளியே(போ)

பஞ்சக்குறத்தியைப்போற் பாடாதேகுரம்பேபோ
எஞ்சலிலிங்குநில்லாது ஈதிராடாது(போ)

கிரமமாய்வரிதனைக் கேட்டாற்கொடாமலெனை
திரமுடனேபேசத்துணிந்தைபோ ஜெகஜாலியே(போ)

சேருமுன்னே சேவல்கூவுதே யென்றமெட்டு.

இராகம்-நமாசு-தாளம்-ஏகம்.

பல்லவி.

இதுவுனக்குத்தர்மமோசொலாய் ஏகாவலனே (இ)

அனுபல்லவி.

கெதியொன்றுமில்லையென்று கீர்த்திடக்கேட்டுமின்று
இதயமிரங்காமலிவ்விதம் ஏகிறுபே (இ)



சரணங்கள்.

எடுத்துரைத்ததெல்லாங்காதுக் கேறினுமிங்கிப்போது
சொடுக்கப்பொருளில்லாதாலின்றே முளம்புகின்றேன் (இ)
கல்லிலாவுனதுமனம் கரையாததேனேவினம்
எல்லோருமிகழும்புலையனே ஏசண்டாளனே (இ)
கெஞ்சியுமென்றன்மீது கிருபைசற்றுமில்லாது
மிஞ்சியகோலையோங்கியே வெரட்டுறியே (இ)

வசனம்.

ஏ காவலா பெண்பாலென்றும்பாராது என்னை இவ்வித அவஸ்தைசெய்கிறியே இது தருமமா.

அரசன் வசனம்.

அடியே துஷ்டை நீநாயமாகச் சுதந்தரத்தைக் கொடுத்தாலல்லது சவத்தைத்தகனிக்கவொட்டேன் இனி மரியாதையாகத் தப்பிப்பிழைத்தோடிப்போ சீக்கிரம்.

சந்திரவதி தரு.

ஆரடியுன்பேருர்சொல்லடி யென்றமெட்டு.

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

நீதயவுசெய்வாய் காவலா-ஐயோ
செப்பவும்புண்ணியமுண்டு துன்பமடைந்தவென்மிசை (நீ)

அரசன் சொல்.

வாதுசெய்யலாமோ லண்டியே-நீ
வந்தவழிதன்னைநாடி மைந்தனையெடுத்துப்போடி (வா)

சந்திரவதி சொல்.

யாதொருகெதியில்லாது எங்குகிறேனிப்போது
இவ்விடத்திலென்மகனை ஒவ்வியேதகனஞ்செய்ய (நீ)

அரசன் சொல்.

ஓதியதெல்லாமறந்தே ஓடாமல்நீயிங்கிருந்தே
ஓலமிட்டலறியிந்த ஜாலவித்தைகளைக்காட்டி (வா)

சந்திரவதி சொல்.

இந்தவிதம்நீவெகுண் டிடப்புவதுஞாயமன்று
இக்கதியினியின்ன தென்றறிகிலேன்

இந்தவுலகத்திலுள்ள    வேந்திழையர்களில்யானே
யாருந்துணையில்லாதவள்    பாருந்தியங்கிறேனுண்மை (நீ)

அரசன்

எத்தனைவிதமாகநீ    இத்ததியெனைக்கெஞ்சினும்
யான்சுதந்தரமுன்    னிடம்வாங்காமல்
செத்தசவத்தைச்சுடவே    உத்தரவுசெய்யமாட்டேன்
சிந்தைமிகவுந்துணிந்தே    விந்தையுடனென்றன்முன்னே (வா)

சந்திரவதி

சுற்றமும்பொருளுமிக    வுற்றவளாகிலிவனைத்
தோளின்மிசைவைத்திருளிற்    காளிபோலவே
கொற்றவளிங்கெய்துவேனோ கொள்ளிக்கட்டையில்வைப்பனோ
கோலாகலத்தரும    சீலாநலத்துடனே (நீ)

அரசன்

சுற்றமும்பொருளுமின்று    அற்றகொடும்பாவியென்று
ஏந்துடனே சொல்லி    வருந்தாதேநீ
கற்றதொழில்நற்சமர்த்தைக்    காட்டுவதிற்பயனில்லை
கள்ளியறிவில்லாது    துள்ளியலகைபோல (வா)

சந்திரவதி

உண்மைசொல்லியுமதைவன்    கண்மையெனவேமதித்திங்
கொவ்வாதசொற்களைச்    சொல்வதுத்தமமல்ல
புன்மையடைந்துன்முனின்றே    புலம்புகிறேனையோவின்றே
பொறையுடையாயுன்மனங்    கறையவில்லையோவின்னும் (நீ)

அரசன்

இன்னமும்பாசாங்கியற்றி    யேய்க்குங்குறத்தியைப்போல
வேய்ப்பதழகல்லவடி    யென்றனெஜமானன்
இன்னதையறிந்தாரானு    மிங்குவந்துதான்வெகுண்டே
என்னையுங்கொட்டுவார்பின்னை    யுன்னையுந்திட்டுவாரடி (வா)

வசனம்.

அடியே துஷ்டை இக்காரணத்தை யெனதெஜமானன் கண்டால் அவர் என்னை யடிப்பதோடுங்கூட வுன்னையும் பலவாறேசுவார் சிக்கிரத்தில் சவத்தைத் தூக்கிக்கொண்டு வந்தவழியாக ஓடிப்போயிவிடு இனியிங்கு நில்லாதே.



இராகம்-கமாசு-தாளம்-ஏகம்.

பல்லவி.

போடியுந்தன்புத்திரனைத்    தூக்கி-மெத்தப்
புலம்பாமலேபதில்    விளம்பாமலே-அடி (போ)

அநுபல்லவி.

ஏடிநான்சொல்வதுன்    இருசெவிக்கேறவும்
இல்லையோவல்ல    திதயத்தின்வலியோ
ஓடிடாமல்நின்றால்    சாடுவேன்கோலால்
ஒளியாமலேவந்த    வழியாகவே-அடி (போ)

வசனம்.

அடியே கொடியநீலி இனி யென்னிடம் யாதொருவிதமான பதில் முகாந்திரமு மெடுத்துரையாதுசவத்தைத்தூக்கி அப்பாலோடிப்போ.

சந்திரவதி விருத்தம்.

எத்தனைவிதமாயென்னை யிகழ்ந்துநீயேசினாலும்
இத்ததிசுதந்தரந்தா னீவதற்கிடம்பாடில்லை
சித்தமிரங்கியெந்தன் சேயனைத்தகனஞ்செய்ய
உத்தரமீவாயப்பா வுன்னடிசரணந்தானே.

வசனம்.

ஐயோ சமகாவலனே நீ இப்போது பலவாறாக என்னையிகழ்ந்தெசினும் சுதந்தரங் கொடுப்பதற் கிடம்பாடில்லை ஆகையால் என்மீது கருணைகூர்ந்து எனது பாலனைத் தகனஞ்செய்வதற் குத்தரவு கொடுக்கவேண்டும். உனதிரு திருவடியே தஞ்சமெனவெண்ணிச் சரணஞ்செய்தேன் இனித் தடை சொல்லலாகாது.

அரசன் விருத்தம்.

என்னடியேதஞ்சமெனப் பணிந்தாயானே
வினனும்லிலை னினர்க்கடிமைகண்டாய்
என்னடிபணிகுவது ஞாயமன்று
யானிந்தச்சுதந்தரத்திற் குரியனல்லேன்
நன்னயமாபெண்ணைக் கொண்டவிரவாகு
நவின்றநூகாற்பணமு மொருமுழத்துண்டுந்தை
யென்வசம்நீயீந்திவனைச் சுடுவாயன்றே
னெனக்கீந்தபடியை யுனக்கெனுஞ்செய்வேனே.

இராகம்-கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

மீதசுதந்தரம்நீ தந்திடுவாயே-இந்த
வியந்தசவந்தனை யீங்குசுடுவாயே (மீத)

அநுபல்லவி.

பாதம்பணிந்ததற்குப் பரிவுடனுன்புசிக்கும்
படியரிசியையெனும் பண்ணினேனுனதிறல் (மீத)

வசனம்.

கேளாய் பெண்ணே இப்போது நீ என்னுடைய பாதமே தஞ்சமெனப் பணிந்தாயல்லவோ யானோ நீசனல்லேன் நீசனுக் கடிமைபுகுந்தவன் தெரிந்ததா இனிமேல் நீ யென்பாதம் பணிவது ஞாயமன்று இச்சுதந்தரத்திற்கு யானுரியனல்லேன் நீதியாக என்னையடிமை கொண்ட வீரவாகுவானவர் சொன்னதாவது ஓர்பிரேதத்திற்கு காற்பணம் ஓர் முழத்துண்டு வாய்க்கரிசி இம்மூன்றும் வாங்கிக்கொண்டு தகனஞ்செய்யும்படி கூறி மேற்கூறியதில் வாய்க்கரிசியை மட்டும் என்னை யெடுத்துக்கொண்டு காற்பண முழத்துண்டை யன்னவர்க் கனுப்பும்படி ஆக்ஞையிட்டிருக்கின்றார் ஆகையால் என்னாலேன்ற வுபகாரம் எனக்குச் சொந்தமான வாய்க்கரிசியைமட்டும் உனக்கெளுமாகக் கொடுத்துவிட்டேன் இனி மீத இரண்டு சுதந்தரத்தையுங் கொடுத்து உன்து பாலனைத் தகனஞ்செய்து செல்வாயாக காலதாமதஞ்செய்யாதே.

சந்திரவதி விருத்தம்.

சுடுகாடாள்காவலனே நீயுரைத்த
சொல்லுறுதியாகினு மியான்சொல்லக்கேளாய்
சுடுவாரற்றிடுகாட்டி லிறந்தான்றன்னைத்
தோளில்வைத்துச்சுமந் திருளிற்றோன்றியிங்கே.
கொடுவலையுட்கலையதுபோற் குறுகுமெற்குக்
கூறிமுழத்துண்டேது பணமுமேது
நெடுவினையாலகந்தளர்ந்து வருந்துகின்றேன்
நீயிரங்காய்கோடிபுண்யம் நேருந்தானே.

| நாதன்வரக் காணேனே யென்றமெட்டு.

இராகம் - கமாசு - தாளம் - ஆதி.

பல்லவி,

எங்கிருந்துநானிருவேன் சுடுமயானகாவலனே (எங்)





அநுபல்லவி

இங்கிருந்துகெதியில்லாது எங்குகிறேனிப்போது (எங்)

வசனம்.

ஏ காவலா யாதொருவிதமான கெதியில்லாது வருந்துகின்ற கொடிய சண்டாளியாகிய நான் காற்பணமு முழத்துண்டு மெங்கிருந்து கொடுப்பேன் தயவு செய்வாயப்பா.

அரசன் தரு.

உனக்குக்கதியில்லாது ஓலமிட்டாலிப்போது
எனக்கென்னவதைப்பற்றி யினித்தடைகள்சொலாது (மீ)

சந்திரவதி

மன்னும்வாய்க்கரிசியையே மகிழ்ந்தெனுஞ்செய்தபடியே
இன்னும்பணத்தோடாடையையெனக்கெனுஞ்செய்வையே (வ)

அரசன்

என்சுதந்தரமுன்றற் கீவதல்லாமலென்றன்
மன்சுதந்தரமென்றும் வழங்குதல்றமன்று (மீ)

சந்திரவதி

இவ்விதமுனக்கெஞ்சியேயங்குமென்மேற்றவியமிஞ்சியே
எவ்விதமாவதிதையே எனக்கெனுஞ்செய்வையே (எ)

அரசன்

உற்றதையென்முன்னுமேல ஒதாமற்கள்ளிபோலே
கற்றசமர்த்தையின்று காட்டுவதழகன்று (மீ)

சந்திரவதி

எங்கிறேனென்றிப்படி எசாதேவடிக்கடி
வாய்க்கரிசிக்குங்காசுக்கும்மனமிரங்கல்லுமிட்டேன்சேய்க்கு(மீ)

வசனம்.

ஐயோ டண்ணியருபனே உற்ற காரணத்தை யெவ்வளவோ எடுத்துரைத்தும் பொய்சொல்லுகிறே னென்பதாகவெண்ணி அடிக்கடி இவ்வாறேசுகின்றனையே இது ஞாயமாமீண்டும் எனது புத்திர சிகாமணிக்கு வாய்க்கரிசி போடுவதற்கு வகையின்றி மணிலக்கெல்லையும் கொள்ளிக் காசுக்குக் கெதியின்றி கல்லைப் பொருக்கியும் போட்டிருக்கின்றேன் இதனைப் பார்த்தாவது என்னைப் பொய்யளல்லது மெய்யளெனத் தெரிந்துகொண்டு சேயனைத் தகனஞ்செய்வாய் அப்பா.

தரகன்வந்தையோ தரணிபன்வருந்தக்
கரமிசைகிட்டி கழுத்திலண்ணுந்தாள்
பொட்டியர்நெற்றியில் பொற்கல்வைத்தே
மீட்டுமிவன்கை மீதினிற்கிட்டியை
இட்டிடஅவரை யிறைஞ்சியேகானிற்
பட்டிடாத்துன்பம் பட்டிவண்வந்தே
தவவிசாலாக்ஷி சமேதனைப்போற்றி
இவனையுமெனையும் எழில்விலைகூறி
காளகண்டற்குக் கருதியேவிற்றே
வேளினையனைய வேந்தனுமந்திரியும்
எங்குசென்றரோ யானறிகில்னன்
றங்கிருந்தந்தணன் அகத்தினையடைந்தே
ஏவல்கள்புரிந்தே யிருந்திடுநாளில்
ஆவலாய்த்தெற்பை யறுத்துவாவென்ன
அடவிக்கிவனை யனுப்பலங்களுகிப்
படவரவாலே பாரினில்மாண்டான்
அதனைநற்றூழர்வந் தறைந்திடக்கேட்டு
இதமுடனங்குற் றிவனையானெடுத்தே
இருளிலிங்குற்றே னென்குறையதனை
யொருவராலுமெடுத் துரைக்கவும்போகா
ஆகையாலிவனை யடக்கிச்சென்றிட
ஓகையாயுத்தர முதவுவாய்போற்றி

வசனம்.

ஹே மயானகாவலா எனது குறைகளையெடுத் துரைப்பதாயிருந்தால்வளரும் ஆகையால் கருணைசெய்து என்புத்திரசிகாமணியைத் தகனஞ்செய்யும்படி உத்தரவு கொடுக்கவேண்டும்.

## அரசன் குழந்தையை யெடுத்துப்

## புலம்பும்பாகம்.

அரசன் விருத்தம்.

ஆதவன்மரபின்றேடே யயர்ந்ததோவழிந்துபோச்சோ
காதகவிஸ்வாமித்ரன் கருதியவெண்ணமாச்சோ
மாதவத்துதித்தமைந்தன் வையகம்புரந்திடாமற்
சிதமார்வனத்தில்நாகந் தீண்டியேமாளவையோ.



இராகம்-காபி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஐயோமகனே — யென்னசெய்வேனடா
அரவினாலிறந்தாயோ — அன்னையைமறந்தாயோ
மெய்யோடிழைத்தவம் — வினைச்சேர
வேதனுமிவ்விதியோ — விதித்தனனுனக்கையோ
வெய்யபாவியாயேனை — விட்டாயோ
விண்ணுடேகெதியென்றே — மேவினையோவின்றே
தப்பவுலகாசையைத் — துறந்தாயோ
சுக்ஞானனையோ — தொல்வினைகொய்தாயோ
ஆதிகடவுளை நீ — யடுத்தாயோ
அடியரோடுற்றாயோ — அதிசுகம்பெற்றாயோ
நீதியோநீயுனக்கு — கெழ்ந்தாயோ
நேசவிஸ்வாசனே — நித்யவுல்லாசனே (ஐ)

(வ-ம்.) அடா பாலகா இனியாதுசெய்குவேன் ஐயோ.

அரசன் தரு.

இதுவேற மிங்குவந் தென்றமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ருபகம்.

பல்லவி.

இனியுன்னை — யென்கண்ணாலே
யென்றுகாண்பேனே-கண்டு — இன்பம்பூண்பேனே (இ)

அநுபல்லவி.

பனியாயமானையேர்வின்றுன் — அன்னையைவிட்டே
பனிவனத்தில் — பாம்பின்வாய்ப்பட்டே
பறந்தாயோபாலா-வினைப் — இறந்தாயோசிவா (இ)

சரணங்கள்.

சூரியகுலமுன்னுமேயல்லோ — தலங்குமென்றிருந்தேன்
பாரினிழைத்த — வினையினாலே
இக்கதிக்குற்றுப்பின்ன — தென்னைத்தவப்ற்றுப் (இ)
உன்னைவைத்தேயர்ப்பீடைய — வள்ளித்துள்ளினேன்-அதற்
கென்னைவைத்தனீ — இன்றடக்கதையே
இதுவுக்தர்மமோ-தான் — இழைத்தகர்மமோ (இ)

எனக்குக்கொள்ளிவைப்பாயென்ன வெண்ணியின்புற்றேன்-அதற்
குனக்குக்கொள்ளி வைக்கச்செய்தாயே
உள்ளம்நாடுமோ-துயர் ஒழிக்கக்கூடுமோ (இ)

வசனம்.

கண்மணீ உன்னைக்கண் டுளமகிழ்வதெந்நாளோ வறிகிலேன் இனி எவ்வாறு சகித்திருப்பேன் எந்தையே.

அரசன் தரு.

அன்னகர்பூமி தன்னையிழந்தென் றமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-சாப்பு.

பல்லவி.

என்ன செய்வேனையோ யென்னிருகண்மணியே
இவ்விதியுனக்கய வெழுதினனோ (எ)

அநுபல்லவி.

உன்னைநான் மகனென வுன்னிப்பாராமலே
உறுத்துள்ளன்னையை வெறுத்துனையே
யின்னடியால்மிதித்தே யெத்தித்தள்ளினேனடா
என்போல்வன்பாவிய ரெவருமுண்டோ (எ)

சரணங்கள்.

உற்றதாமின்பிவனத் துட்போனவுனையங்கே
உற்றநாகங்கடித்த அத்தருணம்
மற்றவளோடுனையம் மறையோர்க்குவிற்றவெனை
மனதுள்நினைந்தெவ்விதம் வருந்தினையோ (எ)

நந்தலில்லாதநந்தம் நாடுநகரிழந்தே
எந்தனுடன் வந்திவ்வா றிருந்தனையே
மைந்தாநிகரிபுய வள்ளலேயென்றுபெற்ற
வாழ்வுமுனக்கித்த வாழ்வளவோ (எ)

நிலையில்லாவுயிரினை நிச்சயமெனவெண்ணி
நீசனுக்கடிமையாய் நேர்ந்தாளினி
தலைவன்வந்தெனையிட்டுத் தருவனோவெனவந்தச்
சந்பத்திற்கிரையாகச் சார்ந்தனையோ (எ)

விற்றவங்காலில்லென் மெய்கழுவியவுன்னைப்
பற்றியைபரிழுக்கப் பார்த்திருந்தும்
இற்றைநாள்வரையய லில்லாதிருந்தவென்பால்
உற்றபலத்தைநின்றே ஒழித்தனையோ (எ)



வசனம்.

கண்மணி இக்காலம்நீ இவ்விதமான எண்ணங்களை யெண்ணி இதயம்நொந்து இவ்விதிக்காளானுயோ ஐயோ இனி யாது செய்குவேன்.

சந்திரவதி தரு.

அன்னமே நான்தொட்ட வென்றமெட்டு.

இராகம் - சாமா - தாளம் - ரூபகம்.

கண்ணிகள்.

இறையவனேவுமைப் பறையனுக்குச்செய்தே
இச்சுடலைகாக்கச்-சவந் தாக்க-வரிகேட்கத்-தெய்வம்
இழைத்ததோ-இன்பந் தழைத்ததோ-த-த-த
மன்மதனும்வெட்கும் வண்ணமமைந்திட்ட
மின்னழகுங்குறைய மனங்கறைய இங்கேயுறைய-வினை
வாய்த்ததோ-தவம் போச்சுதோ-போ-போ-
ராசாங்கமோடிபாய்ப் பேசுங்குரலினல்
ஓசைமறவிதியோ-சிவன் கதியோ-முனிசதியோ-பிராண
நாதனே-மலர்ப் பாதனே-பா-பா-பா
பூவுலகிற்கொடும் பாவியாமென்கையை
மேவித்தொட்டகாலமோ அலங்-கோலமோகுருசிலமோ-ஐயோ
புண்ணியனே-மகா கண்ணியனே-கண்-கண்-கண்
நமதெல்லாம்பார்த்துநா னினிமேலிருப்பதில்
யாதுபயன்சொல்வீர் வினைவெல்வீர்-மனம்புல்வீர்-புவிக்
கிந்த்ரரோ-அரிச் சந்த்ரரோ-ச-ச-ச

வசனம்.

பிராணரக்ஷகா உமக்கு மிவ்விதியோ பிரமனெழுதினன் இக்கொடிய பாவத்திற்கென்செய்வேன்.

நாட்டுக்கு நாயகமாக வென்றமெட்டு.

இராகம்-எதுகுலகாம்போதி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

தேவரீர்க்கிவ்விதி மேவுமென்றறியேனே-பிராணநாதா-நான்
பூவுலகிலென்ன பாவஞ்செய்தேனையோ-பிராணநாதா
மணிமுடிசூட்டிய வான்சிரசின்மீது-பிராணநாதா-இந்தத்
துணிபதைச்சுட்டுத்தொல்லினையோவெந்தன்-பிராணநாதா

அம்பரத்தாணியை பணிந்தபுயத்திலே-பிராணநாதா-கருங்
கம்பளிபணிந்திடக் காலமும்வந்ததோ-பிராணநாதா

செங்கோல்தரித்தச் சிறந்தகரத்திலே-பிராணநாதா-இந்த
வெங்கோல்தரித்து மெலிந்திடலாமோ-பிராணநாதா

வன்னச்சல்லடந்தொட்டு வாளணியிடையிலே-பிராணநாதா-தேகம்
கன்னச்சல்லடந்தொட்டுக் கச்சைவரியலானீர்-பிராணநாதா

சிங்காசனத்திருந்து தேசங்களாண்டதும்போய்-பிராணநாதா-ஐயோ
இங்காரும்பரிணையுற் றிமத்தையாளனீர்பிராணநாதா.

வசனம்.

பிரபூ இப்பாதகமெல்லாம் பார்க்கப்பார்க்க வயிறெறியுதே இத
ற்கென்செய்வேன் ஆகியிவிவ்விதம் வருமென வறிகிலேனே.

மந்திரி விருத்தம்.

கோசிகர்க்குநாடுநகர் யாவுமீந்தே
குறையடைந்தும்பின்கடனுக் காளாயிந்தக்
காசிபுக்கியக்கடனைத் தீர்க்கவன்று
கள்ளகன்றிடருக்கடிமை யாகியன்றோன்
பேசியசிற்பணிவிடைக ளியற்றிநித்தம்
பெருந்துயர்க்குளாழ்ந்துமது போதாதென்று
மாசில்லாவென்றனையு வரவுதின்டி
மாண்டிடவும்வகுத்தானோ மலரோன்றுமே.

வசனம்.

தாயே இக்காலம் எனது துணைவனாகிய லோகிதனுக்கும் இவ்
விதியோவிதித்தானிறையோன் எவ்வாறு சகிப்பேனிந்தச் சண்டா
ளன்.

(ச-தி-வ-ம்.) மந்திரி இனி விசனமுற்றுவதென்ன.

அரசன் விருத்தம்.

அனிதமாயவனியில்நா மன்றுசெய்பாவத்தாலே
பனிமதிவதனச்சேயைப் பறிகொடுத்தனமிதற்கு
முனிவனையயனையாதி முகுந்தனைச்சிவனைநொந்தே
இனியழுவதினாலென்னை யீபம்புவாயென்றன்மாதே.

(வ-ம்.) பெண்ணே இனியிருந்துவதாலே யாதுபயனுதும்.



சந்திரவதி வசனம்.

நல்லதரசே தாம் என்னைவிட்டுப்பிறிந்ததின்மேல் இவ்வேடமா
க வேண்டியகாரணம் யாதோ தெரிகிலேன் விபரமாகச் சொல்லவே
ண்டும்.

அரசன் வசனம்.

மாதரசே உன்னைவிட்டுப்பிரிந்ததின்பின் நங்கூடவந்த நக்ஷத்தி
ரய்யர் தமக்குத்தாருகொடுக்கவேண்டுமெனச் சதிசெய்ததால் அதற்
கிணங்கி மந்திரியாலென்னை வீரவாகுவுக்குக் கிரையஞ்செய்யப்பட்டு
பதினாயிரம் பொன்வாங்கி அன்னவர்க்களித் தனுப்பிவிட்டு நீசன்வரு
திப்படி இச்சுடலை காவல்புரிந்து வாய்க்கரிசியாற்செய்த அன்னமுண்
டுடல்வளர்த்து வாழ்ந்திருக்கலானேன் பெண்ணே.

சந்திரவதி வசனம்.

அரசே உம்மைப்பார்க்கப்பார்க்கப் பரிதாபமாகவிருக்கின்றதே
இனி யெவ்வாறுலகின்கண் உயிர்வைத்திருப்பேன்.

அரசன் விருத்தம்.

அழுவதிலென்னமாதே யாகையாலரவால்மாண்ட
செழுமதிவதனம்லாபந்த சேயினைத்தகனஞ்செய்யப்
பழுதிலாதன்னைக்கொண்ட பார்ப்பனரிடத்திற்சென்று
கழுதியேபணமுந்துண்டுங் கைக்கொடுவருவாய்நீயே.

வசனம்.

பெண்ணே நீ அடிக்கடி வருத்தமுறுவதாலே பிரயோசனமல்ல
இனி நமது புத்திரசிகாமணியைத் தகனஞ்செய்யவேண்டும் அதற்
காக நீ காசகண்டனிடஞ்சென்று காற்பணமும் முழத்துண்டும் வாங்
கிக்கொண்டுவா காலதாமசமாகின்றன.

சந்திரவதி விருத்தம்.

தருவனத்திற் படவரவாற் றனையன்மாண்ட
சந்திரியைத் தோழர்வந்து சாற்றலத்தைக்
கருணையில்லா வக்காளகண்டர்முன்னன்
கழறியே குழவிதன்னைக் கண்டெடுத்தே
இருளுறுமு னிமயெய்திக் தகனஞ்செய்து
இக்குலர் வெளியாட்கோ ரிடையுமின்றி
வருதிரு வேண்டுமெனக் கேட்டதற்கு
வருத்தமுற்ற பாவிவழி வழங்குவாரோ.

வசனம்.

பிரபூ இவ்வித வன்கண்மையுடைய அம்மறையோன் எவ்விதம் காற்பணமு முழத்துண்டும் எனக்குக்கொடுப்பார் ஐயோ இதுவுங் கடவுள் செயலோ.

அரசனு விருத்தம்.

தோகையே நான்புலையர்க் கடிமையன்றேன்
சுதந்தரங்கொ டாவிடிலோ சொற்சோர்வெய்தும்
ஆகையால் மகன்றனையே தகனஞ்செய்ய
அனுமதியிந் திடவருத்த மடைந்தவையர்
ஈகையில்லாக் கொடும்பாவி யெனினுமன்றே
னிடமனுப்பி யெவ்விதமு மியம்பியத்தை
ஈகைகொடு வருவதுதா னீதியிங்கு
நின்றுவருந் தாமலங்கே சென்றுவாராய்.

வசனம்.

பெண்ணே வீரவாகுவுக்குச் சேரவேண்டிய சுதந்தரத்தைக்கொடுத்துத் தகனஞ்செய்யாவிடில் சொற்சோர்வுறும் அவசியம். அந்தணரிடஞ்சென்று அதனை வாங்கிக்கொண்டுவா யோசனைசெய்யாதே.

(ச-தி-வ-ம்.) நல்லது பிரபூ.

மன்னவனோ யென்னசெய்வோ மென்றமெட்டு.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி

பல்லவி.

போய்வாரேன் பூபதியே-நம்
புத்திரனைப்-பத்திரமாய் வைத்திரும்-நீனுத்தரம்போல்(போ)

அநுபல்லவி.

வாய்மையுடனேயின்று மறையவரிடஞ்சென்று
மண்டுசோபம்-விண்டுகாசுந் துண்டும்வாங்கி-கொண்டுவர(போ)

சரணங்கள்.

யாவர்செய்தசற்பனையோ-ஜெக தீசனிட்டகற்பனையோ
பூவுலகின்மிசையே பாவியானேனிதையே
புந்தியுள்-நினைந்தினி வருந்திடா-திருந்திடும்-நான்(போ)

வசனம்.

பிராணரக்ஷகா தமதுத்தரவுப்படி காளகண்டய்யரிடஞ்சென்று காற்பணமும் முழத்துண்டும் வாங்கிக்கொண்டு வருகின்றேன் அதுவரை நமது புத்திரனைப் பத்திரமாகப்பார்த்துக்கொள்ளும்.



(அ-ன்-வ-ம்.) நல்லது பெண்ணே சீக்கிரத்தில் சென்றுவா.

(ச-தி-வ-ம்.) உத்தரவுப்படி யரசே.

பொது வசனம்.

இவ்விதம் சந்திரவதி தமது கணவனிடம் விடைபெற்றுக்கொண்டு சுடலையைவிட்டுப்புறப்படும் முன்னமே விஸ்வாமித்திரர் வருதிப்படி மகாவிஷ்ணுவானவர் திருடனைப்போல் வேடமெடுத்துக் காசிராஜாவின் அரண்மனையிற் கன்னம்வைத்து அன்னவனது புத்திரனையெடுத்து வெளியேவந்து ஓர்வீதியில்வைத்துக்கொன்று ஆபரணங்களியாவையும் அவிழ்த்துக் கைப்பற்றிக்கொண்டு அக்குழந்தையை அங்குபோட்டுவிட்டுச் சென்றனர்.

சந்திரவதி விருத்தம்.

கணவனின்றுரைத்தவண்ணங் கடையனுக்குடையவோர்காற்
பணமுடன்றுண்டமீய்ந்தெம் பாலனைச்சுடுவதற்காய்க்
கணமலிந்தாடுமேமக் காட்டைவிட்டகன்றிராவிற்
குணமிலாவையர்வீட்டைக் குறித்துநானடக்கின்றேனே.

சிவசிவா இந்தத் தீவினைகாணவோ வென்றமெட்டு.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-சாப்பு

கண்ணிகள்.

ஹரஹரசிவ அம்பிகைநாதனே
அமரர்கள்பணி யம்மலர்ப்பாதனே
ஐயோவிவ்வினை யெய்தலாகுமோ
வெய்யபாவியென் செய்குவேன்
அருமறைமுடிவே-இது அறமோசுடர்வடிவே (ஹ)
அவனிசெல்வ மரசையுமிழந்தும்
ஐயர்க்கடிமையாகி மெய்தளர்ந்தும்
அருமைமிகுமொரு திருமகனையுமின்
றிருநிலமிசையே யிறந்திட
அன்றென்பவஞ்செய்தேன்-எந்த அருதியனாவைதேன் (ஹ)
நாயகன்புலைஞர்க் கடிமையுற்றே
நசுத்தையர்க்கு நற்றாருதந்தே
நாடருங்கடு காட்டைத்தமைச்
சோடமர்ந்துளம் வாடியும்
வதித்தையோவன்றே-இது ஞாயமோவின்றே (ஹ)

வசனம்.

ஐயோ கடவுளே இக்காலம் எனது நாயகன் சோங்கத்தைபடைந்து சுடலையிலிருந்து காவல்புரிந்து வாய்க்கரிசியின் சோறுண்டுடல் வளர்க்கவுமோ செய்தனை இது ஞாயமா என்னதாழ்வு செய்தனம்.

கர்க்கேதன் ஹாய்முசே யென்றமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

இறவுறன் றன்செயலோ — யீசனேசர்வேசனே
இனையடிப்பணிந்ததற்கு — இக்கதியோவிட்டாயெற்கு
என்செய்வேன்-என்செய்வேன் — என்செய்வேன்-என்செய்வேன் (இ)
ஐயரோகொடியகோபி — யவர்பனையதிஅம்பயி
அருளுடனேசுதந்தரம் — அளிப்பரோவளியர்சே
அறிகிலேன்-அறிகிலேன் — அறிகிலேன்-அறிகிலேன் (இ)
அன்பரைக்காக்குங்கடன் — அமைந்திருந்துமுன்னிடம்
துன்பமடையும்வண்ணந் — தொருத்தையேயென்னதின்னம்
சொல்லுவாய்-சொல்லுவாய் — சொல்லுவாய்-சொல்லுவாய் (இ)
சுடலைத்தலங்கடந்தே — துரிதமுடனேநடந்தே
இடர்பலவுந்தொலைக்கும் — இந்நகர்த்தெருவீதிக்குள்
எய்தினேன்-எய்தினேன் — எய்தினேன்-எய்தினேன் (இ)

வசனம்.

சிவமே சுடலையைவிட்டுக் காசிநகரின் தெருவீதிக்குள் பிரவேசிக்கலாயினேன்.

சந்திரவதி விருத்தம்.

மன்னவன்வருதிபோல மகனைநான் றகனஞ்செய்யத்
தொன்மறையோனிடத்திற் சுதந்தரம்வாங்குதற்காய்
இன்னகர்வீதியின்க ணெய்தினேனிப்போதிங்கே
யென்னவோகாலிற்றட்டு தின்னதென் றறிகுவேனே.

இராகம்-முகாரி-தாளம்-அடதாளம்.

கண்ணிகள்.

பன்னகபூஷணனே — பெந்தன்
பாதத்திலேதட்டுப் — பட்டதையே
இன்னதெனத்தெரிய — இப்போ
தெற்கையுடனேநான் — பார்க்குதையே



ஏதோவிங்கோர்குழந்தை — வீணாய்
இறந்துகிடப்பதாய்த் — தெரியுதையோ
ஈதோவிதனைநன்றாய் — நான்
இன்னுமேபார்க்கிறேன் — னீஸ்வரனே

(வ-ம்.) இக்குழந்தையை நன்றாகப்பார்க்கின்றேன்.

கண்ணேயென்கண்மணியே யென்றமெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

ஐயையோ — கண்மணியே-நீ
யாவனோபார்பெற்ற — பாலகனோ
மைபொன்ற — இவ்விருளில்வீணாய்
மாண்டுகிடக்காயே — வான்றெருவில்
உன்றந்தைதாயெவரோ — உன்றன்
பெயரொடுவேவூற்ற — பெயரதுவோ
இன்னுயிரில்லாத — ஊர்-ஐயோ
எந்தவிதமாக — விருக்கின்றதோ
சாவுநற்கொலை — செய்தாரோ-அல்லி
தெய்வீகத்தாலே — யிறந்தனையோ
விவர — மறிகிலேனே-நீ
வேந்தன்மகன்போலே — விளங்கிறாயே

வசனம்.

அடா பாலகா உன்னைப்பார்க்கும்பொழுது வேந்தர்கள் சுதன் போலும் துலங்குகின்றனையே ஈதென்ன ஆச்சரியமாகவிருக்கின்றது.

சந்திரவதி விருத்தம்.

இவ்வளாமனைவிறுவென்ன வெண்ணியின் றிரங்கினேனிங்
கிவனென்மகன்போலல்லோ விருக்கிறுனெருக்காற்பேய்கள்
இவனையிழுத்திருத்திங் கெறிந்ததோவருந்திலேனுல்
இன்னதுறுதிபார்த்தின்று னென்றறிந்திடுவேனே.

வசனம்.

ஐயோ தெய்வமே நான் இவனை எவனோவென வெண்ணிப் பலவாறேங்கியழுதேன் இங்கிவனும் என்மகன்போலல்லவோ இருக்கின்றுன் ஒருக்கால் பேய்க்கணங்களிவனை மயானத்தலத்திலிருந்து எடுத்தெறிந்திருக்குமோ என்னமோதெரியவில்லையே ஆனால் இவனுக்குள்ள குறியைப்பார்த்து பிறபாடு இன்னுனெனத் தெரிந்துகொள்வோம் இதோ குறிபார்க்கின்றேன்.

சந்திரவதி தரு.

வேதனைசகிக்காது பாலனே யென்றமெட்டு.

இராகம்-சாவேரி-தாளம்-ஆதி.

பல்லவி.

எவ்விதம்நீதா ளிங்கேவந்தாய்பாலா (எவ்)

அநுபல்லவி.

இவ்விதமுனை யாவனோவென
எங்கிப்பின்குழி யாலழிந்தேனையோ (எவ்)

சரணங்கள்.

சமத்திலே இறைவனிடத்திலே
இப்போதானேவைத் தொப்புவித்துவந்தேன் (எவ்)

கிடத்தபிணம் தின்னும்பேய்க்கணம்
அடுத்தேதவுனை யெடுத்தெறிந்ததோ (எவ்)

தந்திரமுடன் தரணியைக்கொண்ட
மந்திரமுனி மாய்கையோகாணேன் (எவ்)

வசனம்.

அடா கண்மணி இப்போதுதானே வுன்னை இறைவனிடத்தில் வைத் தொப்புவித்துவந்தேன் ஓர்வேளை அன்னவர்க்குந்தெரியாது அச்சுடலையிலிருக்கும் பிணந்தின்னும் பேய்க்கணங்களான துன்னைய டுத்தெடுத்திங் கெறிந்தனவோ வென்னமோதெரியவில்லையே ஐயோ நீயிங்கெவ்விதமாகவந்தனை அப்பா.

பொது வசனம்.

இவ்விதம் சந்திரவதி புலம்பக்கேட்டுக் காசிநகர்க்காவற்காரர் வருகிறவிதம் அறிவீர்கள் சபையோர்களே.

## காசிக்காவலர் வருகிறபாகம்.

காவலர் விருத்தம்.

அறையிலேசல்லடந்தொட் டதன்மிசைகச்சைசூட்டி.
நிறைபெறும்பணிகள்பூட்டி நீளுடுப்பெடுத்துமாட்டி.
சுறைகமழ்பொட்டுமிட்டு நற்றலைப்பாகுகட்டி
முறையுடன்காவலாளர் முருக்குடன்றோன்றினோமே.



நமசிவாயனே யென்றமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

காவலர்வந்தோம் காசிக்காவலர்வந்தோம்
கர்த்தனுற்றஇத்தலத்தில் நித்தநித்தமுற்றிடும்
காரணத்தைக் கண்டுடனகண்டுடன்
கண்டுடனேமகிழ் கொண்டரசனிடம்
விண்டுரைசெய்திடும் திண்டிமிடில்லாக் (கா)

தலையாரி வசனம்.

அப்பா, காவலர்காள் நாமின்றிரவில் மகாராஜா ஆக்கினைப்பிரகாரம் நகர்சோதனைசெய்துவந்ததில் இதுவரை ஒருவிதமான களவுந் தென்படவில்லையென வெண்ணிமனங்குண்ணிவருந் தருணத்தில் ஏதோ அங்கொருவள் பலவாறாக வருந்திக்கொண்டிருக்கிறாள் அங்கு போயதைப்பார்த்து வருவோம் பதுங்கியொதுங்கி வாருங்கள்.

(கா-ர்-வ-ம்.) அப்படியேவருகிறோம் அண்ணே.

தலையாரி வசனம்.

நீ யாரடீ ஓர்குழந்தையைக் கையில்வைத்துக்கொண்டு பலவாறாகவருந்துகின்றாய்சொல்.

(ச-தி-வ-ம்.) ஐயோ தெய்வமே இதுவுமுன் சோதனையோ.

(த-ரி-வ-ம்.) அடா காவலர்காள் லந்தரைப்பொறுத்துங்கள் சீக்கிரம்.

(கா-ர்-வ-ம்.) இதோ பொறுத்துவிட்டோம் அண்ணே.

தலையாரி வசனம்.

காவலர்காள் இவள்செய்திருக்கிற வநீதத்தைப்பார்த்தீர்களா.

(கா-ர்-வ-ம்.) என்ன அண்ணே.

தலையாரி வசனம்.

அடீ இவளெங்கிருந்தோ ஓர்குழந்தையைத் திருடிக்கொண்டுவந்து இக்குவைத்துக்கொன்று குருதியைக்குடித்து தன்குழந்தையைப்பறிகொடுத்தவள்போல் பாசாங்குசெய்து தப்பித்துப்போவதற்காகவெண்ணிப் பலவாறாகவருந்துகின்றாள்.

(கா-ர்-வ-ம்.) ஆம் அண்ணே.

தலையாரி வசனம்.

அப்பா காவலர்காள் இக்குழந்தையைப் பார்க்கும்போது நமது இராஜனுடைய குழந்தைபோலுமிருக்கிறதே நீங்களும் நன்றாகப்பாருங்கள்.

காவலர் வசனம்

ஆம் அண்ணே ஐயையோ இக்குழந்தை நமதரசனுடைய தென்பதற்குச்சந்தேகமே இல்லை. இந்தக்கொடிய சண்டாளியை யாது செய்யலாம்.

தலைபாரி வசனம்.

அடா காவலர்காள் கிட்டுங்களிவளை கட்டுங்கள் கயிற்றால் பிடியுங்கள் கூந்தலை அடியுங்கள் தடியால் இடியுங்கள்கையால் ஒடியுங்கள் எலும்பை சீக்கிரம்.

(கா-ள்-வ-ம்.) அப்படியே செய்தோம் அண்ணே.

சந்திரவதி விருத்தம்.

இக்குழவியைவதைத்தேனென்ன விக்காவலாளர்
மைக்குழல்தனைப்பிடித்தே வன்பெருங்கோபமுற்றே
இக்கணமுதைத்தடித்தெ னெலும்பையுமொடித்தேவினைய்
நைக்கிறுமென்னசெய்வேன் ஞாயமோவிஸ்வநாதா.

கானமயில்மீதேறிவா வென்றமெட்டு.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

கண்ணிகள்,

இதுவுந்தலைவிதியோ-இதற்  கென்செய்வேனுன்கதியோ
சதுர்மறையின்பொருளே  தருந்தவருளே-ஐயோ (இது)

சார்ந்தவர்செய்யுந்தொல்லை-என்னால்  சகிக்கமுடியுதில்லை
காந்துதேயென்றேகம்  கலங்குதென்றனகமையோ (இது)

இத்துயர்க்குள்ளாகவும்-நான்  எங்கிமிகநோகவும்
இத்தலத்திலேயெனை  யேன்படைத்தனை-ஐயோ (இது)

புரிந்தவினையனைத்தும்-இன்று  போதாதென்றோநினைத்து
தெரிந்ததையொன்றொன்றாய்த்  தேறிச்செய்கின்றாயையோ (இது)

என்மீதுனக்கேன்வாது-உனக்  கென்பிழைசெய்தேனோது
சின்மயவடிவமே  திகழ்படிகமேஐயோ (இது)

வசனம்.

ஐயோ விஸ்வநாதனே உனக்கென்ன தாழ்வு செய்தேன் இக்காலமென்னை இவ்வினைக் காளாக்கினை இது தர்மமா வுனக்கு.

காவலர் வசனம்.

என்னடீ விஸ்வநாதனைத் துதிக்கிறாய் அடிப்பேன் கைக்கம்பாலே பேசாதிரடி.



தலையாரி வசனம்.

இருங்கடா காவலர்காள் இவளையடியாதிர்கள் சற்றுப்பொறுங்கள் சொல்கிறேன்.

கா-ர்-வ-ம். நல்லதண்ணே.

தலையாரி வசனம்.

அடியே லண்டி நீயார் உன்குலமென்ன உன்தலமெது உன்பெயர் யாது இந்தக் குழந்தையைக் கொன்றவிதம்யாது சொல்லடீ சீக்கிரமாக. தரையைப்பாராதே.

சந்திரவதி வசனம்.

பொறுங்கள் சொல்லுகிறேன் சப்தசாகரஞ்சூழ்ந்த இவ்வுலகத்தின்கண் இரக்கமின்றி உயிர்ப்பிராணிகளைக் கொன்று அவஸ்தைப்படும் அரக்கியை யறிகிலீரோ ஆதலின் இன்று உயிரிழந்த வமதரசனுடைய குழந்தையெனது கையிலிருக்க இதனை நான் கொன்றதேயில்லை யென்றுங்கள்முன்னே உரைக்கவல்லவளோ இந்தச்சண்டாளி.

தலையாரி வசனம்.

சரி அடா காவலர்காள் இவளையிந்தக் கயிற்றாலே பின்கட்டாகக் கட்டிப்பிடித்துக்கொண்டு வாருங்கள்.

(கா-ர்-வ-ம்.) இதோகட்டினோ மண்ணே.

(ச-தி-வ-ம்.) சிவமே இதுவும் நினதுதிருவருளோ.

தலையாரி வசனம்.

அடியே கொலைகாரி இந்தவீதியின் வழியாய் நடவடி அரசன் சமுகத்திற்கு.

சந்திரவதி விருத்தம்.

தேவர்கள்தேவேநான சின்மயவடிவேதிய
பாவவிமோசனார்த்த பராபரப்பொருளேயிந்தக்
காவலர்நெடுங்கயிற்றாற் கட்டியிக்காசியாளும்
கோவலன்பாற்கொண்டேகக் குறையென்னசெய்தேனையோ.

அன்னகர்பூமிதன்னையிழந் தென்றமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-சாப்பு.

பல்லவி.

இவ்விதிக்கென்செய்வேன்  எவ்விதமியானுய்வேன்
இதுவுமுன்செயலோதா  விஸ்வநானே (இ)

அநுபல்லவி.

செவ்விபெருகுமிந்தச் சேயனையென்னுடைய
சேயனென்றெடுத்தழ மாயஞ்செய்தும்
வெவ்வியகொலைகார வீரியென்றெனையிவர்
மேவிப்பிடித்திடவும் விதித்தனையே (இ)

காவலர் வசனம்.

என்னடி இன்னும் பலவாறாக வலறுகிறாய் இனி கூச்சலிடாது நடவடீ சீக்கிரம்.

(ச-தி-வ-ம்.) அவ்விதமே நடக்கின்றேன் காவலர்காள்.

சரணங்கள்.

இதுவரைபட்ட துன்பம் யாவும்பார்த்திருந்தும்
இத்துன்பத்திற்குமாளாய் வைத்தனையே
இதுமிகுதர்மமோ என்மீதுவர்மமோ
இன்னகாரணமென யானறியேன் (இ)

தலையாரி வசனம்.

அடா காவலர்காள் இவள் கொடூரியாயிருக்கின்றாள் கரத்தின் கம்புகளினால் உரத்தடியுங்கள்.

(கா-ர்-வ-ம்.) முறையிடாமல் விரைவுடன் நடவடி மூர்க்கையே.

சந்திரவதி சொல்.

காவலர்கயிற்றினால் கட்டியதும்போதாமல்
கையாலுங்காலாலுங் கம்பாலும்
கோபமுடன்மிதித்துக் குறுகும்படியடித்துக்
கோவேந்தன்சபைக்கெனைக் கொண்டுபோறார் (இ)

காவலர் வசனம்.

ஏதடீ இவ்வளவு துணிவுற்றழுகிறாய் இடிப்பேன்கையாற் குவட்டில்.

சந்திரவதி சொல்.

மாந்துளிர்மெய்யின்மேலே மலையருவியைப்போலே
வழிந்தோடுதேயிரத்த மாறுமலே
காந்துதேயென்மனங் கலங்குதேயிதென்ன
காலமோமுன்செய்த கர்மமோதான் (இ)

(கா-ர்-வ-ம்.) எங்களுடன்தொடர்ந்து நடந்துவாடி சீக்கிரம்.

சந்திரவதி சொல்.

காளிகிராமேயங்கித் தோளில்மகவைத்தாங்கித்
கடக்கொணாத்துயர்கொண்டு நடக்கவைத்தாய்





நாவினைநோகுதே சகிக்கத்தகுமோவினி
சண்டாளியிதின்னுந் தயவில்லையோ (இ)

(கா-ர்-வ-ம்.) அடியேலண்டி தடத்தை நாடிவாடி நிற்காதே.

சந்திரவதி சொல்.

நற்பணிவிடைசத்யங் கற்பினிலேயொழுக்கம்
நல்லறங்கள்தவறி நடந்தேனே
அற்பரையிகழ்ந்தேனே அருங்கொலைபுரிந்தேனே
அடுத்தோரைக்கெடுத்தேனே வழிகிலனே (இ)

தலையாரி வசனம்.

அப்பா காவலர்காள் இந்தத்திருடியைக் கண்டுபிடித்துக் கயிற்றினாற்கட்டிக் கூட்டிக்கொண்டு அரண்மனைக்கு வந்துசேர்ந்தோம் இனி அரசனிடந் தெரிவிப்போமா.

(கா-ர்-வ-ம்.) அவ்விதமே தெரிவிப்போம் அண்ணே

---

## காசிராஜா விசாரணை செய்யும்பாகம்.

(த-ரி-வ-ம்.) அரசே அனேகவந்தனம்.

(அ-ன்-வ-ம்.) ஆரடா இந்நேரத்தில் வந்தவன்.

(த-ரி-வ-ம்.) பிரபூ யான்தான் தலையாரி.

அரசன் வசனம்.

அடா தலையாரியே நீ யாதுகாரணம்பற்றி யிங்கிந்நேரத்தில் வந்தனை.

தலையாரி வசனம்.

அரசே இங்குவந்த காரணத்தைச் சொல்கின்றேன் சபாமணிமண்டபத்திற் கெழுந்தருளுங்கள்.

(அ-ன்-வ-ம்.) இதோ வருகின்றேம்.

தலையாரி விருத்தம்.

தங்களுத்தரவுபோலச் சார்ந்தொருமுகமாயாங்கள்
அங்கமேமகிழ்ந்துமிக்க வாத்மோடின்றிராத்ரி
அங்கமாநகரைச்சுற்றிச் சோதித்துவரும்போதைய
அங்கனோர்திருடிவந்தே யகப்பட்டாள்கொண்டுவந்தோம்.

வசனம்.

பிரபூ தங்களுத்தரவுபோல இன்றிரவியாங்கள் நகர்சோதனைசெய்துவரும்போது அங்கிந்தத்திருடிவந்தகப்பட்டாள் உடனே கயிற்றாற்கட்டிக்கொண்டுவந்தோம் பாருங்கள் மகராஜ்.

அரசன் விருத்தம்.

என்னடாகாவலர்களீ தென்னவதிசயந்தான்
சொன்னம்போலாரோர்மாது தோளிலோர்சவத்தைத்தாங்கிப்
பன்னருங்கயிற்றாற்கட்டுப் பட்டகமெலிந்துவாடி
என்முனம்நிற்கின்றாளே யிவள்தானாதிருடிசொல்வீர்.

(வ-ம்.) அடா காவலர்காள் இவள்தானா திருடி.

(கா-ர்-வ-ம்.) ஆம் பிரபு.

அரசன் வசனம்.

கேளாய் தலையாரியே இவள்திருடியாகில் இவளிக்குழந்தையைக் கொன்றகாரணத்தைச் சவிஸ்தாரமாகச்சொல்.

தலையாரி விருத்தம்.

மன்னவகேள்நின்றைக்கேட் படியேயாங்கள்
மாநகரின்காவலுக்கா யேகும்போது
நன்னலஞ்சேர்தங்கள்மக வதனையிந்த
ராக்ஷசிவந்தெடுத்தோர்பால் மடியில்வைத்தே
வன்னவுடல்பிளந்துகொன்ற தன்மைகண்டு
வன்கயிற்றால்வரிந்து கட்டிமகிழ்ந்தடித்து
நின்னகத்திலொப்புவித்துச் சிட்சைசெய்ய
நிச்சயித்துக்கொண்டுவந்தோம் நிசமீதின்றே.

வசனம்.

அரசே நான்காவலர்சகிதம் நகர்சோதனைசெய்து வரும்போது தமதுகுழந்தையை யெவ்விதத்தாலோ இந்தராக்ஷசிவந் தெடுத்தோரிடத்தில் தனதுமடியில்வைத்து உடலைப்பிளந்துகொன்ற தன்மையைக்கண்டவுடனேபிடித்து கயிற்றாற்கட்டிக்கொண் டிங்குவந்தேன் ஈதுண்மையானது.

அரசன் வசனம்.

அடா காவலர்காள் எனதுகுழந்தையையா இவள்கொன்றாள்.

(கா-ர்-வ-ம்.) ஆம் பிரபு தாம்தமது பள்ளியறையிற்போய்ப் பார்த்துவந்தால் தெரியவரும்.

அரசன் விருத்தம்.

என்னரியகாவலர்காள் நீவிரென்பா
லியம்பியதோர்சங்கைகளுக் கேற்கவிந்தக்
கன்னிகைபாலகற்குயிர கொன்றாள்காணும்
காசினியையாளுமன்னன் மாதைப்போலத்
தான்றானின்றாளாகினுமியான் புரத்திற்சென்றென்
சுதன்றனையேபார்த்து வருகின்றேன்மிக்க
இன்னல்செய்யாதின்னவளைப் பாதுகாத்தே
யிங்குறுவீர்மிகவுமுஷா ராகத்தானே.





வசனம்.

காவலர்காள் ஈதுண்மையாகின் பள்ளியறையிற் பாலனைப்பார்த்துவருகின்றேன் அதுவரை இன்னவளைத்துன்பஞ் செய்யாதிங்கு வீற்றிருங்கள்.

(கா-ர்-வ-ம்.) உத்திரவுப்படி வீற்றிருக்கின்றோம் அரசே.

(அ-ன்-வ-ம்.) ஐயோதெய்வமே இதுவுமுனது திருவருளோ.

(அ-ன்-வ-ம்.) அடியேநாயகி எழுந்தருள் சீக்கிரம்.

(ம-வி-வ-ம்.) பிராணரக்ஷகா தமக்கேனிவ்வளவு பதட்டம்.

அரசன் விருத்தம்.

மாதரசேயென்னசொல்வேன் மாதவத்தால்நாமளித்தமகவையாரோர்
காதகிவந்தெடுத்தொருபால் வைத்துவதைசெய்தவளைக்காவலாளர்
நீதமுடன்கண்டவளைக்கயிற்றாலே பிணித்துவந்தேநிகழ்த்தினார்கள்
ஆதலால்நீவிரைவாயன்னவனைப் பஞ்சணையினகத்தேபாராய்.

வசனம்.

பெண்ணே நமதுபுத்திரனை யாரோவோர் திருடியிங்குவந்தெடுத்துப்போ யங்கோரிடத்தில்வைத் துயிரைக்கொலைசெய்ததாகக் காவலர்கண்டுபிடித்துக் கயிற்றாற்கட்டிக்கொண்டு வந்திருக்கின்றார் ஆதலால் அன்னவனைப் பஞ்சணையிற்பார் சீக்கிரம்.

மதனவல்லி வசனம்.

ஆ மன்னா நமது குழந்தையையா கொன்றுவிட்டாள் அந்தக் கொடியசண்டாளி.

(அ-ன்-வ-ம்.) ஆம் மாதரசே.

மதனவல்லி விருத்தம்.

மிஞ்சுரும்புகழ்சேர்காசி வேந்தர்கள்வேந்தேயிந்தப்
பஞ்சணையிதிலேநம் பாலனைக்காணோமேதோ
வஞ்சமாயிங்கோர்கன்னி வாசலுந்தோற்றுகின்ற
தெஞ்செய்வோமவனைநாமு மென்றுதான்காண்போமையே.

வசனம்.

அரசே இப்பஞ்சணையிது நம்புத்திரனைக்காணோமே ஏதோ இங்கோர்கன்னிவாசல் தோற்றுகின்றதே ஈதென்னவிபரீதம் இனிநாமன்னவனையென்று காண்போம் எவ்விதமும் பிரமன்விதித்தானோ ஐயோ இனியாதுசெய்குவோம்.

(அ-ன்-வ-ம்.) பெண்ணே நீ வருந்தாதென்னுடன் வா.

(ம-வி-வ-ம்.) இதோ வருகிறேன் இறைவனே.

அரசன் விருத்தம்.

அப்பனேபரமேதேவா வயிர்த்தபேகிளியேவண்டே
செப்பருங்கனியேதேனே சீனிகற்கண்டேபாகே
கற்பகக்கொழுந்தேமின் னுங் கனகமாமணியேயிந்நாள்
இப்படியாவிசையா லிறந்தையோமகனேஐயோ.

ஐயோமகனே யென்னசெய்வேண்டா யென்றமெட்டு.

இராகம்-தோடி-தாளம்-அடதாளம்.

கண்ணிகள்.

என்மகனேயின் றிறந்தாயோ-ஐயோ
எங்களைநீயு மறந்தாயோ
தொன்னகர்வாழ்வைத் துறந்தாயோ-மேலாம்
சொற்கத்தடைந்து சிறந்தாயோ
என்னைத்தவிக்கவும் விட்டாயோ-எனக்
கிந்தத்துயர்ப்பயிர் நட்டாயோ
உன்னைநானம்பியும் வெறுத்தாயோ-இந்த
வொண்டொடிகொல்லப் பொறுத்தாயோ
தீயனெனவேசச் செய்தாயோ-நான்
சிந்தித்தவெண்ணத்தைக் கொய்தாயோ
மாயமாயென்னைவைத்து நீங்கினையோ-இந்த
வல்வினைக்காளாக நோங்கினையோ
ஆனைமகனே யென்றழைப்பேனோ-அழைத்
தாதரவாயுற் றழைப்பேனோ
பாராளா திவ்விதமானாயோ-இந்தப்
பாபத்திற்குள்ளாகிப் போனாயோ

வசனம்.

கண்மணி இக்காலயிப்பாதகிகையாலிறக்கவோ எனதுதிரத்தில் நீஜெனித்தனை ஐயோ இனியாதுசெய்குவேன் அப்பா மகனே.

அரசன் தரு.

எங்கேயென் றுதேடுவே னென்றமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

இனியுனைநானென் றுகாண்பேன் என்னருமைக்கண்மணியே (இ)

அநுபல்லவி.

அநியாயமாயென்னையும் ஐயோவுனதன்னையையும்
தனிமையாகவேவிட்டுத் தரணிமிசையிறந்தாயே (இ)



சரணங்கள்.

பதினெட்டுபாஷைகளும் பலபலசாஸ்திரங்களும்
பதிவுடன்கற்றுணர்ந்த பண்டிதனேயென்சுதனே (இ)
உன்னால்நற்கதிதன்னி லுற்றிடலாமெனவுன்னி
என்னுளமகிழ்ந்திருந்தேன் இதற்கிவ்விதஞ்செய்தாயே (இ)
பட்டாபிஷேகஞ்சூட்டிப் பாருலகைச்செங்கோல்நாட்டி
அட்டாங்கயோகத்துடன் ஆளுவாயென்றிருந்தேனே (இ)
என்பேர்நீசொல்வாயென்றே இன்பங்கொண்டதற்கின்றே
உன்பேர்நான்சொல்லியழ வுலகிலெனைவைத்தாயே (இ)
எங்களுக்குநீகொள்ளி யிட்டெள்ளுந்தண்ணீருமள்ளி
அங்கரத்தாலிறைக்காது அண்டருலகடைந்தாயே (இ)
அபன்விதித்தவிதியோ அல்லதெவர்செய்சதியோ
தியங்கிறேனின்னதெனத் தெரியாதுதீயபாவி (இ)

(வ-ம்.) அடா பாலகா இனியெந்த ஜென்மத்திலுன்னைக் காண்பேன்.

மதனவல்லி விருத்தம்.

காதலாய்நானுமென்றன் கணவனுமுலகிலாதி
நாதனைநோக்கிமேனாள் நற்றவம்புரிந்தேபத்து
மாதமுஞ்சுமந்துபெற்ற வயிர்கொதித்திடவிட்டிந்தப்
பாதகிகையில்நீதான் பட்டிறந்தாயோபாலா.

சேருமுன்னே சேவல்கூவுதே யென்றமெட்டு.

இராகம்-யமாக-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஐயையோவென்செய்குவேனடா அப்பனேயினி (ஐ)

அநுபல்லவி.

துய்யபஞ்சணையைவிட்டுத் தோசிகையிலகப்பட்டு
மையிருளிலேவெளிப்பட்டு மாண்டாயேயினி (ஐ)

சரணங்கள்.

கோபித்துனைவைதேனோ கொடுமைமிகச்செய்தேனோ
லோபித்தனமாகவுய்த்தேனோ நோகவும்விட்டாய் (ஐ)
சிசுக்களைமடித்தேனோ ஸ்திரிகளையடித்தேனோ
பசுக்களைப்பதத்தால்மிதித்தேனோ பாவிபாகினேன் (ஐ)
ஜெகமிசையுன்னைப்பெற்றே தினமும்போற்றிவளர்த்தே
அகமகிழ்ந்திருந்ததற்கென்னை அலறவைத்தாய் (ஐ)

எவனைமகனேயென்று யானழைப்பேனோவின்று
புவனசெங்கோல்புரியாமலே போனையேயினி (ஐ)
எப்பிறப்பிற்காண்பேனோ இதயமகிழ்பூண்பேனோ
இப்பிறப்பிலிழைத்தபாவமோ இழந்தேனுனை (ஐ)

வசனம்.

பாலகா இக்காலம் நீ இவ்விதிக்கோ ஆளாகினை இதற்கு யாது செய்குவேன்.

மதனவல்லி விருத்தம்.

திருக்கடவுள்திருவரத்தாற் செனித்தவென்றன்
சேயுயிரைச்செகுத்தகள்ளி செப்பக்கேளாய்,
அருட்கண்ணாலிங்குனைநான் பார்க்குங்காலை
யரசனதுதேவியைப்போல் விளங்குகின்றாய்
ஒருக்கால்வல்லரக்கியரிவ் வுருவம்பூண்டே
வுலகைமயக்கிடுவளென வுணர்ந்தேனுமால்
அரக்கியோவல்லதுநீ இராஜஸ்திரீயோ
வதனையெனக்கிதமுடனே யருள்செய்வாயே.

வசனம்.

அடியே யெனது குழந்தையைக்கொன்ற கொடியசண்டாளி உன்னைப்பார்க்குங்கால் இராஜஸ்திரீயைப்போலிருக்கின்றாயே ஆனால் இராக்ஷசியரிவ்வுருவம்புனைந்து உலகத்தைமயக்கிடுவ ளெனச்சுருதியின்மூலமா யுணர்ந்திருக்கின்றேன் ஆதலின் நீ இராக்ஷசியா அல்லது இராஜஸ்திரீயாசொல் சீக்கிரம்.

சந்திரவதி விருத்தம்.

படிபுரந்திடுமிராஜன் பாரியாயிருப்பேனாகின்
அடியவளிரவிலிந்தவரண் மனைக்குட்புகுந்துன்
வடிவழகனையெடுத்து வதைசெயத்துணிவேனென்னைக்
கொடியவல்லரக்கியென்னக் குறித்திடுமென்றன்றாயே.

வசனம்.

தாயே நான் இராஜஸ்திரீயா யிருப்பேனாகில் இன்றிரவில் இந்த அரண்மனைக்குட்பிரவேசித்து உமதுகுழந்தையை யெடுத்துக்கொல்வேனா ஆதலின் என்னை இராக்ஷசியெனத் தீர்மானித்துக்கொள்ளும் அம்மணி.

(ம-லி-வ-ம்.) ஆ ஆ அப்படியா அடியே மூர்க்கி.





## மதனவல்லிக்கும் சந்திரவதிக்கும் தர்க்கம்.

இராகம்-சாபி-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

மையிருளில்நீமொய்த்தே மாடத்திற்கன்னம்வைத்தே
மலரணையையடுத்தே மைந்தனையுமெடுத்தே
மாயமாய்க்கொண்டுசென்றே அடிகள்ளி-கள்ளி
வதைத்துவிட்டாயோவின்றே அடியேகள்ளிகள்ளி-வ-வ

சந்திரவதி தரு.

இராகம்-சாபி-தாளம்-ஆதி,

கண்ணிகள்.

கள்ளியென்றேகூறவும் கண்டபடிதூறவும்
தள்ளியடித்துச்சீறவும் தனக்கதிகாரமுண்டு
என்-அம்மணீ தனக்கதிகாரமுண்டு

மதனவல்லி.

புத்ரனையுமுதைத்தே பொக்கனவேவதைத்தே
பொற்குருதிகுடித்தே பொற்பணியையவிழ்த்தே
பூசித்தவள்நீதானே அடி-அரக்கி
புகலடியென்றன்முன்னே அடி-அரக்கி-பு-பு

சந்திரவதி.

அரக்கியென்றவளும்நானே அருமகவைக்கொன்றேனே
இரத்தங்குடித்தேவுய்த்தேனே எழிற்பணிகவர்ந்தேனே
என்-அம்மணீ எழிற்பணிகவர்ந்தேனே

மதனவல்லி.

இவ்விதமேன்புரிந்தாய் என்னவர்மந்தெரிந்தாய்
இகலகத்திலணிந்தாய் என்னவர்மந்தெரிந்தாய்
என்னடியுந்திராணிதான் அடியேமூர்க்கி
இனுவுமுனக்கழகோ அடியேமூர்க்கி-இ-இ

சந்திரவதி.

இன்றுன்சேயின்றசையுண்ண வெண்ணிநானுமிவ்வண்ணம்
கொன்றுவழிந்தசெவ்வண்ணக் குருதியுங்குடித்ததுண்டு
என்-அம்மணீ குருதியுங்குடித்ததுண்டு

மதனவல்லி.

அரக்கியாயிருந்தாலும் அல்லாதபேயானாலும்
அவனியில்மென்மேலும் அருமகவோர்காலும்

அன்புடன்பெற்றிலையோ — அடீ-மலடீ
அருமையாய்வளர்த்திலையோ — அடீ-மலடீ-அ-அ

சந்திரவதி.

குழந்தைகளைப்பெற்றாலும் — குலவழிக்கமெக்காலும்
கொலைமற்றெதுவானாலும் — கூசாமற்செய்திடுவோம்
என்-அம்மணீ — கூசாமற்செய்திடுவோம்

மதனவல்லி.

லெச்சையைத்தள்ளியே — நின்றிங்கேதுள்ளியே
நீதியையள்ளியே — நிகழ்த்திடுங்கள்ளியே
நிருபனிடத்தினிற்சொல்லி — அடியே-லண்டீ
நின்னைக்கொல்லச்செய்கிறேன் — அடியே-லண்டி

சந்திரவதி.

லண்டியென்றும்பின்னையே — நவிலவேண்டாமென்னையே
விண்டபடியிவ்வேளையே — என்னவேண்டுமென்றாலுஞ்செய்யே
என்-அம்மணீ — வேண்டுமென்றாலுஞ்செய்யே

வசனம்.

அம்மணி தாம் என்னை யென்னசிக்ஷை செய்யவேண்டுமென்றாலும் செய்வீராக.

(ம-வி-வ-ம்.) அடியேமூர்க்கி உனக்கிவ்வளவு துணிவும்வந்ததோ.

அரசன் வசனம்.

பெண்ணே மதனவல்லி நீ இனிமேலிவளுடன் வாதாடிக்கொண்டிருப்பதில் பிரயோசனமில்லை என்சமீபத்தில்வா.

(ம-வி-வ-ம்.) நல்லது பிராணரக்ஷகா.

(அ-ன்-வ-ம்.) அடா சேவகா நமது மந்திரிகளையழைத்துவா.

(சே-ன்-வ-ம்.) இதோ அழைத்துவருகின்றேன் அரசே.

சேவகன் வசனம்.

சுவாமி மகாராஜா அவர்கள் தங்களையழைத்துவரும்படி யுத்தரவாயிருக்கிறது.

(ம-ரி-வ-ம்.) இதோவருகின்றோம் சேவகா.

(சே-ன்-வ-ம்.) அரசே தமது மதிவல்லோர்களிதோ வருகின்றார்கள்.

(ம-ரி-வ-ம்.) ஐயோ அரசே ஈதென்ன வதீதமாகவிருக்கின்றது.



அரசன் வசனம்.

ஆ மதிவல்லவர்காள் பதறாதருகில் வீற்றிருங்கள் இப்புதுமையான வதீதத்தை விசாரணைசெய்வோம்.

(ம-ரி-வ-ம்.) உத்திரவுப்படியே அரசே

அரசன் விருத்தம்.

அடங்கியேயொடுங்கிநிற்கு மாயிழையாளேயுன்றன்
தடங்கையில்வைத்திருக்குஞ் சவத்தைநீகீழேவைத்து
நடந்தகாரணங்களை ஞாயமாயென்றன்முன்னே
திடஞ்செறிந்துன்னுவாலே செப்புவாய்தெரியத்தானே.

வசனம்.

கேளாய் பெண்ணே உனது கரத்தினிடமாகவைத்திருக்கும் இச்சவத்தைக்கீழேவைத்து நடந்தகாரணங்களை ஞாயமாகச்சொல்.

(ச-தி-வ-ம்.) நல்லது அரசே.

சந்திரவதி விருத்தம்.

மன்னவகேள் வடிவுறுநின்மகவினுயிர்
வதைத்தவிதம் வழுத்தக்கண்டாய்
இன்னதுறவியான்கரத்தி லெடுத்துவந்த
சவத்தையுநீ யெதிரேகண்டாய்
வன்னமுறவா னுடம்பில்வாய்ந்தகுரு
தித்திரளின வாடைகண்டாய்
இன்னதிலொ ரையமில்லையானுமொரு
வல்லரக்கி யறிகுவாயே.

வசனம்.

பிரபூ இவ்விதகாரணங்களையெல்லாம் தாம் என்னிடத்திலிருக்கக்கண்டும் ஏனின்னும் என்மீதுஐயப்படுகின்றீர் வேண்டாம் இயான் அரக்கியேயல்லது மானிடஜென்மமல்ல ஈதுண்மை.

அரசன் வசனம்.

அமைச்சர்காள் இவள்சொல்வதைக் கேட்கக்கேட்க பரிதாபமாகவிருக்கின்றதே ஈதென்னகாலமோ தெரிகிலேன்.

(ம-ரி-வ-ம்.) ஆம் பிரபூ இன்னும் பூரணமாகவிசாரிப்போம்.

சந்திரவதி விருத்தம்.

என்னுளம்வன்னரமாம் வந்தனையே
யுண்டிடல மெடுத்தேனின்பாய்
இன்னாளிவ்விரவுதனில் நின்மகவின்
மாமிசமுண்டிடதா னென்னிப்

பொன்னுருந்திருமதில்சூழ் புதியமணி
மாளிகையிற் புகுந்தெடுத்துப்
பின்னால்வந்தோர்பால் வைத்தின்னவி
கொன்றதுண்மை பிறங்கும்வேந்தே.

வசனம்.

பிரபூ நானிதுவரை நரமாமிசங்களைத்தின் றுடல்வளர்த்தேன் இன்று தமதுகுழந்தையின் மாமிசந்தின்றதற்கு அதிகருசியாயிருக்குமெனவெண்ணி இந்தராத்திரிகாலத்தில் இவ்வரண்மனையிற் புகுந்திதனையெடுத்துக்கொண் டோரிடத்தில்வைத்து வதைத்ததுண்மை.

அரசன் விருத்தம்.

என்னரியவமைச்சர்களே யிவளடக்க
மொடுக்கமிவை யிரண்டும்பார்க்கிற்
றன்னரமா மிசம்புசித்துச்
சுழலரக்கிபோலாகத் தோற்றவில்லை
இன்னவளின் றிழைத்தபலவிடராலிவ்
வண்ணமிவ ளியம்புகின்றாள்
இன்னவையிக்கணநமக்கே சுடச்சுடவு
முரைக்குமிதற் கென்செய்வோமே.

வசனம்.

அமைச்சர்காள் இன்னவளுடைய அடக்கமும் ஒடுக்கமும்பார்த்தால் அரக்கியாகத்தோற்றவில்லை ஒருக்கால் நமதுகாவலர்களிழைத்த பலவிதமான இடராலிவ்விதஞ் சொல்லுகிறாளென வெண்ணுகின்றேன் ஆனாலின்னவள் சொன்னசொல்லானது நமக்குச் சுடச்சுடவுமுரைக்கும் இன்னுமியம்புகின்றேன் கேளுங்கள்.

அரசன் விருத்தம்.

பக்குவமாய்க்கொலைபுரிந்தபாதகரைக் கண்ணுற் றீப்பார்க்கிலன்னோர்
கட்குறியால்முகக்குறியாற்கைக்குறியாற் காற்குறியாற்காணலாகும்
அக்குறிகளிற்பதிவோடெக்குறிக ளாயினுமிவ்வணங்கனுள்பால்
இக்கணந்தோற்றுதலிலெற்கினிச் சந்தேகமென்பதில்லைத்தானே.

வசனம்.

ஆனதினா லின்னவள்பேரி லெனக்கு சந்தேகமேயில்லை அமைச்சர்காள்.

(ம-ரி-வ-ம்.) மெய்தான் வேந்தே.



காவலர் விருத்தம்.

ஐயனேகேளுந்தங்க ளருமகவதனையந்தத்
தையலாளெடுத்துப்போன தாளடிப்பின்சென்றின்னாள்
கையினாற்கொன்றவண்ணங் கண்டிங்கேகொண்டுவந்தோம்
மெய்யினைத்தள்ளிப்பொய்யை விளம்பவுந்நாயமுண்டோ.

வசனம்.

கேளும் அரசே தங்களுடையதநயனை இந்தக்கள்ளியெடுத்துப்போன அடியின்பிறகேசென்று இன்னவள்கொன்றபடியேகண்டு இங்கு பின்கட்டாகக் கட்டிக்கொண்டுவந்தோமேயல்லது மெய்யைத்தள்ளிப்பொய்யையுரைப்பதற்கு விதியுண்டோ எங்கள் ஆண்டவனே நன்றாகயோசிக்கவேண்டும்.

அரசன் விருத்தம்.

இங்குநீரிக்தவண்ண மியம்பிடிலென்பயன்காண்
வெங்கொலைபுரிந்ததான விதியில்நீவிர்மேவி
அங்குறப்பதிந்திருக்கு மடிகளிவ்விதமாது
தங்கழலடியுண்டென்னிற் சாற்றுவீர்பார்த்துவந்தே

வசனம்.

அடகாவலர்காள் நீங்களிவ்விதமியம்புவதில்யாதொருபிரயோசனமுமில்லை கொடிதாகிய கொலைபுரிந்தவிதிக்குச்சென்று அங்குதோற்றும்படியாகப் பதிந்திருக்கின்ற அனேகஅடிகளி இந்தப்பெண்ணுடைய அடிகள்பதிந்திருப்பதும் இல்லாததும்பார்த்துவந்து சொல்லுங்கள்.

காவலர் வசனம்.

நல்லதரசே இன்னவளையுங் கூட்டிக்கொண்டுபோய் அடிபரிசோதித்து வருகின்றோம்.

அரசன் வசனம்.

நல்லது அமைச்சர்காள் நீங்களும் இவர்களுடன் போய்ப்பார்த்துவாருங்கள்.

மந்திரிகள் வசனம்.

உத்தரவுப்படி பார்த்துவருகின்றோம் அரசே அடாகாவலர்காள் இவெட்டியைப்பொருத்திக்கொண்டு வாருங்கள்.

(கா-ர்-வ-ம்.) இதோ பொருத்திக்கொண்டுவந்தோம் சுவாமி.

மந்திரி வசனம்.

அடாகாவலர்காள் வாருங்கள் இன்னவளுடைய அடியைப்பரிசோதித்துவருவோம்.

(கா-ர்-வ-ம்.) உத்தரவுப்படி வருகிறோம்சுவாமி.

(ம-ரி-வ-ம்.) அம்மா நீயும் எங்களுடன் வாரும்.

(ச-தி-வ-ம்.) இதோவருகின்றேன் பிரபூ.

மந்திரி வசனம்.

அடா காவலர்காள் இன்னவள் கன்னம்வைத்திருக்கிற இடத்திற்குப்பின்னிருக்கும் வீதிக்குச்செல்லுங்கள்.

காவலர் வசனம்.

உத்திரவுப்படி செல்லுகிறோம் சுவாமி இதுதான் கன்னம்வைத்திருக்கிற இடத்திற்குப் பின்னிருக்கும்வீதி யிங்கிருந்து இவள்சுவைவைத்துக் கொண்டதான இடம்வரையிலும் அடிபரிசோதிக்க வேண்டும்.

மந்திரி வசனம்.

நல்லது அவ்விதமே அடிபரிசோதிப்போம் நீவெட்டியைத் தூலக்கிப் பிடித்துவாருங்கள்.

(கா-ர்-வ-ம்.) உத்தரவுப்படி பிடித்துவருகிறோம் சுவாமி.

(ம-ரி-வ-ம்.) அம்மா நீ இந்த அடியிதுன்னடியைவை பார்ப்போம்.

(ச-தி-வ-ம்.) இதோ வைத்தேன் ஐயா,

மந்திரி வசனம்.

என்னடா காவலர்காள் இவ்விடத்தில் இவளுடைய அடியேஇல்லையே வது பொய்யுஞ்சொல்லத் துணிந்தீர்களோ மூர்க்கர்காள்.

காவலர் வசனம்.

பிரபூ கோபமுருது இன்னும்சற்றுதூரம் தள்ளிப்போய்ப்பார்த்தால் எங்களுடைய பொய்யும்மெய்யும் வெளியாகும்.

மந்திரி வசனம்.

நல்லதவ்விதமே பார்ப்போம்வாருங்கள் அம்மா இந்தஅடிகளில் உன்னடியைவை பார்ப்போம்



(ச-தி-வ-ம்.) இதோவைத்தேன் பிரபூ.

(ம-ரி-வ-ம்.) என்னடாகாவலர்காள் இவ்விடத்திலுங்காணோம்.

(கா-ர்-வ-ம்.) பிரபூ இன்னும்சற்று தள்ளிவாருங்கள்.

(ம-ரி-வ-ம்.) இதோவருகிறோம் காவலர்காள்.

## விஸ்வாமித்திரன் வருகிறது.

விஸ்வாமித்திரன் விருத்தம்.

இன்னகர்மன்மகவை யவள்கொன்றாலன்றோ
இங்கவடன்காலடிக ளிருக்குமானால்
என்னரியசபதந்தை வேறும்வன்னம்
இனியவள்தமடிகளைப்போ லெழுதிவைத்துப்
பின்னவளைப்பெருங்கொலைக்கு ளாக்கியிவ்வூர்ப்
பெருமான்றன்வருதியைப்போற் கடலையின்கண்
வின்னமுறவருவளவ டன்மணாளன்
வெட்டானவ்வேளையிதை யெய்ப்பிப்பேனே.

வசனம்.

ஆகபாஷ் விஸ்வாமித்திரனென்ற வெனக்கிப்போதுதான் நல்ல தருணம்வாய்த்தது யாதெனில் இந்நகரத்தரசன் குழந்தையை அச்சந்திரவதிகொன்றாலன்றே இங்கவளுடைய அடிகளிருக்கக்கூடும் ஆனால் எனதுசபதத்தை நிறைவேற்றவேண்டியது முக்கியமானதாயிருக்கிறது இனிமேல் இங்குஅன்னவளுடைய அடிகளைப்போலெழுதிவைத்து மற்றஅடிகளையெல்லாமழித்துப் பின்னர் அன்னவளைக்கொலைக்குட்படுத்தி இவ்வூர் இறைவன்வருதிப்படி வெட்டப்படுவதற்கு மயானத்தை நாடிவருவள் அப்போது தன்மனைவியை அவ்வரிச்சந்திரன் வெட்டத்துணியமாட்டான் உடனே அன்னவனைப்பொய்யனென இயாவர்க்கும்நிந்த்து வசிஷ்டனையும் வெல்வேன் ஆதலின் அன்னவளடிபோலெழுதுகின்றேன் இதோ இங்கிருக்கும் அடிகளையெல்லாமழித்து சந்திரவதியின் அடிகளைப்போலெழுதிவிட்டேன் இனி நடக்கும் அதிசயங்களை யொளிந்திருந்துபார்ப்பேன்.

காவலர் வசனம்.

சுவாமி இதோ இருக்கிற அடிகளில் இவளுடைய அடிகளை வைக்கச்சொல்லிப் பாருங்கள்.

மந்திரி வசனம்.

இதோபார்க்கின்றேன் காவலர்காள் பெண்ணே இந்தஅடிகளில் உன்னடியைவை பார்ப்போம்.

(ச-தி-வ-ம்.) இதோவைத்தேன் ஐயா.

(ம-ரி-வ-ம்.) சரி இந்தஅடிகளின் பேரில்லை.

(ச-தி-வ-ம்.) இதோவைத்தேன் ஐயா.

(கா-ர்-வ-ம்.) சுவாமி இப்போதாவது சந்தேகந் தெளிந்ததா.

சந்திரவதி வசனம்.

எனக்கிப்போதுதான் சந்தேகந்தெளிந்தது ஏமாதே இதுவுன்னடிகள்தானே.

(சூ-தி-வ-ம்.) பிரபூ இது எனதடிகளென்பதற்கு சந்தேகமில்லை.

மந்திரி வசனம்.

சரி காவலர்காள் இன்னவளைவிட்டுவிடாது பிடித்தபிடியுடன் கொண்டுவாருங்கள்.

(கா-ர்-வ-ம்.) உத்தரவுபோற் கொண்டுவருகிறோம் சுவாமி.

(கா-ர்வ-ம்) அடியேகள்ளி இந்தவழியாய்நடவடி அரசன்சமுகத்திற்கு.

(ச-தி-வ-ம்.) இதோ நடந்துவருகின்றேன் ஐயா காவலர்காள்.

ஏனிந்தத்துயரமையா யென்றமெட்டு.

இராகம்-புன்னாகவராளி-தாளம்-சாப்பு.

பல்லவி.

இப்போதுதான்மகிழ்ந்தனையோ      ஜெகதீஸ்வரனே (இ)

அநுபல்லவி.

எப்போதும்நீயேதுணை      யென்றிருந்ததற்கெனை
இவ்வினைக்குட்படுத்தி      யீஸ்வரியாளுடனே (இ)

சரணங்கள்,

தருமமோவுனக்கிதுவும்      சிவசங்கரனே-தரு
வருமமோவல்லதேதும்      மனஸ்தாபமோவோது
கருமமோசெய்தேனிந்தக்      கதிக்காளாய்விதித்தநீ (இ)

கருணையிரங்கவில்லையோ      கர்த்தனேயின்னும்-கரு
திருமகனையிழந்தும்      திருடியாகியேநொந்து
சிட்சைப்படவும்சொம்ப      லெச்சைப்படவுஞ்செய்து (இ)



எவர்செய்தவனியாயமோ      ஈதறியேனே-எவர்
தவமுனிமாயமோ      சதுர்முகன்ஞாயமோ
சண்டாளியென்றனைக்      கண்டாரோசவுஞ்செய்து (இ)

வசனம்.

ஐயோ ஆதிசிவமே உனக்கென்ன தாழ்வுசெய்தேன் இக்கதிக்கென்னை ஆளாக்கினைத் தருமமோ.

(கா-ர்-வ-ம்.) அடியேகொலைகாரி கூச்சலிடாது நடந்துவாடி சீக்கிரம்.

(ச-தி-வ-ம்.) நல்லது அப்பா.

மந்திரி விருத்தம்.

எங்களாண்டவனேகேளும் யாங்களின்வருதிபோல
அங்குசென்றங்கேயுள்ள வடிகளைச்சோதிக்குங்கால்
எங்குமிப்பெரியகள்ளி யிணையடிதானேயன்றி
அங்குமற்றடிகளில்லை யறிந்திவணடைந்தோமின்றே.

வசனம்.

அனேகவந்தனம் பிரபூ தமதுத்தரவுபோல் யான்காவலர்சகிதம் இவளையுமழைத்துக்கொண் டங்குபோய் அங்குள்ள அடிகளைச்சோதித்த மாத்திரத்தில் எங்கும் இந்தத்திருடியின் அடிகளாகவிருக்கிறதேயன்றி வேற்றடிகளில்லை ஆகையால் இவள்திருடியென்பதற்கு யாதொருசந்தேகமுமில்லை.

(அ-ன்-வ-ம்.) நல்லது மந்திரி சமீபத்தில்வீற்றிரும்.

(ம-ரி-வ-ம்.) உத்தரபோல் வீற்றிருக்கிறேன் அரசே.

அரசன் விருத்தம்.

இலக்குமியனையமாதே யானுனைப்பார்த்தமட்டில்
நலக்கறக்கொலைபுரிந்த லட்சணம்போற்றெரியவில்லை
கலக்கமில்லாமலுள்ள காரணமின்னதென்னத்
துலக்கமாயென்றன்முன்னே சொல்லுவாய்சொல்லுவாயே.

வசனம்.

ஐயோ பெண்ணே நான் உன்னைப்பார்த்தமட்டிலும் கொலைபுரிந்தவளாகக் காணப்படவில்லை இனிகலக்கமுறாதுள்ள காரணத்தையின்னதெனத் தெரியச்சொல்.

சந்திரவதி விருத்தம்.

கொடியவோர்கொலைபுரிந்த குறிப்பறிந்தென்னையின்னோர்
நெடியவிக்கயிற்றாற்கட்டி நின்வசமொப்புவித்த
படிவிசாரித்தீயானும் பதில்மொழிபகர்ந்தேனம்பா
தடிபரிசோதித்தும்பின் ஐயமேனரசர்கோவே.

வசனம்.

பிரபூ யான்கொலைசெய்த குறிப்பறிந்து இக்காவலர்களென்னைப் பிடித்துக்கயிற்றால் கட்டிக்கொண்டுவந்து தமது வசமொப்புவித்த படியே விசாரித்தும் அதனை நம்பாது அடியைப் பரிசோதித்துவரச் சொன்னீர் அடியும் சரியாகவிருக்கிறது இனிமேலென்மீது சந்தேக மேன் நானே திருடி கொலைக்கும் பாத்யஸ்தன்.

அரசன் விருத்தம்.

மந்திரத்தலைவர்காளிம் மாதினைப்பார்க்குங்காலை
செந்திருமகளைப்போலுஞ் சிறக்கிறாள்சிறக்குமின்னாள்
தந்திரக்கொலைகள்செய்யத் தக்கவளல்லவானால்
அந்திருவடியிருக்கு கருவினையடைந்ததென்னே.

வசனம்.

அமைச்சர்காள் இன்னவளைப்பார்க்குங்கால் ஆதிலெட்சுமியைப் போலும் துலங்குகின்றாள் இவ்விதந்துலங்குவதான இப்பெண்கொலை செய்யத்துணியமாட்டாளென வெண்ணுகின்றேன் ஆனால் இவளுடை ய அடியிருப்பதாக விளம்புகின்றீர்கள் ஐயோ இக்காலம் இவளுக்கெ வ்விதமான வினைவந்தடைந்திருக்கின்றதோ அறிகிலேன்.

மந்திரி வசனம்.

பிரபூ இவள்திருடியென்பதற் கையமேயில்லை கேவலம் இவளுக் காக இன்னும் எனிவ்வளவுநாரம் இரங்கவேண்டும்.

(அ-ன்-வ-ம்) அமைச்சர்காள் பதறாதின்னும் ஆலோசனைசெய்யுங்கள்

(ம-ரி-வ-ம்.) நல்லதரசே.

அரசன் விருத்தம்.

நெடியநாள்நெடியவனை நினைந்துயானும்
நேரிழையுந்தவமியற்றிப் பெற்றெடுத்தே
படியையரசாட்சிசெய்ய வளர்த்துவந்த
பாலனுயிர்போனதொரு பாரமல்லக்
கொடியிடைநற்கோகனகை யனையவித்தக்
கோதையையாங்கொலைபுரிந்த கொடியளென்ன
அடிகளினாலறியினுமக் குறிகளில்லை.
யச்சமற்றுச்சிட்சைசெய்வ தறமோமந்திரி.



வசனம்.

மந்திரி எவ்வாறிவளைச் சிட்சைசெய்யும்படி யுத்தரவுசெய்வது ஐ யோ இந்தப்பாவத்திற்கென் செய்வேன்.

மந்திரி வசனம்.

பிரபூ தாம் இன்னவளுக்காக இன்னும் பரிதாபப்படுவது உசிதமல்ல.

அரசன் வசனம்.

அமைச்சர்காள் உலகத்தில் யாதொரு உயிரைக்கொலைபுரிந்தவர் களை எவ்விதசிட்சைசெய்யலாமெனத் தருமசாஸ்திரங் கூறுகின்றது அதனைப்பார்த்துச் சொல்லுங்கள்.

மந்திரி வசனம்.

பிரபூ யாதொரு உயிரைக்கொலைசெய்தவர்களை கட்கத்தால் வெ ட்டும்படி தருமசாஸ்திரங்கூறுகின்றது ஆனதால் இன்னவளை அவ்வ ண்ணமே செய்யவேண்டியதுதான்.

அரசன் வசனம்.

நல்லது மந்திரீ இந்நகர்தோட்டியாகிய வீரவாகுவை அழைத்து வரும்படிசெய்யும்.

மந்திரி வசனம்.

அடாசேவகா பறைச்சேரிக்குப்போய் வீரவாகுவை அழைத்து க்கொண்டுவா.

(சே-ன்-வ-ம்.) இதோ அன்னவனை யழைத்துவருகின்றேன் பிரபூ.

சேவகன் வசனம்.

அடா வீரவாகு மகாராஜா உன்னை அழைத்துவரும்படி உத்தரவு செய்திருக்கின்றார் வா சீக்கிரம்.

(வீ-கு-வ-ம்.) இதோவருகின்றேன் ஐயே.

(சே-ன்-வ-ம்.) பிரபூ வீரவாகு இதோவந்திருக்கின்றான்.

(ம-ரி-வ-ம்.) நல்லது சேவகா.

வீரவாகு விருத்தம்.

மதியணிவிஸ்வநாதன் மாண்புடன்வாழுங்காசிப்
பதிதனையாளுமெங்கள் பார்த்திபாபோற்றிபோற்றி
அதிவிரைவுடனேயிந்த வடிமையையிங்கழைத்த
விதமதையின்னதென்ன விளம்பிடக்கோருகின்றேன்

வசனம்.

போற்றிமகாராஜ அடிமையை யழைத்தகாரணம் இன்னதென விளம்பக்கோருகின்றேன்.

அரசன் வசனம்.

அடா விரவாகுவே உன்னை அழைத்தகாரணத்தை உரைக்கின்ரேம் அவ்விடத்தில் நில்.

(வி-கு-வ-ம்.) புத்திபுத்தி மகாராஜ்.

அரசன் விருத்தம்,

துட்டியாமிவளென்சேயைத் துணிந்துமேதுணிந்தாளென்னத்
திட்டியாற்கண்டோமென்றே சிலரிவடனைப்பிடித்தே
கட்டிவந்தனர்நீயிந்தக் கட்டோடுங்கொண்டுசென்று
மட்டிலாக்கொலைக்களத்தில் வாளினல்வெட்டுவாயே.

வசனம்.

கேளாய்விரவாகுவே துஷ்டியாகிய இன்னவள் எனதுகுழந்தையைக் கொன்றதாகச் சிலகாவலர் கண்ணுற்கண்டு இவளைப்பிடித்துக் கயிற்ருற்கட்டிக் கொண்டுவந்தனர் ஆகையால் நீ இந்தக்கட்டோடுங் கொண்டுபோய் கொலைக்களத்தில் இவ்வாளினுல் ஒரேவெட்டாகவெட்டி விடுவாயாக.

(வி-கு-வ-ம்.) உத்திரவுப்படியே வெட்டிவிடுகிறேன் மகாராஜ்.

(அ-ன்-வ-ம்.) நல்லது விரவாகுவே.

(வி-கு-வ-ம்.) ஏ அம்மா இந்தமார்க்கமாக நட.

(ச-தி-வ-ம்.) இதோ நடக்கிறேன் விரவாகுவே.

(வி-கு-வ-ம்.) தருகாமல் நட சீக்கிரம்.

காசிராஜன் வசனம்,

மந்திரீ எனதுபுத்திரசிகாமணியை தகனம்செய்யவேண்டியிருப்பதால் அதற்குவேண்டியவற்றைச்செய்து மயானத்திற்குச் சென்று வருவோம்.

(ம-ரி-வ-ம்.) நல்லது அரசே,

## சந்திரவதி மயானத்திற்குச் செல்கிறபாகம்.

சந்திரவதி விருத்தம்,

மறையவரிடத்திற்காசும் வஸ்திரமும்வாங்கியிந்தப்
பறையனுக்கீய்ந்தேவிய்ந்த பாலனைச்சுடாமல்வெய்ய
குறையடைந்தையோவீணுய்க் கொலைக்குமுட்பட்டேயிவ்வூர்
இறையவன்வருதிபோல விறக்கவுமானதின்றே.



அதிபாவியானேன்டா என்றவர்னமெட்டு.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

இதுஞாயமாகுமோ — என்செய்வேன் (இ)

அநுபல்லவி.

சதுர்வேதனே — ஜகநாதனே
பதுமநாபனே — பரமரூபனே (இ)

சரணங்கள்.

எண்ணியதொன்று — நண்ணியதொன்று
பண்ணியகொடும் — பாவமுமேதோ (இ)

கடையனடுத்தே — கயிற்றைப்பிடித்தே
நடநடவென்றே — நவில்கிறனே ஐயோ (இ)

மேவிருள்போச்சே — விடிந்திடலாச்சே
பாவியிமத்தின் — பாதைநாடிப்போறேன் (இ)

பார்த்தவரேசப் — பார்த்தகங்கூச
வேர்த்துநடக்க — விட்டாயேஐயோ (இ)

இதயமுங்கல்லோ — இரங்காதேன்கொலோ
சதம்நீயெனத் — தற்கர்சரணம் (இ)

வசனம்.

ஐயோ கருணாநிதியே, எனது பர்த்தாவின் உத்திரவுபோலவே காலகண்டையனிடத்தில் காற்பணமும் முழத்துண்டும் வாங்கி இப்பறையனுக்கிருந்து அரவத்தால் மாண்ட என் புத்திரசிகாமணியைத் தகனஞ்செய்யாமல் இக்காலம் கொடிதாகிய பலகுறைகளை யடைந்து கொலைக்குமுட்பட்டு இவ்வூர் அரசன் வருதிப்படி என் உயிரையும் இழக்கும்படி செய்தனையே இதுதர்மமா உனக்கென்ன தாழ்வு செய்தேன்.

வீரவாகு வசனம்.

ஏ பாதகிப்பகாரி என்னபுலம்புகின்றாய் பேசாதிரு இதோ பார்த்தாயா நமது பறைச்சேரியை.

(ச-தி-வ-ம்.) பார்த்தேன் அப்பா வீரவாகுவே.

(வீ-கு-வ-ம்.) இவ்விடத்தில் சற்றுநேரம் நில்லம்மா.

(ச-தி-வ-ம்.) நிற்கிறேன் அப்பா.

வீரவாகு வசனம்.

அடா மயானங்காக்கும் அடிமையே சீக்கிரத்தில் இங்கே வாடா.

அரிச்சந்திரன் வசனம்.

ஏன் எஜமானனே என்னையழைத்த காரணம் யாது இயம்பல் வேண்டும்.

வீரவாகு வசனம்.

அடிமையே எமது அரசனுடைய குழந்தையை இரவில் திருடிக் கொண்டுபோய் உடலைப்பிளந்து உயிரைக்கவர்ந்த கள்ளியாகிய இவளைக் கொலைக்களத்திற்கொண்டுபோய் சிரசானது தள்ளியோடிவிழும்படியாக நீ இந்த வாளாயுதத்தால் ஒரேவெட்டாக வெட்டிவிடு.

(அ-ன்-வ-ம்.) நல்லது பிரபு.

வீரவாகு வசனம்.

சரி இந்தக்கயிற்றைப் பிடித்துக்கொள் வாளாயுதத்தையும் வாங்கிக்கொள்.

(அ-ன்-வ-ம்.) வாங்கிக்கொண்டேன் சென்றுவருகிறேன்.

(வீ-கு-வ-ம்.) நல்லது சென்றுவா.

அரிச்சந்திரன் விருத்தம்.

ஐயையோமாதேபெந்த ஹிசைரஞ்சிதமேயிந்நாட்
செய்யநங்குலம்விளங்கச் செனித்தசெல்வனையிழந்தும்
வையகமிசைநீயிந்த வல்வினைக்குள்ளாயேங்கி
வெய்யனென்கைவாளாலே வீய்ந்திடநேர்ந்ததென்னே.

இராகம்-நாதநாமகிரியை-தாளம்-சாப்பு.

ஐயையோயிதென்ன அநீதம்அநீத மென்றமெட்டு.

கண்ணிகள்...

இப்படியுமுனக் செய்தலாகுமோவிதி
யென்னசெய்குவேனையோ கண்மணி-கண்மணி-கண்
எப்படியான்சகித்தே இக்கயிற்றைப்பிடித்தே
இவ்விதியுள்நடப்பேன் கண்மணி-கண்மணி-கண்
கண்டவரேசவும் கண்டுளங்கூசவும்
காலமும்வாய்த்துதே கண்மணி-கண்மணி-கண்
மண்டலத்துள்நம்போல் வன்பாடுபட்டோரெவர்
வகிக்கலாகுமோவிதைக் கண்மணி-கண்மணி-கண்
இதற்கோவுனைநான்பாவி யெழிற்கன்னல்புரிபேணி
இன்பாய்மணம்புரிந்தேன் கண்மணி-கண்மணி-கண்



எதற்காயிச்சென்மமெடுத் திங்கிதைப்பார்த்துழல
ஈசன்கட்டளையிட்டான் கண்மணி-கண்மணி-கண்
முனிகடனையர்க்கு முறியாகியுமின்றைக்கு
முருகனையுமிழந்தும் கண்மணி-கண்மணி-கண்
அனியாயமாயுனையும் அவனியிலிழந்திட
அரிட்டசாபமோ கண்மணி-கண்மணி-கண்

வசனம்.

பிராணரக்ஷகி இக்காலம் பூர்வீகவினையினால் நமது புத்திரசிகாமணியையிழந்தும் அன்னவனுக்கு உத்தரக்கிரியைசெய்யாது உளம் வருந்துந்தருணத்தில் நீயும் இவ்விதவினைக்குடன் பட்டுவந்தாயே இதுயார்செய்தகபடமோ அறிகிலேன் நினைக்கநினைக்க என்மனமானது புண்ணாகின்றதே இதற்கென்செய்வேன்.

சந்திரவதி வசனம்.

பிராணரக்ஷகா தாங்கள்பலவாறு வருந்துவதில் பிரயோஜனமென்ன.

அரசன் விருத்தம்.

சந்திரதயன்புரிந்த தவத்தினாலவதரித்த
சுந்தரமாதேநம்மள் சுதனையேதகனஞ்செய்ய
அந்தணரிடத்திற்காசும் ஆடையும்வாங்கிக்கொண்டு
வந்திடாதிவ்வினைக்குள் வாய்ந்ததென்வழுத்துவாயே.

வசனம்.

மாதர்க்கரசியே நமது புத்திரசிகாமணியைத் தகனஞ்செய்வதற்காக வுன்னையடிமைகொண்ட அந்தணரிடத்திற் காற்பணமும் முழத்துண்டும் வாங்கிக்கொண்டுவராமல் இவ்வினைக்குள்ளாய் வருந்திவருவானேன் நடந்தகாரணமென்ன விபரமாயெடுத்துரைப்பாயாக,

சந்திரவதி விருத்தம்.

மிறைபவன்பால் வரிவாங்கி வருவதற்காய்
வீதிவழிவரும் போதிவ்வூர்
இறையவன்சேய் கிடந்ததையானறியாதென்
சேயென்றெடுத் தேவீணாய்
முறையிடுங்கால்காவலர்கள் மொத்திபெனைக்
கட்டியிறை முன்கொண்டுற்ற
துறையவனந்தடியைச் சோதித்துத்
துணிக்கும்வணந் தொகுத்தான்வேந்தே.

வசனம்.

பிராணரக்ஷகா தம்மிடம் விடைபெற்றுக்கொண்டு அந்தணரிடம் சுதந்தரம்வாங்கி வருவதற்காகச் சுடலையைக் கடந்து நகர்க்குள் நுழைந்து நடந்துவரும்போது அங்கோர்வீதியில் இந்நாட்டரசனது குழந்தை யிறந்துகிடந்தது அதனையறியாது என் குழந்தையெனக் குறிகளாலறிந்தெடுத் தழுதேன் அதுகண்டு காவலர்கள் என்னைக் கயிற்றாற் கட்டியடித்துத் தமது அரசன் சமுகத்தில் கொண்டுபோய்விட அன்னவன் விசாரணைசெய்து அடி பரிசோதித்து என்னைவெட்டிவிடும்படியாய்த் திட்டஞ்செய்தனன் இதுதான் நடந்தகாரணம் வேறில்லை.

(அ-ன்-வ-ம்.) பெண்ணே இதென்ன விபரீதமாயிருக்கிறது.

அரசன் விருத்தம்.

இன்னகர்வாழேந்த வின்றனெழில்மகவை
  யின்றுகொன்றங் கெறிந்ததாரோ
அன்னதைநீகுறிபார்த்தே தன்மகவென் றழக்
  கபடம் அமைத்ததாரோ
பின்னருன்றீன்பேரடிபோற் பிறங்கிட
  மோசம்புரிந்த பேதையாரோ
இன்னவொன் றியான் றிபே னிவ்விதியும்
  பிரமனுனக் கெழுதினானோ.

வசனம்.

கண்மணி இக்காலம் நீ இவ்வித தீவினைக்குட் படும்படி மேற்கூறிய காரணங்களை எவர் செய்தாரோ அறிகிலேன் ஐயோ ஆதியிலென்னபாவம் செய்தனையோ உனக்கிவ்விதியும் இறையவனெழுதினனோ.

சந்திரவதி விருத்தம்.

துன்பத்தைமனதிலெண்ணித் துக்கசாகரத்தில்மூழ்கா
தின்பத்தைத்தேக்கிவாளா லென்னைநீர்வெட்டியேபின்
அன்புற்றுரிடத்திலாவ தாடையும்பணமும்வாங்கித்
தன்புலைச்சியர்துசேயைத் தகனமுஞ்செய்வீர்வேந்தே.

வசனம்.

அரசர்க்கரசே இவ்வாறுண்டான துன்பத்தை பலதரமும் மனதிலெண்ணி துக்கசாகரத்தில் மூழ்காது இன்பத்தையேகொண்டு





தாம் இந்த வாளாயுதத்தா லென்னைவெட்டினபின்பு யாரிடத்திலாவது வியர்சகார்த்தமாகக் காற்பணமும் முழுத்துண்டும் வாங்கித் தமது எஜமானுக்களித்து நமது புத்திரசிகாமணியையும் தகனஞ்செய்யப் பிரார்த்திக்கின்றேன்.

அரசன் வசனம்.

பெண்கள் நாயகமே இக்கொடுமைக் கென்செய்வேன் நினைக்க நினைக்க என்மனம் புண்ணாகுதே நல்லிருக்கட்டும் இதோ சுடலைக்கு வந்துவிட்டோம்.

சந்திரவதி வசனம்.

பிரபு ஏன் வருத்தப்படுகின்றீர் மனதைத் திடப்படுத்திக்கொள்ளும்.

மந்திரி வசனம்.

தாயே தாம் இவ்விதிக்குள்ளாகவும் யானிதைப் பார்த்துப் பரதவிக்கவும் ஆதியிலென்னபாவம் செய்தேனோ அறிகிலேன்.

சந்திரவதி வசனம்.

சத்தியகீர்த்தி இனிமேல் வருந்துவதில் யாது பயனுண்டாகும். உனது பிதாவாகிய இன்னவரைப் பாதுகாத்து வாழ்ந்துவருவாயாக.

மந்திரி வசனம்.

அம்மணி தமதுத்தரவுப்படி யாங்களிருவரும் வாழ்ந்திருப்பதாயினும் தம்மை நினைத்து நினைத்துக் கவலையடைவோம் ஐயோ என் செய்வோம்.

---

## அரிச்சந்திரன் சந்திரவதியை வெட்டும்பாகம்.

சந்திரவதி வசனம்.

பிராணநாயகா காலதாமசமின்றி இவ்வாளினாலென்னை வெட்டுவீராக.

அரசன் விருத்தம்.

சின்மயப்பொருளாமீசன் செயலினாலெனக்கிகத்திற்
சென்மமாபல்பமீபச் சிறப்புடன்கிடைத்ததேனே
உன்மனப்படியான்பாவி யொவ்விவிவ்வேளையித்த
மன்மணிவாளால்வெட்ட மலர்க்கரம்வருமோவையோ.

இராகம்-நாதநாமகிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

எப்படிவெட்டு வேனுனை-எழில்
கற்பகக்கொடிக்குநிகர் கற்புடையவிற்பனியே (எப்)

அநுபல்லவி.

இப்படிவந்ததேவினை யெவர்செய்திடுஞ்சோதனை
இன்னதென்றறியேனையோ என்னசெய்வேனிந்தவாளால் (எப்)

சரணங்கள்.

என்னபாவஞ் செய்தேனோ-எந்தன்
அன்னமேவன்னமயிலே சொன்னமேசுகமேமுன்னாள் (என்)

இன்னாள்மகன்றனையே யிழந்துமீங்குன்றனையே
யானிழந்திடவுமயன் தானினைந்தெழுதினானோ (எ)

உதவியெனக்கார் சொல்வாய்-நல்ல
உத்தமசற்குணநவ ரத்தினமணியேயினி-உதவி (உத)

பதவிதருவாயென்று பரிந்திருந்ததற்கின்று
பாவியாய்விட்டாயோவென தாவியேதேவியேயினி (எ)

எனினைமணந் ததற்கு-நீ
என்பலனையென்சுகத்தை அம்புவியிலேயடைந்தாய்-என் (என்)

முன்னேயிவ்விதம்வந்து மூளுமென்றுணர்ந்து
கன்னல்புரிநன்னகருற் றுன்னைமணஞ்செய்குவேனோ (எ)

வசனம்.

பெண்கள்சிகாமணியே இந்தக்கர்ம சண்டாளன் எவ்வாறு மனந்துணிந்துன்னை இவ்வாளால் வெட்டுவேன் ஐயோ நீ இக்காலம் இவ்விதிக்காளாவாயென்று முன்னமே தெரிந்திருப்பேனாகில் கன்னல்புரிக்குவந்து உன்னை பாணிக்ரகணஞ் செய்வேனா இக்கொடிய பாதகத்திற் கென்செய்வேன்.

சந்திரவதிவசனம்.

பிரபூ எல்லாந்தெரிந்த தாங்களிவ்வாறு புலம்புவது நீதியன்று யோசிக்காதென்னை வெட்டிச் சத்தியத்தைக் காப்பாற்றுங்கள்.



அரசன் தரு.

இராகம்-முகாரி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

பெண்ணேயென் பெண்மணியே பிறைமதிவதனியே
கண்ணேயிங் குனைவெட்டக் கைவருமோவினியே (பெ)

பட்டகஷ்டமனைத்தும் பத்தாதென்றோநினைத்து
இஷ்டகுலதெய்வமும் இச்சதிசெய்ததுவோ (பெ)

எவரைவதைசெய்தேனோ ஈந்ததையேற்றுய்த்தேனோ
தவசியரைவைதேனோ தர்மநிலைகொய்தேனோ (பெ)

அகுதியையடித்தேனோ ஆலயத்தைப்பிடித்தேனோ
பகுதியைப்பிடித்தேனோ பாவநூல்படித்தேனோ (பெ)

என்கையால்நீசாகவும் யான்கண்டுளநோகவும்
என்கர்மஞ்செய்துலகில் இப்படிப்பெண்பிறந்தனை (பெ)

வசனம்.

பிராணரக்ஷகி இந்த கர்மசண்டாளன் கைவாளா லிறக்கும்படி ஆதியில் என்னகர்மஞ்செய்து இவ்வுலகத்தில் இப்படிப் பெண்ஜன்மமாக அவதரித்தனை ஐயோ இதனை நினைக்கநினைக்க என்மனமானது உலைமெழுகுபோ லுருகின்றதே இனியென்செய்வேன்.

(ச-தி-வ-ம்.) பிராணரக்ஷகா.

இராகம்-தேசி-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

இன்னுமேனோதாமத மென்சுவாமி-நீர்
இக்கணத்தில்இக்களத்தில் கட்கத்தினால் வெட்ட இன்னும் (ஏ)

அநுபல்லவி.

தன்னுயிர்போலே தரணியின்மேலே
மன்னுயிரையாதரித்த மன்னர்மன்னவரோ இன்னும் (ஏ)

சரணங்கள்.

வாழ்வொருகாலம் தாழ்வொருகாலம்
வாழ்வினைக்கருதுநம்பத் தாழ்வதிலென்பயனின்னும் (ஏ)

பெற்றகனிட்டம் பெருஞ்சந்தைக்கூட்டம்
அந்தராணிசெந்திருமால் அட்டும்பொய்மலாட்டமின்னும் (ஏ)

சரீரமனித்தியம் சாவதுநித்தியம்
சத்தியமேமுத்திதரும் வித்தெனவுரைக்குமின்னும் (வ)
ஈசனுங்காப்பான் இவ்வினைதீர்ப்பான்
யோசனைசெய்யாதிரும்மைப் பூசனைபுரிந்தேனின்னும் (வ)

வசனம்.

கண்ணாளா இக்கொலைக்களத்தில் என்னை வெட்டுவதற்கின்னும் தாமிதமேன் கூசாதுவெட்டி விடுங்கள் வருந்தவேண்டாம்,

அரசன்-தரு.

ஐயோமகனேபாம்பு என்றபெட்டு.

இராகம்-சாமா-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஐயோவுனையேவெட்டி அனேமவுனையேவெட்டி
அவனியில்வாழ்வேனோடி உனையேஉனையேவெட்டி.
அவனியில்வாழ்வேனோடி உனையேஉனையேவெட்டி. (ஐ)
மெய்யிற்பெலங்கொடுத்தே மேவியிங்கேபடுத்தே
ஜைகயிற்கட்கமெடுத்தே கவலையையான்விடுத்தே
உனையேஉனையேவெட்டி அவனியில்வாழ்வேனோடி. (ஐ)
கொடும்பாவியென்று குவலயத்தோரொன்றும்
இடும்பாகவேகவின்று இகழ்ச்சிசெய்வாரேயின்று
உனையேஉனையேவெட்டி. அவனியில்வாழ்வேனோடி (ஐ)
கடையனுக்காளானேன் கன்றுக்கலானேன்-அவன்
உடைமையடுத்தலானேன் உள்ளமெலியலானேன்
உனையேஉனையேவெட்டி. அவனியில்வாழ்வேனோடி. (ஐ)
பேய்க்காடுகாக்கலானேன் பிணவரியேற்கலானேன்
வாய்க்கரிசியுண்ணலானேன் வயிறும்வளர்க்கலானேன்
உனையேஉனையேவெட்டி. அவனியில்வாழ்வேனோடி (ஐ)
பரன்மீதிருக்கலானேன் பரவிக்கவுமானேன்
வரன்வரத்தாலுதித்த மகனையிழக்கலானேன்
உனையேஉனையேவெட்டி. அவனியில்வாழ்வேனோடி (ஐ)

வசனம்.

பெண்கள்நாயகமே இத்தத்துரோகி இவ்வித கேவலன்திதிக ளெல்லாமடைந்தும் இக்காலம் உன்னையும் இழப்பதாகவிருக்கின் இவ்வுலகத்தின்கண் எவ்விதம் உயிர்தரித்துவாழ்வேன் ஐயோ இப்ப டியுமோ பிரமன் என்தலையிலெழுதினன்,



சந்திரவதி வசனம்.

பிரபூ தாங்கள் வாய்விட்டலராது மனதைத் திடப்படுத்தி வாளினாலென்னை வெட்டுங்கள் காலதாமசமாகின்றது யோசனை செய்ய வேண்டாம்.

விஸ்வாமித்திரன்-விருத்தம்.

மதிமுகனேபொறு பொறுநான்வழுத்தக்கேளு
மாதர்களைக்கொலைபுரிதல் வலியபாவம்
அதினுமுந்தன் மனைவியையிவ்வாறுசெய்ய
வகந்துணிந்ததினதிகமாகையாலே
குதுகலமாய்முன்னெனக்குக் கொடுத்தநாட்டைக்
கொடுத்ததில்லை யென்னுமொழிகூறியுந்தன்
பதியுடனேயிவ்வுயிரும் பெற்றுவாழ்வாய்
பாரினிலுன் கீர்த்தியென்றும்பரவுந்தானே.

(வ-ம்.) அரிச்சந்திரா பொறு பொறு பொறு.

அரசன் வசனம்.

அனேகவந்தனம் பிரபூ எதற்காக இவ்வாறு தடுக்கவேண்டும்.

விஸ்வாமித்திரன் வசனம்.

ஹே அரிச்சந்திரா நீ நல்லயோசனை செய்திருக்கின்றாய். ஐயோ சப்தசாகரஞ்சூழ்ந்த இவ்வுலகின்கண்ணுள்ள ஆண் பெண் இரண்டு ஜாதியுள் பெண்களைக் கொலைபுரிவது மகாகொடியபாதகம் அதினும் நீ உன்மனைவியை இவ்விதம்புரியத்துணிந்தது அதினும் அதிகம் இக் காலம் இவ்வித கொலைபாதகத்திற்குட்பட்டு என் அவஸ்தையடைகின்றனை நான் சொல்லுமுபாயத்தைச் சற்று கவனித்துக்கேள்.

(அ-ன்-வ-ம்.) பிரபூ என்ன.

விஸ்வாமித்ரர்-வசனம்.

அரசே நீ இதற்குமுன் மனப்பூர்வமாக எனக்குக் கொடுத்த நாடு-நகர் செல்வங்களைக்கொடுத்ததே யில்லையென வோர்பொய்மொழிகூறி அதின்மூலமாக உன்னுடைய பவுஷபாக்கியத்துடனே உனது மகனுயிரையும் மனைவியுயிரையும் சுலபமாய்ப்பெற்று உனதுகீர்த்தி யெங்கும்பரவும்படி வாழ்ந்திருப்பாயாக யோசிக்காதே.

அரசன்-வசனம்.

இவ்வுலகம்புகழும் சத்யஸ்ரேஷ்டராயிருந்தும் தாம் என்னவார்த்தை பாஷித்தீர்.

அரசன்-தரு.

ஆரடியுன்பேரூர் சொல்லடியென்றமெட்டு.

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

இப்படிச்சொல்வது மழகோ-உமக்
கிதுவுமிருதர்மமோ எதுவுமனவர்மமோ (இப்)

அநுபல்லவி.

இப்படிபுகழுந்தவ விற்பனராகவிருந்தும்
இன்னுங்கபடமேயுளத் தின்னுதல்புகழோஸ்வாமி (இ)

சரணங்கள்.

பாவியானும்நீரிழைத்த பற்பலதுன்பத்தினலே
பதியும்அதினுற்றனை பலவுமிழந்தே
காவிவஸ்திரம்புனைந்தே கடனுக்குள்ளாகிநொந்தே
காட்டினில்நடந்தயர்ந்தே காசிமாநகர்க்குவந்தேன் (இ)

அக்கடனைகற்றதற்குகென் பொற்கொடிபுதல்வனையும்
அந்தணர்க்குகந்துவிற்றே அகந்தளர்ந்தே
தக்கநக்ஷத்ரர்க்குவந்த சம்பளங்கொடுப்பதற்குத்
தாழ்ந்தநீசனுக்காளாகிச் சவஞ்சுடுகாடாளவுற்றேன் (இ)

வாய்க்கரிசிச்சோற்றையுண்டு வயிறும்வளர்த்தன்றி
மைந்தனைப்பலிகொடுத்து வருந்தவுமானேன்
ஏற்கவிக்கதியடைந்தும் இவ்வொருகொலைபுரிய
யானுமஞ்சுவேனோசத்யந் தானுமிஞ்சுவேனோவினி (இ)

இத்துயரைப்பார்க்கினு மற்றெத்துயரெய்தினுமுமக்
கீந்ததையீந்திலேனென யானியம்பேன்
புத்தியற்றோனென்றெண்ணுதீர் இந்தநிதடைபண்ணுதீர்
போம்போம்வந்தவழியைத் தாம்பார்த்தநாள்கொடியில் (இ)

வசனம்.

ஹே முனிபுங்கவரே இந்தச்சண்டாளன் நாமிழைத்த பற்பல துன்பங்களால் நாடுநகர் முதலாயுள்ள மற்றயாவும் தமக்களித்துக் கடனுக்கு முட்பட்டுக் காவிவஸ்திரம் பூண்டு கானகத்தினிடமாக நடந்து இக்காசிமாநகரடைந்து அக்கடனை யகற்றுவதற்காக எனது பத்தினிபாலன் இருவரையும்விற்று நக்ஷத்திரய்யருக்குக் கொடுத்த வே



ண்டிய தரகுக்காக நீசனுக்கடிமையாகி இச்சுடுகாற்று வாய்க்கரிசியின் அடிசிலருந்திக் காவல்புரிந்திருந்ததுமன்றி சிவபெருமான் றிருவரப்பிரசாதத்தா லவதரித்த எனது புத்திரசிகாமணியையும் பறிகொடுத்து வருந்துகின்ற யான் இவ்வொரு கொலைபுரிவதற்காகவஞ்சிச் சத்தியந் தவறுவேனோ, இனிமேல் இத்துயரைப்பார்க்கினும் எத்துயர்வந் தெய்தியபோதினும் அதற்குப் பயந்து உமக்கீந்ததை யீந்திலேனென்னு மொழி யெக்காலத்து மியம்பேன் ஆகையால் என்னை புத்தியில்லாதவனென்றெண்ணித் தடைபண்ணுவதழகன்று தாம் வந்தவழியைப் பார்த்துப்போம்.

விஸ்வாமித்ரன் வசனம்.

ஹே அரசே நீ நன்மையடையும்பொருட்டு நானெவ்வளவோ எடுத்துக் கூறியும் அதனை யெண்ணிப்பாராது என்மேலிவ்வளவுகோபங்கொண்டு வந்தவழியைப் பார்த்துப்போமெனப் புகல்வது ஞாயமா ஈஸ்வரன்முதல் மற்றயாவரும் ஒவ்வொருகாலங்களிற் பொய்மொழிபுகன்று தத்தமக்குவந்த இடையூறுக்குத் தப்பித்து வாழ்ந்திருக்கின்றார்கள் அவ்விதமிருக்க நீ இவ்விதம் பிடிவாதம் சாதிப்பதழகன்று.

அரசன் புராணவிருத்தம்.

புலையனும்விரும்பாதவிப் புன்புலால்யாக்கை
நிலையெனுமருள் பெரினும் நெடிதுறச்சிறந்தே
தலைமைசேர்தரு சத்தியம்பிறழ்வதுதரியேம்
கலைபுணர்ந்தநீ ரெமக்கிது கழறுவதழகோ.

வசனம்.

சுவாமி, யாதொரு சண்டாளஜன்மமாகிய நீசனுங்கூடவேண்டாத இந்தப்புல்லிதான புலால் நாறுகின்றதேகத்தைநிலையுள்ளதென்று மயங்கி உயிரைப்பார்க்கினும் அதிகமாகச்சிறந்து முதன்மைகொண்ட சத்தியந் தவறக்கடவேமோ ஆதலின் கலைஞானங்களெல்லாந் தெரிந்தநீர் எங்களுக்கு இந்தச்சத்தியந்தவறி நடப்பதைச்சொல்வது உமக்கழகாமோ இனி மறுவார்த்தை யாஷிக்காது செல்லும்.

விஸ்வாமித்திரன் வசனம்.

அரசே நீ இவ்வித கஷ்டப்படுவதைப்பார்த்துச் சகிக்காதவனுகி நன்மையான தன்மையை யெடுத்துரைத்துங் கேட்டாயில்லை இதோ நான் சென்றுவருகின்றேன்.

(அ-ன்-வ-ம்.) நல்லது முனிசிரேஷ்டரே.

சந்திரவதி வசனம்.

பிராணரக்ஷகா ஏன்தாமசிக்கின்றீர் சஞ்சலமுறாது என்னை வெட்டி சத்தியத்தைக் காப்பாற்றும்.

(அ-ன்-வ-ம்.) நல்லது பெண்ணே.

அரசன் விருத்தம்.

வழக்கம்போலயனையாதி மாயனைச்சிவனைப்போற்றி
வழக்கம்போற்குருவாயுள்ள வசிஷ்டமாமுனியையேற்றி
வழக்கம்போலன்னைதந்தை மாமிமாமனைநீவாழ்த்தி
வழக்கம்போற்கிழக்குநோக்கி மாண்புடனிற்பாய்மாதே.

வசனம்.

மாதுசிரோன்மணியே நீவழக்கம்போல பிரதிதினமும் வணங்கிவரக்கூடிய வழிபடுகடவுளைவணங்கி நங்குருவாயுள்ள வசிஷ்ட மகாமுனிவரை நினைந்து உனக்கு அத்யந்தசொந்தமான மாதா பிதா மாமன் மாமி மணாளன் மகன் இவர்களைவாழ்த்தி ஏகசிந்தையோடுகிழக்கு முகமாகநில் இந்தக் கொடியபாதகன் உன் இக்கட்கத்தால் வெட்டுகின்றேன்.

(ச-தி-வ-ம்.) உத்தரவுப்படியேசெய்கிறேன்பிரபூ.

சந்திரவதி தரு.

நிந்தனைவேண்டாமென்றமெட்டு.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-சாப்பு.

பல்லவி.

சம்போசங்கரனே நின்னருள்மலர்சரணம் (சம்)

அநுபல்லவி.

உம்பர்புகழுலகில் ஒவ்வொருபிறப்புக்கும்
கும்புடையவசிஷ்டர் குருவாகவரவேணும் (சம்)

சரணங்கள்.

அருள்சேர்சந்தரரேகை யன்னையாய்வரவேணும்
பெருமையார்மதிதயன் பிதாவாகவரவேணும் (சம்)
புகழ்பதிதிரிசங்கு மாமனாய்வரவேணும்
மகிழ்வுறுசத்யவதி மாமியாய்வரவேணும் (சம்)



கண்ணிய அரிச்சந்த்ரர் கணவனாய்வரவேணும்
புண்ணியதேவதாசன் புதல்வனாய்வரவேணும் (சம்)
மதியுயர்சத்யகீர்த்தி மந்த்ரியாய்வரவேணும்
கெதியுயர்சத்யத்தாலே கீர்த்தியடையவேணும் (சம்)

வசனம்.

கண்ணாளா என தபிப்பிராயப்படி வழிபடுகடவுள் வணக்கஞ்செய்து கொண்டேன் இனிமேல்தாங்களிந்த வாளாலென்னை வெட்டுங்கள்.

அரசன் விருத்தம்.

தனைகடல்சூழுமிந்தக் காசினிபுரக்கவந்த
தனைநிகரில்லாவெந்தன் றனையனையிழந்தேனின்று
அனையதுபோதாதென்ன் வடியனுக்கன்பாயுற்ற
மனைவியையிழக்கவிந்த வாளையான்வீசினேனே.

இதுவுமது.

வீசியசமயமிந்த வெவ்வியகூர்வாளான
தாசிலாள்கழுத்திற் றீண்டு வதற்குமுனையோவீங்கே
மாசிலாமணமிகும்பூ மாலையாய்வீழ்ந்ததிஃது
காசினிமீதார்செய்த கபடமோகாணேன்மந்த்ரீ.

வசனம்.

மந்த்ரீ இதென்ன ஆச்சரியம் ஐயோ யான் ஏகமனதோடுங்கூடி இவ்வாளை கையிலேந்தியோங்கி இவளை வெட்டுஞ்சமயம் வெட்டுப்படாது இங்கேதோ மகாரமணீயம் பொருந்திய வாசனைமலிந்த பூமாலையொன் றிவள்கழுத்தில் விழுந்திருக்கின்றது இது யார்செய்த கபடமோவறிகிலன்.

அரசன் தரு.

என்னமாயமோகனுவினேர்மை யென்றமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ரூபகம்.

பல்லவி.

என்னதாழ்வு செய்தேனோவுலகில்
தந்த்ரியே மதி மந்த்ரியே என்ன (தாழ்)

அநுபல்லவி.

ஊழ்வினையாலே இந்த வாழ்வைமென்மேலே
உறுதியென்று உளத்திலின்று
உன்னினேனோ மெய்மைத்
தன்னினேனோ மந்த்ரியே ஐயோஎன்ன (தா)

சரணங்கள்.

மாமணம்பொருந்தும்இந்த மாலையெங்கிருந்து
வாமமிகுத்திடும் மாதுகழுத்தில்
வந்துவி ழுந்ததோ
வகையறியேன்மந்த்ரியே ஐயோ என்ன (தா)
மூவர்கபடமோதிருத் தேவர்கபடமோ
முனிவர்கபடமோ மனிவர்கபடமோ
முன்பி லொருவரும்
தென்படவுமில்லையே ஐயோ என்ன (தா)
ஏவனெனத்தெரிவேன் இதற்கேதுபுரிவேன்
கவலைமிஞ்சுதே கருத்துமஞ்சுதே
காரணத் தன்னையே
நீரறிந்துசொல்லுவீர் ஐயோ என்ன (தா)

வசனம்.

மந்த்ரீ இப்பூமாலையானது எங்கிருந்த விழுந்ததோ அறிகிலே ன் இதன்காரணத்தைச் சற்று வினவுவீராக.

மந்திரி விருத்தம்.

காரணமின்னதென்னக் கருத்துடன்கேட்டவேந்தே
தாரணிநெஞ்சமஞ்சிச் சஞ்சலப்படவும்வேண்டாம்
வாரணிகோசிகன்செய் மாய்கையிதினிமேல்ஞான
பூரணன்பூந்தாள்போற்றிப் புகழ்பெறவெட்டுவீரே.

வசனம்.

பிரபூ இவ்வித கபடஞ்செய்தது கௌசிகமுனியேயன்றி வே றொருவரல்ல இனிக்கவலையுறாது கடவுளைப்போற்றிக்கட்கத்தாலென தன்னையை வெட்டுங்கள்.

(அ-ன்-வ-ம்.) நீர்சொல்லியவண்ணமே வெட்டுகின்றேன் மந்த்ரீ.

அரசன் விருத்தம்.

ஆதிசிவனுலகுயிர்க்கு முதல்வனாகில்
அவனையுமொழிக ளொரு மறைகளாகின்
மாதிவடம்மறைதரும சாஸ்த்ரமாகின்
மற்றதனுள்வாய்மைமிகுந் திருக்குமாகின்
கோதிலவ்வாய்மையைவிரதமாகக்கொள்ளின்
கோதையிவள் பதிவிரதையாகினிந்த
மேதினியிலிவள்மியா திருக்கவன்றேல்
வியந்திடுக விதோமணிவாள் விசுவேனே.

ஸ்ரீ

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

# மீட்சிகாண்டம்.

# சிவபெருமான் வருகிற பாகம்.

சிவன் விருத்தம்.

சத்தியஅரிச்சந்த்ராநீ சந்த்ரவாள்வீசவேண்டாம்
சத்தியஅரிச்சந்த்ராநீ தலைவியைவெட்டவேண்டாம்
சத்தியஅரிச்சந்த்ராநீ தயவுடன்பொறுப்பாய்சற்றே
சத்தியஅரிச்சந்த்ராவென் றரிசனந்தரவந்தேனே.

அரசன விருத்தம்.

ஹரஹரசிவமேசம்போ அண்ணலேஅமரர்போற்றும்
பிரமமேகைலைமேவும் பேரின்பக்கொழுந்தேயெங்கும்
பரவுசிற்பரமேமேலாம் பதமருள்முதலேயுந்தன்
திருவடிக்கடிமையானேன் றீவினைதீர்த்தாள்வாயே.

இராகம்-பியாக்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

சரணம் சரணமே-பூந் தாளின்சரணமே-தேவா (சர)

அநுபல்லவி.

பரம்பதிபேகருணாநிதியே பதவியுமுதவியே
பரப்ரம்மவடிவேயபர் பழமறைமுடிவே
பார்வதிமாதுசமேதியே சீர்பெறுமால்விடையூர்தியே
பற்படவரவணிபருவே சிற்பரசிவசிவஅருவே (சர)

சரணங்கள்.

தன்சடரொளியே-ஓம் தற்பரவொளியே
விண்சசிதனைச்செஞ்சடைபுனை அஞ்செழுத்துடையாதியே
விண்ணவர்தேவேகன விஞ்சையர்கோவே
வேலவிநாயகதாதையே கோலசசிலைகாதையே
விற்பனமிகுதிருவருளே உற்பனமுறுபலபொருளே (சர)

சுத்தசைவமே சுக் ஞானதெய்வமே
பக்தனென்னுமுத்தழக பாரதிக்கருள்சிரதாய்ப்
பாலிக்குங்குருவே செல்வம்படைத்திடுந்திருவே
பாவவிமோசனநீதமே கூவருகாரணபூதமே
பண்டிதசுபகுணமணியே யெண்டிசையுயிர்களினணியே (சர)

(வ-ம்.) அனேகவந்தனம் ஸ்வாமி.

(சிவன்-ஏ-ம்.) கல்யாண் அரிச்சந்திரமகாராஜனே.

சந்திரவதி-தரு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

சுந்தரேசாயெந்தனை யாள்வாய்-ஆள்வாய்
சோதியேகுணநீதியே பிரமாதியே-யெனைச்
சோதியாது சுகிர்தகைலைவாழ் (சுந்)
பந்தபாசவினையை நீக்கிடும்-நீக்கிடும்
பரமனேநற்கிரமனே வுக்கிரமனையுனைப்
பாடினேன் யான் பண்ணவர்புகழ் (சுந்)
துன்பம்நீக்கி யின்பந்தந்தருள்-அருள்
சுத்தமே திருமுத்தனே புகழ்கர்த்தனே-மதி
சூடி நாடிச் சொகுசாய்நடனஞ்செய் (சுந்)
பக்தன்முத்தழக பாரதி-பாரதி
பணியுமங்கண்மணியு ஞறைகண்மணிவுமையவள்
பாகா-யோகா பன்னகமணி (சுந்)

விஷ்ணு வருகிற தரு.

இராகம்-தன்யாசி-தாளம்-ஆதி.

பல்லவி.

கேசவர்வந்தாரே கெருடனேறி (கே)

அநுபல்லவி.

தாசனரிச்சந்த்ரற்கு தரிசனந்தருதற்கு
நேசமாய்லட்சுமியுடனே கெருடனேறி (கே)

சரணங்கள்.

சங்குசக்ரந்துலங்க தண்டுமாய்த்தாரிலங்க
வெங்கணரக்கர்கலங்கக் கெருடனேறி (கே)



அரசன் தரு.

இராகம்-பூரிகல்யாணி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

முகுந்தனேகிருபை செய்வாய்-வினை
முழுதும்நீ கொய்வாய்-சரணம் (மு)

அநுபல்லவி.

தகுந்தசங்கு சக்கரங்கோ
தண்டவில்வாளணிகரனே தண்டுளவார்புயதரனே (மு)

சரணங்கள்.

மடுவினிற்கரி வந்துநீர்குடிக்கப்
படுமுதலைபதன் பாதத்தைப்பிடிக்கக்
கடுமுதலைகீழிழுக்கக் கடகரியுமேலிழுக்கக்
கண்டுடனக்கரிதுயரைப் பண்டுதொலைத்தருள்செய்தவா (மு)

(வ-ம்.) ஸ்ரீ மகாலக்ஷுமி சமேதவாசுதேவா அனேகவந்தனம்.

(வி-ஷு-வ-ம்.) கல்யாண் அரிச்சந்திரமகாராஜனே.

பிரம்மா வருகிறது.

இராகம்-சகானா-தாளம்-ஆதி.

பல்லவி.

சதுர்முகப்ரம்மாவந்தார் சபைதனிலே (ச)

அநுபல்லவி.

மதுமொழியாள்திரு வாணிமனமகிழ
அதிவினோதவாகவே அன்னமீதினிலேறி (ச)

சரணங்கள்.

மாமுனிவோர்சூழ வானவரடிதாழ
நாமவேலரிச்சந்த்ர ராஜனைமெச்சியே (ச)

அரசன் தரு.

சங்கரசிவசந்திரசூட னென்றமெட்டு.

இராகம் - கமுனைகல்யாணி - தாளம் - ரூபகம்.

பல்லவி.

சரஸ்வதிசமேதனே-நின் சரணம்-சரணம்-சரணம்-சரணம் (சர)

அநுபல்லவி.

பாப்ரம்மஸ்வரூபதேவே பல்லுயிரைப்படைக்குங்கோவே
பதியே-நிதியே கெதியே-விதியே (சர)

சரணங்கள்.

நின்புகழையாவராலே நிகழ்த்தலாகும்நிலத்தின்மேலே
அன்பர்க்கீயுந்திருவருளே அளவில்லாதமெய்ப்பொருளே
ஆளுமெம்மையே ஆளுமெம்மையே (சர)

(வ-ம்.) ஸ்ரீ சரஸ்வதிசமேதனே அனேகவந்தனம்.

(பி-மா-வ-ம்.) கல்யாண் சக்ரேஸ்வரா.

## விநாயகர் வருகிறது.

இராகம் - யமுனாகல்யாணி - தாளம் - ஆதி.

பல்லவி.

ஐங்கரர்வந்தாரே அன்பாகவே (ஐ)

அநுபல்லவி.

அங்கயமுகந்தன்ன அருபணிகள்தன்னே
ஆகுவின்மீதேறி அன்பாகவே (ஐ)

சரணங்கள்.

சித்திர்வித்தியாதரர் தினரிஷீஸ்வரர்
முத்தருமொய்த்துவர அன்பாகவே (ஐ)

(அ-ன்-வ-ம்.) ஸ்ரீ விக்னவிநாயகமூர்த்தியே சரணம் சரணம்.

(வி-ர்-வ-ம்.) கல்யாண் அயோத்திபா.

## முருகக்கடவுள் வருகிறது.

இராகம்-தன்யாசி-தாளம்-ஆதி

பல்லவி.

வாலகுருபரன்வந்தார் மயிலின்மேலேறி (வா)

அநுபல்லவி.

தாலம்புரந்தவரிச் சந்திரனைப்புகழ்ந்தே
சீலமுடையவள்ளி தெய்வயானையுடனே (வா)

சரணங்கள்.

கஞ்சமலர்க்கரத்தில் கதிர்வடிவேல்துலங்க
வஞ்சமிருத்தவிர வாளரக்கர்கலங்க (வா)



(அ-ன்-வ-ம்.) அனேகவந்தனம் குருபரமூர்த்தியே.

(மு-ன்-வ-ம்.) கல்யாண் சத்தியவாக்கியனே.

## தேவேந்திரன் வருகிறது.

கோன்சகலிமேகபூஷா வென்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

தேவேந்திரன்வந்தான் இந்திராணியுடன் (தே)

அநுபல்லவி.

தேவர்தானவர் சித்தர்வித்யாதரர்
தாபதர்முனிவரர்பை சாசருடனே (தே)

சரணங்கள்.

அஷ்டதிக்பாலகர் அரம்பையர்வைரவர்
இஷ்டசந்திராதித்தர் இயக்கர்சூழ (தே)
கிம்புருடர்கின்னரர் கெருடகாந்தருவர்
தும்புருநாரதர்பாட தும்பியின்மீது (தே)

(அ-ன்-வ-ம்.) அனேகவந்தனம் சுவர்க்காதிபா.

(தே-ன்-வ-ம்.) கல்யாண் அரிச்சந்தரமகாராஜனே.

## வசிஷ்டர் வருகிறது.

இராகம்-சகானா-தாளம்-ஆதி.

பல்லவி.

மாதவவசிஷ்டர்வந்தார் மனமகிழ்ந்தே (மா)

அநுபல்லவி.

பூதலமீதேவரும் புகலொணாத்துன்படைந்த
ஆதவகுலதுங்க அரிச்சந்திரனைப்புகழ்ந்து (மா)

சரணங்கள்.

தேவர்கோன்முன்னிலையில் செப்பிபசபதத்தை
கேவலமடையாமற் கெலித்தேன் கெலித்தேனென (மா)

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

இன்னும் நின்மனதிரங்கா வென்றமெட்டு.

கண்ணிகள்.

இன்றுதானேயென்முன்வர வெண்ணினீர்-குருவே
இதுவரைநீரெங்கிருந்தீ ரியம்புவீர்-குருவே

என்னுழும்மைக்கெதியென்றுற்ற வென்னையே-குருவே
இப்படிக்கைவிட்டதென்ன வியல்போவெங்-குருவே,
தாமிருந்துந்தாழ்வடைதல் தகுதியோ-குருவேச
சாகரஞ்சூழ்தாரணி யேசாதோ-சற்-குருவே
திமிருந்தவினையகற்றுந் திரம்பெற்றுங்-குருவே
சிறியனையவ்வினைபுந்நாடச் செய்திரோ-குருவே
என்னபிழையேழையுமக் கியற்றினேன்-குருவே
எதுவுமதால்மனவருத்த மிருக்குமோ-குருவே
மன்னவனையென்னையிருத்தி மகிழ்ந்தநற்-குருவே
மயானகாவல்புரியலானேன் வாய்மையோ-குருவே
கோசிகமாமுனியிழைத்த கொடுமையைக்-குருவே
கூறவுந்தான் கூடுமோவென் குலம்புகழ்-குருவே
காசினியோரேசவிந்தக் கதியுற்றுங்-குருவே
காதல்மகன் றனையிழந்து கலங்கினேன்-குருவே

வசனம்.

எனதுகுலகுருவே இந்தக்கர்மசண்டாளனையின்றுதானு பார்ப்பதற்குத் திருவுளமிரங்கியது இவ்வளவுகாலம் எப்பதியில்வாசமாயிருந்தீர்கள் தங்களுக்கென்ன குறைவுசெய்தேன்.

வசிஷ்டர் விருத்தம்.

மதுமலர்த்தாரணிந்த மார்பனேநீயெனக்கு
இதுவரையோர்தாழ்வேனு மிழைத்ததேயில்லைநீயிக்
கதியினையடைந்ததான காரணங்கணேரத்துள்
முதல்வனுலெளிபரம்வீறும் முறையிடல்முறைமையன்றே.

வசனம்.

எனதன்பிற்குரிய அரிச்சந்திர சக்கரவர்த்தியே நீ இதுநாள்வரை யெனக்கோர் குறைவும் செய்யவில்லை நீ இக்கதிக்காளான விஷயம் இன்னும் சற்றுநேரத்திற்குள் எம்பெருமானால் வெளியாகும் வருந்தாதே அப்பா.

(அ-ன்-வ-ம்.) நல்லது சுவாமி.

## விஸ்வாமித்திரர் வருகிறது.

இராகம்-தன்யாசி-தாளம்-ஆதி.

பல்லவி.

கோசிகர்வந்தாரோ சபைதனிலே (கோ)



அநுபல்லவி.

வாசவன்முன்சொல்லி வந்தசபதந்தனை
காசினிமேற்செயிக் காமல்விட்டேனென்று (கோ)

சரணங்கள்,

எத்திசையும்புகழும் இறைவனரிச்சந்திரன்
சத்தியந்தனைபெண்ணிச் சந்தோஷமாகவே (கோ)

(வ-ம்.) கருணாகரக்கடவுளே அநேக வந்தனம்.

(சி-ன்-வ-ம்.) கல்யாண் விஸ்வாமித்திரரே.

(அ-ன்-வ-ம்.) அநேகவந்தனம் முனிபுங்கவரே.

(வி-ன்-வ-ம்.) கல்யாண் அரிச்சந்திரமகாராஜனே.

சிவன் விருத்தம்.

அரசனையாணுமாது மகனுமோர் காலம்வாய்ந்த
வரன்முறைதவறிமெய்மை வழுவியேவாழலானும்
தரணியில்நீயிவ்வாறு சஞ்சலமடைந்துமோர்பொய்
உரைசெய்தாயில்லையுந்த னுயர்ச்சியென்சொல்வேனின்றே

வசனம்.

எனதன்பனுகிய இறைவனே இடுக்கண்வந்த காலங்களில் யானும் மகாவிஷ்ணுவும் பிரமனும் மற்ற தேவாதிகணங்களும் ஒவ்வொரு பொய்சொல்லி அதினின்று அதற்குத் தப்பித்து சுகமடைந்திருக்கின்றோம் நீ மனுவம்சனுயிருந்து எவ்வளவோ துன்பமடைந்தும் ஓர் பொய்மொழி புகைந்தாயில்லை ஆகலின் நீயே சத்தியசௌசமுடையவன் நீயே எங்களுக்கும் மேலானவன் நீயே நித்தியன்.

அரசன் வசனம்.

சுவாமி எல்லாம் தேவரீர் கிருபாகடாக்ஷமே யன்றி வேறென்மில்லை.

(சி-ன்-வ-ம்.) அரிச்சந்திரா யானொன்றுரைக்கின்றேன் கேள்.

(அ-ன்-வ-ம்.) என்ன சுவாமி.

சிவன் விருத்தம்.

நான்முகனயரித்தோன் றநீர்தோன்றிலே
பூண்டதன்னெறிபோ லவிதற்குமுன்
ஆண்டுவந்தபோத் தியைநீயின்னும்
அன்பிலேசுகமடைத் திருப்பாயரோ.

வசனம்.

அரிச்சந்திரா இதற்குமுன் நீ யாண்டுவந்த அயோத்தியாபுரியை யின்னும் ஆண்டு சுகத்திலிருப்பாயாக.

அரசன் விருத்தம்.

எக்களிப்புடனேயிந்த விருநிலத்தெதிகளஞ்ச
மிக்கநற்றவஞ்செய்தோங்கும் விஸ்வாமித்ரராலே
இக்கதியடைந்தவென்னை யின்னுமவ்வயோத்திக்கேகித்
தக்கதோரரசுசெய்பச் சாற்றுவதரமோசுவாமி.

வசனம்.

கடவுளே யாதொரு விஸ்வாமித்திரமகாரிஷியினாலே இவ்வித கெதியடைந்த என்னை இன்னும் அயோத்திக்கனுகி அரசாக்ஷி செய்யச்சொல்வது ஞாயமா தேவரீர் அறியாததுளதா.

சிவன் வசனம்.

வாஸ்துவம் இந்தவிஸ்வாமித்திர ருனக்கென்னென்ன இடையூறுசெய்து இக்கெதிக்காளாக்கினர் அதனை இங்குள்ள யாவர்க்குங் கேட்கும்படி சவிஸ்தாரமாகச் சொல்.

(அ-ன்-வ-ம்.) சொல்கிறேன் சுவாமி.

அரசன்-தரு.

அன்னகர்பூமி யென்ற மெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

இக்கோசிகமுனிவ ரிழைத்தவிடர்களைநான்
என்னென்றியம்புவேன் ஈஸ்வரனே (இ)

அநுபல்லவி.

மிக்கோர்மகத்திற்குப்பொன் வேண்டுமென்றுரளித்தேன்
மீண்டதையென்பால்வைத்தே மீண்டுள்மெய்த்தே
தக்கவிலங்கினத்தைத் தான்விடுத்தூர்வளத்தைச்
சங்கரிக்கவுஞ்செய்தார் சங்கரனே (இ)

சரணங்கள்.

அங்கதையானறியா தடவிக்கனுகிவேட்டை
யாடியங்கோரிடத்தி லமர்ந்திருந்தேன்
பூங்கிளிபோலிரண்டு புலைச்சியர்வந்தணுகிப்
புணரப்புகலக்கேட்டப் புரந்தள்ளினேன் (இ)



தக்ஷணமிவர்வந்தென் றலையணிமுடிதனைத்
தாளால்மிதித்துத்தள்ளித் தரைதனிலே
பக்ஷமிலாமலென்னைப் பலவாறுயேசிடப்
பயந்தென்பிழைபொறென நயந்துநின்றேன் (இ)

நின்றசமயமிவர் நீயெம்மக்களைச்சேரில்
நீள்பிழைபொறுத்துனை யாள்வனென்றார்
அன்றதற்கிணங்காமல் அருள்நாடுநகரையும்
அளித்தேகாவித்துணியை யணிந்துகொண்டேன் (இ)

அதுவுமிவர்போதாதென் றருங்கடனுக்காளாக்கி
யதைவாங்கிவரவொரு அந்தணனை
இதமுடனேயனுப்ப யாவரும்புறப்பட்டே
இடுகாட்டில்நடந்தின்று டெய்தினோமே (இ)

வேதியர்க்கடிமையாய் மாதுடன்மகனையும்
விற்றேதாருநல்க வேண்டியையோ
காதியில்லாதவோர் கடையனுக்காளாகிக்
களேபரஞ்சுடுகாடு காக்கலானேன் (இ)

இவ்விதகேவலமும் இடர்பலவுமடைந்தே
என்மகனையும்வீணு யிழக்கலானேன்
எவ்விதமோளவளும் இக்கொலைக்குட்பட்டே
இங்குறத்தேவரீரு மிங்குற்றீரோ (இ)

வசனம்.

பரப்ரம்மவஸ்துவே இவ்விதமான கேவலத்தையும் நீசத்வத்தையும் புத்திரசோகத்தையும் அடைந்த யான்மீண்டும் இந்தமுனிசிகாமணிக்குக்கொடுத்த [illegible]கரங்களை வாங்கிக்கொண்டு இராச்சியபரிபாலனஞ்செய்வதற்கு வல்லவனோ வன் இன்னுமென்னைச் சோதிக்கின்றீர் சுவாமி.

(சி-ன்-வ-ம்.) கௌசிகரே அரிச்சந்திரனெடுத்துரைத்தது சரிதானா.

(வி-ன்-வ-ம்.) சரிதான் சுவாமி.

சிவன் விருத்தம்.

வேதியாயிந்த வேந்தனைநீயுமிப்
பாதகத்திற்குடன படச்செய்தது
யாதுகாரணம்பற்றி யதையெனக்
கோதுவாயொளியாம லுறுதியாய்,

வசனம்.

கௌசிகரே இப்பெயருள்ள புண்ணியரூபனை நீர் இக்கெதிக்காளாக்கியது எதுகாரணத்தைப்பற்றி அதனை ஒளியாதுரையும்.

(வி-ன்-வ-ம்.) உத்திரவுப்படி யுரைக்கின்றேன் சுவாமி.

விஸ்வாமித்திரன் விருத்தம்.

ஆடரவபூஷணாவமரர்கோ னோர்தினம்
அரியசபை தன்னைநோக்கி
அவனிமிசைமெய்சொலு மரசர்யாரென்னவே
ஆத்திரத்துடன் வசிஷ்டன்
ஓடவிழலங்கலணி யெழிலரிச்சந்த்ரனென்
றியம்பயான் பொய்யனென்ன
வேசியேபலவர்திகழ்ந் தனன்யாழ்முனி
யிடுஞ்சபத மென்னவிவர்தன்
சிடன்பொய்சொல்லிலே செய்தவம்விடுத்தரிய
சிரத்தைதாட்டிற்கன் னேந்தியே
தென்றிசையைநாடியே செல்வனென்றுறுதியாய்ச்
செப்பிடக்கேட் டயோத்தி
நாட்டினைப்பொய்சொலும்படி செயாவிடிலெனது
நற்றவத்திற் பாதிதான்
நல்குவேனெனவுரைத் திவ்வாறிழைத்தும்பெறு
நழுவினு னில்லைசுவாமி

வசனம்.

சுவாமி இந்தவசிஷ்டனும் யானும் இட்டுக்கொண்ட சபதத்தினை தான் இவ்வரிச்சந்திரனை இவ்விததுன்பமடையும்படி செய்தேன் செய்தும் ஓர் அணுவளவுபொய்யேனும் புகன்றானில்லை இவனைப்போல் சத்தியவந்தன் இவ்வுலகத்தில் எவனிருக்கின்றான்.

சிவன் வசனம்.

சரிதான் கௌசிகரே இந்தசந்திரமதியானவள் காசிராஜன் குழந்தையைக் கொன்றாளென்னக் கொலைக்குட்படுத்தி இவ்விறைவன் கைக்கட்கத்தினால் வெட்டும்படி செய்ததின் காரணார்த்தம் எதனைப் பற்றி சீக்கிரம் சொல்லும்.



விஸ்வாமித்திரர் விருத்தம்.

மறையவரிடத்தில் வரிபதுவாங்கி
வரமகன்றனைபிணைவைத்தே
முறையுடனேக முருந்தனுங்காசி
முதல்வனல் முருகனைவதைத்தே
இறைவிமுன்போட வெடுத்துவைத்தேதங்
வெளிதுடன் காவலர்பிடித்தே
இறைவன்முன்விட்டு மடிபரிசோதிக்
திவ்விதமிக்குற விழைத்தேன்.

வசனம்.

பிரபூ இவ்வாறுசெய்தும் இவ்வரசன சத்தியந்தவறினானில் தேவரீரும் இன்னவன் குறுதிசயத்திற்கிரங்கி சேவைசாதிக்கப்பெறுன் இவனே புண்ணியரூபபுரந்தரன்.

(சி-ன்-வ-ம்.) மிகவும் குதூகலம் விஸ்வாமித்ரரே.

சிவன் விருத்தம்.

சதுர்மறைமுனிவியமிக்கத் தாணிபன்றனையடைந்தே
குதூகலமாகநீதான் கடுந்துறைக்குடிலஞ்செய்தும்
இதுவரையோர்பொய்யேனு மியம்பினானில்லையீதில்
பதிவுடன்கெலித்தோர்தோற்றோ ரியாரதைப்பகருவாயே.

வசனம்.

விஸ்வாமித்திரரே நீர் வசிஷ்டருடனிட்டுக்கொண்ட சபதத்தை நிறைவேற்றும்பொருட்டு இவ்வரசனைபனுக்கி யெவ்வளவோதுன்பஞ்செய்தும் இதுவரையோர் பொய்மொழிபுகன்றானில்லை இதில் ஜெயித்தவர் தோற்றவர் யார் சொல்லும்.

விஸ்வாமித்திரன் விருத்தம்.

ஆதவன்குலத்திலவதரித்தோன்றனருள்செல்வமுழுக்கொடுத்துவாழு
நிதரும்பொறுமைசத்தியமிதனை யுணர்ந்தியானுவகையடைந்தேன்
ஆதலாற்றவத்திற்பாதியுமின்றே யளித்தனனுன்கரத்தும்
காதலாயளித்தேன்மைப்பற்றிவாழுக் குறைவிலாதுவாழ்கோவே.

வசனம்.

அரியகுலத்துதித்த கோன்றனாகிய இவ்வரிச்சந்திரனது நீதியு ஒழுக்கத்தையும் குணத்தையும் பெருந்தன்மையையும் சத்தியத்தை

யும் யானறியாதிகழ்ந்திவ்விதம் செய்தேன் இதில் கெலித்தவன் வசிஷ்டனேயன்றி யானல்ல ஆதலால் என்சொற்படி பென்தவத்திற் பாதியும் இன்னவனெனக்களித்த நாடுநகர்முதலாயுள்ள மற்றயாவையு இவனுக்கே கொடுத்தேன் பெற்றுக்கொள்ளச்சொல்லும் சுவாமி.

அரசன் விருத்தம்.

தெத்தபூர்வங்கொடுத்த திரவியந்தனைக்கொடுத்தோன்
அத்தரிதேற்றுய்தானென் றடியவன்கேட்டதில்லை
இத்தநியிந்ததைக்கை யேற்றவனெனப்பேர்பூண்டே
இத்தலம்புரப்போன்யானே இப்பழிபூணேன்சுவாமி.

வசனம்.

சுவாமி இவ்வுலகத்தின்கண் யாதாமொருவன் ஒருவர்க்குக் கொடுத்தபொருளை மீண்டும்வாங்கிக்கொண் டுஜ்ஜீவித்தானெனக்கேட்டதில்லையே இதென்ன அநீதியாகவிருக்கின்றது யான் மனப்பூர்வமாகக் கொடுத்த நாடுநகரங்களை இனிமேலும் வாங்கிக்கொண்டு இராஜ்யபரிபாலனஞ்செய்தால் ஒருவர்க்கு கொடுத்தபொருளைக்கூசாது மறுபடியும் வாங்கிக்கொண்ட அநீதியான அரசனென் றனைவரும் இழிவாக வியம்புவார் இப்பேருள்ள பெரும்பழிக்கிப்போது முட்படமாட்டேன் அன்றியும்.

அரசன் விருத்தம்.

வியாசகர்க்கீந்தபொன்னை மீண்டும்வாங்கிடிலோவிந்த
தியாகியெப்பிறப்பினுந்தான் நிரகுறுவனுமால்
தயாளநற்குணம்படைத்த சாதுவாய்த்தாமிருந்தும்
பயாபயனறியாவென்னைப் பழிக்காளாய்ப்பகரல்நன்றே.

வசனம்.

பிரபூ யாதொரு வியாசகர்க்குக் கொடுத்தபொருளைக் கொடுத்த தியாகியானவன் மீண்டும்அதனை வாங்குவனேல் அன்னவன் கொடிதாகிய ரௌரவாதி நரகத்தையடைவானென்ற நீதியை யுணர்ந்த தாமே இவ்விதம் சொல்வதாக இருந்தால் யாதுபயனுண்டாகும்யானெக்காலத்தும் இப்பழிக்குடன்படேன் இனிமேலிவ்வித அநீதியான வார்த்தை யென்செவியிற்புகச் செப்பவேண்டாம் விட்டுவிடுங்கள்.

விஸ்வாமித்ரன் விருத்தம்.

இயம்புவேன்கேளரசே யானென்றுமொன்று
மிழைக்குமருந் தவத்தைவிட்டிவ்விகத்தின்மீது



ஞயம்பெருகு மயோத்தியெனும் நகரையாள
நானரசனுவதற்கு வல்லனோதான்
ஜெயம்பெருகு முன்குருவும் யானுமேனுட்
செய்தபெருஞ் சபதம்நிறை வேற்றுதற்காய்
பயன்பெருகுநின் முறை சோதித் துணர்ந்தேன்
பழுதில்லை நின்னகரை நீயாள்வாயே.

வசனம்.

அரசே யான் எஞ்ஞான்றும் கருதிச்செய்வதான தவத்தைவிட்டு யாதொரு கோசலநாடுசூழ்ந்த அயோத்தியாபுரியை அரசாட்சி செய்வதற்கு யானரசனுகவல்லவனோ மீண்டும் உனது குலகுருவாகிய வசிஷ்டரும்யானும் ஆதியில் தேவசபையில் மொழிந்த சபதத்தை நிறைவேற்றுவதற்காக என்னிவந்து உன்சத்திய சௌசத்தைச்சோதித்துணர்ந்தேன் இதில் யாதொருபழுதுமில்லை நின்னுடைய நிலத்தை நீயே யாளக்கடவாயாக.

சிவன் விருத்தம்.

புதிமுகவசேயிந்த மாதவமுனியுரைத்த
அதிசயமனைத்துங்கேட் டயிக்கனையன்றேயிங்கே
இதிலொருகபடமில்லை யினித்தடைசெய்யாதுன்றன்
பதிதனைபனுனியத்தைப் பாங்குடனாள்வாயே.

வசனம்.

அரசனே இந்தவிஸ்வாமித்திரர் எடுத்துரைத்த அதிசயமான சங்கதிகளைக் கேட்டுணர்ந்தாயல்லவோ இதில்யாதொரு கபடமேயில்லை நீ இனித்தடைசெய்யா துன்பதிக்குச்சென்று செங்கோலோச்சி வாழ்ந்திருப்பாயாக.

அரசன் வசனம்.

கருணைபங்கடலே தேவரீர் திருவாய்மலர்ந்தருளியது வேதவாக்கியமாயினும் இன்னும் இம்மகாரிஷியினிடத்தில் அடைந்தகெதியைச்சற்று வினவுகின்றேன் தயவுசெய்து கேட்கவேண்டும்.

(சி-ன்-வ-ம்.) என்ன சொல்லுபார்ப்போம்.

வெட்டியானடியேனை வெட்டியேபிதிக்க வென்றமொட்டு.

இராகம் - கமாசு - தாளம் - சாப்பு.

கண்ணிகள்.

இன்னுமிம்முனிபாலே பாவனைக்கதியை
இன்னதென் றியம்புகிறேன் சொல்வாயினி - அந்த
இன்படன்சேனும் சர்வேஸ்வரனே

நக்ஷத்ரஐயனொடு நாமன்வனத்திற்பொருள்
நல்கெனக்கிட்டிகட்டப் பெற்றேனே-பெற்றும்
நாளுங்கடந்திப்பதி யுற்றேனே

வசனம்.

சுவாமி அயோத்தியைவிட்டுப் புறப்பட்டு வனத்தின்மார்க்கமாக நடந்துவரும்போது இன்னவர்க்குக்கொடுக்கவேண்டிய பொருளைவாங்கிவருவதற்காகவந்த நக்ஷத்திரையர் கிட்டிகட்டி பலவாறான துன்பங்களைச்செய்ய அதற்குட்பட்டு சிலநாள் அவ்வனத்திலேயேநடந்து பிற்பாடு இக்காசியாககருற்றேன் அதனைநினைக்கநினைக்க ஆற்றமுடியாத யான் இராஜ்யபாரஞ் சுமப்பதற்கருகனோ.

சிவன் வசனம்.

உண்மைதான் அரசே நக்ஷத்திரயபனென நாமங்கொண்டுவந்து இவ்வளவு இடையூறுசெய்தது யாரெனில் அதோநிற்கும் அசுரகுருவாகிய சுக்கிரபகவான் பார்த்துக்கொள்.

(அ-ன்-வ-ம்.) பார்த்துக்கொண்டேன் பிரபு.

(சி-ன்-வ-ம்.) இன்னும் நீயடைந்த கதியாது.

அரசன் தரு.

கடனுக்காயிந்நகரிற் கன்னியுடன்மகனைக்
காவலன்னொட்பருக்கு விற்றேனே-விற்றுக்
கழிந்தேனுந்துன்பக் கடலுற்றேனே

வசனம்.

சுவாமி இம்முனிவர்க்குக் கொடுக்கவேண்டிய கடனுக்காக இந்நகரின் வீதிகடோறும் விலைகூவி ஒர் பிராமணனுக் கெனது மனைவியையும் மகனையும்விற்றுப் பிரிந்துவெளிவந்தேன்.

சிவன் வசனம்.

அப்படியா அரசே நீ இக்காசிமாநகருட்கு தனதுமனைவியையும் மகனையும் விற்பாயென முன்னமேதெரிந்து யாதொரு அக்கினிபகவான் சுவாலைகேசிசகிதம்வந்து வேதப்பிராமணனாக வதித்து அடிமைகொண்டிருக்கின்றான் அன்னவனுக்கு விற்றநிறைலென்ன கேவலம் இதோபார் நீ எழுதிக்கொடுத்த முறிச்சீட்டு.

(அ-ன்-வ-ம்.) பார்த்தேன்சுவாமி அன்னவரொங்கிருக்கின்றார்.



(சி-ன்-வ-ம்.) அதோநிற்கின்றார் பார்அரசே.

(அ-ன்-வ-ம்.) பார்த்தேன் சுவாமி.

(சி-ன்-வ-ம்.) இன்னும் என்ன.

அரசன் தரு.

தாருக்காய்நீசற்காளாய் சவலாய்க்கரிசியுண்டு
சண்டாளன்சுடலையை காத்தேனே-நீசன்
றன்னுடையைமெய்யினிற் போர்த்தேனே

வசனம்.

பிரபு யாதொரு நக்ஷத்திரையருக்குக் கொடுக்கவேண்டிய தரணுக்காக நீசனாகிய வீரவாகுவுக் கடிமையாகி மாமிஷக்காவடி தூக்கிச்சுமந்து பிணத்தின் வாய்க்கரிசியின் அடிசிலருந்தி இச்சுடலை காவல்புரியலானேன் கொடிய நீசத்வத்தையடைந்தும் யான் உலகம் புரக்க ஒவ்வுவேனோ.

சிவன் வசனம்.

அரசனே நீயுரைத்தது நியாயமே, இவ்விதம் நீ நீசனுக்கடிமையாவாயென முன்னமே தெரிந்து எமதர்மமகாராஜனானவன் இப்பதியிற்றாழ்ந்த புலைமகனாகச்சனித்துன்னை யடிமைகொண்டான் அன்னவன் அதோநிற்கின்றான் பார்.

(அ-ன்-வ-ம்.) பார்த்தேன் சுவாமி.

சிவன் வசனம்.

எதோ மாமிஷக்காவடி தூக்கிச்சுமந்ததாகச்சொன்னாயே அது ரிக், எஜுர், சாம, அதர்வணமென்னும் நான்குவேதக்காவடி அதோ இருக்கின்றது பார்.

(அ-ன்-வ-ம்.) பார்த்தேன் பிரபு.

சிவன் வசனம்.

மயானகாவல் புரிந்ததாக சொன்னாயே இது மயானமல்ல, யெக்கியசாலை இதன்வ[illegible]ஸ்திரமாக எடுத்துரைக்கின்றேன் கண்ணுற்றுப்பார்.

(அ-ன்-வ-ம்.) பார்க்கின்றேன் பரம்பரமே.

சிவன் வசனம்.

அரசே, இவ்விடமெல்லாம் யாககுண்டம், இங்குள்ள மரங்களெல்லாம் தூண்கள், ஆகாயமெல்லாம் ஆகுதிப்புகை, தீயெல்லாம் காரு

கபத்தியம், ஆகவநீயம், தெக்ஷணாக்கினியம், என்ற முத்தீ, திக்குகளெல்லாம், தெற்பை, நீர்நிற்பட்டெரியும் விறகெலாம், சமித்து, பேய்க்கணமெல்லாம் முனிக்குழாம், பேசுமொழியெல்லாம், ரிக், எஜுர், சாம, அதர்வணமென்னும் வேதம், பிரேதமெல்லாம், யாகத்திற்கமைந்த பசு, வாய்க்கரிசியெல்லாம், அக்ஷதை, பரண், பன்னகசாலை, கடு கோல் தெண்டு பார்த்தனையா,

அரசன் வசனம்.

பார்த்தேன் பிரபு, என்ன விசித்ரம், என்ன உன்னதம், என்ன லட்சணம், என்ன வாசனை, ஆ - ஆ, இதன் சிங்காரத்தை யானெவ்வாறென் றெடுத்துரைப்பேன்.

(சி-ன்-வ-ம்.) மற்றென்ன அரசே,

அரசன் தரு.

இதுவும்போதாமலேபோ    என்கலிமாற்றவந்த
என்மகனையும்வினைப்    இழந்தேனே-இழந்
தியம்பொறைத்தயாக்கால்    களர்ந்தேனே

வசனம்.

சுவாமி, எனது குலம் ஸ்ரேஷ்டமடையும்பொருட்டு தேவரீர் திருவரப்பிரசாதத்தால் அவதரித்த எனது புத்திரசிகாமணி நேற்றையதினத்தில் அரவுதீண்டி யிறந்தபரிதாபத்தை நினைக்கநினைக்க என் மனம் உலைமெழுகுபோ லுருகின்றதே இக்கொடியபாதகத்திற்கென் செய்வேன்.

சிவன் வசனம்.

அரசே சஞ்சலமுறாதே உன்மகனை இதோ எழுப்பித்தருகின்றேன்.

சிவன் வசனம்.

அடா சுப்பிரமண்யம் இவ்வரிச்சந்திரன் புத்திரன் உயிர்பெற்றெழுந்துவரும்படி விடத்தை வாங்கிவிடு.

சுப்பிரமணியர் விருத்தம்.

தப்பவான்றருச் சூழற்புகருறும்
வெப்பபாம்பினால் விப்ந்தவென்வீரனுன்
மெய்யிலுற்றவிடந்தனை மீட்டினேன்
உய்த்தெழுந்தென்முன் னோடிவருகுவாய்



பொது விருத்தம்.

மகிழ்வுறவேலன்கையால் வருகெனவழைக்கக்கேட்டு
அகிலிடத்தாலேமாண்ட வழகுறுதேவதாசன்
புகழ்பெறத்துயிலுணர்ந்தோன் போலுயிர்த்தெழுந்தேநல்ல
நகவிளஞ்சிம்மம்போல நடந்துதான்வருகின்றானே.

## தேவதாசன் வருகிறதரு.

இராகம்-கமாசு-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

வாரானிதோதேவதாசன்    மனமகிழ்ந்தே
காரார்தேவதேவர்களைக்    கண்டுபுகழ்ந்தே (வா)
ஆனந்தக்கண்ணீருருகுதே    யாடிப்பாடியே
ஞானந்திகழன்னைபிதா    நளினம்நாடியே (வா)
இன்னவர்கள்யாவரையு    மின்றுபார்க்கவே
என்னுதவமுன்னுட்டுரிந்    தேனென்றேற்கவே (வா)

(சி-ன்-வ-ம்.) அரசே உன்புத்திரன் இதோவருகின்றான் பார்த்துக்கொள்.

இராகம் - கமாசு - தாளம் - ஏகம்.

பல்லவி.

வாராயெந்தன்    யாதவமைந்தனே (வா)

அநுபல்லவி.

சீராயொருமுத்தம்    தாராய்சமீபத்தில் (வா)

சரணங்கள்.

உம்பர்புகழ்வேலனால்    உயிர்பெற்றெழுந்தவனே
எம்பவந்தனையொழித்    தின்பந்தந்தவனே (வா)

(வ-ம்.) வாடா எனது புத்திரசிகாமணியே.

தேவதாசன் வசனம்.

அனேகவந்தனம் பிதா இதென்ன ஆச்சரியம் இங்குநிறைந்துள்ள சபையைப்பார்க்கப்பார்க்க ஆனந்தமாயிருக்கின்றதே.

அரசன் வசனம்.

கண்மணி இக்காலம் நமது பவத்தைபகற்றப்போது காக்கவந்த இதோ இருக்கிற எம்பெருமானை வந்தனஞ்செய்படா மாதவ சிம்மமே.

தேவதாசன் விருத்தம்.

கருணையங்கடலேஞானக் கடலெழுமமுதேயன்பர்க்
கருள்செயும்பொருளேசிரா ரம்பிகைபாகனே.நின்
திருவுளமிரங்கியிங்கே சேவைசாதிக்கநாயேன்
இருநிலந்தன்னில்முன்னு ளென்றவ்விழைந்திட்டேனோ.

வசனம்.

அநேகவந்தனம் அம்பிகைசமேதா இக்காலம் இத்தியாதிதேவ கணங்களுடன் தேவரீரைக்காண ஆதியிலென்னதவம் புரிந்தேனோ அறிகிலேன்.

(சி-ன்-வ-ம்.) கல்யாண் தேவதாசனே.

சிவன் வசனம்.

ஹே மகாவிஷ்ணுவே நீர் காசிராஜன்புத்திரனை உயிர்த்தெழுந்துவரும்படி செய்யும்.

(வி-ணு-வ-ம்.) அவ்விதமே செய்கிறேன்.

விஷ்ணு விருத்தம்.

திருடராலிறந்தசிரார் சேயனேநியெழுந்து
வருகவென்றமலன்கூற மாநிலம்புகழுங்காசித்
திருமகனின்றெடுத்த செல்வனுமுயிர்த்தெழுந்தே.
பூரமனோடமரர்தன்னைப் பணிந்தனன்பண்பாயன்றே.

பொது வசனம்.

இவ்விதம் காசிராஜன் புத்திரன் உயிர்பெற்றெழுந்து தேவாதி தேவர்களை வந்தனஞ் செய்பலானான்.

காசிராஜன் சேவகன்வசனம்.

அரசே, தங்கள்மகனைத் தகனஞ்செய்யும் பொருட்டு சுமந்துகொண்டுபோய் வந்து தங்கள் வரவு செதிர்பார்த்திருக்கையில் தங்களுத்திரவுப்படி வெட்டுப்படவந்த மின்னனையை அரிச்சந்தோட்டி வெட்டுங்கால் தேவாதி கணங்களுடன் சிவபெருமான் தோன்றியன்னவனுக்கு சேவைசாதித்து தங்கள் மகனையும் உயிர்த்தெழும்படி செய்திருக்கின்றார் அதனை யானறிந்தமட்டில் அந்தச்சந்தோட்டி அரிச்சந்திர சக்ரவர்த்தியாம் தாங்கள் வெட்டும்படி திட்டஞ்செய்த பெண் அன்னவரது மனைவியாம் இப்பெருள்ள அதிசயத்தைப் பார்க்க எழுந்துவரவேண்டும்.



(கா-ன்-வ-ம்.) அப்படியா இதோவருகின்றேன் சேவகா.

(சி-ன்-வ-ம்.) கல்யாண் காசிராஜனே.

(கா-ன்-வ-ம்.) அநேகவந்தனம் ஆதிகடவுளே

(கா-ன்-வ-ம்.) சரணம் சரணம் அயோத்திக்கரசே.

(அ-ன்-வ-ம்.) கல்யாண் காசிராஜனே.

காசிராஜன் வசனம்.

பிரபூ இக்காலம் யானறியாமற்செய்த பெரும்பிழையை மன்னிக்கக் கோறுகின்றேன்.

(அ-ன்-வ-ம்.) பொறுத்தேன் புரவலா.

(சி-ன்-வ-ம்.) அரிச்சந்திரா இன்னும் ஏதாகினு முளதா.

(அ-ன்-வ-ம்.) இல்லை பிரபூ.

சிவன் விருத்தம்.

உத்தமாவென துத்தரவின்படி
யத்தடநகர்க் கன்புடன்சென்றுநீ
சித்திரமுடி சென்னியிற்சூடியே
சித்தியாபரசாக்ஷி செய்வாயரோ.

வசனம்.

அரசே, எனதுத்திரவின்படியே அயோத்தியாபுரிக்குச்சென்று இரத்தினகிரீடந்தரித்து செங்கோலோச்சி சுகக்ஷேமமாக வாழ்ந்திருப்பாயாக.

அரசன் விருத்தம்.

விரிசடையணிந்தவிஸ்வாமித்திரராலேயுந்தன்
தெரிசனங்கிடைக்கப்பெற்றேன் தியனையினிமேலன்பாய்
பரிவுடனடிமைகொண்டு பாதுகாவாமலின்னும்
அரசுசெய்யெனவுரைத்த லறமலவமரர்கோவே.

வசனம்.

சுவாமி அடியேன் இந்த விஸ்வாமித்திரமகரிஷியாலிவ்வித கதியடைந்ததினின்று இன்னவராலே தேவரீர் தெரிசனங்கிடைக்கப்பெற்றேன் இதினின்றும் என்னை அடிபுவனுக்கிக்கொள்ள வேண்டுமே தவிர இராஜ்யபரிபாலனஞ்செய்யத் திருவுளம்பற்றுவது ஞாயமன்று மீண்டும்.

அரசன் விருத்தம்.

யானளித்தநகர் தன்னையேயிவர்
தானளிக்கத் தமியன்பெற்றுளுவ
தீனமுற்றிடு மின்னவரோயதற்
கானவுத்தமர் யானலனண்ணலே.

வசனம்.

பிரபூ இயான் மனப்பூர்வமாக கொடுத்த அயோத்தியாபுரியை இந்த மகாரிஷியே அரசாட்சிசெய்து சுகத்திலிருக்கவேண்டியதேயன்றி யானரசாட்சிசெய்வதற் கருகனல்லேன் இவ்வர மருள்புரியவேண்டும்.

சிவன் விருத்தம்.

உந்தன்மெய்மை யுணரும்பொருட்டிவர்
இந்தவாரிழைத் தாரிதிற்றீங்கிலை
அந்தநாட்டிற் கனுகியரசுசெய்
திந்திரனிகர்வாழ்ந் திருப்பாயரோ.

வசனம்.

அரிச்சந்திரா உனது சத்தியத்தைச் சோதித்தறியவேண்டுமென விஸ்வாமித்ர னிவ்வாறு செய்ததேயன்றி உன் நாட்டை யபகரித்துக் கொண்டு தான் அரசுபுரிந்திருக்க வேண்டுமென்ற எண்ணமல்ல ஆதலின் நின்னாட்டை நீயேயாளக் கடவாயாக.

அரசன் விருத்தம்.

நின்னுரைவேதமேனும் நிகழ்த்துவேன்கேளுமன்னுள்
அன்னகர்க்கெக்காலத்தும் அடியன்வருவதில்லை
என்னவேயுரைத்திங்குற்றே னினியவனேகுவேனேல்
இன்னிலம்புலவாறென்னை யிகழ்ந்திடுமிணங்கேன்சுவாமி.

வசனம்.

சுவாமி தேவரீர் திருவாய்மலர்ந்தருளியது வேதமாகினும், யான் நாட்டைவிட்டுப் புறப்பட்டவெருங்காலத்தில் நாட்டிலுள்ள அரசர் முதல் மற்றனைவரிடத்திலும் இந்நாட்டிற்கு யான் எக்காலத்தும் வரத்தக்கதில்லையென பிரதிக்கினைசெய்து வந்திருக்கின்றேன் அவ்விதம் வந்த யான் இப்போது அங்கு செல்வதாகவிருக்கின் உலகம் பலவாறு நகைக்கும் ஆதலின் இதற்கிணங்கேன்.



சிவன் விருத்தம்.

அந்நகரை யரசுசெய்யாவிடி
லெந்நகர்தனை யாளுவரசுசெய்
திந்நிலந்தனி லெப்பெருஞ்செல்வமும்
உன்னிடேபடைத் தோகையாய்வாழ்வையே.

வசனம்.

அரசே நீ அந்த அயோத்தியாபுரியை யாளாவிடினும் மற்றெப்புரியையாவது ஆண்டு சுகத்திலிருந்து வாழ்வாயாக.

அரசன் விருத்தம்.

அன்னலேயினி யரசுபுரிந்திட
நாண்ணமெந்தனுக் கில்லையினியுந்தன்
தன்னதாமனாத் தாளிற்காளாகவே
என்னுறுகின னிவ்வரமீவையே.

வசனம்.

சுவாமி எனக்கினிமேல் இராஜ்யபரிபாலனஞ் செய்வதற் கபிப்பிராயமில்லை. தேவரீர் திருவடிக் கடியவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சிவன் விருத்தம்.

இன்னம்நீவெகு காலம்வளமெழில்
நன்னகர்தனை ராஜரிகஞ்செய்தே
பின்னரெந்தன் பெரும்பதம்வந்துசேர்
மன்னர்போற்றிடு மாமலர்தாளனே.

வசனம்.

அப்பா நீ இன்னும் வெகுகாலம் அரசாட்சிசெய்து பின்னர் எனது திருவடிக்கடியவனாக வந்தடைவாயாக.

(அ-ன்-வ-ம்.) உத்தரவுப்படி நடக்கின்றேன் சுவாமி.

சிவன் வசனம்.

அரசே இவ்வுலகத்திலுள்ள தேசங்களில் மகாசெல்வம் பொருந்திய அயோத்தியாபுரியையே நீ அரசாட்சிசெய்யும்படியாய் ஆக்ஞாபித்தேன்.

(அ-ன்-வ-ம்.) நல்லது சுவாமி.

சிவன் விருத்தம்.

சந்திரனேர்வதனவரிச் சந்திரவன்னைச்
சார்ந்தவினையனைத்தேசாபந் தன்னைவெந்தன்
மந்திரநல்லருளாலே மாற்றியேயும்
மகிழ்ந்தளித்தேனயோத்திபுரி யனுகிவாழ்

டிந்திரனால்மணிமகுடஞ் சூட்டப்பெற்றங்
கிருந்துவெகுநாள்வரைக்கு மரசியற்றி
எந்திருமாமலரடிக்கே யடியனுக
இசைந்திடுவாயிதிற்கபமொன் றில்லைத்தானே.

வசனம்.

அரசே உனக்குண்டான சகலவினைகளையும் கிலேசங்களையும் பீடைகளையும் அகற்றினேன் நீஅயோத்திக்குச்சென்று தேவேந்திரனால் திருமகுடாபிஷேகம் சூட்டப்பெற்று செங்கோல்தாங்கி அரசுபுரிந்து அதிகக்ஷேமமாக வாழ்ந்திருக்கக்கடவது.

(அ-ன்-வ-ம்.) நல்லது சுவாமி

சிவன் வசனம்.

தேவேந்திரா நீ இவ்வரிச்சந்திரனை யழைத்துக்கொண் டயோத்திக்குச்சென்று உனதுகையால் திருமகுடாபிஷேகம் சூட்டிவைத்து உனதுபதிக்குச் செல்வாயாக.

(தே-ன்-வ-ம்.) உத்திரவும்படியே செய்கிறேன் சுவாமி.

சிவன் வசனம்.

அரிச்சந்திரா இங்குள்ள தேவாதிகணங்களுடன் யான் கைலாயத்திற்குச் செல்கின்றேன் கவலையுறாதே

(அ-ன்-வ-ம்.) அனேகவந்தனம் சுவாமி.

(சி-ன்-வ-ம்.) கல்யாண் அரிச்சந்திரமகாராஜனே.

காசிராஜன் வசனம்.

அயோத்திக்கரசே இனறோர்பொழுதெளியேன் அரண்மனையிற்றங்கிப் போஜனமருந்தி காலையில்யானும் வருகின்றேன் எனதுசைநியங்களுடன் யாவரும் அயோத்திக்குச் செல்வோம்.

(அ-ன்-வ-ம்.) நல்லது காசிராஜனே.

## அரசன் அயோத்திக்கேகும் பாகம்.

பொது விருத்தம்.

இவ்விதம்வா ளரிச்சந்த்ரராஜனுதி
யீஸ்வரனுத்தரவின் வணமின்பமோங்கச்
செவ்விபெறுகாசிமன்னன் றேரின்மீதே
தேவிதிருச்சேயனுடன் சிறப்பாயேறித்
திவ்வியவானவர்முதலா யாவர்சுற்றத்
தேவேந்த்ரன் முன்வருகச்சேனைசூழக்
கௌசிகரும்வசிஷ்டருமுன் களிக்கக்காசி
கடந்திட்டான் அயோத்திக்குநடந்திட்டானே.



வாராரிதோ வச்சிரபாணி யென்றமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

சத்தியவரிச்சந்திரன்நகர் சாராகாடினன்
பத்தியுடன்பொற்றேரேறி பாதைநாடினன் (ச)

சந்திரவதிதேவதாசன் தன்பாலமேவவே
மந்திரிசத்தியகீர்த்தி மனமகிழ்வுதாவவே (ச)

இந்திரனும்இந்திராணியும் இசைந்துமெய்க்கவே
மந்திரமுனிவோருடனே வானோர்மொய்க்கவே (ச)

அருள்பெருகுகாசிமன்னன் அருகிலாழவே
மருவுராதகராலாட்படை வணங்கித்தாழவே (ச)

குடைகொடிசுருட்டிமுமேவல் குஞ்சமநிறையவே
குடையில்லாயானைமீது முரசமறையவே (ச)

பெண்கள்நின்றுவெண்கவறி பிடித்துவீசவே
தண்கவிகைமன்புகளை சான்றோர்பேசவே (ச)

வன்னமலைநதிவனம் வனந்திரந்தாண்டியே
பன்னகாபரனைன்றிருப் பாதம்வேண்டியே (ச)

பொது விருத்தம்,

இந்தவிதமரிச்சந்திர னிரதமீதின்
றெழுந்தருளி இந்திரன்முதல்யாவர்சூழ
அந்தரிச்சூழ் அடவியலையாறுதாண்டி
அணிமிகுத்த கோமதியாற்றகத்திலமேவி
சுந்தரமாய்வீற்றிருந்த சூழ்கேட்டு
தொன்னகரோர் வந்தெதிர் கொண்டழைக்கக்கண்டு
புந்தியுளானந்தமிகுக் தழைக்கடந்து
புரப்பட்டயோத்திபுரி புக்கினனே.

---

## ஸ்ரீ அரிச்சந்திரமகாராஜன் பட்டாபிஷேகம்.

விருத்தம்.

ந்தவம்பூபெறுமடன் புதல்வியாழனுட னிபகந்திரமக்ஞம்
னியமன்னிருதி வாயுவுஞ்சோமனெழி லார்வருணனதிசைக்க
சித்தபோதனரிபக்தானவாமா நீறைபூதரமபசாரும்
கோர்சித்தர் வித்தியாதரர்களுடா னுரதன் அம்புரு

சோதிப்பராசரபரத்வா சகோசிக சுகன்காசிபன்வசிஷ்டன்
தோன்றியேமங்களஞ்சொலவரசர்சுமதியர்சூழ்ந்தகமகிழ்ந்துபோற்ற
திதற்றசிங்காசனத்திருந் தந்தணர்கள் ஜெயஜெயனவாசிகூற [டான்
தேவேந்த்ரன்செங்கையாற் பூவேந்தரிச்சந்த்ரன் றிருமகுடங்கொண்

சுந்தரோசா ஏந்தனையாள்வா யென்றமெட்டு

இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

திருமகுடஞ்சென்னியிற் கொண்டான்-கொண்டான்
சித்தர்நாடமுத்தர்கூட பத்தர்கொண்டாட
தேவேந்-திரன் செங்கையால்மன்னன் (தி)
பூசுரர்கள்-ஆசி கூறவே-கூறவே
புனிதர்புகழப்புலவர்மகிழப் புரோகிதர்திகழப்
பொய்-சொல்லாத புண்ணியமன்னன் (தி)
வாத்தியகோஷமார்ப் பரிக்கவே-பரிக்கவே
மாதராடவேவாணர்பாடவே மதியர்நாடவே
மாத-வர்கள் வாழிகூறவே (தி)
கோசிகன்-குது கலிக்கவே-கலிக்கவே
கொண்டமனையும்குலக்குமரனும் குருவசிஷ்டரும்
கும்பாய்த்-தன்பால் அன்பாயிருக்கவே (தி)
குடைகொடிபடை யிலங்கவே-இலங்கவே
கொற்றவர்சூழ-மற்றவர்தாழ சுற்றத்துடன்வாழக்
கோல்-செல கோவரிச்சந்த்ரன் (தி)

## விஸ்வாமித்ரன் தாரைவார்ப்பது.

விஸ்வாமித்ரன் விருத்தம்.

சோதிமாமகுடம்பூண்டே தோன்றலேசொல்லக்கேண்மின்
ஆதியில்யானிழைத்த வருந்தவந் தனிலுனக்குப்
பாதியைத்தாரைவார்த்தேன் பற்றிநீயுலகையாளும்
நீதியாயரசுசெய்து நீடூழிவாழ்குவாயே.

வசனம்.

அரிச்சந்திரமகாராஜனே இக்காலம் உன்னுடைய துன்பங்களி யாவையும்தொலைத்து தேவசபையிற்சொல்லிய பிரகாரமே யான் ஆதியிற்செய்த அருந்தவத்திற்பாதி இங்குள்ளயாவருங்காண மனப்பூர்வமாகத் தாரைவார்த்தேன் பெற்றுக்கொண்டு நீதியுடனே இராஜ்ய பரிபாலனஞ்செய்து நீடூழிவாழ்ந்திருப்பாயாக.



மங்களத்தரு.

ஓர்குவீரா யென்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ஆதி

பல்லவி.

மங்களம்-மங்களம் நித்யஜெயமங்களம் (மங்)

அநுபல்லவி.

அங்கனிலம்புரக்கும் அரிச்சந்திரராஜனுக்கும் (மங்)

சரணங்கள்.

சந்திரவதிக்கும் தாய்ஜனலோகிதற்கும்
மந்திரிசத்தியகீர்த்திக்கும் மாதவவசிஷ்டர்க்கும் (மங்)
தேசமன்னர்க்கும் சேனாதிபதியருக்கும்
ஈசன்மாலயனுக்கும் இந்திராதிதேவருக்கும் (மங்)
சக்திவேலர்க்கும் தந்திமாமுகமுதற்கும்
பக்தனென்முத்தழக பாரதிவேளுக்கும் (மங்)
திகழுங்குலால திலகன்மூக்கையனுக்கும்
தாகமுறவச்செவிட்ட சுந்தரராஜனுக்கும் (மங்)
இக்கதைதன்னை வியந்தியபேர்களுக்கும்
தக்ககவிவல்லோர்க்கும் சங்கீதப்புலவர்க்கும் (மங்)

வாழி வருத்தம்.

முக்திதரு மும்மூர்த்தி வாழிதேவர்
முதலானோர் வாழிகுரு வசிஷ்டர்வாழி
சத்தியவா னரிச்சந்திரன் வாழிசீரார்
சந்த்ரவதி வாழிலோகிதனும்வாழி
முத்தழகபாரதி வேள்வாழி சிவப
மூக்கையனும் வாழியிதை யச்சிலிட்ட
உத்தமனென் சுந்தரராஜேந்திரன்வாழி
உலகுதிரு மிக்கதையும் வாழிதானே.

ஸ்ரீதிருவண்ணசகாயம்.

அரிச்சந்திரநாடகம் சம்பூரணம்.

இங்ஙனம்:
முத்தழகபாரதி.

சோதிப்பராசரபரத்வா சகோசிக சுகன்காசிபன்வசிஷ்டன்
தோன்றியேமங்களஞ்சொலவரசர்சுமதியர்சூழ்ந்தகமகிழ்ந்துபோற்ற
தீதற்றசிங்காசனத்திருந் தந்தணர்கள் ஜெயஜெயனவாசிகூற [டான்
தேவேந்த்ரன்செங்கையாற் பூவேந்தரிச்சந்த்ரன் றிருமகுடங்கொண்

சுந்தரேசா எந்தனையாள்வா யென்றமெட்டு

இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

திருமகுடஞ்சென்னியிற் கொண்டான்-கொண்டான்
சித்தர்நாடமுத்தர்கூட பத்தர்கொண்டாட
தேவேந்-திரன் செங்கையால்மன்னன் (தி)
பூசுரர்கள்-ஆசி கூறவே-கூறவே
புனிதர்புகழப்புலவர்மகிழப் புரோகிதர்திகழப்
பொய்-சொல்லாத புண்ணியமன்னன் (தி)
வாத்தியகோஷமார்ப் பரிக்கவே-பரிக்கவே
மாதராடவேவாணர்பாடவே மதியர்நாடவே
மாத-வங்கள் வாழிகூறவே (தி)
கோசிகன்-குது கலிக்கவே-கலிக்கவே
கொண்டமனையும்குலக்குமரனும் குருவசிஷ்டரும்
கும்பாய்த்-தன்பால் அன்பாயிருக்கவே (தி)
குடைகொடிபடை யிலங்கவே-இலங்கவே
கொற்றவர்சூழ-மற்றவர்தாழ சுற்றத்துடன்வாழக்
கோல்-சில கோவரிச்சந்த்ரன் (தி)

## விஸ்வாமித்ரன் தாரைவார்ப்பது.

விஸ்வாமித்ரன் விருத்தம்.

சோதிமாமகுடம்பூண்டே தோன்றலேசொல்லக்கேண்மின்
ஆதியில்யானிழைத்த வருந்தவந் தனிலுனக்குப்
பாதியைத்தாரைவார்த்தேன் பற்றிநீயுலகைாளும்
நீதியாயரசுசெய்து நீடூழிவாழ்குவாயே.

வசனம்.

அரிச்சந்திரமகாராஜனே இக்காலம் உன்னுடைய துன்பங்களி யாவையுங்தொலைத்து தேவசபையிற்சொல்லிய பிரகாரமே யான் ஆதியிற்செய்த அருந்தவத்திற்பாதி இங்குள்ளயாவருங்காண மனப்பூர்வமாகத் தாரைவார்த்தேன் பெற்றுக்கொண்டு நீதியுடனே இராஜ பரிபாலனஞ்செய்து நீடூழிவாழ்ந்திருப்பாயாக.



மங்களத்தரு.

ஓரகுவீரா வென்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ஆதி

பல்லவி.

மங்களம்-மங்களம் நித்யஜெயமங்களம் (மங்)

அநுபல்லவி.

அங்களிலம்புரக்கும் அரிச்சந்திரராஜனுக்கும் (மங்)

சரணங்கள்.

சந்திரவதிக்கும் தாபனுலோகிதற்கும்
மந்திரிசத்தியகீர்த்திக்கும் மாதவவசிஷ்டர்க்கும் (மங்)
தேசமன்னர்க்கும் சேனாதிபதியருக்கும்
ஈசன்மாலயனுக்கும் இந்திராதிதேவருக்கும் (மங்)
சக்திவேலர்க்கும் தந்திமாமுகமுதற்கும்
பக்தனன்முத்தழக பாரதிவேளுக்கும் (மங்)
திகழுங்குலால திலகன்மூக்கையனுக்கும்
தகமுறவச்சிவிட்ட சுந்தரராஜனுக்கும் (மங்)
இக்கதைதன்னை யெற்றியபேர்களுக்கும்
தக்ககவிவல்லோர்க்கும் சங்கீதப்புலவர்க்கும் (மங்)

வாழி வருத்தம்.

முத்திதரு மும்மூர்த்தி வாழிதேவர்
முதலானோர் வாழிகுரு வசிஷ்டர்வாழி
சத்தியவாக் கரிச்சந்திரன் வாழிசீரார்
சந்த்ரவதி வாழியு லோகிதனும்வாழி
முத்தழகபாரதி வேள்வாழி திவ்ய
மூக்கையனும் வாழிமிகை பச்சிவிட்ட
உத்தமனென் சுந்தரராஜேந்த்ரன்வாழி
உலகுதிரு மிக்கதையும் வாழிதானே.

---

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

அரிச்சந்திர நாடகம் சம்பூரணம்.

இங்ஙனம்:
முத்தழகபாரதி.

# விளம்பரம்.

இதனல் சகலமானகனவான்களுக்கும் தெரிவிப்பதுயாதெனில்:—

மதுரை புதுமண்டபம் புஸ்தகஷாப் எஸ். சுந்தரராஜகோனரிடத்திலும், மேற்படி வீ.என். இராகவக்கோனரிடத்திலும் தமிழ், தெலுங்கு, கிரந்தம், துலுக்கு முதலிய புஸ்தகங்களில், ஸ்மார்த்த வைஷ்ணவர்களுக்குவேண்டும் புஸ்தகங்களும் குழந்தைகளுக்குவேண்டுங் காலேஜிப் புஸ்தகங்களும் உத்தியோகஸ்தர்களுக்கு வேண்டும் ஆக்ட்டுபுஸ்தகங்களும், இசுலமானவர்களுக்கு வேண்டும், தமிழ் வெழுத்தில் துலுக்கு புஸ்தகங்களும், காவலர், பாவலர், நாவலர், யாவருக்கும் வேண்டும் இலக்கணம் இலக்கியம், புராணம், கதை, அம்மானை, நாடகம், விலாசம், கீர்த்தனை, அந்தாதி, கலம்பகம், கோவை, தூது, வெண்பா, சதகம், கும்மியெனும் அனேகம் தினுசுகளும், அத்வைதசாஸ்திரமும், ஆறுமுகநாவலர், புஷ்பரத செட்டியார், இரத்னஞ்செட்டியார், அச்சுக்கூடத்திற் பதிப்பித்த உயர்ந்த புஸ்தகங்களும் தயாராயிருப்பதால் வேண்டியவர்கள் அடியிற் கண்ட எனது மேல்விலாசத்திற்கு வெழுதினல், உடனே தங்களுக்கு வேண்டும் புஸ்தகங்களை வி - பி - தபாலில் அனுப்பக்கூடும். புஸ்தக விபரசாபிதாவாகிய புஸ்தககாட்லாக்கு எங்களிடமிருக்கிறது புஸ்தக விபரமும் ஒவ்வொரு புஸ்தகத்தினுடைய விலைவிபரமுந் தெரிந்துகொள்ளவேண்டுமானல் அரையணா ஸ்டாம்பில் அனுப்பினல் புஸ்தக விபர காட்லாக்கு அனுப்பக்கூடும். அடியிற்கண்ட நாடகங்கள் அங்காங்கு படம் சயிதமாய் நயமான காகிதத்தில், அச்சிட்டு தயாராயிருக்கிறது ஷை புஸ்தகங்கள் தேவையிருந்து வெழுதினல் வி.பி, தபாலில் அனுப்பக்கூடும். தபாற்சார்ஜ் பிரத்தியேகம்.

| | |
|---|---|
| தமிழ் ஸ்கூல் வாத்தியார் ல. முத்தழகபாரதியவர்கள் பாடி ஆரப்பாளையம் மூக்கவேளாரவர்கள் ஆடிய, அரிச்சந்திரநாடகம் 1-க்கு | 1 8 0 |
| தமிழ் இஸ்கூல் ஷை ல். முத்தழகபாரதியவர்கள் பாடி ஆரப்பாளையம் மூக்கவேளாரவர்கள் ஆடிய சகுந்தலைநாடகம் 1-க்கு | 0 12 0 |
| வாத்தியார் சங்கிலியாபிள்ளையவர்கள் பாடி காமாக்ஷிபுரம் பெரியாம்பிள்ளையவர்கள் ஆடிய அரிச்சந்திரநாடகம் 1-க்கு | 1 0 0 |
| சிவசாமியவர்களாடிய அரிச்சந்திர நாடகம் 1-க்கு | 1 0 0 |
| சிவசாமியவர்களும்ஆரப்பாளையம்மூக்கவேளாரவர்களும் ஆடியஅழகேந்திரநாடகம் 1-க்கு | 0 12 0 |

☞ எஸ். சுந்தரராஜக்கோனர்.

☞ வீ. என். இராகவக்கோனர்.

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்.